# தேவனுடன் நடத்தலும் பேசுதலும்

## ஜெபம்

1. ஜெபம் பண்ண எங்களுக்குத் போதியும்?
2. ஜெபத்தின் வல்லமை
3. ஜெபத்தில் பிரச்சனைகள்
4. உண்மையான ஜெபத்தின் தன்மைகள்
5. ஜெபத்திற்குத் தடங்கல்கள்
6. பரிந்துபேசும் ஜெபம்
7. ஜெபத்தில் ஒழுங்குமுறை
8. ஜெபத்தின் அபாயம்
9. கர்த்தருடைய ஜெபம்
10. ஜெபிக்கும் கிறிஸ்து
11. ஆவியில் ஜெபித்தல்
12. இயேசுவின் நாமத்தில் ஜெபித்தல்
13. ஜெபிக்கும் வேளைகள்

முடிவுரை

## தேவனுடன் எனது அன்றாட நடை

ஒரு அறிமுகம்

1. தாழ்மை + கீழ்ப்படிதல் = கீழ்ப்படிதலுள்ள ஊழியர்கள் (பாகம் 1)
2. ?ஒரு விசுவாச நடை?
3. இயேசுவைப் பின்பற்றுதல்
4. பரிசுத்த ஆவியானவரும் நானும்
5. சபை
6. செயல்முறை
7. அன்பு
8. மேல்துண்டு (ஊழியத்துவம்)
9. மனசாட்சி
10. ஆராதனை
11. தாழ்மை + கீழ்ப்படிதல் = கீழ்ப்படிதலுள்ள ஊழியர்கள் (பாகம் 2)
12. பரலோகம்

பதிலளிக்கும் படிவம்

*1*

# ஜெபம்

## தேவன்

*நான் ஜெபத்தில் நம்பிக்கை கொள்வதில்லை ... நான் தேவனை விசுவாசிக்கின்றேன்; ஆகையால் நான் ஜெபிக்கின்றேன். இந்த எளிய சத்தியமானது, ஜெபத்தை நாம் தவறாகப் பயன்படுத்துவதை விவரிக்கிறது. நாம், (1) தேவனைப் புரிந்துகொள்ளவும், (2) விசுவாசத்தைப் புரிந்து கொள்ளவும் தவறுகின்றோம். ஜெபம் என்பது நாம் தேவனைச் சார்ந்திருத் தலாகவும் நமது விசுவாசத்தின் குரலாகவும் இருக்கிறது. தேவனைப் பற்றிய நமது அறிவானது தேவனுடன் நாம் பேசும் நடைமுறையைத் தீர்மானிக் கிறது. எளிமையாய்க் கூறுவதென்றால், தேவனே இங்கு விஷயமாக உள்ளார்! இராஜரீகமான, புலன் கடந்த, பரிசுத்தமான, எல்லையற்ற, நித்திய மான, சர்வ வல்லமையுள்ள, எல்லாம் அறிந்த, நீதியுள்ள, இரக்கம்மிகுந்த தேவன். படைத்து, காத்து, நியாயந்தீர்க்கின்ற தேவன்! ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோரின் வேதாகமரீதியான தேவன்! யெகோவா தேவன்! ஜெபத்தைப் பற்றிய எந்த ஒரு படிப்பும், தேவனுடனான அறிவு உறவைக் கொண்டுதான் தொடங்குகிறது. நாம் தேவனை நாடி, தேவனை அறிந்து, தேவனை நம்பி, தேவனுக்குக் கீழ்ப்படிய வேண்டும். இவையின்றி, ஜெபம் என்பது ஒன்றுமற்றதாகவே உள்ளது. தேவனைப் பற்றிய பயபக்தியே ஆழ்ந்தறிவுள்ள ஜெபமாக உள்ளது.*

*ஆகையால், தேவன் மீது கவனத்தைக் குவியுங்கள். நாம் தேவனை காண்கிறோம். பின்பு ஆராதனை செய்கின்றோம். நாம் ஆராதனை செய்து அதன் பின்பு தேவனைக் காணுதல் என்பது இல்லை. தேவனுக்கு முன்பாக வந்தபோது, சீனாய் மலையில் மோசே நடுங்கினார். தானியேல் மயக்கமுற்றார், அப்போஸ்தலரான யோவான் செத்தவர் போலானார். அவர்கள் ஜீவனுள்ள தேவனுடைய இராஜரீகத்தை எதிர்கொண்டார்கள்! ஜெபம் என்பது தேவனால், தேவன் மீது நாம் கொண்டுள்ள விசுவாசத்தால் விளக்கப்படுகிறது. நமது ஜெபங்கள் தேவனுக்கு நமது பதில்செயலாக உள்ளன. இதுவே ஜெபத்தின் தொடக்கமாக உள்ளது. நான் வரையரைக்கு உட்பட்டவனாக, பலவீனனாக, அறியாமையுள்ளவனாக, பாவம் நிறைந்தவனாக, இழந்துபோகப்பட்டவனாக, ஆக்கினைக்கு உட்பட்ட வனாக இருக்கின்றேன். வீழ்ந்து போன மனிதனுக்கு, இராஜரீகம் வாய்ந்த ஒரு தேவன் தேவைப்படுகின்றார்! அவன் ஒருவரைக் கொண்டிருக் கின்றான்! இழந்துபோகப்பட்ட மனிதனுக்கு ஒரு இரட்சகர் தேவைப் படுகின்றார்! அவன் ஒருவரைக் கொண்டிருக்கின்றான்! (புறம்பான/ குறிக்கோள் வகையான) புலன் கடந்த தேவன், முற்றான சத்தியத்தின் அஸ்தி*

*பாரமாக இருக்கின்றார். அதிகாரத்துவம் வாய்ந்த இப்படிப்பட்ட தேவன் இல்லாது, ஒழுக்கங்களும் ஒழுக்க நெறிகளும் இருக்க முடியாது. நித்திய தேவன் நித்திய சத்தியங்களை வெளிப்படுத்துகின்றார். வீழ்ந்து போன மனிதன் தேவனை அறிய வேண்டும் - அவன் தேவனை உணருதல் தேவை யில்லை. இன்றைய நாட்களில் மக்களிடத்தில், சிந்தனைகள் என்பவை "வெளியானவையாகவும்" உணர்வுகள் என்பவை "உள்ளானவையாகவும்" இருக்கின்றன. வேத வசனங்களில் எவ்விடத்திலும் யாரேனும் ஒருவராவது "தேவனை உணர்ந்ததாக" நாம் காண்பதில்லை.*

*அதிகாரமுடைமையின் "புலன் கடந்த தேவனை" மக்கள் புறக்கணிக் கின்றார்கள். அவர்கள் புலனாகக் கூடிய வகையில் உள்ள, பொருளுணர் வின் மீது கவனம் செலுத்துகின்றார்கள். வேறு வார்த்தைகளில் சொல்லுவ தென்றால், வேத வசனத்தின் இராஜரீகமான தேவன், "நமது கற்பனை விருப்பத்தின் கடவுளாக" குறைப்பட்டு இருக்கின்றார். தேவனைப் போல் இருக்கும்படி நம்மை உயர்த்திக் கொள்வதை விட்டு, நம்மைப் போல் இருக்கும்படி தேவனைக் குறைத்து விடுகின்றோம். இது, ''தேவனே கவனியும், உமது அடியான் பேசுகிறேன்" என்பதாக உள்ளதா? அல்லது "தேவனே பேசும், உமது அடியான் கவனிக்கிறேன்" என்பதாக உள்ளதா? நீங்கள் எதைத் தேர்ந்தெடுப்பீர்கள்? "தேவன் என் உடன் விமான ஓட்டியாக இருக்கின்றார்" என்று நீங்கள் கூறுவீர்கள் என்றால், நீங்கள் இருக்கைகளை மாற்றிக் கொள்ள வேண்டியது அவசியமாக உள்ளது! தேவனுடைய பிரசன்னத்தை உணர்ந்திருப்பதாக உரிமைகோருகிற நம்மில் பெரும் பான்மையோர் அவரது குரலைக் கவனிக்க மறுத்தல் என்பது பரிதாபகர மானதாக உள்ளது. வேதாகமம் முழுவதிலும், "கவனித்துக் கேள்!" என்பதே விழுந்து போன மனிதனுக்கு ஒரே ஒரு ஆலோசனைத் துணுக்காக உள்ளது. கவனித்து, விசுவாசித்து, கீழ்ப்படிந்து, வாழ்வதற்காக, தேவனுக்கு முன்பாக மனிதன் தன்னையே தாழ்த்த வேண்டும்.*

*ஜெபத்தைப் பற்றி எச்சரிக்கையாய் இருங்கள்! ஜெபத்தை பயபக்தி யுடன் கையாளுங்கள்! தேவனுடைய பிரசன்னத்திற்குள் அவசரப்பட்டு ஓடாதீர்கள். தேவனுடைய பிரசன்னத்தில் சிறுபிள்ளைத்தனமாக நடந்து கொள்ளாதீர்கள். தேவன் "ஜீவனுள்ள அக்கினியாக" இருப்பதனால் ஜெபம் பயபக்தியுள்ளதாக இருக்கிறது. ''தேவனுக்கு அஞ்சுங்கள்!'' நீங்கள் முழங்காற்படியிடுங்கள் ... முகம் குப்புற விழுங்கள் ... பயந்து நடுங்குங்கள் ... அமைதியினால் நினைவிழந்து நன்றியுணர்வினால் மூழ்கடிக்கப்படுங்கள் ... சரணடையுங்கள் ... துறந்து விடுங்கள் ... உறுதிப்பாடு கொள்ளுங்கள் ... அகம் மகிழுங்கள் ... தேவனைத் துதியுங்கள்! குறைக்கப்பட்ட தேவன் சுயநலமான ஜெபத்தை விளையச் செய்கின்றார். தேவன் ... மாற்றப்பட முடியாத தேவன்! இங்குதான் ஜெபம் தொடங்கி, தொடர்ந்து, முடிகிறது. இயேசு ''உம்முடைய சித்தம் செய்யப்படுவதாக'' என்று மட்டுமே ஜெபித்தார். நாம், "உம்முடைய சித்தம் மாற்றப்படுவதாக" என்று ஜெபிக்கக் கூடாது.*

*ஆகையால், ஜெபம் என்பது ஒரு தொழில்நுட்பச் செயல் அல்ல; இது ஒரு உறவாக உள்ளது. மனிதன் தன்னைப் படைத்தவருக்கு முன்பாகத்*

*தன்னையே தாழ்த்துகின்றான். ஜெபத்தில் மனிதன் தன் பணிக்கு வந்துள்ளதை அறிக்கையிடுகின்றான். அவன், "என்னுடைய சித்தத்தின் படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக் கடவது"; "தேவனே நீர் எனக்குத் தேவை, தேவனே உம்மை நான் விரும்புகின்றேன்!" என்று கூறுகின்றான். சார்ந்திருத்தல் என்பதே ஆவிக்குரிய தன்மையின் சாரம்சமாக உள்ளது. தேவனை அறிதல் என்பது, நமது சிந்தனை, வாழ்வு, நாம் பிறரை நடத்தும் விதம் ஆகியவற்றை மாற்றுகிறது. தேவன் தேவையாய் உள்ள மக்கள் ஜெபிக்கின்றார்கள்! மக்கள் தாங்கள் ஆராதிக்கிற தேவனைப் போன்றவர்களாகவே ஆகின்றார்கள். ஜெபத்தைப் பற்றிய படிப்பானது தேவனைப் பற்றிய ஆழ்ந்த அறிவுள்ள ஒரு படிப்பாக உள்ளது.*

# ‘‘ஜெபம் பண்ண எங்களுக்குப் போதியும்’’

## லூக்கா 11:1-13

*“அவர் ஒரு இடத்தில் ஜெபம்பண்ணி முடித்தபின்பு, அவருடைய சீஷரில் ஒருவன் அவரை நோக்கி: ‘ஆண்டவரே, யோவான் தன் சீஷருக்கு ஜெபம் பண்ணப் போதித்ததுபோல, நீரும் எங்களுக்குப் போதிக்கவேண்டும்’ என்றான்” (லூக்கா 11:1).*

*‘‘ஜெபம் பண்ண எங்களுக்குப் போதியும்.’’ … ‘‘ஜெபம் பண்ண எனக்குப் போதியும்.”* நன்கு அறியப்பட்ட வேத வசனப் பகுதிகள் அதிக நெருக்கமாக வாசிக்கப்பட வேண்டியது அவசியமாகிறது; நன்கு அறியப் படாத வேத வசனப் பகுதிகள் வாசிக்கப்பட வேண்டும். இயேசு அதிகாரத் துடன் போதித்ததை சீஷர்கள் கேட்டிருந்தார்கள்; அவர் மாபெரும் அற்புதங்கள் நிகழ்த்தியதை அவர்கள் கவனித்திருந்தார்கள்; அவரது வல்லமையைக் குறித்து அவர்கள் பயபக்தியடைந்திருந்தார்கள் … ஆயினும், அவர்கள் ஏகோபித்த வகையில் அவரிடத்தில், ‘‘ஜெபம் பண்ண எங்களுக்குப் போதியும்” என்று எளிமையாக வேண்டுகோள் விடுத்தார்கள். பயபக்தி என்பது ஜெபத்தின் மையப்பகுதியாக இருக்கிற காரணத்தினால் ஜெபம் ஒரு உள்ளுணர்வாக இருக்கிறது. நாம் வீட்டு நினைவினால் வியாதிப்பட்டவர்களாக இருக்கின்றோம்; ஜெபம் மட்டுமே இந்த வீட்டு நினைவு வியாதியைக் குணமாக்க முடியும். ஜெபம் என்பது ஒரு பெரிய அனுபவத்திற்கான ஒரு சிறு வார்த்தையாக உள்ளது. நமது வசனப்பகுதியான லூக்கா 11:1-13, ஜெபத்தின் மீது இந்த உலகில் உள்ள ஒரு மாபெரும் தனித்த ஆய்வாகும். ஜெபம் பற்றி சீஷர்களின் ஜெபத்தை இயேசு கேட்டார்! ஜெபத்தைப் பற்றிய ஒவ்வொரு இன்றியமையாத கொள்கையும் இவ்வசனப் பகுதியில் போதிக்கப்பட்டுள்ளது.

“எது மிகப் பெரிய ஆராய்ச்சியாக உள்ளது?” என்று ஒரு அறிவியல் அறிஞரிடம் கேட்கப்பட்டபோது, அவர் “ஜெபத்தைப் பற்றிக் கண்டறிதல் என்பதுதான்” என்று பதில் அளித்தார். சபை உறுப்பினர்கள் பிரசங்கத்தைக் கேட்பதற்காகவே ஆராதனைகளுக்கு வருகின்றார்கள் என்று பிரசங்கியார்கள் வழக்கமாக நினைக்கின்றார்கள். அவர்கள் [உறுப்பினர்கள்] அடிப்படையில் இதற்காக வருவதில்லை! அவர்கள் ஜெபிக்கக் கற்றுக் கொள்வதற்காகவே வருகின்றார்கள். ஜெபித்தல் என்றால், ஆவிக்குரிய வகையில் சுவாசித்தல் என்றாகிறது. ஜெபம் என்பது இயல்பானதாக இருக்கலாம்,

ஆனால் அது மிகவும் கடினமானதாக உள்ளது. “நான் ஒரு ஜெபமாக இருக்கின்றேன். தேவனே என்னை வாசியும்.” “மதத்தில் நீங்கள் மிகவும் விரும்பிச் செய்வது என்ன?” என்று நீங்கள் கேட்டால், “ஜெபம்” என்பதே உலகளாவிய பதிலாக இருக்கும். “மதத்தில் நமது மாபெரும் தோல்வியாக உள்ளது எது?” என்று நீங்கள் கேட்டால், “ஜெபம்” என்பதே அதற்கு[ம்] ஒரு எளிய பதிலாக இருக்கும்.

நாம், யோவான் ஸ்நானனைப் பற்றி, “நரக அக்கினி மற்றும் கந்தகத்தின்” விந்தையான பிரசங்கியார் என்பதாகவே வழக்கமாக நினைக்கின்றோம். சீஷர்களோ, அவரை ஒரு ஜெபமனிதர் என்றும் ஜெபிக்க போதித்தவர் என்றும் அறிந்திருந்தார்கள். நவீன மனிதன் விடுதலை இறையியலில் (சுயாதீனம்) ஈடுபட்டுள்ளான். எகிப்திய அடிமைத்தனத்தில் இருந்த எபிரெயர்கள், தாங்களும் இவ்வாறு இருந்ததாகவே நினைத்தார்கள்! அவர்கள், “எங்களை விடுவியும்” என்று கதறினார்கள், தேவன் அதைச் செய்தார். அவர்கள் ஒரு பயணத்தில் இருந்தார்கள். அவர்கள் விடுதலையாகியிருந்தும், தாகத்தினால் தவித்திருந்தார்கள்! சுதந்திரம் மட்டும் கொண்டுள்ள மனிதன் ஒரு அருவருக்கத்தக்க இராட்சதனைப் போன்றவனாக இருக்கின்றான். மனிதன் தாகமாய் இருக்கின்றான்! கடந்துபோன நூற்றாண்டுகளில், அகுஸ்தீன்[1] என்பவர், “எங்கள் ஆத்துமாக்கள் உம்மில் இளைப்பாறுகிற வரைக்கும் அவைகள் இளைப்பாறுதல் அடைவது இல்லை” என்று உற்றுநோக்கியுள்ளார். மனித குலமானது தேவனுக்காகத் தாகமாய் இருக்கிறது! ஜெபம் என்பது நாம் தேவனுடன் உறவுபடுவதற்கான அடிப்படை வழியாக உள்ளது. அப்போஸ்தலர்களால் அற்புதங்கள் நிகழ்த்த முடிந்தது. இது உணர்வெழுச்சி ஊட்டக்கூடியதாக இருந்தது! கீழே ஆழத்திலோ, அவர்கள் ஜெபிக்கமட்டுமே விரும்பினார்கள். மதத்தில், ஜெபத்தின் இடத்தை வேறு எதுவும் எடுத்துக் கொள்ள இயலாது. மதத்தின் போராட்டம் என்பது நேர்ப்பொருளில் ஜெபத்தின் மீது போராட்டமாகவே உள்ளது. “ஜெபம் பண்ண எனக்குக் கற்றுத்தாரும்; நீரே எனக்குள் ஜெபியும்.”

## ஜெபம் என்பது விசுவாசமாக உள்ளது

ஜெபம் என்பது இடர்ப்பாடுமிக்கதாக உள்ளது, ஏனென்றால் ஜெபம், தேவனுடனான நமது உறவை, நமது உண்மையான விசுவாசத்தை, மற்றும் நமது வாழ்வையே செயல்விளக்கப்படுத்துகிறது. இதனால்தான், ஜெபத்தைப் பற்றி ஆழ்ந்தறிவுடன் சிந்தித்தல் என்பது பயமூட்டுவதாக உள்ளது! ஜெபத்தை ஒரு மந்திரவாதமாகக் குறைத்தல் என்பது, தேவனுடனான நமது உறவை ஒரு விக்கிரகாரதானையாக வெளிப்படுத்துகிறது. தொலைக்காட்சிப் பிரசங்கியார்கள், “இதைப் பெயரிடுங்கள், உரிமை கோருங்கள்; இதைப் பிதற்றுங்கள், பற்றிக் கொள்ளுங்கள்” என்று அறிவிக்கின்றார்கள். இது நமது பேராசையை, தேவனை நாம் நமது சுயநலத்திற்காகப் பயன்படுத்திக் கொள்வதை வெளிப்படுத்துகிறது. ஜெபம் என்பது பயமுறுத்துகிறது! நாம் ஒரு சிறிது மட்டும் ஜெபித்தாலோ அல்லது ஜெபிக்கா

மல் இருந்தாலோ, நாம் தேவன் மீது நம்பிக்கை வைப்பதில்லை என்றாகிறது. நாம் ஜெபத்தில் ஏமாற்றம் அடைந்தால், தேவன் நமக்குப் பதில் கூறுவது போன்று, நம்மையே நாம் நமது சொந்த தெய்வங்களாக ஏற்படுத்திக் கொள்ளுகின்றோம். நாம் ஒரு ஏமாற்றத்தை ஆராதிக்க முடியாது என்பது தெளிவு. ஏனென்றால் தேவன் தேவனாகவே இருக்கின்றார், அவர் மீது நம்பிக்கை வைக்கப்பட முடியும். சீஷர்கள் தங்கள் சுயநலமான விருப்பத் திற்காக,"ஜெபம் பண்ண எங்களுக்குப் போதியும்" என்று கேட்கவில்லை. இயேசு "தேவனுடன் சரியான உறவுமுறையில் இருந்தார்" என்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள். இயேசு பரலோக பிதாவுடன் ஒரு நெருக்கமான/உள்ளார்ந்த உறவுகொண்டிருந்தார் என்று அவர்கள் அறிந்தார்கள். அவர் கொண்டிருந்ததின் மீது அவர்கள் தாகமாயிருந்தார்கள்! அவர்கள் ஒரு தொழில்நுட்பம் அல்லது ஒரு சூத்திரம் தங்களுக்குத்தேவை என்று எதிர்பார்க்கவில்லை; அவரது மனம் கவரும் வார்த்தைகளினால் அவர்கள் ஈர்க்கப்பட்டு இதைக் கேட்கவில்லை. உண்மையான ஜெபத்தைக் கண்டபோது அவர்கள் அதை உய்த்து உணர்ந்து கொண்டார்கள்! இது, "கறைபடிந்த கண்ணாடியை உற்றுநோக்குதலாகவோ" அல்லது "பரிசுத்த ஊளையிடுதலாகவோ" இருந்தது இல்லை. ஜெபம் என்பது, மனிதன் தன்னை சர்வ வல்ல தேவனுடைய பிரசன்னத்தில் தாழ்மையாயிருக்கும்படி அனுமதித்தல் என்பதாக உள்ளது! ஜெபம் என்பது தேவனுடன் பேசுதல் என்பதை விட அதிகமானதாக உள்ளது. ஜெபம் என்பது தேவன் பேசுதலைக் கவனித்தல் என்பதைவிட அதிகமானதாக உள்ளது. ஜெபம் என்பது தேவனுடன் இருத்தல் என்பதாக உள்ளது!

சீஷர்கள், "ஜெபம் பண்ண எங்களுக்குப் போதியும்" என்று கேட்டார் களே தவிர, அவர்கள் "எப்படி ஜெபம் பண்ணுவதென்று எங்களுக்கு போதியும்" என்று கேட்கவில்லை. இவ்விரண்டிற்கும் இடையில் இடர்ப் பாடுமிக்க வேறுபாடு உள்ளது. நாம் ஜெபத்தைப் பற்றிப் பேசுகின்றோம்; ஜெபம் என்பது பற்றிப் பல இலட்சக்கணக்கான புத்தகங்களும் ஒலிநாடாக் களும் உள்ளன; நாம் ஜெபம் பற்றிய தியானங்களுக்குச் செல்லுகின்றோம். இவை நம்மை நம்பிக்கை இழக்கச் செய்துள்ளன. ஏன்? ஏனென்றால் இவை ஒரு சூத்திரத்தை நோக்கி, ஒரு தந்திரவேலையை நோக்கிப் பின்திருப்பு கின்றன. நீங்கள் ஜெபிப்பதால் மட்டுமே ஜெபிக்கக் கற்றுக் கொள்ள முடியும்! ஜெபித்தலை விரும்புவதாக உணரும்போது மட்டுமே ஜெபிக் கின்ற ஒரு நபர், அதிகமாய் ஜெபிக்க மாட்டார். "நீங்கள் ஜெபித்த பின்பு, ஜெபித்தலை விட அதிகமானவற்றைச் செய்ய இயலும், ஆனால் நீங்கள் ஜெபிக்கின்ற வரையிலும் ஜெபிப்பதைக் காட்டிலும் அதிகமானவற்றைச் செய்ய இயலாது" என்பது உண்மையானதாக உள்ளது. முதலாவது ஜெபியுங்கள்! நாம் வாழ்வதற்காக ஜெபிக்கின்றோம்! ஜெபமே வாழ்வாக உள்ளது! ஜெபமே மதத்தின் மையமாக உள்ளது. "விசுவாசிக்கிறேன் ஆண்டவரே, என் அவிசுவாசம் நீங்கும்படி உதவி செய்யும்" என்பது (மாற். 9:24) ஜெபத்தின் கொடுமுடியாக உள்ளது. "... தேவனே! பாவியாகிய என் மேல் கிருபையாயிரும்" (லூக். 18:13) என்பது ஜெபமாக உள்ளது. ஜெபம் என்பது அறிக்கையிடுதலாக உள்ளது. ஜெபம் என்பது ஒப்புவித்தலாக

*உள்ளது. ஜெபம் என்பது உதவியற்ற தன்மையாக உள்ளது. ஜெபம் என்பது தேவனைக் கண்ணோக்குதலாக உள்ளது. ஜெபம் என்பது கீழ்ப்படிதலாக உள்ளது. ஜெபம் என்பது தேவனுடனான வாழ்வாக உள்ளது.*

*எந்தத் தோல்வியும் ஜெபத்தின் தோல்வியாகவே உள்ளது. எந்தப் பாவமும் ஜெபத்தின் தோல்வியாக உள்ளது. ஜெபித்தலைக் காட்டிலும் ஜெபித்தலைப் பற்றி எழுதுதல் என்பது மிகவும் சுலபமானதாக உள்ளது; ஜெபத்தைப் பற்றிப் பல உண்மைகளை நீங்கள் அறிந்தும் ஜெபிக்காமல் இருக்கக் கூடும். நாம் நம்மையே ஜெபத்திற்கு அர்ப்பணிக்க வேண்டும். இந்தக் கருத்துணர்வில், ஜெபத்தின் பிரமாணமானது விசுவாசத்தின் பிரமாணத்திற்கு முன்வருகிறதாக உள்ளது.*

## ஜெபம் என்பது சக்தியாக உள்ளது

*சீஷர்கள் இயேசு ஜெபிப்பதைக் கேட்கும் சிலாக்கியத்தைப் பெற்றிருந் தார்கள்! என்ன ஒரு பயபக்தி மிகுந்த சிலாக்கியம்! மூன்று ஆண்டுகளுக்கும் சற்று மேலான காலம் அளவுக்கு அவர்கள் இயேசுவைப் பல்வேறு சூழ்நிலைகளில் கண்டிருந்தார்கள். அவர்கள், அவர் போதித்ததைக் கேட்டு, அவர் நோயாளிகளைக் குணமாக்கியதைக் கண்டு, அவர் சிறுபிள்ளைகளை ஆசீர்வதித்ததைக் கவனித்து இருந்தார்கள். அவர்கள் கண்டிருந்தவற்றில், அவரது ஜெப வாழ்விற்கு இணையானது வேறு எதுவும் இருக்கவில்லை! ஜெபமே இயேசுவின் மகிமையாக இருந்தது! ஜெபம் என்பது ஒரு “வடிவமைப்பு” என்பதைக் காட்டிலும் அதிகமானதாக உள்ளது; இது ஒரு “சக்தியாக” உள்ளது.*

*இயேசு தமது சீஷர்களுக்கு, ‘‘ஒரு சிறு ஜெபத்தைக் கூறும்படி’’ போதிக்கவில்லை. ஒரு ஜெபத்தைக் கூறுதல் என்பதும் ஜெபித்தல் என்பதும் மாறுபட்ட இரு விஷயங்களாக இருக்கின்றன. இயேசு ஜெபித்தார். அவர் சீஷர்களுக்கு ஜெபிக்கக் கற்றுத் தந்தார். இயேசு அவர்களுடன் இருந்திருந்தாலும், ஜெபத்திற்கான அத்தியாவசியத் தேவையை அவர்கள் கண்டார்கள். இயேசுவுக்கே ஜெபிப்பது அவசியமாக இருந்ததென்றால், நமக்கு ஜெபித்தல் எவ்வளவு அவசியமானதாக இருக்க வேண்டும்? ஜெபம் என்பதே இயேசுவின் மையமாக இருந்தது என்றால், அது நமது மையமாகவும் இருத்தல் வேண்டும்.*

*ஆகையால், சபையின் ஊழியம் என்பது ஜெபமாகவே உள்ளது. சபையில் ஜெபத்தை நாம், ‘‘உதவி வேண்டுதலாகவும் (துவக்கவும்) ஆசீர்வாதங்களாகவும் (முடிக்கவும்)’’ மாத்திரம் இருக்கும்படி குறைத்து விடக்கூடாது. நமது வெளிப்படையான ஜெபங்கள் மனிதரை நோக்கிய தாக இல்லாமல் தேவனை நோக்கியதாக இருக்க வேண்டும். மிக அதிகமான ஜெபங்கள் ‘‘போலிகளாகவே’’ உள்ளன. வழக்கத்தில் நைந்து போன சொற்றொடர்கள் களையப்பட வேண்டும். நாம் “தேவனுடைய இருதயத் திற்காக” அல்லது “மனிதனின் காதுகளுக்கா’’ எதற்கு ஜெபிக்கின்றோம்? நமது சொந்த ஜெபங்களை நாம் தீவிரமாகக் கவனிக்கின்றோமா? என்ன எதிர்பார்க்கப்படுகிறது அல்லது என்ன தேவையாக உள்ளது, நாம் எதற்காக*

*ஜெபிக்கின்றோம்? அது நன்றாக ஒலிக்கிறது என்றால் பெரும்பாலும் அது போலியாகவே இருக்கிறது! நாம் உண்மையிலேயே ஜெபிக்கின்றோமா? நாம் எப்போதாவது உண்மையாகவே ஜெபித்துள்ளோமா? ஆதி சபையார் ஜெபித்தபோது, அவர்கள் கூடியிருந்த இடம் அசைந்தது (அப். 4:31). இயேசு சிலவற்றைக் கொண்டிருந்தார் என்று சீஷர்கள் அறிந்திருந்தார்கள். அவர் கொண்டிருந்ததை அவர்கள் விரும்பினார்கள்! சகோதர சகோதரிகள் இன்றைய நாட்களில் ஜெபித்தால், என்ன நடக்கும்? ஜெபம் என்பது வேதாகமத்தில் மிகவும் பொதுவாகக் குறிப்பிடப்பட்ட, ஆயினும் மிகவும் குறைவாகக் கீழ்ப்படியப்படுகிற கட்டளையாக உள்ளது. சபையானது ஜெபித்தலில் தவறுகின்றதால் சபை தோல்வியடைகிறது. ஜெபம் நமது உண்மை இயல்பை வெளிப்படுத்துகிறது; ஆகையால், நாம் ஆதாமைப் போல "புதர்களில் ஒளிந்து கொள்வதற்கு" தேர்ந்துகொள்கின்றோம். ஜெபம் நமது பணியை நமது பெருமையின் வெளிப்படுத்துதல் ஆக்குவதினின்று தடைசெய்கிறது. ஜெபம் என்பது ஒரு கிறிஸ்தவர் செய்யக் கூடிய மிகவும் நடைமுறைக்கு உரிய விஷயமாக உள்ளது. நீங்கள் மிகவும் நீண்ட பிரசங்கம் செய்யலாம், ஆனால் நீங்கள் ஒருபோதும் அதிகமாக ஜெபிக்காமல் இருப்பீர் கள். ஜெபம் இன்றி நாம் எதுவும் செய்ய இயலாது!*

## ஜெபம் என்பது வடிவமைப்பாக உள்ளது

*சீஷர்கள், "ஜெபம் பண்ண எங்களுக்குப் போதியும்" என்று கேட்டிருந் தாலும், அதில் "எவ்வாறு" என்பதும் உள்ளடங்கி இருக்கிறது. இன்றைய நாட்களில் மக்கள் சத்தியம், உபதேசம் அல்லது வடிவமைப்பு ஆகியவற்றில் அதிகம் ஆர்வம் காண்பிப்பது இல்லை. ஒரு மாதிரி, ஒரு வரைக்குறிப்பு, ஒரு வடிவமைப்பு ஆகியவற்றைக் கொண்டு இயேசு தொடங்கினார். வாழ்வில் எந்த ஒரு விஷயமும் அடிப்படைகளுடன் தொடங்க வேண்டும். நாம் கால்பந்து விளையாட்டின் "தந்திரமான ஆட்டங்களில்" தவறுவதில்லை - நாம் அடிப்படையில் தடுத்தல் மற்றும் கையாளுதல் ஆகியவற்றிலேயே தோல்வியடைகின்றோம். ஒருவர் [இசைக் கலையில்] முன்னேறிச் செல்வதற்கு முன்பு, இசையின் அடிப்படை ஸ்வரங்களில் நிபுணத்துவம் பெற வேண்டும். இளைஞர்கள் சட்டங்களைக் கற்க வேண்டும்: ஞானமுள்ள முதியவர்கள் மட்டுமே விதிவிலக்குகளை அறிய முடியும். ஜெபம் என்பது "வடிவமைப்பில் சக்தியாக" உள்ளது.*

*இயேசு நமது கவனத்தைக் கவருகின்றார். அவர் ஒரு சில வார்த்தை களிலேயே ஜெபத்தின் முழுத் தொகுதியையும் உள்ளடக்கினார். பின்வரும் பாடங்களில் ஒன்று அவருடைய "மாதிரி ஜெபத்திற்கு" அர்ப்பணிக்கப்படும். அது, இயேசுவால் எடுத்துரைக்கப்பட்டதால், "கர்த்தரின் ஜெபம்" என்று அழைக்கப்படுகிறது. அது வேதாகமத்தில் உள்ளதால், வேதாகம ரீதி யானதாக உள்ளது. அதை மனப்பாடம் செய்ய முடியும். அதை ஜெபிக்க முடியும். அதைப் பாட முடியும். அது படிக்கப்பட வேண்டும். இதில் தான் நாம் யாவரும் [ஜெபிக்கத்] தொடங்குகின்றோம்.*

# ஜெபம் என்பது விடாமுயற்சியாக உள்ளது

*ஜெபம் பற்றிய நமது "அற்பத்தனத்தின்" நிமித்தம் இயேசு கோபத்தில் வெடிக்கிறார். அவர் நம்மை அதிர்ச்சியடையச் செய்கின்றார்! சீஷர்களின் வேண்டுகோளுக்குப் பதில் அளித்ததில் இயேசு ஒரு எளிய வடிவத்தையே கொடுத்தார்! இது ஏமாற்றம் அளிப்பதாக இருந்திருக்கக்கூடும்! இரகசிய மான எந்தக் கடவுச் சொல்லும் கொடுக்கப்படாதிருந்தது. பொருள் விளங் காத சிறுபிள்ளைத்தனமான விஷயம் ஒன்றும் இவ்விடத்தில் பயன்படுத்தப் படவில்லை. வடிவமைப்புடன் தொடங்குங்கள், பின்பு அதில் விடா முயற்சியுடன் நிலைத்திருங்கள்! நீங்கள் தீவிரமாக செயல்படவில்லை யென்றால், தேவன் ஏன் தீவிரமாக செயல்பட வேண்டும்? நீங்கள் ஜெபித்தில் போராட விரும்பவில்லையென்றால், தேவன் ஏன் கவனிக்க வேண்டும்? ஜெபித்தல் என்பது சிந்தித்தல் என்பதாக உள்ளது. ஜெபித்தல் என்பது ஒப்புக்கொடுத்தல் என்பதாக உள்ளது. ஜெபித்தல் என்பது, கேட்குதலாக, தேடுதலாக, தட்டுதலாக உள்ளது. தொடர்ந்து கேளுங்கள், தேடுங்கள், தட்டுங்கள். தேவன் ஒரு புட்டிக்குள் உள்ள பூதம் அல்ல. ஜெபம் என்பது பணியாக உள்ளது. ஜெபம் என்பது கடினமானதாக உள்ளது. ஜெபத்திற்கு நேரம் தேவைப்படுகிறது. ஜெபம் என்பது, நமது உதடுகளை யல்ல, ஆனால் நமது வாழ்வையே கேட்கிறது. ஒரு சிலர் ஜெபிக்கின்றார்கள். மிகவும் சிலரே விடாமுயற்சியுடன் இருக்கின்றார்கள். ஒருவர் தேவனிடத் தில் "தமது விரல்களைச் சொடுக்க" முடியாது. ஜெபம் என்பது ஒரு வற்புறுத்துதல் அல்ல.*

*இயேசு, தேவனை அறிந்திருந்ததுமல்லாமல், அவர் நம்மையும் அறிகின்றார். லூக்கா 11:5-8ல், அவர் இரண்டு நண்பர்களைப் பற்றிய உவமையின் மூலம் விடாமுயற்சியைப் பற்றி விவரித்தார். நாம் தேவையில் இருக்கின்ற வேளையில் நண்பர்களிடம் வேண்டுகோள் விடுக்கின்றோம். இன்னும், நமது மிகச்சிறந்த நண்பர்களிடத்திலும் கூட, நாம் நமது நேரங்களையும் இடங்களையும் ஞானமாய்த் தெரிவு செய்கின்றோம். நள்ளிரவு வேளை என்பது பொதுவாக, ஏற்புடைய வேளையாக இருப்ப தில்லை! அவ்வேளையில் இன்னொருவரை [உறக்கத்தில்] எழுப்புதல் என்பது பண்பற்ற செய்கையாக இருக்கக் கூடும். அடுத்த நாளில் எப்போதும் பணிநேரங்கள் உள்ளன. [உங்கள்] விடாமுயற்சிக்குப் பதில்செயலாக, ஒரு நண்பர் முறுமுறுத்துக்கொண்டாவது, நள்ளிரவுக்குப் பிந்திய நேரத்தில் நீங்கள் விடுக்கும் வேண்டுகோளை நிறைவேற்றுவார். லூக்கா 11:5-8ல் உள்ள உவமை தேவனுடைய தயக்கத்தைப் போதிப்பதில்லை; அது தேவனுடைய மனவிருப்பத்தை அளிக்கிறது. தேவன் தேவனாக இருப்பதால் ஜெபம் வல்லமையுள்ளதாக இருக்கிறது. நான் ஜெபத்தை நம்புவதில்லை; நான் தேவனை நம்புகின்றேன். தேவன் கிடைப்பவராக இருக்கின்றார். ஜெபித்தல் என்பதைத் தவிர ஜெபத்திற்கு முடிவான விவாதம் எதுவும் இருப்பதில்லை. ஜெபம் எப்போதுமே, முற்றிலும் புதிய சூழ்நிலை ஒன்றை உருவாக்குகிறது. ஜெபத்திற்குப் பின்பு எல்லாம் மாறுபடுகின்றன. வடிவமைப்பைக் கற்றுக் கொள்ளுங்கள். பின்பு விடாமுயற்சியுடன் இருங்கள்.*

## ஜெபம் என்பது பெறுதலாக உள்ளது

*"... கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்" (லூக். 11:9). வேதாகமத்தில் 667 திட்டவட்டமான வேண்டுகோள்கள் உள்ளன, அவற்றில் குறிப்பிட்ட 654 வேண்டுகோள்களுக்குப் பதில்கள் தரப்பட்டுள்ளன என்று ஒருவர் கணித்திருக்கின்றார். இது மிக உயர்வான சதவிகிதமாக உள்ளது! இது, அவற்றில் பதிமூன்று வேண்டுகோள்களுக்குப் பதில் அளிக்கப்படவில்லை என்று குறிப்பதில்லை! ஜெபத்திற்கு அத்தியாவசியமான ஒவ்வொன்றும் லூக்கா 11ல் உள்ளது. ஜெபியுங்கள் ... ஜெபியுங்கள் ... ஜெபியுங்கள்! என்ன வாக்குத்தத்தங்கள்! தேவன் வாக்குத்தத்தங்களை ஏற்படுத்தி, அவற்றைக் காத்துக் கொள்ளுகின்ற தேவனாக இருக்கின்றார்! "உமது உண்மை பெரிதாயிருக்கிறது" (புலம்பல் 3:23). கேளுங்கள் ... தேடுங்கள் ... தட்டுங்கள்! ஜெபத்தில் விடாமுயற்சி என்பது [பலன்] அளிக்கிறது. தாவீதின் சங்கீதங்களை வாசியுங்கள். நம்மை அறிவதில், இயேசு தந்தையர்களை அறிந்தார். நான் ஒரு தந்தையாக இருக்கின்றேன், நான் ஒரு தாத்தாவாக இருக்கின்றேன். தந்தையர்கள் அன்புடன் அளிக்கின்றார்கள். இயேசு, வடிவமைப்பில் இருந்து நண்பர்களிடத்திற்கும் [பின்பு] தந்தையர்களிடத்திற்கும் சென்றார்! பூமிக்குரிய தந்தையர்களே அளிக்கின்றார்கள் என்றால், நமது பரலோக தந்தை எவ்வளவு அதிகமாய் அளிப்பார்? ஜெபம் என்பது முதல் வார்த்தையாக உள்ளது. ஜெபம் என்பது நாம் தொடங்குகின்ற இடமாக உள்ளது. ஜெபம் என்பது கடைசி வார்த்தையாகவும் உள்ளது!*

*பின்வரும் கேள்விகளை ஆழ்ந்து சிந்தியுங்கள்: (1) இயேசு நாளைய தினம் திரும்பி வருவார் என்று நாம் அறிந்தால், இன்றைய நாளில் எவ்வளவு நேரம் [நம்மால்] ஜெபத்திற்கு ஒப்புக்கொடுக்கப்படும்? (2) பரலோகத்தில், நம்மில் பலர், "நான் இன்னும் அதிகமாக ஜெபித்திருக்க வேண்டும்" என்று அறிக்கையிட மாட்டோமா?*

*"ஆண்டவரே, நான் ஜெபத்தில் நம்பிக்கை<br>கொள்ளுவதில்லை. நான் உம்மை நம்புகின்றேன்.<br>விசுவாசத்துடன் ஜெபிக்க எனக்குப் போதியும்."*

---

குறிப்பு

[1]*அகுஸ்தீன் என்பவர், இறையியலாளராக, எழுத்தாளராக, இலத்தீன் பிதாக்களில் ஒருவராக இருந்தவர் (கி.பி. 354-430). [இவர் கத்தோலிக்க மதத்தில் ஒரு மாபெரும் அறிஞராக மதிக்கப்படுகின்றார்.]*

## *2*

# ஜெபம்

## விசுவாசம்

*தேவனையும் விசுவாசத்தையும் நாம் தவறாகப் புரிந்துகொள்ளுவதால், நாம் ஜெபத்தில் தோல்வி அடைகின்றோம். தேவனுடைய இராஜரீகத் தன்மை வலியுறுத்தப்படாதபோது, தேவன் தமது மாபெரும் தன்மையை இழக்கின்றார், வேதாகமம் தனது அதிகாரத்துவத்தை இழக்கிறது, கீழ்ப்படிதல் தனது நன்னெறியை இழக்கிறது, மற்றும் சபை தனது முன்னு ரிமையை இழக்கிறது. தேவன் மீது, தகுதியான ஒரு பயபக்தியானது மனமார்ந்த வருத்தத்தின் ஜெபத்திற்கு வளமான மண்ணாக உள்ளது. ஜெபம், தேவனுக்கு ஒரு முன்னுரிமையை வேண்டிக் கேட்கிறது.*

*ஜெபமானது, விசுவாசத்தை தக்க வகையில் புரிந்து கொள்ளுதலையும் கேட்கிறது. இன்றைய நாட்களில் மக்கள் தேவனைப் பற்றி அதிகமாகப் பேசுகின்றார்கள் - ஆனால் அது வேதாகமத்தின் தேவனைப் பற்றியதாக இருப்பதில்லை. பாவம், இழந்து போகப்பட்ட தன்மை, ஆக்கினைக்கு உட்படுதல், தேவகோபம், மற்றும் நரகம் ஆகியவை பிரபலமற்றவைகளாக உள்ளன. மக்களில் பலர் விசுவாசத்தை சமஅளவில் மேம்படுத்துகின்றார்கள் - ஆயினும் அவர்கள் "விசுவாசம் மட்டும் [போதும்]" என்பதையே ஏற்றுக் கொள்ளுகின்றார்கள். விசுவாசம் மற்றும், "விசுவாசம் மட்டும்" என்பவை மாறுபட்ட இரு கருத்துக்களாக உள்ளன. விசுவாசம் செயல்படுகிறது, ஆனால் "விசுவாசம் மட்டும்" என்பது செத்ததாக இருக்கிறது (யாக். 2:17). நாம் விசுவாசத்தினாலேயே நீதிமான்களாக்கப்படுகின்றோம், ஆனால் "விசுவாசத்தினால் மட்டும்" நீதிமான்களாக்கப்படுவது இல்லை. இது நவீன இறையியலில் மாபெரும் தவறாக உள்ளது. விசுவாசம் செயல்படுகிறது. தேவன் எப்போதுமே மனிதர்களை விசுவாசத்தினாலேயே இரட்சித்து இருக்கின்றார். விசுவாசத்தில் உள்ளடங்கியிருப்பவை என்ன? விசுவாசம் பெற்றுக் கொள்ளுகிறது ... விசுவாசம் பதில்செயல் செய்கிறது ... விசுவாசம் கீழ்ப்படிகிறது ... விசுவாசம் வாழ்கிறது. "கிரியைகளில்லாத விசுவாசமும் செத்ததாயிருக்கிறது" என்று யாக்கோபு கூறினார் (யாக். 2:26). பெரும் பாலான மக்கள் இரட்சிப்பை எல்லையற்ற செயலாக, ஒரு நொடியில் ஏற்படும் விசுவாசமாக மட்டும் எல்லைக்கு உட்படுத்துகின்றார்கள். யாக்கோபின் கூற்றுப்படி, இந்த இடத்தில்தான் "விசுவாசம் செத்ததாக இருக்கிறது." விசுவாசம் என்பது ஒரு கண நேரத்திற்கானது அல்ல; விசுவாசம் என்பது வாழ்வு முழுவதற்கும் இருக்க வேண்டியதாகும். "விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான்" (ரோமர் 1:17; கலா. 3:11; எபி. 10:38ஐக் காணவும்). விசுவாசம் செயல்படுகிறது! எபிரெயர் 11ம் அத்தியாயத்தை வாசியுங்கள்.*

இது “புகழ்மிக்க பரலோக முற்றம்” என்பதாக உள்ளது. அங்கு விசுவாசம் செயல்பட்டது! ஜெபமும் சம அளவில் செயல்படுகிறது, ஆனால் ஜெபத்தில் மனிதர்கள் செயல்படுகின்ற போதுதான் அது[வும்] செயல்படுகிறது. ஜெபம் என்பது முயற்சியாக உள்ளது. ஜெபம் என்பது விடாமுயற்சியாக உள்ளது. ஜெபம் என்பது செயல்படுகின்ற விசுவாசமாக உள்ளது. விசுவாசமிக்க மனிதர்கள் தேவன்மீது அன்புகூர்ந்து அவரில் நம்பிக்கை வைத்த காரணத்தால் ஜெபிக்கின்றார்கள். நீங்கள் நீந்துவதினாலேயே நீந்தக் கற்றுக் கொள்ளுகின்றீர்கள். நீங்கள் ஜெபிப்பதினாலேயே ஜெபிக்கக் கற்றுக் கொள்ளுகின்றீர்கள். ஜெபம் என்பது வலிவார்ந்ததாக உள்ளது. நாம் தேவனுடைய சித்தத்தை நம்முடைய விருப்பத்திற்கு வளைப்பதில்லை; நாம் அவருடைய சித்தங்களுக்கு ஏற்ப வளைகின்றோம். ஒவ்வொன்றும் தேவனைச் சார்ந்துள்ளது என்ற வகையில் நாம் ஜெபிக்கின்றோம்; ஒவ்வொன்றும் நம்மைச் சார்ந்தது என்ற வகையில் நாம் செயல்படுகின்றோம்.“எங்கள் சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவது போல” என்று நாம் ஜெபிப்பது இல்லை; “தேவனுடைய சித்தம் பூமியில் செய்யப்படுவதாக” என்றே நாம் ஜெபிக்கின்றோம்.

மோசமான விஷயங்களை மிகவும் மோசமாக்குவதற்கு, பலர் விசுவாசத்தை - அவர்கள் நம்புகின்றவற்றில் நம்பிக்கை வைக்கும் - விக்கிரகங்களாகக் குறைத்து விடுகின்றார்கள். எல்லா தர்க்கங்களுக்கும் முரண்பட்ட வகையில், அவர்கள் தங்கள் விசுவாசத்தைக் குறித்துப் பெருமைப் படுகின்றார்கள் - அவர்களுடைய விசுவாசத்தில் அவர்கள் மேன்மை பாராட்டுகிறார்கள். விசுவாசம் தாழ்மையாய் இருக்கிறது. விசுவாசத்தின் மகிமை அதைக் கொண்டிருப்பவருக்கல்ல, ஆனால் அவர் எதன் மீது விசுவாசம் கொண்டிருக்கின்றாரோ, அதற்குத்தான் உரியதாகிறது. விசுவாசம் என்பது ஒரு மாயத்தோற்றம் அல்ல. ஒரு விஷயம் உண்மையானது அல்ல என்று நீங்கள் அறிந்திருக்கையில், அதன்மீது நம்பிக்கை வைப்பதற்குப் பெயர் விசுவாசம் அல்ல. விசுவாசம் என்பது தேவனில் நம்பிக்கை வைப்பது - விசுவாசத்திலுள்ள விசுவாசம் அல்ல. விசுவாசம் உண்மை நிலையை மாற்றுவது இல்லை. விசுவாசம் நேர்மையற்ற தன்மையாக இருப்பது இல்லை. விசுவாசம் (எடுத்துக்காட்டாக ஆபிரகாமின் விசுவாசம்) நிச்சயமானவற்றின் மீதானதாக இருப்பதில்லை. ஆபிரகாமுக்கு ஒரு சாலை வரைபடம் தரப்படவில்லை. “[அவன்] தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப் போனான்” (எபி. 11:8ஆ). இது விசுவாசத்தின் சாதனையாக உள்ளது - இது நாம் நம்பிக்கை வைக்கக் கூடிய தேவனுடைய கரங்களில் நமது கைகளை ஒப்புவித்தலாக உள்ளது. “உமது உண்மை பெரியதாயிருக்கிறது” (புலம்பல் 3:23ஆ). விசுவாசம் என்பது தாழ்மையாக, சார்ந்திருத்தலாக, துறத்தலாக, கீழ்ப்படிதலாக, வாழ்வாக உள்ளது. நாம் விசுவாசத்தினால் இரட்சிக்கப்படுகிறோம், பரிசுத்தமாக்கப் படுகின்றோம், மகிமைப்படுத்தப்படுகிறோம். விசுவாசம் ஜெபிக்கிறது. ஜெபம் என்பது விசுவாசத்தின் குரலாக உள்ளது. ஜெபம் என்பது சுயத்தில் அல்ல, தேவனில் நம்பிக்கை வைத்தலாக உள்ளது. விசுவாசம் என்பது சுயத்திற்கு மரித்து, தேவனுக்கு முற்றிலுமாக ஒப்புக்கொடுத்தலாக உள்ளது.

*நமது ஜெபம் என்பது தேவனைப் பற்றிய நமது உண்மைக் கருத்தாக உள்ளது. நமது ஜெபம் விசுவாசம் பற்றிய நமது உண்மைக் கருத்தாக உள்ளது. விசுவாசத்திற்கு எல்லாப் பதில்களும் தரப்பட்டு இருப்பது இல்லை; விசுவாசம் என்பது பதில்கள் இன்றி[யே] வாழ்வதாக உள்ளது. ஜெபமானது வாழப்படும்போது மட்டுமே கருத்துணர்வை ஏற்படுத்த முடியும். யோபு விசுவாசத்தையும் ஜெபத்தையும் முழுமையாக விளக்கப் படுத்தினார்: ''அவர் என்னைக் கொன்றுபோட்டாலும், அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன்" (யோபு 13:15). ஒரே ஒரு முடிவுதான் உள்ளது: "தேவன் வாழ்வில் மாபெரும் அறிபவராக இருக்கின்றார்!" ஜெபம் "தேவனு டைய உயர்வை" துதிக்கிறது.*

*நான் எட்டு வயதுப் பையனாக இருந்தபோது, எனது தந்தையார் என்னை, வங்கியாளரிடம் அழைத்து சென்றார். அவரிடத்தில் என் தந்தை, நான் ஒரு கூட்டாளி என்றும், என்னால் கையெழுத்திடப்பட்ட எல்லாக் காசோலைகளும் பணமாக்கப்பட வேண்டும் என்றும் கூறினார். என் தந்தை எனக்குக் கொடுத்தது மாபெரும் சிலாக்கியமாக இருந்தது, அது ஒரு புனிதமான நம்பிக்கையாக இருந்தது. அவர் இறக்கும் வரையில் அந்த சிலாக்கியம் என்னுடையதாக இருந்தது. அந்த சிலாக்கியத்தை நான் ஒருபோதும் தவறாகப் பயன்படுத்தியதோ அல்லது அனுகூலப்படுத்திக் கொண்டதோ இல்லை. இன்றைய நாள் வரையிலும் நான் யென்னீஸ் வங்கியில் ஒரு கணக்கு வைத்திருக்கின்றேன். என் தந்தை விரும்புவார் என்று நான் கருதும் செயல்களைச் செய்வதற்கு மட்டுமே நான் அதைப் பயன்படுத்துகின்றேன். தவறான நிரூபணம் பெற்ற பிரசங்கியார்கள், தேவனிடம் ஜெபிக்கையில் தாங்கள் கொண்டிருந்த உரிமைகோருதல்கள், உரிமைகள் மற்றும் வற்புறுத்துதல்கள் பற்றிப் பேசும்போது அது எனக்கு அதிர்ச்சியை ஏற்படுத்துகிறது. ஜெபம் என்பது முரட்டுத்தனமானதோ அல்லது சுயநலமானதோ அல்ல: "அதற்காகக் கேளுங்கள் மற்றும் அதை ஏற்றுக்கொள்ளுங்கள்,'' ''அதை நம்புங்கள் மற்றும் அதைச் செய்து முடியுங்கள்." இந்தச் சொற்றொடரில் விளக்கப்படுத்தப்பட்ட கருத்துக்கள் முன் அனுமானங்களாக/தவறான யூகங்களாக உள்ளன. ஜெபத்தை ஒரு கேலிக்குரிய செயலாக ஆக்கிவிடாதீர்கள்.*

# ஜெபத்தின் வல்லமை

## யாக்கோபு 5:13-18

*"நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது" (யாக். 5:16ஆ).*

*பலவீனமான பரிசுத்தவான் முழந்தாளில் இருக்கும்போது, அதைப் பார்க்கும் சாத்தான் பயந்து நடுங்குகின்றான்.*

*வில்லியம் கௌப்பெர்*

*நாம் ஏன் அதிகமாக ஜெபிப்பதில்லை? தேவன் ஜெபத்தைக் கேட்கின்றவராக, ஜெபத்திற்குப் பதில் அளிக்கின்றவராக இருந்தால், நாம் ஏன் அதிகமாக ஜெபிப்பதில்லை? ஜெபிக்கின்றவர்களுக்கு மாபெரும் விஷயங்கள் நடக்கின்றன. ஜான் வெஸ்லி என்பவர், "தேவன் ஜெபத்தினால் எல்லாவற்றையும் செய்கின்றார், அது இன்றி அவர் ஒன்றும் செய்வது இல்லை என்ற கருத்தினால் நான் இணங்க வைக்கப்படுகின்றேன்" என்று கூறினார். ஒரு நாளில் குறைந்தது நான்கு மணி நேரமாவது ஜெபிக்காத பிரசங்கியார் மீது ஜான் வெஸ்லி மிகவும் சிறிய அளவே மதிப்பு வைத்திருந்தார். ஒரு தத்துவ ஞானி, "இந்த உலகம் கனவு காண்கின்றவற்றைக் காட்டிலும் அதிகமானவை, ஜெபத்தினால் கொண்டு வரப்படுகின்றன" என்று கணித்துள்ளார். தத்துவத்திற்கு சிந்தித்தல் எப்படியோ அப்படியே மதத்திற்கு ஜெபித்தலும் உள்ளது. நாம் ஜெபிக்க இயலாத அளவுக்கு வேலை மும்முரமாய் இருக்கிறபோது, நாம் வல்லமையைப் பெற்றுக்கொள்ள இயலாத அளவுக்கு வேலை மும்முரமாய் இருக்கின்றோம். நாம் ஏன் அதிகமாய் ஜெபிப்பதில்லை? ஒரு மனிதர் ஜெபிக்காத வரையில் தேவனுடைய பல ஆசீர்வாதங்கள் அவருக்குத் [அந்த மனிதருக்குத்] தரப்பட முடியாது.*

*தேவன் தாமே, ஜெபத்தினால் ஆழ்ந்த மனப்பதிவைப் பெறுகின்றார். அனனியாவை சவுலிடம் செல்லும்படி கூறிய வேளையில் தேவன், "... அவன் இப்பொழுது ஜெபம் பண்ணுகிறான்" (அப். 9:11) என்று கூறினார். ஜெபத்தைக் காட்டிலும் மனிதனிடமிருந்து வரும் வேறு எதுவும் தேவனுக்கு மிகுந்த ஆச்சரியம் உள்ளதாக இருப்பதில்லை. யோவான், "நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம். நாம் எதைக் கேட்டாலும், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்று நாம் அறிந்திருந்தோமானால், அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக் கொண்டோமென்றும் அறிந்திருக்கிறோம்" (1 யோவா.*

*5:14, 15) என்று எழுதினார்.*

*உலகத்தை மாற்றி அதை அசைத்த மனிதர்கள் ஜெபிக்கும் மனிதர்களாகவே இருந்துள்ளார்கள். தேவனுடன் பேசுதல், தேவனால் வரவேற்கப்படுதல், தேவனால் பதில் அளிக்கப்படுதல் என்பது என்ன ஒரு பயபக்திக்குரிய சிலாக்கியம்! தேவன் மனிதனுக்குக் கூட இணங்கக் கூடும்! இது பலவீனத்தின் அறிகுறி அல்ல, ஆனால் பலத்தின் வெளிப்பாடாக உள்ளது. தேவன் இதை இவ்விதமாக நடத்தவே சித்தம் கொண்டார். வாழ்வுபற்றி தேவனுடைய ஞானமான திட்டத்தில், அவர் விஷயங்களை நடக்கச் செய்வதற்கு மனித ஜெபத்தை ஒரு வழிமுறையாக உருவாக்கியுள்ளார்.*

*ஜெபம் வல்லமையுள்ளதாக இருக்கிறது, ஆயினும் நாம் ஜெபத்தில் நம்பிக்கை கொள்ளுவது இல்லை - நாம் தேவன் மீதுதான் நம்பிக்கை கொள்ளுகின்றோம். ஜெபம் சுகமளிப்பதில்லை - தேவன் சுகமளிக்கிறார். ஜெபம் என்பது நாம் தேவனிடம் சென்று சேரும் வழியாக உள்ளது. ஜெபத்தில் நாம் சர்வ வல்லமையுள்ள தேவனை நமது கூட்டாளியாக்குகின்றோம்! இந்த அண்டசராசரத்தின் தேவன் நம்மைக் கேட்க, நமக்கு உதவ விரும்புகின்றார்! அங்குதான் ஜெபத்தில் வல்லமை உள்ளது.*

## ஜெபியுங்கள்!

*"நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது" (யாக். 5:16ஆ). இதை நம்புங்கள்! இதை நடைமுறைப்படுத்துங்கள்! "எலியா என்பவன் நம்மைப் போலப்பாடுள்ள மனுஷனாயிருந்தும், மழைபெய்யாதபடிக்குக் கருத்தாய் ஜெபம் பண்ணினான். அப்பொழுது மூன்று வருஷமும், ஆறுமாதமும் பூமியின் மேல் மழைபெய்யவில்லை. மறுபடியும் ஜெபம் பண்ணினான். அப்பொழுது வானம் மழையைப் பொழிந்தது, பூமி தன் பலனைத் தந்தது" (யாக். 5:17, 18). எலியாவுடைய ஜெபத்தின் வல்லமை இவ்வாறு இருந்தது! ஜெபம் என்பதுதான் தேவனுடைய ஊழியக்காரர்களின் மிக முக்கியமான பணியாக இருக்கிறது. முதலாவது ஜெபியுங்கள்!*

*எலியா ஜெபம் செய்தார். கிரேக்க மொழியில் இதை வாசிப்பது மிகவும் ஆர்வத்திற்கு உரியதாக இருக்கிறது: "அவர் தமது ஜெபங்களில் ஜெபித்தார்." எலியா தேவன்மீது விசுவாசம் வைத்திருந்தார், எனவே அவர் ஜெபித்தார். உண்மையில், உணர்வுள்ள தன்மையில், விசுவாசத்தினால் எலியா ஜெபம் செய்தார்! எலியா ஜெபங்களைக் கூறவில்லை; அவர் தமது ஜெபங்களை ஜெபித்தார்.*

*இங்கு விலைமதிப்பற்ற இன்னொரு சிந்தனை உள்ளது: "எலியா என்பவன் நம்மைப்போலப் பாடுள்ள மனுஷனாயிருந்தும்" (வ. 17). நாம் வேதாகம வீரர்களை "சூப்பர் ஸ்டார்கள்" ஆக்க முயற்சி செய்கின்றோம். இதற்கு நேர்மாறாக, அவர்கள் நம்மைப் போன்ற மனிதர்களாகவே இருந்தார்கள். தேவன் எலியாவின் ஜெபத்தைக் கேட்டார்; தேவன் நமது ஜெபத்தை[யும்] கேட்கின்றார்! "கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள்மேல் நோக்கமாயிருக்கிறது, அவருடைய செவிகள் அவர்கள் வேண்டுதலுக்குக்*

*கவனமாயிருக்கிறது" (1 பேது. 3:12அ). மேரி அரசியார் அவர்கள், 10,000 மனிதர்கள் கொண்ட படையைக் காட்டிலும் ஜான் நாக்ஸின் ஜெபங்களுக் குத் தாம் அதிகமாக அஞ்சியதாகக் கூறினார். ஜெபத்தில் வல்லமை உள்ளது! அது நம்முடையதாக உள்ளது!*

*ஜெபம் ''மிகவும்'' பெலனுள்ளதாயிருக்கிறது - ''மிகவும்'' எதிர் ''கொஞ்சம்.'' ஜெபம் தேவன்மீது செயல்தாக்கம் புரிகிறது! தேவன் செயல்படுகின்றார்! ஜெபம் இந்த உலகத்தை அசைக்கிற புயங்களை அசைக்கிறது. ஜெபம் எவ்வளவு வல்லமை நிறைந்ததாக உள்ளது? தேவன் எவ்வளவு வல்லமை நிறைந்தவராக இருக்கின்றார்? எருசலேம் சபையார் ஜெபித்தபோது, அவர்கள் கூடியிருந்த இடம் அசைந்தது (அப். 4:31). நாம் கேட்பதற்கும் நினைப்பதற்கும் அதிகமானவற்றைச் செய்வதாக தேவன் வாக்குத்தத்தம் செய்துள்ளார் (எபே. 3:20). நாம் ஏன் அதிகமாக ஜெபிப்பதில்லை? தேவனுடைய வல்லமை பெற்றுக் கொள்ளப்பட்டிருந் தால், சபையானது எவ்வளவு வல்லமை நிறைந்ததாக இருக்கக் கூடும்? ஜெபமற்ற சபையானது வல்லமையற்ற சபையாக உள்ளது. ஜெபிக்கின்ற சபை வளராத சபையாக இருப்பதை நீங்கள் ஒருபோதும் காண முடியாது. முதலாவது ஜெபியுங்கள்! வேதாகமத்தில் நாம் தேவனுடைய 32,000 வாக்குத்தத்தங்களைக் காண்கின்றோம்! தேவன் ஜெபத்தைக் கேட்டு அதற்குப் பதில் அளிக்கின்றார். தேவனுடைய ஒவ்வொரு வாக்குத்தத்தமும் காக்கப்பட்டுள்ளது.*

*எலியா ஜெபம் செய்தார், மழை பெய்யாதிருந்தது; அவர் மீண்டும் ஜெபம் செய்தார், மழை பெய்தது. அவ்விரண்டு ஜெபங்களுமே அன்றாட வாழ்வை உள்ளடக்கியிருந்தன. பாலஸ்தீன நாட்டிற்கு மத்திய தரைக் கடலில் இருந்துதான் மழை வந்தது. எலியா எந்தத் திசையில் நோக்க வேண்டும் என்பதை அறிந்திருந்தார். ஆம், தேவனுடைய விசேஷ அருளிரக் கத்தைக் கண்ணோக்குவதில் பிரச்சனைகள் உள்ளடங்கி இருக்கின்றன. தேவனே ஒரு இரகசியமானவராக இருக்கின்றார். எலியா, அன்றாட வாழ்வில் உண்மையான மக்களுடன் ஈடுபாடு கொண்டிருந்தார். தேவன், மக்களுடன் அன்றாட வாழ்வில் செயல்படுகின்றார். என்ன ஒரு தேவன்!*

*ஜெபம் என்பது, ஒன்று மாபெரும் வல்லமையாய் இருக்க வேண்டும் அல்லது ஒரு மிகப் பெரும் மோசடியாய் இருக்க வேண்டும். நாம் வேலை செய்கின்றபோது, நாம் செயல்படுகின்றோம்; நாம் ஜெபிக்கின்றபோது, தேவன் செயல்படுகின்றார்! நமது ஆவிக்குரிய வல்லமையானது நமது ஜெபங்களின் இரக்கத்தில்தான் உள்ளது. ஒரு கிறிஸ்தவரை அவரது கால்களில் நிற்கச் செய்வதற்கு, அவரை முழங்காலிட வைப்பதே மிகச் சிறந்த வழியாக உள்ளது. கிறிஸ்தவர்கள் தங்கள் பிரச்சனைகளின் மீது அல்ல, ஆனால் தங்கள் வல்லமைகளின் மீது கவனம் செலுத்தியவர்களாகவே வாழ்க்கையை அணுக வேண்டும். கிறிஸ்தவர்கள் ஒன்று ஜெபிக்கின்றார்கள் அல்லது அழிகின்றார்கள். புதிய ஏற்பாட்டு சபையானது ஜெபிக்கும் சபையாக இருந்தது (அப். 2:42; 4:23-31). ஜெபமற்ற [வேதபாட] படிப்புகள், பிரசங்கங்கள், மற்றும் ஊழியங்கள் ஆகியவை பற்றி சாத்தான் பயப் படுவதே இல்லை. அவன் நமது ஊழியத்தைப் பார்த்துச் சிரிக்கின்றான்,*

*நமது ஞானத்தைப் பார்த்து ஏளனம் செய்கின்றான், ஆனால் நாம் ஜெபிக்கும்போது அவன் பயந்து நடுங்குகின்றான். ஜெபத்தில் வல்லமை உள்ளது. இதை நம்புங்கள்.*

## தேவன் ஜெபத்திற்குப் பதில் அளிக்கின்றார்!

*"என் ஜெபம் கேட்கப்படும் என்று நான் அதிகமாக விசுவாசிப்ப தில்லை" என்று ஒரு மனிதர், மார்ட்டின் லூத்தரிடம் குறிப்பிட்டார். அதற்கு லூத்தர், "அதுவே நீங்கள் ஜெபிப்பதற்குத் தகுந்த காரணமாக உள்ளது" என்று பதில் அளித்தார். கிறிஸ்தவரின் ஒவ்வொரு ஜெபமும் கேட்கப் படுகிறது! விசுவாசிகள் செய்யும் ஜெபங்களில் பதில் அளிக்கப்படாதவை என்று எதுவும் இருக்க முடியாது. "ஜெபிக்கப்படாத ஜெபம்" உள்ளது, ஆனால் "பதில் அளிப்படாத ஜெபம்" என்று ஒன்று ஒருபோதும் இருப்பது இல்லை. ஜெபம் என்பது தேவனுடைய தயக்கத்தை வெற்றிக் கொள்ளுதல் அல்ல; அது தேவனுடைய மனவிருப்பமாக உள்ளது. தேவன் ஜெபத்திற்குப் பதில் அளிக்கின்றார்! இது நமது பிரச்சனையாக இருப்பதில்லை. தேவன் ஜெபத்திற்கு எவ்வாறு பதில் அளிக்கின்றார்?*

*(1) தேவன் ''ஆம்'' என்று பதில் அளிக்கின்றார். தேவன் (ஒரு அன்பார்ந்த தந்தையைப்போல) நாம் விரும்புகின்றவற்றைக் கொடுக்க விரும்புகின்றார். எலியா ஜெபித்தார், மழை பெய்யாதிருந்தது. எலியா [மீண்டும்] ஜெபித்தார், மழை பெய்தது. அன்னாள் ஒரு மகன் வேண்டும் என்று ஜெபித்தாள் (1 சாமு. 1:11). தேவன் சாமுவேல் மற்றும் பிற குழந்தைகளைக் கொடுத்து அவளை ஆசீர்வதித்தார். கொடுப்பதற்கென்றே தேவன் ஜீவிக்கின்றார். எசேக்கியா உயிர்வாழ வேண்டும் என்று ஜெபித்தார்; அவரது வாழ்நாளில் தேவன் பதினைந்து ஆண்டுகளைக் கூட்டிக் கொடுத்தார் (ஏசா. 38:2-5). ஆயினும், நாம் நமது ஜெபங்களுக்கான பதில்களைக் குறிப்பிட விரும்புகின் றோம். தேவன் ஒரே ஒரு வழியில்தான் பதில் தர முடியும் என்று நாம் நினைக்க விரும்புகின்றோம். பிள்ளைகள் [எது] சிறந்தது என்று அறிவது இல்லை; பெற்றோர்கள் அதை அறிகின்றார்கள். மனிதர்கள் தங்களுக்கு எது தேவை என்று அறிவது இல்லை; தேவன் அதை அறிகின்றார். தேவனுடைய "ஆம்!" என்பது எதிர்பாராத பலன்களாக இருக்கலாம்! நமது வாழ்வானது வேருடன் பிடுங்கப்பட்டு இருக்கலாம். இதுவே ஜெபத்தில் உள்ள "அபாயம்" ஆகும். நீங்கள் எவ்வாறு ஜெபிக்கின்றீர்கள் என்பதில் ஜாக்கிரதை யாய் இருங்கள் - நீங்கள் ஒருவேளை அதைப் பெற்றுக்கொள்ளலாம்! விசுவாசத்தின் நடையானது, நாம் எப்போதுமே தேவனிடத்திலிருந்து எதிர்பாராதவற்றைப் பெற்றுக் கொள்ளத் தயாராக இருக்கும்படி உய்த்து உணர்த்துகிறது. தேவன் ''பெட்டிக்குள்'' {boxed in?} இருப்பவராக முடியாது. உங்களால் இயலாத வகையில் அல்ல, ஆனால் உங்களால் இயன்ற வகையில் ஜெபியுங்கள். நமது வாழ்வில் தேவன் வரவேற்கப்படுகின்ற போது, எல்லா வகையான விஷயங்களும் நடைபெற முடியும். "தேவனு டைய சித்தத்திற்காக" ஜெபியுங்கள்.*

(2) தேவன் "இல்லை" என்று பதில் அளிக்கின்றார். "இல்லை" என்பதும் ஒரு பதிலாக உள்ளது! இது ஒரு பதிலாக உள்ளது என்பதை நாம் மறுக்க விரும்புகின்றோம். ஜெபம் என்பது ஒன்றுமில்லாதவற்றிற்கு சிலவற்றைப் பெற்றுக்கொள்ளும் அளவுக்கு மலிவான வழியாக இருப்பதில்லை. தேவன் தேவனாகவே இருக்கின்றார், மனிதன் அவ்வாறு இருப்பது இல்லை. ஜெபம் என்பது, மனிதனை தேவனுக்கு எஜமானனாக ஒருக்காலும் மாற்றுவது இல்லை. பதில் அளிக்கப்பட்ட ஜெபங்களுடன் "ஆம்" என்பதை மிகவும் ஏராளமானவர்கள் ஒன்றாக்குகின்றார்கள். தந்தையர்கள் எப்பொழுதுமே தங்கள் பிள்ளைகள் கேட்கின்ற எல்லாவற்றையும் தர இயலாது. நம்மில் பலர், நாம் கேட்டவற்றை நமக்குக் கொடுக்காமல் இருந்தமைக்காகத் தேவனுக்கு நன்றி செலுத்தப் போதுமான அளவு நீண்ட நாட்கள் வாழ்ந்து இருக்கின்றோம். ஒவ்வொரு "ஆம்" என்பதும் அதற்குச் சமமான "இல்லை" என்பதைக் கொண்டதாக உள்ளது.

தேவன் கெத்செமெனேயில் தமது அன்பார்ந்த மகனுக்கு மூன்று முறை "இல்லை" என்று கூறினார். 2 கொரிந்தியர் 12:8, 9ல் பவுலின் முள் பற்றிய விஷயத்திற்குத் தேவன் அவரிடம் மூன்றுமுறை "இல்லை" என்று கூறினார். சிலவேளைகளில், ''இல்லை'' என்பது மிகச்சிறந்த பதிலாக உள்ளது. ஜெபத்தில் நாம் தேவனுடன் பேசுகின்றோம் - நாம் தேவனை "சூழ்ச்சியினால் வெல்வதற்கு" முயற்சி செய்வதில்லை. ஜெபத்தில் நாம் தேவனுடைய பதிலை விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், அதை நாம் நம்புகிறோம். இயேசு தமது ஜெபத்தின் மூலமாக எதைப் பெற்றுக் கொண்டார்? கல்வாரி!

(3) தேவன் ''காத்திருக்கின்றார்.'' லூக்கா 1ல் நாம் மனங்கவரும் வரலாறு ஒன்றைக் காண்கின்றோம். சகரியாவும் எலிசபெத்தும் விசுவாசமிகுந்தவர் களாய் இருந்தார்கள். ஆயினும், அவள் மலடியாக இருந்தாள். அநேக ஆண்டுகளாக அவர்கள் ஒரு குழந்தை வேண்டும் என்று தேவனிடத்தில் ஜெபித்தார்கள். அவர்கள் இன்னும் - கசப்புணர்வுடன் - ஜெபித்தார்கள். ஒரு தூதன் சகரியாவுக்கு ஒரு குழந்தை பிறக்கும் என்று வாக்களித்தார். அவர் [சகரியா] மெய்சிலிர்த்துப் போகவில்லை! ஏன்? ஏனென்றால் அவர் இருபது ஆண்டுகளுக்கு முன்பே அந்தக் குழந்தை வேண்டும் என்று விரும்பி யிருந்தார்! நம்மில் மிகப் பலர், நமது கால அட்டவணையின்படி தேவன் செல்ல வேண்டும் என்று அவரிடம் கேட்கின்றோம். தேவனுடைய காலம் வித்தியாசமானதாக இருக்கலாம். "உரத்துச் சத்தமிடாத வாய் மூடப்படும்!" யோவான் ஸ்நானன் பிறக்கும் வரையிலும் சகரியா பேச்சற்றவராயிருந்தார். என்ன ஒரு மகன்! அவர்கள் கர்த்தருக்காகக் காத்திருக்க மனமற்று இருந்தார்கள், ஆனால் ''காலம் நிறைவேறினபோது'' தேவன் அவர்களுக்குக் கொடுத்த மகனை கண்ணோக்குங்கள்!

ஆதியாகமம் 18:23-32ல் ஆர்வத்திற்குரிய இன்னொரு ஜெபம் உள்ளது. சோதோமைக் காக்கும்படி ஆபிரகாம் ஜெபித்தார். அவர் தேவனுடன் பேரம் பேசினார். ஐம்பது - ஆம், பத்து நீதிமான்கள் இருந்திருந்தாலும் கூட சோதோம் காக்கப்பட்டிருக்கக் கூடும். பின்பு ஆபிரகாம் அதை விட்டு

விட்டார்! ஐந்து, இரண்டு அல்லது ஒருவர் இருந்திருந்தால் கூட சோதோம் காக்கப்பட்டிருக்கக் கூடுமா? யாருக்கும் தெரியாது ... ஏனென்றால் ஆபிரகாம் கர்த்தருக்குக் காத்திருப்பதை விட்டுவிட்டார்.

எரேமியா 42:4-7ல் தேவன் எரேமியாவின் ஜெபத்திற்குப் பதில் அளித்தார், ஆனால் அவர் அதைச் செய்வதற்குப் பத்து நாட்கள் காத்திருந் தார். இயேசு, ஜெபம் பற்றிய தமது கொள்கைகளில், உறுதியாய் இருத்தலை குறித்துப் பல பாடங்களைப் போதித்தார். நீங்கள் நம்புவதை விட்டுவிடும் போது, ஜெபிப்பதை விட்டுவிடுகின்றீர்கள். கீழே ஆழமாக, நாம் ஜெபத்தில் உண்மையிலேயே நம்பிக்கை வைக்கின்றோமா? "முழந்தாள்களில் இருக்கும் கிறிஸ்தவர், குதி உயர்த்தி நடக்கும் தத்துவ ஞானியை விட மேலானவராகக் காணப்படுகின்றார்.'' (இது அகஸ்டஸ் டோப்லேடி என்பவரால் கூறப்பட்டது.)

ஜெபிப்பதை விட்டுவிடாதீர்கள்.
பதில் வரத் தாமதித்தால்,
காத்திருங்கள். தேவன் வருவார்,
அவர் ஒருபோதும் மிகவும் தாமதமாக
வர முடியாது.

(4) தேவன் "பதிலீடாக ஒன்றைத் தருகின்றார்." அவர் வேறுபட்ட ஒன்றை, அல்ல இன்னும் சிறப்பான ஒன்றை அனுப்புகின்றார் - அவர், நாம் கேட்டதற்கும் அதிகமானதை நமக்குத் தருகின்றார். பாலஸ்தீனத்தின் உள்நுழைய வேண்டும் என்று மோசே ஜெபித்தார். அவரது வேண்டு கோளை தேவன் அனுமதிக்கவில்லை, ஆனால் பிஸ்காவின் கொடுமுடியில் இருந்தும் மறுரூப மலையில் இருந்தும் மோசே பாலஸ்தீன நாட்டைக் காணும்படிக்குத் தேவன் அனுமதித்தார். இயேசு லாசருவைக் குணமாக்க வராதிருந்தார், ஆனால் அவர் லாசருவை மரித்தோரில் இருந்து உயிருடன் எழுப்பினார் (யோவா. 11:43, 44). மார்த்தாள் இயேசுவை உயிர்த் தெழுதலும் ஜீவனுமாகக் காணும்படிக்கே அவர் லாசருவை உயிருடன் எழுப்பினார். அழுதுபுலம்பிய ஒரு பெண்ணிடத்தில் உயிர்த்தெழுதலைப் பற்றிய மாபெரும் போதனை இயேசுவால் தரப்பட்டது. பிள்ளைகள் விரும்புவதைப் பெற்றோர்கள் தரமுடியாத போது, அவர்கள் சில வேளைகளில் அதைவிட மேன்மையானதைப் பதிலீடாகத் தருகின்றார்கள். இந்த விஷயத்தைப் பற்றிப் பவுல், ரோமர் 8:31, 32ல் விவரித்தார்: "இவைகளைக் குறித்து நாம் என்ன சொல்லுவோம்? தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால், நமக்கு விரோதமாயிருப்பவன் யார்? தம்முடைய சொந்தக் குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும், அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடேகூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பது எப்படி?"

உள்நாட்டுப் போரில் அரசியல் கூட்டமைப்பின் படைவீரர் ஒருவர் இதை நன்கு எடுத்துரைத்தார்:

நான் சாதிக்கக் கூடும்படி தேவனிடம் பெலத்தைக் கேட்டேன்,

*நான் தாழ்மையுடன் கீழ்ப்படியக் கற்கும்படி பலவீனனாக்கப் பட்டேன் ...*

*நான் மிகப் பெரிய விஷயங்களைச் செய்யக்கூடும்படி தேவனிடம் உடல் நலத்தைக் கேட்டேன்,*

*நான் மேன்மையானவற்றைச் செய்யும்படி நோயாளியாக்கப் பட்டேன்.*

*நான் மகிழ்ச்சியாய் இருக்கும்படி செல்வங்களைக் கேட்டேன்,*

*நான் ஞானவானாகும்படி வறுமை தரப்பட்டேன்.*

*நான் மனிதரால் புகழ்ச்சியைப் பெறும்படி அதிகாரத்தைக் கேட்டேன்,*

*நான் தேவனுடைய தேவையை உணரும்படி பலவீனம் அளிக்கப் பட்டேன்,*

*நான் வாழ்வை மகிழ்வுடன் அனுபவிக்க எல்லா விஷயங்களையும் கேட்டேன்,*

*நான் எல்லா விஷயங்களையும் அனுபவிக்கும்படி நான் வாழ்வு அளிக்கப்பட்டேன்.*

*நான் கேட்ட எதுவும் பெற்றுக்கொள்ளவில்லை, ஆனால் நம்பியிருந்த ஒவ்வொன்றையும் பெற்றுக் கொண்டேன்.*

*என்னைக் குறித்துப் பொருட்படுத்தாமல், எனது பேசப்படாத ஜெபங்கள் பதில் அளிக்கப்பட்டன.*

*எல்லா மனிதர்களின் மத்தியிலும் நான் வளமாக ஆசீர்வதிக்கப் பட்டேன்.*

*சாலொமோன் ஞானத்தைக் கேட்டார் (1 இரா. 3:6-9). தேவன் அவருக்கு ஞானத்தை மட்டுமின்றி செல்வங்களையும், சமாதானத்தையும், வல்லமையையும் கொடுத்தார். மனிதன் தனது சிறிய ஜெபங்கள் பதில் அளிக்கப்படாதபோது, பெரும்பாலும் ஏமாற்றம் அடைகின்றான். மனிதனின் ஜெபங்கள் மிகவும் சிறியதாக இருக்கும்போது, தேவன் ஏமாற்றம் அடைகின்றார்.*

*(5) தேவன் "நம்மை மாற்றுகின்றார்." தேவன் நம்மை மாற்றுகின்ற காரணத்தினால், ஜெபம் சூழ்நிலைகளை மாற்றுகிறது. நம்மை மாற்றுதல் என்பது சூழ்நிலைகளை மாற்றுவதை விடப் பெரிதானதாக உள்ளது. யாரோ ஒருவரில் விசுவாசம் வைத்திருப்பது என்பது, அந்த யாரோ ஒருவருக்கு உங்களையே கொடுப்பதாகிறது. நாம் ஜெபிக்கும்போது, நாம் மாறத் தயாராக இருக்க வேண்டும். நாம் ஜெபிக்கும்போது ஏற்படும் விளைவானது நாம் ஜெபிக்காதபோது ஏற்பட்டிருக்கும் விளைவில் இருந்து மாறுபட்டதாக உள்ளது. நாம் பிரச்சனைகள் குறையவேண்டும் என்றல்ல, ஆனால் பெலம் அதிகரிக்க வேண்டும் என்று ஜெபிக்க வேண்டும். நாம் இலகுவான சுமைக்காக அல்ல, ஆனால் வலிவான அகலமான தோள்களுக்காக ஜெபிக்க வேண்டும். பதில் அளிக்கப்பட்ட ஜெபத்தில், ஆசீர்வாதங்கள் என்பதல்ல ஆனால் தேவன் நமது வாழ்வில் செயல்படுவதைக் காண்பதென்பதே மாபெரும் அற்புதமாக இருக்கிறது. தேவன் நமது வாழ்வில் செயல்படுகின்றார் என்பதைக் காணுதல் பயபக்திக்கு உரியதாக உள்ளது! ஜெபித்தல் என்பது மாற்றத்திற்கானதாக, தேவனிடத்தில் திறந்தவர்களாய் இருப்பதற்கானதாக உள்ளது.*

*(6) தேவன் நமக்கு "தேவனை" கொடுக்கின்றார்.* தேவன் சில பதில் களைக் கொடுத்தால், நம்மால் அவற்றை உண்மையில் கையாள முடியாது. நமக்கு விளக்கங்கள் தேவையில்லை - நமக்கு தேவனே தேவையாக உள்ளார்! *தேவனே!* தேவன் *தாமே* வருகின்றார்! தேவன் சர்வ-வல்லமை யுள்ளவராகையால் ஜெபம் வல்லமை நிறைந்ததாக உள்ளது. ஜெபம் நம்மை தேவனுடைய பிரசன்னத்தில் வைக்கிறது. நாம் தேவனுடன் அதிகமான நேரத்தைச் செலவிடும்போது, நாம் அதிகமாக தேவனைப் போல் ஆகின்றோம். நாம் ஆராதிக்கின்ற தேவனைப் போன்றவர்களாகின்றோம். தேவன், மோசேயிடம், தாவீதிடம், யோபுவிடம், தீர்க்கதரிசிகளிடம், பவுலிடம் வந்தார். தேவனுடைய பிரசன்னம் என்பதே ஜெபத்திற்கான மாபெரும் பதிலாக உள்ளது. தேவன் நமக்கு என்ன *"செய்கின்றார்"* என்பதைக் காட்டிலும், அவர் நமக்கு என்னவாக *"உள்ளார்"* என்பதே ஜெபத்திற்கான மாபெரும் பதிலாக உள்ளது.

*எந்த வழிமுறைகளில் என்று நான் அரிதாய்க் கூட அறியாதிருப்பினும்,*
*தேவன் ஜெபத்திற்குப் பதில் அளிக்கின்றார் என்பதை நான் அறிகின்றேன்.*
*அவர் தமது வசனத்தைக் கொடுத்துள்ளார் என்று நான் அறிகின்றேன்.*
*அது, என்ஜெபம் எப்போதும் கேட்கப்படுகிறது என்று எனக்குக் கூறுகிறது.*
*விரைவாகவோ அல்லது தாமதமாகவோ எனக்குப் பதில் அளிக்கப்படும்;*
*எனவே நான் ஜெபிக்கின்றேன், அமைதியாய்க் காத்திருக்கின்றேன்.*

*நான் நாடுகின்ற ஆசீர்வாதங்கள் நான் நினைத்தவாறு அப்படியே வருமா என்று நான் அறிவதில்லை;*
*ஆனால் என் ஜெபத்தை நான், என்னிலும் ஞானமுள்ளவரின் சித்தத்திற்கு அப்படியே ஒப்புவிக்கின்றேன்.*
*எனது வேண்டுகோளை அவர் நிறைவேற்றுவார், அல்லது*
*அதனிலும் அதிக ஆசீர்களினால் பதிலளிப்பார் என்று உறுதியாய் இருக்கின்றேன்.*

*எலிசபெத் V. ஹிக்காக்*

*"ஆண்டவரே, நான் ஜெபத்தில் நம்பிக்கை கொள்ளுவதில்லை. நான் உம்மை நம்புகின்றேன். விசுவாசத்துடன் ஜெபிக்க எனக்குப் போதியும்."*

## 3

# ஜெபம்

## ஜெபம் என்பது எது அல்ல ...

*ஜெபம் என்பது ''உள்ளானதாக'' இருக்கிறது. இது மிகவும் மேன்மையாகப் பிரபலமானதாக இருக்கிறது. மதம் என்பது "உள்ளான தாக" இருக்கிறது. மதப்புத்தக் கடைகள் ஆண்டிற்கு சுமார் 40 கோடி ரூபாய்களுக்குப் புத்தகங்களை விற்கின்றன. உணர்வுகள் "உள்ளானவை களாய்" இருக்கின்றன. மாயாவாதம் என்பது "உள்ளானதாக" இருக்கிறது. ஜெபக் கருத்தரங்குகளும் தியானங்களும் நடத்தப்படுகின்றன. ஜெப காலை உணவுகள் பிரபலமாக இருக்கின்றன. ஜெபப் போராட்டங்களில் ஆயிரக் கணக்கானவர்கள் கலந்துகொள்ளுகின்றார்கள். "வளமான சுவிசேஷப் பிரசங்கியார்கள்" என்பவர்கள், "ஜெபவீரர்களை" அபிஷேகம் செய்விக்கின் றார்கள். இன்றைய நாட்களில், "நீங்கள் விரும்புகின்ற எதையும் ஜெபத்தில் பெற்றுக் கொள்ள முடியும்" என்ற கருத்து மேம்பாடுகளினால் மக்கள் மோதப்படுகின்றார்கள். இது களிப்பூட்டுவதைக் காட்டிலும் அதிகமாகக் குழப்பமூட்டுகிறது. மதரீதியான இந்த உள்ளார்வத்தில் நாம் அகம் மகிழ வேண்டுமா? அவசியம் இல்லை.*

*நினைவில் வையுங்கள், தேவன் அளிக்கின்றார் ... சாத்தான் போலியா னவைகளை மட்டுமே தருகின்றான். மதவியலாளர்கள் தேவனைப் பற்றிப் பேசுகின்றார்கள், ஆனால் அவர்கள் வேதாகமத்தின் தேவனைப் பற்றிப் பேசுவதில்லை. இன்றைய நாட்களில் பலர் மூடநம்பிக்கையான விசுவாசம் கொண்டுள்ளார்கள், ஆனால் வேதாகம ரீதியான விசுவாசம் கொண்டிருப்ப தில்லை. மனிதர்கள் ஜெபத்தை சுயநலத்திற்காகப் பயன்படுத்தியுள்ளார்கள், ஆனால் ஒரு வேதாகம ஜெபத்தை இவ்வாறு பயன்படுத்தவில்லை. தெளிவான பல பிரச்சனைகள் கலந்துரையாடப்பட வேண்டும்.*

*ஜெபம் என்பது மந்திரமாக இருப்பது இல்லை. இது மாயவல்லமைகள் எதையும் கொண்டிருப்பது இல்லை. ஜெபம் என்பது ஒரு குறுக்கு வழி அல்ல. ஜெபத்தின் சிலாக்கியம் தவறாகப் பயன்படுத்தப்படக் கூடாது. எல்லாவற்றைக் காட்டிலும், ஜெபமானது சாத்தானுடையதாகக் குறைத்து விடப்படக் கூடாது. ஜெபம் என்பது சுயநலமானதாகவோ அல்லது கர்வம் மிகுந்ததாகவோ இருப்பதில்லை. வளமையை ஜெபத்துடன் இணைத்தல் என்பது அபாயகரமானதாக உள்ளது! ஜெபத்தில் இருந்து செல்வங்களை வாக்களித்தல் என்பது தவறான யூகமாக உள்ளது. தேவனை "தூதுசெல்லும் பையனாக" குறைத்தல் என்பது மதவிரோதக் கொள்கையாக உள்ளது. ஜெபத்தை இன்னொரு "எப்படி செய்வது" என்ற தந்திர வேலையாகக் குறைத்தல் என்பது அற்பத்தனமானதாக உள்ளது.*

*விசுவாசம் - ஜெபம் என்பது "இதை இயேசுவிடம் திருப்புங்கள்" என்பதாக இருப்பது இல்லை. ஜெபம் என்பது சிந்தனைக்கு ஒரு பதிலீடாக இருப்பதில்லை. ஜெபம் என்பது செயல்களுக்குப் பதிலாக வைக்கப்படக் கூடியது அல்ல. ஜெபிப்பதற்கு ஒரு காலம் உண்டு! ஜெபிப்பதை நிறுத்தி வைத்து செயல்படுவதற்கு ஒரு காலம் உண்டு! ஜெபித்தல் பற்றி ஏதொன்றும் செய்யாமலேயே அதைப் பற்றி நன்கு உணர்ந்து திரும்புவதற்காகவே மிகவும் ஏராளமானவர்கள் ஜெப தியானங்களுக்குச் செல்லுகின்றார்கள்! ஜெபம் என்பது குற்றமுள்ள மனச்சாட்சியைக் குணப்படுத்தும் மருந்தாக ஒருக்காலும் இருப்பது இல்லை. தேவன் மட்டுமே செய்யக்கூடிய செயல்கள் உள்ளன. நான் மட்டுமே செய்தாக வேண்டிய செயல்கள் உள்ளன! நடப்புக்கேற்ற, புதுமையான மதமானது எளிமையான உண்மைத் தன்மையின் இடத்தை எடுத்துக்கொள்ள முடியாது.*

*ஜெபம் நம்மை நன்றாக உணரவைக்காமல் இருக்கலாம். ஜெபத்தைப் பற்றி எழுதப்பட்டு நம்மை மூழ்கடித்துள்ள ஏராளமான புத்தகங்கள் "ஜெபத்தில் உச்சகட்ட அனுபவங்கள்" பற்றி சாட்சி கொடுக்கின்றன. இது புத்தகங்களை விற்கப் பயன்படலாம், ஆனால் இது வேதாகம ரீதியானது அல்ல. வேதாகமத்தில் மக்கள், "தங்கள் முழந்தாள்களில் இருந்தார்கள்" அல்லது "தங்கள் முகங்குப்புற விழுந்தார்கள்." அங்கே அவர்கள் "உச்சகட்ட அனுபவங்கள்" எதையும் கொண்டிருந்தது இல்லை! இயேசு [கெத்செமெனேயில்] ஜெபித்தபோது மரணத்திற்கேதுவான பெருந்துயர் கொண்டு, இரத்தத்தை வியர்வையாகச் சிந்தினார்! அங்கே "அவர் உச்சகட்ட அனுபவம்" எதுவும் கொண்டிருந்தது இல்லை. ஜெபமும், "நன்றாக உணருதல்" என்பதும் ஒன்று கலப்பது இல்லை! ஜெபம் ஒரு பலியாக உள்ளது ... ஜெபம் துன்புறுதலில் முடியலாம்.*

*ஜெபம் ஒருவரை, "மதரீதியாக மேன்மையானவர்" என்று உணரச் செய்யக் கூடாது. சிந்தனை, விவாதம் அல்லது நேர்மையாக இருத்தல் என்பதற்கு மாறாக திருச்சடங்கு தெய்வபக்தி என்பது பிறரை கீழானவர்களாக்குகிறது: "நான் அதைப் பற்றி ஜெபித்தேன்!" இந்த பதிலானது, அவர்களோடு கருத்து வேறுபடுகின்றவர்கள் தேவனுக்கு எதிராகப் போர் செய்கின்றார்கள் என்று அர்த்தப்படுகிறது! அச்சம் தரத்தக்கது! மிகவும் தெய்வபக்தியாகப் பேசுகின்றவர்களைக் குறித்து நான் பயப்படுகின்றேன்: "ஆவிக்குரிய வகையில் உங்களைக் காட்டிலும் உயர்வான மட்டத்தில் இருக்கின்ற நான் அதைப் பற்றி ஜெபித்துக் கொள்வேன்." ஜெபத்தைப் பற்றி உயர்வாகப் பேசிக்கொள்ளுதல் என்பது தாழ்மையைப் பற்றிப் பெருமை பாராட்டுவது போன்றதாக உள்ளது! இப்படிப்பட்ட மக்களை இயேசு, தங்களின் ஜெபங்களுக்குப் பின்னால் ஒளிந்துகொண்டுள்ள மாய்மாலக்காரர்கள் என்று அடையாளப்படுத்தினார் (மத். 6:1-18). ஜெபம் தாழ்த்துகிறது. நீங்கள் அதிகம் ஜெபிக்கும்போது, நீங்கள் ஜெபிக்க அதிகம் கற்றுக் கொள்ளுகின்றீர்கள்.*

*திறமையாகக் கையாளுவதற்கு ஜெபம் பயன்படுத்தப்படக் கூடும். இதை தொலைக்காட்சிப் பிரசங்கியார்கள் அன்றாடம் செய்கின்றார்கள்! அவர்கள் உங்கள் பணத்தைக் கேட்கின்றார்கள், பின்பு ஜெபத்தினால்*

*உங்களை வெட்கப்படுத்துகின்றார்கள். எனக்காக ஜெபியுங்கள் என்பது மட்டுமே நான் எந்த சபையிடமும் எனக்காக அவர்கள் செய்யும்படி கேட்டுக் கொள்ளுகிற ஒரே விஷயமாக உள்ளது. எச்சரிக்கையாய் இருங்கள்! நிகழ்ச்சிகளை விற்பது அல்லது தங்கள் [சுய] வழியைக் கொண்டிருப்பது என்பது எப்போதும் சோதிக்கக் கூடியதாக உள்ளது மற்றும் இது, சபை நடத்துனர்கள் ஜெபத்திற்குப் பின்னால் ஒளிந்துகொள்ள சௌகரியமானதாக உள்ளது. "இதைப் பற்றி ஜெபியுங்கள்" என்பது, வேதாகம அதிகாரம் அல்லது சிந்தனைக்குப் பதிலீடாக இருப்பதில்லை. ஆவியில் "உங்களைக் காட்டிலும் பரிசுத்தவான்" என்று கூறிக்கொள்ளக் கூடிய மக்களைப் பற்றி எச்சரிக்கையாய் இருங்கள். ஜெபத்தின் மூலமாக சபையைக் கட்டுப்படுத்தக் கூடிய சகோதரர்களைப்பற்றி எச்சரிக்கையாய் இருங்கள். வேதாகம ரீதியான ஜெபம், தேவனையோ அல்லது மனிதனையோ திறமையாகக் கையாளுவதில்லை. திறமையாகக் கையாளுதல் என்பது எப்போதுமே - விசேஷமாக ஜெபத்தின் பின்னால் ஒளிந்துகொள்ளுகின்றபோது - தவறானதாக உள்ளது. "சகோதரர் ஹோட்ஜ் அவர்களே, உங்களுக்காக ஜெபம் மட்டும் செய்துகொள்வேன்" என்று சொல்வது தீய குறியான, அற்பமான, பயமுள்ளதாக இருக்கக் கூடும்.*

*ஜெபியுங்கள் ... தேவனிடத்தில் ஜெபியுங்கள்.*

# ஜெபத்தில் பிரச்சனைகள்

## மத்தேயு 20:20-28

*“இயேசு பிரதியுத்தரமாக: ‘நீங்கள் கேட்டுக்கொள்ளுகிறது இன்னது என்று உங்களுக்குத் தெரியவில்லை ...’ என்றார்” (மத். 20:22அ).*

*நமது ஜெபங்கள் பிறரைப் புண்படுத்துமா? நமது ஜெபங்கள் கூடுதலான பிரச்சனைகளுக்குக் காரணமாகி, மோசமான விஷயங்களை மிகவும் மோசமானதாக்கி விடுமா? இதை நாம் எதிர்கொள்வோம்! பல ஜெபங்கள் அவைகள் கேட்கப்பட்ட வகையில் பதில் அளிக்கப்படுவது இல்லை! சகோதரர் சேவியர் அவர்களின் தோட்டத்தில் அவரைக்காய் காய்க்காதது ஏன்? மக்கள் மழைக்காக ஜெபிக்கின்றார்கள், ஆயினும் வெயில் காய்கிறது. சகோதரர்கள் வாழ்வதற்காக ஜெபிக்கின்றார்கள், மற்றும் அவர்கள் இறக்கின்றார்கள். இயேசுவும் பவுலும் குறிப்பிட்ட விஷயங்களுக்காக மூன்றுமுறை ஜெபித்தார்கள், ஆனால் அவர்களின் ஜெபம் மறுக்கப்பட்டது. இன்னும் சிந்தியுங்கள். நீங்கள் விரும்பியது கிடைக்காதிருந்தால், ஏன் தொடர்ந்து ஜெபிக்க வேண்டும்? இது ஜெபத்திற்கு விலைகொடுத்து ஆசீர்வாதங்களைப் பெற விரும்புகின்ற சுயநலமான மக்களின் கேள்வியாக உள்ளது! தாங்கள் தாழ்மையுள்ளவர்கள் என்று நினைக்கிற மற்றவர்கள், தங்களுக்கு உகந்த ஆசீர்வாதங்களுக்காக ஜெபிப்பதற்குச் சங்கடப்படுகின்றார்கள். இதுவே ஜெபத்தின் முரண்பாடுபோல் தோன்றும் மெய்யுரையாக, ஜெபத்தின் ஆழ்ந்தறிவான இரகசியமாக இருக்கிறது.*

*நாம் கற்றுக்கொண்டுள்ளது என்ன? ஜெபத்தில் அல்ல, தேவனில்தான் வல்லமை உள்ளது! தேவன் ஜெபத்தைக் கேட்டு அதற்குப் பதில் அளிக்கின்ற தேவனாக இருக்கின்றார். தேவன் ஜெபத்தை கவனித்து கேட்டு செயல்படுவதால் ஜெபம் வல்லமை நிறைந்ததாக உள்ளது. ஞானமிக்க முதிய நண்பர் ஒருவர், “நீங்கள் தேவனைத் தேடும்போது, வழிகாட்டுதலைப் பெறுகின்றீர்கள்; நீங்கள் தேவனின்றி வழிகாட்டுதலைத் தேடும்போது, நீங்கள் ஒன்றையும் பெறுவது இல்லை” என்று கூறினார். ஜெபம் தேவனை மாற்றுகிறது என்று நினைத்தலானது தேவன், மனிதன் மற்றும் ஜெபம் ஆகியவை பற்றி தகுதியற்ற சிந்தனையைத் தரக்கூடும். மனிதனின் மனமானது தேவனுடைய மனதைக்காட்டிலும் உயர்வானதாக இருப்பது இல்லை! பரலோக முடிவில் ஈடுபட்டிருத்தல் என்பது மனதை தயங்க வைக்கிற, தாழ்மைப்படுத்துகிற, பயபக்திக்குரிய விஷயமாக உள்ளது! நாம் இதை உணர்ந்து அறிவோம்! ஆழ்ந்தறிவுள்ள இறையியல், தர்க்கவியல் மற்றும் நடைமுறைப் பிரச்சனைகள் ஜெபத்தைச் சூழ்ந்துள்ளன. ஜெபத்தைப் புரிந்து கொள்ளுதல் என்பது தேவனைப் புரிந்துகொள்ளுதலாக*

*உள்ளது. ஜெபம் எவ்வளவு எளிதானதாக இருந்தாலும், ஜெபம் பற்றிய எந்த விஷயமும் எளிதானதாக இருப்பதில்லை!*

*தேவனுடைய பிரசன்னத்தில் உள்நுழைவதற்கு நேரம் தேவைப் படுகிறது! வேதாகமத்தைப் படிப்பதற்கு நேரம் தேவைப்படுகிறது; ஆராதிக்க நேரம் தேவைப்படுகிறது; பரிசுத்தமாயிருக்க நேரம் தேவைப் படுகிறது; ஜெபிக்க நேரம் தேவைப்படுகிறது. ஜெபம் என்பது உதவியற்ற வர்களுக்கும் தாழ்மையானவர்களுக்கும் மட்டுமே ஆனதாக உள்ளது. ஜெபத்தில் நாம், இந்த அண்டத்தைப் படைத்தவரான யெகோவா தேவனு டன் பேசுகின்றோம். ஒரு அரசரிடம், ஒரு பிரபலமானவரிடம், ஒரு புகழ்பெற்ற வீரரிடம் ஒருவர் என்ன கூறுவார்? சர்வ வல்லமையுள்ள தேவனிடத்தில் ஒருவர் என்ன கூறமுடியும்? இப்படிப்பட்ட அறிவு எனக்கு மிகவும் ஆச்சரியமாக உள்ளது. நான் பேசுகின்றேன், தேவன் கேட்கின்றார்! ஆச்சரியமான விஷயம்! தேவன் இதை அனுமதிப்பதுடன், இதை கட்டளை யிட்டும் இருக்கின்றார்!*

## எவ்வாறு ஜெபிப்பது என்று மனிதன் அறிவது இல்லை

*நாம் எவ்வாறு ஜெபிப்பது என்று அறிவது இல்லை. நான் எவ்வாறு அறிகின்றேன்? வேதாகமம் பின்வருமாறு கூறுகிறது: "... நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால் ..." (ரோமர் 8:26). மத்தேயு 20:20-28ஐ கவனமாக வாசியுங்கள். யாக்கோபும் யோவானும் "விருப்பங்களின் மோசமான விஷயம் ஒன்றைக் கொண்டிருந் தார்கள்." அவர்கள் திட்டம் தீட்டினார்கள்; அவர்கள், கண்டிக்கத்தக்க செயலுக்கு உடந்தையாக இருந்தார்கள். அவர்கள் விரும்பிய அந்தச் செயலில், அவர்கள் தங்கள் தாயையும் மனவிருப்பத்துடன் செயல்படும்படி இணங்கச் செய்தார்கள்! அது பிள்ளைத்தனமானதாக இருந்தது; உபதேச ரீதியாக அது சாத்தியமற்றதாக இருந்தது; அது தவறானதாக இருந்தது; அது பிறரைப் புண்படுத்தக் கூடும்!*

*பின்வரும் கூற்றானது வாழ்வில் சத்தியமாக/உண்மையாக உள்ளது: மனிதர்கள், அரசியல் பற்றியும், பெரிய வியாபாரங்கள் பற்றியும், சபை விஷயங்கள் பற்றியும் கூட விமர்சனம் செய்துகொண்டு தொடர்ந்து "தங்களையே முட்டாள்களாக்கிக் கொண்டிருக்கின்றார்கள்." நாம் எப்போது [தான்] கற்றுக் கொள்வோம்? மனிதன் சிறிதளவே அறிந்திருக் கின்றான் - அது ஒரு விரல் உறையை நிறையக் கூட இருப்பது இல்லை! செய்தித் தாளில் கருத்துப்படங்களைக் காட்டிலும் "ஆசிரியருக்குக் கடிதங்கள்" என்ற பகுதி மிகவும் களிப்பூட்டுவதாக உள்ளது. மனிதன் அறிவதில்லை, அறிய முடியாது. யோபு ஒரு கடினமான வழியில் அறிய வேண்டியிருந்தது. அவர் தேவனுடன் வாதாட முடியும் என்று நினைத்தார்! அவர் தமது வாயை விவாதங்களினால் நிறைத்தார். பின்பு தேவன் வந்தார்! தேவன் கேள்விகளைக் கேட்டார். வாழ்வைப் பற்றிய தேவனின் அடிப்படைக் கேள்விகளில் ஒன்றுக்குக் கூட யோபுவால் பதில் அளிக்க*

*முடியவில்லை. யோபு மனந்திரும்பினார் (யோபு 40:3-5; 42:1-6). யோபு தமது பாடங்களை நன்கு கற்றார். தேவன் தேவனாகவே இருக்கின்றார், மற்றும் மனிதன் மனிதனாகவே இருக்கின்றான்.*

*இருந்தபோதிலும், தேவன் தமது செயல்பாட்டில் மனிதனை வரவேற்கின்றார். பரலோகம் என்பது கேள்விகளுக்குத் தேவன் பதில் அளிக்கின்ற நித்திய வினாடி வினா நிகழும் இடமாக இருக்கும் என்று பலர் நினைக்கின்றார்கள்! இத்தகைய கருத்தின்மீது நம்பிக்கை வைக்காதீர்கள்! ஒருவர், "நான் தேவனிடம் கேட்பதற்கு ஆயிரம் கேள்விகளை வைத்திருந்தேன் - நான் அவரை சந்தித்தது வரை!" என்று கூறினார். தேவனைக் கண்டறிதலும் தேவன் என்ன விரும்புகின்றார் என்று கண்டறிதலும் நமது விருப்பங்களைக் காட்டிலும் முக்கியத்துவம் வாய்ந்தவைகளாக உள்ளன. ஜெபம் என்பது பிள்ளைத்தனமான வேண்டுகோள்களாகக் குறைக்கப்படலாகாது என்பதை யாக்கோபும் யோவானும் கற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. குடும்பமானது தன் சிலாக்கியங்களுடன் ஜெபத்தைத் தவறாகப் பயன்படுத்தக் கூடாது. பரிசுத்தவான்களும் கூட தேவனைத் திறமையாகக் கையாளுவதற்கு முயற்சி செய்யக் கூடாது. தேவன் செவிகொடுத்து நமது ஜெபங்களுக்குப் பதிலளிக்க விரும்புகிறார். ஜெபத்தில் நாம் தேவனை* அறிய *விரும்ப வேண்டுமே தவிர அவரைப் பயன்படுத்த விரும்பக் கூடாது! நாம் தேவனைக் கொண்டிராமல் தேவனுடைய வல்லமைக்குச் சென்று சேரும் வழியைக் கொண்டிருக்க முடியாது. இதுவே விஷயமாக உள்ளது.*

*சில ஜெபங்கள் பதில் அளிக்கப்படுவதும், மற்றவை மறுக்கப்படுவதும் ஏன் என்பதை அறிதல் என்பது தேவனுடைய (எல்லாம் அறிந்த) சிந்தையைக் கொண்டிருத்தல் என்றாகிறது. மறைவானவைகள் தேவனுக்கு உரியவைகளாக உள்ளன (உபா. 29:29). வானங்கள் பூமியைக் காட்டிலும் எவ்வளவோ உயரமானவைகளாக உள்ளன. தேவன் படைப்பவராக உள்ளார்; நாம் படைப்புயிர்களாக உள்ளோம். ஜெபத்தைப் புரிந்துகொள்ளுதல் என்பது தேவனாகவே இருத்தல் என்பதாகிறது. அத்துடன், மனிதன் எல்லாவற்றையும் அறிந்திருந்தால், எதற்காக ஜெபிக்க வேண்டும்? நாம் தேவன் மீது விசுவாசம் கொள்கின்றோமா அல்லது ஜெபம் பற்றிய நமது விக்கிரகாராதனைத்தனமான கருத்தின்மீது விசுவாசம் கொள்கின்றோமா? நாம் தேவன் மீது விசுவாசம் கொண்டிருந்தால், நாம் ஜெபிப்போம் மற்றும் அமைதியாகக் காத்திருப்போம். மனிதனுக்கு தேவன் தேவைப்படுகின்றார் ... விளக்கங்கள் அல்ல. மனிதனுடைய "கடலைக்கொட்டை" மூளையால் விளக்கங்களைக் கையாள முடியவில்லை. தேவன் யோபுவுக்கு ஒருக்காலும் ஒன்றையும் விளக்கப்படுத்தவில்லை - ஆனால் அவர் வந்தார்! யோபுவுக்குப் பதில்கள் தேவைப்படவில்லை - தேவனே தேவைப்பட்டார். நமக்கு தேவன் தேவைப்படுகின்றார். தேவன் தேவனாக இருப்பதால், ஜெபத்திற்குத் தேவன் எவ்வாறு அல்லது ஏன் பதில் அளிக்கின்றார் என்பதை அறிதல் என்பது உண்மையாகவே நமது வேலையாக உள்ளதா? நமது சிந்தனைகள் இன்றி அல்லது நமது சிந்தனைகளைப் பொருட்படுத்தாமல் தேவன் நம்மை வழிநடத்துவதில்லை, ஆனால் நமது சிந்தனைகள் மூலமாகவே அவர் நம்மை வழிநடத்துகின்றார். யாரோ ஒருவர், "நீங்கள்*

ஒலிநாடாக்களைக் கேட்கலாம், புத்தகங்களை வாசிக்கலாம், ஜெபகருத் தரங்குகளுக்குச் செல்லலாம்; ஆனால் நீங்கள் ஜெபிக்கத் தொடங்கும்போது தான் ஜெபிக்கக் கற்றுக் கொள்வீர்கள்'' என்று கணித்துள்ளார். நாம் ஜெபத்திற்குள்ளோ அல்லது ஜெபத்திற்கு வெளியிலோ நம்மைத் தத்துவார்த் தப்படுத்திக் கொள்ளக் கூடாது. தேவன் உங்கள் ஜெபங்களுக்குப் பதில் அளித்துள்ளார் என்று நீங்கள் நம்புகின்ற வரையிலும் ஜெபியுங்கள் ... ஜெபியுங்கள் ... வேத வசனங்களின் அடிப்படையில் ஜெபியுங்கள்.

## மனிதன் தான் கேட்பது என்ன என்பதைப் பொதுவாக அறிவதில்லை

நாம் மிகக் கொஞ்சமானவைகளின் மீது கவனம் செலுத்துவதினால் மிக அதிகமானவற்றைத் தவறவிடுகின்றோம்! இயேசு யாக்கோபுவையும் யோவானையும் கடிந்துகொண்டார். ஆயினும், மத்தேயு 20:20-28ஐ இப்போதுதான் முதன்முறையாக வாசிப்பதுபோல் வாசித்துப் பாருங்கள். தாயும் மகன்களும் இயேசுவிடம் வந்து இயேசுவைப் பணிந்து கொண்டார் கள். மனிதன் தனது மிகச் சிறந்த செயல்பாட்டிலும் தோல்வி அடைகின் றான்! எவரும் பூரணப்பட்டவர் அல்ல. அவர்கள் கேட்டார்கள். இயேசு வின் பதிலைக் கவனியுங்கள்: "உனக்கு என்ன வேண்டும்?" (மத். 20:21). கேட்கப்பட வேண்டும் என்று இயேசு விரும்பினார்; அவர் நமக்குக் கொடுக்க விரும்புகின்றார். இயேசுவினிடத்தில் வந்து, இயேசுவினிடத்தில் கேட்டல் என்பது தவறானதாக இருப்பது இல்லை.

இயேசுவின் கடிந்துகொள்ளுதல் தீவிரமானதாக உள்ளது, அது வன்மையானதாகக் கூட உள்ளது: "நீங்கள் கேட்டுக்கொள்ளுகிறது இன்னது என்று உங்களுக்குத் தெரியவில்லை'' (வ. 22அ). அவர்களது வேண்டு கோளைப் பின்வரும் இரண்டு அடிப்படைக் காரணங்களுக்காக இயேசு மறுத்தார்: (1) அவர்களின் வேண்டுகோளானது அவர்களையும் பிறரையும் புண்படுத்தும், (2) அது உபதேசரீதியாக சாத்தியம் அற்றதாக இருந்தது. தேவன் இயேசுவுக்கு ஒரு சிம்மாசனத்தையல்ல - ஆனால் சிலுவையையே கொடுத்தார். மற்ற சீஷர்கள் யாக்கோபு, யோவான் ஆகியோரின் வேண்டு கோளினால் அவர்கள்மீது எரிச்சலானார்கள்! அவர்களின் விருப்பத்திற்கு ''ஆம்'' என்று பதில் அளித்தலானது ''சபையைப் பிளவுபட'' 7ச் செய்திருக்கும். பல வேளைகளில் நமது ஜெபங்கள் மறுக்கப்படுகிறபோது அவை நமது ஜெபங்களுக்குச் சிறந்த பதில்களாக இருக்கின்றன. இவர்களின் விஷயமும் அப்படிப்பட்டதாகவே இருந்தது. யாரோ ஒருவர், "பதில் அளிக்கப்படாத ஜெபங்களைக் காட்டிலும் பதில் அளிக்கப்பட்ட ஜெபங்களுக்கே அதிக கண்ணீர் சிந்தப்பட்டுள்ளன" என்று கணித்துள்ளார். தேவன் "இல்லை" என்று பதில் அளித்ததற்கு, நன்றி செலுத்தப்போதுமான அளவுக்கு நீண்ட நாட்கள் நான் வாழ்ந்துள்ளேன். சுயநலமான, சிந்திக்கப்படாத ஜெபங்கள் நம்மைப் புண்படுத்துகின்றன. அவைகள் நம்மை, அதிகமான மிட்டாய் களை விரும்பும் பிள்ளைகளைப் போலச் செய்கின்றன.

*வசனப் பகுதியை மேலும் வாசியுங்கள். அந்த மகன்களுக்கு மகிமை அல்ல, ஆனால் தியாகமே வழங்கப்பட்டது. வெற்றிகரமான ஜெபம் என்பது, நாம் தேவனிடத்திலிருந்து எதைப் பெறுகின்றோம் என்பது அல்ல, ஆனால் தேவன் நம்மிடத்திலிருந்து எதைப் பெறுகின்றார் என்பதாகவே உள்ளது. இந்த கவனித்தல் என்பது நமது ஜெபவாழ்வில் இடர்ப்பாடு மிகுந்ததாக உள்ளது. தேவனிடத்தில் ஜெபித்தல் என்பது நம்மை நன்றாக உணரும்படிக்கானதாக இன்றி, நம்மைத் தாழ்மையுடன் வைத்திருப்பதற் கானதாகவே வடிவமைக்கப்பட்டுள்ளது. ஜெபம் என்பது ஒருபோதும் செயல்படுதல், சிந்தித்தல், துன்புறுதல் அல்லது கொடுத்தல் என்பவற்றிற்குப் பதிலீடாக இருந்ததில்லை. ஜெபம் என்பது இந்த முயற்சிகள் யாவற்றிற்கும் அஸ்திபாரமாக உள்ளது. ஜெபத்தில் தேவன், நம்மிடத்திலிருந்து மிகச் சிறந்தவை வெளிவருவதற்கு அனுமதிக்கின்றார்!*

*யாக்கோபும் யோவானும், இயேசுவால் "இடிமுழுக்க மக்கள்" என்று பெயரிடப்பட்டார்கள் (மாற். 3:17). காலமும் பக்குவமும் அவர்கள் அறியப் பட்ட வகையில் அவர்களை மாற்றின. யாக்கோபுதான் முதன்முதலாக வேத சாட்சியாக மரித்த அப்போஸ்தலராயிருந்தார். யோவான் "அன்பின் அப்போஸ்தலர்" என்று அழைக்கப்பட்ட அன்பார்ந்தவராக இருந்தார். ஒரு காலத்தில் விரும்பப்பட்டதை, நேர்மையாக நாம் பின்னோக்கிக் காண்கையில் பயமடைகின்றோம். ஒரு காலத்தில் பேரார்வத்துடன் நம்மால் விரும்பப்பட்ட விஷயமானது, இப்போது வெறுப்பூட்டுவதாக இருக்கிறது. ஜெபம் நம்மைப் பக்குவப்படுத்துவதால், ஜெபம் நம்மை மாற்றுகிறது.*

## *நாம் கேட்பதற்கு முன்பே தேவன் [அவற்றை] அறிகின்றார்*

*ஜெபத்தில் ஒருவர் நம்பிக்கைகொள்வதற்கு, ஆழ்ந்தறிவுள்ள முறையில் சிந்தித்து நேர்மையானவராக இருக்க வேண்டும். நாம் கேட்பதற்கு முன்பே தேவன் [அவற்றை] அறிகின்றார். "அப்புறம் ஏன் ஜெபிக்க வேண்டும்?" என்று தேவன் மீது நம்பிக்கையற்றவர் கேட்கின்றார். இதுதான் ஜெபிப்பதற் கான முழுக்காரணமாக உள்ளது: "... உங்கள் பிதாவை நோக்கி நீங்கள் வேண்டிக்கொள்ளுகிறதற்கு முன்னமே உங்களுக்கு இன்னது தேவை என்று அவர் அறிந்திருக்கிறார்" (மத். 6:8, 32; லூக். 12:30). ஜெபம் என்பது சிறுபிள்ளைகள் ஒரு தந்தைக்கு அடிபணிந்திருப்பதைப் போன்றது என்று இயேசு கூறினார் (மத். 7:11; லூக். 11:13). பல பரிசுகள், பிள்ளைகளால் ஆழ்ந்தறிவுடன் சிந்திக்கப்பட்டு, அவற்றை வற்புறுத்திக் கேட்காத வரையில் கொடுக்கப்பட முடியாதவைகளாக உள்ளன.*

*இயேசு, "கேளுங்கள், தேடுங்கள், தட்டுங்கள்" என்றும் கூறியுள்ளார் என்பதை நினைவில் வையுங்கள். ஜெபம் என்பது ஒரு தானியங்கிபோன்ற, மத மாயாவாதம் அல்ல. மிக அதிகமான பெற்றோர்கள் தங்கள் பிள்ளை களுக்கு மிக அதிகமானவற்றை மிக விரைவிலேயே கொடுத்து விடுகின்றார் கள். அவர்கள் வயது வந்தவர்கள் ஆகும்போது, உண்மையான வாழ்வுக்கு*

தயாரிப்பு அற்றவர்களாகி விடுகின்றார்கள். தேவன் ஒரு "கிறிஸ்துமஸ் தாத்தாவாக" இருப்பதில்லை. பொறுப்பற்ற விருப்பங்கள் பூர்த்தி செய்யப் படும்போது அவை தீங்கிழைப்பவையாகி விடுகின்றன. ஜெபத்தில் குழந்தைத்தன்மையல்ல ... ஆனால் ஆழ்ந்தறிவுள்ள இன்றியமையாமையே உள்ளது. ஒரு குழந்தை விரும்புகின்ற எல்லாவற்றையும் கொடுத்து விடுதல் என்பது அந்தக் குழந்தையைச் சலிப்படையச் செய்துவிடுகிறது. நாம் பணியாற்ற மனதில்லாதவற்றைப் பெறும்படிக்கு நாம் ஜெபிக்கக் கூடாது. இன்றைய நாட்களில் பலர் எவ்விதத் தியாகமும் இன்றியே கொடுக்கின்றார் கள், உபவாசமின்றியே ஜெபிக்கின்றார்கள், கண்ணீர் இன்றியே சுவிசேஷ ஊழியம் செய்கின்றார்கள். இது பணிக்கு உதவாது! ஜெபத்திற்குப் பின்பு நாம் என்ன செய்கின்றோம் என்பது ஜெபத்தின் மாபெரும் சோதித்தறிதல் களில் ஒன்றாக உள்ளது. ஜெபம் என்பது ஒழுங்கு முறையாக உள்ளது.

தேவன் ஒரு வழியில் மட்டுமே செயல்பட முடியும் என்று நம்மில் பலர் நினைப்பது பரிதாபகரமானதாக உள்ளது. சில வேளைகளில் சூழ்நிலைகள் மேன்மையாவதற்கு முன்பு அவை மிகவும் மோசமாகி விடுகின்றன என்று வேதாகமம் நமக்குக் கூறுகிறது. இது சிலுவையின் சத்தியமாக உள்ளது. சிலுவை இல்லையேல் கிரீடம் இல்லை. நாம் எதிர்பார்த்தவற்றிற்கு எதிரான வற்றைக் கூட தேவன் செய்யலாம். தேவனிடத்திலிருந்து எதிர்பாராத வற்றிற்குத் தயாராக இருக்கவேண்டும் என்பது விசுவாசத்தில் ஒரு அடிப்படைக் கொள்கையாக உள்ளது. இருளான வேளைகளில் தேவன் நம்பப்படக் கூடியவரா? வெறுமையான மற்றும் திறந்த கரங்களைக் காணும் இடத்தில்தான் தேவன் கொடுக்க இயலும். அன்றாட வாழ்வுக்காக என்பதைக் காட்டிலும் நித்திய ஜீவனுக்காகத் தேவனை நம்புதல் என்பது மிகச் சுலபமானதாகக் காணப்படுகிறது.

## மனிதன் தேவனை மாற்ற முடியுமா?

மனிதன் சர்வ வல்லமையுள்ள தேவனை மாற்ற முடியுமா? என்ன ஒரு பயபக்தியான, பரிசுத்தமான சிலாக்கியம்! மிகச் சிறந்த பதில்கள் என்னிடத் தில் இருக்க நான் விரும்புகின்றேன்! எல்லைக்குட்பட்ட, தவறுகின்ற, தவறக்கூடிய மனிதன் தவறாத தேவனை மாற்ற முடியுமா? இந்தச் சிந்தனை நகைப்புக்கு இடமானதாக உள்ளதா? இதை யாத்திராகமம் 32:14ல் மோசே செய்தார். இதை 2 இராஜாக்கள் 20:1-6ல் எசேக்கியா செய்தார்! மற்றவர் களும் ஜெபித்து மகிமையுள்ள பதில்களைப் பெற்றுக் கொண்டார்கள்! தேவனுடைய தாழ்மை! தேவனுடைய இடர்ப்பாடு! என்ன ஒரு தேவன்! நமது வேத வசனத்தில் உள்ள யாக்கோபு, யோவான் போன்ற மற்றவர்கள் தோல்வியடைந்தார்கள். மனிதன் தேவனுக்கு ஆலோசனை வழங்கக் கூடும் என்று சிந்தனையே நம்புதற்கரியதாக உள்ளது! ஆயினும் ஜெபம் என்பது மூடநம்பிக்கையல்ல. தேவன் ஒரு மந்திரவாதியோ அல்லது ஆயுள்காப்பீட்டு முகவரோ அல்ல. ஞானமுள்ள பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் வேண்டுகோள்களை விரும்புகின்றார்கள். அவர்கள் ஞானமான வேண்டு கோள்களை மதிக்கின்றார்கள், ஆனால் திறமையாகக் கையாளப்படுவதை

*வெறுக்கின்றார்கள். தேவன், பகட்டுப் பொருட்களையும், விக்கிரகங் களையும், குழந்தைத்தனமான வாக்குறுதிகளையும் ஆழமாக வெறுக்கின் றார். சிலைகளிலோ அல்லது [ஜெபமாலை] மணிகளை உருட்டுவதிலோ தேவன் இருப்பதும் இல்லை, அவற்றை அவர் விரும்புவதும் இல்லை.*

*ஜெபம் என்பது ஒரு விவாதமாக இருப்பதில்லை. தேவனுடைய சித்தத்திற்கு எதிரானவற்றில் மனிதன் அவருடன் பேச முடியாது. தேவன் தயங்குகின்றவரல்ல - அவர் மனவிருப்பமானவராகவே இருக்கின்றார். நாம் தேவனுடன் "கீழாகப் பேசுகின்றவர்களாக" இருக்க முயற்சி செய்யக் கூடாது, மாறாக "நம்மை மேலாக உயர்த்துகின்றவர்களாக" இருக்க முயற்சி செய்ய வேண்டும். ஜெபம் என்பது நாம் தேவனைப் பயன்படுத்துதல் என்று இல்லாமல், நம்மைத் தேவன் பயன்படுத்துதல் என்பதாகவே உள்ளது. "தேவனை சோதித்தல்" என்ற கருத்தே மென்மையான, வேண்டுமென்றே பேசப்படாத தேவதூஷணமாக உள்ளது. ஒரு நட்புறவைப் "பயன் படுத்துதல்" என்பது அந்த நட்புறவைத் "தவறாகப் பயன்படுத்துதல்" என்பதாகவே உள்ளது.*

## மற்றவர்களையும் ஆழ்ந்து சிந்திக்கவேண்டும்

*யாக்கோபு, யோவான் ஆகியோரிடத்தில் மற்ற அப்போஸ்தலர்கள் எரிச்சலானார்கள் - இது அவர்கள் முதலில் இந்த வேண்டுகோளை வைக்கச் சிந்தியாமல் இருந்ததால், அவர்கள் சிடுசிடுப்பு அடைந்தார்கள் என்று மட்டும் அர்த்தப்படுத்துவதாக இருக்கலாம்! ஒருவர் மழைக்காக ஜெபிக்கின்றார்; இன்னொருவர் வெயிலுக்காக ஜெபிக்கின்றார். ஜெபங்கள் ஒன்றையொன்று விலக்குவதாக இருக்கக் கூடும். இயற்கை (தேவன்) நீதியுள்ளவர்கள் மீதும் நீதியற்றவர்கள் மேலும் மழையைப் பெய்விக்கிறது. தேவன் தமக்குத் தாமே முரண்பட முடியாது. ஐநூறு கோடிக்கும் அதிகமான மக்கள் பூமியில் உள்ளனர், தேவன் கைநிறைந்தவராகவே இருக்கின்றார்!*

*ஆம், இதை உணர்ந்து அறியுங்கள்! மிக அதிகமான ஜெபங்கள் இளைஞருக்குரியவைகளாக உள்ளன. அவைகள் சுயநலமிக்கவைகளாகவும் தவறானவைகளாகவும் உள்ளன! அந்த உண்மையை நமது வேத பாடப்பகுதி வெளிப்படுத்துகிறது. நாம் யாக்கோபு, யோவான் ஆகியோரை முதலில் எரிச்சலுடனும், பின்பு பரிதாபத்துடனும், பின்பு நகைச்சுவை யுடனும் கண்ணோக்குகின்றோம். அவர்கள் நம்மைப் போன்றவர்களாகவே உள்ளனர்! நமது ஜெபங்களைப் பற்றி அவர்கள் என்ன நினைப்பார்கள்?*

*"ஆண்டவரே, நான் ஜெபத்தில் நம்பிக்கை*
*கொள்ளுவதில்லை. நான் உம்மை நம்புகின்றேன்.*
*விசுவாசத்துடன் ஜெபிக்க எனக்குப் போதியும்."*

*செல்லுகையில் அவர்களுக்காக ஜெபிக்கின்றேன். ஜெபம் என்பது ஒரு பிரசங்கியாருடைய ஊழியத்தின் மையமாகவும் முன்னுரிமையாகவும் இருக்க வேண்டும். மோசே இஸ்ரவேலுக்காக ஜெபித்தார். பவுல் சபைகளுக் காக ஜெபித்தார். சாமுவேல், "நானும் உங்களுக்காக விண்ணப்பம் செய்யாதிருப்பேனாகில் கர்த்தருக்கு விரோதமாகப் பாவஞ்செய்கிறவனா யிருப்பேன்; அது எனக்குத் தூரமாயிருப்பதாக; நன்மையும் செவ்வையுமான வழியை நான் உங்களுக்குப் போதிப்பேன்" (1 சாமு. 12:23) என்று கூறினார்.*

*சில வேளைகளில் பிரசங்கியார்கள் தீர்க்கதரிசிகளைப் போல் இருக்க வேண்டும் - நாம் தேவனுடைய வசனத்தை முழங்குகின்றோம் - என்பதை ஏராளமான மக்கள் அறிகின்றார்கள். சில வேளைகளில் பிரசங்கியார்கள் ஆசாரியர்களைப் போல் இருக்கின்றார்கள் - நாம் மந்தையின் சார்பாகத் தேவனிடத்தில் கதறுகின்றோம் - என்பதை ஏராளமானவர்கள் மறக்கின்றார் கள். பிரசங்கியார்கள் தீர்க்கதரிசிகளைப் போல் இருப்பதற்கு முன்பு, அவர்கள் முதலில் ஆசாரியர்களைப் போல் இருக்க வேண்டும். நாம் செம்மறி ஆடுகளுக்காக - மற்றும் வெள்ளாடுகளுக்காகவும் - ஜெபிக்க வேண்டும்! தேவனுடைய பிரசங்கியார் பரிசுத்தமானவராக இருக்க வேண்டும். இது சபைக்கான அவரது முதல் பொறுப்பாக உள்ளது. அவர் (பண்பில்) தேவனுடைய மனிதராக இருக்க வேண்டும். ஜெபமே அவரது மிக முக்கியமான பணியாக உள்ளது. பின்பு சபையானது தேவனுடைய மனிதரிடமிருந்து தேவனுடைய செய்தியைக் கேட்கும்.*

*உணர்வுகள்'' என்பவை எப்போதுமே நம்மைத் தோல்வி அடையச் செய்கின்றன. எல்லா உறவுகளிலும், நேர்மை என்பதே அஸ்திபாரமாக இருந்துள்ளது. நாம் நேர்மையாக இருக்க மறுக்கின்றபோது ஜெபம் தோல்வியடைகிறது.*

*(2) ஊக்கம். "அவர் மிகவும் வியாகுலப்பட்டு, அதிக ஊக்கத்தோடே ஜெபம் பண்ணினார்; அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளி களாய்த் தரையிலே விழுந்தது" (லூக். 22:44). இயேசு இரண்டாவது, மற்றும் மூன்றாவது முறையாகக் கூட ... ஊக்கத்துடன் ஜெபித்தார்! பவுல், நாம் ஒன்றுகூடி ஜெபத்தில் போராட வேண்டும் என்று நமக்குக் கூறினார் (ரோமர் 15:32). ஜெபம் என்பது வேலையாக - கடினமான வேலையாக இருக்கிறது. ''நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது" (யாக். 5:16). யாக்கோபு 5:16ல் உள்ள "நீதிமான்" என்பது பன்மைப் பெயர்ச் சொல்லாக இல்லாமல், ஒருமைப் பெயர்ச் சொல்லாக உள்ளதைக் கவனியுங்கள்.*

*(3) அர்ப்பணியுங்கள். இயேசு மரணம் வரையிலும்கூட வியாகுலத்தில் இருந்தார். இயேசு, "முகங்குப்புற விழுந்தார்" என்று மத்தேயு கூறினார் (மத். 26:39). "அவர் முழங்கால்படியிட்டு" என்று லூக்கா கூறினார் (லூக். 22:41). கிறிஸ்து தம்மைத் தாழ்த்தினார், ஜெபத்தில் தம்மையே அர்ப்பணித்தார். உடல் அமைவு என்பது ஜெபமாக இருப்பது இல்லை, ஆனால் ஜெபத்தில் உடல் அமைவு[ம்] அடங்குகிறது! நாம் தாழ்மைக்காக ஜெபிப்பது இல்லை; நாம் நம்மைத் தாழ்த்துகின்றோம். சுயத்தை வெறுமையாக்குதல், சுயத்தைக் கைவிடுதல் என்பது உள்ளது, சுயத்தைத் துறக்கும் ஜெப[மு]ம் உள்ளது. இயேசுவின் தனிச்சிறந்த உவமையான லூக்கா 18:9-14ல், ஆயக்காரன் தனது மார்பில் அடித்துக்கொண்டு, "தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையா யிரும்'' என்று கூறினான். உயர்த்துகின்றவர்கள் தாழ்த்தப்படுவார்கள், தாழ்மையானவர்கள் உயர்த்தப்படுவார்கள். மாபெரும் பியானோ இசைக் கலைஞர் ஒருவர், பீத்தோவன் அவர்களின் பியானோவை இசைக்கும்படி அழைக்கப்பட்டார். அவர், "நான் அதற்குத் தகுதியானவன் அல்ல'' என்று மறுத்தார். உண்மையிலேயே மாபெரும் மனிதர்கள் யாவரும் தாழ்மையான வர்களாகவே இருக்கின்றார்கள். மாற்றப்பட்டு இருத்தல் என்பது அர்ப்பணித்து இருத்தல் என்பதாகவே உள்ளது.*

*(4) விடாமுயற்சி (கெஞ்சிக் கேட்டல்). இயேசு ஒரே ஜெபத்தை மூன்று முறைகள் ஜெபித்தார், ஆயினும் ஒருபோதும், அவர் தமது விசுவாசத்தைக் கைவிடாதிருந்தார். அவர் தமது சீஷர்கள் உறங்கிக் கொண்டிருந்ததை மூன்றுமுறைகள் கண்ணுற்றார், ஆயினும் ஒருபோதும், அவர்களை மன்னிப்பதை அவர் விடாதிருந்தார். அநீதியுள்ள நியாயாதிபதியைப் பற்றி நகைச்சுவையான உவமையொன்றை இயேசு போதித்தார் (லூக். 18:1-8). ஒரு விதவை "[அவனை] எப்பொழுதும் தொந்தரவு செய்தபடியினால்" (வ. 5) அவளுடைய விருப்பத்தின்படி அவன் அவளுக்குச் செய்தான். இந்த நியாயாதிபதி, தேவனுக்குப் பயப்படாததில்லை அல்லது மனிதரை மதிக்க வும் இல்லை. நாம் மயங்கி (வெளியேறி) விடக் கூடாது, ஆனால் ஜெபிக்க வேண்டும் என்று இயேசு கூறினார். இந்த உவமை தேவனைப் பற்றிய*

செய்வார் என்பதாகவும் உள்ளது. ஆகையால், விசுவாசம் என்பது இந்த பூமியில் மிகவும் நடைமுறைக்கு உகந்த விஷயமாக உள்ளது. சீஷர்கள் விசுவாசித்தார்கள் - பின்பு அவர்கள் இணங்க வைக்கப்பட்டார்கள்! நாம் விசுவாசிப்பதற்கு முன்னதாகவே இணங்க வைக்கப்பட விரும்புகின்றோம்!

பின்வருவதை எனக்கு விளக்கப்படுத்துங்கள்: இந்தியர்களில் ஏராளமானவர்கள் ஜெபிக்கின்றார்கள், இருப்பினும் ஒரு சிலரே சபைக்குச் செல்லுகின்றார்கள், மற்றும் வெகு சிலரே வேதாகமத்தை வாசிக்கின்றார் கள். தாங்கள் விசுவாசிக்காத, கவனிக்க விரும்பாத ஒரு தேவனிடத்தில் இந்தியர்கள் ஏன் ஜெபிக்கின்றார்கள்? அதற்குப் பதில் கூறுங்கள்! ஜெபம் என்பது உலகளாவிய ஒரு கடைசிப் புகலிடமாக உள்ளது ... [இதில்] ஒருவர் எதையும் இழக்கத் தேவையில்லை. இந்த வகையான ஜெபம் நம்மை, தேவனைக் கொண்டிராமல் தேவபக்தியுள்ளவர்களாய் இருக்கும்படி அனு மதிக்கிறது. மேலும் பின்வருவது பற்றியும் சிந்தித்துப் பாருங்கள்: ஜெபத்தைப் பற்றி ஒரு புத்தகத்தையும் கூட எழுதியுள்ள இறையியல் அறிஞர் ஒருவர், "கீழே ஆழத்தில், நான் ஜெபத்தில் நம்பிக்கை வைப்பது இல்லை" என்று நேர்மையாக அறிக்கையிட்டார். நீங்கள்? ஆழமாக? இந்த இறையியல் அறிஞர் "ஜெபிக்கத் தொடங்குவதாக" அந்த நாளில் ஆணை யிட்டார். ஆராய வேண்டாம், தத்துவமாக்க வேண்டாம், கோட்பாடாக்க வேண்டாம் ... ஜெபியுங்கள்! நீங்கள் ஜெபிப்பதினால் மட்டுமே ஜெபிக்கக் கற்றுக் கொள்ளுகின்றீர்கள்.

மிகவும் அடிக்கடி கேட்கப்படுகிற ஒலிக்குறிப்புகள் ''எதுவும் உதவுவதில்லை ... நான் ஜெபத்தையும் கூட முயற்சி செய்தேன், அது உதவ வில்லை." இது ஜெபமல்ல ஆனால், நிபந்தனையின் பேரில் சரணடைதலாக உள்ளது. "உமது சித்தம் செய்யப்படுவதாக" என்பது வசன ரீதியானதாக உள்ளது, இருப்பினும் அது ஒரு சாக்குப்போக்காகவும் இருக்கலாம்! அது செய்யப்படும் என்று நாம் விசுவாசியாவிட்டால், நாம் தேவனுக்கு (மற்றும் ஜெபத்திற்கு) ஒரு தப்பும் போக்கைக் கொடுக்கின்றோம்! இந்த அவிசுவாச மானது "நீர் செய்வீர் என்று நான் விசுவாசிக்கவில்லை" என்று அமைதியாகக் கூறுவதின் மூலம் தேவனுடைய இராஜரீகத்தைச் சந்தேகப்படுகிறது.

(7) "உம்முடைய சித்தம் செய்யப்படுவதாக." "... ஆயினும் என்னு டைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது" (லூக். 22:42) என்று இயேசு ஜெபித்தார். மாதிரி ஜெபத்தில் இயேசு, ''உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக" என்று கூறினார் (மத். 6:10). 1 யோவான் 5:14, 15, "நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம். நாம் எதைக் கேட்டாலும், அவர் நமக்குச் செவிகொடுக்கிறா ரென்று நாம் அறிந்திருந்தோமானால், அவரிடத்தில் நாம் கேட்டவை களைப் பெற்றுக்கொண்டோமென்றும் அறிந்திருக்கிறோம்'' என்று கூறுகிறது. எவ்வாறு ஜெபிப்பது என்று மனிதன் அறிவதில்லை. ரோமர் 8:26, ''அந்தப்படியே, ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவி செய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியதின்னதென்று

# 5

# ஜெபம்

## வடிவமைப்பு

*நமது வேத வசனப்பகுதி நன்கு அறியப்பட்டதாக உள்ளது: "என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம் பண்ணி, என் முகத்தைத்தேடி, தங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்பினால், அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து, அவர்கள் தேசத்துக்கு க்ஷேமத்தைக் கொடுப்பேன்" (2 நாளா. 7:14). இந்த வசனப்பகுதி மிகவும் பிரபலமாயிருந்த காலம் ஒன்று இருந்தது. இன்றைய நாட்களில் இது மிகவும் அரிதாகவே பயன்படுத்தப்படுகிறது. இது பயன்படுத்தப்படும்போது, வழக்கமாக இது நாட்டுப்பற்றுடன் தொடர்பு படுத்தப்படுகிறது. ஜெபம் என்பது இதில் சந்தர்ப்பப் பொருளாக உள்ளது. சாலொமோன் கட்டிய தேவாலயம் அர்ப்பணிக்கப்பட்டுக் கொண்டிருந் தது. இது இஸ்ரவேலின் பெருநாட்களில் ஒன்றாக இருந்தது. 2 நாளாகமம் 6ல் சாலொமோன், "தேவாலயத்திற்காக ஜெபத்தை" ஜெபித்தார். தேவன் அந்த ஜெபத்தைக் கேட்டு ஏற்றுக் கொண்டார்! அத்தியாயம் 7ல் தேவனு டைய பதில் உள்ளது. இது நமது வேதபாடப் பகுதியின் சந்தர்ப்பப் பொருளாக உள்ளது. இதை வாசியுங்கள் ... இதை அறியுங்கள். நமது வேத வசனப்பகுதி ஜெபத்தின் வேதாகமரீதியான தத்துவத்தை வெளிப்படுத்து கிறது. உண்மையில் 2 நாளாகமம் 7:14 என்பது ஒரு வசனத்தில் எடுத்து உரைக்கப்பட்ட ஜெபமாகவே உள்ளது.*

*ஆராதனையிலும் ஜெபத்திலும் வடிவமைப்பு என்பது மதிப்பைக் கொண்டுள்ளது. இது இன்றைய நாட்களில், அடிப்படையிலேயே கை விடப்பட்டுள்ளது. ஜெபம் வடிவமைப்பைக் கொண்டுள்ளது. ஆலய அர்ப்பணிப்பின்போது இருக்கும்படி அனைத்துக் கோத்திரங்களின் மூப்பர்களையும் மற்றும் ஆசாரியர்களையும் சாலொமோன் அழைத்திருந் தார். அவசியமான பொருட்கள் இடம் பெற்றிருந்தன. அந்த நாள் பரிசுத்த நாள் என்று அறிவிக்கப்பட்டது. வடிவமைப்பு என்பது அதன் இடத்தைக் கொண்டுள்ளது. தேவன் ஒழுங்குமுறையின் தேவனாக இருக்கின்றார். இஸ்ரவேல் ஒருமைப்பட்டு, சமாதானத்தில் இருந்தது.*

*(1) "என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் ..." ஜெபம் என்பது தேவனுடைய பிள்ளைகளின் தனிச்சிறந்த சிலாக்கியமாக உள்ளது. பாவிகளுக்குத் தேவன் செவிகொடுக்கும் சில விதிவிலக்குகள் இருக்கலாம் - ஆனால் இது விதியாக இருப்பதில்லை.[1] ஜெபம் என்பது அவருடைய [தேவனுடைய] குடும்பத்திற்கு உரியதாக உள்ளது. இது, "இயேசுவின் நாமத்தில் ஜெபம்" என்பதை நாம் படிக்கும் போது, அடிக்கடி கவனிக்கத்*

*தவறப்படுகிறது. தேவன் தமது பிள்ளைகளின் ஜெபங்களைக் கேட்கின்றார், அவற்றிற்குப் பதில் அளிக்கின்றார். நமது வேத வசப்பகுதியானது, எருசலேமில் தேவனுடைய ஆலயத்தில் நடைபெற்றதாக உள்ளது. நாடு முழுவதும் தேவனை ஆராதிக்க ஒன்றுகூடியிருந்தது. இதுவே ஜெபம் வளருவதற்குரிய மண்ணாக இருந்தது.*

*(2) ''தங்களைத் தாழ்த்தி.'' ஜெபத்தின் பள்ளியில், ஒவ்வொரு அடிவைப்பும் மிகவும் முக்கியம் வாய்ந்ததாக உள்ளது. தாழ்மை என்பது ஜெபத்திற்கு முந்தி வருகிறது. மனந்திரும்புதல் என்பது ஜெபத்திற்கு முந்தி வருகிறது. பெருமையானது ஜெபிக்க முடியாது. நமது வேத வசனப் பகுதியானது, ஜீவனுள்ள தேவனுடைய பிரசன்னத்தின்மீது கவனம் செலுத்துகிறது. ஆலய அர்ப்பணிப்பின் போது, தேவன் "மகா பரிசுத்த ஸ்தலத்தில்" வாசம் பண்ண வந்தார். தேவன்! தேவனுடைய மகிமை! இதுவே ஜெபம் தொடங்கும் இடமாக உள்ளது. தேவனைக் காண்பது ஆராதனையிலும் ஜெபத்திலும் மாத்திரமே முடியக்கூடும். தாழ்மை என்பதே இயேசுவுக்குள் இருந்த தனிச்சிறந்த பண்பாகும். கிரேக்கர்கள் தாழ்மையை இழிவாகக் கருதினார்கள்; அது பலவீனமானதென்று அவர்கள் நினைத்தார்கள். தாழ்மை என்பது சார்ந்திருத்தலாக உள்ளது. தாழ்மை என்பது உதவியற்ற தன்மையின் அறிக்கையாக உள்ளது. தாழ்மை என்பது நேர்மையாக, உண்மை நிலையாக உள்ளது.*

*(3) "ஜெபம் பண்ணி." தேவையில் உள்ள மக்கள் ஜெபிக்கின்றார்கள். மனம் வருந்துகின்ற மக்கள் ஜெபிக்கின்றார்கள். ஜெபம் என்பது எல்லா புதுப்பித்தலுக்கும் சீரமைத்தலுக்கும் அஸ்திபாரமாக உள்ளது. உயிர்ப்பித்தல் என்பது ஜெபத்தின் மூலமாக வருகிறது. "முதலாவது ஜெபியுங்கள்!" ஓடவோ, ஒளிந்துகொள்ளவோ, பழிபோடவோ, மறுக்கவோ, சண்டையிடவோ வேண்டாம் - ஜெபியுங்கள்! "எல்லாவற்றையும் எதிர்கொள்ளுங்கள்!" "தேவனுக்கு முன்பாக எல்லாவற்றையும் கொண்டு வாருங்கள்!" நாம் விழுவதைத் தேவன் விரும்புவதில்லை; ஆனால் நாம் விழுந்தால், நாம் திரும்பி வர அவர் விரும்புகின்றார்! என்ன ஒரு தேவன்!*

*(4) "என் முகத்தைத் தேடி." இது ஒரு மனங்கவரும் கூற்றாக உள்ளது! இதைப் பற்றித் தியானியுங்கள்! அவர், "என் நியாயப்பிரமாணத்தைத் தேடி"; "சபைக்குத் திரும்ப வந்து"; "ஒரு சில வாரங்களுக்கு விசுவாசத்தோடு இருந்து" என்றெல்லாம் கூறவில்லை. அவர், "என் முகத்தைத் தேடுங்கள்" என்றுதான் கூறினார். மிகவும் அதிகமானவர்கள், தேவனுடைய பிரசன்னத்தை* [presence] *அல்ல ஆனால் தேவனுடைய பரிசுகளேயே* [presents] *விரும்புகின்றார்கள்! தேவன் விரும்பப்படுபவராய் இருக்க விரும்புகின்றார்! உண்மையான ஜெபம் என்பது, நாம் தேவனையே தேடுதல் என்பதாகவே உள்ளது. நாம் அவரை விரும்புகின்றோம்! ஜெபத்தில் தேவனுடைய பிரசன்னத்திற்குள் வர பயிற்சி செய்யுங்கள்.*

*(5) "தங்கள் பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்பி." பாவிகள் மனந்திரும்ப வேண்டும். பாவிகள் தங்கள் பாவங்களில் இருந்து திரும்ப வேண்டும். தேவன் "மலிவான கிருபையை", பாவம் செய்வதற்கு அனுமதியைத் தரவில்லை. பாவம் பாவமாகவே உள்ளது, இழந்து போகப்பட்டவர்*

கள் நரக ஆக்கினைக்கு உட்படுகின்றார்கள்.

(6) ''க்ஷேமத்தைக் கொடுப்பேன்.'' பாவிகள் மன்னிக்கப்படுகின்றார்கள்; நாடும் கூட குணமாக்கப்படுகிறது. நாம் தவறுசெய்து வீழ்ந்திருக்கும்போது கூட, நாம் திரும்பி வரவேண்டும் என்றே தேவன் எதிர்பார்க்கின்றார். தேவன் நம்மைக் கேட்டு, நம்மை மன்னிக்கின்றார். நமது வேதவசனப்பகுதி ஒரு மாபெரும் வசனப்பகுதியாக உள்ளது. தொடர்ந்து வாசியுங்கள். மனஸ்தாபப்படுகின்றவர்கள் மன்னிக்கப்படுவார்கள்; மனஸ்தாபப்படாத வர்கள் ஆக்கினைக்குத் தீர்ப்பிடப்படுவார்கள். தேவன் தமது எச்சரிக்கை களைக் கொடுக்கின்றார். தேவனுடைய அச்சுறுத்தல்கள், அவரது வாக்குத் தத்தங்கள் போன்றே உண்மையானவைகளாக உள்ளன. தேவன் தமது எல்லா வாக்குத்தத்தங்களையும் காக்கின்றார். தாழ்மையானவர்கள் ஆசீர்வதிக்கப்படுவார்கள்; பாவம் நிறைந்தவர்கள் ஆக்கினைக்கு உட்படு வார்கள். இதைத்தான் தேவன் ஆலயத்தில் சாலொமோனுக்குக் கூறினார்.

# ஜெபத்திற்குத் தடங்கல்கள்

## யாக்கோபு 4:14

*"... உங்கள் ஜெபங்களுக்குத் தடைவராதபடிக்கு ..." (1 பேது. 3:7).*

*ஜெபிக்கின்றவர்களுக்கு மாபெரும் விஷயங்கள் நடைபெறுகின்றன! விசுவாசிகள் ஜெபிக்கும்போது, தேவன் சிலவற்றைச் செய்கின்றார்! ஜெபித்தல் என்பது தேவனை நமது உலகிற்குத் திரும்பவும் அழைப்பதாக, அனுமதிப்பதாக உள்ளது! "நாம் ஏன் இன்னும் அதிகமாக ஜெபித்திருக்க வில்லை?" என்று நாம் நித்தியம் முழுவதிலும் கேட்டுக் கொண்டிருப்போம். தேவனுடைய வசனம் தனது வேலையைச் செய்யும்; ஜெபம் தனது வேலையைச் செய்யும். ஜெபம் என்பது எனது ஊழியத்தில் மிகவும் பெலவீனமான பரிமாணமாக உள்ளது. நாம் யாவருமே ஜெபிப்பதற்கு, மேன்மையாக ஜெபிப்பதற்கு விரும்புகின்றோம், ஆயினும் நமது ஜெபங்களில்தான் நமது மாபெரும் தோல்விகள் உள்ளன.*

*சால துக்க துன்பத்தாலே*
*நெஞ்சம் நொந்து சோருங்கால்*
*துன்பம் இன்பமாக மாறும்*
*ஊக்கமான ஜெபத்தால்![2]*

*நாம் கொஞ்சமாக ஜெபிக்கின்றோம், அல்லது ஜெபிப்பதே இல்லை. நாம் ஜெபிக்கும்போது, ''வீணாக்கப்பட்ட ஜெபங்களாக'' உள்ளன. சாத்தான் நமக்குத் தடங்கள் செய்கின்றான்! பல விஷயங்கள் நமது ஜெபங்களுக்குத் தடங்கல் விளைவிக்கின்றன. நாம் இதை அறிந்து, இதை ஒப்புக் கொண்டு, இதைத் திருத்திக் கொள்ள வேண்டும். ஜெபத்தில் நமது வளர்ச்சிக்குத் தடங்கல்களை ஏற்படுத்துபவை எவை?*

### ஜெபம் [நேரம் இன்மையால்] வெளியேற்றப்படுகிறது

*நாம் ''மிகவும் வேலை மும்முரமாக'' இருக்கின்றோம் என்பது உண்மையாக உள்ளது. நல்லது என்பது மிகச் சிறந்தது என்பதை வேருடன் பிடுங்கி எறிந்துள்ளது! நாம் மிகமும்முரமாக வேலை அட்டவணைகளின் கைதிகளாக இருக்கின்றோம். குடும்பம், சபை, ஜெபம் அல்லது தேவனுக்கு ஒதுக்க நமக்கு நேரம் இருப்பதில்லை! நமது மனவிருப்பங்கள் நல்லவை களாகவே உள்ளன. நாம் ஜெபிக்க விரும்புகின்றோம், ஆயினும் அதற்கு நாம் ஒரு இடத்தையோ அல்லது காலத்தையோ அமைத்து வைக்கவில்லை.*

நாம் சாத்தானுக்கு விஷயங்களைச் சுலபமாக்குகின்றோம். ஆழ்ந்தறிவுள்ள ஜெபம் "ஓடிக்கொண்டே இருப்பதை" நீங்கள் ஒருபோதும் அறியமாட்டீர் கள். இது நட்புறவு, குடும்பம், தேவன் ஆகியோருக்கு அவமானமாக உள்ளது. உங்கள் பணி அட்டவணைகளுக்கு முன்னுரிமை தர வேண்டாம்; உங்கள் முன்னுரிமைகளைப் பணி அட்டவணையிடுங்கள்.

நாம் விரும்புகின்றபோது தேவனிடத்தில் பேசும் சிலாக்கியத்தைப் பெற்றுள்ளோம். தேவனுடைய தொலைபேசி ஒருபோதும் சுறுசுறுப்பாய் இருப்பதில்லை! என்ன ஒரு பயபக்தியான உண்மை நிலை மற்றும் சிலாக்கியம்! இதற்கு மறுபுறத்தில், என்ன ஒரு சோதனை! தேவன் நமது இரக்கத்தில் உள்ளார். ஜெபம் நமது காலம் மற்றும் நமது சொல்வழக்கு ஆகியவற்றைச் சார்ந்துள்ளது. தேவன் "துணுக்குகளை" மாத்திரமே பெறுகின்றார். தேவன் கடைசியானவராக, குறைவான முக்கியத்துவம் உள்ளவராக இருக்கின்றார்! ஆம், வாழ்வானது சிலவேளைகளில் நமது கட்டுப்பாட்டிற்கு அப்பால் உள்ளதாகக் கூடும். இருப்பினும், ஜெபத்திற்கு நாம் ஒப்புக் கொடுக்க வேண்டும். நாம் உண்ணுகின்றோம். நாம் உறங்குகின்றோம். நாம் ஜெபிக்கின்றோம். ஜெபிப்பதற்கு நமக்கு ஒரு வேளையும் ஒரு இடமும் தேவை. ஜெபம் முன்னுரிமையைக் கொண்டிருக்க வேண்டும். *முதலாவது ஜெபியுங்கள்!* ஜெபம் என்பது பணியாக, கடினமான பணியாக உள்ளது. ஜெபம் என்பது, நாம் கவனிக்க வும் காத்திருக்கவும் அன்றாடம் நிற்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளு கிறது! நாம் எவ்வளவு அதிகமாக வேலை மும்முரமாய் இருக்கின்றோமோ, அவ்வளவு அதிகமாக ஜெபிக்க வேண்டும்!

## தயாரிப்பில் குறைபாடு

தயாரிப்பு என்பது மிகவும் இன்றியமையாததாகும், ஆயினும் வழக்கமாக இது கண்டுகொள்ளப்படாமல் உள்ளது. ஜெபத்திற்குள்ளா கவோ அல்லது நித்தியத்திற்கும் தனித்தன்மை வாய்ந்த வேறு எதற்குள்ளா கவோ நீங்கள் அவசரப்பட்டு ஓடக்கூடாது. பயிற்சியாளரான பட் வில்க்கின் ஸன் என்பவர், "வெல்வதற்கான மனவிருப்பம் அல்ல, ஆனால் தயாரிப்புக் கான மனவிருப்பமே முக்கியமானது ஆகும்" என்று ஞானமாகக் கூறினார். பெரிய விஷயங்களுக்கு பெரிய தயாரிப்புத் தேவை. பெரிய திருமணங்கள் மிக ஏராளமான தயாரிப்பை அவசியப்படுத்துகின்றன. மிக ஏராளமான தம்பதிகள், தங்கள் திருமண வாழ்வுகளுக்கு அல்ல ஆனால் கல்யாணங் களுக்கே [திருமண நிகழ்ச்சிகளுக்கே] அதிகம் தயாராகின்றார்கள் என்பது பரிதாபமானதாக உள்ளது. தேவனைச் சந்திப்பதற்கு, ஒருவர் தம்மைப் பரிசுத்தப்படுத்த வேண்டும்.

நான் ஒரு பையனாக பண்ணையில் இருந்தபோது, "தயாரிப்பு என்பதே மிகவும் கடினமான பாகம்" என்று கற்றுக் கொண்டேன். ஒரு வேலியிடு வதற்கு, ஒருவர் பொருட்களைச் சேகரித்து, கருவிகளை வண்டியில் ஏற்றி, மரங்களைச் சீராக வெட்டி, குழிகளுக்குள் குதிக்க வேண்டும். வேலியிடுதல் என்பது சுலபமான பகுதியாக உள்ளது. நமது ஜெபங்களில் பெரும்

*பாலானவை தயாரிப்பு அற்றவையாகவே உள்ளன. புறஜாதியார், "வீண் வார்த்தைகளை அலப்புகின்ற" (மத். 6) செயலைப் பயன்படுத்தினார்கள்.*

*நமது ஜெபங்கள் ஒலிக்குறிப்புகளாகவும் வெறுமையான சுற்றித்திரிதல் களாகவும் உள்ளன. நமது வெளியரங்கமான ஜெபம் தயாரிப்புள்ளதாக இருக்க வேண்டும்! ஞாபக சக்திக்கு உதவி செய்யத் தேவையான குறிப்புகள் எழுதிவைக்கப்பட வேண்டும். சில விஷயங்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவைகளாக உள்ளன. "தயாரிப்பு என்பது கடினமான பகுதியாக உள்ளது.'' நாம் தயாரிக்கத் தவறுவதால் ஜெபத்தில் தோல்வியடை கின்றோம். தயாரிப்பதில் நாம் தவறுதல் என்பது நமது ஜெபத்திற்குத் தடங்கலாக உள்ளது.*

## ஜெபிக்கப்படாத ஜெபங்கள்

*நம்மில் பலர், "பதில் அளிக்கப்படாத ஜெபங்களை"ப் பற்றிக் கவலைப் படுகின்றோம்; "ஜெபிக்கப்படாத ஜெபங்கள்'' என்பதே உண்மையான பிரச்சனையாக உள்ளது. நாம் விண்ணப்பம் பண்ணாமலிருக்கிறதினாலே, நமக்குச் சித்திக்கிறதில்லை (யாக். 4:2). ஜெபிக்காமல் இருப்பது என்பது நமது மாபெரும் பாவமாகவும் தவறாகவும் உள்ளது. நாம் பெற்றுக் கொள்ள வேண்டியவற்றிற்கும் அதிகமாக நம்மை ஆசீர்வதிக்க தேவன் எவ்வளவோ மனவிருப்பமாக இருக்கின்றார். ஜெபிக்காமல் இருப்பதில் நாம் தேவனு டைய ஆசீர்வாதங்களை இழந்துபோவதுமின்றி, நாம் பாவமும் செய்கின் றோம்! நாம் சோர்ந்துபோகாமல் எப்போதும் ஜெபிக்க வேண்டும் என்று இயேசு கூறினார் (லூக். 18:1). ஜெபிக்கப்படாத ஜெபங்களின் முன் தப்பெண்ணமும் முரட்டுத்தனமும் எவ்வளவாயிருக்கிறது! ஆசீர்வாதங் களுக்கு வேண்டுகோள் விடப்படாதவரை, அவைகள் விநியோகிக்கப்பட மாட்டாது. கேளுங்கள் ... தேடுங்கள் ... தட்டுங்கள்! நாம் ஜெபிக்க வேண்டும் என்று தேவன் நம்மை அழைக்கின்றார், நம்மை கெஞ்சிக் கேட்கின்றார், நம்மை வற்புறுத்துகின்றார், மற்றும் இரந்து மன்றாடுகின்றார்!*

*தந்தையர்கள் தங்கள் பிள்ளைகளை ஆசீர்வதிக்க விரும்புகின்றார்கள். அவர்கள், தங்களிடம் தங்கள் பிள்ளைகள் கேட்கவேண்டும் என்று விரும்புகின்றார்கள். "பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளை களுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரமபிதாவான வர் தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது என்பது அதிக நிச்சயம் அல்லவா?" (லூக். 11:13). நாம் கேட்பதே இல்லை, அவ்வளவே! நமது தேவைகள் மிகவும் சிறியவை என்றோ அல்லது அவை மிகவும் பெரியவை என்றோ நாம் நினைத்து விடுகின்றோம்! தேவன் நமக்கு அளிப்பதற்கு பெரும்விருப்பத்துடன் இருக்கின்றார். விசுவாசிகள் என்ற வகையில், நாம் பணியாற்ற அல்லது கவலைப்பட உரிமையுள்ள எந்த விஷயத்திற்காகவும் ஜெபிப்பதற்கு ஒரு தெய்வீக உரிமையைக் கொண்டுள்ளோம்! கிரியையில்லாத ஜெபம் செத்ததாக உள்ளது, ஆனால் ஜெபமில்லாத கிரியைகளும் செத்ததாகவே உள்ளது. கிறிஸ்தவர்கள் "முழந்தாள்களில் இருப்பதை" தேவன் கண்ணோக்கும் போது, அவர்களை*

*"அவர்களின் கால்களில் நிறுத்துகின்றார்." கிறிஸ்தவரின் ஜெபங்கள் உயரே எழுகின்றபோது, தேவனுடைய வல்லமை கீழே இறங்குகிறது.*

## பாவம் - பாவம் - பாவம்

*ஆழ்ந்தறிவுள்ள ஜெபம் என்பது, சரியான சிந்தனை மற்றும் சரியான வாழ்க்கை ஆகியவற்றின் மூலமாக மட்டுமே வரமுடியும். தேவனுடன் சரியான உறவுமுறை என்பதே உண்மையான ஜெபத்தின் அஸ்திபாரமாக உள்ளது. நாம் இழந்துபோகப்படக் கூடாது - இரட்சிக்கப்பட வேண்டும். நாம் சாத்தானுடைய பிள்ளைகளாக அல்ல, தேவனுடைய பிள்ளைகளாக இருக்க வேண்டும்! ஜெபமும் கீழ்ப்படியாமையும் ஒன்று கலப்பது இல்லை! தேவன் சில ஜெபங்களைக் கேட்க மாட்டார் என்று நாம் வேத வசனங்களில் முப்பதுக்கும் அதிகமான இடங்களில் கற்றுக் கொள்ளுகின்றோம். பாவம் என்பதே வழக்கமாகப் பிரச்சனையாக உள்ளது.*

> *வேதத்தைக் கேளாதபடி தன் செவியை விலக்குகிறவனுடைய ஜெபமும் அருவருப்பானது (நீதி. 28:9).*
>
> *துன்மார்க்கனுடைய வழி கர்த்தருக்கு அருவருப்பானது (நீதி. 15:8அ).*
>
> *துன்மார்க்கருக்குக் கர்த்தர் தூரமாயிருக்கிறார்; நீதிமான்களின் ஜெபத்தையோ கேட்கிறார் (நீதி. 15:29).*
>
> *என் இருதயத்தில் அக்கிரம சிந்தை கொண்டிருந்தேனானால், ஆண்டவர் எனக்குச் செவிகொடார் (சங். 66:18).*
>
> *கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள்மேல் நோக்கமாயிருக்கிறது; அவருடைய செவிகள் அவர்கள் வேண்டுதலுக்குக் கவனமா யிருக்கிறது; தீமை செய்கிறவர்களுக்கோ கர்த்தருடைய முகம் விரோதமாயிருக்கிறது (1 பேது. 3:12).*
>
> *அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொண்டு அவருக்குமுன்பாகப் பிரியமானவைகளைச் செய்கிறபடியினால் நாம் வேண்டிக் கொள்ளுகிறதெதுவோ அதை அவராலே பெற்றுக்கொள்ளுகிறோம் (1 யோவா. 3:22).*

*இந்த வேதவசனங்கள் தெளிவானவைகளாகவும் எளிமையானவைகளாக வும் உள்ளன. நாம் தேவனுக்குச் செவிகொடுக்க மறுக்கின்றபோது, அவர் நமக்குச் செவிக்கொடுக்க மாட்டார். பாவம் நம்மை ஜெபித்திலிருந்து விலக்குகிறது, ஜெபம் நம்மைப் பாவத்திலிருந்து விலக்குகிறது. ஆயினும் எச்சரிக்கையாய் இருங்கள். நன்மைத்தனம் என்பது கைக்கூலியாக இருப்பது இல்லை! ஜெபம் என்பது பேரம் பேசுதலாக இருப்பதில்லை. ஒருவர் ஆசீர்வதிக்கப்பட்டு இருப்பதற்காக நன்மை செய்கிறது இல்லை. தேவன் நல்லவர்களை ஆசீர்வதிக்கின்றார். நல்லவர்கள் மட்டுமே ஆசீர்வதிக்கப் பட்டிருக்கும் நிலையில் இருக்கின்றார்கள். மனிதன் தான் ஜெபிப்பது*

*கேட்கப்பட வேண்டும் என்ற உரிமையை ஈட்ட முடியாது. தேவன் ஜெபத்தின் இரக்கத்தில் இருப்பது இல்லை, ஆனால் தாழ்மையான மக்கள் மட்டுமே தேவனுடைய இருதயத்திற்குச் சென்று சேரும் வழியைப் பெற்றுள்ளார்கள்!*

## சந்தேகம்

*நாம் ஜெபிக்கும்போது நம்பிக்கையுள்ளவர்களாக இருக்க வேண்டும். ஜெபம் என்பது விசுவாசம் பேசுதல் என்பதாக உள்ளது. நமக்கு, "... ஆனாலும் அவன் எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக்கடவன், ..." (யாக். 1:6அ); "அன்றியும், புருஷர்கள் கோபமும் தர்க்கமுமில்லாமல் பரிசுத்தமான கைகளை உயர்த்தி, எல்லா இடங்களி லேயும் ஜெபம்பண்ணவேண்டுமென்று விரும்புகிறேன்" (1 தீமோ. 2:8) என்று கூறப்படுகிறது. நாம் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்காதபடியினால், நாம் ஆசீர்வதிக்கப்படுவது இல்லை. ஜெபத்தில் நம்பிக்கையும் தைரியமும் உள்ளடங்குகின்றன. மனிதனின் தலை ஜெபத்தில் "தாழ்ந்து இருக்கையில்" அவன் "மேலே கண்ணோக்கு கின்றான்." மழைக்காக ஜெபிப்பதற்கு ஒரு குடையுடன் சென்ற முதிர் வயது சகோதரியின் கதையை நாம் யாவரும் மகிழ்வுடன் அனுபவிக்கின்றோம்! நாம் எதிர்பார்க்காத விஷயங்களுக்காக ஜெபிப்பது மட்டுமின்றி - சில வேளைகளில் நாம் உண்மையிலேயே விரும்பாத விஷயங்களுக்காகவும் ஜெபிக்கின்றோம்! மனைவியர்கள் தங்கள் கணவர்கள் கிறிஸ்தவர்கள் ஆக வேண்டும் என்று ஜெபிக்கின்றார்கள், ஆயினும், அவர்கள் மனந்திரும்பு வதை, அவர்கள் [மனைவியர்கள்] எதிர்பார்ப்பதோ அல்லது விரும்புவதோ இல்லை. சபைகள் தயாரிப்போ அல்லது உண்மையான கவனமோ இல்லாமல் உயிர்ப்பித்தலுக்கு ஜெபிக்கின்றன.*

*தேவன் நல்லவராக இருக்கின்றார். இயேசுவிடம் விசுவாசத்தோடு உதவி கேட்க வந்த எவரும் தாம் விரும்பியவற்றையோ - அல்லது அவைகளுக்கும் அதிகமானவற்றையோ பெற்றுக்கொள்ளத் தவறியதே இல்லை! அவர்கள் எப்போதுமே தாங்கள் கேட்டவற்றைப் பெற்றுக் கொள்ளவில்லை, ஆனால் தங்களுக்குத் தேவையானவற்றைப் பெற்றுக் கொண்டார்கள். என்ன ஒரு இரட்சகர்! அவர்களின் சரீரங்களை அவர் குணப்படுத்தியது மட்டுமின்றி, அவர்களின் ஆத்துமாக்களையும் இரட்சித்தார்! இஸ்ரவேல் தேவனிடத்தில் மீண்டும் திரும்பியபோது, அவர்களை அவர் ஆசீர்வதித்தார். விசுவாசத்துடன் ஜெபித்த ஒரு மனிதன் தேவனால் புறக்கணிக்கப்பட்டதாக வேதாகமத்தில் ஒரு பதிவேடும் இருப்பது இல்லை. பவுல் தமது சரீரத்தில் இருந்த முள்ளுக்காக ஜெபித்த போது கூட, அவருக்குத் தேவன் அதை விட மேன்மையான ஒன்றை - கிருபையைக் கொடுத்தார் (2 கொரி. 12). தேவன் நமக்குக் கொடுக்கின்றவை களுக்காக நாம் அவருக்கு நன்றியுள்ளவர்களாக இல்லாதுபோனால், அவர் ஏன் நமக்கு அதிகமாகக் கொடுக்க வேண்டும்? நீங்கள் சந்தேக சிந்தை கொண்டிருந்தால், தேவனிடத்திலிருந்து எதையும் எதிர்பார்க்காதீர்கள்*

(யாக். 1:6-8). எபிரெயர் 4:3ல் பயபக்திக்குரிய சிந்தனை ஒன்று வெளிப் படுத்தப்பட்டுள்ளது: “விசுவாசித்தவர்களாகிய நாமோ, அந்த இளைப் பாறுதலில் பிரவேசிக்கிறோம்; அவருடைய கிரியைகள் உலகத் தோற்ற முதல் முடிந்திருந்தும்: ‘இவர்கள் என்னுடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதில்லையென்று என்னுடைய கோபத்திலே ஆணையிட்டேன்’ என்றார்.” தேவன் மனிதகுலத்தின் ஒவ்வொரு தேவைக்கும் உலகத்தோற்றத் திற்கு முன்பே பதில் அளித்தார்! விசுவாசத்தில் குறைவுள்ளவர்கள் ஜெபத்தை வீணாக்குகின்றார்கள்.

ஜெபம் என்பது, ஊழியம், சிந்தித்தல், கவனித்தல், துன்புறுதல் அல்லது கொடுத்தல் என்பவற்றிற்கு பதிலீடாக இருப்பதில்லை. இப்படிப்பட்ட எல்லா முயற்சிகளுக்கும் ஜெபமே ஆதாரமாக உள்ளது. உங்கள் சொந்த வல்லமையின் கீழ் நீங்கள் உங்கள் வாழ்வில் ஒரு சிறிதே சாதிப்பீர்கள் அல்லது எதையும் சாதிக்கமாட்டீர்கள்; ஆயினும், நீங்கள் உங்கள் முழு பெலத்துடனும் வேலை செய்யாவிட்டால் தேவன் உங்களுக்கு ஒன்றும் கொடுக்கமாட்டார். ஜெபம் என்பது உதவியற்றவர்களுக்கானதாக உள்ளது.

ஜெபமும் வெற்றிக்கான அறிகுறியும் ஒன்று கலப்பது இல்லை. நீங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கக் கூடியவைகளுக்கு மேலான மற்றும் பிறருடன் பகிர்ந்து கொள்ளாத எதையும் கொடுக்கும்படி நீங்கள் தேவனிடம் கேட்காதீர்கள். நீங்கள் உண்மையற்றவர்களாய் இருக்கும் போது தேவன் உங்கள் இடர்ப்பாட்டில் குதிக்க வேண்டும் என்று அவரிடத்தில் வற்புறுத்தாதீர்கள்! சந்தேகத்தின் “ஜெப வெடிகுண்டில்” இருந்து விலகியே இருங்கள். உங்கள் சொந்த இருதயத்தை ஆராய்ந்து பாருங்கள் - நீங்கள் கேட்பதைப் பெற்றுக் கொள்ளலாம் என்று நீங்கள் ஆழ்ந்தறிவுடன் எதிர்பார்க்கின்றீர்களா?

## மற்றவர்களை மன்னித்தல்

மற்றவர்களைப் பற்றிய நமது எண்ணப்போக்கும் நடைமுறையும் அமைதியாக மறக்கப்படும் விஷயமாக உள்ளது. நாம் மற்றவர்களிடத்தில் அந்நியப்பட்டுக் கிடக்கும்போது தேவனுடன் சரியான உறவில் இருப்பதை எதிர்பார்க்க முடியாது. நாம் மற்றவர்களை எவ்வாறு நடத்துகின்றோம் என்பது, தேவன் நம்மை எவ்வாறு நடத்துவார் என்பதைப் பெரிய அளவில் தீர்மானிக்கிறது. மக்களை சரியாக நடத்துங்கள்! பெருமை என்பதே பிரச்சனையின் மையமாக உள்ளது. நாம் பெருமை கொள்ளும்போது, நாம் வெறுப்பில், வெறியில், வன்மத்தில் வாழ்கின்றோம். நாம் மக்களை நமது சொந்த அனுகூலத்திற்காகப் பயன்படுத்திக் கொள்ளுகின்றோம். ஜெபம் என்பது உதவியற்றவர்களுக்கானது என்பதை நாம் ஏற்கனவே கற்றிருப்ப தால், சார்ந்திருத்தல் என்பது எல்லாக் குற்றங்களையும் நீக்குகிறது என்று முடிவு செய்ய வேண்டும். நாம் யாவருமே தேவையுள்ள மற்றும் உணவைப் பகிர்ந்து கொள்கிற இரவலர்களாக இருக்கின்றோம். நம் யாவருக்குமே தேவன் தேவைப்படுகின்றார் என்ற காரணத்தினால், நமக்கு ஒருவர் மற்றவருக்குத் தேவை என்ற நிலை நிலவுகிறது. மனிதகுல உறவுகளை

*வலியுறுத்துவதில் மத்தேயு 5ம் அதிகாரமும் 18ம் அதிகாரமும் மாபெரும் விவரிப்புகளை அடக்கி யுள்ளன. சகோதரர்கள் சகோதரர்களுக்கு எதிராக விரோதம் கொள்ளுகின்ற போது, அவர்களின் ஜெப வாழ்க்கைகள் துன்புறுகின்றன.*

*"இருப்பதா, அல்லது இல்லாது போவதா"* [To be, or not to be] *என்று ஷேக்ஸ்பியர் கூறினார். "மன்னிப்பதா அல்லது மன்னியாதிருப்பதா" என்று இயேசு கூறினார்.*

> *"நீங்கள் நின்று ஜெபம்பண்ணும்போது, ஒருவன்பேரில் உங்களுக்கு யாதொரு குறை உண்டாயிருக்குமானால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களை உங்களுக்கு மன்னிக்கும்படி, அந்தக் குறையை அவனுக்கு மன்னியுங்கள்" (மாற். 11:25).*

> *"மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால், உங்கள் பரமபிதா உங்களுக்கும் மன்னிப்பார். மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால், உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார்" (மத். 6:14, 15).*

> *"ஏழையின் கூக்குரலுக்குத் தன் செவியை அடைத்துக்கொள்ளு கிறவன், தானும் சத்தமிட்டுக் கூப்பிடும்போது கேட்கப்பட மாட்டான்" (நீதி. 21:13).*

*மத்தேயு 5ல் இயேசு, ஆராதனைக்கு முன்பு ஒப்புரவாகுதல் என்பது பற்றிப் போதித்தார். மன்னிக்காத ஒருவர், தாம் கடந்து செல்ல வேண்டிய பாலத்தை அழிக்கின்றார். நாம் மன்னிக்காவிட்டால், தேவனும் நம்மை மன்னிக்க மாட்டார். மன்னித்தல் என்பது முன் அனுமானங்கள், விரோதங் கள், வெறுப்புணர்வுகள் ஆகியவற்றையும் உள்ளடக்குகிறது! நாம் பிறருக்குச் செய்ய மறுக்கின்றவற்றை தேவன் நமக்குச் செய்ய வேண்டும் என்று நாம் கேட்க முடியுமா?*

*"ஆண்டவரே, நான் ஜெபத்தில் நம்பிக்கை கொள்ளுவதில்லை. நான் உம்மை நம்புகின்றேன். விசுவாசத்துடன் ஜெபிக்க எனக்குப் போதியும்."*

---

*குறிப்புகள்*

[1]*கொர்நேலியு, இரட்சிப்புக்குள் வழிநடத்துதலுக்காக வேண்டிக் கொண்ட போது, அவரது ஜெபத்தைத் தேவன் கேட்டார் (அப். 10:4).* [2]George Scriven, "What a Friend We Have in Jesus." Reproduced by permission of ACU Press, Abilene, Texas.

*6*

# ஜெபம்

## தேவனை நம்புங்கள்

*தேவனை நம்புங்கள்எவ்வாறு ஜெபிப்பது என்பதை நாம் அறிவதில்லை என்று நாம் கற்று இருக்கின்றோம். சில வேளைகளில், நாம் எவ்வளவு ''கடினமாக'' ஜெபிக்கின் றோமோ, அவ்வளவு சலிப்புள்ளவர்கள் ஆகின்றோம். மார்ட்டின் லூத்தர் என்பவர் ஒரு சுருக்கமான கவனித்தலை ஏற்படுத்தினார்: ''நீங்கள் ஆவிக்குரிய செரிமானமற்ற தன்மையை அடையுமளவுக்குக் கடினமாக ஜெபிக்காதீர்கள்.''*

*நீங்கள் ஜெபத்தைப் பற்றிப் பல உண்மைகளை அறிந்திருந்தும் ஜெபிக்காமல் இருக்கலாம். நாம் ஜெபிப்பதினாலேயே ஜெபிக்கக் கற்றுக் கொள்ளுகின்றோம். நீங்கள் விரும்புவதைப் பெறுதல் என்பது அல்ல, ஆனால் உங்கள் வாழ்வில் தேவன் செயல்படுவதைக் காணுதல் என்பதே ஜெபித்தலில் உள்ள மாபெரும் மெய்சிலிர்ப்பாக உள்ளது. நீங்கள் விரும்புவதைப் பெறுதல் என்பதல்ல, ஆனால் தேவனை பெறுதல் என்பதே ஜெபத்தின் மாபெரும் ஆசீர்வாதமாக உள்ளது! தேவனைக் கொண்டிருத்தல் - தேவனுடைய பதில்களைக் கண்டறிதல் மற்றும் தேவனுடைய வழிநடத் துதல்களைக் கொண்டிருத்தல் - என்பதே ஜெபத்தின் வல்லமையாக உள்ளது. முன்எச்சரிக்கை! ஆகாயத்தில் "GP" என்பது "Go preach" [சென்று போதியுங்கள்] என்று அர்த்தப்படாததாக இருக்கலாம்; அது "Go plow" [சென்று உழுங்கள்] என்று அர்த்தப்படுவதாக இருக்கலாம். புறநிலைக் கட்டளைகள் அப்படியே கீழ்ப்படியப்பட வேண்டும். அகநிலை என்பது ஏமாற்றக் கூடியதாக இருக்கலாம். ஊழியங்கள், விலை உயர்ந்த கட்டிடங் களைக் கட்டுதல், மற்றும் தனிப்பட்ட நிதிநிலைகள் பற்றிய பயங்கரமான வரலாறுகளை நாம் யாவரும் அறிவோம். நாம் அடையாளக் குறிகளை தவறாக வாசிக்கின்றோம். பின்பு தேவன் பழிதூற்றப்படுகின்றார், ஜெபம் ஒரு தோல்வி என்று கருதப்படுகிறது. நான் எவ்வளவு நீண்ட நாள் வாழ்கின் றேனோ, அவ்வளவுக்கு தேவனுடைய வழிநடத்துதலைக் கண்டறிவது அதிக கடினமானதாக உள்ளது! தேவனுடைய வழிநடத்துதலுக்காக ஜெபியுங்கள். தேவனுடைய வழிநடத்துதலைத் தேடுங்கள். பின்பு மெதுவாகச் செயல்படத் தொடங்குங்கள். தொலைக்காட்சிப் பிரசங்கியார் கள் என்னைப் பயமுறுத்துகின்றார்கள்! அவர்களின் சாட்சியங்கள் என்னை அதிர்ச்சியடையச் செய்கின்றன! அவர்கள் ஜெபிக்கின்றர்கள், தேவன் உடனடியாக "ஜெபித்த அனைத்தையும் அளித்தார்'' என்றார்கள். இது எனது அனுபவமாக இருப்பதில்லை. சில வேளைகளில், நான் எவ்வளவு சிரமப்பட்டுக் கண்ணோக்குகின்றேனோ, அவ்வளவு குறைவாகவே காண்*

*கின்றேன். தேவனுடைய அருளிரக்கம் "ஒரு பட்டத்தை விட உயரத்தில் பறக்கிறது" என்பதாகவே காணப்படுகிறது. நமது சுயநலமான விருப்பங் களை அடையாளக் குறிகளில் வாசித்தல் என்பது மிகவும் எளிதாக உள்ளது.*

*சரியான சூழ்நிலைகளில் விளக்கப்படாத மனப்பதிவுகள் நமக்கு தீர்மானங்களையும் ஞானத்தையும் அனுமதிக்கலாம்/வழங்கலாம், ஆனால் அவைகள் வேத வசனங்களைப் போல் நிச்சயமான வழிகாட்டிகளாக இருப்பதில்லை. அகநிலை என்பது தவறக் கூடியதாக, உடையக் கூடியதாக உள்ளது ... அதைக் கவனமாகக் கையாளுங்கள். நாம் அனுபவத்தில் கொண்டுள்ள எதுவும் தவறு இல்லாததாக இருப்பதில்லை. உணர்வுகள் என்பவற்றை ஒருபோதும் சிந்தனை மற்றும் பொது அறிவுக்குப் பதிலீடாகப் பயன்படுத்தக் கூடாது. சிலவற்றைப்பற்றி நன்முறையில் உணருதல் என்பது, அது செய்ய வேண்டியதாக உள்ளது என்று அர்த்தப்படுத்தாமல் இருக்கலாம். ஜெபத்தில் தானியங்கியானது என்று எதுவும் இருப்பதில்லை.*

*உங்கள் ஜெபங்களைத் தெளிவானதாக்குங்கள். நீங்கள் எதிர்பார்க்கும் பதிலைத் தெளிவானதாக்குங்கள். ஆயினும், மாறுபாடான சில விஷயங்கள் நடைபெற்றால், அது தேவன் கவனிப்பதில்லை என்று அர்த்தமாவது இல்லை. அப்பொழுதும் நீங்கள் சில விஷயங்களைக் கற்றுக் கொள்ள முடியும். வேத வசனங்களை ஆராய்ந்து பாருங்கள். தேவன் கூறுவதைக் கவனியுங்கள். ஜெபம் என்பது பேசுதல் அளவுக்கு கவனித்தல் என்பதாகவும் உள்ளது. தேவனுடைய வழிநடத்துதலை நோக்குங்கள். தாழ்மையில் கீழ்ப்படியுங்கள். நீங்கள் உங்களை உணர்வுகளால் வழிநடத்தப்படுவதற்கு அனுமதிக்காதீர்கள். உணர்வுகளில் இல்லாத செய்திகளைக் காணாதீர்கள்.*

*தேவனுடைய வழிநடத்துதலைக் கண்டறிவதற்கு, "மயிருள்ள தோலை வெளியே போடுங்கள்" என்பதே எளிய பதிலாக உள்ளது. நியாயாதிபதிகள் 6:36-40ஐ மீண்டும் படியுங்கள். ஒரு வேலையைச் செய்யும்படி கிதியோன் தேவனால் அழைக்கப்பட்டார். தேவன் தாம் விரும்பியது என்ன என்பதை மிகச் சரியாக கிதியோனிடம் கூறினார். தேவனுடைய வழிநடத்துதல் என்பது இங்கு பிரச்சனையாக இருந்ததில்லை. கீழ்ப்படிதல் என்பதே இங்கு பிரச்சனையாக இருந்தது! கிதியோன் மயிருள்ள தோலை வெளியே போட்டபோது, அவர் தேவனிடம் வழிநடத்துதலைத் தேடவில்லை - அவர் தேவனுடைய நிரூபணத்தையே தேடிக்கொண்டிருந்தார். இங்கு வழி நடத்துதல் என்பது பிரச்சனையாக இருந்ததில்லை; நம்பிக்கை மற்றும் கீழ்ப் படிதல் என்பதே பிரச்சனையாக இருந்தது. தேவனுடைய "மெதுவாகக் கற்றுக் கொள்ளுபவர்களின் வகுப்பில்" கிதியோன் ஒரு விசேஷித்த மாணவராக இருந்தார்! கிதியோனின் மயிருள்ள தோல் அல்ல ஆனால் தேவனுடைய பொறுமை என்பதே பாடமாக இருந்தது. கிதியோன் ஏற்கனவே ஒரு தூதனால் அழைக்கப்பட்டு இருந்தார். தேவன் ஏற்கனவே அற்புதங்களை நிகழ்த்தி இருந்தார். மயிருள்ள தோல் என்பது விசுவாசத்தை யல்ல, சந்தேகத்தையே செயல்விளக்கப்படுத்தியது.*

*ஆயினும், கிதியோனைக் கடுமையாக நியாயந்தீர்க்காதீர்கள். அப்போது காலங்கள் கடினமானவைகளாக இருந்தன. தேவன் எங்கே இருந்தார்? கிதியோன் "அறியப்படாத அற்பமானவராக" இருந்தார். அவர்*

*பயப்படுபவராக இருந்தார். அவர் நேர்மையானவராக இருந்தார்.*

*சங்கீதங்கள் இன்னமும் நமது ஜெப புத்தகமாக உள்ளது. ஆவிக்குரிய ஜெபம் என்பது சடங்காச்சாரமான மதியீனமாக இருப்பதில்லை. உண்மை யான ஜெபம் என்பது துன்புறும் மனிதனின் நேர்மையான உணர்வுகளாக இருக்கிறது. கிதியோன் தம்மைத் தாமே நம்ப இயலாத அளவுக்கு தேவன் மீது அவநம்பிக்கை கொள்ளவில்லை. மயிருள்ள தோல் என்பது நமது பிரச்சனைகளைத் தீர்த்து வைப்பதில்லை.நம்பிக்கையும் கீழ்ப்படிதலுமே செய்கின்றன. ஒருவருக்கு நீந்தக் கற்றுத் தருதல் என்பது தண்ணீரிலுள்ள அபாயத்தையும் உள்ளடக்குகிறது. கிதியோன் அந்த அளவுக்குத் தேவனை நன்கு அறிந்திருக்கவில்லை. "உங்களின் எல்லா ஜெபங்களில் இருப்பதைக் காட்டிலும் அதிகமான விசுவாசம், நேர்மையான சந்தேகத்தில் உள்ளது." விசுவாசம் என்பது பார்வையற்றது அல்ல. ஜெபம் என்பது தேவதைக் கதையல்ல. தேவன் பயன்படுத்துவதற்கு ஒருவரும் "மிகவும் சிறியவராய்" இருக்க முடியாது - ஆனால் ஒருவர் "மிகவும் பெரியவராய்" இருக்க முடியும் என்பதை கிதியோன் கற்றுக் கொள்ள வேண்டியிருந்தது. உணர்வுகளை யல்ல, தேவனையே நம்புங்கள். மிக அதிகமானவர் விரும்புவது "பாசாங்கு செய்தல்" என்பதுதானே தவிர, "பிரசன்னமாயிருத்தல்" என்பது அல்ல. தேவனுடைய கிருபை உங்களைக் காத்துக் கொள்ள இயலாத இடத்திற்கு தேவனுடைய சித்தம் உங்களை வழி நடத்தாது. சவஅடக்கம் போல ஜெபத்தை முன்னேற்பாடு செய்ய முயற்சி செய்யாதீர்கள். நீங்கள் பதில்களைக் கொண்டிராமற் போகலாம், ஆனால் நீங்கள் தேவனைக் கொண்டிருக்கின்றீர்கள்.*

# பரிந்து பேசும் ஜெபம்

## லூக்கா 22:31-34

> *“நானோ உன் விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு உனக்காக வேண்டிக்கொண்டேன்; நீ குணப்பட்ட பின்பு உன் சகோதரரை ஸ்திரப்படுத்து” (லூக். 22:32).*

ஜெபிப்பது எப்படி என்று எனக்குத் தெரியவில்லை. நான் அதை அறிந்திருந்தால், ஒருவேளை நான் ஜெபிப்பது தேவையில்லாதிருக்கலாம். ஜெபிப்பது எப்படி என்று எனக்குத் தெரியவில்லை; ஆகையால், ஜெபிப்பது எப்படி என்று போதிப்பதும் எனக்குத் தெரியவில்லை. நான் கொஞ்சமே அறிந்துள்ளேன்; நான் செய்வது பற்றி என்ன நினைக்கின்றேன் என்றுகூட எனக்குத் தெரியவில்லை. *பரிந்து பேசும் ஜெபத்திற்கான* வாய்ப்பு ஒன்று நமக்குள்ளது என்று நான் அறிவதில்லை: நாம் ஒருவர் மற்றவருக்காக ஜெபிக்க முடியும். இது *பயபக்தியுள்ளதாக* இருக்கிறது!

நான் தேவனிடம் பேச முடியும்.
நான் உங்களைப்பற்றி தேவனிடம் பேசமுடியும்.
உங்களுக்காக நான் ஜெபித்தல் என்பதே
உங்களுக்காக நான் செய்யும் மாபெரும் விஷயமாக உள்ளது.

*ஆச்சரியமானது!* இந்தப் பாடம் - பிறருக்காகப் பரிந்து பேசுதல் என்பது இருதயத்தையும் ஜெபத்தில் பிரச்சனையையும் உள்ளடக்குகிறது - மற்றவர்களுக்காகப் பரிந்து பேசுதல். பரிந்துபேசுதல் என்பது இன்னொருவருக்காக ஒருவரிடத்தில் வேண்டுகோள் விடுத்தல் என்பதாக உள்ளது. ஒரு பெண்மணி, “நான் மிகவும் பலவீனமாயிருப்பதால், பிறர் தேவையில் இருப்பதால், மற்றும் தேவன் ஜெபத்திற்குப் பதில் அளிக்கின்றார் என்பதால் நான் பிறருக்காக ஜெபிக்கின்றேன்” என்று ஞானமாய்க் கணித்துள்ளார். *ஆமென்!* எனது ஜெபம் உங்களை எப்படி மாற்றக்கூடும்? இது தனிப்பட்ட சுதந்தரத்தை மீறுகிறதா? பரிந்து பேசும் ஜெபம் என்பது தேவனுடைய இராஜரீகத்தையும் விழுந்துபோன மனிதனின் மிக உயர்வான மனவிருப்பங்களையும் உள்ளடக்குகிறது. பிறருக்காக ஜெபித்தல் என்பது, மிகவும் ஆழ்ந்தறிவுள்ள, பொதுநலமிக்க, உயர்கொள்கைகொண்ட, சுயநலம் அற்ற செயலாக உள்ளது. இது தேவனையும் மனிதனையும் அவர்களின் மிகச் சிறப்பான நிலையில் வைக்கிறது! நமக்காக “எனக்குத் தாரும்” என்பவைகளின் பட்டியல் அல்ல, ஆனால் பிறருக்காக உண்மையான ஜெபமே மாபெரும் ஜெபமாக உள்ளது. உங்கள் ஜெபங்களை மதிப்பிடுங்கள். அவைகள் உங்களுக்கானவைகளா அல்லது பிறருக்கானவைகளா? பரிந்து

*பேசும் ஜெபங்கள் நமது மிகுந்த ஆர்வத்திற்குரிய ஜெபங்களாக உள்ளன. பரிந்துபேசுதல் என்பது வலிவார்ந்த வேர்களுடன் ஒரு மிகப்பழங்காலத் தூண்டுதலின் உணர்வாக உள்ளது. இது நமது ஆத்துமாக்களின் எக்ஸ் - ரே வரைபடமாகவும் உள்ளது. நான் என்னையே மாற்றிக்கொள்ள விருப்பம் இல்லாதிருக்கும்போது, தேவனிடத்தில் மற்றவர்களை மாற்றும்படி எப்படி நான் கேட்க முடியும்? இதனால்தான் இந்தப் பாடங்களை எழுதுவது என்பது மிகவும் கடினமாக உள்ளது. ஜெபம் என்பது தேவனிடத்தில் உதவி கேட்டல் என்பது மட்டும் அல்ல - அது தனிப்பட்ட மாற்றத்திற்கான உறுதிப்பாடாகவும் உள்ளது.*

> *ஓ, தேவனே, ஜெபிக்க எனக்கு உதவும், ஏனென்றால்*
> *நானாகவே ஜெபிக்க முடியாது!*

*"என்னைப் பற்றிய எதையும் எனக்குள் இருக்க அனுமதியாதேயும்." பரிந்து பேசும் ஜெபம் பிறரை மாற்றாதிருக்கலாம், ஆனால் அது என்னை மாற்றும். நாம் ஜெபத்தில் ஏன் இவ்வளவு கவனக்குறைவாக இருக்கின் றோம்? இது தேவனுடன் நெருங்கிய நிலையில் இருப்பதற்கு நமக்குள்ள பொதுவான பயத்தை பிரதிபலிக்கிறது, இந்த நெருங்கிய நிலையானது பதிலுக்கு, ஆழமான நட்புறவுகளில் நாம் கொண்டுள்ள குறைபாடுகளுக்கும் ஆவிக்குரிய வகையில் போதிய போஷாக்கு இன்மைக்குமே கூட பொறுப்பாகிறது. பரிந்துபேசும் ஜெபம் மாபெரும் நட்புறவைக் கேட்கிறது! சாந்தகுணம், பரிவிரக்கம், அன்பு ஆகியவை பரிந்து பேசும் ஜெபத்தை வேண்டுகின்றன. திருமண உறவுப் பிரச்சனைகளில் பெரும்பாலானவர்கள், "தேவனே, எனது வாழ்க்கைத் துணையின் குணத்தை மாற்றும்" என்று ஜெபிக்கின்றார்கள். உண்மையான பரிந்து பேசும் ஜெபம், "தேவனே, என்னை மாற்றும்; என்னை முதலில் மாற்றும்'' என்று கூறுகிறது. "உம்முடைய சித்தம் செய்யப்படுவதாக" என்பது விருப்பங்களுக்கு முற்றுப் புள்ளியை வைத்தவர் என்ற அர்த்தம் அல்ல. ஜெபம் என்பது தானாகவே சூழ்நிலைகளை மாற்ற முடியாது; தேவன் மட்டுமே விஷயங்களை மாற்றுகின்றார். தேவனால் சூழ்நிலைகளை மாற்ற முடியும். அவர் நம்மை மாற்றுவதில் எப்போதுமே மகிழ்வு அடைவார். ஜெபித்தல் என்பது மாற்றத்திற்கானதாகவே உள்ளது. உண்மையான ஜெபம் என்பது அன்பைத் தவிர வேறொன்றும் இல்லை. ''நன்கு அன்புகூருகின்றவர் நன்கு ஜெபிக்கின்றார்."*

*லூக்கா 22:31-34ல் கிறிஸ்து பேதுருவுக்காக ஜெபித்தார். இந்த ஜெபம் பேதுருவை விழுந்துபோகுதலில் இருந்து காப்பாற்றவில்லை, ஆயினும் பேதுரு திரும்பி வந்தார்! "கிறிஸ்து பேதுருவுக்காக ஜெபித்தது போல யூதாஸுக்காகவும் ஜெபித்தாரா?" என்பது அடுத்த கேள்வியாக உள்ளது. இது நம்மை, பரிந்து பேசும் ஜெபத்தின் பிரச்சனையிடத்தில் கொண்டு சேர்க்கிறது. பேதுரு விழுந்துபோவார் என்பதை இயேசு வெளிப்படுத்திய போது, பேதுரு விழுந்து போகாதிருக்கும்படி இயேசு ஜெபித்தார்! பிறருக்கான நமது ஜெபங்களே நமது மாபெரும் ஜெபங்களாக உள்ளன!*

## பரிந்து பேசும் ஜெபம் என்பது வசனரீதியானதாக உள்ளது

வேதாகமத்தின் முந்திய பகுதியில், மதிக்கத்தக்க யோபு பரிந்து பேசும் ஜெபத்தைப் புரிந்துகொண்டு, அதை நடைமுறைப் படுத்தினார். அவர் தமது பிள்ளைகளுக்காக அன்றாடம் தேவனிடத்தில் பரிந்து பேசினார் (யோபு 1:5). யோபுவின் ஜெபங்களின் மூலமாக மட்டுமே அவரது மூன்று நண்பர் களையும் தேவன் மன்னித்தார் (யோபு 42:7-9).

மோசேயின் ஆழ்ந்தறிவுள்ள ஜெபத்தை நாம் ஒருபோதும் மறக்கக் கூடாது. அவர் மிகச் சிறந்த பல பண்புகளினால் அறியப்படுகின்றார் - ஆனால் அவரது ஜெபவாழ்வு ஒப்புமைக்கு அப்பாற்பட்டதாக இருக்கிறது. உங்கள் ஜெபத்தை மேம்படுத்திக் கொள்வதற்கு நீங்கள் மோசேயைப் பற்றிப் படியுங்கள்! யாத்திராகமம் 32 ஒரு நினைவுச் சின்னமாக உள்ளது! இது தேவனை வெளிப்படுத்துகிறது. இது மோசேயை வெளிப்படுத்துகிறது! இது ஜெபத்தை வெளிப்படுத்துகிறது! ஆரோன் நிமித்தம் உண்டான கலகத்தினாலும், ''பொற்கன்றுக்குட்டி'' விக்கிரகத்தினாலும் சீனாய் மலையின் அடிவாரத்தில் இஸ்ரவேலர்கள் பாவம் செய்திருந்தார்கள். மனிதர்கள் பாவம் செய்கின்றபோது, தேவகோபம் வெளிப்படுத்தப் படுகிறது. தேவன் தம் கோபத்தில் இஸ்ரவேலரைப் பட்சித்துப் போட்டு ஆபிரகாமிலிருந்து எழுப்புவதற்கு மாறாக மோசேயிலிருந்து ஒரு புதிய தலைமுறையை எழுப்பப் போவதாக மோசேக்குத் தகவல் அளித்தார். இது சிந்தனையைத் தூண்டக் கூடியதாக உள்ளது. அதிகாரம், பதவிகள் மற்றும் வெகுமதிகள் ஆகியவை வேண்டாம் என்று சொல்ல மிகவும் கடினமானவை களாக உள்ளன. அரசியலில் "அதிகாரக் காய்ச்சலுக்கு? [Potomac Fever?] சிகிச்சை எதுவும் இருப்பதில்லை. மோசே துணிந்தார் ... மோசே இடர்ப் படுத்தினார் ... மோசே தேவனை "ஒன்றிக்கு ஒன்றியாக" எதிர்கொண்டார். (1) அவர் அந்தப் புதிய தகுதி நிலையை ஏற்றுக்கொள்ள மறுத்தார். (2) அவர் தேவனுக்கு வேதாகமத்தை மேற்கோள் காண்பித்தார் (திகைக்க வைக்கும் செயல்பாடு). அவர் தேவனுக்கு, ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர் களுடன் அவர் [தேவன்] ஏற்படுத்தியிருந்த வாக்குத்தத்தங்களை நினைப்பூட்டினார். (3) மோசே தேவனை எவ்வளவு ஆழ்ந்தறிவுடன் அறிந்திருந்தார்! தேவன் தமது கோபத்தைக் குறித்து எச்சரிக்கையாய் இருக்குமாறும், மனந்திரும்புமாறும் அவருக்கு மோசே நினைப்பூட்டினார்! மனிதன் தேவனைக் கடிந்து கொள்ளுகின்றான்! (4) தேவன் மாறினார் (மோசே மாறவில்லை)! நம்ப முடியாத நிகழ்ச்சி! மோசே சத்தியத்தையும் தம் மக்கள் மீது அன்பையும் கொண்டிருந்ததால் வெற்றிபெற்றார். தேவனு டைய புகழ்ச்சியும் இஸ்ரவேலரின் இரட்சிப்புமே அவரது [மோசேயின்] அக்கறையாக இருந்தது. மற்றும், இஸ்ரவேலர் கடிந்து கொள்ளப்பட்டு, பின்பு இரட்சிக்கப்பட்டார்கள்; ஆயினும் அவர்கள், மோசேக்கும் தேவனு க்கும் இடையில் நடந்த உரையாடலைப் பற்றி ஒன்றும் அறிந்திருக்கவில்லை! அவர்கள் தேவனுடைய கோபத்தின் அளவை அறிந்திருக்கவில்லை அதுபோல், அவர்கள் மோசேயின் ஜெபத்தையும்

*கேட்டிருக்கவில்லை!*

*மற்றவர்களின் ஜெபங்களினால் நமது வாழ்வானது எவ்வளவு அதிகமாகத் தொடப்பட்டுள்ளது? எனக்காக ஜெபியுங்கள்! ஜெபத்தினால் மோசே தமது நாட்டவரை மீட்டுக்கொண்டதோடு, தமது சகோதரனான ஆரோனையும் தனது சகோதரி மிரியாம் என்பவளையும் மீளக்கட்டி எழுப்பினார் (எண். 12:13). எண்ணாகமம் 14:13-19ல் மோசே, இஸ்ரவேலர் களை மீண்டும் இரட்சித்துக் கொண்டார். அவர்கள் கலகம் செய்தபோது, மோசே ஜெபித்தார் - தேவன் மன்னித்தார். மோசேயின் ஊழியத்தில் அவர் ஜெபம் செய்தது பற்றி இருபத்தைந்து நிகழ்ச்சிகளை நாம் வாசிக்கின்றோம்.*

*எஸ்றாவும் நெகேமியாவும் தங்கள் பிதாக்களும் தங்கள் நாட்டவர் களும் செய்த பாவங்களை அறிக்கையிட்டு, பின்பு பரிந்து பேசினார்கள். இயேசு பேதுருவுக்காக ஜெபித்தார். அவர் நமக்காகப் பரிந்து பேசுவதற்கு என்றென்றும் வாழ்கின்றார் (எபி. 7:25). இயேசு இன்னமும் ஜெபிக்கின்றார்! நமக்காக ஜெபிக்கின்றார்! பாவம் நிறைந்த மந்திரவாதி சீமோனுக்காக ஜெபிக்கும்படி பேதுரு கேட்டுக் கொள்ளப்பட்டார் (அப். 8:12-24). அப். 12ல் களிப்பூட்டும் ஒரு நிகழ்ச்சி உள்ளது. யாக்கோபு வேதசாட்சியாக மரித்திருந்தார், பேதுரு சிறையில் இருந்தார். சகோதரர்கள் ஜெபிப்பதற்குக் கூடினார்கள். யாக்கோபின் மரணத்தைத் தேவன் அனுமதித்திருந்தார், ஆனால் அவர் பேதுருவின் மரணத்தைத் தடுத்திருந்தார். பேதுரு ஒரு தூதனால் காப்பாற்றப்பட்டார். பேதுருவுக்காக சகோதரர்கள் ஜெபித்துக் கொண்டிருந்த அந்த வீட்டிற்கே பேதுரு சென்றார். அங்கிருந்த வேலைக் காரப் பெண் மட்டுமே, அவர் பேதுருதான் என்று நம்ப முடிந்தது! இது ஜெபத்தில் உள்ள தீர்க்கப்பட முடியாத சில பிரச்சனைகளை செயல் விளக்கப்படுத்துகிறது.*

*நாம் ஒருவருக்கொருவர் நமது தவறுகளை அறிக்கையிட்டு ஒருவர் பிறருக்காக ஜெபிக்க வேண்டும் என்று யாக்கோபு கூறினார் (யாக். 5:13-16). இது, நாம் சபையார் என்ற வகையில் செய்யக் கூடிய மிகவும் நடைமுறைக்கு உகந்த விஷயமாக உள்ளது. நாம் நமது விரோதிகள் மீது அன்புகூர்ந்து அவர்களுக்காக ஜெபிக்க வேண்டும் (மத். 5:43-48). பிரசங்கியார்களுக்காக நாம் ஜெபிக்க வேண்டும் (1 தெச. 5:25). ஜெபமற்ற அமருமிடங்கள், வல்லமையற்ற பிரசங்க மேடைகளை ஏற்படுத்துகின்றன. ஜெபிக்கின்ற நடத்துனர்கள் ஜெபிக்கின்ற பின்பற்றாளர்களைக் கட்டியெழுப்பு கின்றார்கள்.*

*உலகத்திற்காக ஜெபியுங்கள். உயிர்ப்பித்தலுக்காக ஜெபியுங்கள். வியாதிப்பட்டவர்களுக்காக ஜெபியுங்கள். மிகவும் அடிக்கடி நாம் பின்வருமாறு மிகவும் பொதுப்படையாக ஜெபிக்கின்றோம்: "தேவனே, அவர்கள் யாரென்று நீர் அறிகின்றீர்." அவர் அறிகின்றார்! எனக்காக நீங்கள் ஜெபிக்கும்போது, எனது பெயரை நீங்கள் குறிப்பிடுவீர்களா? பிறருக்காக நாம் ஜெபிப்பதைக் காட்டிலும் அவர்களுக்கு நாம் செய்யக் கூடிய அதிக முக்கியத்துவம் வாய்ந்த விஷயம் வேறு எதுவும் இல்லை. சகோதரத்துவத் திற்காக நாம் ஜெபிக்கின்ற அளவுக்கு அவர்களை நாம் அன்புகூருவோம்.*

*ஜெபிக்காமல் இருப்பதற்கும் ஒரு காலமுண்டு! பயமாயிருக்கிறது!*

மோசேயும் சாமுவேலும் தங்கள் மக்களுக்காக வெற்றிகரமாக ஜெபித்தார்கள். ஆயினும், தேவன் மோசேயும் சாமுவேலும் இஸ்ரவேலுக்காக ஜெபித்தாலும், மக்களின் பாவங்களின் காரணமாக, தாம் அதைக் கேட்கப் போவதில்லை என்று எரேமியாவிடம் கூறினார் (எரே. 15:1). பாவத்தினால் கடினப்பட்ட வாழ்வில், இரக்கமும் ஜெபமும் ஒரு மனிதனைத் தொட முடியாததாகக் காணப்படும் ஒரு வேளை வருகிறது. இஸ்ரவேலுக்காக ஜெபிக்க வேண்டாம் என்று தேவன் எரேமியாவிடம் மீண்டும் மீண்டும் கூறினார். எரேமியா ஜெபிக்க விரும்பினார், ஆனால் தேவன் அதைத் தடை செய்தார்! மிகவும் கடினமான வேத வசனங்கள் ஒன்றில், சிலருக்காக ஜெபிக்கும்படியும், மற்ற சிலருக்காக ஜெபிக்காதிருக்கும்படியும் யோவான் கூறினார் (1 யோவா. 5:16). இந்த வசனப் பகுதியை ஆழமாகப் படியுங்கள். பாவத்தினால் கடினப்படும் வேளை வராதவரையிலும் முதியவரான சாமுவேல் செய்ததுபோல் செய்யுங்கள், ஜெபியுங்கள்! ஜெபம் என்பது நம்மை மாற்றுவதைக் காட்டிலும் குறைவாகவே உலகத்தை மாற்றுகிறது.

## கிறிஸ்துவின் உதாரணங்கள்

நீங்கள் எவ்வாறு ஜெபிக்கக் கற்றுக் கொண்டீர்கள்? எங்கே கற்றுக் கொண்டீர்கள்? கிறிஸ்தவர்கள் எவ்வாறு ஜெபிப்பது என்பதைக் கற்றுக் கொள்வதற்கு வேதாகமத்தைத் திருப்புகின்றார்கள். நாம் ''ஜெப மனிதரான'' இயேசுவிடம் இருந்து ஜெபிக்கக் கற்றுக் கொள்ளுகின்றோம். அவர் இரவு முழுவதும் ஜெபித்தார் (லூக். 6:12). ஜெபம் என்பது இயேசுவைப் பற்றி அறிதலாக உள்ளது. அவர் பிறருக்காக, விசேஷமாக பன்னிருவருக்காக ஜெபித்தார். யோவான் 17ல் இயேசு மீண்டும் ஜெபித்தார் - இது பன்னிருவருக்காக மட்டுமின்றி, அதே அளவுக்கு நமக்காகவும் உள்ளது! நாம் யாவரும் ஒன்றாயிருக்க வேண்டும் என்று அவர் ஜெபித்தார். சபை என்பது ஒரே சபையாக இல்லாத வரைக்கும் உலகத்தை ஒருக்காலும் வெற்றி கொள்ள முடியாது! (உங்களால் ஜெபிக்க முடியாமல் போகும் வரையில் ஜெபியுங்கள்.)

நமது வேத வசனப் பகுதியான லூக்கா 22க்குத் திரும்புவோம். பேதுரு விழுந்து போவார் என்பதை கிறிஸ்து அறிந்த வேளையில், கிறிஸ்து அவருக்காக ஜெபித்தார்! இது பரிந்துபேசும் ஜெபத்தின் இக்கட்டான நிலையை வெளிப்படுத்துகிறது! தேவனுடைய இராஜரீகமானது மனிதனின் சுயாதீன ஒழுக்க முகமையை மீறிச் செல்லாது! எனது விருப்பமானது இன்னொருவரின் மனச்சாட்சிக்கு எதிராக முடிவு செய்வதில்லை. ஜெபத்தை ஒரு மாயவித்தையாகக் குறைத்து விடாதீர்கள்: "இன்று என் மனைவியைப் பரிபூரணமானவளாக்கும்!"; "இன்று மில்லியன் மிஷனரி ஊழியர்களை ரஷ்யாவுக்கு அனுப்பும்!" இது விசுவாசமாக இருப்பதில்லை; இது ஜெபமாக இருப்பதில்லை. இது ஆராதனையாயிராமல் மாயவித்தையாக உள்ளது. இது இயேசுவின் கர்த்தத்துவத்திற்குக் கீழ்ப்படிதலாக இராமல், அதிகாரப் பயணமாக உள்ளது. இது தேவனுடனான ஆழமான, தனிப்பட்ட உறவாயிராமல், மூடநம்பிக்கையாக உள்ளது.

*இதனால் தான் "எவ்வாறு செய்வது" என்ற புத்தகங்கள் தோல்வியைத் தழுவுகின்றன. கிறிஸ்தவம் என்பது விசுவாசமாக உள்ளது - இது "சமையல் முறை இறையியல்" அல்ல. ஜெபம் என்பது நன்கு கலவை தயார் செய்யும் முறை, திறமை, சூத்திரங்கள் போன்றதாக இருப்பதில்லை. ஜெபம் என்பது தேவனுக்கும் அவரது சித்தத்திற்கும் கீழ்ப்படிதலாக உள்ளது. ஜெபம் என்பது ஒரு போராட்டமாக, "ஆத்துமாவின் உடற்பயிற்சி நிலையமாக" உள்ளது. சுயதிருப்தியை அல்ல அன்றாட மரணத்தையே நாம் நாட வேண்டும் என்று தேவன் விரும்புகின்றார் (1 கொரி. 15:31). முந்திய விஷயமானது மரணத்திற்கு வழிநடத்துகிறது; பிந்திய விஷயமானது ஜீவனுக்கு வழிநடத்துகிறது. தேவன் நமது வசதிகளைக் காட்டிலும் நமது பரிசுத்தத்தின் மீது மிக அதிகமாக ஆர்வம் கொண்டுள்ளார்.*

*கேள்வி நேரம்! நான், எனது தனிப்பட்ட ஜெபத்தில், எனது அயலாரின் வாழ்வை மாற்ற முடியுமா? அவரன்றி நான் அவருக்காக ஜெபிக்க வேண்டுமா? நான் ஜெபிக்க வேண்டாம் என்று அவர் கேட்டுக் கொண்டுள்ளபோது, நான் அவருக்காக ஜெபிக்க வேண்டுமா? ஆம்! எல்லா இடங்களிலும் எல்லா மனிதர்களுக்காகவும் ஜெபியுங்கள் (1 தீமோ. 2:1, 2). அவர்கள் பாவம் செய்கின்றபோது கூட நீங்கள் அவர்களுக்காக ஜெபியுங்கள். சாமுவேல், தாம் ஜெபிக்காதிருந்தால் பாவம் செய்கிறவராயிருப்பதாகக் கூறினார் (1 சாமு. 12:23). நாம் முற்றான விடுதலையைக் கொண்டிருப்பதில்லை. கடற்கரையில் உள்ள கூழாங் கற்களைக் காட்டிலும் மனிதர்கள் அதிகமாக இணைக்கப்பட்டுள்ளார்கள் - கூழாங் கற்கள் தொட்டுக் கொண்டு மட்டும் உள்ளன. மனிதர்கள் ஒரு வயலில் உள்ள வேர்களைக் காட்டிலும் அதிகமாகப் பிணைக்கப்பட்டுள்ளார்கள். பேசப்பட்ட, புத்தகமாக எழுதப்பட்ட ஒவ்வொரு வார்த்தையும், செயலும் எனது தனிப்பட்ட விஷயங்களின் படையெடுப்பாகவே உள்ளது. ஜெபத்தில் நாம் ஏன் ஒருவர் மற்றவரைச் சார்ந்திருக்கக் கூடாது?*

*விரோதிகளுக்காக ஜெபியுங்கள் (மத். 5:44). விரோதி ஒருவரை வெறுப்பதற்கு மாறாக, அவருக்காக ஜெபியுங்கள். பரிந்து பேசும் ஜெபம் சுவிசேஷ ஊழியத்தையும் உள்ளடக்குகிறது. யாக்கோபு 5:16 - ஆம் வசனம், "நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது" என்று கூறுகிறது. ஜெபமும் அருளிரக்கமும் கூட ஒன்றாக இணைக்கப்பட்டுள்ளன (கொலோ. 4:3). தேவன் ஜெபங்களுக்குப் பதில் அளிப்பதினால் கதவுகளைத் திறக்கின்றார். ஜெபம் நல்ல ஊழியங்களைப் பெலப்படுத்துகிறது (2 கொரி. 1:11). பரிந்து பேசுதல் என்பதே இயேசுவின் இருதயமாக உள்ளது; பரிந்து பேசுதல் என்பது கிறிஸ்தவத்தின் இருதயமாக[வும்] உள்ளது.*

## பவுலின் ஜெபப் பட்டியல்

*உலகமானது, பணக்காரர்கள், அழகுமிகுந்தவர்கள், புகழ்பெற்றவர்கள் ஆகியோரது "பட்டியல்கள்" மீது மயங்கிக் கிடக்கிறது. ஒரு தொலைக்காட்சி*

*நடிகர் தமது "மேலான பத்து [படங்களின்] பட்டியலை"க் கொண்டுள்ளார். இப்படிப்பட்ட பட்டியல்கள் ஆர்வத்திற்கு உரியவைகளாக உள்ளன, ஆனால் உண்மையில் இவை தகுதியற்றவையாக உள்ளன. பவுல் ஒரு பட்டியலைக் கொண்டிருந்தார். அவருடையது ஜெபப் பட்டியலாக இருந்தது. நீங்கள் அந்தப் பட்டியலில் இடம் பெற விரும்ப மாட்டீர்களா? அவர் பிறருக்காக ஜெபித்தார்; அவர்களைத் தமக்காக ஜெபிக்கும்படி அவர் கேட்டுக் கொண்டார் (கொலோ. 4:3). இழந்துபோகப்பட்டவர்களுக்காகப் பவுல் ஜெபித்தார் (ரோமர் 9; 10). பவுல் பொதுவாக ஜெபிக்காமல் குறிப்பாக ஜெபித்தார். அவர் சகோதரர்களையும் சபைகளையும் அவர்களின் பெயர்களைக் கொண்டு அழைத்தார்.*

*அவர் சகோதரத்துவத்திற்காக ஜெபித்தார். உண்மையான ஜெபத்திற்கு மாறிய சபை எதுவும், சபையை மாற்றும். பவுல் சபைக்காகக் கவலைப் பட்டார் (2 கொரி. 11:28). அவர் ஜெபித்தார்; அவர் விமர்சிக்கவோ புறங்கூறவோ இல்லை. நாம் பிரசங்கியார்களுக்காக, மூப்பர்களுக்காக, போதகர்களுக்காக, உதவிக்காரர்களுக்காக ஜெபிக்க வேண்டும். போதர் களே, நீங்கள் உங்கள் மாணவர்களுக்காக ஜெபிக்கின்றீர்களா? இயேசுவின் சகோதரரான யாக்கோபு சகோதரர்களுக்காக அதிகமாய் ஜெபித்த காரணத்தால், "முதிய ஒட்டகத்தின் முழங்கால்களை [உடையவர்]" என்று அழைக்கப்பட்டார்.*

*பவுல் அரசாங்கத்திற்காக ஜெபித்தார் (1 தீமோ. 2:1-3). பவுல் பின்னாளில் தம்மைச் சிரச்சேதம் செய்வித்த ஒரு இராயனுக்காக ஜெபித் தார். அவர் தாம் மரித்த நாளில் அந்த இராயனுக்காக ஜெபித்திருப்பார் என்று நீங்கள் நினைப்பதில்லையா? இன்னொருவருக்காக ஜெபிப்ப தென்பது நமக்குத் தருவதைக் காட்டிலும் அதிகமான சரியான எண்ணப் போக்கை வேறெதுவும் நமக்குத் தருவது இல்லை. எனக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.*

*ஆண்டவரே, ஒவ்வொரு நாளும் நான்,*
*சுயத்தை மறக்கும் வழியில் வாழ எனக்குதவும்,*
*ஜெபிப்பதற்கு நான் முழந்தாளிடுகையில் கூட,*
*எனது ஜெபம் பிறருக்கானதாகவே இருக்கும்.*

*"ஆண்டவரே, நான் ஜெபத்தில் நம்பிக்கை கொள்ளுவதில்லை. நான் உம்மை நம்புகின்றேன். விசுவாசத்துடன் ஜெபிக்க எனக்குப் போதியும்."*

# 7

# ஜெபம்

## தெய்வீக வழிநடத்துதல், 1

*நாம் வழிநடத்துதலுக்காக ஜெபிக்கின்றோம்; நாம் தெய்வீக வழிநடத்துதலைத் தேட வேண்டும். சாட்சியங்கள் சந்தேகத்திற்கு உரியவைகளாய் இருக்கின்றன. எப்பொழுதும் அவைகள் விரும்பப்படும் வகையிலேயே மிகச் சரியாக உள்ளன என்பதை நீங்கள் கவனிக்க வேண்டும். தோல்விகள் ஒருபோதும், சாட்சியங்களாக இருப்பதில்லை. அடையாளக் குறிகளைப் பற்றி ஜாக்கிரதையாய் இருங்கள்; நீங்கள் தெய்வீக வழிநடத்துதல் என்று நினைக்கின்ற விஷயம் அகநிலை மனித மனப்பதிவுகளாக இருக்கலாம். நாம் ஜெபிக்கின்றோம்; பின்பு கவனித்துக் கேட்கின்றோம் மற்றும் கண்ணோக்குகின்றோம். "தேவனே, இதை 'ஆம்' அல்லது 'இல்லை' என்று கரும்பலகையில் எழுதும்" என்று நாம் கூறுகின்றோம். "ஆம்" அல்லது "இல்லை" என்று அலறுதல் என்பது தேவனுக்கு எளிமையானதாக இருக்கும் - ஆனால் அது அவரது சித்தமாக இருப்பதில்லை. இது, "பிற்கால வெளிப்பாடுகள்" உள்ளதாக அடையாளம் காட்டுவதாக இருக்கும். அவர் நமக்கு "ஆம்" அல்லது "இல்லை" என்று சொல்வாரென்றால், அதற்கு அப்படியே கீழ்ப்படியாமல் இருப்பது என்பது பாவமாயிருக்கும். சங்கீதம் 143:10 மற்றும் யோவான் 7:17 ஆகிய இரு வசனப்பகுதிகளுமே, நாம் தேவனுடைய சித்தத்தை அறிவது மட்டும் இன்றி, அதைச் செய்யவும் வேண்டும் என்று வெளிப்படுத்துகின்றன. நம்மில் பலர் அதை அறிந்துகொள்வதற்கு மட்டும் ஜெபிக்கின்றோம். ஒருவர் ஞானத்திற்காக ஜெபிக்கின்றார். ஒருவர் சத்தியத்திற்காக வேதாகமத்தை வாசிக்கின்றார். "ஆண்டவர் என்னிடம் பேசினார்" என்று கூறுதல் மதத்திற்கு எதிரான கொள்கையாக உள்ளது! இனியும் அவர் [தேவன்] அதைச் செய்வதில்லை! "ஆண்டவர் என்னிடம் இதை அல்லது அதைச் செய்யும்படி கூறினார்" என்று சொல்வது ஒரு குழந்தைத்தனமான சபலமாக உள்ளது. அகநிலை மனப்பதிவுகளின் மூலம் நாம் தேவனை அல்லது தேவனுடைய வசனத்தைத் தேடுவதாக வேத வசனத்தில் எதுவும் ஆலோசனை கொடுக்கக் கூடத் துணிந்ததில்லை. தேவனுடைய "சலனமற்ற, சிறிய குரல்" [என்று எதுவும்] இருப்பதில்லை. உள்மனப்பதிவுகள் என்பவை வெளிப்படுத்துதல்களாக இருப்பதில்லை. உணர்வுகளை தெய்வீக வெளிப்படுத்துதல்களாக உயர்த்துதல் என்பது தெய்வீகத் தன்மையை நேசிப்பது போல் நடித்தலாக உள்ளது. வேதவசனங்களுடன் உள்ள ஒரு மனிதர், அனுபவத்துடன் உள்ள ஒரு மனிதருடன் ஒருபோதும் போட்டியிட முடியாது.*

*தேவன் இராஜரீகமானவராக இருக்கின்றார் ... மனிதன் சுயாதீனமான ஒழுக்கநெறியின் முகமையாக இருக்கின்றான். தேவன் தமது இராஜ*

*ரீகத்தையோ அல்லது மனிதனின் தேர்ந்துகொள்வதற்கான சுயாதீனத் தையோ மீறமாட்டார். தேவன் நமக்கு உணவைத் தருகின்றார், ஆனால் அவர் அதை [ஒரு ரொட்டியை] பக்குவமாய் வெட்டி, வெண்ணெய் தடவி மேஜையில் அற்புதமாய் கொண்டுவந்து வைப்பது இல்லை. மனிதன் ஜெபத்திற்குப் பதில் அளிக்கின்ற விதமாகவே தேவனும் ஜெபத்திற்குப் பதில் அளிக்கின்றார். நீங்கள் வேலை செய்ய விரும்பாத எவற்றிற்காகவும் நீங்கள் ஜெபிக்காதீர்கள். நாம் செய்யாமல் இருக்கும்போது, தேவன் ஏன் பதில் அளிக்க வேண்டும்? ஒரு விஷயத்தில் உங்களுக்கு நம்பிக்கை இல்லை யென்றால், அதற்காக ஜெபிப்பதை விட்டுவிடுங்கள். ஜெபம் என்பது பக்குவத்தையும் வயது வந்த [வர்களின்] பொறுப்பையும் உள்ளடக்குகிறது. நாம் "[பக்குவப்பட்ட] மனிதர்களாகச் செயல்பட" வேண்டும் என்று தேவன் நமக்குக் கூறுகின்றார்.*

*ஜெப பதில்கள் பண்பிலிருந்து வருகின்றன. நமக்கு, "உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமாகிய தேவனிடத் தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும். ஆனாலும் அவன் எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக் கடவன்" (யாக். 1:5, 6அ); "பரத்திலிருந்து வருகிற ஞானமோ முதலாவது சுத்தமுள்ளதாயும், பின்பு சமாதானமும் சாந்தமும் இணக்கமுமுள்ளதாயும், இரக்கத்தாலும் நற்கனிகளாலும் நிறைந்ததாயும், பட்சபாதமில்லாததாயும், மாயமற்றதாயுமிருக்கிறது" (யாக். 3:17) என்று கூறப்படுகிறது. நாம் அறிவுக்காக ஜெபிப்பது இல்லை. தேவன் நமது IQ எனப்படும் புத்திக் கூர்மை அளவை உயர்த்துவதில்லை. ஜெபம் நம்மை அறிவுக்கூர்மை யானவர்களாக ஆக்காமல், இரக்கம் உள்ளவர்களாக ஆக்குகின்றது. ஞானம் இல்லாத நிலையில் தேவன் நமக்கு விசேஷித்த பதில்கள் எதையும் தருவதில்லை ... ஆனால் ஜெபத்திலிருந்து ஞானம் என்பது பண்பாக உள்ளது! பரிசுத்த தன்மை என்பது ஒருவரை தேவனுடைய சித்தத்தில் வைக்கிறது. பண்பின் பலத்திலிருந்து தேவன் நம்மை வழிநடத்துகிறார். நமக்கு பதில்கள் தேவை! தேவன் பக்குவமடைகிற ஆவிக்குரிய தன்மையை விரும்புகின்றார். நாம் வேத வசனங்களை நமது இருதயத்தில் மறைத்து வைத்து, ஆவியானவரால் நிறைந்தவர்களாய் இருக்க வேண்டும். நமக்குக் கிறிஸ்துவின் சிந்தை தேவைப்படுகிறது. நாம் தலைவரையிலும் கூட வளருகின்றோம். பகுத்தறிதல் என்பதற்கு நாம் பாலில் இருந்து பலமான ஆகாரத்தை நோக்கிச் செல்லுகின்றோம்.*

*தேவன் சூழ்நிலைகளைக் கட்டுப்படுத்துகின்றார். கூடவே சாத்தானு ம் தடங்கல்களை ஏற்படுத்துகின்றான். பவுல் வேறுபாட்டை அறிந்திருந்தார்; நான் அறிவதில்லை. தேவன் சூழ்நிலைகளில் செயல் படுகின்றார். அவர் நமக்குக் கதவுகளைத் திறந்தும் மூடியும் விடுவார். அதற்கு நாம் கீழ்ப்படிய வேண்டும். அவர் நமது முகங்களில் கதவை அறைந்து சாத்துகின்ற போதும்கூட, நாம் இன்னமும் தேவனைக் கொண்டிருக்கின்றோம். நாம் அதிகமாய்ச் சோதிக்கப்படுகிறதற்குத் தேவன் இடம் கொடுக்க மாட்டார் (1 கொரி. 10:13). அவர் [நமக்குத்] தப்பிக்*

*கொள்ளும்படியான ஒரு போக்கை உண்டாக்குவார். ஆயினும், நமது நடக்கைக்கு நாமே பொறுப்பாளிகளாக இன்னமும் நாம் இருப்போம். தேவன் நம்மைத் தீமையில் இருந்து காத்துக் கொள்ளுவார் (மத். 6). வேதாகம ஞானம் என்பது நமது எல்லா முடிவுகளுக்கும் தரக்குறியீடாக உள்ளது. ஆவியினால் நிறைந்திருத்தல் என்றால், பகுத்தறிதல் என்பதாகிறது (எபி. 5:12-14; எபே. 5:18; கொலோ. 3:16). மனிதன் தேவனிடம் சரணடைகின்றான், தேவன் சூழ்நிலைகளைக் கையாளுகின்றார். நமது பின் விளக்குகளைக் கொண்டு தேவனைக் காணுதல் சுலபமானதாக உள்ளது; நமது முன் விளக்குகளைக் கொண்டு அவரைக் காணுதல் கடினமானதாக உள்ளது. மீண்டுமாக, உணர்வுகள் பற்றி எச்சரிக்கப்பட்டு - எச்சரிக்கையாய் இருங்கள்: "எல்லாவற்றைப் பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது. அதை அறியத்தக்கவன் யார்?" (எரே. 17:9).*

*ஜெபத்தில் நாம் போராடுகின்றோம்; ஜெபத்தில் நாம் வளருகின்றோம்; ஜெபத்தில் நாம் நீடிய பொறுமையுள்ளவர்கள் ஆகின்றோம். நீங்கள் ஜெபிக்கும் வரை ஜெபியுங்கள்! ஜெபம் உங்களுக்குச் சில நன்மைகளைச் செய்யும் வரை ஜெபியுங்கள். தேவன் "பிரச்சனை தீர்ப்பவராகவோ," "தேவைகளைப் பூர்த்தி செய்பவராகவோ" இருப்பதில்லை. அவர் "ஆகாய மண்டலத்தில் தேவை அளவுக்கருவியாக" இருப்பதில்லை. அவர் நம்மை மாற்றவே வந்தார். நாம் ஒரு மேன்மையான நபராக ஜெபத்தை முடிக்கையில் ஜெபம் பதில் அளிக்கப்படுகிறது. ஜெப பதில்களுடன் மிகவும் தூண்டுதலாக இருக்காதீர்கள்; ஜெப பதில்களுடன் மிகவும் கடினமானவர்களாய் இருக்காதீர்கள்.*

# ஜெபத்தில் ஒழுங்குமுறை

## மத்தேயு 17:14-21

*"இந்த ஜாதிப் பிசாசு ஜெபத்தினாலும் உபவாசத்தினாலுமேயன்றி மற்றெவ்விதத்தினாலும் புறப்பட்டுப்போகாது" (மத்தேயு 17:21).*

*சில விஷயங்கள் ஆழ்ந்தறிவுள்ள ஜெபத்திலிருந்தும், உபவாசத்திலிருந்தும் மட்டுமே வருகின்றன! துயரத்தினால் இருதயம் கிழிக்கப்பட்ட ஒரு தந்தை, பிசாசு பிடித்திருந்ததால் சந்திர ரோகியாய் இருந்த தமது மகனுக்காக வேண்டுதல் செய்யும்படி இயேசுவிடம் வந்தார். அதற்கு முன்பு அவர் அப்போஸ்தலர்களிடம் வந்திருந்தார், அவர்கள் [அந்தப் பையனைக் குணமாக்குவதில்] தோல்வியடைந்தார்கள். இயேசு, மாபெரும் முயற்சியுடன், தோல்வியடையாதிருந்தார்! அப்போஸ்தலர்கள் ஜெபிப்பதிலும் உபவாசத்திலும் அசட்டையாயிருந்தபடியினால் தோல்வியுற்றார்கள் என்று இயேசு சொன்னார். இது ஜெபத்தில் இன்னொரு பிரச்சனையையும் அறிமுகப்படுத்துகிறது. இதற்கு முன்பு சீஷர்கள் வெற்றிகரமாகக் குணமாக்கியிருந்தார்கள். அவர்கள் மற்ற பிரச்சனைகளையும் கையாண்டிருந்தார்கள். தீவிரமான விஷயங்களுக்கு அதிகமானவை தேவைப்படுகின்றன! தீவிரமான விஷயங்களுக்கு ஜெபமும் உபவாசமும் தேவைப்படுகின்றன. "நான் ஜெபத்தில் முயற்சி செய்தேன், அது பணிக்கு உதவவில்லை!" நீங்கள் முயற்சி செய்தீர்களா? நீங்கள் உண்மையாகவே ஜெபித்தீர்களா? நீங்கள் உபவாசம் இருந்தீர்களா? நீங்கள் விசுவாசமற்று இருக்கின்றீர்களா? இயேசு, "கேளுங்கள் ... தேடுங்கள் ... தட்டுங்கள்!" என்று கூறினார். ஆலோசனை வழங்குதலில், "இதைக் குறித்து நீங்கள் ஜெபித்தீர்களா?" என்பதே எனது முதல் கேள்வியாக உள்ளது. ஒரு சிலரே ஜெபித்திருக்கின்றார்கள் என்பது பரிதாபகரமானது. எவருமே ஒருபோதும் உபவாசித்ததில்லை. நீங்கள் இவற்றைச் செய்திருக்கின்றீர்களா? செய்வீர்களா?*

*இன்றைய நாட்களில் ஆவிக்குரிய தன்மை என்பது பழிவாங்கும் உணர்வுடன் திரும்பவும் வந்திருக்கிறது, ஆனால் இது வேதாகம ரீதியான ஆவிக்குரிய தன்மையல்ல. இது குழந்தைத்தனமான, பேச்சுப்படைத்த, சுயநலமான செயலாக உள்ளது. மக்கள் தேவனை "அறிவதற்கல்ல" ஆனால் "உணருவதற்கே" விரும்புகின்றார்கள். தொலைக்காட்சிப் பிரசங்கியார்கள், "ஜெபியுங்கள், நீங்கள் பெறவிரும்புவது என்ன என்பதைத் தேவனிடம் கூறுங்கள்" என்று நமக்குச் சொல்லுகின்றார்கள். இது நகைக்கத்தக்கதாக உள்ளது. தேவன் ஜெபத்திற்கு பிணைக் கைதி அல்ல. எந்த மனிதனும் தேவனுக்குக் கட்டளையிட முடியாது. தேவன் எவரொருவருக்கும் கடமைப்பட்டவர் அல்ல. வெறுமனே கேட்டு, மற்றும் பெறுதல் என்பது*

இயந்திரத்தனமானதாக இருக்கும். ஜெபம் என்பது மதரீதியான அகங்காரப் பயணமல்ல. ஜெபம் என்பது மூடநம்பிக்கையல்ல, ஆனால் அது கீழ்ப் படிதலாக உள்ளது. ஆவிக்குரிய தன்மை என்பது வேத வசனங்களுடனும் கருத்தறிவுடனும் தொடர்புபடுத்தப்பட வேண்டும். இன்றைய நாட்களில் சீஷத்துவம் வெளியேறி நாடகம் உள்ளிருக்கிறது. ஜெபம் என்பது ஒரு வேலையாக உள்ளது, இது வேடிக்கையல்ல. அப்போஸ்தலர்கள், தாங்கள் வல்லமை கொண்டிருந்ததாக நினைத்து இருந்ததால் தோல்வியடைந்தார் கள். அவர்கள் தேவனுடைய வல்லமையை சலுகையாக நினைத்து இருந்தார்கள்; அவர்கள் தங்களின் சொந்த பரிவிரக்கத்தையும் பலியையும் உள்ளடக்குவதில் தோல்வி அடைந்தார்கள்.

வாழ்வின் மற்ற ஒவ்வொரு விஷயத்திற்கும் போலவே, ஜெபத்திற்கும் ஒழுங்குமுறை அவசியமாகிறது. இயேசு, "ஒழுங்கு முறையற்ற ஜெபம் தோல்வியடைகிறது" என்று மட்டுமே [இவ்விடத்தில்] கூறினார். இசை நிகழ்ச்சி நடத்தும் பியானோ இசைக்கலைஞர் ஒருவர் 50,000 மணி நேரங்கள் பயிற்சி செய்திருந்தார். இது நாளொன்றுக்கு 8 மணிநேரம் வீதம் 6,250 நாட்கள் (17 ஆண்டுகளும் 45 நாட்களும்) என்பதாகின்றது. படெரெவ்ஸ்கீ என்ற இந்த மாபெரும் பியானோ இசைக் கலைஞரிடத்தில் ஒரு பெண்மணி, "அதைப் போல் இசைப்பதற்கு நான் என்னுடைய வாழ்க்கையையே கொடுக்கத் தயாராயிருக்கின்றேன்!" என்று கூறினார். அதற்கு அந்த இசைக் கலைஞர், "நான் அதைத்தானே செய்தேன்!" என்று பதில் அளித்தார்.[1] அது போலவே, ஜெபமும் கூட, நேரம், முயற்சி, பயிற்சி மற்றும் தியாகம் ஆகியவற்றைக் கேட்கிறது.

## ஜெபத்தில் தானாக ஏற்படும் ஆலோசனை உள்ளடங்குகிறது[2]

தேவன் ஜெபங்களுக்குப் பதில் அளிக்கின்றார். தேயியம் [Deism] [இயற்கை வழிபாடு] என்பது மத எதிர்ப்புக் கொள்கையாக உள்ளது. தேயியம் என்பது, தேவன் இந்த உலகத்தைத் தளர்வாக விடுவதற்கென்றே படைத்தார் என்று கூறும் தவறான தத்துவமாக உள்ளது. இது, தேவன் வரலாற்றில் மனித நிலைப்பாட்டின் மீது செயல்பட முடியாது, அவர் நமது வாழ்வினுள் நுழைவதற்கு உதவியற்றவராக இருக்கின்றார் என்று கருத்துத் தெரிவிக்கிறது. இன்றைய நாட்களில் தேவன் செயல்படுவதில்லை என்று நம்புகின்ற சகோதரர்கள் ஜெபத்தை ஒரு கட்டளையாக, சுய ஊக்குவித்த லாகக் குறைத்து விடுகின்றார்கள். தேயியம் என்பது தோல்வியடைகிறது! தேவன் தோல்வியடைவது இல்லை! தேவன் உண்மையானவராக, உயிருள்ளவராக, பூமியென்ற இந்த மாபெரும் கோளின்மீது செயல்படு கின்றவராக இருக்கின்றார். தேவன் நமது வாழ்வில் செயல்படுகின்றார். தேவன் நமது ஜெபங்களைக் கேட்டு பதில் அளிக்கின்றார். இதுவே நமது விசுவாசமாக உள்ளது!

தானாக ஏற்படும் ஆலோசனை என்பது ஜெபத்தில் பெரும்பங்கு வகித்தாலும், ஜெபம் என்பது தானாக ஏற்படும் ஆலோசனையாக

இருப்பதில்லை. நமது ஜெபங்கள் நம்மை மாற்றவில்லையென்றால் அவை தேவனை ஏன் மாற்ற வேண்டும்? ஜெபங்கள் நம்மை மாற்றுகின்ற காரணத்தினால்தான் அவை சூழ்நிலைகளை மாற்றுகின்றன. நாம் ஏன் அதிகமாக ஜெபிப்பதில்லை? நான் மிக அதிகமாகப் பிரசங்கித்து, மிகக் கொஞ்சமாக ஜெபித்திருக்கின்றேன். இது நான் ஜெபித்தலை விட அதிகமாக பிரசங்கித்தலில் ஒழுங்குப்படுத்தப்பட்டுள்ளேன் என்று மட்டுமே அர்த்தப்படுத்துகிறது. நான் ஜெபித்தலைக் காட்டிலும் வாசித்தலுக்கு அதிக நேரத்தைச் செலவிட்டுள்ளேன். நான் ஆயிரக்கணக்கான புத்தகங்களை வாசித்து இருக்கின்றேன். நான் ஜெபித்தலை விட வாசித்தலில் அதிகம் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளேன் என்பது பரிதாபகரமானதாக உள்ளது. நான் ஜெபித்தலை விட வாசிப்பதில் மேன்மையானவனாக உள்ளேன். ஜெபம் மக்களை மாற்றுகிறது; மக்கள் சூழ்நிலைகளை மாற்றுகின்றார்கள். யாரால் ஒரே வேளையில் ஜெபிக்கவும் சபிக்கவும் முடியும்? சோம்பேறித்தனம் நமது ஜெபவாழ்வை அழிக்கிறது. ஜெபம் என்பது ஒரு தப்பிச் செல்லும் போக்கு அல்ல - அது தேவனை எதிர்கொள்ளுதலாக உள்ளது. உண்மையான ஜெபம், தேவன்மீது நாம் சார்ந்திருப்பதைத் தெளிவாகக் காணக்கூடிய ஆதாரமாக உள்ளது.

ஐக்கியம் கொள்ளுதல்/ஐக்கியவிருந்து என்பது சிலவற்றை *நமக்குச்* செய்கிறது; வேண்டுகோள் என்பது சிலவற்றை *நமக்காகச்* செய்கிறது; பரிந்து பேசுதல் என்பது சிலவற்றை நம் *மூலமாகச்* செய்கிறது; ஆனால் *நமக்காகவும் நம் மூலமாகவும்* சில விஷயங்கள் செய்யப்பட முடிவதற்கு முன்னர், *நமக்குச்* சில விஷயங்கள் செய்யப்பட வேண்டும்! தேவனுடைய சித்தத்தை நமது சித்தத்திற்கு ஏற்றபடி வளைப்பது அல்ல, ஆனால் நம்முடைய சித்தத்தைத் தேவனுடைய சித்தத்திற்கு ஏற்றபடி வளைத்தல் என்பதே ஜெபத்தின் குறிக்கோளாக உள்ளது. அகுஸ்தீன் என்பவர், "தேவனின்றி நம்மால் செயல்பட முடியாது. நாமின்றி தேவன் செயல்பட மாட்டார்" என்று நன்றாகவே கூறினார்.

## நமது சொந்த ஜெபங்களுக்கு நாம் பதில் அளிக்க வேண்டும்

தேவன் செயல்படுகின்றதால் ஜெபம் செயல்படுகிறது, ஆனால் ஜெபம் போதுமானதாக இருப்பது இல்லை! மத்தேயு 17:14-21ல், இயேசு "ஜெபித்து உபவாசிக்க" வேண்டும் என்று கூறினார். தேவன் ஜெபங்களுக்குப் பதில் அளிக்கின்றார், ஆனால் மனிதன் உபவாசிக்கின்றான். தேவன் நமது விசுவாசம், ஊழியம் மற்றும் தியாகம் ஆகியவற்றில் உள்ள குறைவுகளினால் எல்லைக்கு உட்படுத்தப்படுகின்றார். ஜெபம் என்பது தன்னிலே போதுமானதல்ல. ஹெச். லியோ போல்ஸ் அவர்கள், "முடிக்கப்படாத ஜெபங்கள்" என்ற தலைப்பில் ஒரு பிரசங்கத்தைக் கொண்டிருந்தார். மனிதன் தனது சொந்த ஜெபத்திற்கு முதலில் அவனே பதில் அளிக்க வேண்டும். நீங்கள் செய்யாத ஒன்றைச் செய்யும்படி மற்றவர்களை ஏன் கேட்க வேண்டும்? ஜெபித்தல் என்றால் வேலை செய்தலாக உள்ளது; வேலை செய்தல் என்றால்

*ஜெபித்தலாக உள்ளது. ஜெபம் என்பது வேலைக்கு, சிந்தனைக்கு, அல்லது அன்புக்குப் பதிலீடாக இருப்பதில்லை. வயல்களின் மீது வெறுமனே ஜெபிப்பதினாலேயே அவைகள் உழப்படுவதில்லை. நாம் ஒப்புக்கொடுத் திராத விஷயங்களுக்காக நம்மால் ஜெபிக்க இயலாது. ஜெபம் ஏராளமான வற்றைச் செய்கிறது, ஆனால் எல்லாவற்றையும் அது செய்வதில்லை. ஒரு குடும்பம் கைவிடப்பட்ட நிலையில் இருந்தது, எனவே சபையார் ஜெபிக்க ஒன்று கூடினார்கள். பண்ணையிலிருந்து ஒரு பையன் ஒரு வண்டி நிறைய சமையல் பொருட்களைக் கொண்டுவந்து, "நான் அப்பாவின் ஜெபத்தைக் கொண்டு வந்தேன்!'' என்று கூறினான். இரு பையன்கள் பள்ளிக்குத் தாமதமாகச் சென்றார்கள். ஒருவன், தாங்கள் "நின்று ஜெபிக்க வேண்டும்" என்று கருத்துத் தெரிவித்தான். இன்னொருவனோ, "நாம் ஓடிக் கொண்டே ஜெபிப்போம்" என்று கூறினான். கீழ்ப்படிதல் என்பது நமது ஜெபங்களுக் குச் "சிறகுகளை" இடுகிறது. தாவீது, "உமக்குப் பிரியமானதை எனக்குப் போதியும்'' என்று ஜெபிக்காமல், ''உமக்குப் பிரியமானதைச் செய்ய எனக்குப் போதியும்" என்றே கூறினார் (சங். 143:10அ).*

*ஜெபம் என்பது கீழ்ப்படிதலுக்குப் பதிலீடாக இருப்பதில்லை. 1 யோவான் 3:17-24ல், தேவன் கீழ்ப்படிதலை ஜெபத்துடன் தொடர்பு படுத்தினார். நாம் கீழ்ப்படிகின்ற காரணத்தினால் பெற்றுக் கொள்ளு கின்றோம். நாம் முதலில் கொடுக்கின்ற காரணத்தினால் பெற்றுக் கொள்ளு கின்றோம். கொடுக்காத ஒருவர், முரண்பாடுபோல் தோன்றும் மெய்யுரை என்ற வகையில், பெற்றுக் கொள்ள முடிவதில்லை. சமீபத்தில், ஒரு ஊழியக் காரர், "எங்களுக்கு உங்கள் ஜெபங்கள் தேவையில்லை" என்று கசப்புணர் வோடு கூறினார். இந்த வெடிப்பிற்குக் காரணமானது எது? ஊழியக்காரர் களுக்கு, மூப்பர்களுடன் பேசுதல் என்பது ஏறக்குறையச் சாத்தியமற்ற தாகவே உள்ளது. சபையின் முன்பாக ஒரு பேச்சு வார்த்தையை நடத்துதல் என்பது சாத்தியமற்றதாக உள்ளது. ஊழியக்காரர்களுக்கு நாமும் நமது உதவிகளும் தேவை. நாம் ஊழியக்காரர்கள் கூறுவதைக் கவனிக்காதபோது அல்லது அவர்களுக்கு உதவி செய்யாதபோது, அவர்களுக்கு நமது ஜெபங்கள் தேவைப்படுவதில்லை! மூடப்பட்ட கதவுகளும் ஜெபமும் ஒன்றுகலப்பது இல்லை. நீங்கள் ஒரு மனிதர் கூறுவதைக் கேட்கவில்லை யென்றால், அவருக்காக ஏன் ஜெபிக்கின்றீர்கள்? விசுவாசத்தைப் போன்றே, கிரியை இல்லாத ஜெபமும் செத்ததாயிருக்கிறது. தாழ்மையுடன் ஜெபியுங் கள், ஆனால் அற்புதமாகச் செயல்படுங்கள். "விருப்பங்கள் குதிரைகளா யிருந்தால், இரவலர்களும் சவாரி செய்வார்கள்." நாம் தேவனிடமிருந்து எவ்வளவு பெறுகின்றோம் என்பதல்ல, ஆனால் தேவன் நம்மிடமிருந்து எவ்வளவு பெறுகின்றார் என்பதே வெற்றிகரமான ஜெபமாக உள்ளது. நாம் நமது மிகச் சிறந்தவற்றைத் தேவனுக்குக் கொடுக்காத வரையிலும், தேவன் தமது மிகச் சிறந்தவற்றை நமக்குக் கொடுக்கமாட்டார். நீங்கள் ஜெபித்த பின்பு விஷயங்களைப் பெற்றுக் கொள்வதற்கு, நீங்கள் ஜெபிக்கு முன்பாகவே அவற்றைச் செய்யுங்கள். உங்கள் ஜெபத்திற்குப் "பாதங்களை வையுங்கள்."*

## *ஜெபத்தில் தியானம் உள்ளடங்குகிறது*

*நமக்குத் தியானம் தேவைப்படுகிறது!*

> *கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து இரவும், பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான் (சங். 1:2).*
>
> *உமது வேதத்திலே நான் எவ்வளவு பிரியமாயிருக்கிறேன்! நாள் முழுவதும் அது என் தியானம் (சங். 119:97).*
>
> *நீ தேறுகிறது யாவருக்கும் விளங்கும்படி இவைகளையே சிந்தித்துக் கொண்டு [தியானித்துக் கொண்டு] இவைகளிலே நிலைத்திரு (1 தீமோ. 4:15).*

*சுயநலமான, பாழாக்கப்பட்ட, பிள்ளைத்தனமான கலாச்சாரமானது தியானத்திற்குள் இருப்பதில்லை. தியானம் என்பது வெளியானதாக ... வெளியானதாக ... வெளியானதாக உள்ளது. தியானத்திற்கு நேரம் தேவைப்படுகிறது (நாம் மிகவும் வேலை மும்முரமாக இருக்கின்றோம்) ... அமைதி தேவைப்படுகிறது (நாம் வானொலி மற்றும் தொலைக்காட்சிப் பெட்டிகளை நிறுத்தி வைப்பதே இல்லை) ... சிந்தனை தேவைப்படுகிறது (நாம் உணர்வுகளுக்குள் இருக்கின்றோம்) ... தனிமை தேவைப்படுகிறது (தனிமை என்பது ஒரு விஷயமாகவும் - தனித்திருத்தல் என்பது இன்னொரு விஷயமாகவும் உள்ளது) ... மனச்சாட்சி தேவைப்படுகிறது (நாம் அதிகம் சுய மதிப்புடையவர்களாக இருக்கின்றோம்) ... மற்றும் மாற்றம் தேவைப்படுகிறது (இதற்கு மாறாக நாம் பாதிக்கப்பட்டவர்களாகவே இருப்போம்)! ஜெபம் என்பது புத்திசாலித்தனமும் மதிநுட்பமும் வாய்ந்த பதில்களாக, தந்திரங்களாக, மாயாவாதப் புதிர்களாக, கூர்மதியுடைய புதிய விளக்கங்களாக இருப்பதில்லை - ஜெபம் என்பது தேவனுடைய பிரசன்னத்தை நடைமுறைப்படுத்துதலாக உள்ளது!*

*“ஒரு நாளை முடித்திராத வரையில் அதை ஒருபோதும் நீங்கள் தொடங்காதீர்கள்!” ஒரு நாளைத் தேவனுக்குக் கொடுத்தலின் மூலம் தொடங்குங்கள். பணியாற்ற வந்துள்ளதாக அறிக்கை செய்யுங்கள். நாள் முழுவதிலும் நீங்கள் கடந்து செல்லுகையில் ஜெபியுங்கள். “துதி இடைவேளைகளை”க் கொண்டிருங்கள். ஏற்ற தோற்றக் காட்சியை மீண்டும் ஆதாயப்படுத்துவதற்கு உங்களை வாழ்வின் எல்லா வேண்டுகோள்களில் இருந்தும் நீக்கிக் கொண்டிருங்கள். தனித்திருக்கவும் தனித்திருப்பதை விரும்பவும் கற்றுக் கொள்ளுங்கள், பின்பு உங்களையே தேவனுக்கு ஒப்புவியுங்கள். வேதாகமத்தின் மாபெரும் நபர்கள் யாவரும் ஆழ்ந்தறிவுள்ள தியானத்தின் மக்களாகவே இருந்தார்கள்.*

*தியானம் என்று அர்த்தம் தரும் இன்னொரு சொல் அசைபோடுதல் என்பதாகும். சிறுவனாயிருந்த போது கிராமப்புறத்தில் வளர்ந்தவன் என்ற வகையில், நான் பசுக்கள் தங்களின் “இரையை மெல்லுதல்” பற்றி அறிவேன். தியானம் என்பது “சிந்தனை செரிமானம்” என்பதாக உள்ளது. தியானம்*

என்பது கடினப்பட்டு முயற்சி செய்கின்ற ஒரு "புத்தாண்டுத் தீர்மானமாக" இருப்பதில்லை. தியானம் என்பது முயற்சி செய்தலாக இன்றி, நம்பிக்கை வைத்தலாக உள்ளது! ஜெபம் என்பது மரணத்திற்கு ஒத்திகையாக உள்ளது. இது சுயசித்தத்தை மரிக்கச் செய்து தேவனுடைய சித்தத்தை இயக்குதலாக உள்ளது. நாம் ஜெபிக்கின்றபோது, நமது காலத்திற்கும் சித்தத்திற்கும் நாம் மரித்து, தேவனுடையதை அனுமதிப்போம். ஜெபம் என்பது சுயத்திற்கு மரித்து தேவனுக்கென்று [சகலத்தையும்] துறத்தல் என்பதாக உள்ளது. தியானித்தல் என்பது நம்மை நம் வாழ்வின் மையத்திற்குத் திரும்ப அனுமதிக்கிறது.

தியானித்தல் என்பது அமைதியாக மற்றும் கவனித்தலாக இருக்கிறது. கவனித்தல் என்பது ஜெபம் மற்றும் பேசுதல் போன்றே அதிகமானதாக இருக்க வேண்டும். நாம் அதிகம் பேசுகின்றோம்; நாம் கொஞ்சமாகவே கவனிக்கின்றோம். தியானம் என்பது மனதை நடுநிலையாக வைத்தல் என்பதல்ல - தியானம் என்பது ஒருமுகப்படுத்துதல், கவனம் செலுத்துதல் என்பதாக உள்ளது. தேவனிடம் பேசுதல் என்பதை விட தேவன் பேசுவதைக் கவனித்தல் என்பது மிகவும் முக்கியமானதாக உள்ளது. நம்மில் பெரும்பான்மையானோர் உரையாடல் கலையில் நிபுணத்துவம் அற்றவர்களாக இருக்கின்றோம் - பேசுவது எல்லாவற்றையுமே நாமே செய்கின்றோம். நாம் குறைவாகக் கவனிக்கின்றோம். ஜெபிக்கின்ற பலர் காத்திருப்பதில்லை. ஜெபத்திலிருந்துதான் ஞானம் வருகிறது (யாக். 1:5, 6). ஜெபத்திலிருந்துதான் வழிநடத்துதல் வருகிறது. ஜெபத்திலிருந்துதான் பெலம் வருகிறது. ஜெபம் என்பது, நமது தசைகளை மனோதத்துவ முறைப்படித் தளர்த்துவதைக் காட்டிலும் அதிகமானதாக, ஆவிக்குரிய ஆழ்நிலை மயக்கத்தை விட அதிகமானதாக உள்ளது. ஜெபம் என்பது தேவனுடன் ஐக்கியமாகுதலாக, தேவனுடன் நல்லுறவு கொள்ளுதலாக, தேவனுடன் உரையாடுதலாக உள்ளது. தியானம் என்பது ஒரு அழிந்துபோன கலையாகக் கூடாது. ஜெபம் என்பது நாம் செய்யக் கூடிய, நடைமுறைக்கு மிகவும் உகந்த விஷயமாக உள்ளது.

## ஜெபம் உபவாசத்தை உள்ளடக்குகிறது

நாம் உபவாசத்தில் நம்பிக்கை கொள்ளுவதில்லை. அப்படி நம்பிக்கை கொண்டிருந்தால், நாம் உபவாசித்திருப்போம். உபவாசம் என்பது இன்றைய நாட்களில் ஒரு தனிப் போக்காக, மதத்தின் கடந்த கால நினைவுச் சின்னமாக உள்ளது. நாம் எவ்வாறு வாழ்கின்றோம் என்பது நாம் உண்மையில் நம்புகின்ற விஷயங்களாகவே உள்ளது. ஒருவர் தாம் கொண்டுள்ள வேதாகமத்தின்[அறிவின்]படியே வாழ்கின்றார். மத்தேயு 17, உபவாசம் பற்றிப் போதிக்கிறது. சீஷர்கள் விசுவாசிக்காததால் தோல்வியுற்றார்கள். அவர்கள் விசுவாசிக்கவில்லை, இல்லையென்றால் அவர்கள் உபவாசித்திருப்பார்கள்! அவர்கள் உபவாசிக்காமல் இருந்தபடியால் அவர்கள் ஜெபங்கள் ஊனப்படுத்தப்பட்டன. நாம் உபவாசிப்பதில்லை! சகோதரர்கள் இதைப் பற்றிச் சிந்திக்கக் கூட மிகவும் வலுவற்றவர்களாக, மிகவும் பலவீன சித்தம்

கொண்டவர்களாக, மகிழ்வினால் அதிகம் செலுத்தப்படுபவர்களாக இருக்கின்றார்கள்! உபவாசித்தல் என்பது பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட விஷயமாக உள்ளது. 1861க்கும் 1964க்கும் இடையில் இதைப் பற்றிப் புத்தகம் எதுவும் எழுதப்படவில்லை. இதைப் பற்றி மிகச் சிறந்த புத்தகம் 1580ல் எழுதப்பட்டிருக்கச் சாத்தியக் கூறு உள்ளது! உபவாசம் இன்றி சபை வளர்ச்சியை நாம் எவ்வாறு ஆழ்ந்து சிந்திக்க இயலும்?

வேதாகமத்தில் உள்ள மாபெரும் மக்கள் யாவருமே உபவாசித்து இருந்தார்கள்: மோசே, சாமுவேல், எலியா, தாவீது, தானியேல், எஸ்தர், நெகேமியா, யோவான், இயேசு, பவுல்! புதிய ஏற்பாட்டு சபையார் உபவாசித்தார்கள். உபவாசம் இருக்கப் போதுமான அளவுக்கு ஏதாவதொரு விஷயம் உங்களுக்கு அர்த்தப்படவில்லையென்றால், தேவனை ஏன் தொந்தரவு செய்கின்றீர்கள்? பவுல் அடிக்கடி உபவாசித்தார். நாம் பவுலைப் போல் பெரியவர்களாயிருக்க விரும்புகின்றோம் - நாம் ஏன் பவுலைப் போல் உபவாசிப்பதில்லை? ஊழியப் பணிகள் உபவாசத்துடன் தொடங்கின (அப். 13:1, 2). மூப்பர்கள் உபவாசித்து நியமிக்கப்பட்டார்கள் (அப். 14:23). மாபெரும் இடர்ப்பாடு ஒவ்வொன்றும் உபவாசத்தினாலேயே சந்திக்கப்பட வேண்டும்.

உபவாசம் என்பது வாழப்பட்ட ஜெபமாக உள்ளது! இது ஒரு தந்திர வேலையோ அல்லது திறமையாகப் பயன்படுத்துதலோ அல்ல. தேவனுக்கும் நமக்கும் இடையில் எதுவும் நிற்க அனுமதிக்கப்படக் கூடாது. உபவாசத்தில் நாம், மேன்மையான சிலவற்றுக்காக, நல்லவை சிலவற்றை விட்டுக் கொடுக்கின்றோம். ஆவியானது சரீரத்தைக் கட்டுப்படுத்துகிறது. உடலுக்கு உடற்பயிற்சி எப்படியோ, அப்படியே ஆத்துமாவுக்கு உபவாசமும் உள்ளது. ஜெபம் என்பது ஒரு பயிற்சியாக உள்ளது. ஜெபியுங்கள்! இது [புத்தகப்] பாடமாக இராமல், பூரணப்படுத்துகிற செய்முறையாக உள்ளது. செய்தல் என்பது கற்றுக் கொள்ளுதல் என்பதாக உள்ளது. செயல்பாடு எண்ணப் போக்கைத் தீர்மானிக்கிறது. சாத்தியமானவற்றிற்காக, சாத்தியமான வகையில் மற்றும் சாத்தியமற்றவற்றிற்காக ஜெபியுங்கள் - ஏனென்றால் தேவனாலே எல்லாம் கூடும்!

## ஜெபம் என்பது கெஞ்சிக் கேட்டலாக (விடாமுயற்சியாக) உள்ளது

உவமைகள் "உலகத்தைக் கலக்குகின்றன." அவைகள் நமக்கு அதிர்ச்சி யூட்டுகின்றன. லூக்கா 18, "சோர்ந்து போகாமல் எப்பொழுதும் ஜெபம் பண்ண வேண்டும் என்பதைக் குறித்து அவர்களுக்கு அவர் ஒரு உவமை யைச் சொன்னார்" என்று தொடங்குகிறது. இது, "அநீதியுள்ள நியாயாதிபதி" என்று அறியப்பட்ட உவமையின் தொடக்கமாக உள்ளது. தனக்கு நீதி வழங்கவேண்டும் என்ற விருப்பத்தை விடாமல் வற்புறுத்தி வந்த ஒரு விதவையைப் பற்றி இயேசு கூறினார். அந்த நியாயாதிபதி தேவனுக்கோ அல்லது மனிதனுக்கோ அஞ்சாதிருப்பினும், "இவள் அடிக்கடி வந்து என்னை அலட்டாதபடி இவளுக்கு நியாயஞ் செய்ய வேண்டும்" (லூக். 18:5)

*என்று கூறி அதற்குச் சம்மதித்தான். இங்கு இயேசு, தேவனை ஒரு அநீதியான நியாயாதிபதியுடன் ஒப்பிடவில்லை. மாறாக, நாம் விடாமல் வற்புறுத்தி வந்த அந்த விதவை போல் இருக்க வேண்டும் என்று அவர் வற்புறுத்தினார். இந்த பூமியில், விடாமல் வற்புறுத்துதலின் இடத்தை வேறு எதுவும் எடுத்துக்கொள்ள முடியாது. திறமை, சாத்தியம், மதிநுட்பம் ஆகியவற்றால் முடியாது. தேவனுடன் அல்ல, நம்முடன் தான் பிரச்சனை உள்ளது. ஜெபிப்பதை நீங்கள் விரும்பாமல் இருப்பதாக உணருகின்றபோது, ஜெபியுங்கள். நீங்கள் ஜெபிக்கும் வரை ஜெபியுங்கள். நாம் ஏன் தொடர்ந்து தட்டிக் கொண்டு இருக்கவேண்டும்? எப்போது நாம் "ஒரு பதிலுக்கு 'இல்லை' என்பதை எடுக்க வேண்டியுள்ளது"?*

*இயேசு இந்த உவமையை ஆத்துமாவை ஆராயும் ஒரு சிந்தனையுடன் முடித்தார்: "ஆகிலும் மனுஷகுமாரன் வரும்போது பூமியிலே விசுவாசத் தைக் காண்பாரோ?" (லூக். 18:8ஆ).*

*"ஆண்டவரே, நான் ஜெபத்தில் நம்பிக்கை*
*கொள்ளுவதில்லை. நான் உம்மை நம்புகின்றேன்.*
*விசுவாசத்துடன் ஜெபிக்க எனக்குப் போதியும்."*

---

*குறிப்புகள்*

*[1]இக்னேஸ் படெரெவ்ஸ்கீ என்பவர் போலந்து நாட்டைச் சேர்ந்த புகழ் பெற்ற பியானோ இசைக் கலைஞராயிருந்தார் (1860-1941). [2]தானாக ஏற்படும் ஆலோசனை என்பது, ஒரு கருத்து, நம்பிக்கை அல்லது செயல்திட்டம் பற்றிய சுய ஏற்றுக் கொள்ளுதல் ஒரு நபரினால் தூண்டி விடப்படுகின்ற செயல்முறையாக உள்ளது.*

---

## *ஜெபத்தைப் பற்றிச் சிந்தித்தல்*

*"நமது ஜெபங்களில் நாம் பண்பில் மாற்றத்தை மிக அரிதாகவும், சூழ்நிலையில் மாற்றத்தை எப்போதும் கேட்கின்றோம் என்பது வினோத மானதாக உள்ளது."*

*"ஜெபம் என்பது சிலவற்றை விட்டு தேவனிடத்தில் பேச முயற்சித்தல் என்பதற்கு மாறாக, சிலவற்றைத் தேவனிடத்தில் பேசுதல் என்பதாக உள்ளது."*

*"தேவன் ஒரு ஜெப தூரத்தைக் காட்டிலும் அதிகமான தூரத்தில் ஒருபோதும் இருப்பது இல்லை."*

## 8

# ஜெபம்

## தெய்வீக வழிநடத்துதல், 2

*கிதியோனின், மயிருள்ள தோலை நினைவுக்குக் கொண்டு வாருங்கள். நாம் வழிநடத்துதலுக்காக ஜெபிக்கின்றோம், நாம் தேவனுடைய பதில்களுக்காக கண்ணோக்க வேண்டும். தேவன் ஜெபத்தைக் கேட்டுப் பதில் அளிக்கின்றார் என்ற காரணத்தினால் ஜெபம் வல்லமை நிறைந்ததாக இருக்கிறது. வல்லமை நிறைந்த தன்மை என்பது இலகுவில் தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டு, தவறாகப் பயன்படுத்தப்படுகிறது. இதுதான் ஜெபத்தைக் குறித்த உண்மை நிலையாக உள்ளது. வேத வசனங்களில் தேவன் மிகவும் அரிதாகவே, அன்றாடம் குறிப்பிட்ட அறிவுறுத்தல்களைக் கொடுத்தார். அவர் நம்மை நமது உணர்வுகளினால் வழிநடத்துவதில்லை. நாம் ஜெபிக்கின்றோம். நாம் தேடுகின்றோம். நாம் காத்திருக்கின்றோம். நாம் ஊழியம் செய்கின்றோம். நாம் தேவனை நம்புவதால் ஜெபத்தில் நம்பிக்கை வைக்கின்றோம். நாம், பதில் அளிக்கப்பட்டதற்கான அனுபவப் பூர்வமான, அறிவியல் பூர்வமான ஆதாரம் எதையும் கொண்டிருப்பதில்லை. நாம் தரிசித்து வாழாமல் விசுவாசித்து வாழ்கின்றோம். நாம் ஆதாரத்தினால் வாழாமல் நம்பிக்கையினால் வாழ்கின்றோம். நாம் - ஜெபத்தினால் கூட - தேவனை மேலாண்மை செய்ய இயலாது. நாம் தேவன் மீது நம்பிக்கை வைக்க, ஜெபத்தில் விடாமுயற்சியுடன் இருக்க, நம்பிக்கை கொள்ள மற்றும் கீழ்ப்படியக் கற்றுக் கொள்ள வேண்டும். யாரேனும் ஒருவர் மீது விசுவாசம் கொண்டிருத்தல் என்பது அந்த யாரோ ஒருவருக்கு உங்களையே கொடுத்தல் என்பதைப் போன்றதாகவே உள்ளது. நாம் ஜெபிக்கையில் விசுவாசித்தல் என்பது நம்மையே அந்த வேண்டுகோளில் முதலீடு செய்தலாக உள்ளது. ஜெபம் என்பது, "இருளுக்குள் சீழ்க்கை அடித்துக் கொண்டு செல்லுதலாக" இருப்பதில்லை - இது, "வெளிச்சத்தை நோக்கி நடந்து செல்லுதலாக" இருக்கிறது. ஜெபத்தின் குறிக்கோளானது அதன் மதிப்பைத் தீர்மானிக்கிறது. நாம் தேவனில் விசுவாசம் கொள்ளுகின்றோம்.*

*தேவன், "எனது வாழ்வு முழுவதற்கும் பூரணப்பட்ட ஒரு சித்தத்தைக்" கொண்டுள்ளார் என்று நம்புதல் என்பது நவீன காலத்தின் மத எதிர்ப்புக் கொள்கையொன்றாக உள்ளது. வேதாகமத்தில் சிலர் தங்களின் பிறப்புக்கு முன்னதாகவே தேவனால் அழைக்கப்பட்டு இருந்தார்கள்: எரேமியா, யோவான் ஸ்நானன், முதலியோர். ஆயினும் இது விதிவிலக்காகவே உள்ளதே தவிர, விதியாக இருப்பதில்லை. பல இளம் மக்கள், தாங்கள் பிறப்பதற்கு முன்பாகவே தேவன் தங்களுக்காகக் கொண்டிருந்த திட்டங்களை,*

*நாடி அடைகின்றார்கள். இந்தக் கருத்தானது நல்ல மனவிருப்பங்களைக் கொண்டிருப்பினும், இது மிகப் பல பிரச்சனைகளைக் கொண்டுள்ளது.*

*இந்தக் கருத்தானது விசுவாசத்தின் வாழ்வுக் கால சாதனையைத் தவறாகப் புரிந்துகொள்ளுகிறது. விசுவாசத்தின் தந்தையான ஆபிரகாம் நமது முதன்மையான உதாரணமாக இருக்கின்றார். அவர் தேவனால் அழைக்கப்பட்டபோது, அவருக்கு ஒரு சாலை வரைபடமோ அல்லது, அன்றாடம் குறிப்பிட்ட வேலை செய்யும்படியான விவரித்தலோ தரப்பட வில்லை. அவர் தமது விசுவாசத்தின் கைகளைத் தேவனுடைய கரங்களில் வைத்தார், அவ்வளவே. விசுவாசமுள்ள மக்களின் ஜெபங்களுக்குப் பதில் அளிப்பதற்குத் தேவன் வருகின்றார், ஆனால் அன்றாடம் செய்ய வேண்டிய திட்டவட்டமான செயல்களுடன் வருவது இல்லை - அவர் நம்மோடு, நம் அருகில் நடக்க வருகின்றார். என்ன ஒரு உன்னதமான சிலாக்கியம்!*

*தேவன் நம்மோடு நடக்கின்றார் என்று அறிதலானது நாம் பயத்தினால் முடக்கப்படுவதிலிருந்து நம்மைப் பாதுகாக்கிறது. ஒரு தவறான முடிவு, ஒரு மோசமான தவறு நமது வாழ்வை என்றென்றுமாக அழித்து விடாது. தாவீது "உருண்டோடும் வண்டியை ஓட்டிப் பயணித்துக் கொண்டிருந்த"* ["riding a roller coaster"] *வேளையிலும் கூட, தேவன் அவரோடு நடந்தார். ஆபிரகாமின் பல தவறுகளுடனும் கூட, தேவன் அவருக்கு உண்மையான வராகவே நிலைத்து நின்றார்: லோத்து, சாராளைப் பற்றிப் பொய் கூறுதல், சண்டையிடுதல், இஸ்மவேல். நாம் தேவனுக்கு உண்மையுள்ளவர்களாய் இல்லாதபோதும் கூட அவர் நமக்கு உண்மையுள்ளவராக இருக்கின்றார்! பேதுரு [அதற்குமுன் இயேசுவை] மறுதலித்து இருந்தாலும், பெந்தெகொஸ்தே நாளன்று இன்னமும் பிரசங்கித்தார்! தேவன் எப்போதும் நமது அருகிலேயே, நமது நன்மைக்காகச் செயல்படுகின்றார் (ரோமர் 8:28). நமது தேவன் புதிய தொடக்கங்களின் தேவனாக இருக்கின்றார்! என்ன ஒரு தேவன்! என்ன இரக்கம்! ஊதாரி [மக்]கள் ஏற்றுக்கொள்ளப்படுதலுக் காகவும் ஊழியத்திற்காகவும் இல்லம் திரும்ப முடியும்! தோல்வி என்பது [நம்] உலகத்தின் முடிவாயிருக்கக் கூடாது!*

*நாம் சுயாதீனத்தில் பக்குவம் அடைய வேண்டும் என்று தேவன் அனு மதிக்கின்றார். தேவன் அடிமைகளை விரும்புவதில்லை - அவர் புத்திரர் களைக் கொண்டிருக்க விரும்புகின்றார். தேவன் இயந்திர மனிதர் களையல்ல - ஆனால் பொறுப்புள்ள பரிசுத்தவான்களைக் கொண்டிருக் கவே விரும்புகின்றார். கிறிஸ்தவமும் ஜெபமும் உறவுமுறைகளை உள்ளடக்குகிறது. நாம் தேவனுடைய சித்தத்தில் அன்புகூர்ந்து வாழ்கையில், நாம் தேர்ந்துகொள்ளுதலை ஏற்படுத்த அவர் நமக்குச் சுயாதீனத்தைக் கொடுக்கின்றார். இதுவே தேவனுடைய இராஜ்யத்தின் அர்த்தமாக - நமது இருதயங்களில் தேவனுடைய சட்டமாக உள்ளது. தேவனுடைய சித்தத் தைச் செய்வதற்கு உண்மையான விருப்பம் கொண்டுள்ள வகையிலான நபராகுதல் என்பதோடு ஒப்பிடுகையில் தேவனுடைய சித்தத்தைப் பகுத்தறிதல் என்பது மிகச் சிறிய பணியாகவே உள்ளது.*

*பின்வரும் விளக்கங்ளைக் கவனியுங்கள். திருமணம் செய்து கொள்வதில், ஒரு இளைஞர் நல்லவர்களாக உள்ள இரு கிறிஸ்தவப்*

பெண்களில் ஒருத்தியைத் தேர்வு செய்ய வேண்டியிருக்கலாம். ஒரு புதிய பிரசங்க மேடையைத் தேர்ந்துகொள்வதில், ஒரு பிரசங்கியார் இரு சபைகளில் ஒன்றைத் தெரிவு செய்தாக வேண்டும். தேவன் திட்டவட்ட மான பதிலைக் கொடுத்திருந்தாரென்றால், கீழ்ப்படியாமல் போவதென்பது பாவமாயிருக்கலாம்! தேர்ந்துகொள்ளும்படிக்குத் தேவன் நம்மை அனு மதிக்கின்றார். நமது தேர்ந்து கொள்ளுதல்களில் இருந்து மிகச்சிறந்த வகையில் செயல்பட அவர் வருகின்றார். தேவன் ஒரே ஒரு வாழ்க்கைத் துணையை அல்லது ஒரே ஒரு பிரசங்க மேடையையே நமக்கு நியமித்துள்ளார் என்று பலர் நம்புகின்றார்கள். வாழ்க்கைத் துணைவர்களில் சிலர் தவறானவர்களாய் இருப்பார்கள். சில சபைகள் தவறானவைகளாக இருக்கலாம். நாம் கிறிஸ்துவைப் போன்ற பண்புகளை மேம்படுத்த முயற்சி செய்தால் - நமது தெரிவுகள் எதுவாயிருப்பினும் - தேவன் நம்மை ஆசீர்வதித்து நம்மை பயன்படுத்துகின்றார்! இதுவே ஜெபத்தின் உண்மை யான மகிமையாக உள்ளது! தேவன் நமது வாழ்வு முழுமைக்குமான திட்டங்களைக் கொண்டிருப்பாரென்றால், நம்மில் பலர் அவற்றை உயர்நிலைப் பள்ளியை விட்டு வெளியேறு முன்பாகவே சேதப்படுத்தி விட்டோம். தேவன் நம்மை வயது வந்தவர்களாயிருக்க அனுமதிக்கின்றார். சில வேளைகளில் எனது தந்தை திட்டவட்டமானவராய் இருந்தார், ஆனால் பெரும்பாலான வேளைகளில் அவர் எனது முடிவுகளுக்கு என்னையே பொறுப்பேற்கும்படி செய்தார். அவர் எப்போதுமே என்னிடத் தில், அவர் எனது முடிவுகளை மதிப்பதாகவும் அவற்றில் பெரும்பாலான வற்றை நான் மேற்கொள்ளுவதில் எனக்கு உதவுவதாகவும் கூறினார். இது ஒரு உறவாக உள்ளது. தேவன் தமது கிருபையில் எனது “குழப்பமான வாழ்க்கைக்குள்” வந்து அதில் சிலவற்றை ஏற்படுத்த மனம் விரும்பி கீழே வந்து சேர்ந்தார் என்பதில் நான் மகிழ்வடைகின்றேன். இதுவே ஜெபத்தின் வல்லமையாக உள்ளது! இதுவே தேவனுடைய மகிமையாக உள்ளது.

# ஜெபத்தின் அபாயம்

## அப். 12:1-17

*“அவன் ன்பேதுருதி ..., மாற்கு என்னும் பேர்கொண்ட யோவானுடைய தாயாகிய மரியாள் வீட்டுக்கு வந்தான்; அங்கே அநேகர் கூடி ஜெபம்பண்ணிக் கொண்டிருந்தார்கள் ... அவர்கள் கதவைத் திறந்தபோது அவனைக் கண்டு பிரமித்தார்கள்” (அப். 12:12-16).*

*ஆங்கில மொழியில்,* “human,” [*மனிதம்*], “humor” [*நகைச்சுவை*] and “humility” [*தாழ்மை*] *என்பவை ஒன்றுக்கொன்று தொடர்புடைய வார்த்தைகளாக இருக்கின்றன. இவை மூன்றும் அப். 12ல் செயல்விளக்கப் படுத்தப்படுகின்றன. கிறிஸ்தவர்கள் மனிதர்களாய் இருக்கின்றார்கள். கிறிஸ்தவர்கள் சில வேளைகளில் நகைச்சுவை உணர்வுடன் இருக்கின்றார் கள். நமது கிறிஸ்தவ தோல்விகள் நம்மைத் தாழ்த்துகின்றன. இவை யாவும் ஒன்றாய் இணைந்து செல்லுகின்றன.*

*ஜெபம் அபாயமானதாக உள்ளது. நாம் இந்த சத்தியத்தை தவறவிடச் சாய்கின்றோம். ஜெபம் வல்லமையாக ... தேவனுடைய வல்லமையாக உள்ளது. ஜெபிக்கின்ற மக்களுக்கு மாபெரும் விஷயங்கள் நடைபெறு கின்றன. நாம் கேட்கும்போது பெற்றுக் கொள்ளுகின்றோம்! நீங்கள் கேட்பது பற்றி எச்சரிக்கையாயிருங்கள்! நாம் யாவருமே எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். “ஜெபத்தின் அபாயம் எது?” அது பெலனுள்ளதாயிருக் கிறது! நாம் அதை எதிர்பார்க்காத பொழுதிலும் கூட அது பெலனுள்ளதா யிருக்கிறது! ஜெபத்தில் கூடுதல் எச்சரிக்கையாய் இருங்கள் - நீங்கள் கேட்பதை பெற்றுக் கொள்ளலாம்!*

### ஜெபத்திற்கு ஒரு எதிர்பாராத பதில்

*நாம் அப். 12:1-17ஐ மறுபடியும் வாசிப்போம். (1) சபையார் ஜெபிக்கக் கூடினார்கள். இது நல்லது. யாக்கோபு ஏரோதினால் வெட்டுவிக்கப்பட்டு ரத்த சாட்சியாக மரித்திருந்தார். பஸ்கா பண்டிகையைத் தொடர்ந்து மரண தண்டனை நிறைவேற்றப்படுவதற்காகப் பேதுரு சிறையில் அடைக்கப் பட்டிருந்தார். சபையார் யாவரும் ஜெபிக்கக் கூடியிருந்தார்கள். (2) தேவனிடம் ஜெபங்கள் ஏறெடுக்கப்பட்டன. அவர்கள் சரியான நபரிடமே சென்றிருந்தார்கள். அவர்கள் தேவனை நோக்கி அழைத்தார்கள். அவசரமும் சார்ந்திருத்தலும் அங்கிருந்தது. அவர்கள் இரவு முழுவதும் ஜெபிக்க வேண்டியிருந்தது. நம்மை ஜெபிக்க வைப்பது எதுவாக இருக்கும்? துன்புறத்தப்படுதலா? தோல்வியா? (3) ஜெபம் திட்டவட்டமானதாக இருந்தது. ஒரே ஒரு விருப்பம் மட்டுமே இருந்தது - பேதுருவின் விடுதலை.*

*மிக அதிகமான ஜெபங்கள் மிகவும் துல்லியமற்றவைகளாகவும் பொதுவான வைகளாகவும் இருக்கின்றன. இதுவோ, ஒன்றுபட்ட, அவசரமான ஜெபத்தின் தெளிவான நிகழ்வாக உள்ளது. ஆயினும், அவர்கள் உண்மை யிலேயே பேதுருவின் விடுதலைக்காக ஜெபித்தார்களா? அவர்கள் (யாக்கோபின் மரணத்தை ஏற்றுக்கொண்டது போல) இதை[யும்] ஏற்றுக் கொள்ளும்படி ஜெபிக்கவில்லையா? மருந்துக்கு, காலத்துக்கு, சூழ்நிலை களுக்கு நாம் சரணடைகின்றோமா? தேவன் சாத்தியமற்றவைகளின் தேவனாக இருக்கிறார்! சபையானது எச்சரிக்கப்பட்டும் பயமுறுத்தப் பட்டும் இருந்தது, ஆனால் அவர்கள் உண்மையில் எதற்காக ஜெபித்துக் கொண்டிருந்தார்கள்?*

*இது பதில் அளிக்கப்பட்ட ஜெபத்திற்கான ஒரு தெளிவான நிகழ்வாகவும் இருந்தது. யாக்கோபு மரித்தார். பேதுரு உயிர் வாழ்ந்தார் ... இதுவே ஜெபத்தின் புரியாத புதிராக உள்ளது. சகோதரர்கள் ஜெபித்த போது, தேவன் செயல்பட்டார். தேவன் அவர்களின் ஜெபங்களுக்குப் பதில் அளித்தார். ஜெபிக்கின்ற இந்த சபையாருக்குப் பதில் அளிக்கத் தேவன் மறுக்கவில்லை.*

*இது வேடிக்கையாகவும் இருந்தது! பேதுருவே தாம் கனவு காண்பதாக நினைத்தார்! பேதுரு, நகைச்சுவையாக, மரணச்சிறையில் ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்தார். இது எதிர்பார்க்குதலை அல்ல ஆனால் [விடுதலையாகும் எண்ணத்தையே] கைவிட்டு விட்ட நிலையையே அடையாளப்படுத்திற்று. அவர், சபையார் ஜெபித்துக் கொண்டிருந்த வீட்டிற்குச் சென்றார். எங்கு செல்ல வேண்டும் என்பதை அவர் அறிந்திருந்தார். நீங்கள் கலந்து கொள்ளு கிற சபை, ஜெபிப்பதற்கு சபையார் எங்கே கூடுவார்கள்? யாருடைய வீட்டில்? இப்போது சூழ்நிலையானது "இன்னும் வேடிக்கையாக"க் கூட மாறிற்று. பேதுரு தமது உயிருக்குப் பயந்து கொண்டு, கதவைத் தட்டினார். அவர் உரத்துச் சத்தமிடவோ அல்லது மிகப் பலமாக[கதவை]த் தட்டவோ முடியாதிருந்தது. "அற்பப் பெண்ணான" ரோதை என்ற அடிமைப் பெண் கதவண்டைக்கு அனுப்பப்பட்டாள். ஒருவேளை அவள் அங்கிருப்பதும் அவளது ஜெபங்களும், எண்ணப்படாது இருந்திருக்கும்! வேடிக்கையா யிருந்தது! பின்பு, இன்னும் வேடிக்கையாக, அவள் கதவண்டையில் சென்றும்கூட, அவரை உள்ளே அனுமதிக்கும்படி கதவைத் திறக்காதிருந் தாள்! அவரை கதவு தட்டும் நிலையிலேயே விட்டுவிட்டு, அவள் "நமது ஜெபம் கேட்கப்பட்டது!'' என்று கூறும்படி ஜெபக்குழுவினரிடம் சென்றாள். அவர்கள் அவளைப் பரியாசம் செய்து திட்டினார்கள். பேதுரு தொடர்ந்து தட்டிக் கொண்டிருந்தார் - இது உண்மையற்றதாக உள்ளது. பின்பு, "ஜெபிக்கும் சபையார்" கதவு தட்டப்படுதலைப் பற்றி விளக்கப் படுத்தினார்கள்: "அது அவருடைய தூதன்.'' ஜெபித்துக் கொண்டிருந்த சகோதரர்களால் உண்மையை நம்ப முடியாதிருந்தது, ஆயினும் மூட நம்பிக்கையை ஏற்றுக்கொண்டார்கள். அவர்களால் ஒரு "ஆவியை" ஏற்றுக் கொள்ள முடிந்தது, ஆனால் ஒரு "சரீரத்தை" ஏற்றுக் கொள்ள முடியாதிருந் தது. சிறைச்சாலையில் இருந்து வெளியேறுதல் என்பது ஒரு ஜெபக்கூட்டத் தினுள் செல்லுவதைக் காட்டிலும் சுலபமாய் இருந்ததென்று பேதுரு*

*கண்டறிந்தார்! இது நம்மீதும் - நமது ஜெப வாழ்வின் மீதும் - சம அளவில் ஒரு விளக்கவுரையாக உள்ளதா? நாம் உண்மையிலேயே என்ன ஜெபிக்கின்றோம் ... எதிர்பார்க்கின்றோம் ... நம்புகின்றோம்? கடைசியில் கதவு திறக்கப்பட்டது, பேதுருவே அங்கிருந்தார்! அவர்களுடையது அவிசுவாசத்தின் ஒரு தெளிவான நிகழ்வாக இருந்தது. நீங்கள் ஜெபிக்கும் போது, ஒரு நாளேட்டைப் பராமரிக்கின்றீர்களா? ஒவ்வொரு ஜெபமும் எப்போது, எங்கே, எப்படி பதில் அளிக்கப்பட்டது என்பதை எழுதி வைத்துக் கொள்கின்றீர்களா? நீங்கள் விசுவாசிக்கின்றீர்களா?*

## *பதில் அளிக்கப்பட்ட ஜெபத்தின் அபாயம்*

> *அப்பொழுது அவர்கள் [யூதர்கள்] கேட்டதை அவர்களுக்குக் கொடுத்தார், அவர்கள் ஆத்துமாக்களிலோ இளைப்பை அனுப்பினார் (சங். 106:15).*
>
> *கடவுள்கள் நம்மைத் தண்டிக்க விரும்பும்போது, நமது ஜெபங்களுக்கு அவர்கள் பதில் அளிக்கின்றார்கள் (ஆஸ்கர் வைல்டு).*
>
> *கடவுள்கள் ஒரு மனிதன் மீது கோபமாயிருக்கையில், அவன் விரும்புவதை அவனுக்கு அவர்கள் தருகின்றார்கள் (கிரேக்கர்கள்).*
>
> *... மனிதன் மிகவும் பலவீனமாயிருக்கின்றான்,*
> *அவன் மிகுந்த அறியாமையிலும் பார்வையற்ற நிலையிலும் இருக்கின்றான், தேவன் அவ்வாறு இருப்பதில்லை. நமது சொந்த வேண்டுகோள்களினால் நாம் அழிந்துபோகாதபடிக்கு, சிலவேளைகளில் அவர் இரக்கத்தினால் நாம் கேட்பதைத் தராதிருக்கின்றார்.*

*யாத்திராகமத்தில் யூதர்கள் தங்கள் அன்றாட உணவான மன்னாவைக் குறித்து முறுமுறுத்து முறையிட்டார்கள். தேவன் அவர்களுக்குக் காடைகளை அனுப்பினார் (எண். 11:31-33). சுவையான இறைச்சி அவர்களின் பற்களுக்கிடையில் இருந்தபோதே, தேவன் அவர்களைத் தண்டித்தார். இந்த வரலாறு அதிர்ச்சியூட்டுவதாக, பயமுறுத்துவதாக, தாழ்மைப்படுத்துவதாக உள்ளது. தேவன் நமது ஜெபங்களை நமது சொந்த அழிவுக்குப் பயன்படுத்தலாம். எண்ணாகமம் 11ல் எல்லா மக்களும் தோல்வியடைந்தார்கள். அவர்கள் யாவரும் "பரிதாபமான ஜெபத்தை" ஏறெடுத்தார்கள். (1) மக்கள் முறுமுறுத்தார்கள். "பாழாக்கப்பட்ட பிள்ளைகளை"ப் போல, அவர்கள் தேவனைத் தொல்லைப்படுத்தினார்கள். முறுமுறுத்தல் பற்றி எச்சரிக்கையாய் இருங்கள். தேவனுடைய பழிவாங்குதல் துரிதமானதாகவும் பயங்கரமானதாகவும் இருந்தது. (2) மோசே "தமது பரிதாபத்திற்குரிய குழுவில்" தேவனிடத்தில் அழுது புலம்பினார். அவரும்கூட தேவனைத் தொல்லைப்படுத்தினார். அவர் விட்டு விலகி விடுவதை முன்மொழிந்தார்;*

ஒரு பலவீனமான ஜெபத்தில் அவர் தம்மைக் கொன்றுபோடும்படி தேவனிடத்தில் கேட்டுக் கொண்டார். (3) விஷயங்களைப் பேசித் தீர்த்துக் கொள்ளும்படி எழுபது மூப்பர்கள் அழைக்கப்பட்டார்கள். (4) “நன்கு முதிர்ந்த யோசுவா” கூட, மற்றவர்கள் தீர்க்கதரிசனம் சொன்னபோது, மோசேயின் மீது பொறாமை கொண்டார். இது இஸ்ரவேலின் வரலாற்றில் ஒரு பயங்கரமான நாளாயிருந்தது. தேவன் அவர்களின் ஜெபங்களுக்குப் பதில் அளித்தார், பின்பு தண்டனையை நிறைவேற்றினார். மக்கள் விரும்பி யதைத் தேவன் அவர்களுக்கு கொடுத்தபோது, அது நேர்ப்பொருளில் அவர்களைக் கொன்று போட்டது!

*நீர் பதில் அளித்த ஜெபங்களுக்காக நன்றி*
*நீர் பதில் மறுத்த ஜெபங்களுக்காக நன்றி ...*
*என்னைப் பாதித்த புயல்களுக்காக நன்றி,*
*நீர் வழங்கிய யாவற்றிற்காகவும் நன்றி ...*
*வேதனைக்காக நன்றி மகிழ்ச்சிக்காக நன்றி ...*
*வசதிக்காக நன்றி வருத்தத்திற்காக நன்றி.*
*ஒருவரும் அளவிட முடியாத கிருபைக்காக நன்றி ...*
*ஒப்பிடுதலுக்கு அப்பாலான அன்பிற்காக நன்றி.*

தேவன் மிகவும் நல்லவராக இருக்கின்றார்! அவர் இஸ்ரவேலரிடத்தில் கிருபையுள்ளவராக, மோசேயிடத்தில் பொறுமையுள்ளவராக, எழுபது மூப்பர்களிடத்தில் ஞானமுள்ளவராக, யோசுவாவிடத்தில் இரக்கமுள்ள வராக இருந்தார்.

பதில் அளிக்கப்பட்ட ஜெபத்தின் இன்னொரு நிகழ்வு, எசேக்கியா அரசரை உள்ளடக்குகிறது (2 இரா. 20:14-37; 2 நாளா. 32:20-26; ஏசா. 38:1-8). ஒரு நிகழ்வானது வேதாகமத்தில் மூன்று முறைகள் காணப்படுதல் என்பது கவனத்தை ஈர்ப்பதாக உள்ளது. ஏசாயா (தேவன் சார்பாக) எசேக்கியாவிடம் அவர் மரிக்கப்போவதாகக் கூறினார். எசேக்கியா சுவர்ப்புறமாகத் தமது முகத்தைத் திருப்பிக் கொண்டு அழுது ஜெபித்தார். ஒருவேளை அவர் முற்றிலும் சுயநலமுள்ளவராய் இராதிருந்து இருக்கலாம் - அவரது பணி நிறைவேறாது இருந்தது, அவர் அதை முடிக்க விரும்பினார் என்பதாக இருக்கலாம். அவரது நோக்கங்கள் எதுவாயிருப்பினும், தேவன் அவரது ஜெபத்தைக் கேட்டார், அவரது கண்ணீரைக் கண்டார். தேவன், எசேக்கியாவுக்குப் பதினைந்து ஆண்டுகள் கூட்டித் தருவதென்ற வாக்குத் தத்தத்துடன் மற்றும் ஒரு அற்புதத்துடன் ஏசாயாவைத் திரும்பவும் அவரிடத்திற்கு அனுப்பினார். மோசே விரைவிலேயே மரித்துப் போன மனிதராயிருந்தார்; எசேக்கியா மிகவும் நீண்ட நாட்கள் வாழ்ந்த மனிதரா யிருந்தார். எசேக்கியாவை - தாழ்மையல்ல - பெருமையே ஆட்கொண்டது! “அவர் தேவனிடத்தில் பேசி வெற்றி கொண்டாரே!” இது ஜெபத்தின் இடமாக இருப்பது இல்லை. தேவன் ஜெபத்திற்குப் பதில் அளிப்பதைக் கவனித்தல் என்பது நமக்குப் போதித்து, நம்மைத் தொட வேண்டும்! அந்த கூடுதலான ஆண்டுகளில் எசேக்கியா நினைவுச் சின்னமான பல “பெருமைத் தவறுகளை” செய்திருந்தார். அவருக்கு மனாசே என்ற மகனும் இருந்தார்,

*இவரே அவருக்குப் பின் ஆட்சிப் பொறுப்பை ஏற்று, கீர்த்தியற்ற வகையில் ஆட்சி செய்தார். மனாசேயின் பாவங்களின் நிமித்தமாகத் தேவன், "இஸ்ரவேலை ஒரு பாத்திரத்தைப் போலத் துடைத்துப் போட்டார்." எசேக்கியா தேவனால் எந்த அளவுக்கு வளம் பெற்றாரோ அந்த அளவுக்கு அவர் பாவம் செய்தார் என்பதே இங்கு முரண்பாடாக உள்ளது.*

## *சாராம்சத்தின் காலவேளை*

*பதில் அளிக்கப்பட்ட இன்னொரு மனங்கவரும் ஜெபம் லூக்கா 1ல் உள்ளது. சகரியாவும் எலிசபெத்தும் நல்ல, ஜெபிக்கின்ற மக்களாக இருந்தார்கள். அவர்கள் ஒரு மகன் வேண்டும் என்று விரும்பினார்கள். பல ஆண்டுகளாக அவர்கள் ஜெபித்துக் கொண்டே இருந்தார்கள். அவர்களின் காலம் கடந்திருந்தாலும் அவர்கள் தொடர்ந்து ஜெபித்தார்கள். சகரியா (ஆசாரியர்களின் வாழ்வில் மாபெரும் சிலாக்கியமாகக் கருதப்படும்) ஆலயப் பணிவிடை செய்து கொண்டிருந்தபோது, காபிரியேல் என்ற தூதன் அவரிடத்தில் வந்தார். சகரியா உள்ளே தூபம் காட்டிக் கொண்டிருந்த வேளையில், குடும்பத்தாரும் நண்பர்களும் வெளியே ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தார்கள். சகரியாவின் ஜெபம் கேட்கப்பட்டிருந்தது என்றும் அதற்குப் பதில் அளிக்கப்படும் என்றும் காபிரியேல் அவரிடத்தில் கூறினார். அவர்கள் யோவான் என்ற ஒரு மகனைப் பெற வேண்டியிருந்தது. அந்த மகன் தேவனால் தனிச்சிறந்த வகையில் பயன்படுத்தப்படும் ஒரு மனிதனாயிருப்பார். [இதைக் கேட்டதும்] சகரியா துள்ளிக்குதித்து, சந்தோஷத்தில் சத்தமிட்டிருப்பார் என்றே ஒருவர் நினைப்பார். அவர் கைவிட்ட நிலையில் இருந்தார்! (1) அவர் தமது ஜெபத்திற்குத் தேவன் பதில் அளிப்பார் என்று [மனதின்] கீழ் ஆழத்தில் நம்பவில்லை. பல ஆண்டுகளாக அவரது ஜெபம் சந்தேகம் நிறைந்ததாக, சடங்காச்சாரமாகவே இருந்து வந்தது. (2) பல ஆண்டுகளுக்கு முன்பே தமது ஜெபம் பதில் அளிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று அவர் விரும்பினார்!*

*நாம் நமது பல ஜெபங்களுக்கு "கால வரையறையை" விதிக்கின்றோம். காலவேளை என்பதே எல்லாமுமாக உள்ளது. சகரியா, "நான் கிழவனாயிருக்கிறேன், என் மனைவியும் வயது சென்றவளாயிருக்கிறாளே" (லூக். 1:18ஆ) என்று நடுநிலையாகக் கூறினார். அவர் இன்னமும் தேவனிடத்தில் ஏமாற்றப்பட்ட உணர்வில் இருந்தார் - ஆம், தேவன் அவர்களின் ஜெபத்திற்கு மிகவும் தாமதமாகவே பதில் அளித்தார்! சகரியா பேசக் கூடாமல் ஊமையாக்கப்பட்டது ஏதோ தற்செயலாக நடந்த விபத்தல்ல! சகரியா தேவனைத் துதிக்கவும் அவருக்கு நன்றி செலுத்தவும் தவறினார். அவர், "இவன் பேர் யோவான்" என்று ஒரு எழுதுபலகையில் எழுதும் வரைக்கும் (லூக். 1:63ஆ) அவரால் பேச முடியாதிருந்தது. நினைவில் வையுங்கள்! தேவனுடைய தாமதங்கள் தேவனுடைய மறுப்புக்களாக இருப்பதில்லை!*

# தேவன் நமது ஜெபங்களைக் கேட்டு அவற்றிற்குப் பதில் அளிக்கின்றார்

*தேவன் உண்மையுள்ளவராய் இருக்கின்றார். ஒவ்வொரு கிறிஸ்தவரின் ஜெபமும் கேட்கப்பட்டு, பதில் அளிக்கப்படுகிறது. (1) "இல்லை! அதை உனக்குக் கொடுக்குமளவுக்கு நான் உன் மீது அதிகமாய் அன்புகூருகின்றேன்." (2) "இல்லை! இப்போது இல்லை, ஆனால் பின்னால் - நீ இதற்குத் தயாராக இருக்கும் வேளையில்." (3) "ஆம்! நீ ஒருபோதும் கேட்க மாட்டாய் என்று நான் நினைத்தேன்." (4) "ஆம்! மற்றும் இன்னும் அதிகமாகவே உள்ளது!"*

*ஆகையால், ஜெபம் என்பது அபாயமானதாக உள்ளது. நீங்கள் என்ன கேட்கின்றீர்கள் என்பது பற்றி எச்சரிக்கையாய் இருங்கள். கலக்கம் கொண்ட ஒரு பிரசங்கியார், தமது ஊழியத்தில் தேவன் விரைவாகச் செயல் பட வேண்டும் என்று கேட்டார். அடுத்த வாரத்தில் அந்தப் பிரசங்கியார் அவரது பணிப் பொறுப்பில் இருந்து தூக்கி எறியப்பட்டார்! அகுஸ்தீன் என்பவர், "தேவனே என்னைத் தூய்மையாக்கும், என்னைத் தூய்மை யாக்கும்" என்று கூறுவதுண்டு. அவர் இதில் இரகசியமாக, "இப்போதில்லை, கர்த்தாவே, இப்போதில்லை" என்று கூட்டிக் கொண்டிருந்தார். நீங்கள் ஜெபிக்கத் தொடங்கும்போது, நீங்கள் கேட்பதைப் பெறலாம். அசிசி நகரத்து ஃபிரான்சீஸ் என்பவர், தொழுநோயாளிகளுக்காக ஜெபித்தார்; விரைவிலேயே அவர் ஊழியத்தில் அவர்களின் மத்தியில் வாழ்ந்து கொண்டிருந்தார். நாம், "இராஜ்யத்தின் எல்லைகளை விரிவாக்கும்" என்று ஜெபிக்கின்றோம். இது நம்மை ஊழியக் களத்தில் கொண்டுபோய்ச் சேர்க்கிறது. "உமது ஊழியத்தினால் எங்களை தேய்ந்துபோகப் பண்ணும்" என்று ஜெபித்தலானது நம்மை ஆராதனை ஊழியங்களிலும் கதவைத் தட்டுதல்களிலும் கொண்டுபோய்ச் சேர்க்கும். ஜெபம் என்பது தப்பித்தல் அல்ல; அது ஒரு வெற்றிகொள்ளுதலாக உள்ளது.*

*தாழ்மைக்காக ஜெபித்தல் என்பது துன்புறுதலுக்காகக் கேட்குதல் என்பதாக உள்ளது. தேவன் தாழ்மையைக் கொடுக்க இயலாது, ஆனால் நாம் நம்மையே தாழ்த்தக் கூடிய ஒரு சூழ்நிலையில் அவர் நம்மை வைக்க முடியும். துன்ப காலங்களில்தான் நாம் தாழ்மையையும் பொறுமையையும் கற்றுக் கொள்ளுகின்றோம்.*

*"ஆண்டவரே, நான் ஜெபத்தில் நம்பிக்கை
கொள்ளுவதில்லை. நான் உம்மை நம்புகின்றேன்.
விசுவாசத்துடன் ஜெபிக்க எனக்குப் போதியும்."*

## 9

# ஜெபம்

## கொஞ்சம் ஜெபங்கள் அல்ல

*எல்லாருக்கும் ஜெபத்தில் நம்பிக்கை கொண்டுள்ளார்கள் ... எல்லாரும் ஜெபத்தை சந்தேகிக்கின்றார்கள் ... சிலர் ஜெபத்தை தாமாக ஏற்படும் ஆலோசனை என்பதாக மட்டும் காண்கின்றார்கள்; மற்றவர்கள் அதை ஒரு பலத்த அற்புதமாகக் காண்கின்றார்கள்; இன்னும் மற்றவர்கள் இவ்விரு முனைகளுக்கும் இடையில் இருக்கின்றார்கள். இன்றைய நாட்களில் மக்கள் ஜெபத்தைக் குறித்துச் சிலவற்றை நம்புகின்றார்கள். அவர்கள் அருவருப்பான உணர்வுப்பூர்வமானவற்றிலிருந்து குளிர்ந்த தர்க்கவியல் வரையிலும் ஏதேனும் ஒரு வகையான ஜெபத்தை நடைமுறைப்படுத்துகின்றார்கள். ஒரு பிரசங்கியார் - நோயாளிகளை சந்தித்தல் என்ற - தம்மிடத்தில் எதிர்பார்க்கப் பட்ட கடமையை ஒரு மருத்துவமனையில் செய்து கொண்டிருந்தார். இடர்ப்பாடுமிக்க அறுவைச் சிகிச்சையை எதிர்நோக்கிக் கொண்டிருந்த சபை உறுப்பினர் ஒருவர், "பிரசங்கியாரே, எனக்காகக் கொஞ்சம் ஜெபியுங் கள்" என்று அவரிடத்தில் கிசுகிசுத்தார். பிரசங்கியார், "இல்லை! நான் மாட்டேன்! கொஞ்சம் ஜெபங்கள் என்று ஒன்றுமில்லை!" என்று கூறிய போது குணமாகுதலில் அவரை அதிர்ச்சியடையச் செய்தார். ஆமென்! சமூகக் கூடுகைகளில் ஏறெடுக்கப்படுகிற மேலோட்டமான ஜெபங்கள் என்னைக் கவலையுறச் செய்கின்றன, ஆனால் அவைகள் ஒரு செயல் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும் - அவைகள் ஏறெடுக்கப்பட வேண்டும். நமது வாழ்வில் தேவன் அனுமதிக்கப்படவும் விரும்பப்படவும் வேண்டும். அறுவைச் சிகிச்சையை மேற்கொள்ள வேண்டிய மனிதரைக் குறித்து நாம் பரிதாபப்படுகின்றோம், ஆனால் அவர் இடர்ப்பாடுமிக்க இரு தவறுகளைச் செய்தார்: (1) அவர் தமது வியாதியின் தீவிரத்தன்மையை எதிர்கொள்ள முடியாதிருந்தார், (2) அவர் விசுவாசம் நிறைந்த ஜெபத்தில் தம்மைத் தேவனிடம் துறக்கக் கூடாதிருந்தார். ஜெபம் என்பது ஒரு அற்புதமாக இருப்பதில்லை. ஜெபம் என்பது மாயாவாதம் அல்ல. ஜெபம் என்பது மந்திர மருத்துவரின் அல்லது மதகுருவின் கருவியாக இருப்பதில்லை. ஜெபம் என்பது தொன்மையான மூட நம்பிக்கையாக இருப்பதில்லை.*

*ஜெபம் என்பது சிருஷ்டிப்பவராகிய, மீட்பராகிய, நியாயாதிபதியாகிய ... தேவனைத் தொழுது கொள்ளுகிறதாக உள்ளது! ஜெபம் என்பது ஒரு நல்லதிர்ஷ்ட மந்திரமாக, மதரீதியான முயலின் காலாகக் குறைக்கப்படக் கூடாது. நோயாளிகள் எதை விரும்புகின்றார்கள் என்று எனக்குத் தெரியும் - ஆயினும் அவர்கள் "கொஞ்சமே ஜெபம் என்பதற்காகக்" கேட்கும்போது, நான் பின்னடைகின்றேன். ஜெபம் என்பது ஒரு வாய்ச் சொல்லின்*

*விக்கிரகமாகக் குறைக்கப்படக் கூடாது. நாம் "ஓடிக்கொண்டே ஜெபித்தல்" அல்லது "வேண்டுகோளின்படி ஜெபித்தல்" என்பவற்றினால் ஜெபத்தின் புனிதத் தன்மையை அவமதிக்கக் கூடாது. வாழ்விலும் ஜெபத்திலும் அதிகமானவை ஆபத்துக்கு உட்படுத்தப்படுகின்றன. (நாம் தேவனுடன் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றோம்!) அலெக்சாந்திரியாவின் கிளமென்ட் அவர்கள், ஜெபத்தை, "தேவனுடன் தோழமை கொண்டிருத்தல்" என்று அழைத்தார். ''கொஞ்சம் ஜெபத்தை'' மனப்பாடமாக ஒப்புவித்துக் கொண்டிருக்காதீர்கள்; அதற்குப் பதிலாக, உடைந்துபோன இருதயத்தில் இருந்து வேண்டுதல்களை ஜீவனுள்ள தேவனிடத்தில் சமர்ப்பியுங்கள். நாம் ஒருவர் மற்றவருக்காக ஜெபிக்க வேண்டி உள்ளது (யாக். 5); ஆயினும், "கொஞ்சம் ஜெபம் செய்யுங்கள்" என்று வேண்டுகோள் விடுத்தலானது பல வேளைகளில் பிரசங்கியார்களுக்கு மட்டுமே ஒதுக்கி வைக்கப்படுவதாக உள்ளது! ஆம், மருத்துவமனையில் (நோயாளிகள் என்னிடத்தில் "கொஞ்சம் ஜெபத்திற்காகக்" கேட்கும்போது கூட) ஜெபிக்கின்றேன். ஆம், (அவர்கள் கேட்காத போதுகூட) நான் ஜெபிக்கின்றேன். ஜெபம் என்பது அன்பு என்பதாக உள்ளது. மருத்துவமனை என்பது போதித்தலுக்கும் கடிந்து கொள்ளுதலுக்குமான இடமில்லை. நோயாளிகளுக்கான ஜெபம் என்பது பிரசங்கியார்களுக்கு மட்டுமானதாயிருப்பதில்லை என்பதற்காகத் தேவனுக்கு நன்றி. இது ஒரு இரகசியச் சொல்லுடன் ஒரு விசேஷித்த மனிதருக்குரியதாக இருப்பதில்லை. எல்லா சகோதரர்களும் எல்லா சகோதரர்களுக்காகவும் ஜெபிக்க முடியும். "பிரசங்கியாரை" அல்ல ஆனால் ''மூப்பர்களை'' அழைக்கும்படியாகவே யாக்கோபு கூறினார். தேவன் நோயாளிகள் மீது அக்கறை உள்ளவராக இருக்கின்றார். ஆயினும், நமது உச்சநிலை அனுபவங்களோ அல்லது ஜெபம் செயல்பட்ட நிகழ்வுகளோ நமது கிறிஸ்தவத்தின் நிரூபணமாக இருப்பதில்லை என்பதை நாம் எப்போதும் நமக்கு நினைவூட்ட வேண்டும். தேவன் கட்டளையிடக் கூடியவராக இருக்கின்றார். சில வேளைகளில் நாம் ஜெபிக்கின்றோம், மக்கள் குணமாகின்றார்கள். மற்ற வேளைகளில் நாம் ஜெபிக்கின்றோம், மக்கள் இறக்கின்றார்கள். ஜெபம் விளக்கங்கள் எதையும் அளிப்பதில்லை. மருத்துவமனை சந்திப்புகளில் பின்பற்றப்பட வேண்டிய எளிய விதிகள் இரண்டு உள்ளன: (1) அங்கு செல்லுங்கள், மற்றும் (2) வாயை மூடியிருங்கள். நீங்கள் அங்கிருக்கின்றீர்கள், ஆனால் தேவனும் அங்கிருக்கின்றார். களிகூருங்கள்!*

*தேவன் பிரசன்னமாகியிருப்பதால், கேளுங்கள், தேடுங்கள், தட்டுங்கள்! நம்மில் பலர் மருத்துவமனைகளில் மருந்துகளின்மீது கவனம் செலுத்துகின்றோம். வியாதியானது மருந்துகளுடன் முடிவடைவதாக இருக்கலாம், ஆயினும் தேவனுடன் அல்ல! மருத்துவர்கள் தேவனாக இருப்பதில்லை. மருத்துவர்கள் சிகிச்சை அளிக்கின்றார்கள், ஆனால் தேவனே குணமாக்குகின்றார். நம்மில் பலர், குடும்பமானது மோசமானவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று ஜெபிக்கின்றோம். நோயாளி குணமடைய வேண்டும் என்று ஜெபியுங்கள் - பின்பு அவரது குடும்பத்திற்காக ஜெபியுங்கள். அந்தக் குடும்பத்தார் பலவீனமாக, வழிவிலகிப்*

போனவர்களாக இருந்தாலும் அவர்களுக்குப் பிரசங்கம் செய்து கொண்டிருக்கா தீர்கள். ஜெபம் என்பது ஒரு "கொடுமைப்படுத்தும் பிரசங்க மேடையாக" இருப்பதில்லை. நோயாளிக்காக தேவனிடம் ஜெபியுங்கள்! பின்பு, தாவீதைப் போல, மரணம் வந்தால் தேவசித்தத்தை ஏற்றுக் கொள்ளுங்கள்! நாம் ஏன் ஜெபிக்கின்றோம்? ஏனென்றால் தேவன் ஜெபத்திற்குப் பதில் அளிக்கின்றார்! ஜெபம் என்பது பாதி இருதயத்துடன் தேடுகின்றவர்களுக்கானது அல்ல. ஜெபம் என்பது தேவன் மீதுள்ள விசுவாசத்திலிருந்து வருகிறது.

பலவீனம் இல்லாத இடத்தில் தேவனுடைய வல்லமைக்கு இடமில்லை. ஒரு சிறு குழந்தை ஒரு மோசமான படத்தை வரைய முடியாது. குழந்தை யின் முயற்சிக்காக நாம் அதைப் புகழுகின்றோம். விசுவாசம் உள்ள எந்த ஒரு கிறிஸ்தவரும், பயபக்தியில் ஒரு மோசமான ஜெபத்தை ஏறெடுக்க இயலாது! ஜெபியுங்கள்! அறியாமையிலிருந்து, விக்கிரகாராதனையிலிருந்து, மற்றும் சுயநலத்திலிருந்து கூட ஜெபியுங்கள். மிகவும் மோசமான சூழ்நிலைகளில் இருந்துகூட ஜெபியுங்கள். ஏன்? ஏனென்றால், கொஞ்சம் ஜெபங்கள் என்று எதுவும் இருப்பதில்லை! முழந்தாள்படியிட்டு ஜெபியுங் கள் ... அதற்குச் சமமாக, தேவனுடைய மகிமையை எதிர்பார்த்து உங்கள் குதிக்கால்களின் முனைகளில் இருந்தும் ஜெபியுங்கள்!

# கர்த்தருடைய ஜெபம்

## மத்தேயு 6:9-13

> *" 'பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய ராஜ்யம் வருவதாக உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக. எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும். எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குட்படப் பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும், ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே, ஆமென்' " (மத். 6:9-13; லூக். 11:2-4 ஐயும் காணவும்).*

*இந்தப் பாடங்களை எழுதுதல் என்பது எனது ஊழியத்தில் மிகவும் தாழ்மையான அனுபவமாக இருந்துள்ளது. ஜெபம் என்பது தேவன்மீது பயபக்தியும் அவருக்குக் கீழ்ப்படிதலுமாய் உள்ளது. நான் தேவனுடன் பேச முடியும்! நான் தேவன் பேசுவதைக் கவனிக்க முடியும்! தேவன் என் அன்றாட வாழ்வில் செயல்படுகின்றார்! நாம் இப்போது "கர்த்தருடைய ஜெபத்திற்கு" வந்துள்ளோம். எனது பேனா நடுங்குகிறது - இது பரிசுத்த பூமியாக உள்ளது. சிலர் இதனால் சங்கடப்படுகின்றார்கள் - ஏன் அவர்கள் சங்கடப்பட வேண்டும்? இதைக் கிறிஸ்துவே எழுதினார்; இது பேதுருவுக்கோ, பவுலுக்கோ உரியதாக இராமல் கிறிஸ்துவுக்கே உரியதாக இருக்கிறது. ஒரு எழுத்தாளர் தாம் எழுதிய ஒரு புத்தகத்தை உருவாக்க தாம் எழுதியதை வாசிக்கத் தேவையில்லை - அவரே இதை எழுதினார். இதைப் பாடுபவர்களைச் சிலர் கண்டனம் செய்கின்றார்கள். இது பெரிய பிரச்சனைகளைத் தூண்டிவிடுகிறது - ஒரு வேத வசனத்தைப் பாடுவது தவறா?*

*சீஷர்கள், ''ஜெபம் பண்ண எங்களுக்குக் கற்றுத் தாரும்'' என்று வேண்டுகோள் விடுத்தார்கள். இயேசு கற்றுத் தந்தார். அவர்களுக்கு அவர் ஒரு ஜெபத்தைக் கொடுத்தார். அவர்களுக்கு அவர் ஒரு தொழில் நுட்பத்தையோ, ஒரு சூத்திரத்தையோ, ஒரு ஜெபநூலையோ, ஒரு மந்திர உச்சாடனத்தையோ, ஒரு குறிப்பையோ தரவில்லை - அவர்களுக்கு அவர் ஒரு ஜெபத்தைத் தந்தார். இந்தச் சிறிய, எளிய ஜெபமானது, ஜெபத்தின் எல்லாக் கொள்கைகளையும் தனக்குள் கொண்டுள்ள ஒரு ஜெபமாக உள்ளது. இது, நாம் எவ்வாறு ஜெபிக்க வேண்டும் என்று இயேசு நமக்குக் கூறுகின்ற ஜெபமாக உள்ளது. லூக்கா, "நீங்கள் ஜெபம்பண்ணும்போது" என்று வெளிப்படுத்துகின்றார். இந்த ஜெபத்தை மனப்பாடம் செய்தல்*

*என்பது வேத வசனரீதியானதாகவே உள்ளது. இந்த ஜெபத்தைச் சொல்வது வேத வசனரீதியானதாகவே உள்ளது. இந்த ஜெபத்தைப் போதிப்பது[ம்] வேதவசன ரீதியானதாகவே உள்ளது (இயேசு இதைப் போதித்தார்). இந்த முன்மாதிரியானது எல்லா ஜெபங்களையும் தனக்குள் கொண்டுள்ளது. இது அடிப்படையானதாக, பொதுவானதாக உள்ளது. இது தொட்டில் முதல் கல்லறை வரையிலும் ஏற்புடையதாக உள்ளது. இதை நாம் "தாண்டிச் செல்ல" வேண்டுமா? இப்படிச் செய்வது அறிவுக்கு ஏற்புடையதாயிராது!*

*எல்லையற்ற ஒரு பாடப் பொருளானது (ஜெபம்) இங்கு ஒரு சில எளிய வார்த்தைகளுக்குள் குறுக்கப்பட்டுள்ளது. வேதாகமத்தில், சங்கீதம் 23க்கு அடுத்ததாக, இதுவே மிகவும் நன்கு அறியப்பட்டதாக, மிகவும் பயன் படுத்தப்படுவதாக உள்ளது. இதன் தைரியம் அதிர்ச்சியூட்டுகிறது. நீண்ட ஜெபங்கள் (நீண்ட பிரசங்கங்கள் அல்ல) என்பவை வேத வசனங்களில் கண்டனம் செய்யப்பட்டுள்ளன. சபையில் நீண்ட ஜெபம் செய்யும் ஒரு சகோதரரைப் பற்றி ஒரு மனிதர், "இவர் இல்லத்தில் தமது தனியறையில் இருந்து போதிய அளவு ஜெபிப்பதில்லை'' என்று கணித்துள்ளார். கர்த்தருடைய ஜெபத்தை ஒரு நிமிடத்திற்கும் குறைவான நேரத்திலேயே கூறி விட முடியும், ஆனால் இது பொருட் செறிவுடையதாக உள்ளது:*

*(1) இதன் முதல் பிரிவு (அன்றாட உணவு), சரீரத் தேவைகளை எடுத்துரைக்கிறது.*

*(2) இதன் இரண்டாம் பிரிவு (மன்னித்தல்), உறவுரீதியான தேவைகளுக்கு உரியதாகிறது.*

*(3) இதன் மூன்றாம் பிரிவு (சோதனை) ஆவிக்குரிய தேவைகளுக்கு உரியதாகிறது.*

*ஆழமான ஜெபம் எளிதானதாக, சிக்கலற்றதாகவே உள்ளது. வேதாகமத்தின் மாபெரும் நபர்களின் ஜெபங்கள், உண்மையில், விரிவான சொல்லாடலின் தேவையை மறுக்கிற எளிமைத்தன்மை கொண்டுள்ளன.*

*உங்கள் ஜெபங்கள் எவ்வளவு நீளமாயுள்ளன என்ற*
*அவற்றின் நீளத்தன்மையல்ல,*
*உங்கள் ஜெபங்கள் எத்தனையாக உள்ளன என்ற*
*அவற்றின் எண்ணிக்கையல்ல,*
*உங்கள் ஜெபங்கள் எவ்வளவு கேட்க இனிமை வாய்ந்தவை என்ற*
*அவற்றின் வார்த்தைகள் அல்ல,*
*உங்கள் ஜெபங்கள் எத்தனை பேரை மகிழ்வூட்டின என்ற*
*அவற்றின் சொல்திறமை அல்ல,*
*உங்கள் ஜெபங்கள் எவ்வளவு உயர்வாய் ஒலிக்கின்றன என்ற*
*அவற்றின் உயரத்தன்மை அல்ல,*
*உங்கள் ஜெபங்கள் எவ்வளவாய்ப் பரவுகின்றன என்ற*
*அவற்றின் அகலத்தன்மை அல்ல,*
*ஆனால் தேவனுடன் சரியாக உள்ள ஒரு இருதயத்திலிருந்து வருகிற*
*உங்கள் ஜெபமே வல்லமையுள்ளதாக இருக்கிறது!*

*மாதிரி ஜெபம் பூரணப்பட்டதாக உள்ளது - இது எல்லா அம்சங்களிலும் முழுமையானதாக உள்ளது. இது எளிமையானதாக, குறுகியதாக இருப்*

*பினும், இத்துடன் எதையும் கூட்ட முடியாது. இது, துதி, நன்றி, நம்பிக்கை, வேண்டுகோள், மன்னிப்பு, வழிநடத்துதல் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. இது மேற்கோள் காண்பிக்க வேண்டிய ஜெபநூல் அல்ல, ஆனால் பின்பற்றப்பட வேண்டிய மாதிரியாக உள்ளது. இதனுடன் நன்கு பழகிக் கொள்ளுங்கள்.*

## *"பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே"*

*மேலே ஒரு தேவன் இருக்கின்றாரா?*
*அவர் அறிகின்றாரா? அக்கறைகொள்கின்றாரா? செயல்படுகின்றாரா?*
*அவர் என்னைப் பற்றி அறிந்து என் மீது அக்கறை கொள்கின்றாரா?*

*இதுவே மனிதனின் நிலையான நிலைப்பாடாக உள்ளது. இதனால் தான் மனிதன் ஜெபத்தின் மீது பெருவிருப்பம் கொள்கின்றான். இந்தக் கேள்விகள் யாவற்றிற்கும் "ஆம்!" என்று இயேசு பதில் அளிக்கின்றார். நமது மதிப்பு நிலைநாட்டப்படுகிற அதே வேளையில், திறமை வாய்ந்த ஒரு வாக்கியத்தில் நமது தாழ்மை உறுதிப்படுத்தப்படுகிறது.*

*''பிதாவே!'' உலகமானது தேவனை ஒரு பிதாவாக ஒருபோதும் கண்டிருந்ததில்லை. யூதர்கள் கூட, யூத நாடு முழுவதற்கும் தேவனுடைய பிதாத்துவம் நடைமுறைப்படுத்தப்பட்டதாக மட்டுமே கண்டிருந்தார்கள். தனிப்பட்ட வகையில் "தேவன் - பிதா"வாக உள்ளார் என்ற கருத்தானது ஒருபோதும் சிந்திக்கப்பட்டிருந்ததில்லை. தேவனை ஒரு பிதாவாக இயேசு வெளிப்படுத்தினார் (மத். 7:11, 12; லூக். 11:11-13). இயேசுவை தேவன் சிலுவையில் பாவமாக்கிய ஒரே ஒரு வேளையில்தான் இயேசு தேவனை "தேவனே" என்று அழைத்தார். புதிய ஏற்பாட்டில் தேவன் குறைந்தது 360 முறைகள் "பிதா" என்று அழைக்கப்பட்டுள்ளார். தேவன் நபர்த்துவமற்ற நியாயாதிபதியாக இருப்பதில்லை, ஆனால் அவர் ஒரு அன்பார்ந்த பிதாவாக இருக்கின்றார். ஓ, ஒரு நல்ல தந்தை பற்றிய விலைமதிப்பு வாய்ந்த நினைவுகள்! மார்ட்டின் லூத்தர் ஒரு அற்பமான தந்தையைப் பெற்றிருந்த படியால், தேவனை ஒரு தந்தையாக [பிதாவாக] அரவணைத்துக் கொள்ள முடியாதவராயிருந்தார். தேவனே மாபெரும் ஆசீர்வாதமாக உள்ளார். ஒருவரை விரும்பாமல் அவர் கொடுப்பதை மட்டும் விரும்புதல் என்பது நட்புறவுக்கு ஒரு அவமதிப்பாக உள்ளது. கலகம் செய்த ஊதாரி [மகன்] தனது தந்தையின் பணத்தை விரும்பினான், ஆனால் தனது தந்தையை அவன் விரும்பவில்லை. மனம் வருந்திய ஊதாரி மகன் தனது தந்தையை மட்டுமே விரும்பினான். பரலோகமே தேவனாக உள்ளது! தேவன் நமது பிதாவாக உள்ளார்! இது அன்பிற்கு அன்பு பதில் கூறுவதாக உள்ளது. ஆராதனையின் பொருளாக உள்ள தேவனே அந்த ஆராதனையின் ஏவுதலா கவும் ஆகின்றார். அவரைக் காண்பது என்பது அவர்மீது அன்புகூருதலாக உள்ளது. அவர்மீது அன்புகூருதல் என்பது அவரை ஆராதித்தலாக உள்ளது.*

*“அப்பா!” இயேசு இன்னும் முன் சென்றார். அவர் தந்தை என்பதற் குரிய அரமாயிக் வார்த்தையான “Abba” என்பதைப் பயன்படுத்தினார். யூதக் குழந்தைகளால் முதலில் கற்றுக் கொள்ளப்பட்ட வார்த்தைகள் “*Abba*” மற்றும் “*Imma*” - “அப்பா” மற்றும் “அம்மா” என்பவைகளாகவே இருந்தன. தேவனுடன் இயேசு கொண்டிருந்த மிக நெருக்கமான உறவு நம்மை அதிர்ச்சியடையச் செய்கிறது! அது அதிகம் ஆழ்ந்தறிவுள்ளதாக, ஆயினும் அதிகம் தனிப்பட்ட முறையில் சொந்தமானதாக இருந்தது! மத ஜெபங்கள் யாவற்றிலும், “*Abba*” என்பதன் பயன்பாட்டிற்கு இணையானது வேறு எதுவுமே இல்லை. இது தேவனுடன் இயேசுவுக்கிருந்த தனிச்சிறந்த உறவை விளக்கப்படுத்துகிறது, இவர் தேவனுடைய தனிச்சிறந்த மகனாக இருந்தார். இயக்கம் கொண்ட இதே உறவு நம்முடனும் பகிர்ந்து கொள்ளப்பட வேண்டியதாயிருந்தது என்பதை இயேசு தெளிவாக்கினார் (கலா. 4:6ஐக் காணவும்). ஜெபத்தில் தேவன் தாமே மாபெரும் கொடையாக இருக்கின்றார்!*

*“எங்கள் பிதாவே.” இயேசு இந்த உலகிற்கு தேவனைப் பற்றிய ஒரு தனிச் சிறந்த கண்ணோட்டத்தை - அதாவது அவர் ஒரு அன்பார்ந்த பிதாவாய் இருக்கின்றார் என்ற கண்ணோட்டத்தை - கொடுக்கின்றார். இது புறதெய்வ வணக்கம் கொண்டிருந்த உலகத்தை மட்டுமின்றி, யூத நாட்டவரையும் திகைப்புக்கு உள்ளாக்கிற்று. யூதர்கள் தேவனை “தங்கள் பிதா” என்றுதான் கருதினார்களே தவிர, “எங்கள் [நமது] பிதா” என்று கருதவில்லை. சில வழிமுறைகளில் யூதர்கள், இயேசு தாம் “தேவனுடைய குமாரன்” என்று உரிமைகோரிய காரணத்திற்காக அவரைச் சிலுவையில் அறையவில்லை. கிறிஸ்துவின் காலத்தில் யூதர்கள் “மேசியாவுக்காக” ஏங்கிக் கொண்டிருந்தார்கள். அந்த நாட்களில் “கள்ள கிறிஸ்துகள்” அதிகமாக இருந்தார்கள். இந்த “மேசியா” தேவனாயிருப்பவராக, தேவனிடமிருந்து வந்தவராக இருக்க வேண்டியிருந்தது. நேர்ப்பொருளில், இயேசு “மனித குமாரனாக” இருந்த காரணத்தினாலேயே யூதர்கள் அவரைச் சிலுவையில் அறைந்தார்கள். அவரது உலகளாவிய தத்துவம் அவர்களின் குறுகிய தன்மையை அழித்துப்போட்டது. அவர் யூதர்களுக்காக மட்டுமின்றி, எல்லாருக்காகவும் வாழ்ந்தார், மரித்தார். அவர் புறவினத்தாருக்காகவும் [புறஜாதியாருக்காகவும்] மரித்தார்! பெருமையுள்ள யூதர்களால் இந்த சத்தியத்தை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஒவ்வொரு நபரையும் குறித்த விலைமதிப்பற்ற மதிப்பே கர்த்தருடைய ஜெபத்தின் மையமான, முக்கியத்துவம் வாய்ந்த கருத்தாக உள்ளது, ஆயினும் அந்த ஜெபத்தில் “நான்” “எனது” என்ற தன்மைப் பெயர்ச் சொற்கள் பயன்படுத்தப்பட வில்லை. “எங்கள் பிதாவே” என்பது முழு ஜெபத்திற்கும் தொனியை அமைக்கிறது. ஆராதிக்கப்படுபவருடன் ஒரு விசுவாசி கொண்டுள்ள உறவையே இயேசு முதலாவது போதித்தார் என்பது காண்பதற்கு மிகவும் முக்கியமானதாக இருக்கிறது. இயேசு, “ ‘எங்கள் பிதாவே’ என்று சொல்லுங்கள்” என்றார். தேவனுடைய பிதாத்துவம் மனிதனின் சகோதரத்துவத்தை அவசியப்படுத்துகிறது. லூக்கா 15ல் மூத்த குமாரன், தனது சகோதரனை வெறுக்கையில் தனது தந்தைமீது அன்புகூர முடியாது என்பதைக்*

*கற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. தேவனை மகிமைப்படுத்துங்கள்! தேவனுடைய பயபக்திக்குரிய நாமத்தை, சர்வ வல்ல தேவனுடைய முற்றான இராஜரீகத்தை மகிமைப்படுத்துங்கள்!*

## “உம்முடைய இராஜ்யம் வருவதாக. உம்முடைய சித்தம் செய்யப்படுவதாக”

*ஜெபம் என்பது தேவனுடைய தோழமையைக் காத்துக் கொள்வதாக உள்ளது. இது - வெறும் ஒழுங்கு படுத்துதலாக மட்டுமின்றி - ஒரு நட்புறவாக உள்ளது. இது ஒரு செயல் நிறைவேற்றமாக இன்றி - ஒரு உறவுமுறையாக உள்ளது. இன்றைய நாட்களில் தேவனுடைய இராஜ்யத் தைக் குறித்துப் பல தவறுகள் செய்யப்படுகின்றன: (1) சில மக்கள் இதைப் புறம்பாக்கி விட்டார்கள். இது கண்டுகொள்ளப்படாமல் இருப்பது மட்டுமின்றி - இது அடைத்துப் போடப்படுகிறது. ‘‘இராஜ்யம்’’ என்பது உபயோகமற்ற பொருட்களின் களத்திற்கு அனுப்பப்பட்ட இன்னொரு வேதாகம வார்த்தையாக உள்ளது; மனவியல் உள்ளே வந்துள்ளது; இறையியல் வெளியேற்றப்பட்டுள்ளது. இராஜ்யம்? அதை மறந்து விடுங்கள்! (2) மற்றவர்கள் இதை நிறுவனமயமாக்குவார்கள். இராஜ்யம் என்பது தேவனு டைய ஆளுகையாக, அரியணையாக, நமது வாழ்வில் அவர் கொண்டுள்ள அதிகாரத்துவமாக உள்ளது. இது கிறிஸ்துவின் சபையாக வாழப்படுகிறது.*

*“தேவனிடம் கூறுவதற்கு என்னிடம் சில விஷயங்கள் உள்ளன” என்று நாம் ஜெபத்தில் வழக்கமாக நினைக்கின்றோம். இயேசுவோ, “உங்களிடம் கூறுவதற்குத் தேவனிடம் சில விஷயங்கள் உள்ளன” என்று கணித்துள்ளார். ஜெபம் என்பது தேவனிடத்தில் நமது விருப்பங்களை ஆசீர்வதிக்கும்படி கேட்பதை விட மேலானதாக உள்ளது - இது அவருடைய சித்தத்திற்கு நமது கடமையை செய்தலாக உள்ளது! “உமது சித்தம் மாற்றப்படுவதாக” என்றல்ல ஆனால் ‘‘உமது சித்தம் செய்யப்படுவதாக’’ என்று ஜெபிக்கவே நாம் கற்றுக்கொள்ள வேண்டும். ஜெபம் என்பது சுயத்தையல்ல, தேவனைப் பிரியப்படுத்துவதையே நோக்கமாகக் கொண்டுள்ளது. ‘‘உமது சித்தம் செய்யப்படுவதாக” என்பது சுயத்திலிருந்து வரும் எனது சொந்த வாழ்வின் சட்டத்தைத் தேவனுக்கென்று துறந்து விடுகிறது. இது அர்ப்பணித்தலின், மறுத்தலின், மரணத்தின், துறத்தலின், மற்றும் ஒப்புவித்தலின் ஜெபமாக உள்ளது. ‘‘உம்முடைய சித்தம் செய்யப்படுவதாக’’ என்று கூறுதலே, “பிதாவே, நான் பரலோகத்தின் கண்கள் மூலம் பூமியைக் கண்ணோக்க அனு மதியும்” என்று வேண்டுகோள் விடுத்தல் என்பதே உண்மையான ஜெபத்தின் நேர்ப்பொருளான இலக்காக உள்ளது. ஜெபம் என்பது சுயத்தை அர்ப்பணித்தலாக உள்ளது. ஜெபம் என்பது சீஷத்துவத்தின் சுவாசமாக உள்ளது. நாம் ஜெபத்தில் தேவனைச் சந்திக்காவிட்டால், நாம் அவரைச் சந்திக்கவே மாட்டோம். நான் தேவனைப் பிரியப்படுத்துகின்ற பிள்ளை யாக இருக்கவே விரும்புகின்றேன்! “உம்முடைய சித்தம் செய்யப் படுவதாக.” “தேவனுடைய இராஜ்யம் வருகின்றபோது” தான் அவருடைய சித்தம் செய்யப்பட முடியும்! ஜெபம் என்பது “தேவனுடைய உதவியுடன் என்னு*

*டைய சித்தம் செய்யப்படுவதாக'' என்பதாயிராமல், ''என்னுடைய உதவியுடன் உம்முடைய சித்தம் செய்யப்படுவதாக" என்பதாகவே உள்ளது. இராஜ்யத்தினுள் இருத்தல் என்பது தேவனை இராஜாவாக்கு வதாக உள்ளது! கிறிஸ்து - தேவனுடைய சித்தத்தைச் செய்தல் என்ற - ஒரு வழிச் சிந்தையுள்ளவராக மட்டுமே இருந்தார். மதம் என்பது நீங்கள் செல்லும் வழியில் செல்லும்போது மட்டுமே நீங்கள் ஏறக்கூடிய ஒரு பேருந்து போன்றது அல்ல. ஜான் வெஸ்லி என்பவர், "தேவனுடைய முழுமையான சித்தத்தைச் செய்வதற்கான நிலைத்த தீர்மானத்துடன் அதை அறிதலுக்கான விருப்பமே நமது தேவையாக உள்ளது'' என்று கூறினார். ஒரு கவிஞர் செய்தது போல பின்வருமாறு நாம் ஜெபிப்பது அவசியமாக உள்ளது: "... என்னைப் பற்றிய எதையும் என்னுள் விடாதேயும்.'' இரு உண்மைகள் நினைவில் வைக்கப்பட வேண்டும்: (1) நாம் தேவனைக் கவனித்தால் அவர் கூறுவதைக் கேட்க முடியும், (2) கிறிஸ்தவர்கள் தேவனுடைய சித்தத்தினுள் இருக்கும்போது எந்த விஷயத்தையும் கையாள முடியும்.*

## "எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்"

*மதம் என்பது சிலருக்கு வினோதமானவற்றைச் செய்கிறது. "மேன்மை யான மதவியலாளர்கள்,'' பூமிக்குரிய தேவைகள் நித்தியமான விஷயங் களுடன் பிணைக்கப்பட்டிருப்பதைக் கண்டு அதிர்ச்சியடைகின்றார்கள். மிக ஏராளமானவர்கள், "பூமிக்குரிய விஷயங்களில் பயனற்றவர்களாய் இருக்குமளவுக்கு மிகவும் பரலோக சிந்தையுள்ளவர்களாய்" இருக்கின்றார் கள். நம்மை அக்கறை கொள்ளச் செய்யாத எதுவும் பிதாவையும் அக்கறை கொள்ளச் செய்வதில்லை. இந்த மாபெரும் ஜெபத்தின் மையப்பகுதியில் இயேசு தேவனுடைய சித்தத்தில் இருந்து திடீரென்று பூமிக்குரிய ஆகாரத் திற்கு மாறினார். என்ன ஒரு இரட்சகர்! என்ன ஒரு ஜெபம்! தேவனைப் பொறுத்தமட்டில் எதுவும் சாதாரணமானது அல்ல.*

*இங்கு குறிப்பிடப்பட்ட உணவு "அன்றாடமானதாக" உள்ளது. இயேசு ''நாளைய உணவிற்காக'' ஜெபிக்கவில்லை. இது உணவுதானே தவிர, உயர்வகை உணவாக இருக்கவில்லை. மன்னாவானது ஒரு நாளைக்கு ஒரு வேளை மட்டுமே சேகரிக்கப்பட வேண்டியதாக இருந்தது. தேவன் நமக்கு அன்றாட உணவை அளிக்கின்றார். இதுவே நமது விசுவாசமாக உள்ளது.*

*இது உணர்ந்தறிய மிகவும் கடினமானதாக உள்ளது. இன்றைய நாட்களில் உலகின் பல பகுதிகளில் உள்ளது போலவே, இயேசுவின் காலத் திலும் ஒவ்வொரு நாளும் உயிர் பிழைக்கப் போராட வேண்டி இருந்தது. வளமை என்பது நம்மை வஞ்சிக்கிறது. வளமானவர்கள் ஏராளமாய் வைத்துள்ளார்கள் - ஒரு வேளை மிக அதிகமாகவும் வைத்திருக்கின்றார்கள். அவர்கள் செல்வந்தர்களாக, ஒன்றும் தேவையற்றவர்களாக இருக்கின்றார் கள் - ஆயினும் தேவனுக்குள் மட்டுமே நாம் பிழைக்கின்றோம், இருக்கின் றோம் (அப். 17:28). மனிதனுக்கு அன்றாட உணவு தேவை, மற்றும் மனிதனு க்குத் தேவன் தேவை.*

## “எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்”

இயேசு எவ்வளவு ஞானமுள்ளவராக இருந்தார்! எவ்வளவு நடைமுறைக்கு உரியவராக இருந்தார்! “மன்னிப்பதா அல்லது மன்னியாமலிருப்பதா என்பதே கேள்வியாக உள்ளது.” அன்றாட உணவு தேவைப்படுகின்ற ஒவ்வொருவருக்கும் அன்றாட மன்னித்தல் தேவைப்படுகிறது. நாம் ஒரு நாளில் ஒவ்வொரு வேளையும் உணவு உண்ணுகின்றோம். நாம் ஒரு நாளில் ஒவ்வொரு வேளையிலேயே இரட்சிக்கப்படுகின்றோம். நாம் மன்னிப்பவர்களாய் இருப்பதற்கு, நாம் மன்னிக்கப்பட்டிருப்பது அவசியம். நாம் மன்னிக்கப்படுவதற்கு, மன்னிப்பவர்களாய் இருப்பது அவசியம். நாம் எதை ஜெபிக்கின்றோமோ அதை நடைமுறைப்படுத்துகின்றவர்களாய் இருக்க வேண்டும். மன்னித்தலின் இரகசியம் என்ன? நாம் தேவன் நம்மை மன்னித்துள்ளார் என்பதைக் காண வேண்டும்! நாம் யாவரும் கடந்து செல்ல வேண்டிய பாலத்தை நாமே அழித்து விடக் கூடாது. இந்த ஜெபத்தில் இயேசு மன்னித்தலை வலியுறுத்தினார். எனக்கு தேவனுடைய மன்னிப்பு தேவைப்படுகிறது! நான் உங்களை மன்னிக்க வேண்டும்! இதுவே வாழ்வின் முக்கியமான கூறாக உள்ளது. மனந்திரும்புதல், அறிக்கையிடுதல், உதவியற்றிருத்தல் என்பவை மிகவும் கடினமானவைகளாக உள்ளன. ஒரு வேளை, “எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல” என்பதே மிகவும் கடினமான சொற்றொடராக இருக்கலாம்.

நாம் தேவனுடைய மன்னிப்பை ஏற்றுக்கொள்ள முடியுமா? நாம் பிறரை மன்னிக்க முடியுமா? சோதனைகள் ஏராளமாக உள்ளன! வாழ்வு என்பது அபாயமானதாக உள்ளது. சாத்தான் உயிருள்ளவனாக இந்த பூமியில் நன்கு வாழ்கின்றான்! இயேசு உள்ளடக்கிய எல்லா வேண்டுகோள்களுமே தேவையை ஒப்புக்கொள்ளுகின்றவைகளாக உள்ளன. நாம் உதவியற்றவர்களாக, இழந்துபோகப்பட்டவர்களாக இருக்கின்றோம். நமக்குத் தேவன் தேவை. நமக்கு உதவி தேவை. தேவனுடைய வழிநடத்துதலே நமது பாதுகாப்பாக உள்ளது. நாம் அதிகமாகச் சோதிக்கப்படுவதை அவர் தடுப்பது மட்டுமின்றி, நமக்குத் தப்பிக் கொள்ளும் போக்கையும் ஏற்படுத்துவார் (1 கொரி. 10:12, 13). நாம் நீண்ட உரத்த ஜெபம் செய்கின்றோம். இயேசு ஆறே ஆறு வாக்கியங்களில் ஜெபத்தைப் போதித்தார்! இந்த ஜெபத்தில் ஜெபித்தல் என்பது நமது இருதயங்களில் நீண்ட ஜெபங்களினால் செயல்படுத்த முடியாத ஒரு தாழ்மையையும் சார்ந்திருத்தலையும் செயல்படுத்த முடியும்.

இயேசு இந்த ஜெபத்தை தேவனுடன் தொடங்கினார்; அவர் இதனை தேவனுடனேயே முடித்தார்: “இராஜ்யமும், வல்லமையும், மகிமையும், என்றென்றைக்கும் உம்முடையவைகளே ...” (மத். 6:13). ஆமென் மற்றும் ஆமென்.

*“ஆண்டவரே, நான் ஜெபத்தில் நம்பிக்கை*
*கொள்ளுவதில்லை. நான் உம்மை நம்புகின்றேன்.*
*விசுவாசத்துடன் ஜெபிக்க எனக்குப் போதியும்.”*

# 10

# ஜெபம்

## பயன்படுத்துதல், பயன்படுத்தாமலிருத்தல், தவறாகப்பயன்படுத்துதல், வீணாகப்பயன்படுத்தல்

*யோனத்தான், எனது பழைய ஏற்பாட்டு நாயகர்களில் ஒருவராக இருக்கின்றார். அவரும்கூட, "தனது மயிருள்ள தோலை" வெளியில் இட்டார். நமது இந்த வரலாறு 1 சாமுவேல் 14ல் உள்ளது. சவுல் அரசர் பாவம் செய்திருந்தார். அவரது ஊழியமானது மோசம் என்ற நிலையிலிருந்து மிகவும் மோசம் என்ற நிலைக்குச் சென்று கொண்டிருந்தது, ஆயினும் அவர், யோனத்தான் என்ற விசுவாசமிக்க, வீரமுள்ள மகனைக் கொண்டிருந்தார். பெலிஸ்தியர்கள் [இஸ்ரவேல்] நாட்டைக் கட்டுப்படுத்தி இருந்தார்கள். இஸ்ரவேலர்கள் பட்டயங்களை உண்டாக்கிக் கொள்ளாதபடிக்கு, கொல்லர்கள் எவரும் அந்த நாட்டிற்குள் அனுமதிக்கப்படாதிருந்தார்கள். படையினர் கோடரிகளையும் மண்வெட்டிகளையும் மட்டுமே அறிந்திருந் தார்கள். சவுல் அரசரும் யோனத்தானும் மட்டுமே ஈட்டிகளையும் பட்டயங்களையும் வைத்திருந்தார்கள், ஆனால் யோனத்தான் தேவன் மீது விசுவாசம் வைத்திருந்தார். அவர் தமது ஆயுத தாரியான வாலிபனிடத்தில், தேவபக்தியற்ற பெலிஸ்தர்களைத் "தாக்குவதற்காக" தம்முடன் வருமாறு கட்டளையிட்டார். (அவர் எவ்வளவு உணர்வெழுச்சி மிகுந்தவராயிருந்தார் என்று கற்பனை செய்து பாருங்கள்!) அவர்கள் எண்ணிக்கையற்றவர்களாக வும், ஆயுதமற்றவர்களாகவும் இருந்தார்கள், ஆனால் சூழ்நிலைகள் சரியா யிருந்தன! யோனத்தான் எவ்வாறு தமது "மயிறுள்ள தோலை வெளியில் போட்டார்?" அவர் தமது ஆயுததாரியிடம், "திரளான எண்ணிக்கையில் உள்ள விரோதி, என்னிடத்திற்கு ஒரே ஒரு பட்டயத்துடன் ஏறிவாருங்கள் என்று சொல்வார்களேயானால், இதுவே வெற்றிக்குத் தேவனுடைய அடையாளமாக இருக்கிறது!" என்று கூறினார். இது மயிருள்ள தோலை வெளியே போடுகிற வழிமுறையாக உள்ளதா? பெலிஸ்தர்கள் களிப்புடன் இணங்கினார்கள். யோனத்தான் இருபது பேர்களைக் கொல்வதற்காக வெறுங் "கையும் - காலுமாக" ஏறிச் சென்றார். பூமி அதிர்ந்தது, பெலிஸ்தர் கள் நடுநடுங்கினார்கள்! யோனத்தான் தேவனுக்கென்று மாபெரும் வெற்றியொன்றை மகிழ்வுடன் அனுபவித்தார்!*

*1 சாமுவேல் 14ல் இருந்து நாம், ஜெபத்தின் வேத வசனரீதியான பயன்பாட்டை, பயன்படுத்தாமலிருத்தலை, தவறாகப் பயன்படுத்துதலை, வீணாகப் பயன்படுத்துதலை உற்றுநோக்க முடியும். முதலாவது நாம் ஜெபத்தைப் பயன்படுத்தாமல் இருத்தல் என்பதைப் பற்றி ஆழ்ந்து*

சிந்திப்போம். நடத்துனர்கள் ஜெபத்தினால் மட்டும் தேர்ந்தெடுக்கப்படக் கூடாது, ஆயினும் அவர்கள் ஜெபம் இல்லாமலும் தேர்ந்தெடுக்கப்படக் கூடாது. நடத்துனர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்ற மற்றும் பிரசங்கியார்கள் தேர்ந்து கொள்ளப்படுகின்ற அந்த வேளைகள், வழக்கமாக அலங்கோல மான வேளைகளாக இருக்கின்றன. ஏன்? ஏனென்றால் தேவனுக்குப் பதிலாக அரசியலும் தவறான தராதரங்களும் விஞ்சி நிற்கின்றன. அப். 1ல் யூதாஸுக்குப் பதிலாக ஒருவர் தேர்ந்துகொள்ளப்பட்ட வேளையில் பேதுரு திட்டவட்டமானவராக இருந்தார். [தேர்ந்துகொள்ளப்பட வேண்டிய] மனிதர் தகுதிப்பட்டு இருக்க வேண்டியிருந்தது. இருவர் அந்தத் தகுதியைக் கொண்டிருந்தார்கள். பின்பு தேவன் முடிவை ஏற்படுத்தினார். ஊழியக் குழுவானது ஜெபத்திலும் உபவாசத்திலும் தேர்வு செய்யப்பட்டது (அப். 13:1-3). பின்னாட்களில் மூப்பர்கள் ஜெபத்தினாலும் உபவாசத்தினாலும் நியமிக்கப்பட்டார்கள் (அப். 14:23). *முதலாவது ஜெபியுங்கள்!* காலங்கள் கடினமாகிறபோது, ஜெபித்தல் அவசியம் என்பதை சபையின் நடத்துனர் கள் கண்டறிகின்றார்கள். பின்பு வெற்றி வருகிறது. பின்பு, ஜெபத்தை மறந்து, புறக்கணித்தல் சுலபமாகிறது. *ஜெபத்தின் தேவைகள் மாறலாம், ஆனால் ஜெபத்திற்கான தேவை மாறலாகாது!* எந்த சபையும் எந்த நடத்துனரும் ஒருக்காலும் ஜெபத்திற்கான ஆழ்ந்தறிவுள்ள தேவை அவசியப்படாத அளவுக்கு வளருவதில்லை. யோனத்தான், தம்மால் அல்ல, தேவனாலேயே வெற்றிகரமானார்! *முதலாவது ஜெபியுங்கள்!*

இரண்டாவது, நாம் ஜெபத்தின் *தவறான பயன்பாட்டை* ஆராய்வோம். யோனத்தான் குற்றமற்றவராயிருந்தது ஏன்? ஏனென்றால் பெலிஸ்தர்கள், தோற்கடிக்கப்பட வேண்டும் என்று தேவன் விரும்பினார். யோனத்தான் இரகசியமான செயல்திட்டம் எதையும் கொண்டிருந்த தில்லை; அவர் தனிப்பட்ட திட்டமுறைமை எதையும் கொண்டிருந்த தில்லை; அவர் தமது சொந்த மகிமையைத் தேடவில்லை. அவர் தேவனு டைய மகிமையில் மெய்சிலிர்த்திருந்தார். ஆயினும், ஜெபத்தைத் தவறாகப் பயன்படுத்துதல் என்பது சுலபமானதாக உள்ளது. ஜெபம் என்பது ஒருக்காலும் திறமையாகக் கையாளுவதில், வஞ்சிக்கிற நயந்துரையில் பயன்படுத்தப்படக் கூடாது. ஒரு பிரசங்கியார் ஒரு திட்டவரையறையை முன்வைத்து பின்பு ஜெபத்தினால் மக்களைத் திறமையாகக் கையாளக் கூடாது. ஒரு பிரசங்கியார் தாம் பிரசங்கிக்கிற வேளையில் உறுப்பினர்களை ஜெபிக்கும்படி கேட்கக் கூடாது - அவர்களைக் கவனித்துக் கேட்கும்படி சொல்ல வேண்டும். ஒரு பிரசங்கியார் ஜெபிக்க வேண்டும், ஆனாலும் தயாரிப்பு இல்லையேல், அவரது பிரசங்கங்கள் இன்னமும் தோல்வியைத் தழுவும். பிரசங்கங்கள் ஜெபத்தில் முற்றிலும் குவிக்கப்பட்டு படிப்பினால் மேம்படுத்தப்பட வேண்டும். அறிந்துகொள்ளப் படியுங்கள்; வல்லமைக் காக ஜெபியுங்கள். ஜெபம் என்பது தள்ளிப்போடுவதற்கான பக்தியான வழியல்ல. செயல்படுவதற்கு ஒரு காலமுண்டு. ஜெபம் என்பது திறமை யின்மைக்கு ஒரு பதிலீடாக இருக்க முடியாது.

மூன்றாவது, நாம் ஜெபத்தின் *வீணான பயன்பாட்டைக்* கண்ணோக்கு வோம். வீணான பயன்பாடு என்பது தவறான பயன்பாடு என்பதிலிருந்து

*மாறுபட்டதாக உள்ளது. தவறான பயன்பாடு என்பது அறியாமையிலிருந்து வருகிறது; வீணான பயன்பாடு என்பது சுயநலத்திலிருந்து வருகிறது. இரண்டுமே அழிக்கின்றன. வீணான பயன்பாடு என்பது தேவன் நமது திட்டங்களை ஆசீர்வதிக்க வேண்டும் என்று அதிகாரத்துடன் கேட்பது. வீணான பயன்பாடு என்பது நமது சொந்த வசதியையும் மகிமையையும் தேடுவதற்கானதாக உள்ளது. ஜெபம் என்பது ஒருக்காலும் "மனிதனை நன்கு காணப்படும்படியாக்க" ஏற்படுத்தப்பட்டதல்ல. ஜெபம் என்பது திட்டமிடுதல், முயற்சி, நடத்துவத்தில் திறன், அல்லது பெருந்தன்மை என்பவற்றிற்குப் பதிலீடாக இருக்க முடியாது. ஜெபம் என்பது ஒருக்காலும் பொறுப்பற்ற நிதிநிலை மேலாண்மைக்கு எதிர்த்தாக்குதலாக அல்லது சுயமகிமைக்கு பயன்படுத்தப்பட முடியாது. நடத்துனர்கள் தாங்கள் செய்யாதிருக்கப் போகின்றவற்றிற்காக தேவனிடத்தில் ஜெபிக்கக் கூடாது. இயேசு இன்னமும் "சபைக்குத் தலையாக" இருக்கின்றார் (எபே. 1:22, 23; கொலோ. 1:17-19). சரீரமானது (சபையானது) இன்னமும் தலையின் கீழான தாகவே உள்ளது. இது கிறிஸ்தவத்தின் அஸ்திபாரமான கொள்கையாக உள்ளது. தலைதான் சரீரத்தை இயக்குகிறது. தலைதான் சரீரத்துக்கு வல்லமை அளிக்கிறது.*

*நான்காவதாக, நாம் 1 சாமுவேல் 14ல் ஜெபத்தின் வேத வசனரீதியான பயன்பாட்டைக் காண்போம். ஜெபம் என்பது சற்றும் அக்கறையற்றதாக இருக்கக் கூடும்! தேவனுடைய சித்தத்தில் இருத்தல் என்பது மனிதனை வெற்றிகொள்ளப்பட முடியாதவராக்குகிறது! எல்லா எதிரான விஷயங் களுடனும் கூட, யோனத்தான் மேல்நோக்கிப் பார்த்து, "இப்போது நாம் தேவன் மிகச் சரியாக விரும்பும் இடத்தில் நமது விரோதிகளைக் கொண்டுள்ளோம்!" என்று கூறினார். முதலாவது ஜெபியுங்கள்!*

# ஜெபிக்கும் கிறிஸ்து

## யோவான் 17:1–26

*''அவரோ வனாந்தரத்தில் தனித்துப்போய், ஜெபம்பண்ணிக் கொண்டிருந்தார்'' (லூக். 5:16).*

*ஜெபம் என்பது தேவனைப் போன்றே வல்லமை நிறைந்ததாக உள்ளது, ஏனென்றால் அவர் அதற்கு பதில் அளிப்பதாக வாக்குத்தத்தம் செய்துள் ளார். தேவனுடைய சித்தமும் வல்லமையுமே ஜெபத்தின் ஒரே வரையறை களாக இருக்கின்றன. இந்த சத்தியத்தை இயேசு விசுவாசித்து நடைமுறைப் படுத்தினார். லாசருவின் கல்லறையருகில், இயேசு தமது ஜெபத்தின் வாழ்வை அறிவித்தார். யோவான் 11:41-43, பின்வருமாறு கூறுகிறது:*

> *அப்பொழுது மரித்தவன் வைக்கப்பட்ட இடத்திலிருந்த கல்லை எடுத்துப்போட்டார்கள். இயேசு தம்முடைய கண்களை ஏறெடுத்து: ''பிதாவே, நீர் எனக்குச் செவிகொடுத்தபடியினால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். நீர் எப்பொழுதும் எனக்குச் செவிகொடுக்கிறீர் என்று நான் அறிந்திருக்கிறேன்; ஆனாலும் நீர் என்னை அனுப்பின தைச் சூழ்ந்துநிற்கும் ஜனங்கள் விசுவாசிக்கும்படியாக அவர்கள் நிமித்தம் இதைச் சொன்னேன்'' என்றார். இவைகளைச் சொன்ன பின்பு: ''லாசருவே, வெளியே வா'' என்று, உரத்த சத்தமாய்க் கூப்பிட்டார்.*

*ஜெபிக்கும் கிறிஸ்து! ஜெபிக்கும் தேவன்! கவனத்தைக் கவரும் காட்சி! இயேசு தமக்குள் ஆவியை அளவற்ற விதத்தில் கொண்டிருந்த "மனிதருள் தேவனாக" இருந்தார் (யோவா. 1:1, 14-17; 3:34), ஆயினும் அவருக்கு ஜெபம் தேவைப்பட்டது! இதுவரை வாழ்ந்துள்ளவர்கள் எவரையும் விட அவர் அதிகமாக ஜெபித்துள்ளார். கிறிஸ்துவின் வாழ்வில் ஜெபத்தின் முக்கியத்துவத்தையும் அது கொண்டிருந்த இடத்தையும் காண்பது திகைப்புக்குரியதாக உள்ளது.*

*குறிப்பிட்ட சில உறுதி வாய்ந்த உண்மைகள் விட்டுச் செல்லாதிருக்கும். இயேசு ஜெபத்தைப் பற்றிக் கொஞ்சம்தான் போதித்தார் - இதைப் பற்றிய மாபெரும் உபதேசம் லூக்கா 11ல், அப்போஸ்தலர்கள் அவரிடம் எப்படி ஜெபிக்க வேண்டும் என்று கேட்டபோது கூறியதாகப் பதிவு செய்யப் பட்டுள்ளது. இயேசு எதிர்மறைப் பிரசங்கித்தலிலும் ஈடுபட்டிருந்தார் (மத். 6:5-8). அவர் ஜெபத்தின் வீணான பயன்பாடுகள் பற்றி எச்சரித்தார்: முதலாவது, நாம் மாயக்காரரைப் போல ஜெபிக்கக் கூடும் (வ. 5), இரண்டாவது, நாம் புறதெய்வ வணக்கத்தாரை [புற இனத்தாரை] ப் போல ஜெபிக்கக் கூடும் (''புறஜாதியார்'' [தமிழில் இது ''அஞ்ஞானிகள்''*

என்றுள்ளது]; வ. 7). இயேசு ஜெபத்தைக் குறித்து மிகவும் "தாழ்ந்த திறவுகோலாக" இருந்தார். நாம் நமது சொந்தமான தனிப்பட்ட "ஜெப அறைகளை" கொண்டிருக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார். அந்தரங்க மாய் (இரகசியமாய்) ஏறெடுக்கப்படும் ஜெபத்திற்கு வெளியரங்கமாய் பலன் அளிக்கப்படும் என்று இயேசு கூறினார். பெருமை மற்றும் விளம்பரப் படுத்துகிற ஜெபத்தை இயேசு கடிந்து கொண்டார். கெத்செமனேயில் இயேசு, பேதுருவையும், யாக்கோபுவையும், யோவானையும் ஜெபத்தில் பிரவேசிக்கும்படி அழைத்தபோது கூட, அவர்களிடமிருந்து அவர் கல்லெறிதூரம் அப்பால் சென்று ஜெபித்தார் (லூக். 22:41). இயேசுவுக்கு ஜெபம் என்பது மிகவும் தனிப்பட்ட நிகழ்ச்சியாக இருந்தது.

## உண்மைகள்

ஜெபத்தின் மீதான இயேசுவின் போதனையைப் பற்றிய இன்னும் சில உண்மைகளை நாம் ஆழ்ந்து சிந்திப்போம். இயேசு ஒருக்காலும் ஜெப கூட்டாளிகளை நியமித்ததில்லை. ஒன்றுகூடி ஜெபித்தல் என்பது வேத வசனத்திற்குப் புறம்பானதல்ல. மேலான ஒரு சகோதரருக்குப் பதில் அளித்தல் என்பது வேத வசனநீதியற்றதாக உள்ளது. இயேசு ஒருக்காலும் "ஜெப வீரர்களை" கொண்டிருந்ததில்லை. இது "முட்டாள் தன்மை விதைக்கச் சென்றுள்ளது" என்பதாகவே உள்ளது. அவர் எழுபது பேர்களை அனுப்பியபோது, மிக விவரமாக அறிவுறுத்துதல்களைக் கொடுத்தார், அவர் ஒருக்காலும் ஜெபத்தைப் பற்றிக் குறிப்பிடவில்லை (லூக். 10:1-16; இயேசு அப்போஸ்தலர்களை அனுப்பிய இடமான லூக். 9:1-6 ஐயும் காணவும்). இயேசு மற்றும் அப்போஸ்தலர்களின் "அன்றாட தியானங்கள்" பற்றி வேதாகமம் எதுவும் கூறுவதில்லை. வேத வசனங்களில் அவர் ஒருக்காலும் அவர்களிடத்தில் "உங்கள் ஜெப வாழ்வு எவ்வாறு உள்ளது?" என்றோ அல்லது "இதைக் குறித்து நீங்கள் ஜெபித்தீர்களா?" என்றோ கேட்கவில்லை. அவர், பிரச்சனைகள் கொண்டிருந்த மக்களிடம் "அதைப் பற்றி நீங்கள் ஜெபம் மாத்திரம் செய்யுங்கள்" என்று கூறவில்லை.

இயேசு ஒருக்காலும் ஜெபத்தை மேம்படுத்தவில்லை. அவர் "வீண் வார்த்தைகளை அலப்புதல்" பற்றி எச்சரித்தார், ஆனால் அவர் விடாமுயற்சி யைப் பரிந்துரைத்தார். பேதுரு ஒருவருக்காக மட்டுமே இயேசு பெயர் குறிப்பிட்டு ஜெபித்ததாக வேதாகமத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது (லூக். 22:31, 32). இயேசுவிடம் ஒருக்காலும் நாடகமோ, திரையரங்கோ, கண் காட்சியோ, புதுமையை, செயல்நிகழ்த்துதலோ, அல்லது இசைக் குழுவின் இசையோ இருந்ததில்லை. ஜெபித்தல் என்பது இயேசுவுக்கு நம்பத்தக்கதாக இருந்தது.

ஜெபம் என்பது இயேசுவிடம் முன்னுரிமை கொண்டிருந்தது என்பது உண்மையான நிச்சயமாக உள்ளது. நம்மில் பலருக்கு ஜெபித்தல் என்பது யுத்தம் செய்வதற்கான தயாரிப்பாக உள்ளது. இயேசுவைப் பொறுத்த மட்டில் ஜெபமே ஒரு யுத்தமாக இருந்தது! கிறிஸ்துவின் வாழ்வில், ஜெபம் என்பது பணியாக இருந்தது, ஊழியம் என்பது வெகுமதியாக இருந்தது.

*வியர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையில் விழுந்தது எங்கே? கலிலேயாவின் கடலில் அல்ல, பிலாத்துவின் முற்றத்தில் அல்ல, கொல்கொதாவில் அல்ல! இயேசு கெத்செமனே(திராட்சப்பழ ஆலை)யில் ஜெபத்தில் இருந்தபோதுதான் "வியர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையில் விழுந்தது" (லூக். 22:44). சோதனை வந்த பொழுது, இயேசு வெற்றி பெற்றார், ஏனென்றால் அவர் அதை முன்னதாகவே ஜெபத்தினால் கையாண்டிருந்தார். தேவனுக்குக் கீழ்ப்படியுங்கள் ... தேவனை முற்றிலுமாக நம்புங்கள் ... தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள். நாம் ஜெபத்தில் தவறுவதால் வாழ்வில் தோல்வியடைகின்றோம்! இயேசுவுக்கு பிதாவுடன் இருந்து, அவருடன் பேசுதல் என்பதைக் காட்டிலும் அதிக முக்கியத்துவம் வாய்ந்தது வேறு எதுவும் இருந்ததில்லை. கல்வாரியில் அல்ல கெத்செமனேயில்தான் முடிவு நிச்சயிக்கப்பட்டது! உண்மையில் அவர் "ஜெபிக்கும் கிறிஸ்துவாகவே" இருந்தார்.*

## நேரங்கள்

*ஜெபம் என்பது இயேசுவுக்கு சுவாசித்தல் போன்று இயல்பானதாக இருந்தது. சுவிசேஷ நூல்களின் எழுத்தாளர்கள் இயேசுவின் வாழ்வில் ஜெபத்தின் நிகழ்வுகளாக இருபதுக்கும் மேற்பட்ட நிகழ்ச்சிகளை பதிவு செய்துள்ளார்கள். அவர் வேலை மும்முரமாயிருந்தார் - ஆயினும் ஒரு போதும் மிகவும் வேலை மும்முரமாயிருந்ததில்லை. அவர் ஒருக்காலும் அவசரமாகவோ அல்லது துரிதத்திலோ இருந்ததில்லை. சுவிசேஷ நூல்களின் எழுத்தாளர்கள் 150க்கும் அதிகமான நேர்முகப் பேட்டிகளைப் பதிவு செய்துள்ளார்கள் - இயேசு வாலிபர்களுடனும் வயோதிகர்களுடனும், சிறியவர்களுடனும், பெரியவர்களுடனும், செல்வந்தர்களுடனும், ஏழைகளுடனும், நல்லவர்களுடனும், மோசமானவர்களுடனும் பேசினார். தாக்குதலுக்கு உட்படக் கூடிய அவரது தன்மையானது மிகவும் ஆச்சரியமூட்டக் கூடியதாக உள்ளது. அவர் பரிபூரணமானவராக, வல்லமை மிகுந்தவராக, மற்றும் இரக்கமுள்ளவராக இருந்தார் - ஆயினும் எவரும் மற்றும் யாவரும் அவரை விமர்சிக்க, கண்டனம் பண்ண அல்லது திட்ட சுயாதீனமுள்ளவர்களாய் இருந்தார்கள்! இயேசுவின் குடும்பத்தார், அவரது சீஷர்கள், மற்றும் அவரது விரோதிகள் அவரைத் தனிப்பட்ட முறையில் எதிர்த்து நின்றார்கள். இது அவருடைய தாழ்மைக்கு ஒரு பாராட்டுரையாக உள்ளது. இயேசு ஜெபிப்பதற்கு நேரம் எடுத்துக் கொண்டதால் வெற்றி கொண்டார்.*

*இயேசு அதிகாலையில் எழுந்து ஜெபித்தார் (மாற். 1:35). அவர் மனிதனுக்கு ஊழியம் செய்வதற்கு முன்னால் தேவனைச் சந்தித்தார். நாள் முழுவதிலும் ஜெபித்தலிலேயே நடவுங்கள். ஜெபிப்பதற்கு அதிகாலையில் எழுந்துகொள்ளுங்கள். ஒரு நாளில் அளவுக்கு அதிகமாக வேலை இருந்தால், ஜெபிப்பதற்கு இன்னும் முன்னதாகவே எழுந்துகொள்ளுங்கள். நாம் ஜெபிப்பதற்கு அதிகாலையில் எழ மிகவும் சோம்பேறிகளாய் இருக்கின்றோமா? ஒழுங்குமுறையில் உள்ள குறைபாட்டினால் பலர் மிக அதிகமான*

வற்றை தவற விடுகின்றார்கள். இயேசு ஒருக்காலும் ஜெபிக்க இயலாத அளவுக்கு மிகவும் வேலை மும்முரமாய் இருந்ததில்லை. ஜெபத்திற்கு ஒரு காலமும், ஒரு இடமும், ஒரு கால அட்டவணையும் அவசியமாகின்றன. ஜெபித்தல் என்பது தகுதியுள்ள மற்ற எதையும் போலவே கடின உழைப்பாக உள்ளது - இருப்பினும் அது நமது மகிழ்ச்சியாக, நமது உவகையாக உள்ளது.

உண்பதற்கு முன்னர் இயேசு ஜெபித்தார். லூக்கா 24:13-35 வசனப் பகுதியானது, சிலுவையினால் பலவீனமடைந்து தோல்வியுற்ற இரு சீஷர்கள், எம்மாவூரில் இருந்த தங்கள் இல்லம் நோக்கி நடந்து சென்ற மனங்கவரும் வரலாற்றைக் கூறுகிறது. அவர்கள், இயேசு ஜெபிக்கும் வரையில் அவரை அடையாளம் கண்டுகொள்ளவில்லை (லூக். 24:30, 31). இயேசு ஜெபித்தபோது அற்புதமான விஷயங்கள் நடந்தன! இயேசுவின் ஞானஸ்நானத்தின்போது, பரலோகம் திறக்கப்பட்டது மற்றும் தேவன் அவரை அங்கீகரித்தார் (லூக். 3:21, 22)! இயேசு ஜெபித்தார் மற்றும் மோசேயுடனும் எலியாவுடனும் மறுரூபமடைந்தார் (லூக். 9:28-30). இயேசு ஜெபித்தார், மற்றும் ஒரு தூதன் வந்து அவரைப் பெலப்படுத்தினார் (லூக். 22:43, 44). இயேசு ஜெபித்தபோது, விஷயங்கள் நடைபெற்றன! இயேசு ஜெபித்ததினால் லாசரு மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டார் (யோவா. 11:41-43). இயேசு ஜெபித்தார், மற்றும் இடி இடித்தது (யோவா. 12:27-33). நாம் தேவனிடத்தில் அன்றாட உணவுக்காகக் கேட்க வேண்டும் என்றால், அதற்காக நாம் தேவனுக்கு நன்றியுள்ளவர்களாய் இருக்க வேண்டும்.

இயேசு (ஒருவேளை பலமுறைகள்) இராமுழுவதும் ஜெபித்தார். அப்போஸ்தலர்களைத் தேர்ந்து கொள்ளும் முன்பாக, இயேசு இராமுழு வதும் ஜெபித்தார் (லூக். 6:12). இரவு வேளையில் ஜெபிப்பது எனக்கு மிகவும் சுலபமானதாக உள்ளது. இது ஏன் என்று உண்மையில் எனக்குத் தெரியவில்லை. ஆனியன் நீரோடையின் கரைகளின் கீழ் எனக்கு "விருப்ப மான குன்று" ஒன்றைக் கொண்டிருந்தேன். காலம் இந்த அட்டவணையை மாற்றியுள்ளது. இப்போது நான் காலை வேளையை அதிகம் விரும்பு கின்றேன். நான் ஒரு நாளை தேவனுடன் தொடங்க விரும்புகின்றேன்.

இயேசு வழக்கமாக தனிமையிலேயே ஜெபித்தார்! லூக்கா 5:16; 9:18; 22:41; மத்தேயு 14:23 ஆகிய வசனப்பகுதிகளை வாசித்துப் பாருங்கள். கிறிஸ்து "தனியறையில் ஜெபம்" என்பது பற்றித் தாம் பிரசங்கித்து இருந்ததை அவரே நடைமுறைப்படுத்தினார். அவர் ஒருபோதும் தெருவில் ஜெப ஊர்வலம் நடத்தியது இல்லை! சபையின் ஜெபத்தில் கூட "தனிமை" என்பதாகச் சில விஷயங்கள் உள்ளன. லூக்கா 9:18ல், ஆர்வத்திற்குரிய ஒரு விஷயம் நடந்தது: "பின்பு அவர் தமது சீஷரோடே கூடத் தனித்து ஜெபம்பண்ணிக்கொண்டிருக்கையில் … ." இது ஒரு குழு ஜெபமாக இருக்கவில்லை, இது ஒரு இரகசிய ஜெபமாகவும் இருக்கவில்லை. இயேசு தமது அப்போஸ்தலர்களுடன் இருக்கையில் வாய்விட்டு ஜெபிப்பதில் அவ்வளவு சங்கடமின்றி இருந்தாரா? இது "அமைதியான ஜெபமாக" இருந்ததா? ஒருவர் "அமைதியாக" ஜெபிக்க முடியுமா? ஒரு கூட்டத்தில் இருக்கும்போது கூட நாம் ஜெபிக்க முடியுமா? கேட்கக்கூடிய வார்த்தைகள் இருக்க வேண்டுமா? இயேசு தனிமையில் ஜெபித்தார்; இயேசு பிறருடன்

*இருக்கையிலும் ஜெபித்தார். இயேசு தனிப்பட்ட முறையிலும் வெளிப்படையாகவும் ஜெபித்தார்.*

## *காரணங்கள்*

*இயேசு வழக்கத்திற்கு மாறாக வேலை மும்முரமாய் இருக்கையிலும் ஜெபித்தார். அவரது உதாரணங்கள் நமது தோல்விகளை வெளியாக்கு கின்றன - நாம் ஜெபிக்க முடியாத அளவுக்கு மிகவும் வேலை மும்முரமாக இருக்கின்றோம். இயேசு தமது வெகு ஜன பிரபலமாகுதலின் உச்சத்தில், தனிமையில் சென்று ஜெபித்தார் (லூக். 5:15, 16). பிரபலமாகுதல், வெற்றி, அதிகாரம் ஆகியவை போதையூட்டும் சோதனைகளாக உள்ளன. ஜெபம் என்பது நேரத்தை காப்பதாக உள்ளது. நாம் எவ்வளவு வேலை மும்முரமாக இருக்கின்றோமோ, அவ்வளவு அதிகமாக ஜெபிக்க வேண்டும். உடல் சோர்வும் கூட நமது ஜெப வாழ்வை ஆர்வம் குன்றச் செய்கிறது.*

*மிக முக்கியமான முடிவுகளை மேற்கொள்வதற்கு முன்னால், இயேசு ஜெபித்தார். ஜெபத்தைப் பற்றி மிகச் சிறந்த புத்தகம் ஜார்ஜ் பட்ரிக் அவர்களால் எழுதப்பட்டது.[1] இயேசுவின் ஜெப வாழ்வு பற்றிய மிகச் சிறந்த பாடங்கள் இ.எம். பவுன்ட்ஸ் அவர்களால் எழுதப்பட்டது.[2] இவர், "அவரது வாழ்வின் மாபெரும் யுகங்கள் ஜெபத்தினால் உருவாக்கப்பட்டு முடிசூடப் பட்டன" என்று கணித்துள்ளார்.[3] இயேசு தமது ஞானஸ்நானத்தின்போது ஜெபித்தார் (லூக். 3:21, 22). அவர் பன்னிருவரைத் தேர்ந்தெடுப்பதற்கு முன் இராமுழுவதும் ஜெபித்தார் (லூக். 6:12-16). அவர் மறுரூபமலையின் மீது ஜெபித்தார் (லூக். 9:28-36). அவர் சிலுவைக்கு முன்பு கெத்செமனேயில் ஜெபித்தார் (மத். 26:36-46). இயேசு தமது வாழ்வின் மைல் கற்களுக்கு முன்னும், அவைகளின் போதும், அவைகளுக்குப் பின்னும் ஜெபித்தார். ஜெபத்திலிருந்தே நமது மிக முக்கியமான முடிவுகள் வரவேண்டும்.*

*இடர்ப்பாட்டின் வேளையில் இயேசு ஜெபித்தார். அவர் ஒருக்காலும் அச்சத்தால் அவதிப்பட்டது இல்லை. அவர், மக்கள் தம்மை அரசியல் ரீதியான அரசராக்க விரும்புவதை உய்த்துணர்ந்தபோது, தனியே விலகிச் சென்று ஜெபித்தார் (யோவா. 6:15). அவர் தமது சீஷர்கள் அவரை விட்டு விட்டுப் போவதற்கு முன்பு ஜெபித்தார். அவர் கெத்செமனேயில் ஜெபித்தார். அவர் சிலுவையில் ஜெபித்தார்.*

*இடர்ப்பாடுமிகுந்த நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து இயேசு ஜெபித்தார். நாம் நமது தேவைகளின் போது உதவிக்காக ஜெபிக்கின்றோம். பின்பு தேவனுடைய தீர்வுகளுக்காக நாம் அவருக்கு நன்றி செலுத்துதல் அவசியமாக உள்ளது. இல்லையென்றால், வெற்றியானது நமது கழுத்தை நெறித்துவிடும். "தேவனுடைய வெற்றிகளுக்காக" நன்றிகள் செலுத்துதல் என்பது நம்மைத் தாழ்மையாயிருக்கும்படி காத்துக் கொள்ளும்.*

*இயேசு மரணத்தை எதிர்கொண்டிருந்தபோது, ஜெபித்தார். எபிரெயர் 5:7 மனங்கவருவதாக உள்ளது: "அவர் மாம்சத்திலிருந்த நாட்களில், தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம் பண்ணி, வேண்டுதல்செய்து,*

*தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டு." (1) இயேசு தமது ஜீவனுக்காக சத்தமிட்டு வேண்டுகோள் விடுத்தார். (2) தேவன் அவரை இரட்சித்திருக்கக் கூடும். (3) தேவன் அவரது ஜெபத்தைக் கேட்டார், ஆயினும் தேவன் அப்போதும் "இல்லை!" என்றே பதில் அளித்தார். இயேசு தூதர்களின் சேனையை உதவிக்கு அழைத்திருக்க முடியும், ஆயினும் அவர் அவ்வாறு செய்யவில்லை (மத். 26:53). அவர் சிலுவையைப் பிதாவின் பராமரிப்பில் விட்டுவிட்டார்!*

## காரணிகள்

*(1) இயேசு கீழ்ப்படிதல் உள்ளவராய் இருந்தார். கீழ்ப்படிதல் என்பது அஸ்திபாரமானதாக, இடர்ப்பாடுமிக்கதாக உள்ளது. எபிரெயர் 5:7ஐயும், லூக்கா 22:40-46ஐயும் கண்ணோக்குங்கள். யோவான் சிலுவையை ''வேளை'' என்று மட்டும் எளிமையாகக் குறிப்பிட்டார். யோவான் சுவிசேஷத்தில், இயேசு தமது வாழ்வு முழுவதிலும் "இந்த வேளையை" நோக்கிக் கவனம் குவித்தவராகச் செயல்படுவதை நாம் காண்கின்றோம். "வேளை" வந்திருந்தது. இப்போது, "வேளை" என்பது அவரது வெற்றியாக இருந்தது. இயேசு ஒரு பாதிப்படைந்தவரல்ல (victim); அவர் ஒரு வெற்றியாளராயிருந்தார் (victor). அவர் தாம் ஜெபிப்பதற்கு முன்பே தேவனுடைய பதிலை அறிந்திருந்தார்: "இல்லை, மகனே. இல்லை!" ஆயினு ம் அவர் ஜெபித்தார். மூன்று முறை அதே ஜெபத்தை அவர் ஜெபித்தார்: "இந்தப் பாத்திரம் என்னை விட்டு நீங்கும்படி செய்யும்." வியர்வை இரத்தம் போல் தரையில் சொட்டியது! கெத்செமனேயில் இயேசு ஜெபித்தது போல் வேறு எவரும் ஒருபோதும் ஜெபித்ததில்லை. திறவுகோல் கொள்கை என்னவாக உள்ளது? "என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது."*

*முதலாவது ஜெபியுங்கள்! ஏன்? கீழ்ப்படிதல்! நாம் கீழ்ப்படியாத வரைக்கும் தேவன் நம்மைப் பயன்படுத்த இயலாது. நமது ஜெபங்கள் சரணடைதலின், துறத்தலின், ஒப்புக்கொடுத்தலின் ஜெபங்களாக இருக்க வேண்டும். துறத்தல் என்பது நம்பிக்கையாக இருக்கிறது, இது சாவுக்கேது வான விட்டு விலகுதல் அல்ல. துறத்தல் என்பது மாபெரும் ஆசீர்வாதத்தைக் கொண்டுவருகிறது - இது மனித சித்தத்தைச் சிலுவையில் அறைதலாக உள்ளது. பவுல், "கிறிஸ்துவுடனே கூடச் சிலுவையில், அறையப்பட்டேன்" (கலா. 2:20) என்று கூறினார். இங்கு துறத்தல் உள்ளது; இங்கு சுயமரணம் உள்ளது. பவுல், "நான் அநுதினமும் சாகிறேன்" என்றும் கூறினார் (1 கொரி. 15:31). துறத்தல் என்பது நம்மை "சுயத்தின்" பாவங்களில் இருந்து விடு விக்கிறது: சுயநிறைவு, சுயமதிப்பு, சுயபட்சாதாபம், சுயவஞ்சனை, சுய வெறுப்பு முதலியன. தேவன் ஒன்றுமில்லாமையிலிருந்தே உண்டாக்கு கின்றார். தேவன் பயன்படுத்துகின்ற ஒவ்வொன்றும் ஒன்றுமில்லாமையாகக் குறைக்கப்பட வேண்டும். இது சித்தத்தை ஒழிப்பதாக இல்லாமல், சித்தத்தைச் சிலுவையில் அறைதலாக உள்ளது. வேத வசனங்களில் சிலுவையில் அறையப்படுதலுடன் எப்போதும் ஒரு உயிர்த்தெழுதல்*

*இணைக்கப்பட்டுள்ளது. நாம் சுயத்தை வெறுமையாக்குதலின் ஜெபத்தை, சரணடைதலின் ஜெபத்தை, கைவிடுதலின் ஜெபத்தை, விடுதலையின் ஜெபத்தை, உயிர்த்தெழுதலின் ஜெபத்தை ஜெபிக்கின்றோம். இயேசு அப்பத்திற்காகத் தேவனை நம்பியிருந்தார் (மத். 4:1-4). அவர் உயிர்த்தெழு தலுக்காகத் தேவனை நம்பியிருந்தார்!*

*(2) இயேசு தமக்காக ஜெபித்தார். இது, தங்களை இப்படிப்பட்ட ஜெபங்களுக்கு மேலானவர்கள் என்று நினைக்கின்ற சில "உயர் வகைப் பக்திமான்களை" கவலை கொள்ளச் செய்கிறது. யோவான் 17ஐ நெருக்க மாக வாசித்துப் பாருங்கள். இயேசு முதலில் தமக்காக ஜெபித்தார். அவர் தமது மரணத்தின் மூலம் தாம் அடையவிருந்த மகிமைக்காக ஜெபித்தார்! அவரது ஜெபத்தில் முரண்பாட்டுத் தன்மை எதுவும் இருக்கவில்லை. இ.எம். பவுன்ட்ஸ் அவர்கள், "ஜெபம் என்பது அவரது வல்லமையின் இரகசியமாக, அவரது வாழ்வின் சட்டமாக, அவரது கடின உழைப்பின் உள்மூச்சாக, அவரது செல்வம், அவரது சந்தோஷம், அவரது ஐக்கியம் மற்றும் அவரது பலம் ஆகியவற்றின் ஆதாரமூலமாக இருந்தது"[4] என்று கூறினார். கீழ்ப்படிந்துள்ள சகோதரர்கள் தங்களுக்குத் தாங்களே ஜெபிக்கக் கூடும்!*

*(3) இயேசு மற்றவர்களுக்காக ஜெபித்தார். யோவான் 17ஐ மீண்டும் வாசியுங்கள். அவர் அப்போஸ்தலர்களுக்காக ஜெபித்தார்; அவர் சபைக் காக ஜெபித்தார்; அவர் நமக்காக ஜெபித்தார். அவர் தமது விரோதிகளுக் காகவும் ஜெபித்தார் (லூக். 23:34; மத். 5:44). அவர் சிலுவையில் தமது தாயாருக்காக ஜெபித்தார், அவளைக் கவனித்துக் கொள்ளும்படி யோவானு க்குக் கட்டளையிட்டார். அவர் பரிசுத்த ஆவியானவருக்காக ஜெபித்தார் (யோவா. 14:16).*

*(4) இயேசு நன்றியுடன் ஜெபித்தார். நாம் தேவனைக் காணும்போது, அமைதியினால் திகைத்து நன்றியுணர்வினால் மூழ்கடிக்கப்படுவோம். இயேசு உணவுக்காக, வெற்றி நிறைந்த ஊழியத்திற்காக, லாசருவின் உயிர்த் தெழுதலுக்காக தேவனுக்கு நன்றி செலுத்தினார். அவர் ஊக்கத்துடன் ஜெபித்தார். அவரது வியர்வை இரத்தம்போல் சொட்டியது. இயேசு "ஜெபிக்கும் கிறிஸ்துவாக" இருக்கின்றார்.*

*"ஆண்டவரே, நான் ஜெபத்தில் நம்பிக்கை
கொள்ளுவதில்லை. நான் உம்மை நம்புகின்றேன்.
விசுவாசத்துடன் ஜெபிக்க எனக்குப் போதியும்."*

---

*குறிப்புகள்*

[1]George A. Buttrick, *Prayer* (New York: Abingdon Press, 1942). [2]E. M. Bounds, *The Reality of Prayer* (Grand Rapids, Mich.: Baker Book House, 1924). [3]Ibid., 70. [4]Ibid., 73.

# 11

# ஜெபம்

## எது ஜெபமாக இருப்பதில்லை ...

ஜெபம் என்பது தேவன், விசுவாசம், மற்றும் வாழ்வு ஆகியவை பற்றிய நமது முழுக்கருத்தை உள்ளடக்குவதினால், அது ஒரு நுணுக்கமாகவோ அல்லது சூத்திரமாகவோ குறைக்கப்பட்டு விடக் கூடாது. இந்தப் பாடங்கள் பதில்களைக் காட்டிலும் கேள்விகளை அதிகமாய்க் கொண்டுள்ளன. அவைகள் உணர்வுமயக்கத்தை அல்ல ஆனால் [சிந்தனையின்] ஆழத்தைத் தூண்டியெழுப்புகின்றன. அவைகள் உணர்வைக் காட்டிலும் சிந்தனையை அதிகமாய் வேண்டுகின்றன. எது ஜெபமாக இருக்கிறது என்பதைக் காட்டிலும், எது ஜெபமாக *இருப்பதில்லை* என்பதில், ஜெபத்தைப் பற்றிய சத்தியம் ஒருவேளை சிறப்பாகப் புரிந்துகொள்ளப்பட முடியலாம். எது ஜெபமாக இருப்பதில்லை என்பதை அன்றாடம் நமக்கு நாமே நினைவூட்டிக் கொண்டு இருக்க வேண்டும், இல்லையென்றால் நாம் - காலப்போக்கில் - ஜெபத்தை ஒரு மதியீனமாக உருக்குலைத்து விடுவோம்.

*ஜெபம் என்பது அவசர நிலைகளில் மட்டும்* பயன்படுத்தக் கூடிய ஒரு கடைசிப் புகலிடமாய் இருப்பது இல்லை. “கடைசிப் புகலிடத்தின் தேவன்” என்பவர் தேவனாக இருக்க முடியாது! சாகசம் செய்யும் விமானிகள் குடைக்கருவிகளை [parachutes] ஞானமாய் அணிந்து கொள்கின்றார்கள், ஆயினும் அவர்கள் அவற்றைப் பயன்படுத்த *விரும்புவதில்லை!* ஒரு குடைக் கருவி என்பது கடைசிப் புகலிடமாகவே பயன்படுத்தப்படுகிறது. ஜெபம் என்பது நமது கடைசி சிந்தனையாக இன்றி, நமது முதல் சிந்தனையாக இருக்க வேண்டும். நமது ஜெபங்கள் பேரழிவிற்கான சுறுசுறுப்பற்ற பதில்செயலுக்கு அதிகமானதாக இருக்க வேண்டும். நீங்கள் வேண்டுகோள் விடுக்கும் தேவனுக்குப் பின்னாக ஒரு விக்கிரகம் ஒளிந்து கொண்டுள்ளதா? ஜெபம் என்பது “சரியான தேவனிடம்” “சரியான விஷயங்களுக்காக” கேட்டல் என்பதாக உள்ளது. பதில் அளிக்கப்பட்ட ஜெபத்தின் மாபெரும் ஆசீர்வாதம், நீங்கள் விரும்பியதைப் பெறுதல் என்பதாயிராமல், தேவன் செயல்பாட்டில் இருப்பதைக் காணுதல் என்பதாகவே உள்ளது. மேன்மை யாக ஜெபிப்பதற்கு நாம் தேவனைச் சிறப்பாக அறிந்திருக்க வேண்டியது இல்லை ... நாம் தேவனை மேன்மையாக அறிவதற்காகவே சிறப்பாக ஜெபிக்க பிரயாசப்படுகின்றோம்! ஜெபித்தலே வாழ்தலாக உள்ளது. நீங்கள் ஜெபிப்பதினாலேயே ஜெபிக்கக் கற்றுக்கொள்ளுகின்றீர்கள். ஆகையால், ஜெபம் என்பது ஒரு பொருளடக்கமே தவிர, நுணுக்கம் அல்ல. எவரொரு வரும் எப்பொழுதும் “ஜெபத்தில் சிறந்து விளங்குவதில்லை.” முரண்பாடு போலத் தோன்றும் மெய்யுரை என்ற வகையில், ஒருவர் எவ்வளவு

அதிகமாய் ஜெபிக்கின்றாரோ, அவ்வளவு குறைவாகவே அவர் தமது ஜெபத்தினால் திருப்தி அடைகின்றார். உண்மையான ஜெபம் தாழ்மைப்படுகிறது - அது ஒருக்காலும் ஒருவர் தம்மை ஆவிக்குரிய வகையில் பிறரைவிட மேன்மையாய் இருப்பதாக நினைக்கச் செய்யாது. ஜெபத்தைப் பற்றி ஒருவர் ஒரு புத்தகத்தை எழுதி விட்டதால் மட்டும், அவர் எப்படி ஜெபிப்பது என்பதை அறிந்துள்ளார் என்று அர்த்தப்படுவதில்லை. நான் எழுதியுள்ள எல்லாப் பாடங்களிலும் இது மிக மிகக் கடினமானதாக இருந்துள்ளது.

ஜெபம் என்பது பேரம் பேசுதலாக இருப்பதில்லை. உதவியற்ற மக்கள் தேவனுடன் பேரம் பேசுவதற்கு [ஆதாரத்] தளங்கள் எதையும் கொண்டிருப்பதில்லை. நீங்கள் தேவனுடன் "குதிரை-வர்த்தகம்" செய்வதில்லை. ஒரு மனிதர் ஜெபத்தில் தேவனிடம், "நான் ஒருபோதும் அதிகமானவற்றிற்குக் கேட்பது இல்லை!" என்று கூறினார். இது ஜெபத்தைப் பற்றிய முற்றிலும் தவறான புரிந்துகொள்ளுதலாக இருக்கிறது. தேவன் நமக்குக் கொடுக்க, நம்மை ஆசீர்வதிக்க விரும்புகின்றார். அவர் நமது அன்றாட வாழ்வாயிருக்க விரும்புகின்றார். அவர் தயக்கமுள்ளவராயிருப்பதில்லை. மற்றவர்கள், அவசர வேளையில், தேவனிடத்தில், "நீர் அதைச் செய்தால், நான் இதைச் செய்வேன்" என்று வாக்களிக்கின்றார்கள். சிறைச் சாலைகள், மருத்துவ மனைகள், மற்றும் கல்லறைகளில் ஏற்படுத்தப்படும் வாக்குறுதிகள் மிகவும் அரிதாகவே நிறைவேற்றப்படுகின்றன. நாம் மரணத்திற்கேதுவான இன்னொரு தவறைச் செய்கின்றோம்: நாம் சில ஜெபங்கள் தேவனுக்கு "மிகவும் சிறியதாக" அல்லது "மிகவும் பெரியதாக" இருப்பதாக நினைக்கின்றோம். எதுவும் "மிகவும் சிறியதோ" அல்லது "மிகவும் பெரியதோ" அல்ல.

ஜெபம் என்பது ஒரு அற்புதமாக இருப்பதில்லை. "ஒரு நாளைக்கு ஒரு அற்புதம் என்பது சாத்தானை தூரத்தில் வைப்பதில்லை." விசுவாசம் இந்த உலகத்தை ஜெயிக்கிறது. புயலின் நடுவில் அப்போஸ்தலர்கள் இயேசுவுக்காக உரத்து அலறினார்கள்! அவர் எப்போதுமே அவர்களுடைய விசுவாசக் குறைவுக்காக ஆச்சரியமுள்ளவராய் இருந்தார். "அற்ப விசுவாசிகளே!" (மத்.14:31; முதலியன) என்பதுதான் பன்னிருவருக்கு அவர் கூறிய ஒரே கடிந்துகொள்ளுதலாக இருந்தது. ஜெபம் என்பது நமது வேலை, முயற்சி, அல்லது வாழ்வு ஆகியவற்றிற்குப் பதிலீடாக இருப்பதில்லை. ஜெபம் என்பது தேவனைப் "பயன்படுத்திக் கொள்ளுதலாக" இருப்பதில்லை - ஜெபம் என்பது கடமையைச் செய்ய வந்துள்ளதாக அறிவித்தலாக உள்ளது. ஜெபம் என்பது, "அதற்குப் பின்பு எல்லாரும் எப்போதும் மகிழ்ச்சியாக வாழ்ந்தார்கள்" என்று கூறும் "தேவதைக் கதையாக" இருப்பதில்லை. ஜெபம் என்பது ஒரு யுத்தமாக, ஒரு போராட்டமாக, ஒரு மாற்றமாக உள்ளது. ஜெபம் என்பது ஆத்துமாவிற்கு பயிற்சி நிலையமாக உள்ளது. தேவனிடத்தில் நீங்கள் கேட்டவற்றைப் பெற்றுக்கொள்ளாததற்காக அமளி செய்தல் என்பது முரட்டுத்தனமாக உள்ளது; எப்போதாவது கேட்டல் என்பது அவிசுவாசமாக உள்ளது. இரண்டுமே தவறானவைகளாக உள்ளன.

ஜெபம் ஒருக்காலும் பெருமை கொள்ளுவதில்லை. ஜெபம் உதவியற்ற

*தாக உள்ளது. தேவனில் சிறுபிள்ளையைப் போன்ற நம்பிக்கை என்பதே ஆவிக்குரிய தன்மையின் சாராம்சமாக உள்ளது. தாங்கள் கேட்பதைப் பெற்றுக் கொள்வதில் எப்போதும் மகிமையடைகின்றவர்கள் என்னைப் பயப்படுத்துகின்றார்கள். ஜெபமானது எவரொருவரையாகிலும் மிக உயர்வானவராக உணரச் செய்தது என்றால், அவர் ஜெபிக்கவே இல்லை என்று ஆகிறது! ஒருவரும் ஒருக்காலும் "அதில் சிறந்து விளங்கியதில்லை." அதைக் குறித்துப் பெருமைகொள்ளுதல் என்பது அதைத் தவற விடுதலாக உள்ளது. வேதாகமமானது ஜெபத்தில் ஒருக்காலும், தொடர்ச்சியான "மலையுச்சி அனுபவங்களை" அளிப்பதில்லை. ஜெபம் என்பது நேர்ப் பொருளில் நமது தேவனைத் தொழுதுகொள்ளுதல் அல்ல ... ஜெபம் என்பது தேவன் நம்மை அழைக்கும்படி அனுமதித்தலாகவே உள்ளது. ஜெபமும் பெருமையும் ஒன்று கலப்பதில்லை.*

*ஜெபம் என்பது விட்டு விலகுதலாகவும் இருப்பதில்லை! சிலர் ஒருக்காலும் ஒன்றையும் எதிர்பாராமல் ஜெபிக்கின்றார்கள், ஏனென்றால் இவர்கள் ஜெபிப்பது என்பதை ஒரு கட்டளையாகவே கண்ணோக்குகின்றார்கள். நீங்கள் [ஒரு விஷயத்தை பெற்றுக்கொள்ளலாம் என்ற] நம்பிக்கை கொள்ளாவிட்டால் அந்த விஷயத்திற்காக ஜெபிக்காதீர்கள்! ஜெபம் என்பது ஒவ்வொரு விசுவாசியின் பிறப்புரிமையாக உள்ளது - இது உயரப்பறக்கும் ஒரு சில மேன்மையான பரிசுத்தவான்களுக்கு அளிக்கப்பட்ட கொடையாக இருப்பதில்லை! ஜெபத்திலிருந்து எழுந்து, "இது நன்மையொன்றையும் செய்யாது" என்று கூறுவது விசுவாசம் இன்மையாக உள்ளது. தேவன் உண்மையுள்ளவராய் இருக்கின்றார். அவர் வல்லவராய் இருக்கின்றார். ஜெபம் என்பது தேவனுடன் சந்திக்க முன்குறித்த இடமாக உள்ளது. ஜெபம் என்பது, "நான் தேவனுடைய உண்மைத்தன்மையை உறுதிப்படுத்துகின்றேன்" என்று கூறுதலாக உள்ளது. நீங்கள் தேவனை, உங்களுக்காக ஒன்றும் செய்யாதவர் என்ற யூகத்துடன் கண்ணோக்கலாம் - அல்லது அவர் செய்துள்ளவற்றை நீங்கள் கண்ணோக்கலாம். தேவன் தமது மாபெரும் ஞானத்தில், மனித ஜெபங்கள் விஷயங்களை நடப்பிக்கக் கூடிய ஒரு இடத்தை உண்டாக்கியுள்ளார். அதை விசுவாசியுங்கள். அதைப் பயன்படுத்துங்கள்.*

# ஆவியில் ஜெபித்தல்

## எபேசியர் 6:18; யூதா 20

*“எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம்பண்ணி, ...” (எபே. 6:18).*

*நீங்களோ பிரியமானவர்களே, உங்கள் மகா பரிசுத்தமான விசுவாசத்தின்மேல் உங்களை உறுதிப்படுத்திக்கொண்டு, பரிசுத்தஆவிக்குள் ஜெபம்பண்ணி (யூதா 20).*

*அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவி செய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர்தாமே வாக்குக் கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல்செய்கிறார் (ரோமர் 8:26).*

*உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்ல என்றும் அறியீர்களா? (1 கொரி. 6:19).*

*“நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்” (யோவா. 14:16).*

*“சத்திய ஆவியாகிய அவர் வரும்போது சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார். அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல் ... அவர் ... என்னை மகிமைப்படுத்துவார்” (யோவா. 16:13, 14).*

இரண்டு அடிப்படை பிரச்சனைகள் சபையையும் இந்த உலகத்தையும் அழிக்கின்றன: வேதாகம ரீதியான அறியாமை மற்றும் ஆவிக்குரிய பக்குவம் இல்லாமை. வேதாகம ரீதியான அறிவு என்பது மிகவும் முக்கியமானதாக உள்ளது; பக்குவம் என்பது கட்டளையாக உள்ளது. பரிசுத்த ஆவியானவர் இருக்கின்றார். அவர் ஒரு “அஃறிணைப் பொருளோ” அல்லது ஒரு “ஆவியோ” அல்ல. அவர் தேவத்துவத்தின் மூன்றாம் ஆளாக இருக்கின்றார். கிறிஸ்தவர்கள் “ஆவியானவருக்குள்” வாழ்கின்றார்கள். கிறிஸ்தவர்கள் “ஆவியானவருக்குள்” ஜெபிக்கின்றார்கள். இது நமது சிந்தனையையும் நடைமுறையையும் வேண்டுகிறது. பரிசுத்த ஆவியானவர் புறக்கணிக்கப் படவோ, கண்டுகொள்ளப்படாது விடவோ, அல்லது தவறாகப் பயன்

*படுத்தப்படவோ கூடாது. பரிசுத்த ஆவியானவர் "சடலம் போல் இறந்த வராகவோ" அல்லது "St. Vitus Dance" போன்று சித்தம் கலங்கியவராகவோ இருப்பதில்லை. நாம் இந்த சத்தியத்தை மும்முரமாய்ப் படிப்பதற்கு நம்மையே ஒப்புக்கொடுக்க வேண்டும்.*

## தவறாக புரிந்துகொள்ளுதல்கள்

*இன்றைய நாட்களில் பரிசுத்த ஆவியானவரைச் சுற்றிலும் பல தவறான புரிந்துகொள்ளுதல்கள் சூழ்ந்து இருக்கின்றன.*

*(1) தவறான ஆவிக்குரிய தன்மை. ஆவிக்குரிய தன்மை என்பது பழிவாங்குதலுடன் திரும்பவும் வந்துள்ளது. மதம் உயிருள்ளதாக உள்ளது, ஆனால் அது வேதாகமரீதியானதாக உள்ளதா? ஆவிக்குரிய தன்மை என்பது சுலபமாகப் போலிவேலை ஏற்படுத்தப்படக் கூடியதாக உள்ளது. நம்மில் பெரும்பான்மையானோர் சுலபமாக ஏமாற்றப்படுகின்றோம். இதைப்பற்றி மத்தேயு 6ல் இயேசு நகைச்சுவையாகப் பேசியுள்ளார். மனிதர்கள் குழல் ஊதச் செய்வதினால் தங்கள் தர்மங்களைப் பிறர் அறியச் செய்கின்றார்கள்! அவர்கள் மக்கள் கூட்டங்களின் மத்தியில் நின்றுகொண்டு சத்தம் போட்டும் நீண்டதாகவும் ஜெபம் செய்கின்றார்கள்! அவர்கள் தங்கள் உபவாசங்களை வெளிக் காண்பிக்கத் தங்கள் முகங்களை வாடலாக வைத்துக் கொள்கின் றார்கள்! எவ்வளவு அற்பத்தனமானது! இருந்தும், அவர்கள் வெற்றியடைந் திருந்தார்கள்! "அவர்கள் தங்கள் பலனை அடைந்தாயிற்று" என்று இயேசு கூறினார்.*

*ஆவிக்குரிய தன்மை என்பது பரிசுத்த ஆவியானவருடன் தொடர்பு கொண்டு இருக்க வேண்டும் என்பது தெளிவு! ஆவியானவரின்றி ஒருவர் ஆவிக்குரியவராக இருக்க முடியாது! ஆவிக்குரிய தன்மை என்பது உதவியற்ற தன்மையிலிருந்து வெளிவருகிறது. தேவன் மீது சார்ந்திருத்தல் என்பதே ஆவிக்குரிய தன்மையின் சாராம்சமாக உள்ளது. கிறிஸ்தவமானது ஆர்ப்பாட்டம் பண்ணப்படாத வரைக்கும் அற்புதமானதாகவே உள்ளது!*

*(2) ஒரு தவறான பரிசுத்த ஆவி. பரிசுத்த ஆவியை அறிவிக்கின்றவர்கள் பெரும்பாலும் வேதாகம ரீதியாக அறியாமையுடனும் மதியீனத்துடனுமே இருக்கின்றார்கள். பரிசுத்த ஆவியானவர் வேதவசன ரீதியானவராகவும் கருத்துணர்வுமிக்கவராகவும் இருக்கின்றார். அவர் "உளறுதலாக" குறைக்கப் பட்டு விடக் கூடாது. பரிசுத்த ஆவியானவர் மீது கவனம் செலுத்துகின்ற எவரொருவர் மீதும் எச்சரிக்கையாயிருங்கள். ஆவியானவர் வேதாகமத்தில் பெயரிட்டு அழைக்கப்படுவது கூட இல்லை. அவர் தேவத்துவத்தின் "திரை களுக்குப் பின்னால்" இருக்கின்ற நபராய் இருக்கின்றார். அவர் இயேசுவைக் கனப்படுத்துவதன் மூலமாக தேவனைப் பிரியப்படுத்துவதற்காகவே வாழ்கின்றார். பரிசுத்த ஆவியானவர் இப்போது தாம் பெற்றுக் கொண்டுள்ள எல்லா கவனத்தினாலும் சங்கடம் அடைவார். ஆவியான வரைக் கொண்டுள்ளதாக உரிமைகோருகின்றவர்கள் வேத வசனங்களை மறுக்கின்றார்களா அல்லது முரண்படுகின்றார்களா என்பது பற்றி எச்சரிக்கையாய் இருங்கள். ஆவியானவர் வேதாகமத்தை ஏவினார் (2 பேது.*

*1:20, 21); அவர் அதைச் சிறுமைப் படுத்தும் வகையிலோ அல்லது அதற்கு முரணான வகையிலோ எதையும் கூறவோ அல்லது செய்யவோ மாட்டார். ஆழ்ந்தறிவுள்ள வேதபாடப் படிப்பின்றி ஆவியானவரை விரும்புகின்றவர் களைக் குறித்து எச்சரிக்கையாக இருங்கள்.*

*(3) தவறான ஆவிக்குரிய பலம். இன்றைய நாட்களில் மனிதர்கள் பரிசுத்த ஆவியானவரைப் பயன்படுத்தி அட்டூழியமான வல்லமையை உரிமைகோருகின்றார்கள். பணம் "ஆகாயத்திலிருந்து கொட்டுகிறது"; எல்லா வியாதியும் குணமாகிறது; அவர்கள் வெற்றியின்மேல் வெற்றியடை கின்றார்கள். இது வாழ்வுமல்ல ஆவியுமல்ல. ஜெபம் என்பது உதவியற்றதாக உள்ளது. இதனால்தான் உண்மையான ஜெபம் என்பது இயல்புக்கு அப்பாற் பட்டதாக உள்ளது. ஆவியானவரினால் நீங்கள் சுயமகிமையைத் தேடுவீர் கள் என்றால், நீங்கள் தவறு செய்கின்றீர்கள்! தனிப்பட்ட அற்புதங்களை விரும்புதல், தனிப்பட்ட வல்லமையைக் கொண்டிருத்தல், "என்னை நன்கு தோற்றமளிப்பதற்கு" ஆவியானவரைப் பயன்படுத்திக் கொள்ளுதல் என்பது தவறானதாக உள்ளது. "நாம் ஆவியினால் நிறைந்து" இருக்க வேண்டும் என்று பவுல் கட்டளையிடுகின்றார் (எபே. 5:18). நாம் ஆவிக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று ஒருக்காலும் கட்டளை யிடப்பட்டது இல்லை. "ஆவியானவர் உள்ளாக வாசம் பண்ணுவதற்கோ" அல்லது "ஆவியானவரால் வரம்பெற்று இருப்பதற்கோ" நாம் "ஆவியினால் நிறைந்திருக்க வேண்டும்" என்று கூறப்பட்டுள்ளோம். இது நாம் கீழ்ப்படிய வேண்டிய ஒரு கட்டளையாக உள்ளது. இந்தக் கட்டளையானது உறுதியான கண்டிப்புடன் உள்ளது: "நீங்கள் நிறைந்து." இது செயப்பாட்டு வினையில் உள்ளது: "ஆவியானவர் உங்களில் நிறைவாராக." வேறு வார்த்தைகளில் சொல்லுவது என்றால், நாம் ஒரு குவளையையோ அல்லது ஒரு வாளியையோ தண்ணீர்கொண்டு நிரப்புவது போல் பரிசுத்த ஆவியான வரை நாமே நிரப்பிக் கொள்ளுவதில்லை. பரிசுத்த ஆவியானவர் நமக்குள்ளாக வாசம்பண்ணுகின்றார். நாம் நம்மையே விட்டு கொடுக்கும் போது (துறக்கும்போது), ஆவியானவர் நம்மை ஆசீர்வதிக்க அனுமதிக்கப் படுகின்றார். நாம் நம்மையே சாத்தானுக்கோ அல்லது ஆவியானவருக்கோ கொடுக்க முடியும்.*

*(4) தவறான, பிள்ளைத்தனமான மதியீனம். தவறான கருத்துக்களும், பிள்ளைத்தனமான கிறிஸ்தவர்களும் ஆவிக்குரியவைகளாயிராமல் மாம்சத்திற்குரியவைகளாய் உள்ளன[ர்] (1 கொரி. 3). ஆவியானவர் புத்தி சாலித்தனமற்றவராக இருப்பதில்லை, அதாவது அவர் பிள்ளைத்தனமான குழப்பத்தினால் நிறைந்திருப்பதில்லை. ஆவியானவர் அப்போஸ்தலர் களுக்குச் சகல சத்தியங்களையும் போதிப்பார் என்று இயேசு கூறினார் (யோவா. 13-17). இந்த வசனத்தினால் உலகமானது பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும் நியாயத்தீர்ப்பைக் குறித்தும் உணர்த்தப்பட்டது (யோவா. 16:7-11). அப்போஸ்தலர்களுக்கு இயேசுவானவர் என்னவாக இருந்தாரோ, அதே விதமாகவே நமக்கு ஆவியானவர் இருக்கின்றார். மனம் புதிதாகிறதினால் மட்டுமே பக்குவம் வருகிறது (ரோமர் 12:1, 2). "இயேசுவே பதில்" என்று வாகனங்களில் ஒட்டப்பட்டுள்ள சிறு தாள்கள் சத்தமிடு*

*கின்றன. எதற்கு அவர் பதிலாய் இருக்கின்றார்? இயேசு தாம், "வழியும் சத்தியமும் ஜீவனுமாய்" இருப்பதாக மட்டுமே உரிமைகோரியிருந்தார் (யோவா. 14:6).*

வேதாகமம் என்பது தேவனுடைய கடைசி வார்த்தையாக உள்ளது. இந்த சத்தியத்தை நாம் ஒருக்காலும் மறக்கக் கூடாது. வேதாகமம் என்னுடைய இரக்கத்தின் கீழ் இருப்பதில்லை. "வேதாகமம் எனக்குக் கூறுகிறது" என்று கூறுவது தவறானதாக உள்ளது. "வேதாகமம் இவ்வாறு கூறுகிறது" என்பதே சரியானதாக உள்ளது. தேவனுடைய சபை என்பது ஒரு சர்க்கஸ் வித்தை காட்டும் இடம் அல்ல. ஆவியானவர் வித்தைகள் செய்வதில்லை. தனிப்பட்ட அனுபவங்கள் என்பவை எவ்வளவுதான் பொக்கிஷம் போல் பாதுகாக்கப்பட வேண்டியவையாய் இருப்பினும் அவை வேதாகமத்திற்கு இணையானதாக இருப்பதில்லை. இது [வேதாகமம்] முற்றானதாகவும் நிறைவானதாகவும் உள்ளது.

*(5) பொய்யான வல்லமை.* ஆவியானவர் நமது வல்லமையாக உள்ளார், ஆனால் இப்படிப்பட்ட வலியுறுத்தமானது இலகுவாகத் தவறாய்ப் பயன்படுத்தப்படக் கூடும். வல்லமைக்காகவே வல்லமையை நாடுதல் என்பது மந்திர வேலை செய்தலாக உள்ளது. மந்திர வேலை அல்லது சூனிய வித்தை என்பது தவறானதாக உள்ளது, ஏனென்றால் மந்திரவாதிகள் வல்லமையின் நபரின்றி மிக உயர்ந்த வல்லமையை விரும்புகின்றார்கள். தேவனுடன் ஒரு தனிப்பட்ட உறவின்றி வல்லமை என்பது தவறானதாக உள்ளது. ஆவியானவர் ஒரு நபராக உள்ளார்; நாம் அவரை ஒரு செயல்நிகழ்வாகக் குறைத்துவிடக் கூடாது.

## உண்மைகள், உண்மைகள் மற்றும் அதிகமான உண்மைகள்

நாம் பின்வரும் மூன்று காரணங்களுக்காக "ஆவியில்" ஜெபிக்கின்றோம்:

(1) இது ஜெபத்தை அதன் இயந்திரத்தன்மையில் இருந்து உயர்த்துகிறது. நாம் "மதத்தில் நிபுணர்களாக" இருந்து "ஆவியில் மரித்தவர்களாகி" விடக் கூடும். ஜெபம் என்பது பிதாவினால் வெளிப்படுத்தப்பட்டு, குமாரனால் நடைமுறைப்படுத்தப்பட்டு, ஆவியானவர் நமக்கு வல்லமை அருளுகின்ற அளவுக்கு, அவ்வளவு பெரியதாக உள்ளது. ஜெபம் இயந்திரத்தனமானதாகவோ அல்லது ஆவிக்குரியதாகவோ இருக்கிறது - அது இரண்டுமாக இருக்க முடியாது.

தேவனிடத்தில் நாம் வழிகாட்டுதலைக் கேட்கும்போது, அவர் "உன் வாழ்வை எனக்குத் தா" என்று மட்டுமே கூறுகின்றார். இது உண்மை நிலையாக, முன்னுரிமையாக உள்ளது. தேவன் தனிப்படுத்தப்பட்ட, குறிப்பிட்ட விஷயங்களில் நம்மை வழிநடத்த விரும்புவதில்லை. தேவன் நம்முடைய வாழ்வைக் கேட்கிறார். நாம் நமது வாழ்வு முழுவதையும் அவருக்குத் தர மறுப்பதால், நம் வாழ்வின் குறிப்பிட்ட பகுதிகளில் பிரச்சனைகளைக் கொண்டிருக்கின்றோம்.

*பிரமாணத்தின் ஆவியானவரைப் புறக்கணித்து விட்டு, பிரமாணத்தின் கடிதத்தை வைத்துக் கொண்டிருத்தல் என்பது சுலபமானதாகவே உள்ளது. சிலர், "சாத்தானுக்கு அஞ்சுவதைக் காட்டிலும் பரிசுத்த ஆவியானவருக்கு அதிகமாய் அஞ்சுகின்றார்கள்!" ஆவிக்குரிய ஜெபம் சிந்தனையையும் ஆழத்தையும் வேண்டுகிறது. சிந்தனைக்கு "தட்டிக் கொடுக்கும் பதில்களை" பலர் தேர்ந்து கொள்வார்கள். சிந்தித்தல் என்பது முடிவுகளை உள்ளடக்கு கிறது. ஆழம் என்பது அனுபவத்திலிருந்த வளர்ச்சியை வேண்டுகிறது. நம்மில் மிகச் சிலரே அந்த அளவுக்கு முன்னேறியுள்ளோம். உணர்வு என்பது வேத வசனரீதியானது, உணர்வுப்பூர்வமாகுதல் என்பது அப்படியல்ல. நாம் ஒருக்காலும் உணர்வுக்கு அஞ்சக் கூடாது. ஆவியானவருக்குள் ஜெபித்தல் என்பது ஜெபத்தை இயந்திரத்தனமான வழிபாட்டிலிருந்து தனிப்பட்ட ஆவிக்குரிய தன்மைக்கு உயர்த்துகிறது.*

*(2) நாம் எப்படி ஜெபிப்பது என்பதை அறிவதில்லை (ரோமர் 8:26). நான் எவ்வளவு நீண்ட நாட்கள் வாழ்கின்றேனோ, அவ்வளவுக்கு நான் எவ்வளவு கொஞ்சமாய் அறிந்துள்ளேன் என்பதை அறிகின்றேன். நான் இளைஞனாயிருந்தபோது, என்னிடத்தில் எந்தக் கருத்துணர்வும் இருந்த தில்லை - ஆனால் அதை நான் அறிந்திருக்கவில்லை! இப்போது நான் முதிய வனாகியுள்ளேன், நான் [இன்னும் ஏராளமானவற்றை] அறிவதில்லை என்று அறிகின்றேன்! நமது பலவீனங்களில் பரிசுத்த ஆவியானவர் உதவுகின்றார். ரோமர் 8ம் அதிகாரம், வெற்றிகரமான கிறிஸ்தவ வாழ்வைப் பற்றிய ஒரு அதிகாரமாக உள்ளது. தேவனுடைய ஆவியானவரே கருவியாக உள்ளார். ரோமர் 8ம் அதிகாரம், ஆவியானவர் நமது வாழ்வில் முழுமையாக ஈடுபடுத்தப்படுகின்றார் என்று நமக்குப் போதிக்கிறது. இது, அவர் நமது ஜெபங்களில் முழுமையாக ஈடுபடுத்தப்படுகின்றார் என்று அர்த்தப் படுகிறது. நாம் ஆவியானவருக்குள் கிறிஸ்துவின் அதிகாரத்தினால் தேவனிடத்தில் ஜெபிக்கின்றோம்! ரோமர் 8ம் அதிகாரம், நம்மை மறுரூபப்படுத்துதல் என்பதே ஆவியானவரின் முக்கிய பணியாக உள்ளதென்று நமக்குப் போதிக்கிறது. சிலுவையினருகில் கோழைத்தன மாயிருந்த அப்போஸ்தலர்கள் பெந்தெகோஸ்தே நாளன்று கெர்ச்சிக்கும் சிங்கங்கள் போல ஆனார்கள். "நேர்மையான எண்ணம்" அல்லது "நல்ல சூழ்நிலை" என்பது மாறுபாடாய் இருந்ததில்லை. ஆவியானவரே இந்த மாறுபாடாக இருந்தார். ஆவியானவர் அவர்களை மாற்றினார். இந்த உண்மையானது (நாம்) தப்பிக்க வகையில்லாததாக உள்ளது: நம்மில் பலர் நமது வாழ்வில், சிறிதே இயக்கத்தை அல்லது மகிழ்வைக் கொண்டிருக்கின் றோம். ஆவியானவர் தமது வசனத்தின் மூலமாக நமக்கு தைரியத்தையும் மகிழ்ச்சியையும் கொடுப்பார். நாம் "தேவனுடைய பிள்ளைகளாக" இருக்கின்றோம்; நாம் அநாதைகள் போல் வாழக்கூடாது! ஆவியானவரால் நிறைந்த வாழ்வுகள், வாழ்வுகளை மாற்றும் மற்றும் இல்லங்களை மாற்றும்.*

*(3) பரிசுத்த ஆவியானவர் நமக்காக வேண்டுதல் செய்கின்றார். ரோமர் 8:26, 27 வசனங்கள் பின்வருமாறு கூறுகின்றன:*

> அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவி

*செய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ளவேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர்தாமே வாக்குக் கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல்செய்கிறார். ஆவியானவர் தேவனுடைய சித்தத்தின்படியே பரிசுத்தவான்களுக்காக வேண்டுதல் செய்கிறபடியால், இருதயங்களை ஆராய்ந்து பார்க்கிறவர் ஆவியின் சிந்தை இன்னதென்று அறிவார்.*

*இந்தக் கூற்று கடினமானதாக உள்ளது - ஆனால் ஏன் இதைப் போராட வேண்டும்? ஏன் இதனைப் போக்குக்காட்ட வேண்டும்? ஆவியானவர் வேண்டுதல் செய்கின்றார். இயேசு ஒருவரே தேவனுக்கும் மனிதனுக்கும் இடையில் மத்தியஸ்தராக இருக்கின்றார் (1 தீமோ. 2:5). ஆயினும் கிறிஸ்தவர்கள் ஒருவர் மற்றவருக்காக வேண்டிக்கொள்ள முடியும் என்றால், ஆவியானவர் ஏன் அதைச் செய்ய முடியாது? பல ஆண்டுகளுக்கு முன்பாக யாரோ ஒருவர், கிறிஸ்தவர்கள் ஆவியானவர் இல்லாத நிலையில் "இரட்சிக்கப்படுகிறார்கள், பரிசுத்தமாக்கப்படுகிறார்கள், பளபளப்பாக்கப் படுகிறார்கள், கல்லாக்கப்படுகிறார்கள்" என்று கணித்துள்ளார். எவ்வளவு பரிதாபகரமானது! இயேசு நமக்காகப் பரிந்து பேசுகின்றார். ஆவியானவர் நமக்காக சொல்லொண்ணா வலிவார்ந்த வகையில் பரிந்து பேசுகின்றார். என்ன ஒரு தேவன்! என்ன ஒரு இரட்சகர்! என்ன ஒரு ஆவியானவர்!*

## *அக உணர்வுசார்ந்த அதிகாரத்துவம்*

*கிறிஸ்தவமானது புற உணர்வுசார்ந்த மற்றும் அக உணர்வுசார்ந்த அதிகாரத்துவத்தை அடக்கியுள்ளது. வேதாகமம் தேவனுடைய புற உணர்வு சார்ந்த அதிகாரத்துவமாக உள்ளது. "கர்த்தர் இவ்வாறு கூறுகின்றார்." நம்புங்கள் மற்றும் கீழ்ப்படியுங்கள். ஆயினும், நாம் அக உணர்வைப் புறக்கணிக்கும் அளவுக்குப் புற உணர்வை வலியுறுத்துகின்றோம். வேதாகமம், மதரீதியான நமது நிறைவான அதிகாரத்துவமாக உள்ளது. ஆயினும், வேதாகமத்தின் மாபெரும் கொள்கைகள் பல, அக உணர்வு சார்ந்ததாக உள்ளன. ஞானம் என்பது அக உணர்வு சார்ந்ததாக உள்ளது. அருளிரக்கம் என்பது அகஉணர்வு சார்ந்ததாக உள்ளது. மனச்சாட்சி என்பது அக உணர்வு சார்ந்ததாக உள்ளது. முரண்பாடுபோல் தோன்றும் மெய்யுரை என்ற வகையில், ஒரு கிறிஸ்தவர் "விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்ட உணவு" பற்றி இன்னொரு கிறிஸ்தவரின் கருத்திலிருந்து மாறுபடலாம். நாம் புறநிலைக் கருத்துக்களை அகநிலைக் கருத்துக்களுடன் ஒருக்காலும் குழப்பிக் கொள்ளக்கூடாது. நாம் அக உணர்வு சார்ந்த அதிகாரத்துவத்தை மனிதக் கருத்துக்கள், சபலங்கள், அல்லது உணர்வுகள் என்பவற்றுடன் ஒருக்காலும் குழப்பிக்கொள்ளக் கூடாது. அக உணர்வு சார்ந்த அதிகாரத் துவம் என்பது ஒரு அதிகாரத்துவமாக உள்ளது (ரோமர் 14:23). அக உணர்வு சார்ந்த அதிகாரத்துவம் என்பது நமது சுயநலமாக இருப்பதில்லை. பக்குவம் அடைதல் என்பது அக உணர்வு சார்ந்ததாக உள்ளது. பண்பு என்பது அக உணர்வு சார்ந்ததாக உள்ளது. உலகப் பிரகாரமான தன்மை என்பது எதிர்மறை அக உணர்வு சார்ந்ததாக உள்ளது.*

*அக உணர்வுசார்ந்த நிலையில், ஜெபம் நிரூபிக்கப்பட முடியாது. ஞானம் நிரூபிக்கப்பட முடியாது. வஞ்சிக்கப்பட்ட மக்களால் ஏற்படுத்தப் படும் மூர்க்கத்தனமான உரிமைகோருதல்கள் பற்றி எச்சரிக்கையாயிருங்கள். அகநிலை உணர்வு பற்றி எச்சரிக்கையாய் இருங்கள். வழிநடத்துதல் என்பது அக உணர்வு சார்ந்ததாக உள்ளது. தேவன் ஒரு கரும்பலகையுடனும் பதில்களை நமக்காக அதில் எழுதி வைத்தலுடனும் வருவதில்லை. வேதாகமம் நமக்கு நித்திய கொள்கைகளைப் போதிக்கிறது. பண்பு என்பது மிக உயர்வான ஒழுக்க நெறிகளை நமக்குள் நாட்டுகிறது ... பின்பு திட்டவட்டமானவைகள் நம்முடையவைகளாக உள்ளன. தேவன் - இயந்திர மனிதர்களை அல்ல ஆனால் - புத்திரர்களை விரும்புகின்றார். தேவன் - பிள்ளைத்தனமானவர்களையல்ல ஆனால் - வயது வந்தவர்களை விரும்புகின்றார். "இருப்புப்" பிரச்சனைகளுக்கு "தட்டிக் கொடுக்கும்" பதில்களுடன் உள்ள எளிய சட்ட புத்தகம் என்று ஒன்றும் இருப்பதில்லை. நாம் பொறுப்புள்ளவர்களாய் இருக்க வேண்டும் என்றே தேவன் விரும்பு கின்றார். நாம் பக்குவம் உள்ளவர்களாய் இருக்க வேண்டும் என்றே தேவன் விரும்புகின்றார். நாம் எவ்வாறு வாழவேண்டும் என்று தேவன் நமக்குக் கூறுகின்றார் - ஆனால் அவர் குறிப்பிட்ட வேலையைச் சட்டபூர்வமாக்கு வதில்லை. கிறிஸ்தவர்களுக்குத் தேவைப்படுகிற வாழ்க்கைத் துணையின் வகையைத் தேவன் நமக்கு கூறுகின்றார், ஆயினும் பெயர்கள் எதுவும் அளிக்கப்பட்டு இருப்பதில்லை. நாம் தேவனுடைய சிந்தையையும் சித்தத்தையும் கொண்டிருப்பதற்கு வேதாகமத்தைப் படிக்கின்றோம். நாம் அதை நடைமுறைப்படுத்துவதற்கான ஞானத்திற்காக ஜெபிக்கின்றோம். ஜெபத்தில் ஆவியானவர் உள்ளடங்கியிருக்கப் பெறுவது பற்றி தனிச்சிறப்பு அல்லது குழப்பமூட்டும் அம்சம் எதுவும் இருப்பதில்லை.*

*தேவனை நாம் ஆவியோடு தொழுதுகொள்ளுகின்றோம் (யோவா. 4:23, 24). மனிதன் தன் முழங்கால்களில் இருந்து பரலோகத்தை எட்டுவது என்பது அவனது மாபெரும் உயரமாக உள்ளது! ஆவியானவரால் நிறையப் பெற்ற கிறிஸ்தவர்களில் இருந்து மட்டுமே ஆராதனை வரமுடியும் (எபே. 5:18). ரோமர் 8ம் அதிகாரமானது, தேவனுடைய அருளிரக்கமுள்ள கிருபையின் மீதான மாபெரும் அதிகாரமாக உள்ளது - இதில் பரிசுத்த ஆவியானவரே முக்கிய பாத்திரமாக இருக்கின்றார் (மத். 7:11; லூக். 11:13ஐக் காணவும்). பரிசுத்த ஆவியானவர், தேவனுடைய ஆசீர்வாதங் களில் நமக்கு உதவி செய்வதில், தேவனின் முகமையாக இருக்கின்றார். ஜெபிக்க மிகவும் கடினமாக இருக்கும்போது, கடினமாக ஜெபியுங்கள்!*

*"ஆண்டவரே, நான் ஜெபத்தில் நம்பிக்கை*
*கொள்ளுவதில்லை. நான் உம்மை நம்புகின்றேன்.*
*விசுவாசத்துடன் ஜெபிக்க எனக்குப் போதியும்."*

*12*

# ஜெபம்

## உபவாசித்தல், 1

*உபவாசத்தைப் பற்றிய இந்தக் கண்ணோக்கானது ஆழ்ந்தறிவுள்ள வகையில் தனிப்பட்டதாயிருக்கும். நான் உபவாசத்திற்கு அந்நியனாக உள்ளேன் ... இதில் நான் தகுதி வாய்ந்த புதிதாய்க் கற்பவனாகக் கூட இருப்பதில்லை. இதில் சாக்குப்போக்கு எதுவும் இருப்பதில்லை. பல ஆண்டுகளாக நான் உபவாசித்தல் என்பதினால் மனங்கவரப்பட்டுள்ளேன். நான் அதைப் பற்றிப் படித்துள்ளேன், அதைப் பற்றிப் பேசியுள்ளேன், அதைப் போதித்துள்ளேன், அதைப் பற்றி எழுதியுள்ளேன். அதை நடைமுறைப்படுத்துதல் என்பதைத் தவிர மற்ற எல்லாவற்றையும் நான் செய்துள்ளேன். இந்தப் பாடங்களை எழுதுவதில், நான் உபவாசித் துள்ளேன், ஆனால் முறையாக அல்ல. இது எனக்கு வெட்கக்கேடாக உள்ளது!*

*இருப்பினும் நான் உபவாசிக்க வேண்டும்! ஆத்துமாவின் ஆழம் ஜெபத் தினால் மட்டுமே அளக்கப்பட முடியும். குறிப்பிட்ட சில விஷயங்கள் ஜெபத்தினாலும் உபவாசத்தினாலும் மட்டுமே வரமுடியும் என்று இயேசு கூறினார் (மாற். 9:29). ஜெபமின்றி எந்த ஒரு கிறிஸ்தவரும் ஆவிக்குரிய வகையில் விற்பன்னராக முடியாது. எனக்கு இது "மிகச் சிறியதாக, மிகத் தாமதமானதாக" இருக்கலாம், ஆனால் நான் வாரம் ஒருமுறை உபவாசிக்க நோக்கங் கொண்டுள்ளேன் (நான் அதை வாக்களிக்கவில்லை). ஜெபிப்பதி னாலேயே நீங்கள் ஜெபிக்கக் கற்றுக் கொள்ள முடியும். உபவாசித்த லினாலேயே நீங்கள் உபவாசிக்கக் கற்றுக் கொள்ள முடியும்.*

*நான் தனியாக இருப்பதில்லை. ஒரு சில கிறிஸ்தவர்கள் உபவாசிக் கின்றார்கள். ஒரு சிலர் உபவாசிக்க விரும்புகின்றார்கள் அல்லது நோக்கங் கொள்கின்றார்கள். நாம் பேசுகின்றோம் மற்றும் உண்ணுகின்றோம்; ஆதி சபையார் ஜெபித்து உபவாசித்தார்கள். ஜெபிக்கப் பிரயாசப்படுகின்ற நல்ல சகோதரர்கள் கூட உபவாசித்தலில் நோக்கங் கொண்டிருப்பதில்லை. "எதிர்ப்புத் தெரிவிக்கும் அமைதி" என்பதை விட அதிகமாக "காது கேட்காத அமைதி" என்று எதுவும் இருப்பதில்லை. ஆதாரமற்ற வகையில் வாதம் செய்யும் "மகா பரிசுத்தவான்கள்" கூட, உபவாசத்தை மறுப்பதற்கு ஆழ்ந்தறி வுள்ள ஜெபவாழ்வுகளை சாட்சியளிக்கின்றார்கள்! உபவாசம் என்பது மகிழ்ச்சியற்றதாகக் காணப்படலாம், ஆனால் அதுதான் ஒரு கிறிஸ்தவரின் வாழ்வில் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்ட அனுபவமாக இருக்க வேண்டும். ஜெபத்தைப் பற்றி பல புத்தகங்கள் எழுதப்பட்டுள்ளன, ஆனால் உபவாசத் தைப் பற்றி புத்தகங்கள் எழுதப்பட்டதில்லை ... ஜெபம் என்பது உள்ளான*

*தாக உள்ளது ... உபவாசம் என்பது வெளியானதாக உள்ளது. நான் விலை கொடுக்கத் தயாராக உள்ளேனா? நீங்கள்? உபவாசமின்றியே நாம் ஜெபத்தில் உண்மையில் வளர முடியுமா?*

*சிந்திப்பதற்கு நிறுத்துங்கள்! இந்த அறிவுறுத்தலுக்காக நான் எனது அன்பார்ந்த நண்பரான யூஜீன் கேரலுக்கு நன்றி நிறைந்தவனாக இருக்கின் றேன். உபவாசம் என்பது உண்மையில் சாதாரணமானதாக, தானே இயங்குவதாக உள்ளது! உபவாசம் என்பது, ஆழ்ந்தறிவுள்ள தேவையினால் ஏற்பட்ட அவசரத்தைத் தொடர்ந்து வருகிறது. நாம் நமது சார்ந்திருக்கும் தன்மையை அறிக்கையிட்டு, தீர்வுகளுக்காக நமது தேவனிடத்தில் திரும்புகின்றோம். துன்பம் நேரிடும்போது, நாம் என்ன செய்கின்றோம்? நாம் வேலை செய்வதை, உண்பதை, விடுமுறையில் செல்வதை நிறுத்தி விடுகின்றோம். துன்பத்தைத் தவிர வேறு எதையும் நாம் பொருட்படுத்து வதில்லை. மருத்துவமனையில், மிகவும் இடர்ப்பாடான வேளையில், குடும்பமானது உண்பதில், பொழுதுபோக்கில், வாழ்வில் ஆர்வமாய் இருப்பதில்லை. குடும்பம் வருகிறது, மற்றும் சபை வருகிறது; நாம் துன்பத்தைக் கையாளுவதற்காக வாழ்விலிருந்து விலகுகின்றோம். உபவாசம் என்பது இயல்பானதாக உள்ளது!*

*உபவாசிக்காமல் இருப்பதற்கான நமது காரணங்கள் யாவும், வழக்கமாகச் சாக்குப்போக்காகவே உள்ளன. ஆம், உபவாசித்தலில் மாய்மாலத்தன்மையை இயேசு கண்டனம் பண்ணினார் (மத். 6:16-18). ஆயினும், குழல் ஊதுவித்து தர்மம் கொடுப்பதையும், தெருச் சந்திகளில் நீண்ட ஜெபங்களையும் கூட இயேசு கண்டனம் பண்ணினார் (மத். 6). தவறாகப் பயன்படுத்தி விடுவோமோ என்ற அச்சமானது ஒருக்காலும் பயன்பாட்டை நிறுத்தி விடக் கூடாது. வேதாகமம் நகைச் சுவை உணர்வு உடையதாக உள்ளது. "ஆவிக்குரியவராகக் காணப்படு வதற்காக" முகத்தை வாடலாக வைத்துக்கொள்ளுதல் என்பதை விட வேடிக்கையானதை நீங்கள் எங்காவது காண முடியுமா? பெருமையானது நம்மை எவ்வளவு அற்பர்கள் ஆக்குகிறது! "நோய்வாய்ப்பட்டது போன்ற தோற்றமானது" ஒருவரை எப்படி பக்தியுள்ளவராக காணப்படச் செய்ய முடியும்?*

*உபவாசித்தல் என்பது ஆவிக்குரிய வகையில் வலிவார்ந்த ஒழுங்கு முறைக்காக சாதாரண நடவடிக்கைகளை மறுத்திருத்தல் என்பதாக உள்ளது. இது மேன்மையான சிலவற்றிற்காக நல்லவைகள் சிலவற்றை விட்டுக் கொடுத்தலாக உள்ளது. இது சரீரத்தின் மீது ஆவியின் அதிகாரத் துவத்தை குறிக்கிறது (மாம்சமே வழக்கமாக ஜெயிக்கிறது). இது நமது ஆத்துமாக்களைப் பக்குவப்படுத்த நாம் நமது சரீரங்களை பயன்படுத்த அனு மதிக்கிறது. உடலுக்கு உடற்பயிற்சி எப்படியோ அப்படியே ஆத்துமாவிற்கு உபவாசமும் உள்ளது. உபவாசமானது வழக்கமானவற்றை, பழக்கத்தின் அடிமைத்தனத்தை உடைக்கிறது. உபவாசம் என்பது நாம் "மிகவும் தீவிரமாய்" இருக்கின்றோம் என்பதை அறிவிக்கிறது. உபவாசம் நம்மை முற்றிலும் தேவன்மீது சார்ந்திருக்கும்படி அனுமதிக்கிறது. உபவாசம் நமது உடல்களை கீழ்ப்படிதலுக்குக் கொண்டு வருகிறது, இது நமது மனங்களை சிந்திக்க அனுமதிக்கிறது.*

# இயேசுவின் நாமத்தில் ஜெபித்தல்

## யோவான் 14:13, 14; 15:7; 16:23-26

*"நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக, அதைச் செய்வேன். என் நாமத்தினாலே நீங்கள் எதைக்கேட்டாலும் அதை நான் செய்வேன்" (யோவா. 14:13, 14).*

*"நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்" (யோவா. 15:7).*

*"... நீங்கள் என் நாமத்தினாலே பிதாவினிடத்தில் கேட்டுக்கொள்வதெதுவோ அதை அவர் உங்களுக்குத் தருவார். இதுவரைக்கும் நீங்கள் என் நாமத்தினாலே ஒன்றும் கேட்கவில்லை; ... அந்த நாளில் நீங்கள் என் நாமத்தினாலே வேண்டிக்கொள்வீர்கள், உங்களுக்காகப் பிதாவை நான் கேட்டுக்கொள்வேனென்று உங்களுக்குச் சொல்ல வேண்டியதில்லை" (யோவா. 16:23, 24, 26).*

இந்தப் பாடம் மிகவும் முக்கியமானதாக உள்ளது. நமது முழுப் பாடமும் என்ன கூற வேண்டும் என்று நாம் விரும்புகின்றோமோ, அதை இந்தப் பாடம் தொகுத்துரைக்கும் என்று நான் நம்புகின்றேன். இது, ஜெபம் என்பது எது மற்றும் ஜெபம் என்பது எதுவல்ல என்பவற்றை நமக்குப் போதிக்கும். இந்தப் பாடம் ஜெபத்தைக் குறித்து இரண்டு பிரதானமான (சாவுக்கேதுவான) தவறுகளை வெளிப்படுத்துகிறது: (1) ஜெபம் நம்மைத் தோல்வியடையச் செய்கிறது என்று நாம் நம்புகின்றோம்: ''நான் சிலவற்றிற்காக ஜெபித்தேன், அவற்றைப் பெற்றுக் கொள்ளவில்லை." மிக ஏராளமானவர்கள் சந்தேகத்துடனேயே தேவன் மீது எவ்வித விசுவாசம் இன்றியே ஜெபிக்கின்றார்கள். (2) நாம் ஜெபத்தை, "நீங்கள் விரும்புகின்ற எதையும் பெறுதல்" என்ற மந்திர வித்தையாகவே கண்ணோக்குகின்றோம்! இது விசுவாசமல்ல, இது ஆராயாமல் ஏற்றுக்கொள்ளும் உத்தேசமாக உள்ளது. இது (தேவனல்ல ஆனால்) நாமே விளைவுகளை உண்டாக்குகின்றோம் என்று அர்த்தப்படுகிறது. நான் ஜெபித்ததினால் நான் ஜெபித்துக் கொண்ட விஷயம் நடந்தேறும் என்று விசுவாசிப்பதற்கும், எனது விசுவாசத்தின் பதில்செயலாக தேவன் பதில் அளிப்பார் என்று விசுவாசிப்பதற்கும் இடையில் பெரிய வித்தியாசம் உள்ளது.

# இயேசுவின் நாமத்தில் ஜெபித்தல் என்பது எதுவாக இருப்பதில்லை

*இயேசுவின் நாமத்தில் ஜெபித்தல் என்பது பின்வருவனவாக இருப்பதில்லை ...*

*(1) நைந்துபோன சொற்றொடர். மிகப் பெரும்பாலானவர்கள், ஒவ்வொரு ஜெபமும் "இயேசுவின் நாமத்தினாலே" என்று முடிய வேண்டும் என்று முடிவு செய்கின்றார்கள். நாம் இயேசு இல்லாமலோ அல்லது அவரது நாமம் இல்லாமலோ ஜெபிக்க இயலாது. ஆயினும், இயேசுவின் நாமத்தில் ஜெபித்தல் என்பது ஒரு ஜெபத்தை "இயேசுவின் நாமத்திலே" என்று முடித்தலை விட எவ்வளவோ அதிகமானதாக உள்ளது. ஒரு கிறிஸ்தவர் சிந்திக்கின்ற, சொல்கின்ற அல்லது செய்கின்ற ஒவ்வொன்றுமே "இயேசுவின் 'நாமத்தில்' தான் உள்ளது" (கொலோ. 3:17). ஒருவர் "இயேசுவின் நாமத்தில்" ஜெபிக்காமலேயே, [தமது] ஜெபத்தை "இயேசுவின் நாமத்திலே" என்று முடிக்கக் கூடும். இயேசுவின் நாமத்தில் ஜெபித்தல் என்பது ஒரு அறிவிப்பு என்பதைக் காட்டிலும் மேலானதாக - ஆவிக்குரிய உண்மை நிலையாக உள்ளது.*

*(2) ஒரு கட்டளை. ஜெபம் என்பது ஒரு வேண்டுகோளாக உள்ளது, இது ஒரு வற்புறுத்துதலாக இருப்பதில்லை. இயேசுவின் நாமத்தில் வற்புறுத்துவதற்குக் கிறிஸ்தவர்கள் உரிமை கொண்டுள்ளதாகச் சிலர் எவ்விதத் தயக்கமும் இன்றி போதிக்கின்றார்கள். ஜெபம் என்பது கேட்குதலாக உள்ளது - இது வற்புறுத்துதலாக இருப்பதில்லை. ஜெபம் என்பது உதவியற்ற தன்மையாக உள்ளது. ஜெபம் கட்டளையிடுகிறது என்ற கருத்தானது ஜெபத்தின் கருத்தையே முரண்பட்டு நிற்கிறது. இது நகைக்கத் தக்கதாக உள்ளது. தேவன் ஜெபத்தினால் பிணை வைக்கப்படுவது இல்லை. சபையானது ஒருமுறை தனது பாவங்களை அறிக்கையிட்டது; இப்போது அது தனது உரிமைகளை எடுத்துரைக்கிறது. தேவனல்ல, சபையே தவறானதாக உள்ளது. தேவன் மட்டுமே ஜெபத்திற்குப் பதில் அளிக்கின்றார். நாம் விரும்புவதைப் பெறுவதற்காக அவர் நமக்கு ஒரு கருவியாகக் குறைக்கப்பட மாட்டார். "என்னுடைய சித்தம் செய்யப்படுவதாக" என்பது "உம்முடைய சித்தம் செய்யப்படுவதாக" என்பதாக இருப்பதில்லை. சுயநலம், வல்லமை மற்றும் அங்கீகாரம் ஆகியவை ஜெபத்தின் எதிரிடைகளாக உள்ளன, ஆயினும் பொய்யான தேவபக்தியானது ஒரு மாபெரும் செயல்தாக்கத்தை ஏற்படுத்திற்று. தேவன் - தங்கள் காலத்திற்கேற்ற மற்றும் தங்கள் நிபந்தனைகளின்படியான - எல்லா ஜெபங்களுக்கும் இணக்கமாவார் என்பதாக எத்தனை மக்கள் நினைக்கின்றார்கள் என்பது திகைக்கச் செய்வதாக உள்ளது! ஜெபத்தைப் பற்றித் தெளிவில்லாத சிந்தனைகள் மிக அதிகமாக உள்ளன. விசுவாசத்தில் கேளுங்கள், ஆனால் வற்புறுத்தாதீர்கள். தேவன் தமது கிருபையிலிருந்தே கொடுக்கின்றார். நமது சபலங்களின் காரணமாக அவர் கொடைகளை கொடுக்கும்படி நிர்ப்பந்திக்கப்பட முடியாது. இது தேவனுக்கும் ஜெபத்திற்கும் அவமானமாக உள்ளது. நாம் யாவரும் பிச்சைக்காரர்களாக உள்ளோம். இயற்கையிலேயே, பிச்சைக்காரர்கள்*

*எதையும் வற்புறுத்திக் கேட்க இயலாது. "பிச்சைக்காரர்கள் தேர்ந்து கொள்பவர்களாக இருக்க இயலாது."*

## இயேசுவின் நாமத்தில் ஜெபித்தல் என்பது எதுவாக இருக்கிறது

*இயேசுவின் நாமத்தில் ஜெபித்தல் என்பது பின்வருவனவற்றை உள்ளடக்குகிறது:*

*(1) சுயத்தைத் துறத்தல். இன்னொருவரின் நாமத்தில் ஜெபித்தல் என்பது சுயத்தை முற்றிலுமாக துறத்தல் என்பதை வற்புறுத்துகிறது. ஜெபம் என்பது சுயத்தை உறுதிப்படுத்துதலாக இருப்பதில்லை - இது சுயத்தை மறுத்தலாக உள்ளது. ஜெபம் என்பது உதவியற்றவர்களுக்கு மட்டுமான தாகவே உள்ளது. ஜெபம் என்பது சுயத்தின் முற்றான கடன்தீர்க்கப்பட முடியாத நிலையை மறைமுகமாய் உணர்த்துகின்றது. அவரது நாமத்தில் ஜெபித்தல் என்பது நம்மிடமிருந்து விடுவிக்கப்படுதலாக உள்ளது. நாம் இப்போது இயேசுவுக்கு உரியவர்களாகும்படிக்கு சுயாதீனமாக உள்ளோம், இயேசுவுக்கு மாத்திரமே.*

*(2) இயேசுவை ஏற்றுக் கொள்ளுதல். இயேசு நமது பிரதிநிதியாக இருக்கின்றார். எவரொருவரும் தேவனுடைய பிரசன்னத்திற்குள் பிரவேசிக்க இயலாது. ஆகையால், எல்லா ஜெபமும் "இயேசுவின் நாமத்தினாலேயே" இருக்க வேண்டும். அவர் மட்டுமே தேவ ஆட்டுக் குட்டியாக இருக்கின்றார். கிறிஸ்தவர்கள் தேவனுடைய அரியணைக்கு முன்பாக ஒரே ஒரு காரணத்தினாலேயே தைரியமாய்ச் சேருகின்றார்கள், ஒரு காரணத்தினாலேயே மாத்திரமே: [நம்மை] தகுதிப்படுத்தும் இயேசுவின் இரத்தம் (எபி. 4:14-16). "இயேசுவின் நாமத்தில்" ஜெபித்தல் என்பது, ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு பெயரின் கீழ் ஜெபித்தலாக உள்ளது. "இயேசுவின் நாமத்தில்" ஜெபித்தல் என்பது ஒரு பரிசுத்த நம்பிக்கையாக, ஒரு புனிதமான சிலாக்கியமாக உள்ளது. இயேசு தம் நாமத்தை நமக்கு நேர்ப்பொருளில் கொடுத்துள்ளார்! இது நம் நித்திய உடைமையாக உள்ளது.*

*(3) தேவனைக் கனப்படுத்துதல். யோவான் 14:13, 14ஐ மீண்டும் வாசியுங்கள். நாம் பிதாவை மகிமைப்படுத்துவதற்காக மட்டுமே இயேசு நம்மை ஆசீர்வதிக்கின்றார்! கள்ள தீர்க்கதரிசிகள் முதல் பாகத்தை மட்டும் - "கேளுங்கள் உங்களுக்குத் தரப்படும்" என்பதை மட்டும் - பிரசங்கிக் கின்றார்கள். அவர்கள் "பிதாவானவர் மகிமைப்படும்படியாக" என்ற இரண்டாம் பாகத்தை வசதியாக மறந்து விடுகின்றார்கள். இது மாறுபட்ட சித்தரிப்பைத் தீட்டுகிறது. சுயநலமான ஜெபம் தான் விரும்புகின்றதையே விரும்புகிறது; விசுவாசத்தின் ஜெபம், தேவனை மகிமைப்படுத்துதல் பற்றி அக்கறையாக உள்ளது.*

*(4) கிறிஸ்துவுடன் ஐக்கியம். நமது வேதபாடப்பகுதிகள் யோவான் சுவிசேஷத்தில் இடம்பெற்று இருக்கின்றன. வரம்பு கடந்த இந்த வசனங் களின் சந்தர்ப்பப் பொருளானது, இயேசு பிதாவை மகிமைப்படுத்துவதாக, பரிசுத்த ஆவியானவரை வாக்குத்தத்தம் செய்வதாகக் கண்டறிகிறது, மற்றும்*

நம்மை திராட்சச் செடியில், வசனத்தில், அவரில் நிலைத்திருக்கும்படி எச்சரிக்கை செய்கிறது. "நிலைத்திருத்தல்" என்பதே ஆய்வுக்கருத்தாக உள்ளது. "இயேசுவின் நாமத்தில்" ஜெபித்தல் என்பது அவருடன் நமக்கு இருக்கின்ற ஆழ்ந்தறிவான ஐக்கியத்திலிருந்து வருகிறது! இயேசுவுக்குள் மட்டுமே நாம், பரிசுத்த தேவனால் ஏற்றுக் கொள்ளப்பட முடியும். இயேசுவுக்குள் மட்டுமே நாம் தேவனுக்கு முன்பாகத் தைரியமாக நிற்க முடியும்.

*(5) தேவனுடைய சித்தத்தில் ஜெபித்தல்.* ஜெபத்தைக் கேட்டல் என்பது தேவனுடைய சித்தத்தின் எல்லைக்குட்படுத்தப்பட்டுள்ளதாகவும் யோவான் வெளிப்படுத்தினார் (1 யோவா. 5:14, 15). விழுந்துபோன, அறியாமையுள்ள மனிதன் எல்லையற்ற, வல்லமையுள்ள தேவனுக்கு எதிராக முடிவுசெய்ய விரும்புவது ஏன்? தேவனுடைய சித்தம் என்பது நமது மாபெரும் ஆசீர்வாதமாகவும் பாதுகாப்பின் இடமாகவும் உள்ளது. தேவனுடைய சித்தத்திற்குப் புறம்பே ஜெபித்தல் என்பது மதியீனமானதாக இருக்கும். இயேசுவின் ஜெபம் "உம்முடைய சித்தம் செய்யப்படுவதாக" என்பதன் மீதே கவனம் குவித்து இருந்தது. "இயேசுவின் நாமத்தில்" ஜெபித்தல் என்பது இயேசுவைப் போலவே ஜெபித்தலாக, இயேசு என்ன ஜெபிப்பாரோ அதையே, ஜெபித்தலாக, இயேசுவின் நிலைப்பாட்டில் இருந்து ஜெபித்தலாக உள்ளது.

*(6) எதிர்பார்ப்புடன் ஜெபித்தல்.* ஜெபம் என்பது நடுநிலையாக விலகியிருத்தல் என்பதல்ல. ஜெபம் என்பது தேவனை விஷயத்தினுள் கொண்டு வருகிறது. ஒரு குழந்தை தனது தந்தையிடம், "நான் விரும்புகின்ற எல்லாவற்றையும் நீங்கள் எனக்குத் தருவீர்களா?" என்று கேட்டது. அதற்குத் தந்தை, "இல்லை, ஆனால் நான் உனக்கு எல்லாவற்றையும் தருவேன்!" என்று கூறினார். வேண்டுகோள் தவறானதாயிருந்தால், தேவன் "இல்லை" [No] என்று மட்டுமே கூறுவார். காலம் தவறானதாயிருந்தால், தேவன் "மெதுவாய் [தருவேன்]" [Slow] என்று கூறுகின்றார். நாம் தவறானவர்களாயிருந்தால், தேவன் "வளருங்கள்" [Grow] என்று கூறுகின்றார். வேண்டுகோள் சரியானதாக, காலம் சரியானதாக, மற்றும் நாம் சரியானவர்களாக இருக்கும்போது தேவன் "போங்கள்" [Go] என்று கூறுகின்றார். உண்மையில், நாம் கேட்டதைப் பெறுவதில், பதில் அளிக்கப்பட்ட ஜெபத்தின் மாபெரும் மெய்சிலிர்ப்பு இருப்பதில்லை - தேவன் செயல் படுவதைக் காண்பதில்தான் மாபெரும், தாழ்மையான மெய்சிலிர்ப்பு இருக்கிறது. தேவன் என் வாழ்வில் செயல்படுகின்றார்! தேவன் கொடுக் கின்றதில் அல்ல, ஆனால் தேவனே ஜெபத்தில் மாபெரும் ஆசீர்வாதமாக இருக்கின்றார்! ஒருவர் "இயேசுவின் நாமத்தில்" ஜெபிக்கின்றபோது, அவர் மாபெரும் எதிர்பார்ப்புடனும் நம்பிக்கையுடனும் ஜெபிக்க வேண்டியுள்ளது.

## ஜெபத்தில் குணமாக்குதல்

*உங்களில் ஒருவன் துன்பப்பட்டால் ஜெபம்பண்ணக்கடவன்;*
*ஒருவன் மகிழ்ச்சியாயிருந்தால் சங்கீதம் பாடக்கடவன். உங்களில்*

*ஒருவன் வியாதிப்பட்டால், அவன் சபையின் மூப்பர்களை வரவழைப் பானாக; அவர்கள் கர்த்தருடைய நாமத்தினாலே அவனுக்கு எண்ணெய்பூசி, அவனுக்காக ஜெபம்பண்ணக்கடவர்கள். அப்பொழுது விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும், கர்த்தர் அவனை எழுப்புவார்; அவன் பாவஞ்செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக்கப்படும். நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக் காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள், நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது (யாக்கோபு 5:13-16).*

*இந்த வேத வசனம் இவ்வளவு அதிகமாகக் கூறுகிறது! ஜெபம் என்பது அமைதியை முறித்தலாக உள்ளது. உண்மையில் ஜெபம் இப்படிப்பட்ட தாகவே உள்ளது. அறியப்படுதலும் அறிதலும் அவசியமானதாக உள்ளது. ஜெபம் என்பது வாழ்வை அதன் ஆழ்ந்த மட்டம் வரையில் திறக்கிறது. ஆகையால், ஒவ்வொரு ஜெபமும் அடிப்படையில் - என்னுடைய அல்லது உங்களுடைய - குணமாக்குதலுக்கான ஜெபமாக உள்ளது. ஜெபம் என்பது குணமாக்குதலுக்கான விசுவாசத்தின் ஆதார மூலமாக உள்ளது. ''வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது'' என்ற மாபெரும் கூற்றானது குணமாக்குதலின் சந்தர்ப்பப் பொருளில் உள்ளது. உடல் நலத்திற்கான மற்றும் குணமாக்கும் ஜெபம் உள்ளது, ஆயினும் நமது வேத வசனப் பகுதி தவறாகப் புரிந்துகொள்ளப்படுகிறது, தவறாகப் போதிக்கப் படுகிறது, மற்றும் தவறாகப் பயன்படுத்தப்படுகிறது. தேவன் குணமாக்க முடியும் என்பதால் அவர் குணமாக்க வேண்டும் என்ற கருத்தை அருங் கொடைக் கூட்டத்தார் பராமரிக்கின்றார்கள். ஆயினும், அருங்கொடை யல்லாத கூட்டத்தார், தேவன் குணமாக்க முடியும் ஆனால் அவர் குணமாக்க மாட்டார் என்ற கருத்தின்மீது நம்பிக்கை உடையவர்களாய் இருக்கின்றார்கள்! இவ்விருசாராருமே தவறானவர்களாய் இருக்கின்றார் கள்! தேவன் விசுவாசத்தினாலேயே, ஜெபத்தின் மூலமாகவே குணமாக்குகின்றார்!*

*(1) இயேசு குணமாக்குகின்றவராக இருக்கின்றார். அவர் இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவுமே வந்தார் (லூக். 19:10). "பாவத்தைப் பழந்துணிகளுக்குள் ஒதுக்கி வைக்க" அல்லது எதுவுமே தவறானதல்ல என்று நம்மை நம்பச் செய்ய நமக்கு இன்னொரு குரு தேவையில்லை. சில விஷயங்கள் கவலைக்குரிய வகையில் தவறானவைகளாய் இருக்கின்றன என்பதை நாம் யாவருமே அறிகின்றோம். நமக்கு ஒரு இரட்சகர் தேவை என்பதை நாம் யாவருமே அறிகின்றோம்! என்ன ஒரு இரட்சகர்! இயேசு கிறிஸ்து இவ்வுலகத்தின் குணமாக்கும் வல்லமையாக இருக்கின்றார். இயேசு கிறிஸ்து ஒருவரே இவ்வுலகத்தில் குணமாக்கும் வல்லமையாக இருக்கின்றார்! இங்குதான் குணமாக்குதல் தொடங்குகிறது. இயேசுவான வர், சபை என்பது தமது குணமாக்கும் சமுதாயமாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றார். இங்குதான் ஆத்துமாக்கள் இரட்சிக்கப் படுகின்றார்கள் மற்றும் வாழ்க்கைகள் மாற்றப்பட்டிருக்கின்றன. இயேசு நமது வாழ்வின் ஒரு அம்சத்தை மட்டும் தொட்டுவிட்டு எஞ்சியவற்றை*

குணமாக்கப்படாதவைகளாக விட்டுவிடுவதில்லை. அவர் யோவான் 5:14ல், திமிர்வாதக்காரரை நோக்கி, "இனிப் பாவஞ் செய்யாதே" என்றார். திமிர்வாதம் கொண்ட ஒரு மனிதர், மேற்கூரையிலிருந்து இறக்கி விடப்பட்டபோது, இயேசு "உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது" என்று கூறியதன் மூலம் அங்கு கூடியிருந்தவர்களை அதிர்ச்சியடையச் செய்தார் (லூக். 5:18-26). இந்த மனிதர்கள் உடல்ரீதியான குணமாக்குதலை மட்டுமே நாடியிருந்தார்கள், ஆனால் இயேசு ஆவிக்குரிய குணமாக்கு தலையும் கொடுத்தார். அவர் எப்போதுமே நாம் கேட்கின்றவற்றிற்கும் அதிகமானவற்றையே கொடுக்கின்றார்.

(2) நமது நவீன உலகமானது, மனோதத்துவ பிடியின் கீழ் உள்ளது. சபைகள் இறையியலை விட மனோதத்துவத்தை அதிகமாகப் பிரசங்கிக் கின்றன. உண்மையான குணமாகுதல் இறையியலில் (வேதாகம சத்தியத் தில்) இருந்து மட்டுமே வரமுடியும். ஆரோக்கியமான உடலைக் கொண்டிருக்கும் ஒருவர் இழந்துபோன ஆத்துமாவைக் கொண்டிருக்க முடியும். ஒரு தீயபழக்கத்தின் அடிமைத்தனத்தை வென்றவர் அதை விட மோசமான ஏழு தீயபழக்கங்களுக்கு அடிமையாகி இழந்துபோகப்படலாம்! ஆளுமைத் தன்மை என்பது ஒருபோதும் பண்பு என்பதுடன் குழப்பிக் கொள்ளப்படக் கூடாது. மனோதத்துவம் தோல்வியடைகிறது! மனோதத்துவம் ("மனங்களைப் பற்றிய படிப்பு") என்பது ஆத்துமாவைப் படிக்க முடியாது. மனோதத்துவத்தினால் "பாவம்" என்ற வார்த்தையை உச்சரிக்க முடியாது. மனோதத்துவம் ஒரு ஆத்துமாவை இரட்சிக்க முடியாது. இழந்துபோகப்பட்ட பாவிகளுக்கு ஒரு புதுப்பிறப்பு, ஒரு புது இருதயம், ஒரு புது வாழ்வு தேவைப்படுகிறது! இதுவே சுவிசேஷ செய்தியாக உள்ளது. இயேசு நமக்கு ஒரு சிறிய இசைவை அளிப்பதில்லை - அவர் நமக்குப் புதுசிருஷ்டியை அளிக்கின்றார் (யோவா. 3:3, 5, 7; 2 கொரி. 5:17). இயேசு பரிபூரண ஜீவனாக இருக்கின்றார் (யோவா. 10:10; 14:6). வீடில்லாத ஒரு மனிதர் பிரசங்கியாரைக் காட்டிலும் அதிகமானவற்றை அறிந்துள்ளார். பிரசங்கியார் மாபெரும் நோக்கத்துடன் அவருக்கு ஒரு வேலையைப் பெற்றுத்தர முயற்சிக்கின்றார். வீடில்லாத மனிதர், "எனக்கு வேலை தேவையில்லை - எனக்குக் கர்த்தரே தேவை" என்று ஞானத்துடன் பதில் அளிக்கின்றார். அவர் ஒரு வேலையின் இடத்தை மறுக்கவில்லை; அவர் தமது ஆழ்ந்தறிவுள்ள, ஆழமான தேவையை மட்டுமே அறிக்கை செய்தார். யாக்கோபு, "மூப்பர்களை அழையுங்கள் ... சபையை அழையுங்கள் ... சத்தியத்தையும் விசுவாசத்தையும் அழையுங்கள்" என்று கூறினார். நீங்கள் உடல் ரீதியாகக் குணமடையும்படி, ஆவிக்குரிய வகையில் சரியாகுங்கள். மனிதன், தன் வாழ்வைத் தன் சொந்தக் கைகளில் எடுத்துக் கொள்ளுதல் என்பதே அவன் செய்கின்ற பெரிய தவறாக உள்ளது. வில்லியம் இ. ஹென்லீ என்பவர் தமது "Invictus" என்ற கவிதையில் பின்வரும் சிறப்புமிக்க கூற்றை ஏற்படுத்தினார்:

> எனது விதிக்கு நானே எஜமானனாக இருக்கின்றேன்;
> எனது ஆத்துமாவிற்கு நானே தலைவனாக இருக்கின்றேன்.

அவருக்கு என்னவாயிற்று? அவர் தற்கொலை செய்து கொண்டார்.

தேவனால் குணமாக்க முடியாதென்றால், நம்மை ஆறுதல் படுத்தும்படி அவரிடம் நாம் ஏன் ஜெபிக்க வேண்டும்? நோயாளியைத் தேவனால் குணமாக்க முடியாதென்றால், அவர் நம்பிக்கையற்றவர்களுக்கு ஆறுதல் அளிக்கவும் முடியாதே. ஜெபத்தின் மீதுள்ள விசுவாசத்தின் இருதயம் போன்ற மையப்பகுதியில், ஜெபத்திலிருந்து குணமாக்குதலில் உள்ள விசுவாசம் இருக்கிறது. தங்களுக்குத் தாங்களே உதவி செய்துகொள்ள இயலாதவர்களுக்குத் தேவன் உதவுகின்றார். தங்களுக்குத் தாங்களே உதவி செய்து கொள்ள இயலுபவர்களுக்கும் தேவன் உதவுகின்றார்.

(3) ஜெபத்தில் வளர்ச்சியும் பக்குவமும் நமக்குத் தேவைப்படுகின்றன. நமக்கு தாமே பேசிக் கொள்வதற்கு மாறாக, நம்மை நாமே கவனித்துக் கொண்டிருப்பதால் நாம் குணமடையத் தவறி விடுகின்றோம். அழகான வெறுஞ்சொல்லைக் கவனித்தல் என்பது "பரிதாபமான குழுவை"க் கொண்டிருத்தலாகவே உள்ளது. நமக்கு நாமே பேசிக்கொள்ளுதல் என்பது யாக்கோபு 5ஐ உறுதிப்படுத்துகிறதாக உள்ளது. பிள்ளைத்தனமான ஜெபத்தில் நாம் கெஞ்சுகின்றோம், நாம் உதட்டைப் பிதுக்குகின்றோம், நாம் வற்புறுத்துகின்றோம். தேவன் ஒரு மந்திரவாதியாக இருக்க வேண்டும் என்று நாம் விரும்புகின்றோம். நாம் உடனடியான தீர்வுகளை விரும்புகின்றோம் மற்றும் ஜெபங்களில் [தேவனைத்] திறமையுடன் கையாளும் வகையில் ஜெபிக்கின்றோம். உண்மையான ஜெபத்தில் நாம் மூப்பர்களை அழைக்கின்றோம், சபை சமூகத்தின் மீது நம்பிக்கை வைக்கின் றோம், மற்றும் தேவனை நமது வாழ்வினுள் அழைக்கின்றோம். ஜெபித்தல் என்பது கிறிஸ்தவர்களின் தனிச்சிறந்த சிலாக்கியமாகவும் பிரதான ஊழியமாகவும் உள்ளது.

நலமடைய ஜெபிக்கும்படி யாக்கோபு கூறினார். அற்புதங்கள் ஒழிந்து போயிருந்தாலும், ஜெபம் இன்னமும் பெலன் அளிப்பதாக உள்ளது. 2 தீமோத்தேயு 4:20ல் ஒரு மாபெரும் பாடம் போதிக்கப்படுகிறது: "... துரோப்பீமுவை மிலேத்துவிலே வியாதிப்பட்டவனாக விட்டு வந்தேன்." பவுல் இந்த நிருபத்தை எழுதினார் மற்றும் பேசுதலைச் செய்து கொண்டிருந்தார். அவர் அற்புதங்கள் செய்பவராக இருந்தார்! அற்புதமான கரங்களினால் துரோப்பீமு குணமாக்கப்படாதிருந்தார். அவர் ஜெபத்தின் இரக்கத்தில் இருந்தார். அற்புதமான கருத்தமைவில் விசுவாச குணமடைதல் என்பது முடிந்து போயிருந்தது, ஆனால் குணமாக்கப்படுதலுக்காக ஜெபம் என்பது இன்னமும் மிகுந்து இருந்தது! ஜெபியுங்கள்!

*"ஆண்டவரே, நான் ஜெபத்தில் நம்பிக்கை கொள்ளுவதில்லை. நான் உம்மை நம்புகின்றேன். விசுவாசத்துடன் ஜெபிக்க எனக்குப் போதியும்."*

*13*

# ஜெபம்

## உபவாசித்தல், 2

*வேதாகமம் உபவாசத்தைப் போதிக்கிறது. இது ஒரு மிகச் சிறிய அடிக்குறிப்பாக இராமல், ஆழ்ந்தறிவுள்ள விசுவாசத்தின் எடுத்துரைப்பாக உள்ளது. வேத வசனங்களில் உபவாசத்தைப் பற்றிக் குறைந்தது 78 இடங்களில் காணப்படுகிறது. அவற்றில் 30க்கும் மேற்பட்டவை புதிய ஏற்பாட்டில் உள்ளதால், உபவாசம் என்பது பழைய ஏற்பாட்டின் நடைமுறை என்பதாக மட்டும் தாழ்த்தப்பட்டு விட முடியாது. நாற்பது நாட்கள் உபவாசமிருந்த மூன்று மனிதர்களும் - இயேசு, மோசே மற்றும் எலியா ஆகியோர் - மறுரூப மலையில் ஒன்றாயிருந்தார்கள் என்பது கவனிக்க மனங்கவருவதாக உள்ளது. பதிவுசெய்யப்பட்டுள்ளபடி, முதலாவது உபவாசமானது மோசேயுடன் வந்தது. தாவீது, நெகேமியா, தானியேல், யூதர்கள், யோவான் ஸ்நானன், இயேசு மற்றும் பவுல் ஆகியோர் உபவாசித்தார்கள். ஆவிக்குரிய வகையில் இவ்வளவு ஆழ்ந்தறிவுள்ள விஷயமானது இந்த நாட்களில் எப்படி இவ்வளவு அதிகமாக தாழ்த்தப்பட முடியும்?*

*உபவாசம் என்பது சுயத்தை மறுக்கும் நடைமுறையாக உள்ளது. நாம் சுயத்திற்கு அடிபணிதலை மேம்படுத்துகின்றோம். ஒழுங்குமுறை, மறுப்பு, தியாகம் மற்றும் துன்புறுதல் ஆகியவை நவீன மன அமைவுக்கு நேரெதிரானவைகளாக உள்ளன. உபவாசம் என்பது வழக்கமாக உணவின் சந்தர்ப்பப் பொருளில் உள்ளது. உபவாசத்தில் ஒருவர், ஏதேனின் முதல் உரிமையை - உண்ணுதல் என்பதை - துறக்கின்றார். உபவாசம் என்பது திருமண விஷயத்திலும் முன்னுரிமை வகிக்கலாம் (1 கொரி. 7). ஆபிரகாம், தேவனுடனான தமது உறவில் ஈசாக்கும் கூட இடையிட முடியாது என்பதைக் கற்றுக் கொள்ள வேண்டி இருந்தது (ஆதி. 22). உபவாசம் என்பது இந்த நெருக்கமான ஐக்கியத்திற்கு இடையூறாக வரும் எதையும் மறுப்பதாக உள்ளது. உங்களுக்கும் தேவனுக்கும் இடையில் நிற்பது எது? பெற்றிருத்தல் என்பதல்ல ஆனால் பெற்றுக் கொள்ளப் பெற்றிருத்தல் என்பதே நமது இன்றைய உலகின் சிக்கலாக/தொந்தரவாக உள்ளது.*

*மோசேயின் பிரமாணமானது ஒரே ஒரு உபவாசத்தை ... உபவாசத்தின் ஒரு நாளை ... பாவநிவாரண நாளை மட்டுமே கட்டளையிட்டது (லேவி. 23:26-32; எண். 29:7-11). அதற்குக் கீழ்ப்படியாதவர்கள் [ஜனத்திலிருந்து] அறுப்புண்டு போனார்கள். இதே எண்ணப்போக்கில், யூதர்கள் தங்கள் விடுதலைப் பயணத்தை நினைவுகூருவதற்காக ஒவ்வொரு ஆண்டிலும் ஒரு வாரத்திற்கு [தங்களை வாழ்விலிருந்து] பின்னிழுத்து கூடாரங்களில்*

*வாழ்ந்திருக்க வேண்டியிருந்தது. சவுல் அரசரின் இறப்பினிமித்தம் துக்கம் கொண்டாடுவதற்கு இஸ்ரவேலர்கள் ஒரு வாரம் உபவாசித்தார்கள் (1 சாமு. 31:13). இஸ்ரவேலர்களைக் காப்பதற்கு எஸ்தர் உபவாசித்தாள். தானியேல், இறுதி நாளின் தரிசனத்தைக் காண்பதற்கு இயல்புக்கு மீறிய வகையில் உபவாசித்தார். அன்னாள் தனது முதிர்ந்த வயதில் உபவாசித்தாள் (லூக். 2:36-38). முதல் ஊழியப்பணியானது உபவாசத்தில் இருந்தே வெளிவந்தது (அப். 13:1-3). மூப்பர்கள் உபவாசத்துடன் நியமிக்கப்பட்டார் கள் (அப். 14:23). புறஜாதியாரில் இருந்து முதன் முதலாக மனம்மாறிய கொர்நேலியு உபவாசித்தார் (அப். 10). பவுல் அடிக்கடி உபவாசித்தார் (2 கொரி. 6:5; 11:27).*

*வேத வசனங்களில் உபவாசம் வீணாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஏசாயா 58ஐ வாசித்துப் படியுங்கள். தேவன் "நல்ல மற்றும் தீய" உபவாசத் தைப் பற்றிப் போதித்தார். நாம் உபவாசிக்க வேண்டும் என்று இயேசு எதிர் பார்த்தார் என்று காணப்படுகிறது. அவர், "நீங்கள் உபவாசித்தால்" என்று கூறாமல் "நீங்கள் உபவாசிக்கும்போது" என்றே கூறினார் (மத். 6:16). ஆயினு ம் இயேசு, "காட்சிப்படுத்தும் உபவாசத்தைக்" கண்டனம் செய்தார். பரிசேயர்கள் வாரம் இருமுறை உபவாசித்தார்கள் (திங்கள் மற்றும் வியாழக் கிழமைகளில்). லூக்கா 18ஐக் காணவும். சடங்காச்சாரமான உபவாசத்தை இயேசு ஏற்றுக்கொள்ளவில்லை, அவற்றை அவர் நடைமுறைப்படுத்தவு மில்லை. அவற்றை அவர் உணர்வுப்பூர்வமாகக் கண்டனம் செய்தார். சுயநீதியான காட்சிப்படுத்துதல்களை இயேசு வெறுத்தார்.*

*உபவாசத்திற்கான எபிரெய வார்த்தையானது "வாயை மூடுதல்," "துக்கத்தில் ஒருவர் தம்மைத் தாழ்த்துதல்" என்ற நேரடியான அர்த்தம் கொண்டதாகவே உள்ளது. ஆகையால், உபவாசித்தல் என்பது மகிழ்ச்சிக் கானதாக இன்றி துக்கத்திற்கானதாக உள்ளது. இது மனஸ்தாபமாக, அச்சமூட்டும் தேவையாக, நமது சொந்த ஒழுங்குபடுத்துதலாக உள்ளது. பழைய ஏற்பாட்டில் மனஸ்தாபம் என்பது உபவாசத்தின் கவனக்குவிப்பாக இருந்தது. பாவம், தேவை, மரணம் மற்றும் துன்பம் ஆகியவை உபவாசத் தைத் தூண்டின. புதிய ஏற்பாட்டில் முன்னுரிமை என்பது உபவாசத்தின் கவனக்குவிப்பாக இருந்தது. மனம்போன போக்கின்படி வாழும் இன்றைய நாட்களின் மக்களுக்கு ஒழுங்குபடுத்துதல், உறுதிப்பாடு, தியாகம் கூடத் தேவைப்படுகின்றன. உபவாசம் என்பது ஆவிக்குரிய தன்மையின் மிகவும் ஆழ்ந்தறிவுள்ள வெளிப்பாடாக இருக்கலாம். உபவாசம் என்பது தாழ்மைப் படுத்துகிறது என்பது தெளிவு!*

*மாபெரும் பாவியான தாவீது, "தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற ஒரு மனிதராகவும்" இருந்தார் (அப். 13:22). அவரது வாழ்வு "ரோஜாமலர்களால் ஆன படுக்கையாக" இருந்ததில்லை. தாவீது உபவாசத்தினால் தம்மையே தாழ்த்தினார் (சங். 35:13). அவர் உபவாசத்தினால் தம்மை ஒழுங்கு படுத்தினார் (சங். 69:10). அவர் தமது உடல் பலவீனமடையும் அளவுக்கு அதிகமாக உபவாசித்தார் (சங். 109:24). தாவீதின் வாழ்வில் கண்ணீரும் அடங்கியிருந்தது. இயேசு கண்ணீரின் மனிதராக இருந்தார் (எபி. 5:7). பவுலின் ஊழியம் கண்ணீரின் மீதுதான் அஸ்திபாரம் இடப்பட்டிருந்தது*

*(அப். 20:19, 31). "ஆண்டவரே, கண்ணீரின் ஊழியத்தைக் கொண்டு எங்களை ஆசீர்வதியும்."*

*ஒரு எண்ணப்போக்கானது சரியான செயல்பாட்டிற்குக் காரணமாக லாம். அதே அளவுக்கு, சரியான செயல்பாடானது சரியான எண்ணப் போக்கை மேம்படுத்தலாம். "உங்கள் கால்களில் நிற்கக் கூடியவர்கள் ஆகும்படிக்கு நீங்கள் முழங்கால்படியிடுங்கள்." கடினமான வேளைகள் நம்மை உபவாசிக்கும்படி நிர்ப்பந்தம் செய்யலாம். உபவாசம் என்பது நம்மைக் கடினமான வேளைகளுக்குத் தயார் செய்யலாம். செயல்முறை யின்றி பூரணப்படுதல் இருக்க முடியாது, கஷ்டம் இல்லாமல் ஆதாயம் இருக்க முடியாது. பயணமின்றி பரலோகம் இருக்க முடியாது. நாம் வேதாகம ரீதியான உபவாசத்தைப் பற்றிக் கற்றுக்கொண்டு அதை நடைமுறைப்படுத்த வேண்டும். நாம், ஜெபம் மற்றும் உபவாசம் இன்றி சபை வளர்ச்சியையும் பக்குவப்படுதலையும் பெற முடியாது.*

# ஜெபிக்கும் வேளைகள்

## 1 தெசலோனிக்கேயர் 5:17

*“இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள்” (1 தெச. 5:17).*

*வேறு எதையும் செய்யும்படியாகக் கூறும் கட்டளைகளை விட, ஜெபிக்கும்படி கூறும் கட்டளைகள் புதிய ஏற்பாட்டில் அதிகமாக உள்ளன. வேறு எதைப் பற்றியும் கூறும் வாக்குத்தத்தங்களை விட ஜெபத்தைப் பற்றியவைகள் அதிகமாக உள்ளன. நீங்கள் ஜெபிப்பதினாலேயே ஜெபிக்கக் கற்றுக்கொள்கின்றீர்கள். ஜெபம் என்பது கிறிஸ்தவர்களின் தனிச்சிறந்த சிலாக்கியமாகவும் பிரதானமான ஊழியமாகவும் உள்ளது. நாம் ஏன் இன்னும் அதிகமாக ஜெபிப்பதில்லை?*

*(1) நாம் “அதில் சிறந்தவர்களாக” இருப்பதில்லை. ஜெபம் என்பது உதவியற்றவர்களுக்கு மட்டுமானதாக உள்ளது. மற்றவர்கள் “இயல்பாகவே ஜெபிக்கின்றவர்களாக” இருக்கின்றார்கள், ஆனால் நாம் அவ்வாறு இருப்பதில்லை என்று முடிவு செய்தல் சுலபமானதாக உள்ளது. கேள்வி: “நீங்கள் எவ்வாறு இருக்கின்றீர்கள்?” நான் அடிக்கடி எனது ஜெபங்களைக் கூறுகின்றேன், ஆனால் நான் எப்போதாவது ஜெபித்திருக்கின்றேனா? உங்களைப் பற்றிய விஷயம் என்ன? நீங்கள் உங்கள் கிறிஸ்தவ நடையில் திருப்தியடைந்து இருக்கின்றீர்களா?*

*(2) நாம் ஜெபிக்கத் திட்டமிடுவதில்லை. நாம் மிகவும் வேலை மும்முரமாய் இருக்கின்றோம். அடிப்படையில், ஜெபம் என்பது கூட்டத்தில் வெளியேற்றப்பட்டுள்ள காரணத்தினால் நாம் ஜெபிப்பது இல்லை. நாம் பதில் அளிக்க மிக ஏராளமான மக்களையும் குணமாக்க ஏராளமான காயங்களையும் கொண்டுள்ளோம். ஆகையால் நமது வலுக்குறைந்த மனங்களில், ஜெபம் என்பது அத்தியாவசியம் உள்ளதாக இன்றி ஒரு ஆடம்பரமானதாக உள்ளது. இந்தக் காரணங்களினால், நாம் தியானங்களில் அல்லது பணிவாழ்விலிருந்து புறம்பே இருக்கின்ற வேளைகளில் மட்டும் ஜெபிக்கின்றோம். ஜெபம் என்பது மலையின்மீது செய்யப்பட வேண்டியதாக இருக்கலாம், ஆனால் அதன் வல்லமையானது தெருக்களுக்கு உரியதாக உள்ளது. நாம் ஜெபிக்கத் திட்டமிட வேண்டும். நாம் ஜெபிக்க ஆயத்தமாக இருக்க வேண்டும். நாம் ஜெபிக்க நேரத்தை ஏற்படுத்த வேண்டும்! ஜெபம் நமது வாழ்வின் மையமாக இருக்க வேண்டும் என்று நாம் அறிகின்றோம், ஆயினும் நாம் அதைச் செய்வதற்கு நேரம் ஒதுக்க மறுத்து விடுகின்றோம். நாம் மரணத்திற்கு ஏதுவான இன்னொரு தவறைச் செய்கின்றோம்: நமது பணிமுறைமைகளை முன்னுரிமைப்படுத்துதல் என்பது ஒரு விஷயமாக உள்ளது (தவறானது); நமது முன்னுரிமைகளைப் பணிமுறைமைப்*

*படுத்துதல் என்பது இன்னொரு விஷயமாக உள்ளது. நீங்கள் ஜெபிக்க இயலாத அளவுக்கு மிகவும் வேலை மும்முரமாய் இருக்கின்றீர்கள் என்றால், நீங்கள் வேலை மும்முரமானவர்களாகவே இருக்கின்றீர்கள்.*

*(3) நாம் ஏன் இன்னும் அதிகமாக ஜெபிப்பதில்லை? ஜெபிக்க நேரம் எடுத்துக்கொள்ளுதல் என்பது முதலாவதான, மிகக் கடினமான, மிக அத்தியாவசியமான விஷயமாக உள்ளது! எளியது? ஆம்! சுலபமானது? இல்லை! நீங்கள் அதை எவ்வளவு நன்றாகச் செய்கின்றீர்கள் என்பதல்ல, ஆனால் நீங்கள் செய்கின்றீர்களா இல்லையா என்பதே விஷயமாக உள்ளது. இல்லையெனில், ஜெபம் என்பது சமைப்பதற்கு மாறாக சமையல் புத்தகத்தை வாசிப்பது போன்றதாகிறது. நீங்கள் சமையல் புத்தகத்தை சமைத்து உண்ணுவதில்லை. முதலாவது ஜெபியுங்கள்!*

*(4) நாம் தேவன் மீது சந்தேகப்படுகின்றோம். நாம், "அவர் உங்கள் ஜெபத்திற்குப் பதில் அளிப்பார், ஆனால் எனது ஜெபத்திற்குப் பதில் அளிக்கமாட்டார்" என்று நினைக்கின்றோம். மக்கள், "நான் அதைக் குறித்து ஜெபித்தேன், ஒன்றும் நடைபெறவில்லை'' என்று ஏமாற்றத்துடன் என்னிடம் கூறுகின்றார்கள். "அதைக் குறித்து வழக்கமற்றதாக உள்ளது என்ன?" என்று பதில் அளிக்க நான் கற்றுக் கொண்டேன். நாம் தேவனுக்குப் பதில் அளிப்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு மாறாக நாம் தேவன் பதில் அளிக்கும்படி வற்புறுத்துகின்றவர்களாய் இருக்கின்றோம். ஜெபம் வீணாக்கப்படும்போது - தேவனல்ல - மனிதனே பிரச்சனையாக இருக்கின்றான் என்பதை நினைவில் வையுங்கள்.*

*(5) ஜெபம் என்பது மற்ற யாவும் தோல்வியடைகையில் பயன்படுத்த வேண்டிய "பக்கத்துணை அமைப்பாக" இருப்பதில்லை. ஜெபம் என்பது ஒவ்வொரு தேவைக்குமான அளிப்பாக மற்றும் ஒவ்வொரு பிரச்சனைக்குமான தீர்வாக உள்ளது. தேவனுடைய வசனம் தனது வேலையைச் செய்யும்; ஜெபம் தனது வேலையைச் செய்யும். நான் ஒரு "சிறுவயதுப் பிரசங்கியாராக" இருந்தபோது, "கிறிஸ்து இன்றி என்னால் ஒன்றும் செய்ய இயலாது" (யோவா. 15:1-11) என்ற சொற்றொடருடன் என்னை அடையாளப் படுத்திக் கொள்ள இயலாதிருந்தேன். இப்போது நான் ஒரு முதிய பிரசங்கியாராக இருக்கிற இந்த வேளையில் இது எனது எல்லாமுமாக உள்ளது. இளம் பிரசங்கியார்களுக்கு விரிவுரையாற்றுகையில், நான் அவர்களிடம் வேதாகமத்தில் ''சாதனை'' யைக் கண்ணோக்குமாறு அறைகூவல் விடுக்கிறேன். இது அங்கு இருப்பதில்லை. "கிறிஸ்து இல்லாமல் நான் ஒன்றுமில்லை" என்பதை ஒருவர் கற்றுக்கொள்ளும் நாள் அவருக்கு ஒரு மாபெரும் நாளாகிறது.*

## ஒரு நேரம்

*வேதாகமத்தின் மாபெரும் மனிதர்கள் ஜெபத்தின் மனிதர்களாகவே இருந்தார்கள். பாபிலோனில் தானியேல் தமது ஜன்னல்கள் எருசலேமை நோக்கித் திறந்திருக்க, அன்றாடம் மூன்று வேளைகள் மண்டியிட்டு, நன்றியுடன் ஜெபித்தார் (தானி. 6:10). சிங்கங்கள் அவரைத் தொடவும்*

*மறுத்து விட்டன! தாவீது அன்றாடம் மூன்று வேளைகள் - அந்தி, சந்தி, மத்தியானம் - ஜெபித்தார் (சங். 55:17; 5:3). நெகேமியா எருசலேமுக்காக விடாது ஜெபித்தார். மோசே ஆசரிப்புக் கூடாரத்தினுள் சென்று ஜெபிக்கத் தயார் செய்து கொண்டிருந்த வேளையில், இஸ்ரவேல் முழுவதும் கவனித்திருந்தார்கள் (யாத். 33:8). இயேசு அதிகாலையில் ஜெபித்தார் (மாற். 1:35), அப்போஸ்தலர்களைத் தேர்ந்தெடுக்கும் முன்பு இரா முழுவதும் ஜெபித்தார் (லூக். 10:12-16), மற்றும் பன்னிருவர் மத்தியிலும் ஜெபித்தார் (லூக். 11:1). பேதுரு மத்தியான வேளையில் ஜெபித்தார் (அப். 10:9). பவுல் பிரிந்து செல்லும் வேளையில் எபேசு நகர மூப்பர்களுடன் ஜெபித்தார் (அப். 20:36). அங்கு அவரது ஊழியமானது ஜெபங்களும் கண்ணீருமாயிருந்தது. "சபை கூடிய இடமானது" ஜெபத்தினால் அசைக்கப்பட்டது (அப். 4:31). எல்லா இடங்களிலும் ஜெபிக்க வேண்டும் என்று பவுல் கட்டளையிட்டார் (1 தீமோ. 2:8). பவுலின் குழுவினர் இரவும் பகலும் ஜெபித்தார்கள் (1 தெச. 3:10).*

*நாம் ஒரு நேரத்தைக் கொண்டிருக்க வேண்டும்! மார்ட்டின் லூத்தர் என்பவர், "ஜெபம் என்பது காலையில் எனது முதல் வேலையாகவும், இரவில் எனது கடைசி வேலையாகவும் உள்ளது" என்று கூறினார். ஜெபம் என்பது ஒரு நாளின் திறவுகோலாகவும், ஒரு இரவின் பூட்டாகவும் உள்ளது. லூத்தர், "ஜெபம் நேரத்தைச் சேமிக்கிறது" என்றும் கூறினார்.*

*நான் எனது நேரத்திலும் எனது நிபந்தனைகளிலும் மட்டுமே ஜெபிக்கின்றேன் என்பது, ஜெபத்தின் எனது பெரிய தவறாக உள்ளது. இது இடர்ப்பாடுமிகுந்த பிரச்சனையாக உள்ளது. நாம் தேவனுடைய நேரத்திலும் நிபந்தனைகளிலும் மட்டுமே ஜெபிக்க முடியும்! தேவன் இரண்டாவது இடத்தை ஏற்றுக்கொள்ள மாட்டார். அவர் நமது துணுக்கு களை ஏற்றுக் கொள்ள மாட்டார். நமது பணி மும்முரமான அட்டவணை கள் தேவனை வெளியேற்றிவிடுகின்றன. நம்மில் பலர், "ஓடிக் கொண்டே ஜெபிக்க" விரும்புகின்றோம். இதுவும் கூட தோல்வியடைகிறது. எந்த ஒரு விஷயமும் "ஓடிக்கொண்டே" சரியாகச் செய்யப்பட முடியாது. கிறிஸ்தவத் தின் திறவுகோல் உட்பொருளாக இருப்பது நேரம் என்பதேயாகும் - எஞ்சியுள்ள நேரமோ, எறியப்பட்ட நேரமோ அல்ல ஆனால் தரம் மிகுந்த நேரமாக உள்ளது. புரிந்து உணர்ந்துகொள்ள, தியானிக்க, சிந்திக்க, பயபக்தி செலுத்த நேரம் - அவசரமற்ற, இடையூறற்ற நேரம்! நீங்கள் ஒரு ஆந்தையாக இருக்கலாம்; நீங்கள் ஒரு சேவலாக இருக்கலாம். நீங்கள் என்னவாக இருந்தாலும், ஒரு நேரத்தை ஒதுக்கி, அதைக் காத்துக்கொள்ளுங்கள். ஜெபம் என்பது தர்க்கரீதியாக வெளியேற்றப்படுவதாக இருப்பதில்லை; இது பல பணிகளினால் சூழப்பட்டு வெளியேற்றப்படுகிறது. அதே வேளையில், அதிகாலையில் சீக்கிரம் எழுந்துகொள்ளுதலின் இரகசியம் என்னவென்றால் இரவில் சீக்கிரம் படுக்கைக்குச் செல்லுதலாக இருக்கிறது. "எழுந்துகொள்ள முடியாத" ஒரு நபர் ஒருக்காலும் வெற்றிடைய மாட்டார்!*

*ஜெப வாழ்வைத் தொடங்குதல் என்பது மட்டும் கடினமானதாக இருப்பதில்லை; அதைத் தொடருதல் என்பது அதை விடக் கடினமானதாக உள்ளது. நாம் தொடங்குகின்றோம், ஆனால் நமது அன்றாடப் பணிகளி*

னால் நாம் கீழே தள்ளப்பட்டு, [ஜெபவாழ்வை விட்டு] வெளியேறி விடுகின்றோம். நாம் இடைவிடாமல் உண்ணுகின்றோம்; நாம் இடைவிடாமல் ஜெபிக்க வேண்டும். வாழ்வின் மென்மையான காலங்களில் இடைவிடாது சீராகச் செய்யும் ஜெபமானது, ஒருவரை [வாழ்வின்] புயல்களுக்குத் தயார் செய்கிறது. புயலுக்கு முன்னால் நீங்கள் ஜெபித்திரா விட்டால், புயலின் (துன்பத்தின்) போது ஜெபித்தல் என்பது மிகவும் தாமதமாகி விடும். ஜெபிக்க உங்களுக்கு ஜெபம் தேவைப்படும் வரையிலும் நீங்கள் காத்திருக்காதீர்கள்! ஜெபம், ஒரு [அன்றாட] பழக்கமாக இருக்க வேண்டும் - ஆனால் அது ஒருபோதும் ஒரு பழக்கவழக்கமாகி விடக் கூடாது.

தாவீது அன்றாடம் ஏழுமுறை தேவனைத் துதித்தார் (சங். 119:164). அவர் நேர்ப்பொருளில் "நாள் முழுவதிலும்" ஜெபித்தார். ஒரு நாளை தேவனுடன் தொடங்குங்கள், துதி இடைவேளைகளை எடுத்துக் கொள்ளுங்கள், பின்பு அந்த நாளை தேவனுடன் முடியுங்கள். நண்பர்கள் நேரம் எடுத்துக்கொள்ளுகின்றார்கள்; ஜெபம் நேரம் எடுத்துக் கொள்ளுகிறது. நீங்கள் இரவு முழுவதும் ஜெபித்திருக்கின்றீர்களா? ஒரு மணி நேரம்? அன்றாடம்? கேள்வி: நீங்கள் எப்படியிருக்கின்றீர்கள்? ஜெபத்தில் செலவிடப்படும் நாட்கள் என்பவை தற்செயலாக நேரிடுவதில்லை. அவைகள் நேரிடச் செய்யுங்கள். உண்மையான ஜெபம் என்பது நாம் மண்டியிடும்போது தொடங்குவதோ அல்லது எழும்போது ஒழிவதோ இல்லை. முதலாவது ஜெபியுங்கள்!

## ஒரு இடம்

ஜெபம் என்பது ஒரு நேரத்தையும் ஒரு இடத்தையும் வேண்டிக் கேட்கிறது. இயேசு கெத்செமனேயைக் கொண்டிருந்தார். அவர் மலைகளைப் பயன்படுத்தினார். அவர் ஒரு "ஜெப உள்வீட்டை" (மத். 6:6)க் கட்டளையிட்டார். வீட்டின் அறைகள் சமீபத்தில் தான் வசதியான காற்றோட்டம் கொண்டவைகளாக ஆயின. இயேசுவின் காலத்தில் இருந்த ஒரு அறை வீடுகள் இவ்வித வசதி எதையும் கொண்டிருந்தது இல்லை. யூத ஆண் ஒரு சால்வையை அணிந்திருந்தார் (ஒரு ஜெப சால்வை). (எண். 15:37-41ஐக் காணவும்.) ஒரு யூதர் தனிமையிலிருக்கத் தமது தலையை ஒரு முக்காடு கொண்டு மூடிக் கொள்ள மட்டுமே முடிந்தது - அது ஒரு "ஜெப உள்ளறையாக" இருந்தது. இங்கிலாந்தில் வெஸ்லி பாய்ஸ் என்ற (பத்தொன்பது) பையன்களின் தாய் ஜெபிப்பதற்கு தினமும் சற்று நேரம் ஒதுக்கினாளென்று வரலாறு கூறுகிறது. அந்தத் தாய் தனது நாற்காலியில் அமர்ந்து, தனது மேலாக்குத்துணியை தனது தலையின் மீது இழுத்து விட்டுக் கொள்வாள், பின்பு ஜெபிப்பாள். இந்த வேளையை ஆழ்ந்தறிவுடன் மதிக்கும்படி அவளது பிள்ளைகள் வளர்க்கப்பட்டார்கள். நமக்கு ஒரு நேரமும் ஒரு இடமும் இல்லாவிட்டால் நாம் ஜெபிக்க மாட்டோம். நாத்தான்வேல் ஒரு "அத்திமரத்தையே" சாத்தியமான வகையில் கொண்டிருந்தார் (யோவா. 1:48). "அமைதியான நேரம்" என்பது "அமைதியான இடத்தை" வேண்டுகிறது. நேரத்திலும் மற்றும் இடத்திலும்

ஒரு முறைமையைக் கொண்டிருங்கள் - ஒரு குறிப்பிட்ட நேரம் மற்றும் ஒரு குறிப்பிட்ட இடம். "எல்லா இடங்களிலும் ஜெபித்தல்" என்பது "எங்குமே ஜெபிப்பதில்லை" என்பதாக சுலபமாக மாறிவிடுகிறது. "எந்த நேரத்திலும் ஜெபித்தல்" என்பது "எப்போதுமே ஜெபிப்பதில்லை" என்பதாக சுலபமாக மாறிவிடுகிறது. நாம் இதைச் செய்ய விரும்ப வேண்டும்; நாம் இதைச் செய்யத் தீர்மானிக்க வேண்டும்; பின்பு நாம் இதைச் செய்ய வேண்டும். நாம் ஜெபிக்கவில்லையென்றால், நாம் உண்மையில் அதைச்செய்ய தீர்மானிக்கவில்லை என்று எல்லா நேர்மையும் முடிவு செய்கிறது. பலர் தங்களின் மும்முரமான பணி முறைமையானது ஜெபிக்க நேரம் அனுமதிப்ப தில்லை என்பதில் நிறைவடைகின்றார்கள். எவராவது ஒருவர் தாம் வேலை செய்ய முடியாத அளவு அதிகம் ஜெபித்ததாக நீங்கள் கேள்விப்பட்டு இருக்கின்றீர்களா? ஜெபம் என்பது ஒருவர் செய்யக்கூடிய மிகவும் நடைமுறைக்கு உகந்த விஷயமாக உள்ளது.

ஜெபிப்பதற்கு ஒரு இடத்தைக் கொண்டிருத்தல் என்பது அந்த இடத்தை நமக்குப் "பரிசுத்தமாக்குகின்றது." நமது ஆதாயம் நிறைந்த உலகத்தில் ஒரு சில விஷயங்களே "பரிசுத்தமானவைகளாக" உள்ளன. நாம் "பரிசுத்த வேளைகளையும்" மற்றும் "பரிசுத்த இடங்களையும்" ஏற்படுத்த வேண்டும். தேவன் எஞ்சியுள்ள நேரங்களுக்கு அல்ல, முக்கியமான நேரங்களுக்கே பாத்திரராக உள்ளார். தேவன் ஒரு ஞானமான இடத்தை வேண்டுகின்றார். அப்படிப்பட்ட ஒரு இடத்தைக் கண்டறியுங்கள். நான் எனது காரில் இருந்தபடி ஜெபிப்பதை விரும்புகின்றேன். நான் மிகவும் அதிகமாகப் பயணம் செய்வதால், ஆகாயவிமானங்களும், தங்கும் விடுதி களும் ஜெபிப்பதற்கு மிகவும் மேன்மையான இடங்களாக உள்ளன. ஆயினு ம், நான் எனது வீட்டையே மிகவும் விரும்புகின்றேன். ஜெபம் என்பது மரணத்திற்கு ஒரு ஒத்திகையாக உள்ளது. இது சுயவிருப்பத்திற்கு மரித்தலாக, "தேவனாக விளையாடுதலாக" உள்ளது. நாம் ஜெபிக்கும்போது, நாம் காலத்திற்கு, விருப்பங்களுக்கு, நமது முரட்டுத்தனமான சித்தத்திற்கு மரிக்கின்றோம். ஜெபித்தல் என்பதே நாம் எந்த நாளிலும் செய்யக்கூடிய மிக முக்கியமான விஷயமாக உள்ளது.

## உடல் அமைவு

உடல் அமைவு என்பது ஜெபத்தில் முக்கிய கூறாக இருப்பதில்லை, ஆனால் இது ஒரு முக்கியமான பணிப்பொறுப்பை ஆற்றுகிறது. தேவனு டைய மனிதர்கள் முழந்தாள்படியிட்டார்கள், தங்கள் முகங்குப்புற விழுந்தார்கள், தங்கள் தலைகளைத் தாழ்த்திப் பணிந்துகொண்டார்கள், பயந்து நடுங்கினார்கள், நின்றார்கள், பரிசுத்த கரங்களை உயர்த்தினார்கள். இயேசு இவற்றில் பெரும்பாலானவற்றைச் செய்தார். உடல் அமைவு என்பது ஜெபத்தின் எண்ணப்போக்கிற்கு உதவி அதை அறிவிக்கிறது; எண்ணப்போக்கு உடல் அமைவைத் தீர்மானிக்கிறது. மண்டியிடுதல் என்பது கீழ்ப்படிதலாக உள்ளது ... நிற்குதல் என்பது மகிழ்ச்சியாக உள்ளது. மனிதர்கள் பரிசுத்தமான கரங்களை உயர்த்தி ஜெபித்தார்கள் (1 தீமோ. 2:8).

வெறுமனே கரங்களை உயர்த்துதல் அல்ல ஆனால் "பரிசுத்தமான" என்பதன் மீதே வலியுறுத்துதல் உள்ளது. ஒப்புவமையில், இது பரிசுத்தமான வாழ்வில் இருந்தே உண்மையான ஜெபம் வருகிறது என்று அர்த்தப்படுகிறது. ஒருவேளை பலர் ''தளர்வான நிலையில் இருக்கின்றார்கள்.'' நமது பிள்ளைகள் தலைகளைத் தாழ்த்தி கண்களை மூட வேண்டும் என்று நாம் கற்றுத் தருகின்றோம். எல்லா மனிதர்களும் ஜெபத்தில் முழந்தாளிடுகிற "ஆமென் மூலைகளை" தங்கள் கட்டிடங்களில் சபைகள் கொண்டுள்ளன. மோசேயிடத்தில் தேவன், "உன் கால்களில் இருக்கிற பாதரட்சையைக் கழற்றிப்போடு; நீ நிற்கிற இடம் பரிசுத்த பூமி" என்றார் (யாத். 3:5).

உடல் அமைவு என்பது தனது இடத்தைக் கொண்டுள்ளது! இது, யார் ''முதலாளியாக'' இருக்கிறார் என்பதை நமக்கு நினைவூட்டுகிறது. இது ஜெபத்தில், ஜெபித்தலுக்கு மாறாக, "பிரசங்கித்தல்" என்பதிலிருந்து நம்மைக் காக்கலாம். இது கவனம் விலகுதலை நீக்கிப்போடுகிறது. நாம் நமது முழங்கால்களில் இருக்கும்போது, மாபெரும் இரண்டு ஆயுதங்களைப் பயன்படுத்த முடியும்: (1) ஜெபம் மற்றும் (2) மேல் துண்டு.

உடல் அமைவு என்பது உடலை உள்ளடக்குகிறது. நின்று சிந்தியுங்கள். உடல் என்பது நாம் தேவனுக்குத் தரக்கூடிய கடைசிப் பொருளாக உள்ளது. நாம் ஆத்துமாவைப் பற்றியும், ஆவியைப் பற்றியும் பேசுகின்றோம். நாம் உடலை உதாசீனப்படுத்தி விடுகின்றோம். இது மிகவும் அற்ப முக்கியத் துவம் கொண்டது என்று நாம் நினைக்கின்றோம். உடல் அமைவு என்பது வசதிக் குறைவை ஏற்படுத்துகிறது, மற்றும் தாழ்மைப்படுத்துகிறது. யார் "தமது முழுங்கால்களை (தரையில்) இடித்துக்கொள்ள" விரும்புவார்கள்? யார் "ஜெப உள்அறையில் அமைதியாக உட்கார்ந்திருக்க" விரும்புவார்கள்? உடல் என்பது இயேசு வெற்றிகொள்ள நாம் அனுமதிக்கின்ற கடைசிக் கோட்டையாக இருக்கலாம். நீங்கள் உங்கள் உடல்மீதான உரிமை ஆணையைத் தேவனுக்குக் கொடுத்திருக்கின்றீர்களா?

## முன்னேற்பாடு

வேதாகமத்தின் மாபெரும் மனிதர்கள் ஜெபத்திற்கான நேரங்கள், இடங்கள் மற்றும் காரணங்கள் ஆகியவற்றைக் கொண்டிருந்தார்கள். பவுல் தமது ''முள்ளை'' கொண்டிருந்தார். இயேசு தமது ''பாத்திரத்தை'' கொண்டிருந்தார். மோசே, பாவம் நிறைந்த தமது இனத்தவரைக் கொண்டிருந்தார். கொஞ்சம் அல்லது அர்த்தமற்ற ஜெபங்களினால் சபைகள் அசைவற்றுக் கிடக்கின்றன மற்றும் சகோதரர்கள் மரித்த நிலையில் இருக்கின்றார்கள். ஜெபத்தை மீட்டுக்கொள்ளுங்கள், அப்போது நீங்கள் சபையை மீட்டுக்கொள்வீர்கள்! கூறுவதற்கு உங்களிடம் ஒன்றுமில்லை யென்றால், ஒன்றும் கூறாதீர்கள்! கவனிக்க ஒரு காலமுண்டு, அசையா திருக்க ஒரு காலமுண்டு, அமைதியாயிருக்க ஒரு காலமுண்டு. கவனித்தலைக் காட்டிலும் பேசுதல் சுலபமானதாக உள்ளது; அமைதியாயிருத்தலைக் காட்டிலும் பேசுதல் சுலபமானதாக உள்ளது. ஜெபத்திற்கு ஒரு [பருவ] காலத்தைக் கொண்டிருங்கள். நீங்கள் ஒன்றுமின்மையைக் குறி வைத்தீர்கள்

என்றால், அதையே பெறுவீர்கள். ஜெபத்திற்கு ஒரு குறிக்கோளும் ஒரு நோக்கமும் இருக்க வேண்டும். உடனடி/தானே தோன்றும் ஜெபம் என்பது மகிழ்வானதாக இருக்கலாம், ஆனால் இது மிக அரிதாகவே நிலைத்திருப்ப தாக உள்ளது. பரவசநிலை என்பது மிதம் மிஞ்சி மதிப்பிடப்படுகிறது. ஜெபிக்க மிகவும் கடினமாயிருக்கும்போது, மிகவும் கடினமாய் ஜெபியுங்கள்.

ஒரு பட்டியலை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். நாம் ஏன் இதைச் செய்யாதிருக்கின்றோம்? நாம் பிரசங்கங்கள், வகுப்புகள் முதலியன வற்றிற்கு ஏராளமான குறிப்புக்களை ஏற்படுத்துகின்றோம். நாம் சுகவீனமாக இருக்கும்போது, மருத்துவரிடத்தில் கேட்க வேண்டிய கேள்விகள் எல்லாவற்றையும் எழுதி வைத்துக் கொள்ளுகின்றோம். நாம் சிலவற்றை மறந்து விட விரும்புவதில்லை. என்றால், தேவனுடன் பேசும் போது நாம் எழுதப்பட்ட பட்டியல் ஒன்றைக் கொண்டிருப்பதில் என்ன தவறு இருக்கிறது? பிள்ளைத்தனமான வேண்டுகோள்கள் அந்தப் பட்டிய லில் எழுதப்பட்டிருக்காது! ஒரு பட்டியலை ஏற்படுத்துங்கள்! பின்பு அந்தப் பட்டியலை வாசியுங்கள். தாவீதின் சங்கீதங்களை வாசியுங்கள். இது யூதர்களின் பாடல்களாக மட்டுமின்றி, யூதர்களின் ஜெப புத்தகமாகவும் இருந்தது. தாவீது “தமது பட்டியலை” தேவனிடத்திற்கு எடுத்துச் சென்றார். சங்கீதங்களின் புத்தகம் “ஜெபத்தின் மிகச் சிறந்த பள்ளியாக” உள்ளது. ஒரு மாபெரும் பிரசங்கியாரிடத்தில், அவர் அவ்வளவு அதிகமாய்ச் சாதிக்க முடிந்தது எவ்வாறு என்று கேட்கப்பட்டது. “எனது ஜெபப் பட்டியல்” என்பதே அவரது எளிய பதிலாக இருந்தது. பொருட்படுத்தப்பட வேண்டியதாயிருந்த விஷயங்கள் அந்தப் பட்டியலில் இடப்பட்டன.

வயது [முதிர்தல்] என்பது ஜெபத்தை சுலபமாக்கி விடுவதில்லை. இருபத்து மூன்றாம் வயதில் கிறிஸ்துவுக்கென்று வாழ்ந்திருந்ததைக் காட்டிலும் அறுபத்து மூன்றாம் வயதில் கிறிஸ்துவுக்கென்று வாழுதல் என்பது சுலபமானதாக இருப்பதில்லை. இடம் என்பதும் கூட ஜெபம் செய்வதை சுலபமானதாக்குவதில்லை. நீங்கள் தமிழ் நாட்டின், சென்னை நகரில் [அல்லது உங்கள் ஊரில்] ஜெபிப்பதில்லை என்றால், அநேகமாக நீங்கள் ஆந்திராவின் ஹைதராபாத் நகரிலும் ஜெபிக்க மாட்டீர்கள். பிரசங்கியாராக இருத்தல் என்பதும்கூட, ஜெபத்தை மிகவும் சுலபமானதாக ஆக்குவது இல்லை! ஜெபிப்பதற்கு சுலபமான வேளை ஒன்று ஒருபோதும் இருப்பதில்லை!

## பவுலின் ஜெப வாழ்வு

பவுல் சாலையில் இறங்கி நடந்து வந்தால், அவரை நாம் அடையாளம் கண்டுகொள்ள மாட்டோம். நம்மைப் பொறுத்தமட்டில் பவுல், சாதனையை, வெற்றியை, ஊழியங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றார். ஜெபமே பவுலின் வல்லமையாக இருந்தது. “இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்.” பவுல் தாம் பிரசங்கித்ததை நடைமுறைப்படுத்தினார். அவரது ஜெபங்கள் தேவனுடனான அவரது உறவுமுறையின் மீது ஆதிக்கம்

செலுத்தின. பவுலின் ஜெபங்கள் சகோதரர்களுடனான அவரது உறவு முறையின் மீது ஆதிக்கம் செலுத்தின. அவர் சகோதரர்களுக்காக ஜெபித்தார்; அவருக்கான அவர்களின் ஜெபங்களை அவர் மிகவும் விரும்பினார்.

நமது ஜெப அட்டவணைகள் அவருடையது போலிருக்குமா அல்லது பலசரக்குப் பட்டியல் போலக் காணப்படுமா? எபேசியர் 3:14-21 பின்வருமாறு கூறுகிறது:

> இதினிமித்தம் நான் பரலோகத்திலும் பூலோகத்திலுமுள்ள முழுக் குடும்பத்துக்கும் நாமகாரணராகிய, நம்முடைய கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்துவினுடைய பிதாவை நோக்கி முழங்கால்படியிட்டு, நீங்கள் அவருடைய ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையாய்ப் பலப்படவும், விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கவும், நீங்கள் அன்பிலே வேரூன்றி, நிலைபெற்றவர்களாகி, சகல பரிசுத்தவான்களோடுங்கூடக் கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து, அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ள வல்லவர்களாகவும், தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவும், அவர் தமது மகிமையினுடைய ஐசுவரியத்தின்படியே, உங்களுக்கு அநுக்கிரகம் பண்ணவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன்.
>
> நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியைசெய்கிற வல்லமையின்படியே, நமக்குச் செய்ய வல்லவராகிய அவருக்கு, சபையிலே கிறிஸ்து இயேசுவின் மூலமாய்த் தலைமுறை தலைமுறைக்கும் சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென்.

இந்த ஜெபத்தை ஆழ்ந்தறிவுடன் படியுங்கள். இது நாம் வழக்கமாக ஞாயிற்றுக்கிழமைகளில் கேட்கும் ஜெபங்களைப் போல் ஒலிப்பதில்லை. பவுல் தேவனை அறிந்துகொள்ள, இடர்ப்பாடான சத்தியங்களை உணர்ந்துகொள்ள விரும்பினார். அவர், (1) ஆவியானவரால் உள்ளாகப் பெலமடையும்படி, (2) நமது இருதயங்களில் விசுவாசத்தினால் கிறிஸ்துவைப் பெற்றிருக்கும்படி, (3) கிறிஸ்துவின் அன்பை உணர்ந்து அறிந்துகொள்ளும்படி, மற்றும் (4) தேவனால் நிறையப் பெற்றிருக்கும்படி கேட்டுக் கொண்டார்.

*"ஆண்டவரே, நான் ஜெபத்தில் நம்பிக்கை கொள்ளுவதில்லை. நான் உம்மை நம்புகின்றேன். விசுவாசத்துடன் ஜெபிக்க எனக்குப் போதியும்."*

# ஜெபம்

## முடிவுரை

ஜெபத்தைப் பற்றிய ஒரு படிப்பு தேவனைப் புரிந்துகொள்ளுதலாக உள்ளது. தேவன் தேவனாக இருக்கின்றார், மனிதன் அப்படியிருப்பதில்லை; தேவன் தேவனாகவே இருக்கின்றார், நான் அப்படி இருப்பதில்லை. ஆகையால், ஜெபத்தைப் பற்றிய ஆழ்ந்த சிந்தனையானது நம்மைத் தாழ்த்து கிறது. இது தட்டிக்கொடுக்கும் பதில்களை விட அதிகமான கேள்விகளுடன் முடிகிறது. இது தீர்வுகளுடனல்ல ஆனால் தேவனுடனேயே முடிகிறது.

கிறிஸ்தவர்கள் தேவனைத் தேடுகின்றார்கள். நாம் அவரது சித்தத்தை அறிந்து கொள்ள அதற்குள் இருக்க விரும்புகின்றோம். இவ்விதமாக, ஜெபம் தேவனுடைய சித்தத்தை உள்ளடக்குகிறது. அடிக்கடி, நாம் அவருடைய சித்தத்தை எவ்வளவு அதிகமாகத் தேடுகின்றோமோ, அவ்வளவு குறைவாகவே நாம் அதை அறிகின்றோம். தேவன் அறிவாக மட்டும் இருப்பதில்லை; ஜெபம் என்பது வேதாகமமாகி விடுவதில்லை. ஆகையால் கேள்விகள் எஞ்சி நிற்கின்றன:

தேவன் நமக்காக ஏதேனும் சித்தம் கொண்டிருக்கின்றாரா? அந்த சித்தத்தை தேவன் வெளிப்படுத்துகின்றாரா அல்லது அதை ஒளித்து வைத்துள்ளாரா? அதைக் கண்டறிவதற்கு நாம் ஏன் இவ்வளவு வேதனை யுள்ள தூரங்களுக்குச் செல்லுகின்றோம்? நாம் இறையியலில் இருந்து ஆவிக் குரிய தன்மையைப் பிரித்து விட முடியுமா? நாம் இறையியல் இல்லாமல் தேவனை எதிர்கொள்ள இயலுமா? தேவனுடைய சித்தத்தைக் கண்டறிதல் என்பது வேத வசனரீதியான கருத்தாக உள்ளதா? “தேவனுடைய சித்தம்” என்பதற்கு வேதாகம ரீதியான விளக்கம் என்ன? தேவனுடைய சித்தத்தைக் கண்டறிய முயற்சிப்பதற்கு நாம் தவறான சிந்தனையைப் பயன்படுத்து கின்றோமா? வேதாகமம் இல்லாமல் நாம் தேவனுடைய சிந்தையை அறிய முடியுமா? “மயிருள்ள தோலை வெளியே போடுதல்” என்பது வீணானதாக இருப்பது ஏன்?

நாம் தேவனுடைய நம்பிக்கையின் பேரில் ஜெபிக்கின்றோம்! ஆபேல் தேவனை விசுவாசித்தார், அவர் [ஆபேல்] மரித்தார். ஏனோக்கு தேவனு டன் நடந்தார், அவர் மரிக்கவில்லை. நோவா தேவனுக்குக் கீழ்ப்படிந்தார், மற்றும் எல்லாரும் மரித்தார்கள். நாம் எவற்றை நம்புகின்றோமோ, அவற்றினால் நமது வாழ்வு மாற்றப்படுகிறது. தேவனுடைய சித்தத்தைக் கண்டறிவதற்கு நாம் வேத வசனங்களை அறிய வேண்டும். தேவனுடைய சித்தத்தைக் கண்டறிவதற்கு நாம் தேவனை அறிய வேண்டும். நாம் தேவனைப் போல் இருக்கும்போது அவருடைய சித்தத்தை மேன்மையாகப் புரிந்துகொள்ளுகின்றோம் என்பது தெளிவு. ஜெபம் என்பது உறவு

முறையை உள்ளடக்குகிறது . தேவனுடைய சித்தத்தைக் கண்டறிதல் என்பது - விசேஷித்த அடையாளங்களினால் அல்ல ஆனால் - அவருடனான என் உறவுமுறையின் அடிப்படையிலேயே அமைய வேண்டும். ஆகையால், அவரது சித்தம் என்பது மறைக்கப்பட்டதாகவோ அல்லது நழுவுகிற தாகவோ - ஒரு புதிராகவோ, புரிந்துகொள்ள முடியாத ஒரு விஷயமாகவோ - இருக்க வேண்டிய அவசியம் இராது. தேவன் அறிகின்றார்; தேவன் அறியப்பட வேண்டும் என்று விரும்புகின்றார். எளிய, குழந்தையைப் போன்ற, கீழ்ப்படிதலுள்ள விசுவாசத்தில், தேவன் தமது சித்தத்திற்குள் நம்மை அனுமதிக்கின்றார். நம்மைப் பற்றி அறிந்துகொள்ளுதல் என்பது வேதனை மிகுந்ததாக உள்ளது. தேவனைப் பற்றி அறிந்து கொள்ளுதல் என்பது வேதனை மிகுந்ததாக உள்ளது, ஆயினும் அது என்ன ஒரு சிலாக்கியம்? ஆகையால் நாம் கீழ்ப்படிகின்றோம்; நாம் சரணடைகின் றோம்; நாம் சேவிக்கின்றோம். பின்பு பரலோகத்தின் தேவன் நமது எண்ணங்களுக்கும் அதிகமாகவே நம்மை ஆசீர்வதிக்கின்றார். நான் என் வாழ்வை வாழ்ந்திருக்கின்றேன். இல்லை, அது நான் சிந்தித்த வகையில், அது நான் திட்டமிட்ட வகையில் அமையவில்லை. ஆனால் இது மிக மேன்மை யானதாக - மிக மிக மேன்மையானதாக உள்ளது! தேவன் தேவனாகவே இருக்கின்றார்! தேவன் நல்லவராக இருக்கின்றார்! தேவனின்றி மக்கள் எவ்வாறு வாழ முடியும்?

"வேத வசனங்களில் நன்கு பழக்கமானவைகள் அதிகம் நெருக்கமாக வாசிக்கப்பட வேண்டும்'' என்பதை நாம் கற்றிருக்கின்றோமா? நாம் தொடங்கிய இடத்திற்குத் திரும்புங்கள்: லூக்கா 11. நாம் எல்லாருக்காகவும் சீஷர்கள் பேசினார்கள்: ''ஜெபம்பண்ண எங்களுக்குப் போதிக்க வேண்டும்." இயேசு அந்த வேண்டுகோளுக்கு ஒரு ஜெபத்தைக் கொண்டு பதில் அளித்தார், அது "மாதிரி ஜெபமாக உள்ளது." பின்பு அவர் இன்றைய நாட்களில் புறக்கணிக்கப்பட்டு தவறாகப் புரிந்துகொள்ளப்படுகிற, கிளர்ச்சியைத் தூண்டும் ஒரு உவமையைப் போதித்தார்: "மூர்க்கமான (பித்துப்பிடித்த) நண்பன்."

கிறிஸ்தவர்கள் பிள்ளைகளாய் இருக்கின்றார்கள். பெற்றோர்கள், நள்ளிரவில் தங்கள் பிள்ளைகளின் தேவைகளையும் விருப்பங்களையும் கவனிக்க அன்புடையவர்களாய் இருக்கின்றார்கள். பிள்ளைகள் "கதவு களைத் தட்ட" வேண்டிய அவசியம் இல்லை. ஜெபம் என்பது "மூர்க்கமான (பித்துப்பிடித்த) நண்பர்களுக்கானது'' அல்ல. ஜெபம் என்பது தங்கள் தந்தையர்களின் அன்பினுள் பாதுகாப்பாக இருக்கின்ற பிள்ளைகளுக் கானதாக உள்ளது. "பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரமபிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?" (லூக். 11:13).

*"முதலாவது ஜெபியுங்கள்."*

# ஒரு அறிமுகம்

## சங்கீதம் 5:3

*"கர்த்தாவே, காலையில் என் சத்தத்தைக் கேட்டருளுவீர்; காலையில் உமக்கு நேரே வந்து ஆயத்தமாகி, காத்திருப்பேன்" (சங்கீதம் 5:3).*

*1978ல் ஒரு ஒலி நாடாவினால் எனது வாழ்வும் ஊழியமும் அடிப்படை மாற்றத்தைப் பெற்றன. ஊழியர்களுக்குத் தேவனுடன் ஆவிக்குரிய உறவு பற்றி, ஆவிக்குரிய விற்பன்னர் ஒருவர் அதில் விரிவுரையாற்றிக் கொண்டிருந் தார். அவர் அறுபது ஆண்டுகளுக்கும் மேலாக, தமது ஒவ்வொரு நாளின் முதல் மணி நேரத்தையும் தேவனுக்குக் கொடுத்திருந்தார். ஓ! தேவனுடன் எனது அன்றாட நடையானது கடினமானதாயிருக்கலாம், ஆனால் அது மிகவும் எளிமையானதாக உள்ளது. நம்மில் எத்தனை பேர், ஒவ்வொரு நாளிலும் ஒரு "முதலாம் மணியை" கொண்டுள்ளோம்? அதைக் கொண்டு நாம் என்ன செய்கின்றோம்? என்னுடைய முதலாம் மணி வேளை, "ஒரு கப் காஃபி மற்றும் Dallas Morning News என்ற பத்திரிக்கை" ஆகியவற்றிற்கு ஒப்புக்கொடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு நாளையும் தேவனுடன் தொடங்குவதைக் காட்டிலும் சிறந்த விஷயம் வேறு என்ன இருக்க முடியும்? இதை நான் ஐம்பது ஆண்டுகள் செய்திருந்தால் எப்படியிருக்கும்? ஒரு ஆவிக்குரிய விற்பன்னராக இருத்தல் என்பது அறிவுக் கூர்மை, கல்வி, திறமை அல்லது ஆளுமைத்தன்மை ஆகியவற்றைச் சார்ந்த விஷயம் அல்ல. நேரம் கொடுக்கப்பட்டுள்ள நம் யாவருமே, ஆவிக்குரிய விற்பன்னர்களாக முடியும்! தேவனுடன் உங்கள் அன்றாட நடையில் வளருங்கள்.*

### எளிமை

தேவனுடன் ஒரு நாளைத்தொடங்குதல் என்பது மிகவும் எளியதும் ஞானமுமான செயலாக உள்ளது. இதற்கு மாறாக, நாம் பிரச்சனைகள் குறித்து "செயல்படுகின்றோம்." "எப்படி செய்வது" என்ற தலைப்பில் உள்ள புத்தகங்களைப் படித்து, சுய உதவி ஒலி நாடாக்களைக் கவனித்துக் கேட்கின்றோம். கருத்தரங்குகளிலும் தியானங்களிலும் கலந்து கொள்ளு கின்றோம். நல்ல துணைவராக, நல்ல பெற்றோராக இருப்பது எப்படி என்றும், கவலைகளை, வீணடித்தலை, புறங்கூறுதலை, இவை போன்ற மற்றவைகளை வெற்றி கொள்வது எப்படி என்று நாம் படிக்கின்றோம். இப்படிப்பட்ட அணுகுமுறைகள் யாவும் விதிமுறை, நுட்பங்கள் மற்றும் வழக்கமான ஏமாற்றங்களிலேயே முடிகின்றன. தேவனுடன் நடப்பதை மாத்திரம் செய்தால் என்ன? வேதாகமம் மனிதர்களின் நிலை உயர்வுகளில் அல்ல ஆனால் நபர்களின்மீதே கவனம் செலுத்துகின்றது. தேவன்

உங்களைத் துன்புறுத்துவதோ அல்லது உங்களுக்கு இடையூறாக இருப்பதோ கிடையாது! நான் அன்றாடம் தேவனுடன் நடக்கும்போது, என் மனைவி ஒரு சிறந்த கணவரையும், என் பிள்ளைகள் ஒரு சிறந்த தந்தையையும், நான் ஊழியம் செய்யும் சபையார் ஒரு சிறந்த பிரசங்கியாரையும் தாமாகப் பெறுகின்றார்கள்! சுவிசேஷமானது நபர்களை மேன்மையானவர்களாக்குகின்றது! நாம் ஆராதிக்கின்ற, உடன் நடக்கின்ற தேவனைப் போலாகின்றோம். ஆவிக்குரிய பணியானது ஆவிக்குரிய மக்களால் மட்டுமே செய்யப்படக் கூடும்.

ஒரே நிமிடத்தில் நான் பூரணப்பட்டு விட முடியாது, ஆனால் ஒரு நாளில் ஒரு வேளையில் நான் முற்றிலும் உண்மையுள்ளவனாக முடியும் (வெளி. 2:10). என்ன ஒரு நிம்மதி! நான் உண்மையுள்ளவனாக நிலைத் திருந்தால், கர்த்தர் திரும்ப வரும் நாள் எது என்பது பற்றிக் கவலையில்லை! இது நமது சபை வருகைப் பிரச்சனையைத் தீர்த்து வைக்கிறது! தேவனுடன் நடக்கின்ற மக்கள் "சபையை விட்டு" செல்வதில்லை. ஞாயிற்றுக்கிழமை களில் தேவன் எங்கு இருப்பார்? தேவனுடன் நடக்கின்ற மக்கள் தேவன் இருக்கும் இடத்திலேயே இருப்பார்கள். நித்திய வாழ்வு மட்டுமே பூமிக்குரிய இந்த வாழ்வின் ஒரே ஆதாரமாயிருக்க முடியும்.

> எனக்குத் தேவையானதெல்லாம் இன்றைய நாளே –
> என்னால் கையாள முடிவதெல்லாம் இன்றைய நாளே –
> எனக்குள்ளதெல்லாம் இன்றைய நாளே.

இரண்டு அடிவைப்புகள் மாத்திரமே வாழ்வை நிர்ணயிக்கின்றன (இது எந்த ஒரு துறையிலும் உயர் நிலையை அடைவதற்கு நடைமுறைப்படுத்த வேண்டிய அதே அடிவைப்புகளாகவே உள்ளன). முதலாவது, தொடங் குதல். நீங்கள் ... இப்போதே தொடங்க வேண்டியுள்ளது! இரண்டாவது, நிறுத்தாதிருத்தல்! கிறிஸ்தவம் என்பது ஒரு நடையினால் பின்தொடரப் படுகின்ற அடிவைப்பாக உள்ளது. நீங்கள் உங்கள் ஒரே ஒரு வாழ்வைக் கொண்டு என்ன செய்யப் போகின்றீர்கள்? தேவனுடன் நடப்பவராக இருப்பதைக் காட்டிலும் மேன்மையான ஒரு செயலை நீங்கள் செய்ய இயலாது. ஒவ்வொரு வினாடி நேரத்தையும் நாம் தேவனுடன் செலவிடுகின் றோம் என்று உணரும்போது, வாழ்வு பயபக்தியுள்ளதாகிறது. ஒருவரின் தேவபக்தியுள்ள வாழ்வில்தான் இரகசியம் அடங்கியுள்ளது; ஒருவருடைய தேவபக்தியுள்ள வாழ்வே அவரது ஆவிக்குரிய வாழ்வின் அளவுகோலாக உள்ளது.

## போதனை முறையில் பேசுதல்

போதனையியல் என்பது பாடங்களைக் கட்டியெழுப்பும் அறிவியலாகும். இந்தப் பாடத்தலைப்பான "தேவனுடன் எனது அன்றாட நடை" என்பதில் உள்ள ஒவ்வொரு வார்த்தையையும் விவரித்துரைத்தல் என்பது ஒரு வழிமுறையாக உள்ளது.

1. "தேவன்." இந்தத் தலைப்பில் உள்ள "பெரிய வார்த்தை" எது?

*தேவன்! முடிவில்லாத, மாற்ற இயலாத, நித்தியமான பரிசுத்த தேவன்! வல்லமையுடைய, படைக்கும் திறனுள்ள, பரிசுத்தமான, தலைசிறந்த ஒரு தேவனைப் பெற்றிருப்பதில் உள்ள அர்த்தத்தை நமது சமுதாயம் இழந்து நிற்கிறது. தேவன் தேவனாகவே இருக்கின்றார், நான் அப்படி இருப்ப தில்லை. தேவனுடைய "தேவத்துவத்தைப்" பற்றி ஆழ்ந்து சிந்தித்துப் பாருங்கள். தேவன் முழுமையானவராக, தனிப்பட்டவராக, நீதியுள்ள வராக, நியாயமானவராக, இரக்கம் நிறைந்தவராக மற்றும் உண்மை யுள்ளவராக இருக்கின்றார். நான் தேவனுக்கென்று "பரிசுத்தமான பசி" உள்ளவராக இருக்க வேண்டும். தேவன் தமது சாயலாகவே மனிதனைப் படைத்தார் (ஆதி. 1:26, 27). இன்றைய நாட்களிலோ, மனிதன் தேவனை மனித சாயலில் மீண்டும் கண்டு அறிந்துள்ளான். மக்கள், "நான் அப்படிப் பட்ட ஒரு தேவனை நம்பியிருக்க முடியாது" என்று கூறி இருக்கின்றார்கள். தேவன் எப்படிப்பட்டவராக இருக்க வேண்டும் என்று முடிவு செய்ய மனிதன் யார்? "சிருஷ்டிகரைத்" தொழுது சேவியாமல் "சிருஷ்டியைத்" தொழுது சேவித்த சமுதாயத்தினரைப் பவுல் கடிந்து கொண்டார் (ரோமர் 1:16-32). தேவனை மனித சாயலில் உண்டாக்கும் மதவிரோதக் கொள்கை யைக் காட்டிலும் அதிக நயவஞ்சகமான கொள்கை வேறு எதுவும் இருக்க முடியாது! பத்து கட்டளைகளில் முதலாவது கட்டளை மாபெரும் கட்டளையாக உள்ளது: "என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்" (யாத். 20:3).*

*நாம் தேவனைப் புறக்கணித்தோம் என்ற ஒரே ஒரு எளிய காரணத் தினால்தான் இன்றைய நாட்களில் சமுதாயமானது கட்டுப்பாடு அற்றதாக இருக்கிறது! எல்லாவற்றையும் இணைத்துப் பற்றும் (அச்சாணி) மையம் ஒன்று நமக்கு இல்லாமல் போய்விட்டது. ஒவ்வொரு நாள் என்பதும் நாம் தேவனிடத்திலிருந்து பெறும் பரிசாகவே உள்ளது. நமது வாழ்வின் ஒவ்வொரு நாளிலும் பெரிய முடிவுகளிலும் சிறிய விஷயங்களிலும் தேவன் இருக்கின்றார். தேவனுக்கு ஏதொன்றும் மிகவும் பெரிய விஷயமாக இருப்ப தில்லை; தேவனுக்கு ஏதொன்றும் சிறிய விஷயமாகவும் இருப்பதில்லை. நமது சமூகம் சத்தியத்தைத் தவறான எல்லா இடங்களிலும் தேடிக் கொண்டிருக்கிறது. தினந்தோறும் தேவனைத் துதியுங்கள், தேவன் பேசுவதைக் கவனித்துக் கேளுங்கள், தேவனிடத்தில் பேசுங்கள், தேவனுடன் வாழுங்கள். நாம் தேடத் தொடங்கும்போது கண்டுபிடிக்கப்பட வேண்டும் என்றே தொடங்குகிறோம். யாரேனும் ஒருவரால் பிடிக்கப்படும் படி மட்டும் நாம் சிலவற்றைக் காணத் தொடங்குகின்றோம். நமது அன்றாட நடையில் நாம் படிப்படியான ஒரு வளர்ச்சியின் பாதையில் செல்லுகின்றோம்.*

> *"எனது வாழ்வில் தேவன் எனக்குத் தேவை."*
> *"எனது வாழ்வில் தேவனை விரும்புகின்றேன்."*
> *"எனது வாழ்வில் தேவனை நான் பெற்றிருக்க வேண்டும்."*

*2. ஜி "நடை." கிறிஸ்தவம் என்பது ஒரு நடையாக* [walk] *உள்ளது, இது ஒரு பேச்சு* [talk] *அல்ல. நடையைப் பற்றிப் பலர் பேசுகின்றார்கள், ஆனால் அந்த நடையை அவர்கள் நடப்பதில்லை. கிறிஸ்தவம் என்பது பேச்சைத்*

தவிர வேறொன்றும் இல்லை என்றால், நம்மில் ஏராளமானவர்கள் பரலோகத்திற்கு உரியவர்களே. அப். 17ல் மார்ஸ் மேடையில் இருந்த மக்கள் "நவமான காரியங்களைச் சொல்லுகிறதிலும் கேட்கிறதிலும்" அகமகிழ் வடைந்தார்கள் (வ. 21ஆ). அவர்கள் சுவிசேஷத்தைப் புறக்கணித்தார்கள் ... அவர்கள் பவுலைப் பார்த்து நகைத்தார்கள். ஆவிக்குரிய தன்மை என்பது உணர்வு அல்ல, மாறாக அது ஒரு நடையாக உள்ளது. வேதாகமம் உணர்வு களுக்கு எவ்வளவு சிறிய அளவு முக்கியத்துவம் கொடுத்துள்ளது என்பதை நீங்கள் கவனித்திருக்கின்றீர்களா? தேவன் மனிதரின் ஒவ்வொரு நாளின் வாழ்க்கையின் மத்தியிலும் நடக்கின்றார். என்ன ஒரு தேவன்! என்ன ஒரு வாழ்வு!

ஆகாய விமான ஓட்டுநர்கள், தரைப் பயிற்சிப்பள்ளியில் இருந்துதான் [தங்கள் பணிவாழ்வைத்] தொடங்குகின்றார்கள். நமது உயர் தொழில்நுட்ப உலகத்தில், இப்பொழுது இது மிகவும் சிக்கலானதாகவே இருக்கிறது. ஆயினும், ஒருவர் அதில் படித்து, தேர்ச்சியடைந்து - விமானத் துறையில் ஒரு அதிகாரியாகியும் விடலாம் - ஆனாலும் அவர் விமானத்தில் பறக்கக் கற்றுக்கொள்ளாதிருந்தால், தகுதி பெற்ற விமான ஓட்டுநராக முடியாது. தரைப்பயிற்சிப் பள்ளி மட்டுமே தனியே ஒரு விமான ஓட்டுநரை உருவாக்க இயலாது! வாழ்வின் எல்லாத் துறைகளிலும் பயிற்சி, பயிற்சி, பயிற்சி என்ற செயல்பாடுதான் கொதிக்கும் நிலையில் உள்ளது. ஜெபிப்பதால் மட்டுமே உங்களால் ஜெபிக்கக் கற்றுக் கொள்ள முடியும்; நடப்பதால் மட்டுமே உங்களால் நடக்கக் கற்றுக் கொள்ள முடியும். "உடனடியான ஆவிக்குரிய தன்மை" என்று எதுவும் இல்லை. மிகவும் பயபக்தியுள்ளவர்கள் போலப் பேசுகின்ற மக்களைக் கண்டால் எனக்கு ஆத்திரம்தான் வருகிறது.

இந்த நடை என்பது, சிறு விரைவோட்டமாக இருப்பதில்லை, மாறாக இது நெடுந்தூர ஓட்டம் ஆகும். இது, "பூங்காவில் நடை பயிலுதல்" போன்றதாக இருப்பதில்லை, இது ஒரு கேளிக்கையாக, கேளிக்கையாக, கேளிக்கையாக இருப்பதில்லை. எனது நடையை வேறு எவரும் நடக்க முடியாது - என் தாயோ, என் ஊழியக்காரரோ எனக்காக நடக்க முடியாது. என் சொந்த நடைக்கு நானே முழுப்பொறுப்பாளியாகின்றேன்.

3. "அன்றாடம்." வாழ்வு என்பது அன்றாடம் நடைபெறும் முடிவற்ற ஒரு நிகழ்ச்சியாக உள்ளது. மனித நாள்காட்டியில் - நேற்று, இன்று, நாளை என்ற - மூன்று நாட்களே உள்ளன. நேற்று என்பது கடந்து போய்விட்டது, அதை மாற்ற முடியாது. நாளை என்பது எப்போதும் வராமலே போய் விடலாம். இன்றைய நாளுடன் மட்டுமே நான் இணைக்கப்பட்டுள்ளேன். தேவன் நேற்றோ அல்லது நாளையோ நம்மை அழைப்பதில்லை; அவர் இன்று நம்மை அழைக்கின்றார். நேற்று என்ன நடந்திருந்தாலும், இன்று நான் உண்மையுள்ளவனாக இருக்க முடியும். அதுபோன்றே, இன்றுள்ள தேவகிருபையானது நாளைக்குப் போதுமானது அல்ல! ஒவ்வொரு நாளும் நமது உண்மைக்கும் விசுவாசத்துக்கும் தகுந்த அளவில்தான் நமக்குத் தேவகிருபை கிடைக்கின்றது.

நாம் நமது சிலுவையை அநுதினமும் எடுத்துக்கொண்டு இயேசுவைப் பின்பற்ற வேண்டும் என்று இயேசு நமக்குக் கூறியுள்ளார் (லூக். 9:23). பவுல்,

*தாம் அநுதினமும் சாவதாகக் கூறினார் (1 கொரி. 15:31). ஆதி சபையார் அன்றாடம் நற்செய்தி ஊழியம் செய்தார்கள்: "தினந்தோறும் தேவாலயத் திலேயும் வீடுகளிலேயும் இடைவிடாமல் உபதேசம் பண்ணி, இயேசுவே கிறிஸ்துவென்று பிரசங்கித்தார்கள்'' (அப். 5:42). நாம் அன்றாடம் உணவுண்டு, உறங்கி, பணிசெய்து அன்றாடம் வாழ்கின்றோம்! ஆயினும் அன்றாடம் சரியான வழியில் வாழ்வது என்பது மிகவும் கடினமானதாக உள்ளது. ஜனவரி 1 அன்று நாம் கம்பீரமான உடையணிதல் என்பது மிகவும் சுலபமானதாக உள்ளது, பெரிய நாட்களில் நாம் அனைவருமே பெரியவர் களாகி விடுகின்றோம். நாம் எல்லாரும் ''பெரும் செயல்கள்'' செய்ய விரும்புகின்றோம். தேவன் விரும்புவதெல்லாம் நமது அன்றாட நடையே ஆகும். அவ்வப்போது ''பக்திக்கு உரியவர்களாக'' இருப்பது என்பது தோல்வியில் முடிகிறது. கிறிஸ்தவம் என்பது ஒரு நடையாகும், அது ஒரு சக்கர ஓட்டமல்ல!*

*"Carpe diem" ... "நாளைப் பற்றிக் கொள்ளுங்கள்!" "இது கர்த்தர் உண்டு பண்ணின நாள்; இதிலே களிகூர்ந்து மகிழக் கடவோம்" (சங். 118:24). இதைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். இதை மகிழ்வுடன் அனுபவியுங்கள். இதை முற்றிலும் மேற்கொள்ளுங்கள். சரியானவற்றையும், தேவையான வற்றையும் ஒவ்வொரு நாளும் தேர்ந்து கொள்ளுதல் என்பது தேவபக்தி யுள்ள வாழ்வில் அடங்கியுள்ளது. அன்றாடம் உங்கள் வாழ்க்கைத் துணையைப் பற்றிய எண்ணம் கொண்டிருப்பதும், அவருக்கு மரியாதை செலுத்துவதுமான செயலுக்கு, எதிர்பாராத பரிசு ஒன்று எப்போதும் சமமானதாக இருக்க முடியாது. நமக்குள் "கிறிஸ்துவை" ஏற்படுத்துவதே தேவனுடைய முற்றான நோக்கமாக உள்ளது. இதற்கு அன்றாட நேரமும் முயற்சியும் தேவை - அன்றாடம்!*

*உங்கள் ஆவிக்குரிய தன்மையின்மீது ஒரு எச்சரிக்கைச் சீட்டை ஒட்டி வையுங்கள் - ''உங்கள் அமைதியான நேரத்தைக் குறித்து ஒருபோதும் பெருமையடைய வேண்டாம்." தேவனுடன் நடத்தல் நம்மைத் தாழ்மைப் படுத்துகிறது. தேவனுடன் நடப்பதென்பது மற்றவர்களைக் காட்டிலும் உங்களை மேன்மைப் படுத்திக் கொள்ளுதல் என்பதாகாது (பிலி. 2:3). தற்பெருமையும், தேவனுடன் நடப்பதும் ஒன்றுடன் ஒன்று கலக்க இயலாது! எந்தப் பரிசுத்தவானும், தான் பரிசுத்தவான் என்ற அகங்கார உணர்வு உடையவராக இருப்பதில்லை! நமது அன்றாட நடையானது தேவனை மகிமைப்படுத்துவதற்குத்தானே தவிர, நம்மை மகிமைப்படுத்து வதற்கானதல்ல. இன்றைய நாள் என்பது எப்போதுமே இங்குள்ளது, நாளைய தினம் என்பது ஒருபோதும் இருப்பதில்லை! "தேவனே, உமது சித்தத்தை எனக்குள், என்னுடன், என் மூலம் நிறைவேற்றும்."*

## *வாருங்கள், என்னுடன் நடவுங்கள்.*

*மனுஷனே, நன்மை இன்னதென்று அவர் உனக்கு<br>அறிவித்திருக்கிறார்; நியாயஞ் செய்து, இரக்கத்தைச் சிநேகித்து,<br>உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல்<br>வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்? (மீகா. 6:8).*

*1*

# தேவனுடன் எனது அன்றாட நடை

## ஆவிக்குரிய தன்மை (1)

*தேவனுடன் ஒரு அன்றாட நடையும் உண்மையான ஆவிக்குரிய தன்மையும் ஒன்றானதாகவே உள்ளன. உண்மையான கிறிஸ்தவமும் உண்மையான ஆவிக்குரிய தன்மையும் ஒன்றானதாகவே உள்ளன. ஆவிக்குரிய தன்மை என்பது இன்றைய நாட்களில் நாகரீக பாணியில் மீண்டும் வந்துள்ளது. Newsweek என்ற பத்திரிக்கை, 1996களில் "எப்படிச் செய்வது" என்ற தலைப்பிலான புத்தகங்களை விட ஆவிக்குரிய புத்தகங்கள் அதிகம் எழுதப்பட்டிருப்பதாகக் கண்டறிந்துள்ளது. மக்கள் கிறிஸ்தவத்தில் அல்ல, ஆனால் "ஆவிக்குரிய தன்மையில்" உள்ளனர் என்பது கவலைக் குரியதாக இருக்கிறது. ஒருவேளை "மேற்கத்திய நாட்டுப்புற" இசைக் கலைஞர் கூறிய பின்வரும் கூற்று மிகச் சிறந்ததாக இருக்கலாம்:*

> *நான் ஒரு மதவாதியான நபரல்ல. நான் சபைக்குச் செல்வதோ அல்லது எவ்விதமான இறையியலை அல்லது உபதேசத்தை அல்லது வேறு எதையும் நம்புவதோ இல்லை, ஆனால் ஆவிக்குரிய அண்டம் ஒன்று உள்ளது என்று நான் நம்புகின்றேன். நான் இந்து மதம், கிறிஸ்தவம், புத்தமதம் மற்றும் அமெரிக்க நாட்டு ஆவிக்குரிய கொள்கை ஆகியவற்றைப் பற்றி வாசித்துள்ளேன். நான் ஆவிக்குரிய வகையில் கலப்பினத்தவனாக இருக்கின்றேன். நான் முழுவதும் நீல - இரத்தம் கொண்டவனல்ல, ஆனால் எனக்கு எது பயன் படுகிறதோ, அதை எடுத்துக் கொள்ளுகின்றேன்.*

*உபதேசம், உறுதிப்பாடு அல்லது விசுவாசம் ஆகியவை இன்றி ஆவிக் குரிய தன்மை நிலவுவது எவ்வாறு? சிந்தனையின்றி விசுவாசம் நிலவுவது எவ்வாறு? நமது இசைக் கலைஞரான நண்பர், தாமே தமக்குச் சொந்தமான தேவனாகவும் தமது சொந்தமான சபையாகவும் ஆகிவிட்டார். இது, "உங்களுக்கு நீங்களே ஏற்படுத்திக் கொள்ளும்" ஆவிக்குரிய தன்மையாக உள்ளது. ஆவிக்குரிய தன்மை, சுயநலத்திலும் மேட்டிமையிலும் நிறைவை அடைய முடியும். [ஆனால்] அதில், "சுயத்தினால் உறிஞ்சப்படுதல்" என்ற அபாயம் எப்போதும் உள்ளது. "சுய மேம்பாட்டு" ஆவிக்குரிய தன்மை என்பது உண்மையான ஆவிக்குரிய தன்மையாக இருப்பதில்லை.*

*தேவனின்றி, வேதாகமம் இன்றி, கிறிஸ்து இன்றி, சத்தியம் இன்றி, சபை*

இன்றி, அல்லது உணர்வு இன்றி ஆவிக்குரிய தன்மை எவ்வாறு இருக்க முடியும்? ஆவிக்குரிய தன்மை என்பது எல்லா விஷயங்களிலும், சுயத்திற்கு ஊழியம் செய்வதாயிருப்பதில்லை. "ஆவிக்குரிய தன்மை" என்ற வார்த்தை யின் சில வடிவங்களைப் பயன்படுத்தி வேதாகமம் எவ்வளவு கொஞ்சமாக வெளிப்படுத்துகின்றது என்பது கவனத்தை ஈர்ப்பதாக உள்ளது. ஆபிரகாம், மோசே, தாவீது, மற்றும் பவுல் ஆகியோர் தங்களைப் பற்றி கூறப்பட்ட மாபெரும் கூற்றுக்களைக் கொண்டிருந்தார்கள், ஆனால் அவர்கள் "ஆவிக் குரியவர்கள்" என்று வகைப்படுத்தப்பட்டிருந்தது இல்லை. பன்னிரெண்டு அப்போஸ்தலர்களை நீங்கள் எவ்வாறு மதிப்பிடுவீர்கள்? யார் மிகவும் அதிகமாக ஆவிக்குரிய தன்மை கொண்டவர்? 1 கொரிந்தியர் 2:9-16; 3:1; கலாத்தியர் 6:1; எபேசியர் 1:3; கொலோசெயர் 1:9; 1 பேதுரு 2:5; மற்றும் ரோமர் 8:6 ஆகியவை அவசியமான ஒரு சில வேதாகமக் குறிப்புகளாக உள்ளன.

நம்மிடத்தில் இருப்பதைக் காட்டிலும் அதிகமாக தேவபக்தியுள்ள வர்களாக நாம் நினைக்கப்பட வேண்டும் என்று நாம் அனைவருமே விரும்புகின்றோம். பரிசேயர்கள் கொடுக்கும்போது தாரை ஊதுவிக்கச் செய்தார்கள், ஜெப ஆலயங்களிலும் தெருமுனைகளிலும் நீண்ட ஜெபம் செய்தார்கள், உபவாசம் இருக்கும்போது முகவாடலாக இருந்தார்கள் (மத். 6:1-18). பிரசங்கியார்கள் ஒரு புதிய ஊழியத்தில் முதல் ஆண்டில் பெரும் பயம் கொள்கின்றார்கள். மக்கள் தங்களிடம் இருப்பதை விட அதிகமான விசுவாசம் நிறைந்தவர்களாகத் தோன்றுவதற்கு முயற்சி செய்கின்றார்கள். ஒருவர் மற்றவரை அறிந்துகொள்ளும் ஒரு ஆண்டு கடந்தபின்பு, இந்த விளையாட்டு குறைகிறது. ஆயினும், நாம் நம்மையே ஏமாற்றிக் கொள்ளக் கூடும் - சில வேளைகளில் இதை நாம் செய்கின்றோம்! நாம் மற்றவர்களை ஏமாற்றக்கூடும் - சில வேளைகளில் இதை நாம் செய்கின்றோம்! தங்கள் ஆவிக்குரிய தன்மையினால் மற்றவர்களை வசீகரிக்க முயற்சி செய்தவர் களை நோக்கி இயேசு, "அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்தது" (மத். 6:2, 5, 16) என்று கூறினார். எல்லா விஷயங்களிலும், உண்மையான ஆவிக்குரிய தன்மை என்பது, நாம் பிறரை விட மேலானவர்கள் என்று நம்மை நினைக்க வைக்க இயலாது (லூக். 18:9-14).

எது மிகவும் உண்மை வாய்ந்தது என்பதைக் கற்றுக் கொள்வதற்கு, நாம் போலியைப் பரிசோதிக்க முடியும். எது ஆவிக்குரிய தன்மையாக இருப்பதில்லை?

1. இது "கறைபடிந்த கண்ணாடியைக் கண்ணோக்கி பரிசுத்தமாகப் புலம்புதல்" என்பதாக இருப்பதில்லை. பலர் விசேஷித்த உடையணிந்து கொண்டு, "தேவபக்தியாகப் பேசி," பெரும்பக்தியுடன் நடந்து கொள்கின் றார்கள். இப்படிப்பட்டவற்றை இயேசு மாய்மாலம் (நடிப்புச்செயல்) என்று கண்டனம் செய்தார். எல்லா மக்களும் ஏகோபித்த முறையில் ஒப்புக் கொள்ளும் விஷயம் ஒன்றுள்ளது: "சுயநீதி நாறுகிறது." ஆவிக்குரிய தன்மை என்பது [வெளிப்படையாகக்] காண்பிக்கப்படாத வரையிலும் அழகுமிக்க விஷயமாக உள்ளது.

2. இது "தனிப்பட்ட (தனிநபருக்குரிய) தேவபக்தி"யாக

*இருப்பதில்லை. ''தனிப்பட்ட ஆவிக்குரிய தன்மை'' என்பது தோல்வியடைகிறது! "மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல" (ஆதி. 2:18) என்பதே, தேவன் மனிதரைப் பற்றிக் கூறிய முதல் விஷயமாயிருக்கிறது. "ஒரு மனிதன் என்பவன் மனிதனாயிருப்பதில்லை." தனிமையாக இருக்கும்படி விடப்பட்ட மனிதன் பிசாசாகி விடக்கூடும்.*

*நரம்புக் கோளாறாக வளர்ச்சியடையும்,*
*சுயநலமாகச் சீர்கேட்டை அடையும்,*
*பகட்டான பெருமை கொள்ளும் ஆவிக்குரிய தன்மையானது,*
*வன்முறையாகக் கூடும். [அவ்வாறான வேளைகளில்]*
*ஆவிக்குரிய தன்மை என்பது மனிதனின் மிகமோசமான பாவமாகக் கூடும்.*

*பொதுவாக, இன்றைய நாட்களில் மனிதர்கள் ஒருங்கமைக்கப்பட்ட மதங்களை இழிவாகக் கருதுகின்றார்கள். சபையானது ஆவிக்குரிய தன்மைக்குத் தடங்கல் விளைவிக்கிறது என்று பலர் நினைக்கின்றார்கள்; ஆவிக்குரிய தன்மையும் சபையும் ஒன்றாயிருக்க இயலாது என்று சிலர் நினைக்கின்றார்கள். இரட்சிக்கப்பட்ட பாவிகள், சரீரத்தில் (சபையில்) சேர்த்துக் கொள்ளப்படுகின்றார்கள். நாம் "அழைக்கப்பட்ட (குடும்பத்த) வர்களாய்" இருக்கின்றோம். மக்களிடமிருந்தும் வாழ்விலிருந்தும் தங்களை விடுவித்துக் கொள்வதற்காக மனிதர்கள் மலைகளை நோக்கி மந்தையாய்ச் சென்று கொண்டிருந்த வேளையில், இயேசு பூமிக்கு வந்து நம்முடன் இணைந்து கொண்டார். உண்மையான ஆவிக்குரிய தன்மை என்பது ஒன்றிணைந்த உறவுகளில் [மட்டுமே] காணப்படுகிறது. எவரொருவரும் தனியாக இருந்து ஆவிக்குரிய விற்பன்னராகியிருந்தது இல்லை.*

# தாழ்மை + கீழ்ப்படிதல் = கீழ்ப்படிதலுள்ள ஊழியர்கள் (பாகம் 1)

## யாக்கோபு 4:6-10

*"கர்த்தருக்கு முன்பாகத் தாழ்மைப்படுங்கள், அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார்" (யாக்கோபு 4:10).*

*தாழ்மை + கீழ்ப்படிதல் = கீழ்ப்படிதலுள்ள ஊழியர்கள். யாக்கோபு நிருபத்தில் உள்ள நமது வேதபாடப் பகுதியை மீண்டும் வாசியுங்கள். தேவன் விரும்புகின்ற யாவுமாகவும், அவர் பயன்படுத்துகின்ற யாவுமாகவும் இருப்பது "கீழ்ப்படிதலுள்ள ஊழியராய்" இருக்கிறது. "சபை ஊழியர்" என்பது வேதாகம ரீதியான சொற்றொடராக இருப்பதில்லை. கீழ்ப்படிதலுள்ள ஊழியர்கள் தேவனுடன் நடக்கின்றார்கள்; தேவனுடன் நடக்கின்றவர்கள் கீழ்ப்படிதலுள்ள ஊழியக்காரர்களாக இருக்கின்றார்கள். இந்த இரண்டு விஷயங்களும் ஒன்றாக, ஒரே விஷயமாகவே உள்ளன. நமது வேத பாடப் பகுதியில் யாக்கோபு, தாழ்மையுடன் கூடிய கீழ்ப்படிதலானது - கீழ்ப்படிதலுள்ள ஊழியர்கள் என்ற - ஒரே ஒரு விஷயத்தையே உற்பத்தி செய்கின்றது என்று உத்தரவாதப்படுத்துகின்றார். தாழ்மையுடன் கூடிய கீழ்ப்படிதல் என்பது கீழ்ப்படிதல் உள்ள ஊழியர்களுக்குச் சமமானதாக உள்ளது. தேவன் தேவனாக இருக்கின்றார், நான் அவ்வாறு இருப்பதில்லை. தேவனுடன் நடக்கின்ற எவரும் தாழ்மையும் கீழ்ப்படிதலும் உள்ளவராக மட்டுமே இருக்க முடியும்.*

*தேவனைப் பற்றிய நமது கருத்து எவ்வளவு பெரியதாக உள்ளதோ, அவ்வளவு பெரியதாக நமது தாழ்மையும் இருக்கும். நமது தாழ்மை எவ்வளவு பெரியதாக உள்ளதோ, அவ்வளவு பெரியதாக நமது கீழ்ப்படிதலும் இருக்கும். கிறிஸ்தவத்தில் காணப்படுகிற தனிச்சிறந்த அஸ்திபார ஒழுக்கநெறியாக விளங்குவது தாழ்மை என்பதாகவே உள்ளது. நீங்கள் தாழ்மையைக் கையாளாத வரையிலும், நீங்கள் வேதாகம ரீதியிலான ஆவிக்குரிய தன்மையில் வளர இயலாது. கிறிஸ்தவ நடை என்பது தாழ்மையில் தொடங்கி தாழ்மையில் முடிகிறது.*

*நமது நவீன கலாச்சாரத்தில், ஆவிக்குரிய தன்மை என்பது நாகரீக பாணியில் மீண்டும் வந்துள்ளது. ஆயினும், தாழ்மை என்பது "உள்ளாக" இருப்பதில்லை, கீழ்ப்படிதல் என்பது "அரசியல் ரீதியாகச் சரியானதல்ல."*

ஆகையால், ஆவிக்குரிய தன்மை என்பதாக ஊக்குவிக்கப்படுவதெல்லாம் ஆவிக்குரிய தன்மையாகவே இருப்பதில்லை. [ஒரு விஷயம்] தாழ்மை யினால் ஆனதாயிராவிட்டால், அது தேவனிடத்திலிருந்து வந்ததாக இருப்பதில்லை! வேதாகம ரீதியான ஆவிக்குரிய தன்மையானது மேட்டிமையை வளர்ப்பதில்லை. தன்முனைப்புள்ள, அருங்கொடைத் தலைவர்களை நாம் ஏன் பாராட்டி/வெகுமதியளித்துப் பின்பற்ற வேண்டும்? கிறிஸ்தவர்கள் எப்போதும் வேற்றுமை நீக்கி இணைவு உண்டாக்குகின்றவர்களாக இருக்க முடியாது, ஆனால் அவர்கள் எப்போதும் தாழ்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

நமது ஊழியர் பிரச்சனை என்பது தாழ்மையின் பிரச்சனை யாகவே உள்ளது. தாழ்மையான மக்கள் மட்டுமே ஊழியம் செய்கின்றார் கள். உங்கள் பிரசங்கியார்கள், நடத்துனர்கள், மற்றும் போதகர்கள் யாவரையும் ஊழியக்காரர்களில் இருந்து தேர்ந்தெடுங்கள். இதனால்தான் மூப்பர்கள் என்பவர்கள் முதலில் உதவிக்காரர்களாக (ஊழியர்கள், அலுவலர்கள் அல்ல) இருக்க வேண்டும்.

## தேவனும் பெருமையும் [ஒன்று] கலப்பதில்லை

யாக்கோபு, "தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார்" (யாக். 4:6ஆ) என்று கூறினார். பெருமையுள்ள ஒரு சபையுடன் அல்லது பெருமையுள்ள ஒரு உறுப்பினருடன் தேவன் எதுவும் செய்வதில்லை. நாம் எப்பொழுதுதான் இதைக் கற்றுக் கொள்வோம்? இயேசுகிறிஸ்து தமது உவமைகளில் பெருமைக்கு எதிராக கூவினார். மேட்டிமையுடன் இருந்த சபைகள், வெளிப்படுத்தின விசேஷத்தில் தீவிரமாகக் கடிந்து கொள்ளப் பட்டன. சர்தையில் பெரும்பெயருடன் இருந்த சபை செத்துக் கிடந்தது (வெளி. 3:1). லவோதிக்கேயாவில் இருந்த சபை, "நான் ஐசுவரியவான் என்றும் ... எனக்கு ஒரு குறைவுமில்லையென்றும்" கூறியது (வெளி. 3:17இ). அதைக் காட்டிலும் வேறு எந்தக்கூற்று அதிகம் பாவம் நிறைந்ததும் அதிகம் மதியீனமானதுமாயிருக்க முடியும்? லவோதிக்கேயா [வில் இருந்த சபை] வழக்கமாகத் தனது வெதுவெதுப்பான தன்மைக்காகவே நினைவு கூரப்பட்டது; தேவன் அவர்களின் மேட்டிமையையும் சம அளவில் நினைவு கூருகின்றார். மேட்டிமை நிறைந்த சபை, இந்த உலகத்தை இரட்சிக்க முடியாது.

தாழ்மை மற்றும் நான் அதை எவ்வாறு அடைந்தேன் என்ற புத்தகம் எழுதிய பிரசங்கியாரைப் பற்றி நாம் சிரிக்கின்றோம். நாம் ஒரு காலத்தில், "செருக்குடன் கீழே அமரக்" கூடிய ஒரு பிரசங்கியாரைப் பற்றி அறிந்தோம். மக்கள் தங்கள் "தாழ்மையான கருத்துக்களை" அளிக்கின்றார்கள். தமது "மேட்டிமையான கருத்தை" அளித்தவர் யாரைப் பற்றியாவது நீங்கள் கேள்விப்பட்டு இருக்கின்றீர்களா? விமானப் பணிப்பெண் ஒருத்தி, புகழ்பெற்ற விளையாட்டு வீரர் ஒருவரிடம் [அவர் விமானத்தில் பயணிக்கையில்] இருக்கைப் பட்டியை [பெல்ட்] கட்டிக் கொள்ளும்படி கூறினாள். அவர் கர்வத்துடன், "சக்திமான்களுக்கு இருக்கைப் பட்டி தேவை

யில்லை'' என்று கூறினார். அதற்கு அந்தப்பணிப்பெண், உடனடியாக "சக்திமான்களுக்கு விமானமும் தேவையில்லையே!" என்று பதில் அளித்தாள்.

நான் அன்றாடம் எனது மேட்டிமையினால் அதிர்ச்சியூட்டப் படுகின்றேன். கூறப்பட்ட அல்லது செய்யப்பட்ட சில விஷயங்கள் என் உணர்வுகளைப் புண்படுத்துகின்றன, நான் பதில்செயல் செய்துவிடுகின் றேன். பின்பு நான் எனது சுயநலமான சித்தத்தை, எனது மேட்டிமையை, எனது சிறுமையைக் காண்கின்றேன். ஒருவேளை இதுவும், இயேசு பாவிகளை "மதியீனர்கள்'' என்று அழைத்தமைக்கு காரணங்களில் ஒன்றாக இருக்கலாம். பாவம் என்பது தேவனுக்கு எதிராக உள்ளது என்பதே அதன் குற்றமாக உள்ளது. நாம் மனச்சாட்சியினால் தாக்கப்பட்டவர்களாக இருக்க வேண்டும். காயப்பட்ட மேட்டிமையுடன் [இதை வைத்துக்] குழப்பிக்கொள்ளாதீர்கள்! மேட்டிமை என்பது விழுங்குவதற்கு கடினமான தாக உள்ளது. மக்கள் தாங்கள் "பாவிகள்'' என்று அழைக்கப்படும்போது, கவலைப்படுவது இல்லை; அவர்கள் "நஷ்டம் அடைந்தவர்கள்'' என்று முத்திரை குத்தப்படும்போது, சீரழிவுக்கு உட்படுகின்றார்கள். நமது மனம் புண்படுதல் என்பது மனச்சாட்சியினாலா அல்லது மேட்டிமையினாலா?

"பொய்யான தாழ்மை'' என்பது நமது மாபெரும் மாய்மாலமாயிருந்து, மோசமானவற்றை மிகவும் மோசமானதாக்கி விடுகிறது. இது தாழ்மை என்ற முகமூடியை அணிந்துகொண்ட மேட்டிமையாக உள்ளது. மனிதன் ஏன் மேட்டிமையாயிருக்க வேண்டும்? அவன் தனது பதிவேடு பற்றி மேட்டிமை யாயிருக்க முடியுமா? மனிதனுடைய பதிவேடு, யுத்தம், இனக்கலவரம், வெறுப்பு, மதவெறி, பொய்யுரைத்தல், ஏமாற்றுதல், பாலுறவில் ஒழுக்கக் கேடு, வன்முறை, குற்றம், ஏழ்மை, மற்றும் அற்பத்தனம் ஆகியவை பற்றியதாகவே உள்ளது! மேட்டிமை என்பது பாவம் யாவற்றையும் விளைவிக்கிற மண் போன்றுள்ளது. மேட்டிமை என்பது மனிதரின் பாவமாக உள்ளது. மேட்டிமை என்பது தனிப்பட்ட வியாதியாக உள்ளது; இதைக் கொண்டுள்ள மனிதரைத் தவிர மற்ற யாவரையும் இது சுகவீனமாக்குகிறது ... ஆனால் கடைசியில் இதைக் கொண்டுள்ளவரை இது கொன்று விடுகின்றது.

## கிறிஸ்து தாழ்மையை விளக்கப்படுத்தினார்

மாபெரும் மக்கள் நமக்குள் உயர்ந்த எண்ணங்களை ஊட்டுகின்றார் கள். அவர்கள் மிகவும் பெரிய ஒழுக்கநெறிகளை விவரிக்கக்கூடும், ஆனால் உண்மையிலேயே தாழ்மையைச் செயல்விளக்கப்படுத்தக் கூடிய நபர் யார்? இயேசு மாத்திரமே! அறிவில்லாதவன் மட்டுமே "தாழ்மையில் நான் நிபுணன்'' என்று கூறுவார். தாழ்மையான மனிதர் தாழ்மையை உரிமை கோரமாட்டார்! நாம் கொண்டிருக்க வேண்டியவற்றை, தேவனுடைய கிருபையின்றி நாம் கொண்டிருக்க முடியாது! இயேசுகிறிஸ்து மனித இனத்துடன் சேர்ந்து கொண்டு, சிலுவையில் மரித்தபோது, அவரில் தேவன் தம்மையே தாழ்த்தினார் (பிலி. 2:1-11). கிருபையினாலே இரட்சிப்பு என்பது தாழ்மையை விளக்கப்படுத்துகிறது. இயேசு தாழ்மையைப் போதித்துக்

*கொண்டு மட்டும் இருந்ததில்லை; அவர் தாழ்மையானவராயிருந்தார். "ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்" என்பது மத்தேயு 5:3-11ல் உள்ள பாக்கியங்களுக்கு அடிப்படையாக அமைந்துள்ளது. ''எவன் பெரியவனாயிருப்பான்?" என்று சீஷர்கள் கேட்டார்கள் (மத். 18:1). இயேசு ஒரு சிறு பிள்ளையை உதாரணமாக நிறுத்தி, "இந்தப் பிள்ளையைப்போலத் தன்னைத் தாழ்த்துகிறவன் எவனோ, அவனே பரலோக ராஜ்யத்தில் பெரியவனாயிருப்பான்" (மத். 18:4) என்று கூறினார். விருந்துக்கு அழைக்கப் பட்ட விருந்தினர்களிடத்தில் இயேசு, ''தன்னைத்தான் உயர்த்துகிற வனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத்தானே தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்" (லூக். 14:11) என்று கூறினார். இயேசு, தமக்கே உதவி தேவைப்பட்டபோது, அவர் ஊழியம் செய்தார்!*

*மேட்டிமை என்பது உங்களைப் பற்றியே அதிகமாய்ச் சிந்திக்கிற தாயிருக்கிறது; தாழ்மை என்பது "உங்களைப்பற்றி சிந்திக்காததாக" உள்ளது. உங்களை உங்கள் சிந்தையிலிருந்தும், உங்கள் சிந்தையை உங்களிலிருந்தும் எடுத்துப் போட்டு விடுங்கள். சுயத்தை நாடுதல், சுய மதிப்பு, சுய விழிப்புணர்வு ஆகியவற்றை உளவியல் மேம்படுத்துகின்றது; இயேசுவோ சுயமறுப்பைப் பற்றிப் பிரசங்கித்தார் (மத். 16:24-27). உங்களையே நீங்கள் வெறுத்து விடுங்கள்; உங்கள் சிலுவையை எடுத்துக் கொள்ளுங்கள். இயேசு ஒரே ஒரு கட்டளை மட்டுமே கொடுத்துள்ளார்: "என்னைப் பின்பற்றுங் கள்." ஒருவர் தாழ்மையாயிராவிட்டால், அவர் இயேசுவைப் பின்பற்றவோ அல்லது அவரைப் போலிருக்கவோ இயலாது.*

*தாழ்மையைப் பற்றிய எனது விளக்கம் என்ன? ''தேவனுடைய நன்மைத்தனம், இரக்கம், கிருபை ஆகியவற்றிற்கு முற்றிலும் தகுதியற்றிருப் பதாகவும், தேவனின்றி எந்த நன்மையும் செய்யத் திராணியற்று இருப்பதாகவும் ஒருவர் கொண்டுள்ள உறுதிப்பாடு (உணர்வு அல்ல) தான் தாழ்மையாகும்." முதல் கூற்றில் அடங்கியுள்ள இரக்கத்தைப் பற்றி புரிந்து கொள்ளும் நிலைக்கு நாம் வந்துள்ளோம்; ஒருவேளை நாம், இரண்டாம் பாகத்தைப் பற்றிச் சிந்திக்காமல் அல்லது அதை ஒப்புக்கொள்ளாமல் இருந்திருக்கலாம்; நாம் கிருபையினாலே இரட்சிக்கப்படுகின்றோம்; நாம் கிருபையினாலே ஊழியம் செய்கின்றோம் (எபே. 2:8-10).*

*தாழ்மை, "தேவனானவருக்கு என்றென்றைக்கும் மகிமை உண்டாவ தாக" (பிலி. 4:20) என்று சத்தம் இடுகிறது. சிலுவையினருகில் மேட்டிமை யுடன் நிற்க யாரால் முடியும்? சத்தியம் தாழ்மைப்படுகிறது. அன்பு தாழ்மைப்படுகிறது. பாவம் தாழ்மைப்படுகிறது. யோவான் 13:3-9ல் பேதுரு, தமது பாதங்களைக் கழுவுவதற்கு இயேசுவை அனுமதிக்க மறுத்த விஷயத்தில் அவர் [பேதுரு] பொய்யான தாழ்மையை விளக்கப்படுத்தினார். இயேசு பேதுருவைக் கூர்மையாகக் கடிந்து கொண்டார். உண்மையான தாழ்மையானது, பேதுரு தம்மை முழுவதுமாக இயேசுவுக்கு கொடுக்கத் தூண்டிற்று.*

*இயேசு இந்த பூமிக்கு வந்தபோது, தாழ்மை என்பது ஒரு சாம்பல் குவியலை விட அதிகமாய் விரும்பப்படாததாக இருந்தது. அது ரோமர் களைப் பொறுத்தமட்டில் பலவீனமாயிருந்தது; கிரேக்கர்களுக்கு அது*

*இழிவானதாயிருந்தது. தாழ்மையாயிருத்தல் என்பது பலவீனராக, கோழையாக இருத்தல் போன்றதாகக் கருதப்பட்டது. சிலுவையிலே வைத்த சாபத்தை எடுத்த இயேசு, சிலுவையை கிரீடமாக மாற்றினார். புறக்கணிக்கப்பட்ட ஒரு வார்த்தையை இயேசு எடுத்து அதை மகிமையின் மதிப்புமிக்க கிரீடமாக்கினார்! என்ன ஒரு இரட்சகர்!*

*தாழ்மை என்பது [தாழ்மையாய்] இருத்தல் மற்றும் [தாழ்மையின் ஊழியம்] செய்தல் ஆகியவற்றை உள்ளடக்கியிருக்கிறது. இது இருதயத்தின் பண்பாக உள்ளது. இது நாம் இவ்வாறு இருக்கின்றோம் என்பதாக உள்ளது. ஆயினும், இது ஒரு முடிவாக, ஒரு செயலாக, ஒரு உறுதிப்பாடாகவும் உள்ளது. நாம் தேவனுக்கு முன்பாக நம்மைத் தாழ்த்துகின்றோம்; நாம் மனிதர்களுக்கு முன்பாக நம்மைத் தாழ்த்துகின்றோம் (ரோமர் 12:3; பிலி. 2:3). மனிதன் தன்னைத் தாழ்த்துதல் என்பதுதான் அவன் தேவனுக்கு முன்பாகச் செய்யும் ஒரே பதில்செயலாக உள்ளது. தாழ்மையானது தன்னைப் பின்வரும் இரண்டு வழிமுறைகளில் காட்சிப்படுத்துகிறது: (1) நேர்மை. இது சுயவிமர்சனத்திற்கான திறன்கொண்டிருத்தல் என்பதாக உள்ளது. நியாயந்தீர்ப்பதில் நாம் முதலாவது நம்மை, மிகவும் கண்டிப்பாக நியாயந்தீர்க்க வேண்டுமென்று இயேசு கட்டளையிட்டார் (மத். 7:1-5). தாழ்மையான மக்கள் தங்களைப் பற்றியே சிரிக்கவும் முடியும். (2) நாணயம். நாம் பிறருக்கு அன்பிலும் நாணயத்திலும் சத்தியத்தைப் போதிக்கின்றோம். பிறர் வெற்றியடைகையில் நாம் அகம் மகிழவேண்டும் என்று தாழ்மை நம்மிடத்தில் கேட்கிறது. இன்னொருவரின் வெற்றி என்னைத் தோல்வி யடையச் செய்வதில்லை! இன்னொருவருக்குப் புகழ் கிடைத்தல் என்பது எனது செலவில் நடப்பதில்லை. பவுல், "சந்தோஷப்படுகிறவர்களுடனே சந்தோஷப்படுங்கள்" (ரோமர் 12:15அ) என்று கூறினார். அகுஸ்தீன் என்பவர், கிறிஸ்தவ மதத்தின் ஒழுக்க விதிகள் பற்றிப் பின்வருமாறு ஞானமான முடிவெடுத்தார்:*

> *முதலாவது ஒழுக்க விதி ... தாழ்மை,*
> *இரண்டாவது ஒழுக்க விதி ... தாழ்மை,*
> *மூன்றாவது ஒழுக்க விதி ... தாழ்மை.[1]*

*மக்கள் என்னைப் பற்றி மிக உயர்வாகப் பாராட்டுகின்றார்கள், ஆனால் அவர்களின் பாராட்டுரைகள் யாவையும் நான் என்ன செய்துள்ளேன் என்பவை பற்றியதாக உள்ளனவே தவிர, நான் எவ்வாறு இருக்கின்றேன் என்பது பற்றியதாக இருப்பதில்லை. எனது ஐம்பது ஆண்டுகள் ஊழியக் காலத்தில் எவரொருவரும் என்னை இயேசுவைப் போல் அதிகம் இருப்பதாகக் குற்றம் சாட்டியதே இல்லை.*

## பரிசுத்தவான்கள், தாங்கள் பரிசுத்தவான்கள் என்று அறிவதில்லை

*முக்கியமான ஒழுக்கநெறிகள் முரண்பாடுபோல் தோன்றினாலும் மெய்யுரையாக உள்ளன. இவற்றை நேரடியாக தேடிப்பெற முடியா தென்றாலும், நீங்கள் இவற்றைக் கொண்டிருக்க வேண்டும். நீங்கள் மகிழ்ச்சியை நேரடியாகத் தேடிப் பெறுவதில்லை, ஆனால் அதை வழியில் கண்டறிகின்றீர்கள். இதற்கான ஆங்கில வார்த்தை* "serendipity" *(விரும்பத் தக்க வைகளைத் தற்செயலாகக் கண்டுபிடிக்கும் திறன்) என்பதாகும். மேலும், முக்கியமான ஒழுக்கநெறிகளைக் கொண்டுள்ள மக்கள் தங்களைப் பற்றிய உணர்வுடையவர்களாய் இருக்க மாட்டார்கள். நீங்கள் முக்கியமான ஒழுக்கநெறிகளைக் கொண்டுள்ளதாக நினைக்கின்றபோது, நீங்கள் அவற்றை இழந்து போகின்றீர்கள். தாழ்மையான நபர் தமது தாழ்மையைப் பற்றி அறியாதிருக்கின்றார்! உங்கள் தாழ்மையைப்பற்றி கர்வமாய் இருத்தல் என்பது மிகவும் அற்பத்தனமானதாக உள்ளது. தாழ்மையாயிருப்பதற்காகப் பாராட்டுப்பட்டி கொடுக்கப்பட்ட ஒரு மனிதர் அந்தப் பட்டியை அணிந்து கொள்வதன் மூலமாக, அந்தப் புகழைச் சேதமாக்குகின்றார். ஞானமிக்க மனிதர்கள் "தங்களிடம் கருத்தறிவு எதுவும் இல்லை" என்பதை மாத்திரமே அறிந்துள்ளார்கள். பெருந்தன்மையான மக்கள் தாங்கள் எவ்வளவு குறைவாகக் கொடுக்கின்றோம் என்பதை மாத்திரமே அறிந்துள்ளார்கள். உங்களிடத்தில் கருத்தறிவு எதுவும் இல்லை என்று உணர்ந்தறிய மாபெரும் அறிவு தேவைப்படுகிறது!*

*இயேசுவே மீண்டும் ஒரு மாபெரும் விவரிப்பாக இருக்கின்றார். நேர்த்தியான ஒரு இளைஞர் இயேசுவினிடத்தில் ஓடி வந்து, அவருக்கு முன்பாக முழந்தாள்படியிட்டு, அவரை நல்லவர் என்று குறிப்பிட்டு, பின்பு, தமது சொந்த குறைபாடுகள் பற்றி அவரிடத்தில் கேட்டார் (மத். 19:16-22; மாற். 10:17-22 ஐயும் காணவும்). எவ்வளவு ஊக்கமூட்டுவதாக உள்ளது! பின்பு இயேசு அந்த இளைஞரையும் நம்மையும் அதிர்ச்சிக்கு ஆளாக்குகின் றார்: "நீ என்னை நல்லவன் என்று சொல்வானேன்? தேவன் ஒருவர் தவிர நல்லவன் ஒருவனுமில்லையே; ..." (மத். 19:17). பரிபூரணப்பட்ட ஒருவரான இயேசு, தாம் "நல்லவர்" என்று அழைக்கப்பட மறுத்தார்! நாம் எப்படி அவ்வாறு அழைக்கப்படக்கூடும்?*

*நாம் தாழ்மையுள்ளவர்களும் நல்லவர்களுமாய் இருப்பது அவசியம்; [ஆனால்] அதைப்பற்றி நாம் அறிந்தவர்களாய் இருக்க மட்டும் முடியாது. இது, "அமைதியான வேளையில்" மறைந்து கிடக்கின்ற ஒரு சோதனையாக, ஒரு அபாயமாக இருக்கிறது. நமது அமைதியான வேளை குறித்து நாம் மேட்டிமை அடையக்கூடும் என்பது பரிதாபத்திற்குரிய உண்மையாக உள்ளது! "இதில் நாம் சிறந்தவர்களாயிருப்பதினால், நாம் பிறரைக் காட்டிலும் மேன்மையானவர்கள்!" என்று நாம் முடிவு செய்யக்கூடும். "நீங்கள் என்னைப் போன்றே மாபெரும் நபராயிருக்கும்போது, தாழ்மை யாயிருத்தல் என்பது கடினமாயுள்ளது" என்று ஒருவர் விமர்சித்தார். அப்போஸ்தலர்கள் பெரியவர்களாயிருக்க நாடினார்கள்; ஆனால் அது "சுய*

*- மாபெரும் தன்மை" என்பதாக இருந்தது . அதை இயேசு கண்டனம் பண்ணினார், ஆனால் அவர் - தாழ்மை என்ற - உண்மையான மாபெரும் தன்மையை அவர்களுக்கு அளித்தார்.*

## மனந்திரும்புதல் தாழ்மைக்குக் காரணமாகிறது

*மனஸ்தாபப்படுகின்ற மக்கள் தாழ்மையுள்ளவர்களாக இருக்கின்றார் கள். அவர்கள் வேறு எப்படி இருக்க முடியும்? அவர்கள் கணக்கு ஒப்புவிக்க வேண்டியவர்களாய், குற்றம் உள்ளவர்களாய், இழந்து போகப்பட்ட நிலையில், உதவியற்ற தன்மையில் இருக்கின்றார்கள். தாழ்மையானது மனந்திரும்புதலை விளைவிப்பதில்லை; மனந்திரும்புதல் தாழ்மையை விளைவிக்கின்றது. மனந்திரும்புதலை நீங்கள் கட்டுப்படுத்துவதில்லை; மனந்திரும்புதல்தான் உங்களைக் கட்டுப்படுத்துகிறது. ஞானஸ்நானப் படுத்த, கொடுக்க, மருத்துவமனை சந்திப்புக்குச் செல்ல நீங்கள் ஒரு நேரத்தை ஒழுங்கு செய்ய முடியும்; ஆனால் மனந்திரும்புவதற்கென்று எதிர்காலத்தில் ஒரு நேரத்தை நீங்கள் அமைக்க இயலாது. தாவீதின் அறைக் கதவை, பிரசங்கியாரான நாத்தான் வந்து தட்டினபோது, தாவீது அந்த நாளில் மனந்திரும்ப வேண்டும் என்று திட்டமிட்டு இருந்ததில்லை. அப். 2ல் மூவாயிரம் பேர் (பெந்தெகொஸ்தே என்ற) அந்நாளில் மனந்திரும்ப வேண்டும் என்பதற்கு ஒன்றுகூடியிருந்ததில்லை. தேவனும் சத்தியமும் நமது சித்தத்தை வெற்றி கொள்ளும்போது மனந்திரும்புதல் வருகிறது. அன்றாடம் மனந்திரும்புதல் என்பது நமது அன்றாட நடைக்கு ஒரு உண்மையான வழிகாட்டியாக/அறிகுறியாக உள்ளது.*

*வேதாகமத்தில் யார் மிகவும் தாழ்மையுள்ள மனிதராக இருந்திருக்க வேண்டும்? "பார்வோன்" என்பதே எனது பதிலாக உள்ளது. தேவன் பார்வோனிடத்திற்கு ஒரு செய்தியாளரையும் (மோசே), பத்து வாதைகளை யும், செங்கடலில் [அவரது படைகளின்] அழிவையும் அனுப்பினார்; ஆயினு ம் அவர் ஒருக்காலும் தம்மைத் தாழ்த்தவில்லை. பேதுருவுக்கும் யூதாஸுக்கும் இருந்த வேறுபாடு என்ன? அவர்கள் இருவருமே இயேசுவுக்கு எதிராகப் பாவம் செய்தார்கள். யூதாஸால் தன்னைத் தாழ்த்த முடியாதிருந்த வேளையில், பேதுரு தம்மைத் தாழ்த்த முடிந்தது என்பதே [அவ்விருவருக்கும் இடையிலிருந்த] வேறுபாடாக இருந்தது. வேத வசனத்தின்படியில்லாததான ஒரு ஜெபத்தை நாம் ஜெபிக்கின்றோம்: "தேவனே என்னைத் தாழ்த்தும்." இருப்பினும் இதைத் தொடர்ந்து ஜெபிக்கின்றோம்! நீங்கள் எதை அர்த்தப்படுத்துகின்றீர்கள் என்று எனக்குத் தெரிகிறது. (பவுல் அதை 2 கொரி. 12:21ல் கூறினார்.) ஆயினும், ஹோட்ஜ் மாத்திரமே ஹோட்ஜைத் தாழ்த்த முடியும். இது நமது சுய விருப்பத் தேர்வாக உள்ளது. தேவன் நம்மைச் சிட்சிக்க முடியும்; அவர் பல்வேறு சூழ்நிலைகள் வாயிலாகச் செயல்பட முடியும். ஹோட்ஜ் மாத்திரமே மனந்திரும்ப வேண்டும் மற்றும் தம்மைத் தாழ்த்த வேண்டும். சார்லஸ் ஸ்பர்ஜன் என்பவர், "ஒவ்வொரு கிறிஸ்தவரும் ... தாழ்மையாயிருத்தல் மற்றும் தாழ்த்தப்படுதல் ஆகிய*

*இரண்டுக்குமிடையில் விருப்பத் தேர்வைக் கொண்டுள்ளார்கள் என்று நான் நம்புகின்றேன்'' என்று கூறினார்.*[2] *என்று கூறினார். பலமானவர்கள் மாத்திரமே தாழ்மையுள்ள வர்களாக இருக்க முடியும் என்பது முரண்பாடுபோல் தோன்றினாலும் மெய்யுரையாக உள்ளது.*

## நன்றியுணர்வு என்பது தாழ்மையின் தாயாக உள்ளது

*மேட்டிமை என்பது தாழ்மைக்கு எதிர்ப்பதம் அல்ல; இது நன்றியுணர்வு என்பதாகவே உள்ளது. நீங்கள், "சகோதரர் ஹோட்ஜ் அவர்களே, நான் தர்மத்தினால் பிழைப்பவன் அல்ல'' என்று கூறலாம். [ஆனால்] நீங்கள் அவ்வாறானவராகவே உள்ளீர்கள், நாம் யாவரும் அப்படியானவர்களே. உங்கள் குடும்பத்தையும் உங்கள் நண்பர்களையும் கேளுங்கள்! சார்ந் திருத்தல் என்பதே ஆவிக்குரிய தன்மையின் சாராம்சமாக உள்ளது. நாம் யாவரும் உதவியற்றவர்களாக இருக்கின்றோம். பவுல், "தேவன் அருளிய சொல்லி முடியாத ஈவுக்காக அவருக்கு ஸ்தோத்திரம்!" (2 கொரி. 9:15) என்று சத்தம் இட்டார். கிருபை, சிலுவை, சுவிசேஷம் ... நன்றியுணர்வு! நாம் நம் அன்னையர்களுக்கு முன்பாக எப்போதும் தாழ்மையுள்ளவர்களாக இருக்கின்றோம் - அவர்களுக்கு நாம் அவ்வளவாகக் கடன்பட்டுள்ளோம். நன்றியுணர்வுள்ள மக்கள் தாழ்மையாய் இருக்கின்றார்கள்.*

*இங்கு முரண்பாடு போல் தோன்றும் இன்னொரு மெய்யுரை உள்ளது. தாழ்மை என்பது நமது இருதயத்திற்கு வெதுவெதுப்பான வார்த்தையாக உள்ளது. நாம் அதைப் பற்றிப் பேசுகின்றோம், அதை விரும்புகின்றோம், அதைப் பாராட்டுகின்றோம், அதைப் புகழ்ந்து கவிதை பாடுகின்றோம்; இருப்பினும் தாழ்மையைப் பற்றி எழுதப்பட்டு மிகச் சிறப்பாக விற்பனை யான புத்தகம் இதுவரையில் இருந்ததில்லை. அந்தத் தலைப்பின் மீது ஒரு சில கருத்தரங்குகள், ஒரு சில ஒலிநாடாக்கள் அல்லது தியானங்கள் மாத்திரம் இருந்துள்ளன. இது மாற்றம் அடையும் என்று நான் நம்புகின்றேன்.*

*வாருங்கள், என்னுடன் நடவுங்கள்.*

*"என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம் பண்ணி, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்பினால், அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து, அவர்கள் தேசத்துக்கு க்ஷேமத்தைக் கொடுப்பேன்" (2 நாளா. 7:14).*

---

*குறிப்புகள்*

[1]Adapted from a quotation in John Calvin *Institutes* 2.2.11. [2]Quoted in Tom Carter, comp., *2200 Quotations from the Writings of Charles H. Spurgeon* (Grand Rapids, Mich.: Baker Books, 1988), 104.

*2*

# தேவனுடன் எனது அன்றாட நடை

## ஆவிக்குரிய தன்மை (2)

*ஆவிக்குரிய தன்மையில் நாம் ஒரு ''காளைச் சந்தையை''* [*பங்கு மார்க்கெட் என்ற பரிவர்த்தனை வர்த்தகத்தில் "காளைச் சந்தை" -* "bull market" *என்பது, ஏறுமுகமான, உற்சாகம் தருகிற வர்த்தகத்தைக் குறிக்கும் - மொ.ர்.*] *- ஆர்வம் மற்றும் நடவடிக்கைகளில் ஒரு உச்ச அளவை - காண்கின்றோம். பெரும்பாலும் இது மூடநம்பிக்கையாகவும் ஒன்றுக்கும் உதவாததாகவும் இருக்கிறது. ஆழ்ந்து அறியக் கூடிய ஆவிக்குரிய தன்மை என்பது இன்னுமொரு குழந்தைத்தனமான பொருளற்ற ஆர்வமாகி விடக் கூடாது.*

*முந்திய பாடத்தில், போலியான ஆவிக்குரிய தன்மை பற்றிய நமது கலந்துரையாடலின் தொடர்ச்சியாக, இப்போது நாம், இன்னும் எவையெல்லாம் ஆவிக்குரிய தன்மையல்ல என்று கவனிப்போம்:*

*3. இது அறியாமையாகவோ அல்லது மூட நம்பிக்கையாகவோ இருப்பதில்லை. இன்றைய நாட்களில் மக்கள் தங்கள் கண்களால் கேட்டு, தங்கள் உணர்வுகளால் சிந்திக்கின்றார்கள். ஆவிக்குரிய தன்மை என்பது உணர்வுப்பூர்வமானதாக இருப்பதற்கு, அது பகுத்தறிவுள்ளதாக இருக்க வேண்டும். மக்கள், "நான் உணருகின்றேன், எனவே நான் நம்புகின்றேன்" என்று கூறுகின்றார்கள். "ஒவ்வொருவரும் கிறிஸ்தவராயிருக்கும்போது, எவரொருவரும் கிறிஸ்தவராயிருப்பதில்லை." மனங்களுக்கு உணவூட்டாமல் நீங்கள் "இருதயங்களைச் சூடாக்க" முடியாது. பரிசுத்தமாயிராமல் மகிழ்ச்சியாயிருக்க முயற்சி செய்யாதீர்கள்.*

*4. இது அறியப்படாத இறையுணர்வு அல்ல. சகோதரர்கள் எப்போதும், ''ஆராயப்படாத, திரிபுள்ள, மற்றும் புரிந்து கொள்ளப்பட இயலாத'' விஷயங்களுக்கு இரையாகின்றார்கள். ஆவிக்குரிய வகையின் பண்படாத உணவானது கிறிஸ்தவர்களைப் பக்குவப்படுத்த இயலாது. அமெரிக்காவின் முதல் பெண்மணியான நான்ஸி ரீகன், வெள்ளைமாளிகையில் மனோதத்துவ படிப்பாளர் ஒருவரை* (psychic) [*பணிக்கு*] *வைத்திருந்தார். மக்கள் தவறான எல்லா இடங்களிலும் ஆவிக்குரிய தன்மையைத் தேடிக் கொண்டு இருக்கின்றார்கள். உணர்வெழுச்சி என்பது "உள்ளானதாக" இருக்கிறது. மக்கள் தேவனை அல்ல ஆனால் "தேவனைப் பற்றிய அனுபவங்களையே" விரும்புகின்றார்கள். நாம், "ஆவியின் காலத்தை" கொண்டிருப்*

போமா? அல்லது "காலத்தின் ஆவியை" கொண்டிருப்போமா? ஒரு "சிறிது இயேசு,'' ஜென்னின் மெதுவான தொடுதல், ''புது - யுகத்தின்'' அணியொன்று, பெண்மைவாத ''அறிவு'' கொஞ்சம், படிகங்கள், வழிப்படுத்துதல்கள், மந்திரங்கள், குழு ஆய்வுக் கூட்டங்கள், குருக்கள்: இந்த அணுகுமுறைகள் ஆவிக்குரிய தன்மையை அல்ல, ஆனால் மூடநம்பிக்கையையே விளைவிக் கின்றன. ஆய்வு செய்யப்பட்டவர்களில் இருபது சகவிகித மக்கள், ஒரு ஆண்டிற்குள்ளாகவே தாங்கள் தேவனிடமிருந்து வெளிப்படுத்துதலைப் பெற்றுக் கொண்டதாகக் கருத்துக் கொண்டிருந்தார்கள். முப்பத்து மூன்று சதவிகிதத்தினர், தாங்கள் அறிவுக்கு அப்பாற்பட்ட அனுபவங்களைக் கொண்டிருந்ததாக உரிமைகோரினார்கள். "அனுபவம்" உள்ளது என்று நம்புகின்ற ஒரு மனிதருடன் செய்தித்தொடர்பு கொள்வதில், வேத வசனங்களைப் போதிக்கின்ற மனிதர் தோல்வியடைகின்றார்.

இப்போது நாம், ஆவிக்குரிய தன்மை என்றால் என்ன என்று கண்ணோக்குவோம்:

1. இது பகுத்தறிவுடையதாக உள்ளது. ஆவிக்குரிய தன்மை என்பது சத்தியத்தினால் தொடங்கி, சத்தியத்தினால் நிலைப்படுத்தப் படுவதாயிருக்க வேண்டும். மனச்சாட்சி என்பது உறுதிப்பாட்டின் மீது கட்டி எழுப்பப் படுகிறது; உறுதிப்பாடு என்பது சத்தியத்தின் மீது கட்டி எழுப்பப்படுகிறது. சத்தியம் இல்லாத நிலையில் ஆவிக்குரிய தன்மையானது "silliness gone to seed" "விதைக்குச் [தொடக்க நிலைக்குச்] சென்றுவிட்ட அற்பத்தனம்'' என்பதாகி விடுகிறது. மனிதன் ஆவிக்குரியவனாக இருப்பதற்கு, சத்தியத்தைக் கேட்டு, சிந்தித்து, அதை அறிய வேண்டும். பகுத்தறிவு என்பது உணர்வுப்பூர்வமான விஷயத்திற்குத் திசை திருப்பும் கருவியாக (சுக்கானாக) உள்ளது. ஆவிக்குரிய தன்மை என்பது முதலில் பகுத்தறிவுக்குரியதாக உள்ளது.

2. இது வேதாகமத்தை ஆதாரமாகக் கொண்டுள்ளது. வேதாகம ரீதியாயிருங்கள். வேத வசனங்கள் இல்லாத நிலையில், தேவனுடனான ஆவிக்குரிய உறவுமுறையொன்று நிலவ இயலாது. ஆவிக்குரிய தன்மை என்பது "வசனத்தை மையமாகக் கொண்டதாக" இருக்க வேண்டியுள்ளது. தாவீது பாவம் செய்யாதபடிக்கு வசனத்தைத் தம் இருதயத்தில் காத்துக் கொண்டார் (சங். 119:11). இன்றைய நாட்களில் மக்கள், ''தேவன் என்னிடம் பேசினார்" என்று கூறுகின்றார்கள். இவர்கள் தீர்க்கதரிசிகளா? வேதாகமம் போதுமானதாக இருப்பதில்லையா? இவர்களுக்குக் கிடைத்த "வெளிப்பாடு" வேத வசனங்களுக்குச் சமமானதா? தேவன்மீது நம்பிக்கை வைத்தல் என்பது ஒரு உணர்வாக இராமல், ஒரு தீர்மானமாக உள்ளது. நாம் தேவன்மீது நம்பிக்கை வைக்க இயலுமா? நாம் வேதாகமத்தை நம்ப இயலுமா? நாம் சபையில் அன்புகூருகிறோமா? இந்தக் கேள்விகளுக்கான பதில்களே, நமது ஆவிக்குரிய தன்மையின் ஆழத்தையும் நிரந்தரத் தன்மையையும் தீர்மானிக்கும்.

உலகப் பிரகாரமான ஒரு குழுவுக்குப் பிரசங்கிக்கும்படி தேவன் ஆமோஸை அனுப்பினார். அவர்களின் அடிப்படைப் பிரச்சனை என்னவாக

இருந்தது? நாட்டில் ஒரு பஞ்சம் - இது உணவுக்கான பஞ்சம் அல்ல, ஆனால் கர்த்தருடைய வசனத்தைக் கேட்க இயலாத பஞ்சமாகும் - இருந்தது (ஆமோ. 8:11) என்று ஆமோஸ் கூறினார். "எஜமானருடைய மேஜையில்" சகோதரர்கள் பட்டினி கிடக்கின்றார்கள். நாம் அறிவில்லாமையால் சங்காரமாகின்றோம் (ஓசி. 4:6). கிறிஸ்தவர்கள் வசனத்தினால் பிறக்கின்றார்கள்; அவர்கள் வசனத்தினால் வளர்கின்றார்கள்.

3. இது நாணயமானதாக/நேர்மையானதாக (அதிகாரத்துவமானதாக, வாய்மை வாய்ந்ததாக, உண்மையானதாக) உள்ளது. ஆராதனையைப் பற்றிய மாபெரும் சத்தியம் இயேசுவால், யாக்கோபின் கிணற்றருகில் போதிக்கப்பட்டது: "தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ள வேண்டும்" (யோவா. 4:24). சத்தியமே உண்மை என்று இவ்விடத்தில் கூறப்படுகிறது, ஆனால் "ஆவி" என்பது என்ன? நாணயம்/நேர்மை! இஸ்ரவேர்களின் பலிகளைக் குறித்து தேவன் "இளைத்தும் களைத்தும்" போனார் (ஏசா. 29:13ஐக் காணவும்). ஏன்? அந்த மக்கள் மாய்மாலக்காரர்களாய் இருந்தார்கள். அவர்கள் தேவனை வீணாக ஆராதித்தார்கள் (மத். 15:8, 9). இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள் (மத். 5:8). ஆவிக்குரிய தன்மை என்பது சுத்தமான, நேர்மையான இருதயத்துடன் தொடங்குகிறது. நாம் நம்மை அல்ல, அவரையே தேடுகின்றோம். "உம்முடைய சித்தம் செய்யப்படுவதாக" (மத். 6:10; 26:42). தெய்வீகமாயிருக்க முயற்சி செய்யாதீர்கள்; அது உங்களால் முடியாது. மனிதராயிருங்கள். நீங்கள் நீங்களாகவே இருங்கள்; நீங்கள் வேறு எவராகவும் இருக்க இயலாது.

4. இது தாழ்மை என்பதாக உள்ளது. சார்ந்திருத்தல் என்பதே ஆவிக்குரிய தன்மையின் சாராம்சமாக உள்ளது. ஆவிக்குரிய தன்மையை அடைதல் என்பது ஏணியில் ஏறுதல் போன்றது என்று பலர் நினைக்கின்றார்கள். "ஆவிக்குரிய ஏணி" என்று ஒன்றும் இருப்பதில்லை. கல்வாரியில் தேவன் ஏணியை அல்ல, சிலுவையையே வைத்தார்! "யாக்கோபின் ஏணியின்" மீது யாக்கோபு ஏறவில்லை; தூதர்கள் தாம் அதில் ஏறி இறங்கிக் கொண்டிருந்தார்கள் (ஆதி. 28:12). ஆவிக்குரிய தன்மைக்குச் சென்று சேரும் வழி என்பது, ஏறுமுகமானதாயிராமல் இறங்கு முகமானதாகவே உள்ளது. தாழ்மையை முதலில் கைக்கொள்ளுங்கள்! ஆவிக்குரிய தன்மை என்பது "சுயாதீனம்" அல்ல; ஆவிக்குரிய தன்மை என்பது உதவியற்ற நிலையாக (சார்ந்திருத்தலாக) உள்ளது. ஜெபம் என்பது நம்முடைய உதவியற்ற தன்மையின் கூப்பிடுதலாய் இருக்கிறது. ஆவிக்குரிய தன்மையில் மேட்டிமை கொண்டுள்ள எவரும் ஆவிக்குரியவர்கள் அல்ல. ஆவிக்குரிய தன்மை என்பது மதிநுட்பத்திற்கு எதிரானதாக இருப்பதில்லை. ஆவிக்குரிய தன்மை என்பது புத்தம்புதிய பிள்ளை விளையாட்டு அல்ல - இது மிகப் பழமையான சத்தியமாக உள்ளது.

# "ஒரு விசுவாச நடை"

## எபிரெயர் 11[1]

*"நாம் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கிறோம்" (2 கொரி. 5:6).*

*தேவனுடனான நமது அன்றாட நடை, ஒரு "விசுவாச நடை" யாக உள்ளது. தேவன்மீது நமக்குள்ள விசுவாசத்தின் காரணமாக, நாம் தேவனுடன் நடக்கின்றோம். நாம் ஒரு வினாடி நேரம் [கூட] பூரணப்பட்டவர்களாயிருக்க முடியாது, ஆனால் ஒருவேளையில் நாம் ஒரு நாள் முழுவதும் விசுவாசமிக்கவர்களாயிருக்க முடியும். நாம் ஒவ்வொரு நாளும் விசுவாசமிக்கவர்களாயிருக்கும்போது, கிறிஸ்து எந்த நாளில் வருவார் என்பது நமக்கு ஒரு பொருட்டாயிராது. பரலோகத்தின் "புகழ்மிக்க அறை" என்பது வரலாற்றில் தங்கள் விசுவாசத்தை வாழ்ந்து காண்பித்த மாபெரும் பரிசுத்தவான்களைச் சித்தரிக்கிறது. காணக்கூடிய வகையில் இல்லாதவைகள் எவை என்று கவனியுங்கள் - மிக மேன்மையான மதிநுட்பம், சுய - மேன்மை, நேர்த்தியான நபர்த்துவம், திறமை, வெற்றி. நாம் வெற்றியாளர்களாக இருக்க வேண்டும் என்று தேவன் ஒருபோதும் கட்டளையிட்டதில்லை, ஆனால் அவர் நம்மிடத்தில் விசுவாசம் மிகுந்த தன்மையை வற்புறுத்தி வேண்டுகின்றார். தேவன் சமமான திறமைகளை வேண்டிக் கேட்பது இல்லை; அவர் சமஅளவான விசுவாசத்தைக் கூட வேண்டிக் கேட்பது இல்லை - விசுவாசமுடைமை மட்டுமே வேண்டும் என்கின்றார். இப்பொழுது நீங்கள் விசுவாசமுள்ளவர்களாய் இருக்கின்றீர்களா?*

### வாழ்க்கையே விசுவாசமாக உள்ளது

*விசுவாசம் என்பது புறக்கணிக்க முடியாத அளவுக்கு மிகவும் பெரியதாக உள்ளது. அது என்ன என்றும் அது என்ன செய்கிறது என்றும் நாம் அறிய வேண்டியது அவசியமாக உள்ளது. அதை நாம் அறிந்தாலும் அறியாவிட்டாலும், நாம் யாவருமே "நமது விசுவாசத்தினாலேயே நடக்கின்றோம்." ஒவ்வொரு சிந்தனையும், ஒவ்வொரு செயலும் நமது விசுவாசத்தைச் செயல்விளக்கப் படுத்துகின்றன. விசுவாசம் என்பது வாழ்வாக உள்ளது; வாழ்வு என்பது விசுவாசமாக உள்ளது. மனிதன் எதை நம்புகின்றானோ, அதுவாகவே இருக்கின்றான். மக்கள் சிலர், "நான் எனது விசுவாசத்திற்கு ஏற்றவாறு வாழ்வது இல்லை" என்று புலம்புகின்றார்கள். [அவ்வாறு இல்லை, ஆனால்] ஆம், நீங்கள் [உங்கள் விசுவாசத்திற்கு ஏற்றவாறுதான்] வாழ்கின்றீர்கள்! உங்கள் விசுவாசத்தில்தான் தோல்வியுள்ளது. நீங்கள் எவ்வாறு விசுவாசிக்கின்றீர்களோ, அவ்வாறே நீங்கள்*

*வாழ்கின்றீர்கள். நாம் எதை விசுவாசிக்கின்றோம் என்பதே, நாம் எதைச் செய்கின்றோம் என்பதைத் தீர்மானிக்கிறது. உங்கள் நம்பிக்கைகள் உங்கள் நடத்தையைத் தீர்மானிக்காதிருந்தால், பின்பு எதற்கு நம்பிக்கைகளைக் கொண்டிருக்க வேண்டும்? விசுவாசம் என்பது, "நம்புதலில் நம்பிக்கை கொள்ளுதல்" என்பதல்ல. விசுவாசம் குறிக்கோள் ஒன்றைக் கொண்டுள்ளது. நீங்கள் யாரேனும் ஒருவரை அல்லது ஏதேனும் ஒன்றை நம்புகின்றீர்கள். "நம்புதலில் நம்பிக்கை கொள்ளுதல்" என்பது ஒரு மாயவித்தையாக, மூடநம்பிக்கையாக, அற்பத்தனமானதாக உள்ளது. விசுவாசம் மாத்திரமே ஒருவரை இரட்சிப்பதில்லை; தேவனே இரட்சிக்கின்றார்! விசுவாசம் தேவனில் நம்பிக்கை கொள்ளுகிறது.*

*மனிதனுடைய விசுவாசம் என்பது தேவனுடைய வல்லமையைக் காட்டிலும் பெரியது அல்ல. இன்றைய நாட்களில் நாம் நமது விசுவாசத்தின் குறிக்கோளாகிய கிறிஸ்துவைப் பற்றிப் பேசுவதற்கு மாறாக, நமது விசுவாசத்தைப் பற்றியே அதிகமாகப் பேசுகின்றோம். நீங்கள் உங்கள் விசுவாசத்தைப் பற்றித் தற்புகழ்ச்சி செய்வதில்லை. ஆனால் வல்லமையும் மகிமையும் தான் அந்தக் குறிக்கோளில் உள்ளன, விசுவாசி அல்ல. விசுவாசம் என்பது செயல்களின் தகுதியைக் காட்டிலும் அதிக தகுதி வாய்ந்தது அல்ல.*

*நாம் கூறுகின்ற அல்ல செய்கின்ற ஒவ்வொரு விஷயமும் நமது விசுவாசத்திலிருந்தே விளைகிறது. நாம் ஏன் சாலையில் ஒரு குறிப்பிட்ட பக்கத்தில் வண்டிகளை ஓட்டிச் செல்லுகின்றோம்? ஏனென்றால் நாம் சட்டத்தின் அதிகாரத்துவத்தையும் சாலையின் தவறான பக்கத்தில் ஓட்டிச் செல்லுதலில் உள்ள அபாயங்களையும் நம்புகின்றோம்! நாம் திறமை, கல்வி, ஆயத்தம், மக்கள், எதிர்காலம், பணம், வெற்றி, பிரபலமாகுதல், "அரசியல் ரீதியாக சரியான தன்மை," கலாச்சாரம், குடும்பம், அரசியல், உணவுக் கட்டுப்பாடுகள், உடற்பயிற்சி, நமது கொடி, வரலாறு, நற்பண்பு, நாணயம், நேர்மை மற்றும் பல விஷயங்களை நம்புகின்றோம். நாம் மருத்துவர்களை நம்புவதால்தான், தீவிர சிகிச்சைகளுக்கும் அறுவைச் சிகிச்சைகளுக்கும் நம்மை ஒப்புவிக்கின்றோம். நாம் விமான ஓட்டிகளை நம்புவதால்தான், ஆகாய விமானங்களில் பறக்கின்றோம்.*

*விசுவாசமே நாம் (விசேஷமாக இளைஞர்கள்) விந்தையான செயல்களைச் செய்வதற்குக் காரணமாகிறது. நீங்கள் ஏன் தலையை மொட்டையடித்து அட்டூழியமாக உடையணிந்து கொள்ளுகின்றீர்கள்? ஏனென்றால், அது ஏற்றுக் கொள்ளப்படுதல், வேடிக்கை, வெற்றி ஆகியவற்றைக் கொண்டு வரும் என்று நாம் நம்புகின்றோம். ஒத்தவயதுக் குழுவினரின் வலியுறுத்தம் வயது வந்தவர்களையும் பாதிக்கிறது. யாரோ ஒருவர், "நாம் பணத்தைச் செலவிடுகின்றோம் நாம் விரும்பவில்லையென்றால், நாம் பொருட்களை வாங்கவோ அல்லது மக்களை மதியீனர்களாக்கவோ அவசியம் இல்லை" என்று கவனித்துள்ளார். நாம் ஏன் கடன்படுகின்றோம்? ஏனென்றால் நாம் குறிப்பிட்ட சில உடைமைகளைக் கொண்டிருக்க வேண்டும் என்று நம்புகின்றோம். வெளியில் பல வாரங்களாக, இரவும் பகலும் முகாமிடுதல், விளையாட்டு நிகழ்ச்சிகள், திரைப்படங்கள் அல்லது இசை நிகழ்ச்சிகள் ஆகியவற்றுக்கு அனுமதிச் சீட்டுகளை வாங்குதல், ஆகியவற்றை ஏன் செய்ய*

*வேண்டும்? ஏனென்றால் நாம் நம்புகின்றோம். விசுவாசம் என்பது இங்கு பிரச்சனையல்ல, நாம் எல்லாருமே விசுவாசிக்கின்றோம் - ஆனால் யாரை விசுவாசிக்கின்றோம்? நீங்கள் எதில் விசுவாசம் கொண்டிருக்கின்றீர்கள்? நாம் எதை விசுவாசிக்கின்றோம் என்றும் ஏன் அதை விசுவாசிக்கின்றோம் என்றும் அறிவது அவசியமாக உள்ளது.*

*நாம் அறியாத விஷயங்களைப் பற்றி விசுவாசம் கொள்ளுகின்றோம். நீங்கள் அறியாதவை உங்களைக் கொல்லக்கூடும். நமது கலாச்சாரம் தனது கண்களால் கேட்டு தனது உணர்வுகளால் சிந்திக்கிறது. அரசியல் ரீதியான சரியான தன்மை நம்மைக் கட்டுப்படுத்துகிறது. வேத வசனங்கள், "ஆதலால் விசுவாசம் கேள்வினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்" (ரோமர் 10:17) என்று கூறுகின்றன. நமது விசுவாசம் தவறான ஆதார மூலங்களில் இருந்து வருவதாக உள்ளது: இது நமது மதியீனத்தின் பெரும்பாலானவற்றை விளக்கப்படுத்துகிறது.*

*தவறானவைகளாக உள்ளன என்று நாம் அறிந்துள்ள விஷயங்களில் நாம் நம்பிக்கை வைக்கின்றோம். எவரொருவரும் போதைப் பொருட்களை உடலில் ஏற்றிக் கொள்வதோ, அதிக எடையுள்ளதாயிருப்பதோ, அல்லது தமது மருத்துவரின் கட்டளைகளை மீறவோ முடிவது எப்படி? நாமே நமது மிகவும் மோசமான விரோதிகளாக இருக்கின்றோம். விசுவாசமிக்கவராக இருப்பதை விட வெறிமிக்கவராக இருப்பது என்பது மிகவும் சுலபமான தாக உள்ளது. விசுவாசம் உங்களை உயர்த்திப் பிடிக்கவில்லையென்றால், நீங்கள் அதைப் பற்றிக் கொண்டிருக்காதீர்கள். தாங்கள் துன்மார்க்கர்கள் என்று அறிந்த மக்களால் பரலோகம் நிரம்பி வழியும்; தாங்கள் நல்லவர்கள் என்று நினைத்துக் கொண்டிருந்த மக்கள் பலரால் நரகம் நிரம்பி வழிந்திருக்கப் போகிறது.*

*இன்னும் நாம் அறியாதவைகளாக உள்ளன என்று நாம் அறிந்துள்ள தாக நினைக்கின்ற விஷயங்களில் நாம் நம்பிக்கை கொள்ளுகின்றோம். கலாச்சாரமானது, கடந்த காலத்தில் இருந்தவர்கள் ஒன்றையும் அறிந்திருக்க வில்லை என்றும், நிகழ்காலத்தில் இருக்கின்றவர்கள் எல்லாவற்றையும் அறிந்துள்ளார்கள் என்றும் கூறுகிறது. இதை விட முட்டாள்தனமாக நீங்கள் எப்படி இருக்க முடியும்? நமது கற்பனையான இருபதாம் நூற்றாண்டு அது தொடங்கியதைக் காட்டிலும் மிகவும் மோசமாக முடிவு பெற்றது. எல்லாவற்றிற்கும் பதில்கள் வைத்திருப்பதாக உரிமைகோருகின்றவர்கள் அவ்வாறு வைத்திருப்பதில்லை!*

*நாம் எதை நம்புகின்றோமோ, அதுவாகவே நாம் இருப்பதால், நாம் நம்புகின்றவை எவை என்பது பற்றி நாம் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். நமது கலாச்சாரமானது, தூண்டுதலுணர்வு, மாயாவாதக் கொள்கை, உளவியல், உணர்வுகள், மற்றும் உடனடியாகக் குணமாகுதல் ஆகியவற்றின் மீது நம்பிக்கையாயுள்ளது. இந்தத் தீர்வுகள், மோசமான வற்றை மிகவும் மோசமாக்கி விடுகின்றன. "வெதுவெதுப்பான தெளிவற்ற தன்மை" என்பது நமது விசுவாசமாயிருக்கக் கூடாது. நம்மை நாமே அழித்துக் கொள்ளும் முயற்சியாகவே, நாம் நமது மனங்களுக்கு உணவூட்டாமல், நமது இருதயங்களை வெதுவெதுப்பாக்க முயற்சி*

*செய்கின்றோம். நாம் எதை நம்புகின்றோம் என்பதே பொருட்டாக உள்ளது. "ஒரு விஷயம் நல்லதென்று உணரப்பட்டால், அதைச் செய்யுங்கள்" என்பது சிறந்ததாக ஒலிக்கலாம், ஆனால் இது மோசமான விசுவாசமாக உள்ளது. நீங்கள் ஒருக்காலும் விசுவாசத்தை இழந்துபோவது இல்லை - நீங்கள் ஒரு விசுவாசத்திலிருந்து இன்னொரு விசுவாசத்திற்கு மாறுகின்றீர்கள், அவ்வளவே. விசுவாசம் என்பது இந்தப் பூமியின்மீது மிகவும் நடைமுறைக்குரிய விஷயமாக உள்ளது. விசுவாசம் என்பது வாழ்வுக்கு வழியாகவும், வாழ்வதற்கான வழியாகவும் உள்ளது. விசுவாசத்தின் மக்கள் தங்கள் விசுவாசத்தில் வாழ்கிறார்கள்.*

*ஆகையால், சத்தியத்தின்மீது மாபெரும் மதிப்பு வைக்கப்பட வேண்டும். "சத்தியத்தையும் அறிவீர்கள்; சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" (யோவா. 8:32); "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னையல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்திற்கு வரான்" (யோவா. 14:6). "முற்றான விசுவாசம்" என்று ஒன்றில்லை என்ற கருத்தை ஏற்றுக் கொள்ளுதல் என்பது தற்கொலை செய்து கொள்வதாகிறது! வாழ்வானது சத்தியத்தின் அடிப்படையில் அமைந்திருக்கவும் வாழப்படவும் வேண்டும். சத்தியத்திற்கான நாட்டம் என்பதே வாழ்வின் நோக்கமாக உள்ளது. "சத்தியத்தை வாங்கு, அதை விற்காதே" (நீதி. 23:23). சமுதாயமானது சத்தியத்தினால் மாத்திரமே நிலவ முடியும். சத்தியமே நமது விசுவாசமாக இருக்க வேண்டும். "விசுவாசம் என்பது நீங்கள் உங்கள் முழு எடையையும் வைக்கக் கூடியதாக உள்ளது." சத்தியம் மாத்திரமே தகுதிப்படுத்துகிறது. விசுவாசம் என்பது "என் விசுவாசத்தில்" இருப்பதில்லை; விசுவாசம் என்பது சத்தியத்தில் உள்ளது. விசுவாசத்தின் சாரம்சமானது விசுவாசம்/சத்தியம் நிறைந்ததாயிருக்க வேண்டும். விசுவாசம் என்பது நமக்கு எல்லா பதில்களையும் தருவதில்லை; விசுவாசம் என்பது நம்மைப் பதில்கள் இன்றியே வாழ அனுமதிக்கிறது. விசுவாச வாழ்வு என்பது நித்திய ஜீவனை ஈட்டுவதில்லை; இதுவே நித்திய ஜீவனாக உள்ளது. ஒவ்வொரு நாளும் உங்களுக்கு நீங்களே சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். உங்கள் சொந்தப் பிரசங்கித்தலை விசுவாசியுங்கள்! விசுவாசமென்பது, நீங்கள் வேறொன்றையுமல்ல, தேவனையே விரும்புகின்றீர்கள், என்று அர்த்தப்படுத்துகிறது. விசுவாசத்தைப்போல வாழ்வை மாற்றுவதும் பரிசுத்தவான்களைப் பக்குவப்படுத்துவதும் வேறு ஒன்றுமில்லை. விசுவாசமின்றி நீங்கள் விசுவாசம் நிறைந்தவராயிருக்க முடியாது. அன்றாடம் விசுவாசமிக்கவர்களாக மாத்திரம் இருங்கள்.*

*சரியான வரிசை முறையில் நாம், உண்மைகள், விசுவாசம் மற்றும் உணர்வுகள் ஆகியவற்றைக் கொண்டுள்ளோம். விசுவாசத்திற்கு முன்பு உண்மைகள் வருகின்றன, இவை உணர்வுகளுக்கு முன்பு வருகின்றன. உணர்வு என்பது அல்ல, ஆனால் உண்மை என்பதே விசுவாசத்தின் குறிக்கோளாக உள்ளது. நீங்கள் "விசுவாசத்திற்கான உங்கள் வழியை உணர்வது" இல்லை. விசுவாசமானது உண்மையின் மீது ஒரு கண் வைத்து இருக்கிறது. இது விசுவாசத்தைப் பாதுகாப்பாகக் காக்கிறது. விசுவாசமானது உணர்வின் மீது கவனம் செலுத்துவதற்காக உண்மையின் மீது*

*வைத்த தனது கண்ணை எடுக்கிறபோது, விசுவாசம் உணர்வு ஆகிய இரண்டுமே துன்புறுகின்றன. குடும்பத்தின் மீது கவனம் செலுத்த வேண்டாம்; தேவன் மீது கவனம் செலுத்துங்கள்! குடும்பம் என்பது ஒருக்காலும் ஒரு விக்கிரகமாகி விடக் கூடாது. விசுவாசம் என்பது தேவனை அவரது வசனத்தில் எடுத்துக் கொள்ளுதலாக உள்ளது. நீங்கள் கொண்டுள்ளது ஆரோக்கியமான விசுவாசமா அல்லது ஆரோக்கியமற்ற விசுவாசமா?*

## விசுவாசம் நம்புகிறது

*விசுவாசம் என்பது மனம்சார்ந்த வகையில் ஏறுதலாக, முழு இருதயத்துடன் நம்புதலாக, முழுமையான கீழ்ப்படிதலாக உள்ளது. தேவன் எவ்வளவு மகிமையுள்ளவராகவும் நல்லவராகவும் இருக்கிறார் என்பதை நாம் உண்மையிலேயே உணர்ந்துகொண்டால், நாம் நமது வாழ்வையே அவருக்குக் கொடுப்போம். நாம் தேவனை உண்மையாகவே அறிந்திருந்தால், நாம் பாவம் செய்ய மாட்டோம். தேவன் தேவனாகவே இருக்கின்றார். மனிதன் அப்படியிருப்பதில்லை. உண்மை: தேவன் தேவனாக இருக்கிறார். விசுவாசம்: அவர் என் தேவனாக இருக்கிறார்! விசுவாசித்தலில் மனிதன் தனது மனிதத் தன்மையை உரிமைகோருகின்றான். மனிதன் இழந்து போகப்பட்டவனாக, உதவியற்றவனாக, நரகத்திற்குச் செல்லும்படி ஆக்கினைத் தீர்ப்பிடப்பட்டவனாக இருக்கின்றான். சார்ந்திருத்தல் என்பதே ஆவிக்குரிய தன்மையின் சாராம்சமாக உள்ளது. உதவி, இரட்சிப்பு என்பவைகளுக்கு மனிதன் தன்னை விட்டு வெளியே கண்ணோக்க வேண்டும். விசுவாசிப்பதற்கு மனிதன் தன்னையே தாழ்த்த வேண்டும். மனிதன் தன்னைத் தாழ்த்தாத வரையிலும், அவன் விசுவாசிக்க இயலாது. இதனால் தான் சில வேளைகளில், தேவனுக்குக் கீழ்ப்படிவதைக் காட்டிலும் தேவனை நம்புவது என்பது மிகவும் கடினமாகிறது. கிறிஸ்துவுக்கு நம் வாழ்வை ஒப்புவித்தலைக் காட்டிலும், நாம் அறிகிற மற்றும் செய்கிற விஷயங்களை நம்புதல் என்பது சுலபமானதாக உள்ளது. விசுவாசம் என்பது தேவனுடனான ஒரு ஒப்பந்தமாக, ஒரு "வியாபார விஷயமாக" இருப்பது இல்லை. விசுவாசம் என்பது ஒப்புவித்தலாக உள்ளது. விசுவாசம் தன்னிலே எந்தத் தகுதியும் கொண்டிருப்பதில்லை. தேவனுக்கு மகிமை உண்டாவதாக!*

*விசுவாசம் கொண்டிருத்தல் என்பது, திரும்பி வருதலில் மட்டும் கருத்துணர்வை ஏற்படுத்தும் ஒரு முன்னேற்றத்தில் நம்பிக்கை கொள்ளுதல் என்று அர்த்தப்படுத்துகிறது. சிந்தித்துப் பாருங்கள்! (உயிர்த்து எழுதலின்) ஞாயிறன்று என்ன நடக்கும் என்று அப்போஸ்தலர்கள் அறிந்திருந்தால், (சிலுவையில் அறையப்பட்ட) வெள்ளிக்கிழமையை அவர்கள் [நன்கு] கையாண்டிருக்க முடியும். எதிர்காலத்திற்கான தேவனுடைய வாக்குத்தத்தங்கள் ஈசாக்கின் மூலம் நிறைவேற்றப்படும் என்பதை ஆபிரகாம் அறிந்த காரணத்தினால், அவர் ஈசாக்கை, மனம் சார்ந்த வகையில் ஒப்புக்கொடுக்க முடிந்தது. ஆபிரகாம், "தேவனே நீரே அவனைக் கொல்லும்படி கூறினீர்.*

*கீழ்ப்படிதல்தான் எனது வேலையாக உள்ளது. நான் உடனே அவனைக் கொல்லுவேன். அவனைத் திரும்பவும் [உயிருடன்] கொண்டுவருதல் உமது வேலையாகும்" என்று கூறியிருப்பார் என்பது நிச்சயம் (ஆதி. 22; எபி. 11). கடந்த காலத்தில் மக்கள் எவ்வளவு சிறியதாக விசுவாசம் கொண்டிருந் தார்கள் என்று காண்பது நமக்கு மிகவும் சுலபமாக உள்ளது. ஒரு ஆண்டுக்கு முன்பு நீங்கள் எதற்காகக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தீர்கள்? நம் சொந்த வாழ்வை நாம் பின்னோக்கிப் பார்க்கும்போது, நமது சிறுமைத்தன்மை, நமது விசுவாசக் குறைவு, நமது தோல்வி ஆகியவை பற்றி நாம் வெட்கப் படுவதில்லையா? நாம் என்னவாக இருக்கின்றோம் என்பது நாம் என்னவாக இருக்க வேண்டும் என்பதுடன் எப்போதும் யுத்தம் செய்வதாக உள்ளது. கிறிஸ்து, "அற்ப விசுவாசிகளே!" (மத். 6:30) என்று கூறுகின்றார், நாம் அவரிடம், "எங்கள் விசுவாசத்தை வர்த்திக்கப் பண்ண வேண்டும்!" (லூக். 17:5) என்று கூறுகின்றோம். தேவன் நம்பப்படக் கூடுமா? நான் உண்மையிலேயே விசுவாசிக்கின்றேனா? விசுவாசமானது உலகத்திற்கு ஒரு நித்திய அம்சத்தைக் கொடுத்துள்ளது: ஒவ்வொரு கணமும் தேவனைப்பற்றி தேவனிடமிருந்து வெளிப்படுத்துதல் வருகிற கணமாயுள்ளது. நிகழ் காலத்தில் - விசுவாசத்தினால் வாழக் கற்றுக்கொள்ளுங்கள்.*

*விசுவாசமானது சாத்தியமற்றவைகளில் நம்பிக்கை கொள்ளுகிறது. நமக்கு ஒரு எளிமையான, பிள்ளையினுடையது போன்ற விசுவாசம் தேவையாக உள்ளது. பிள்ளைகள் கிறிஸ்துமஸ் தாத்தாவை நம்புவதில் பிரச்சனை எதையும் கொண்டிருப்பதில்லை, ஆனால் சாத்தியமற்றவைகளை நம்புதல் என்பதில் குழந்தைத்தனம் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்படுவதில்லை. குழந்தையைப் போலிருத்தல் என்பது, குழந்தைத் தனமாயிருத்தல் என்பதிலிருந்து மாறுபடுகிறது. தேவன் சாத்தியமானவை களின் தேவனாக மட்டுமின்றி, சாத்தியமற்றவைகளின் தேவனாகவும் இருக்கின்றார் (மத். 19:26). பேதுரு தண்ணீரின்மீது நடந்தார், ஆனால் பின்பு அவர் மூழ்கினார் (மத். 14:28-31). அவர் தாம் செய்து கொண்டிருந் ததைத் தாம் செய்ய முடியும் என்று விசுவாசிக்கவில்லை! தேவன் தமது வல்லமையை இழந்தது இல்லை. விசுவாசம் தோல்வியடைந்தது[ம்] இல்லை. பேதுரு தமது விசுவாசத்தைச் சந்தேகத்திற்கு மாற்றினார். [உடனே] அவர் மூழ்கினார்.*

*நாம் யாவரும் சாத்தியமற்றவற்றில் விசுவாசம் கொள்கின்றோம். நாம் வாழ்வில் விசுவாசம் கொள்கின்றோம். வாழ்வை விளக்கப்படுத்துங்கள். சமுத்திரங்கள் ஏன் பூமியின் அந்தப் பக்கத்தில் வீழ்வது இல்லை? தண்ணீர் தனது சுயமட்டத்தில் இருக்க நாடுகிறது. பூமியின் எந்தப் பகுதியில் நாம் நிற்பினும் (அது தென்துருவமாக இருப்பினும்), நாம் எப்பொழுதும் பூமியின் மீதுதான் நின்று கொண்டிருக்கின்றோம். பண்ணையில் உள்ள ஊமையான உயிரினம் எவ்வாறு முட்டையிடக் கூடும்? மனிதன் - மாபெரும் முயற்சியுடன் முட்டையொன்றை உற்பத்தி செய்தாலும், அதை அடைகாக்க முடியாது. ஒரு 747 போயிங் (ஜம்போ ஜெட்) விமானம் எப்படிப் பறக்கக் கூடும்? விதைகள் உயிர் வாழ்வதற்காக எப்படி இறக்கக் கூடும்? படைக்கின்ற நமது தேவன் உயிர்ப்பிக்கக் கூடியவராகவும்*

*இருக்கின்றார்! விசுவாசத்தின் மக்கள், அதன் கட்டிடக் கலைஞரும், கட்டுகிறவருமாயிருக்கிற தேவனே கட்டியெழுப்பிய நகரத்தை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றார்கள் (எபி. 11:10). விசுவாசத்துடன் கூடிய ஜெபம், மலைகளைப் பெயர்க்கக் கூடும் என்று இயேசு கூறினார் (மத். 17:20; 1 கொரி. 13:2). அவர் நினைவுச் சின்னமான ஒரு கவன ஈர்ப்புச் செயலுக் காகப் பரிந்துரைக்கவில்லை. "மலைகளைப் பெயர்த்தல்" என்பதல்ல, ஆனால் "என்னைப் பெயர்த்தல்" என்பதே இங்கு விஷயமாக உள்ளது. தேவன் என்னை மாற்றி, இரட்சித்து, பயன்படுத்த முடியும்!*

*விசுவாசம் என்பது இயல்பாகவே இடர்ப்பாடுகளை உள்ளடக்கி யிருக்கிறது. விசுவாசம் சோதிக்கப்படுதலை வேண்டுகிறது. நாம் நிகழ் காலத்தை மனம்போன போக்கில் பயன்படுத்துவதற்காக, எதிர்காலத்தை இடர்ப்பாட்டிற்குள்ளாக்குகின்றோம். ஆபிரகாம் ஈசாக்கைக் கையாளு வதற்கு முன்பாக, இஸ்மவேலை எவ்வாறு கையாள வேண்டும் என்று கற்றுக் கொள்ள வேண்டியிருந்தது! "மன உறுதி" அல்ல, ஆனால் "விசுவாச வல்லமையே" நம்முடையதாக உள்ளது. தேவன் எல்லாவற்றையும் சிலுவை யில் துணிகரமாய் ஈடுபடுத்தினார்; நாம் எல்லாவற்றையும் விசுவாசத்தின் மூலமாகத் துணிகரமாய் ஈடுபடுத்துகின்றோம். இது, விசுவாசம் சந்தேகத்திற்கு அனுமதி அளிக்கிறது என்றும் அர்த்தப்படுகிறது. பரிசோதிக் கப்படாத விசுவாசம் தகுதியானதாக இருப்பதில்லை. பார்வையற்ற விசுவாசத்தைக் காட்டிலும் நேர்மையான சந்தேகத்தில் அதிகம் தேவபக்தி உள்ளது. யோவான் ஸ்நானன் தமது சந்தேகங்களைக் கொண்டிருந்தார் (மத். 11:3). நீங்கள் உங்கள் விசுவாசத்தைச் சந்தேகிக்கலாம், ஆனால் ஒருபோதும் உங்கள் சந்தேகங்களை விசுவாசிக்காதீர்கள்! ஆனால் அவிசுவாசம் என்பதே விசுவாசத்திற்கு எதிரானதாக உள்ளது, சந்தேகம் அல்ல. யூதர்கள் வனாந்தரத்தில் சந்தேகத்தினால் அழிக்கப்படவில்லை - அவர்கள் அவிசுவாசத்தினாலேயே அழிக்கப்பட்டார்கள் (எபி. 3:7-19). சிலவற்றை நாம் அறிவதற்காக எல்லாவற்றையும் அறிய வேண்டிய அவசியம் இல்லை.*

*யோவான் சந்தேகமுடையவராக இருந்தபோதும், அவரைப் பற்றி இயேசு, நம்புதற்கரிய கூற்று ஒன்றைக் கூறினார்: "... ஸ்திரீகளிடத்திலே பிறந்தவர்களில் யோவான் ஸ்நானனைப் பார்க்கிலும் பெரியவன் ஒருவனு ம் எழும்பினதில்லை! ..." (மத். 11:7-11). தன்னைப் பற்றியே உறுதியாய் இருக்கக் கூடிய விசுவாசமானது விசுவாசமாயிராது போகலாம். தேவனின்றி வாழவும் இறக்கவும் முயற்சித்தல் என்பது ஆபத்துமிக்கதாக உள்ளது. நீங்கள் ஒன்றையும் இடர்ப்பாட்டிற்கு உட்படுத்தவில்லை யென்றால், எல்லாவற்றையும் இடர்ப்பாட்டிற்கு உட்படுத்துகின்றீர்கள். கிறிஸ்தவர்கள் ஒவ்வொரு நாளும் "தங்கள் விசுவாசத்தை இடர்ப்பாட்டிற்கு உட்படுத்துகின்றார்கள்." விசுவாசம் என்பது பூரணப்பட்ட சூழ்நிலைகளுக் கான வாக்குத்தத்தம் அல்ல. தேவன் ஒருக்காலும் நம்மை அனாதரவாக விடாதவர் அல்லது நம்மைக் கைவிடாதவர் என்பதில்தான் விசுவாசம் உள்ளது (எபி. 13:5).*

## விசுவாசம் செயல்படுகிறது

*வார்த்தையைப் பற்றிய எந்த விளக்கத்திலும், "விசுவாசம்" செயல் படுகிறது. நமது தேவன் செயல்படுகின்றார்: இயேசு நமது இரட்சகராயிருக்க வேண்டும் என்ற அவரது திட்டம் செயல்படுகிறது. ஆரோக்கியமான உபதேசம் செயல்படுகிறது. விசுவாசம் என்பது இயங்கக் கூடியதாக, கீழ்ப் படிதல் உள்ளதாக இருக்கிறது. "கிரியைகளில்லாத விசுவாசம் செத்த தாயிருக்கிறது" (யாக். 2:17-26). எபிரெயர் 11ன் உண்மையான கதாநாயகர் வேதாகமப் பாத்திரங்களில் ஒருவர் அல்ல - அதில் விசுவாசமே கதாநாயக அந்தஸ்தில் உள்ளது. விசுவாசம் வித்தியாசத்தை ஏற்படுத்தியது. நற்பண்பு அல்ல ஆனால் விசுவாசம் என்பதே பாவம் என்பதற்கு எதிர்ப் பொருளாக உள்ளது. அது போன்று, குற்றம் என்பதல்ல, ஆனால் அவிசுவாசம் என்பதுதான் பாவத்தின் சாராம்சமாக உள்ளது. இது கிறிஸ்தவரல்லாத மக்களை கிறிஸ்துவைப் போல் வாழச் செய்ய நாம் மேற்கொள்ளுகின்ற முயற்சிகளில் ஏற்படும் நமது தோல்விகளை விளக்கப்படுத்துகிறது. விசுவாசம் செயல்படுகிறது! நாம் "விசுவாசத்தைச் செயல்படுத்துகின்றவர் களாக" இருக்க வேண்டும் நாம் "நியாயப்பிரமாணத்தின் செயல்களை" அல்ல ஆனால் "விசுவாசத்தின் செயல்களை"யே செய்கின்றோம். ஒரு நபரில் உள்ள விசுவாசமானது உறுதிப்பாட்டை வேண்டுகின்றது (லூக். 6:46; யோவா. 14:15). விசுவாசம் மட்டுமே ஒரே வழியாக உள்ளது: "விசுவாச மில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்" (எபி. 11:6).*

*விசுவாசம் என்பது அன்றாடமானதாக உள்ளது. நேற்று நமக்கு அருளப்பட்ட தேவகிருபை இன்று நம்மை நிலைநிறுத்தாது. தேவன் ஒருக்காலும் நாளைக்கு பலத்தைத் தருவதில்லை, அவர் இன்றைக்கு மாத்திரமே பலம் தருகின்றார். வனாந்தரத்தில், மன்னா அன்றாடம் சேகரிக்கப்பட்டது. இரட்சிக்கும் விசுவாசம் உயிருள்ள விசுவாசம் அன்றாட மானதாக உள்ளது. விசுவாசத்தைக் குவித்துச் சேர்த்து வைக்க முடியாது அல்லது சுமந்துகொண்டு செல்ல முடியாது. கிறிஸ்தவ வாழ்வு என்பது எப்போதுமே சுலபமாகவும் மகிழ்ச்சியாகவும் இருப்பதில்லை. இது பலவீனமானவர்களுக்கானது அல்ல. நாம், கலக்கம் அடைந்த தந்தையைப் போல, "விசுவாசிக்கிறேன் ஆண்டவரே, எனது அவிசுவாசம் நீங்க உதவி செய்யும்" (மாற். 9:23, 24) என்று கதறுகின்றோம். நாம், "என்ன நடந்தாலும், தேவனே நான் உம்முடையவன்!" என்று கூறுகின்றோம்.*

*வாருங்கள், என்னுடன் நடவுங்கள்.*

*"... மனுஷகுமாரன் வரும்போது பூமியிலே*
*விசுவாசத்தைக் காண்பாரோ?" (லூக். 18:8).*

---

குறிப்பு

*[1]விசேஷமாக, வசனங்கள் 1, 4, 5, 6, 7, 8, 10, 11, 13, 16, 17-19, 23-28, 31, 32, 33, 37, 38, 40 ஆகியவற்றைக் காணவும்.*

3

# தேவனுடன் எனது அன்றாட நடை

## ஆவிக்குரிய தன்மை (3)

*ஆவிக்குரிய தன்மை பற்றி, முந்திய பாடத்தில் நமது கலந்துரையாடலின் தொடர்ச்சியாக, நாம் உண்மையான ஆவிக்குரிய தன்மையின் பண்புகளில் இன்னும் அதிகமானவற்றை இங்கு ஆராய்வோம்.*

*5. இது ஊக்கமான ஜெபமாக உள்ளது (யாக். 5:13-16). ஜெபம் என்பது ஆவிக்குரிய வளர்ச்சியில் ஒரு மூலைக்கல்லாக உள்ளது. இடைவிடாமல் ஜெபியுங்கள் (1 தெச. 5:17). ஜெபமற்ற தன்மை என்பது நமது மாபெரும் பலவீனமாக உள்ளது, இது நமது மாபெரும் பாவமாக உள்ளது. நாம் தேவனைப் பெறுவதற்காக ஜெபிக்க வேண்டும், நம்முடைய விருப்பங்களைப் பெறுவதற்காக அல்ல. ஜெபித்தல் என்பது, வேலைக்கு வந்துவிட்டதாக அறிக்கை தருதல் போன்றதாக உள்ளது. முதலாவது, தேவன் எனக்குத் தேவையாயிருந்தார் ... பின்பு நான் தேவனை விரும்பினேன் ... இப்போது நான் தேவனைக் கொண்டிருக்க வேண்டும். ஜெபித்தல் என்பது தேவனைப் பற்றி ஆழ்ந்தறிவு ஒன்றைக் கொண்டிருத்தல் என்பதாக உள்ளது. ஜெபித்தல் என்பது தேவனுடைய தீர்ந்து போகாத வல்லமையை அடைய வழிபெறுதல் என்பதாக உள்ளது. பரிந்து பேசுகின்ற ஜெபம் என்பது நமக்கு முற்றிலும் புதிய உலகம் ஒன்றைத் திறக்கிறது.*

*6. இது தேவனாக உள்ளது. ஆவிக்குரிய தன்மை என்பது கிறிஸ்துவுடன் தேவனுக்குள் வாழுதல் என்பதாக உள்ளது (கொலோ. 3:1-4). கிறிஸ்தவம் ஒரு "தேவனுடைய" மதமாக உள்ளது, இது சர்வ வல்லமையுள்ள தேவனுடைய பயபக்திக்குரிய இராஜரீகத்தின்மீது கவனம் செலுத்துகிறது. "தேவபக்திக்கேதுவாக முயற்சி பண்ணு" (1 தீமோ. 4:7ஆ). நம் எல்லாருடைய வாழ்வும் தேவனுடைய சித்தத்தின் கீழ் உள்ளது. தேவனில் விசுவாசம் கொள்ளுதல் என்பது ஒரு குறிப்பிட்ட வழிமுறையில் வாழுதல் என்பதாக உள்ளது: "நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தரா யிருங்கள்" (1 பேது. 1:15, 16). ஆவிக்குரிய தன்மை என்பது நமது வாழ்விற் கான தேவனுடைய சித்தத்தை அன்றாடம் புரிந்துகொள்ளுதல் என்பதாக உள்ளது. தேவன் தமது சாயலாக மனிதனைப் படைத்தார் (ஆதி. 1). தேவனை மனித சாயலில் ஏற்படுத்துவதைக் காட்டிலும், தேவனை நயவஞ்ச கமாக மறுத்தலித்தல் வேறு எதுவும் இல்லை. ஆவிக்குரிய தன்மை என்பது நித்தியமான, அன்றாடம் தேவனுடன் தங்கியிருத்தல் என்பதாக உள்ளது.*

*ஆவிக்குரிய தன்மை என்பது தேவனுக்கு கீழ்ப்படிதலுடன் இருத்தல் என்பதாக உள்ளது.*

*உங்கள் பணி முறைமைகளை முன்னுரிமைப்படுத்த வேண்டாம். உங்கள் முன்னுரிமைகளை முறைமைப்படுத்துங்கள். உங்கள் அன்றாட திட்டமிடுதலில் தேவன் ஆதிக்கம் செலுத்த வேண்டும். முன்னுரிமைப் பட்டியலில் இருந்து தேவனை தூக்கியெறியும் அளவுக்குப் போதிய முக்கியத்துவம் வாய்ந்த விஷயம் எதுவாயிருக்க முடியும்? தேவனுடன் நாளைத் தொடங்குங்கள், தேவனுடன் நாளை முடியுங்கள், தேவனுடன் நாள் முழுவதும் நடவுங்கள்.*

*7. இது கிறிஸ்துவாக உள்ளது. "கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக் கடவது ..." (பிலி. 2:5-8). "நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறதுபோலக் கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத் தானே மகிமையின் மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்" (2 கொரி. 3:18). கிறிஸ்துவுக் குள் நாம் புது சிருஷ்டியாயிருக்கின்றோம் (2 கொரி. 5:17). தலையாகிய கிறிஸ்துவுக்குள் நாம் எல்லாவற்றிலேயும் வளருகின்றோம் (எபே. 4:15). ஆவிக்குரிய தன்மை என்பது நமக்குள் கிறிஸ்துவை உருவாக்குதலாக உள்ளது. நாம் பரிசுத்த ஆவியானவரைப் போன்றல்ல, ஆனால் கிறிஸ்து வைப் போன்றவர்களாக வேண்டும் என்று பரிசுத்த ஆவியானவரே நமக்குப் போதிக்கின்றார். கிறிஸ்தவம் என்பது கிறிஸ்துவாக உள்ளது, முற்றுப்புள்ளி - கிறிஸ்துவுடன் கூட இன்னொன்று என்பதாக இருப்பதில்லை என்று கொலோசெயருக்கு எழுதிய நிருபம் நமக்கு போதிக்கிறது. எவரொருவரும் ஒரே வேளையில் கிறிஸ்துவின் மீதும் தம்மீதும் கவனம் செலுத்த முடியாது. இயேசு நமக்கு ஒரே கட்டளை கொடுத்துள்ளார்: "என்னைப் பின்பற்றுங்கள்."*

*8. இது பரிசுத்த ஆவியானவராக உள்ளது. ஒருவர், ஆவியானவரின்றி ஆவிக்குரிய தன்மை கொண்டுள்ளதாக எவ்வாறு உரிமைகோர முடியும்? நாம் ஜலத்தினாலும் ஆவியினாலும் மீண்டும் பிறந்தவர்களாக (யோவா. 3:5), ஆவியானவரால் வழிநடத்தப்பட்டவர்களாக (ரோமர் 8:14), ஆவியானவரால் நிரப்பப்பட்டவர்களாக (எபே. 5:18) இருக்கின்றோம். நாம் ஆவிக்குரிய சிந்தையுள்ளவர்களாக இருக்க வேண்டும் (ரோமர் 8:6). ஆயினும், ஆவியானவருடைய கவனம் செலுத்துதல் என்பது ஒருக்காலும் அவர்மீதே இருந்ததில்லை; அவர் தேவன்மீது அல்லது கிறிஸ்துவின்மீது கவனம் செலுத்தினார். ஆவியானவரை மேம்படுத்துதல் என்பது ஆவியான வரைத் தூஷித்தலாக உள்ளது. கிறிஸ்துவை மகிமைப்படுத்துவதற்காகவே ஆவியானவர் நம்மிடையில் செயல்படுகின்றார்.*

*9. இது சபையாக உள்ளது. நாம் யாவருமே (யாரோ ஒருவரால்) சபையாகிய ஒரே சரீரத்திற்குள் ஞானஸ்நானம் பெற்றோம். நாம் யாவரும் அந்தக் குடும்பத்தின் அங்கமாக உள்ளோம். சமூகம் என்ற வகையில் நாம் யாவரும் ஒவ்வொரு ஞாயிறன்றும் கர்த்தருடைய பந்தியில் கூடிவருகின் றோம். தனிநபர்கள், சமூகத்திற்கு மேலாகத் தங்களை உயர்த்துகின்ற எந்தக் குழுவும் உயிர் பிழைக்க முடியாது. உடலில் இருந்து வெட்டப்பட்ட ஒரு*

*கையானது செயல்பட முடியாது. எனக்கு நீங்கள் தேவை, நான் உங்களுக்கு தேவை. தேவனுடன் நமது அன்றாட நடையானது ஒரு சபையின் நடையாக உள்ளது. ஆவிக்குரிய தன்மை என்பது தனிப்பட்டது என்றாலும், அது பொதுவானதாகவும் உள்ளது. ஒரு குடும்பத்தில் குழந்தை ஒன்று பிறக்கின்றது. ஒரு குழந்தை தனது பெயரை, அடையாளத்தை, மற்றும் தொடர் வாழ்வை அந்தக் குடும்பத்தில் மாத்திரம் பெறுகின்றது. ஆவிக்குரிய தன்மை என்பது இணைவு வாழ்வாக உள்ளது (இது குடும்பம் சார்ந்ததாக உள்ளது).*

*10. இது ஒரு அன்றாட பணியாக உள்ளது. வாழ்வானது அன்றாடம் நீடிப்பதாக உள்ளது. திருமணம் அன்றாடமாக உள்ளது. பணி அன்றாடமாக உள்ளது. நட்புறவு அன்றாடமாக உள்ளது. ஆவிக்குரிய தன்மை நமது அன்றாட உழைப்புக்களில் தன்னையே காட்சிப்படுத்துகிறது. உங்களது நாளில் என்ன நடந்தாலும் அதைப் பொருட்படுத்தாமல், மக்களைச் சரியாக நடத்துங்கள்! ஆவிக்குரிய தன்மை என்பது ஒரு மன அமைவாகவும், வாழ்வு அமைவாகவும் உள்ளது. ஒரு குடிமைக் கழகத்தைக் காட்டிலும் கர்த்தருடைய சபைக்கு அதிகமான ஒப்புக்கொடுத்த தன்மை தேவைப்படுகிறது! பயிற்றுவிக்கப்படாத, தயாராய் இல்லாத போர்வீரர்கள் யுத்தத்தில் பயனற்றவர்களாக இருக்கின்றார்கள்! அன்றாட உயிர்வாழுதலில் விட அதிகமாக, இடர்ப்பாட்டு வேளையில் தான், மனிதன் தேவனுடைய பிரசன்னத்தை நாடுகின்றான் என்பது பரிதாபத்திற்குரியதாக உள்ளது. இடர்ப்பாட்டு வேளையில் ஜெபிக்க வேண்டுமென்று ஒருவரும் மக்களுக்கு நினைவூட்டத் தேவையில்லை! "தயாராக உள்ள" ஒரு மனிதர் "தயாரித்துக் கொள்ளத்" தேவையில்லை. நாம் இறப்பதற்கு முன்பு, நாம் ஏன் பிறந்தோம் என்பதை நாம் கண்டறிய வேண்டும்.*

*11. இது சிட்சிக்கப்படுதலாக உள்ளது. வளமைத் தன்மை வாய்ந்த சுவிசேஷம் தோல்வியடைகிறது! தேவன் தாம் அன்புகூருகின்றவர்களைச் சிட்சிக்கின்றார் (எபி. 12:5-11). நல்ல பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகளை ஒழுக்கத்திற்கு உட்படுத்துகின்றார்கள். ஆவிக்குரிய தன்மை என்பது மென்மையானதாக உள்ளது; அதே அளவுக்குச் சமமாக ஆவிக்குரிய தன்மை என்பது கடினமானதாகவும் உள்ளது. ஆவிக்குரிய தன்மை என்பது சுயத்தை மறுத்தல் மற்றும் நமது சிலுவைகளை ஏற்றுக் கொள்ளுதல் என்பவற்றை உள்ளடக்குகிறது. இரட்சிப்பு என்பது ஒரு உரிமைகோரப் படுதலாக இருப்பதில்லை; இது ஒரு வளர் செயல்முறையாக உள்ளது.*

*12. ஆவிக்குரிய தன்மை என்பது நன்மை தீமைகளை சீர்தூக்கிப் பார்ப்பதாக உள்ளது!*

# இயேசுவைப் பின்பற்றுதல்

## எபேசியர் 1:1–14

*“இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்” (எபிரெயர் 13:8).*

*ஒரு வேலையானது அந்த வேலையைச் செய்பவரைக் காட்டிலும் மேலானதாக இருக்க முடியாது. கிறிஸ்தவமானது கிறிஸ்தவர்களைக் காட்டிலும் மேலானதாக இருக்க முடியாது. கிறிஸ்தவர்கள் தாங்கள் போதிப்பதை விசுவாசிக்க வேண்டும். நாம் விசுவாசிப்பதை உண்மை யாகவே நாம் விசுவாசிக்க வேண்டும். “உண்மையிலேயே நாம் விசுவாசிக் கின்றோமா?” என்பதே எப்போழுதும் எண்ணத்தில் இருக்கிற கேள்வியாக உள்ளது. நாம் யார் என்பதை நாம் அறிந்திருக்க வேண்டும்; நாம் யாராயிருக்கின்றோமோ, அப்படியே இருக்க வேண்டும்.*

*தற்கால அமெரிக்காவில், அதிபர் தேர்தலில், ஒரு அரசியல்வாதி, “கருக்கலைப்பு என்பது ஒழுக்க ரீதியில் கொலையாக உள்ளது” என்று எழுதியுள்ளார். மேலும் அவர், “அரசியல் ரீதியாக நான் விருப்பத் தேர்வை ஆதரிப்பவனாக இருக்கின்றேன்” என்றும் கூறுகின்றார். இந்த அரசியல்வாதி தாம் நம்புகின்றதை நம்புவது இல்லை என்பது தெளிவாகிறது! இது அரசியல் வாதிகளுக்குள் போதிய அளவு மோசமானதாக உள்ளது; இது கிறிஸ்தவர் களில் தேவதூஷணம் என்பதாக உள்ளது.*

*ஆதி சபையார் தங்கள் உலகத்தில் சுவிசேஷ ஊழியம் செய்தார்கள். ஏன்? ஏனென்றால் அவர்கள் விசுவாசித்தார்கள். அவர்கள் தங்கள் விசுவாசம் முற்றான உண்மை என்று அறிந்தார்கள், அது எந்த விதமான போட்டியாளர் களையும் கொண்டிருக்க முடியாது என்றும், அது எவ்விதமான விட்டுக் கொடுத்தலையும் ஏற்றுக் கொள்ளாது என்றும் அவர்கள் அறிந்திருந்தார்கள். கிறிஸ்தவம் உண்மையானது என்றால், நான் ஒரு கிறிஸ்தவனாயிருக்க வேண்டும். நீங்களும் ஒரு கிறிஸ்தவராயிருக்க வேண்டும். வேதாகமக் கிறிஸ்தவம் என்பது தனிப்பட்டதாக, இறுக்கமானதாக, குறுகலானதாக உள்ளது; இது உண்மையும் சரியானதாகவும் கூட இருக்கிறது. இதை நாம் உண்மையிலேயே நம்புகின்றோமா?*

*தேவனுடன் நமது அன்றாட நடை என்பது தேவனுடனான ஒரு கிறிஸ்தவ வாழ்வாக உள்ளது. நமது கலாச்சாரத்திற்கு, வாழ்விற்கான பயன்பாடு தத்துவம் ஒன்று மிகவும் அவசரமாகத் தேவைப்படுகின்றது. உங்கள் வாழ்க்கை என்னவாக உள்ளது? வாழ்வில் உங்கள் பிரதான இலக்கு என்ன? இதை இயேசு தமது ஆழ்ந்தறிவுமிக்க மலைப்பிரசங்கத்தில் எடுத்துரைத்தார் (மத். 5:6). இதுவே வாழ்வதற்கான வழி என்று இயேசு*

கூறினார். பாக்கியங்கள் நமது "எண்ணப்போக்குகளை" விவரிக்கின்றன; நமது உள்ளான பண்பு நமது புறம்பான நடைமுறைகளைத் தீர்மானிக்கிறது. இதனால்தான் கிறிஸ்தவரல்லாதவர்கள் கிறிஸ்தவர்களைப் போன்று செயல்படுவதென்பது எதிர்பார்க்கப்பட முடியாததாக உள்ளது. நம்மில் ஒரு சிலர், ஒவ்வொரு நாளின் எண்ணப்போக்குகளும் செயல்பாடுகளும் எவ்வளவு வல்லமை நிறைந்தவைகளாய் இருக்கின்றன என்பதை அறிகின்றோம். ஒரு குறிப்பிட்ட வழியில் வாழ்தல் என்பது, தேவன் தேவனாக இருக்கின்றார் என்பதை விசுவாசித்தலாக உள்ளது. இது "பரிவு காட்டும்" கிறிஸ்தவத்திற்கான வேளையல்ல. பிரதான கட்டளை இன்னும் நிலைநிற்கிறது: ''நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்'' (மாற். 16:15). வாழ்வின் எல்லா அம்சங்களிலும் முதலில் விசுவாசமே முறிபடுகிறது. உங்கள் விசுவாசத்தைக் காத்துக் கொள்ளுங்கள். கிறிஸ்தவர்கள் விசுவாசிக்க வேண்டும். "இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும் படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது" (யோவா. 20:31).

## உண்மையான ஒரே தேவனில் நாம் விசுவாசம் கொள்ள வேண்டும்

*தேவன் - தேவன் - தேவன்!* தேவனே இங்கு விஷயமாக உள்ளார். இந்த தேவன், ஒரே இராஜரீகமான, நித்திய, படைக்கின்ற, எல்லையற்ற, மாற்றப் பட முடியாத, பரிசுத்த, சர்வ வல்ல தேவனாக உள்ளார். "ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்" (ஆதி. 1:1); "இஸ்ரவேலே கேள்! நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர். நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக" (உபா. 6:4, 5). இயேசு விசுவாசிக்கின்றதையே கிறிஸ்தவர்கள் விசுவாசிக்கின்றார்கள். இயேசு இந்தக் கட்டளையை மற்ற எல்லாக் கட்டளைகளையும் விட முன்னுரிமை வாய்ந்ததாக உறுதிப்படுத்தினார் (மத். 22:37-40). கிறிஸ்தவம் என்பது தனிப்பட்டதாக, முற்றானதாக, உபதேசத்துவம் வாய்ந்ததாக, சகிக்கக் கூடாததாக உள்ளது. சத்தியமும் இதே வழிமுறையில்தான் உள்ளது. சத்தியமாயிருத்தல் என்றால் முற்றான தன்மை வாய்ந்து இருத்தல் என்பதாக உள்ளது. யொகோவா என்ற ஒரே தேவனே இருக்கின்றார் (யாத். 3ன் மாபெரும் "இருக்கிறவராக இருக்கிறேன்" என்பவர்).

தேவன் இருக்கிறார் என்றால், வேறு எந்த விஷயமும் ஒரு பொருட்டல்ல; தேவன் இல்லையென்றால் வேறு எந்த விஷயமும் ஒரு பொருட்டல்ல. எல்லாவற்றையும் பற்றிப்பிடிப்பதற்குத் தேவன் மையத்தில் இருக்கின்றார். தேவனின்றி ஒழுக்கநெறி இருக்க முடியாது - எல்லா விஷயங்களும் அனுமதிக்கப்பட்டு விடும். தேவனை இழந்து நின்று, மற்ற எல்லாவற்றையும் கொண்டிருத்தலைக் காட்டிலும், தேவனைக் கொண்டிருந்தது மற்ற எல்லாவற்றையும் இழந்து நிற்பது எவ்வளவோ

மேன்மையானதாக உள்ளது. (இதைப் பற்றி இயேசு மத்தேயு 16:24-26ல் பேசினார்.) தேவனுடைய நபர்த்துவம், இடம், அதிகாரம் ஆகியவற்றைப் புறக்கணித்தலே எந்த ஒரு சபையின் அல்லது நபரின் வீழ்ச்சியாக உள்ளது. தேவன் உங்களுக்கு தேவை என்பது உங்களுடைய பிரச்சனையாயிருக்கையில், தேவன் மட்டுமே உங்கள் தீர்வாக இருக்க முடியும். மாபெரும் இறையியல் மாபெரும் தேவனை வேண்டிக்கேட்கிறது! நாம் யாவருமே தேவனுடைய பிள்ளைகளாக இருக்கும்படிக்கே பிறக்கின்றோம். நாம் யாவரும் தேவசாயலாகவே உருவாக்கப்பட்டுள்ளோம். தேவனின்றி நம்மால் [இருக்க] முடியாது; நாமின்றி தேவன் [இருக்க] மாட்டார். தேவனே நமது ஆவிக்குரிய வாழ்வின் செயல்கள் அனைத்திற்கும் ஆதார மூலமாக இருக்கின்றார். எசேக்கியேலின் புத்தகத்தில் தேவன், "இவ்விதமாக நீங்கள், நானே கர்த்தர் என்று அறிந்துகொள்வீர்கள்" என்று அறுபதுக்கும் மேற்பட்ட இடங்களில் கூறினார். தேவனின்றி மனிதன் தனிமையில் நடக்கின்றான்.

வேறே தேவன் இல்லை! பத்துக் கட்டளைகளில் முதலாவது கட்டளை, "என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்" (யாத். 20:3) என்பதாக உள்ளது. யோவான் 17:3, "ஒன்றான மெய்த் தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன்" என்று கூறுகிறது. சபையானது தேவனால் வழிநடத்தப்படட்டும்! நாம் உண்மையாகவே தேவனை அறிந்திருந்தால், நாம் ஒருக்காலும் பாவம் செய்ய மாட்டோம். நான் எவ்விதமாக வாழ்கின்றேன் என்பது, நான் தேவனைப் பற்றி உண்மையில் எதை விசுவாசிக்கின்றேன் என்பதற்குச் சாட்சியாக உள்ளது. "ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுகிற பயங்கரமாயிருக்குமே" (எபி. 10:31). அவரை அறியுங்கள். அவரை விசுவாசியுங்கள். அவரில் நம்பிக்கை வையுங்கள். அவரில் அன்புகூருங்கள். அவர் கூறுவதைக் கவனியுங்கள். அவருக்குக் கீழ்ப்படியுங்கள். தேவன் சர்வாதிகாரம் உள்ளவராக இருக்கின்றாரா? தேவன் கூறுகின்றவற்றை நாம் செய்வோமா? தேவனை அறிந்தும் அவர் கூறுவதைச் செய்யாமல் இருத்தல் என்பது அவரை அறிந்துள்ள விதமாக இருப்பதில்லை. தேவன் தேவனாக இருந்தால், மனிதர் அவர் கூறுவதைக் கவனிக்க வேண்டும். "கவனித்தல்" மற்றும் "கீழ்ப்படிதல்" ஆகிய இரண்டிற்கும் எபிரெய மொழியில் ஒரே வார்த்தையே உள்ளது. தேவனில் விசுவாசம் கொள்ளாதிருக்க மனிதன் எந்த சாக்குப்போக்கும் கொண்டிருப்பதில்லை (ரோமர் 1:18-23). அறிந்த தேவனிடத்தில் [உங்களால்] அறியப்பட்டிராத எதிர்காலத்தை ஒப்புவிக்க ஒருபோதும் அஞ்சாதீர்கள். மாற்றம் என்பது ஒவ்வொரு வினாடியிலும் வருகிறது. மாற்றமில்லாத ஒருவரைப் பற்றிக் கொள்ளுதல் என்பதே மாற்றத்திற்கான தீர்வாக இருக்கிறது. தேவன் மாறுவதில்லை.

# நாம் இயேசுவில் விசுவாசமாயிருக்க வேண்டும்

***தமது வகையில் அவர் ஒரே ஒருவராக இருக்கின்றார்***

*படைப்பாளராகிய தேவன், இயேசுவில் மனித இனத்துடன் இணைந்தார். இதுவே சுவிசேஷமாக உள்ளது. இப்படிப்பட்ட ஒரு திரு அவதாரத்தை வேறு எந்த மனிதரும் உரிமைகோர இயலாது. இயேசு, தேவனுடைய ஒரே பேறான குமாரனாயிருக்கின்றார் (யோவா. 3:16). இதை, பெந்தெகொஸ்தே நாளிலிருந்து (அப். 2) கிறிஸ்தவர்கள் அறிந்து, விசுவாசித்து, பிரசங்கித்திருக்கின்றார்கள். ஆயினும், நமது நவீன கலாச்சார மானது பன்மைத்தன்மையை (மாறுபட்ட மதகொள்கைகள் போன்ற வற்றின் ஒருமைப்பாட்டு முயற்சி) அணைத்துக் கொண்டுள்ளது. சகிப்புத் தன்மை என்ற பெயரில், கலாச்சாரமானது இயேசு பலரில் ஒருவர் என்று உபதேச ரீதியாக உறுதிப்படுத்துகின்றது. நாமகரணக் கூட்டத்தார், பல ஆண்டுகளாக "ஒரு சபை இன்னொரு சபையைப்போன்றே நல்லதாகவே உள்ளது" என்று சத்தமிட்டுள்ளார்கள். இதை அவர்கள் முழுமையாகச் சிந்தித்ததில்லை. அது உண்மையாக உள்ளதென்றால், "ஒரு மேசியா (கிறிஸ்து) இன்னொருவரைப் போன்றே நல்லவராக இருக்கின்றார்" - "ஒரு தேவன் இன்னொருவரைப் போன்றே நல்லவராகவே இருக்கின்றார்" - "எல்லாச் சாலைகளும் பரலோகத்திற்கே வழிநடத்துகின்றன." இந்தக் கருத்து வேத வசனங்களை மீறுவதாக உள்ளது; இது ஒரு கருத்தைக் கூட ஏற்படுத்துவதில்லை! இரண்டு தேவர்கள் ஒன்றாயிருக்கின்றார்கள் என்பது மிகவும் பலர் உள்ளனர் என்பதாகிறது! இரண்டு மேசியாக்கள் ஒன்றாயிருக் கின்றார்கள் என்பது மிகவும் பலர் உள்ளனர் என்பதாகிறது! இரண்டு சபைகள் ஒன்றாயிருக்கின்றன என்பது மிகவும் பல உள்ளன என்பதாகிறது! எபேசியர் 4:1-6ஐ வாசிக்கவும்.*

*வரலாற்றாளர் ஒருவர், வரலாற்றில் மாபெரும் மனிதர்களைத் தரவரிசைப் படுத்தியுள்ளார் - அதில் முகம்மது நபி, சர். ஐசக் நியூட்டன் ஆகியோருக்குப் பின்னாக இயேசு மூன்றாவதாக வரிசைப்படுத்தப் பட்டுள்ளார். "The Dallas Morning News" என்ற பத்திரிக்கை, "புதிய ஆவிக்குரிய தன்மை" என்பது இப்போது, ஒரு பகுதி இயேசுவாகவும் இருபகுதி புத்தராகவும் உள்ளது என்று சமீபத்தில் கூறியுள்ளது! இது நகைப்பிற்கு இடமானதாக இருப்பது மட்டுமின்றி, தேவதூஷணமாகவும் உள்ளது! நமது அன்றாட நடை என்பது கிறிஸ்துவின் நடையாக உள்ளது. வரலாறு முழுவதிலும் இயேசு தனிச்சிறப்பு வாய்ந்த நபராக, இதுவரை வாழ்ந்தவர்களிலேயே மாபெரும் நபராக உள்ளார். கிறிஸ்தவராக இருத்தல் என்பது எவ்வளவு சிலாக்கியமானதாக உள்ளது!*

*இயேசு, "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" (யோவா. 14:6) என்று கூறினார். இயேசு உண்மையானவர் மட்டுமின்றி, அவரே சத்திய மாகவும் இருக்கின்றார்! அவர் "உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கி" றார் (யோவா. 11:25). இயேசுவின் "நானே" வசனங்களை வாசித்துப் பாருங்கள். இயேசுவைப் போல் எந்த மனுஷனும் பேசினதில்லை. அவர், "நானே அவர்*

*என்று நீங்கள் விசுவாசியா விட்டால், உங்கள் பாவங்களிலே சாவீர்கள்" (யோவா. 8:24) என்றார்; "சத்தியத்தையும் அறிவீர்கள்; சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" (யோவா. 8:32). இயேசுவைக் காணுதல் என்பது தேவனைக் காணுதலாக உள்ளது (யோவா. 14:9). இயேசு ஜீவ அப்பமாக இருக்கின்றார் (யோவா. 6:48). இயேசு தேவ ஆட்டுக்குட்டியாக இருக்கின்றார் (யோவா. 1:29). இயேசு உயிர்த்தெழுந்தார் (லூக். 24:5, 6). முகம்மது இறந்து போயிருக்கின்றார். புத்தர் இறந்து போயிருக்கின்றார். இயேசு உயிருடன் இருக்கின்றார்! இறந்துபோன இரட்சகரால் என்ன பயன்? பலர் கூறியுள்ளபடி, "இயேசு ஒரு பொய்யராக, ஒரு பித்தராக இருக்க வேண்டும் அல்லது அவர் [ஒருவரே] கர்த்தராக இருக்க வேண்டும்."*

*கொலோசெயருக்கு எழுதிய நிருபம் ஒரு பொருத்தமான நிருபமா யிருக்கிறது. ஒருவேளை இதுவே இன்றைய நாட்களில் நமது கலாச்சாரத்தில் மிகவும் அவசியமானதாக இருக்கலாம். பவுல், "கிறிஸ்துவே [எல்லாமுமாக உள்ளார்]" என்று கூறினார். எபிரெயருக்கு எழுதிய நிருபம் - இயேசுவின் மாபெரும் சிறப்புத்தன்மையை [வேறேவருக்கும் ஒப்பிடப்பட முடியாத அவரது சிறப்புத்தன்மையை] விவரித்தல் என்ற - ஒரு மாபெரும் காரணத் திற்காக எழுதப்பட்டது. கிறிஸ்தவம் என்பது சிக்கலானதாக இருப்பது இல்லை: (1) தேவன் நமக்கு இயேசுவைக் கொடுத்தார், மற்றும் (2) நாம் நமது அன்றாட நடையில் தேவனுக்கு மீண்டும் இயேசுவைக் கொடுக்கின் றோம். தேவன் எல்லாவற்றையும் சிலுவையில் துணிவாய் பணயம் வைத்தார்; நாம் எல்லாவற்றையும் விசுவாசத்தினால் தைரியமாக செயல்படுகின்றோம். நாம் வேதாகம ரீதியானவர்களாயிருப்பதினால் ஏற்புடையவர்களாவதற்கு தைரியமானவர்களாயிருக்கின்றோமா? இயேசு கிறிஸ்து நாம் விரும்புகின்ற வகையிலான நபராயிராமல் போகலாம், ஆனால் அவரே நமக்குத் தேவையான நபராக உள்ளார்!*

### *அவர் கர்த்தராய் இருக்கிறார்*

*இயேசு "எஜமானராக" இருக்கின்றார். நமது கலாச்சாரமானது, அதிகாரத்துவத்தை மறுத்து, "கர்த்தர்" என்ற வார்த்தையை வெளியே எறிந்துள்ளது; இருப்பினும் இது ஒரு ஆழ்ந்தறிவான வேதாகம வார்த்தை யாக உள்ளது. கர்த்தர் என்பவர், "ஒரு நபர் சார்ந்திருக்க வேண்டிய, முடிவு செய்யும் அதிகாரத்தைக் கொண்டுள்ளவராக" இருக்கின்றார். இந்த பூமியில் இயேசு "தம்முடையது" என்று அழைக்கப்படக் கூடாதது என்று ஒரு அங்குலம் கூட இருப்பதில்லை. இயேசுவே நம்மைப் படைத்தார்; இயேசுவே நம்மை மீட்டார்; இயேசுவே ஒவ்வொரு அம்சத்திலும் கர்த்த ராக இருக்கின்றார். அன்றாட நடை என்பது ஒருவர் இயேசுவின் கர்த்தத் துவத்தின் கீழ் வாழ்தல் என்பதாக உள்ளது. பேதுரு, பெந்தெகொஸ்தே நாளன்று தமது முதல் சுவிசேஷப் பிரசங்கத்தைப் பின்வரும் வார்த்தை களுடன் முடித்தார்: "ஆகையினால், நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினாரென்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக்கடவர்கள்" (அப். 2:36). இயேசுவே மனிதருக்குத் தேவனுடைய கடைசியான மற்றும்*

*நிறைவான வார்த்தையாக உள்ளார் (எபி. 1:1-3). ஒருவருடைய வாயினால் அறிக்கை செய்தல் என்பது இரட்சிப்பை விளைவிக்கிறது (ரோமர் 10:10). இயேசுவே, எல்லாவற்றிலும் போதுமான கர்த்தராக உள்ளார்.*

*தேவனே இயேசுவைக் கர்த்தராக்கினார். மனிதர்கள் அதைச் செய்யவில்லை. மனிதர்கள் ஏற்றுக் கொண்டாலும் ஏற்றுக்கொள்ளா விட்டாலும், இயேசு எல்லாருக்கும் கர்த்தராகவே இருக்கின்றார். ஒரு நாளிலே, "பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசு கிறிஸ்து கர்த்த ரென்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும்" (பிலி. 2:11). "சந்தேகத் தோமா" தமது மனதைச் சரிப்படுத்திக் கொள்ள வேண்டியிருந்தது. உயிர்த்தெழுந்த கிறிஸ்துவுக்கு முன்பாக, தோமா, "என் ஆண்டவரே, என் தேவனே!" என்று கூறினார் (யோவா. 20:28). நாமும் கூட நமது மனநிலையைச் சரி செய்து கொள்ள வேண்டியுள்ளது. கர்த்தத்துவம் என்பது கீழ்ப்படிதலை வேண்டிக் கேட்கிறது. இயேசு, "என்னை ஆண்டவரே! ஆண்டவரே! என்று நீங்கள் சொல்லியும், நான் சொல்லுகிறபடி நீங்கள் செய்யாமற் போகிறதென்ன?" (லூக். 6:46) என்று கூறினார்.*

*இயேசு ஆண்டவராகவும் கிறிஸ்துவாகவும் இருக்கின்றார். முதலில் அவர் ஆண்டவராக இருக்கின்றார்! மனிதர்கள் இயேசுவை ஒரு இரட்சகராகவும் ஆசீர்வதிப்பவராகவும் விரும்புகின்றார்கள் - ஆயினும் அவர்கள் அவரது கர்த்தத்துவத்தைப் புறக்கணிக்கின்றார்கள். இயேசுவைக் கர்த்தரென்று ஏற்று நாம் அவருக்குக் கீழ்ப்படியாத வரையிலும் அவர் நமது இரட்சகராக இருக்க முடியாது! இயேசு தாம் கட்டளையிட முடியாதவர் களை அவர் இரட்சிக்க முடியாது. இயேசு புதிய ஏற்பாட்டில் இருபது அல்லது அதற்கும் அதிகமான இடங்களில் மேசியா (இரட்சகர்) என்று பட்டம் சூட்டப்பட்டுள்ளார். அவர் நானூற்றுக்கும் அதிகமான இடங்களில் கர்த்தர் என்று அறிவிக்கப்பட்டுள்ளார். நமது அன்றாட நடை கிறிஸ்து[வுடன் கூடிய] நடையாக உள்ளது. விசுவாசத்தை விசுவாசத் தன்மையிலிருந்து பிரிக்காதீர்கள்.*

> *பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிற வனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: "கர்த்தாவே! கர்த்தாவே!" என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. அந்நாளில் அநேகர் என்னை நோக்கி: "கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத் தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா?" என்பார்கள். அப்பொழுது நான் "ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்று போங்கள்" என்று அவர்களுக்குச் சொல்லுவேன் (மத். 7:21-23).*

*"என்னிடத்தில் வாருங்கள்" (மத். 11:28-30) என்பது "என் பின்னே வாருங்கள்" (மத். 4:19) என்று பெருக்கம் செய்யப்பட்டுள்ளது. நாம் கிறிஸ்துவுடனே கூடச் சிலுவையில் அறையப்பட்டுள்ளோம் (கலா. 2:20). நாம் கிறிஸ்துவுடனே கூட முன்குறிக்கப்பட்டுள்ளோம் (ரோமர் 8:29). நாம்*

*அவருடைய சாயலுக்கு ஒப்பாக மாற வேண்டியவர்களாய் இருக்கின்றோம் (2 கொரி. 3:18). நாம் அவரது உதாரணத்தைப் பின்பற்றுகின்றோம் (1 பேது. 2:21).*

*இயேசு, நமக்கு ஜீவனை அளிக்கும்படிக்கு,*
*நமது வாழ்வின் மூலமாக அவர் வாழும்படிக்கு,*
*நமக்காகத் தமது ஜீவனைக் கையளித்தார்.*

*இயேசு எனக்குள் உருவாக்கப்பட்டுள்ளாரா?*

**அவர் நமது இரட்சகராக இருக்கின்றார்**

*இயேசு மாத்திரமே நமக்கு இரட்சிப்பைக் கொண்டு வர முடியும்; வேறு வழி எதுவும் இல்லை! தேவன், தம்முடைய குமாரன் கெத்செமெனே யில் இரத்தம் சிந்திக்கொண்டிருந்த வேளையில், அவருக்கு "இல்லை" என்று சொல்லிக் கொண்டிருந்த வேளையில், அவர் "வேறு வழியெதுவும் இல்லை!" என்றே சத்தமிட்டுக் கொண்டிருந்தார். மனிதன் பாவத்தில் இழந்து போகப் பட்டிருந்து, நரகம் செல்லும்படி ஆக்கினைத் தீர்ப்பைப் பெற்றிருந்தான். அவன் தன்னையே இரட்சித்துக் கொள்ள முடியாதிருந்தது; அவன் இரட்சிப்பை வாங்க இயலாதிருந்தது. மனிதனால் செய்ய இயலாததை, தேவன் மனிதனுக்குள் செய்தார். இயேசு "தேவ ஆட்டுக்குட்டியாக" இருக்கின்றார். பாவம், மரணம், நரகம் மற்றும் சாத்தான் ஆகியவற்றைத் தோற்கடிக்க, தேவன், தேவனே இயேசுவில் மனித இனத்துடன் இணைந்தார். எல்லாருக்காகவும் ஒருவர் மரித்தார் (2 கொரி. 5:15). தேவன் கிறிஸ்துவுக்குள் நம்மை ஒப்புரவாக்கினார் (2 கொரி. 5:19-21). நமக்கு நாமே செய்ய இயலாததை நமக்காகச் செய்யும்படிக்குத் தேவன் மனித இனத்துடன் சேர்ந்து கொண்டார் என்ற சுவிசேஷ செய்தியே நமது அஸ்திபாரமாக உள்ளது. கிறிஸ்துவை மாத்திரம் ஏன் பிரசங்கிக்க வேண்டும்? பிரசங்கிப்பதற்கு வேறு ஒன்றும் இல்லை, [எனவே அவரைப் பிரசங்கிக்க வேண்டும்]! இயேசு ஒருவரே இரட்சகராக உள்ளார்! இயேசுவைத் தவிர வேறு எவரிடத்திலும் இரட்சிப்பு இல்லை, இவரே கிறிஸ்துவாக, இவரே மேசியாவாக, இரட்சகராக உள்ளார். என்ன ஒரு இரட்சகர்!*

*பாவிகளுக்கு, அவர்கள் இரட்சிக்கப்படுதலைக் காட்டிலும் அதிகமா னது தேவைப்படுகிறது: அவர்களுக்கு ஒரு இரட்சகர் தேவைப்படுகின்றார். இரட்சிப்பு கொடுக்கப்பட்ட நிலையிலும்கூட, பாவிகள் மீண்டும் ஒரே ஒரு நிமிடத்தில் பாவிகளாகி விடுவார்கள். இயேசு நமக்காக வேண்டுதல் செய்வதற்காக எப்போதும் வாழ்கின்றார் (எபி. 7:25). இயேசு ஒருவரே தேவனுக்கும் மனிதர்களுக்கும் இடையில் மத்தியஸ்தராக உள்ளார் (1 தீமோ. 2:5). இரட்சிக்கும்படிக்கு வானத்தின் கீழெங்கும் வேறு எந்த நாமும் கொடுக்கப்படவில்லை (அப். 4:11, 12). இயேசு மனிதர்களை அப்படியேவோ அல்லது சாத்தியக்கூறுள்ள வகையிலோ இரட்சிப்பதற்கு வரவில்லை; அவர் பாவிகளை இரட்சிக்கப்படக் கூடியவர்களாக்குவதற்*

*காகவே வந்தார். இயேசுவற்ற நிலையில் நாம் நமது பாவங்களில் மரிக்க மாத்திரமே முடியும் (அப். 4:12).*

*இயேசுவில் விசுவாசம் கொள்ளுதல் என்பது, "தேவன் சரியானவராக இருக்கின்றார்" என்று கூறுதலாக உள்ளது. பாவம்தான் பிரச்சனையாக உள்ளது; இதற்கு சிலுவை என்பதே பதிலாக உள்ளது. இயேசு நாம் கிறிஸ்தவ வாழ்வை வாழ்வதற்கு உதவி செய்வதில்லை - இயேசுவே நமது வாழ்வாக இருக்கின்றார்.*

## இன்றைய நாட்களில் நாம் கிறிஸ்தவத்தை நம்ப வேண்டும்

*நமக்கு எப்பொழுதுமே தேவைப்பட்டவைகள் [தாம்] இன்றைய நாட்களிலும் நமக்குத் தேவைப்படுகிறது: இயேசு கிறிஸ்து! "கிறிஸ்துவுக் குள்" என்ற அல்லது இதற்கு இணையான சொற்றொடர்களைப் புதிய ஏற்பாடானது 119 முறைகள் பயன்படுத்துகிறது. இது "நேற்றைக்கான" அல்லது "நாளைக்கான" கிறிஸ்தவமாயிராமல், "இன்றைக்கான" கிறிஸ்தவ மாக உள்ளது. இயேசு ஒரே தரம் மரித்தார் என்று எபிரெயருக்கு எழுதிய நிருபம் அறிவிக்கிறது (7:27; 10:10). முதல் நூற்றாண்டில் இருந்த மக்கள் தாங்கள் முதல் நூற்றாண்டில் இருந்ததைக் கூட அறியவில்லை (நமது நாட்காட்டி இதற்குப் பின்புதான் வந்தது). ஒவ்வொரு நூற்றாண்டிற்கும் புதிதாகச் சில விஷயங்கள், மாறுதலாகச் சில விஷயங்கள் தேவைப்படுவது இல்லை. "இன்றைய நாட்களின் கிறிஸ்தவத்தை முதல் நூற்றாண்டு" பெற்றிருந்தது. இதுவே நம் யாவருக்கும் தேவைப்படுகிறது - இதுவே நமக்கு எப்பொழுதும் தேவைப்படுகிறது. நீங்கள் ஒரு பழைமையான காரைப் புதுப்பிப்பது போன்று, சபையை மீளக்கட்டியெழுப்புவதில்லை. கிறிஸ்துவே தேவனுடைய நித்தியமான பதிலாக உள்ளார். உங்களுக்குக் கோதுமை தேவைப்படும்போது, நீங்கள் கோதுமை விதையை நடுகின்றீர் கள். உங்களுக்குக் கிறிஸ்தவம் தேவைப்படும்போது, சுவிசேஷ விதையை நடுங்கள் (லூக். 8:11; ரோமர் 1:16). சபையானது தான் பிரசங்கிப்பதை நடைமுறைப்படுத்த வேண்டும்; கிறிஸ்தவர்கள் தங்கள் விசுவாசத்தை வாழ வேண்டும். இயேசு நேற்று மரித்தார், இன்று காலையில் உயிர்த்தெழுந்து, இன்றிரவு மீண்டும் வரப்போகின்றார் என்பது போல வாழுங்கள்!*

*வாருங்கள், என்னுடன் நடவுங்கள்.*

*போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய*
*இயேசுகிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப்*
*போட ஒருவனாலும் கூடாது (1 கொரி. 3:11).*

4

# தேவனுடன் எனது அன்றாட நடை

## "பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்!"

*இன்றைய நாட்களில் மக்கள் - "மகிழ்ச்சியாயிருத்தல்" என்ற - ஒரே ஒரு இலக்கைக் கொண்டுள்ளார்கள். அவர்கள் உணர்வெழுச்சியை, பொழுதுபோக்கை, "வேடிக்கையையும் விளையாட்டுக்களையும்" விரும்புகின்றார்கள். "மகிழ்ச்சியாயிருத்தல்" என்பதை, வேதாகம ரீதியான மகிழ்ச்சியுடன் ஒருபோதும் குழப்பிக் கொள்ளாதீர்கள். பெரும்பாலானவர்கள், பரிசுத்தராக இருப்பதற்கு மாறாக மகிழ்ச்சியாக இருப்பார்கள், சுத்தமாக இருப்பதற்கு மாறாக பாதுகாப்பாக இருப்பார்கள், விசுவாசம் நிறைந்தவர்களாக இருப்பதற்கு மாறாக வெற்றி நிறைந்தவர்களாக இருப்பார்கள். பெரும்பாலான பெற்றோர்கள், தங்கள் பிள்ளைகள் "மகிழ்ச்சியாக இருக்க வேண்டும்" என்று மாத்திரமே நினைப்பது பரிதாபத்திற்குரியதாக உள்ளது. அவர்கள் அவ்வாறு மகிழ்ச்சியாக இல்லை என்பது அதை விடப் பரிதாபகரமானதாக உள்ளது. சிலர், "என் வாழ்க்கை முறையானது பாவம் நிறைந்ததாக இருக்கலாம், ஆனால் நான் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்றே தேவன் விரும்புகின்றார் என்று நான் நினைக்கின்றேன்" என்று முடிவு செய்து, வெறுக்கத்தக்க பாவத்திலேயே கிடக்கின்றார்கள். உண்மையான ஆவிக்குரிய தன்மை என்பது "மகிழ்ச்சியாக இருத்தல்" என்பதும் ஒன்று கலப்பது இல்லை. இந்த விளக்கத்தின்படி, தேவன் ஒருவரையும் ஒருபோதும் "மகிழ்ச்சியாய்" இருக்கும்படி கட்டளையிட்டதில்லை என்றாகிறது.*

*அதே போன்றே, நவீன சமுதாயமானது உடல் நலத்தை விக்கிரக ஆராதனைப் படுத்துகிறது. இது "உள்" ளானதாக இருக்கிறது! மக்கள் உடற்பயிற்சி செய்து, மூலிகைகளைப் பயன்படுத்தி, ஒவ்வொரு புதிய தந்திர வேலையையும் நாடுகின்றார்கள். அவர்கள் தங்கள் உடல்களை விக்கிர ஆராதனைப்படுத்துகிற வேளையில், தங்கள் ஆத்துமாக்களைப் புறக்கணிக்கின்றார்கள்.*

*பரிசுத்த தன்மை எங்கே சென்று விட்டது? மகிழ்ச்சியை நேரடியாகத் தேடும்போது, அது தோல்வியில் முடிகிறது. உடல் நலம் என்பது முடிவான மரணத்தை வெற்றிகொள்ள முடியாது. "யாவரோடும் சமாதானமாயிருக்கவும், பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவும் நாடுங்கள், பரிசுத்தமில்லாமல்*

*ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே" (எபி. 12:14). நாம் பண்பு என்பதிலிருந்து அப்பாற்பட்ட நிலையில் மனிதர்களையும் சபைகளையும் கட்டியெழுப்ப முயற்சி செய்வதால் தோல்வியடைகின்றோம். நாம் ஒரு பெரிய சபையை விரும்புகின்றோம், ஆனால் பரிசுத்தமான சபையை அல்ல. சபையின் நேர்முகத் தேர்வுகளில், என் வயது, என் கல்வி, என் [கல்வி மற்றும் அனுபவம் பற்றிய] சுருக்கத் தொகுப்பு மற்றும் சபையை எதிர்கொண்டுள்ள பிரச்சனைகள் ஆகியவை பற்றி நான் கேள்விகள் கேட்கப்பட்டுள்ளேன். [ஆனால்] எவரொருவரும், "நீங்கள் பரிசுத்தவானாக இருக்கின்றீர்களா?"; "நீங்கள் தேவனுடன் ஆழ்ந்த அறிவுள்ள உறவுகொண்டு இருக்கின்றீர்களா?" என்று ஒருக்காலும் கேட்டதில்லை. நமது அன்றாட நடை என்பது பரிசுத்தமான நடையாக உள்ளது.*

*நான் கல்லூரியில் இருந்தபோது, பார்வையிட வந்த கல்வியாளர் ஒருவர், "பிரசங்கியார் [ஆகவிருந்த] பையன்களாகிய" எங்களை அதிர்ச்சி யடையச் செய்து கோப மூட்டினார். அவர், அன்பு அல்ல ஆனால் பரிசுத்தம் என்பதே தேவன் விரும்புகின்ற முதல் எண்ணப்போக்காக உள்ளது என்று கூறினார். அவர் அன்பை நான்காவதாக வரிசைப்படுத்தினார். அவர் பரிசுத்தத்தை முதலாவதாக வைத்ததில் சரியானவராகவே இருந்தார். (அன்பு என்பது நான்காவதாக இருத்தலைப் பற்றி நான் [சரியாய்] அறிவதில்லை; அது ஐந்தாவதாகவோ அல்லது ஏழாவதாகவோ இருந்திருக்க முடியும்.) "உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறது போல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள்" (1 பேது. 1:15, 16). பேதுரு, "அன்பு, அன்பு, அன்பு" என்றல்ல ஆனால், "பரிசுத்தம், பரிசுத்தம், பரிசுத்தம்" என்றே வலியுறுத்தினார்.*

*இன்றைய நாட்களில் கடவுள் "உள்ளாக" இருக்கின்றார் - ஆனால் இவர் பரிசுத்தமான, வேதாகம ரீதியான தேவனல்ல. எல்லையற்ற, மாற்றப் படக் கூடாத, நித்தியமான, உயிருள்ள, பரிசுத்த தேவனை நோக்கிச் செல்லுதல் என்பது பொதுவான போக்காக இருப்பதில்லை! இவரே நமது அன்றாட நடையின் தேவனாக உள்ளார். தேவன் பரிசுத்தர் என்று நீங்கள் நினைக்காதபோது, அவருக்கு நீங்கள் அஞ்ச முடியாது. "தேவனுக்குப் பயந்து அவர் கட்டளைகளைக் கைக்கொள், எல்லா மனுஷர் மீதும் விழுந்த கடமை இதுவே" (பிர. 12:13).*

*ஆம், தேவன் அன்பாயிருக்கின்றார் (1 யோவா. 4:8, 16). இதற்கும் மேலாக, அவர் ஒளியாயிருக்கின்றார் (1 யோவா. 1:5). தேவனுடைய தொன்மைத்துவமான தூய்மைத் தன்மையைக் கனப்படுத்துங்கள். தேவனு டைய பண்பைத் தூய்மையானதாகக் காத்துக் கொள்ளுங்கள்! தேவன் அன்பாகவே இருக்கின்றார், ஆனால் அன்பே தேவன்/தெய்வம் என்று இருப்பதில்லை. அன்பு என்பது தேவனை விளக்கப்படுத்துவதில்லை; தேவன் [தாம்] அன்பை விளக்கப்படுத்துகின்றார். தேவன் அன்பாயிருக் கின்றார் என்பதினால் அல்ல, ஆனால் அவர் பரிசுத்தமாயிருக்கின்றார் என்பதினாலேயே சிலுவை அவசியமாயிற்று. நீங்கள் உங்கள் மகனைக் கொல்லுவதினால் ''உங்கள் அன்பை நிரூபிக்க'' மாட்டீர்கள் - இது மனத்தெளிவற்ற தன்மையாக உள்ளது. "அன்புகூருகின்ற தேவன், பாவியை*

*எவ்வாறு நரகத்திற்கு அனுப்ப முடியும்?" என்று கேட்பது, ஒரு தவறான கேள்வியை முன் வைப்பதாக உள்ளது. பரிசுத்தமான தேவன் ஒரு பாவியை நரகத்திற்கு அனுப்பாதிருப்பது எப்படி? தேவன் பாவத்தையோ அல்லது பாவிகளையோ தொட முடியாது. எந்த ஒரு பாவியும், பரிசுத்தமான தேவனுடைய பிரசன்னத்தில் நிற்பதற்கு உரிமையோ அல்லது காரணமோ கொண்டிருப்பதில்லை! "பாவம் நிறைந்த மனிதன் பரிசுத்தமாக எப்படி இருக்க முடியும்?" என்பது நித்தியமான விஷயமாக உள்ளது. ஒவ்வொரு பாவமும் தண்டிக்கப்பட வேண்டும். எந்தப் பாவமும் பரலோகத்திற்குச் செல்லுவதில்லை.*

*பாவத்தின் சம்பளம் மரணம் (ஆதி. 2:17; ரோமர் 6:23). பாவம் நிறைந்த மனிதன் இழந்துபோகப்பட்டவனாக, உதவியற்றவனாக, நம்பிக்கையற்றவனாக இருக்கின்றான். பாவம் நிறைந்த மனிதன் தன்னையே இரட்சித்துக் கொள்ள இயலாது. தேவனுடைய பரிசுத்த தன்மையானது அவருடைய கோபத்தை வேண்டுகிறது. தேவன் தேவனாக இருக்க வேண்டும். தேவனுடைய பரிசுத்தமானது நீதியை வேண்டுகிறது. இதுவே இப்போது அன்பின் முடிசூட்டப்பட்ட மகிமையாக (கிருபையைப் பற்றிய தகுதியான புரிந்து கொள்ளுதலாக) உள்ளது. மனிதனால் முடியாததை, தேவன் மனிதனுக்குள்ளாகவே செய்தார். தேவன் மனித இனத்துடன் கிறிஸ்துவுக்குள் இணைந்து கொண்டார். இயேசு பரிபூரணமான வாழ்வை வாழ்ந்து, தமது இரத்தத்தைச் சிந்தினார். நீதியானது மரணத்தை - இரத்த பலியை - வேண்டிற்று. அந்த விலையை அன்பு செலுத்திற்று! "தேவன் ... இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" (யோவா. 3:16). இயேசு "அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்" (மத். 20:28). ஒரே இரட்சகரான இயேசு கிறிஸ்து, ஒவ்வொருவருக்காவும் மரணத்தை ருசி பார்த்தார் (எபி. 2:9; அப். 4:11, 12). தேவனுடைய பரிசுத்தம் இன்றி அவரது அன்பிற்கு அர்த்தம் எதுவும் இருப்பதில்லை. தேவன் பரிசுத்தராக நிலைத்துள்ளார்; பாவத்தின் மீதான அவரது கோபமானது சிலுவையில் இயேசுவின் மீது ஊற்றப்பட்டது. இதுவே சுவிசேஷமாக உள்ளது! "தேவன் கிறிஸ்துவுக்குள் உலகத்தைத் தமக்கு ஒப்புரவாக்கினார்" (2 கொரி. 5:19-21). இயேசு கிறிஸ்து இல்லையேல், பாவிகள் தங்கள் பாவங்களில் மரிக்க மட்டுமே முடியும். இயேசு பாவிகளுக்காக, தேவபக்தியற்றவர்களுக்காக மரித்தார் (ரோமர் 5:6-8). இயேசு பாவிகளை அப்படியேவோ அல்லது சாத்தியக்கூறுள்ள வகையிலோ இரட்சிக்கவில்லை; மாறாக அவர் பாவிகளை ''இரட்சிக்கப்படக்கூடியவர்கள்'' ஆக்கினார். தேவன் தம்மிடமிருந்து நம்மை இரட்சிப்பதற்கு ... தம்மையை ... தம்மையே நமக்காகக் கொடுத்தார்!*

| | |
|---|---|
| *"மகிழ்ச்சியாய்" இருக்க நான் உரிமை கொண்டுள்ளேனா?* | *இல்லை!* |
| *"நலமாய்" இருக்க நான் உரிமை கொண்டுள்ளேனா?* | *இல்லை!* |
| *"பரிசுத்தமாய்" இருக்க நான் உரிமை கொண்டுள்ளேனா?* | *ஆம்!* |

# பரிசுத்த ஆவியானவரும் நானும்

## 1 கொரிந்தியர் 2:9-16

*“பின்னும் நான் சொல்லுகிறதென்னவென்றால், ஆவிக்கேற்றபடி நடந்துகொள்ளுங்கள், அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றா திருப்பீர்கள். மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது; ... நாம் ஆவியினாலே பிழைத்திருந் தால், ஆவிக்கேற்றபடி நடக்கவும் கடவோம்” (கலா. 5:16, 17, 25).*

ஆவிக்குரிய தன்மையைப் பரிசுத்த ஆவியானவரிலிருந்து நாம் தனியே பிரித்து எடுக்க இயலாது என்பது தெளிவானதாக உள்ளது. கடந்துபோன ஐம்பது ஆண்டுகளும் ஆவியானவர் மீது அதிக வலுவான ஆர்வத்தைக் கண்டுள்ளன. துரதிரஷ்டவசமாக எல்லைகளுக்கப்பால் ஆனவைகளே மேலோங்கி நின்றன. ஆவியானவரை ஒப்புக்கொள்ளுதல் என்பது பின்வரும் இரு நிகழ்வுகளில் ஏதாவது ஒன்றாக உள்ளது: (1) மதத்தினால் தடை விதிக்கப்பட்ட செயல் அல்ல (2) “St. Vitus’ Dance.” இவ்விரண்டும் - ‘‘நாம் அவரை மறந்துபோவோம்’’ மற்றும் ‘‘நாம் பித்துப்பிடித்தவர் களாவோம்” என்ற இவ்விரண்டு - அணுகுமுறைகளுமே தவறானவைகளாக உள்ளன.

ஆவியானவரைப் பற்றி நாம் கொண்டிருக்கும் தன்னிலை மறந்த எண்ணங்கள், நம்மை ஆவியானவருக்குள் பக்குவத்தில் வழிநடத்தவில்லை. ஏன்? முதலாவது, நாம் வேத வாக்கியங்களை அறியாமலிருக்கின்றோம், இரண்டாவது, நாம் கருத்துணர்வு எதையும் கொண்டிருப்பதில்லை. சதுசேயர்களால் கேள்வி கேட்கப்பட்டபோது, இயேசு “நீங்கள் வேத வாக்கியங்களையும் [வேதாகமத்தை] தேவனுடைய வல்லமையையும் [கருத்துணர்வை] அறியாமல் தப்பான எண்ணம் கொண்டிருக்கிறீர்கள்” (மத். 22:23-32) என்று பதில் அளித்தார். ஆவியானவரே வேதவாக்கியங்களை நமக்குக் கொடுத்தார் (2 பேது. 1:20, 21; 2 தீமோ. 3:15-17), அவைகளின்றி நாம் ஆவியானவருக்குள் வளர முடியாது. ஆவியும் வேத வசனங்களும் ஒன்று மற்றொன்றுடன் முரண்பட முடியாது. இது ஆவிக்குரிய நடைக்கான ஆவிக்குரிய பாதையாக உள்ளது. ஆரோக்கியமான உபதேசம் பலமான வேர்களை ஏற்படுத்துகிறது. ஆவிக்குரிய தன்மைக்குச் சாதகமாக நாம் ஒருபோதும் இறையியலைத் தவிர்க்கக் கூடாது. வசனத்தை நேசிக்கும் படியும், அதைத் தியானிக்கும்படியும், அதற்குக் கீழ்ப்படியும்படியாகவும் ஆவியானவர் போதிக்கின்றார். மக்கள் வேத வாக்கியங்கள் மற்றும்

*கருத்துணர்வுகள் ஆகியவற்றிற்கு மாறாக, அனுபவங்கள் மற்றும் உணர்வுகள் ஆகியவற்றைச் சார்ந்துள்ள வேளையில் ஆவியினால் தொந்தரவு படுத்தப்படுகின்றார்கள்.*

*இந்தப் பிரச்சனையானது, ஆவியானவரை ஒரு நபர் என்பதற்குப் பதிலாக. "அது" அல்லது ஒரு "பேயுருவ ஆவி" என்று குறிப்பிடுகின்ற சில வேதாகம மொழிபெயர்ப்புகளினால் இன்னும் சிக்கலாக்கப்படுகிறது. ஆவியானவர் ஒரு நபராக உள்ளார் - அவர் ஒரு சக்தியாகவோ, ஒரு ஆர்வக் கிளர்ச்சியாகவோ, ஊக்குவிக்கும் சிந்தனையாகவோ, வேறு ஏதொன்றின் நபர்த்துவமாகவோ இருப்பதில்லை. நான் எவ்வாறு ஒரு நபராக இருக்கின்றேனோ, அது போன்றே அவரும் ஒரு நபராக இருக்கின்றார். அவர் தனித் தன்மையைக் கொண்டுள்ளார். அவரால், பேசவும், கேட்கவும், விரும்பவும், துக்கப்படவும், மகிழ்வடையவும் முடியும். யூகத்துடன் அல்ல ஆனால் வெளிப்படுத்துதலுடன் ஒட்டியிருங்கள். வேதாகமம் உயிருள்ளதாக இருக்கிறது (எபி. 4:12); ஆவியானவர் உயிருள்ள வசனங்களின் மூலமாக மட்டுமே நம்முடன் தனிப்பட்ட வழிமுறையில் பேச முடியும்.*

*வேத வசனங்கள் கருத்துணர்வின் மூலமாக மட்டுமே நடைமுறைப் படுத்தப்பட முடியும். நமது அன்றாட நடையானது, வேதவசனங்களைக் கொண்டு ''பரிசுத்தப்படுத்தப்பட்ட கருத்துணர்வுடன்'' கூடிய ஒரு நடையாக உள்ளது. ஆவியானவரைப் பற்றிய பெரும்பாலான தவறான புரிந்து கொள்ளுதல்கள், வேத வசனங்கள் மற்றும் கருத்துணர்வு ஆகியவற்றைக் கொண்டு சுலபமாகத் திருத்தப்படுகின்றன. இதில் நாம் மிகவும் சிறந்தவர்களாய் இருப்பதில்லை! நம்மைப் பற்றியே நாம் நன்முறையில் உணரவோ அல்லது சபையில் சிறிது கேளிக்கையைக் கொண்டிருக்கவோ ஆவியானவர் நமக்கு அருளப்படவில்லை. இதற்கு மறுபுறத்தில், நாம் சாத்தானுக்கு அஞ்சுவதைக் காட்டிலும் அதிகமாக ஆவியானவருக்கு அஞ்சுபவர்களாய் இருக்கக் கூடாது! ஆவியானவர் ''கவன ஈர்ப்புச் செயல்களுக்குள்" இருப்பதில்லை. அவர் நமக்கு "வலிப்பு" உண்டாக்கும் சக்தியை அளிப்பதில்லை. இப்படிப்பட்ட மதியீனமான செயல்கள் சபையின் மதிப்பை அழிக்கின்றன என்று பவுல் கூறினார் (1 கொரி. 14:23). ஆவியானவர் பைத்தியக்காரத்தனத்தை உண்டாக்குவதில்லை.*

*ஆம், ஆவியானவர் இரகசியமானவராகவே இருக்கின்றார். தேவன் இரகசியமானவராகவே இருக்கின்றார். சுவிசேஷம் இரகசியமானதாகவே இருக்கிறது. சபை இரகசியமானதாகவே இருக்கிறது. ஆயினும், இரகசியமாயிருத்தல் என்பது, மூட நம்பிக்கையுடனிருத்தல் அல்லது பேய்த்தனத்துடன் இருத்தல் என்று ஆகி விடுவதில்லை. ஆவியானவரே சத்தியமாக இருக்கின்றார் (1 யோவா. 5:6). அவர் நம்மை சகல சத்தியத்திலும் வழிநடத்தியுள்ளார் (யோவா. 16:13; 14:26). சத்தியமானது கருத்துணர்வினால் மாத்திரமே சரியான வகையில் கையாளப்பட முடியும். ஆவியானவர் மனத்தெளிவற்றவராய் இருப்பதில்லை, அவர் பரிசுத்தராய் இருக்கின்றார். நமக்கு வேத வசனங்களும் கருத்துணர்வும் அவசியமாகின்றன.*

# பரிசுத்த ஆவியானவர் தேவனாக இருக்கின்றார்

*பரிசுத்த ஆவியானவர் தேவனாக இருக்கின்றார் என்ற உண்மையானது, ஆவியானவரைப் பற்றிய எந்த ஒரு வேதாகமப் படிப்பிற்கும் மிகவும் முக்கியமானதாக உள்ளது. இந்த சத்தியத்தைப் புரிந்துகொள்ளுதல் என்பது எல்லா அற்பத்தனங்களையும் நீக்கிப் போட்டுவிடும். ஆவியானவர் தேவனாக இருக்கின்றார்! தேவனுக்குப் பயபக்தி செலுத்தப்பட வேண்டும் - பிதாவாகிய தேவன், குமாரனாகிய தேவன், பரிசுத்த ஆவியானவராகிய தேவன். தேவன் ஒழுங்கமைவாக இருக்கின்றார், அவர் குழப்பமாக இருப்பதில்லை (1 கொரி. 14:33, 40). பின்பு ஏன் ஆவியானவரிடமிருந்து குழப்பத்தை விரும்ப வேண்டும்?*

*1. திரித்துவம். வேதாகமத்தின் தேவன் மூவொருவராக உள்ளார். திரித்துவம், தேவத்துவம் என்பது, உண்மைத் தன்மை, ஒருமைப்பாடு, சமாதானம் ஆகியவற்றின் ஆதாரமூலமாக உள்ளது. தேவனுடன் நமது அன்றாட நடை என்பது தெய்வீகத் திரித்துவத்துடனான நடையாக உள்ளது.*

*2. தேவன். ஆவியே தேவனின் சாராம்சமாக உள்ளது (யோவா. 4:22-24). நாம் ஆவியானவரை ஆராய்வதற்கு முன்னர், தேவன்மீது ஆழ்ந்தறிவுடன் பயபக்தி செலுத்த வேண்டும். இதை நாம் செய்யவில்லை என்றால், மாயாவாதமும் மூடநம்பிக்கையும் தாம் விளையும்.*

*பரிசுத்த ஆவியானவரைப் பற்றி மக்கள் பல கேள்விகளைக் கொண்டுள்ளார்கள். ஆவியானவரின் சொந்தப் பெயர் என்ன? ஆவியானவர் பெயரற்றவராக இருக்கின்றார். ஆவியானவர் மீது நாம் அன்புகூர வேண்டும் என்று வேதாகமத்தின் எவ்விடத்தில் குறிப்பாகக் கட்டளையிடப்பட்டுள்ளது? குறிப்பான கட்டளை நிலவுவதில்லை. ஆயினும், முதன்மையாகத் தேவனிடத்தில் அன்புகூருதல் மற்றும் நமது விரோதிகளிடத்தில் அன்புகூருதல் ஆகியவற்றிற்கு இடையில் அவர்மீது [ஆவியானவர் மீது] அன்புகூருதல் என்பது நிச்சயமாகச் சரியானதாகவே உள்ளது!*

*ஆவியானவர் நம்முடன் ஒரு தனிப்பட்ட உறவு இல்லாத நிலையில் காணப்படாதவராக இருக்கின்றார். தேவன் திரித்துவராய் இருக்கின்றார். இவர்கள் மூவரும் சமமான தேவனாயிருக்கின்றார்கள், ஆயினும் நபர் மற்றும் பணி ஆகியவற்றில் தனிப்பட்டு விளங்குகின்றார்கள். இவர்கள் மூவரும் ஒருவர் மற்றவர்களுக்குக் கீழ்ப்படிதலுடன் இருக்கின்றார்கள். ஆவியானவர் தம்மீதல்ல, ஆனால் பிதாவின் மீதும், குமாரனின் மீதும் கவனம் செலுத்துகின்றார். நாம் அவரை மேம்படுத்துவதையும் மகிமைப் படுத்துவதையும் காண்பதற்கு அவர் பயங்கொண்டிருக்கின்றார்! இது அவரது பண்பையும் அவரது பணியையும் மீறுகிறதாக உள்ளது. நாம் ஆவியானவர் மீதல்ல, ஆனால் தேவன்மீதும் இயேசுவின்மீதும் தான் கவனம் செலுத்த வேண்டும்.*

*ஆவியானவர் தேவனை அறிந்து அவரை வெளிப்படுத்துபவராக*

*இருக்கின்றார் (1 கொரி. 2:9-13). ஆவியானவரைப் பெற்றிருத்தலின் விளைவு என்பது, கிறிஸ்துவின் சிந்தையைப் பெற்றிருத்தல் என்பதாக உள்ளது. நாம் தேவனை அறியாத நிலையில் அவரிடத்திலிருந்து ஆசீர் வாதங்களைப் பெறுவதற்கு ஜெபித்தல் என்பது தேவனை வெளிப்படை யாக அவமதித்தலாக உள்ளது. ஆவியானவரை அறியாமல் அவரிடத்தி லிருந்து அற்புதங்களை அல்லது அனுபவங்களை விரும்புதல் என்பது ஆவியானவரை வெளிப்படையான அவமதித்தலாக உள்ளது. ஆவியான வரால் மட்டுமே நாம் தேவனுடைய நிறைவினால் நிரப்பப்பட முடியும் (எபே. 3:14-19). ஆவிக்குரிய தன்மை என்பது "கறுப்பு மந்திரவாதமோ" அல்லது "பில்லி சூனியம்" சார்ந்த சடங்குகளோ அல்ல. ஆவியானவர் நமக்காக அனுபவங்களைத் தருவது இல்லை.*

*3. இயேசுகிறிஸ்து. இயேசுவை மகிமைப்படுத்துவதற்காகப் பரிசுத்த ஆவியானவர் இயேசுவால் அனுப்பப்பட்டார். ஆவியானவர் மீது கவனத் தைச் செலுத்தி, இயேசுவின் மீது கவனம் செலுத்தாமல் இருத்தல் என்பது, ஆவியானவரையும் அவரது ஊழியத்தையும் மீறுகிற நடவடிக்கையாக உள்ளது. ஆவியானவர் உதவியாளராக இருக்கின்றார் (கிரேக்கம்: paraclete), இவர் நமக்கு ஆறுதல் அளிப்பதற்கு இயேசுவானவரால் அனுப்பப்பட்ட வராக இருக்கின்றார் (யோவா. 14:16-18, 26; 15:26; 16:7-15). நாம் ஒருக்காலும் ஆவியானவரை, பிதா அல்லது குமாரனிடமிருந்து பிரித்து விடக் கூடாது. அவர்கள் என்னவாக இருக்கின்றார்களோ, அவ்வாறே அவரும் இருக்கின்றார். அவர்கள் எவற்றைப் போதிக்கின்றார்களோ, அவற்றையே அவர் வெளிப்படுத்துகின்றார். ஆவியானவரை ஆவியானவ ராக இருக்க அனுமதியாதிருத்தல் என்ற சோதனையை மட்டும் நாம் எதிர்த்து நிற்க முடிந்தால் [எவ்வளவு நன்றாயிருக்கும்]! அறியாமையினாலும் மதியீனத்தினாலும் ஆவியானவரை அவமானப்படுத்தாதீர்கள். அசாதாரண அனுபவங்கள் என்பவை கிறிஸ்தவ பக்குவத்திற்கு அவசியமற்றவைகளாக உள்ளன. நாம் அன்பை அறிந்து, இயேசுவைப் போல் அதிகமாய் வாழும் போது, நாம் ஆவியானவரால் வழிநடத்தப்படுவதை அறிகின்றோம்.*

*எபேசியர் 1:3ல் பவுல், கிறிஸ்துவுக்குள் தேவன் நம்மை உன்னதத்திற் குரிய சகல ஆசீர்வாதங்களினாலும் ஆசீர்வதித்திருப்பதாக நமக்கு ஒரு நினைவூட்டுதலை அளித்தார். இந்த ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் யாவும் ஆவியானவரால் மாத்திரமே வழங்கப்படுகின்றன. திரித்துவம் முழுவதும் எபேசியர் 1:3ல் செயல்பாட்டில் உள்ளது. எபேசியருக்கு எழுதிய நிருபமானது சபையை மையப்படுத்துகின்ற, நமது இறையியலின் புத்தகமாக உள்ளது. இது எபேசுவில் இருந்த சபைக்கு எழுதப்பட்டது. கிறிஸ்துவுக்குள் தேவன் ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களையும் ஆவியானவர் மூலமாக சபைக்கு அனுப்புகின்றார்! என்ன ஒரு கூற்று!*

## பரிசுத்த ஆவியானவர் நம்முடையவராக இருக்கின்றார்

*பழைய ஏற்பாட்டில் பிதாவாகிய தேவனே திரித்துவத்தைப் பிரதிநிதித்*

*துவப் படுத்தினார். குமாரனாகிய தேவன் நம்மிடையே சஞ்சரித்தபோது, திரித்துவத்தை அவர் பிரதிநிதித்துவப்படுத்தினார் (மத்., மாற்., லூக்., யோவா.). கிறிஸ்து மீண்டும் வரும் வரையில் திரித்துவத்தைப் பிரதிநிதித் துவப்படுத்துவதற்கு ஆவியானவராகிய தேவன் இறங்கி வந்தார் (அப். 2). நமது யுகம் ஆவியானவரின் யுகமாயுள்ளது. ஆவியானவர் உள்ளாக வந்து வாசம் செய்தலே, மீட்புக்கென்று நமக்கருளப்பட்ட அச்சாரமாக உள்ளது (அப். 2:38; 5:32; எபே. 1:14). ஆவியானவர் அருளுபவர் அல்லர்; ஆவியானவரே கொடையாக உள்ளார். நமது சரீரங்கள் ''பரிசுத்த ஆவியானவரின் ஆலயமாக" உள்ளன (1 கொரி. 6:19, 20).*

*கிறிஸ்துவின் இரத்தம் சபையை விலைக்கு வாங்கிற்று (அப். 20:28; எபே. 5:25-27; 1 கொரி. 6:20). தேவன் முதன்முதலில் சபையை ஏற்படுத்திய போது, அதை அவர் சரியானதாகவே ஏற்படுத்தினார். அப். 2ல் (பெந்தெ கொஸ்தே நாளன்று) தேவன் சபையில் செயல்படத் தொடங்கினார். அவர் சபையில் இருந்து தம்மை நீக்கிப் போடவில்லை. தேவன் ஒருக்காலும் "நாமகரணத்துவப் பணி" யில் செயல்படவில்லை. ஆவியானவரே சபையின் ஜீவனாயிருக்கிறார் (1 கொரி. 3:16), ஆனால் அவர் கிறிஸ்தவர்களுக்கு உள்ளாக வாசம் செய்தலின் மூலமாக மட்டுமே சபையில் இருக்க முடியும். இன்றைய நாட்களில் பூமியில் கிறிஸ்தவர்களின் இருதயங்கள் மட்டுமே "பரிசுத்தமான இடங்களாக" உள்ளன.*

*தேவன் சபைக்கு, ஜெபம் மற்றும் ஆவியானவர் என்ற இரு மாபெரும் ஆசீர்வாதங்களை அருளியுள்ளார். இவ்விரண்டையுமே நாம் நன்கு பயன்படுத்திக் கொள்வதில்லை. நாம் அனுபவங்களையும், நுணுக்கங் களையும், முறைமைகளையும், தந்திரவேலைகளையும் விரும்புகின்றோம்; இருப்பினும் நாம் ஜெபிக்கவும் ஆவியானவரைப் பின்பற்றவும் தவறுகின் றோம். ஆவியானவரை நம்பியிருத்தலை விட, நிகழ்ச்சிகளை நம்பியிருத்தல் என்பது சுலபமானதாக உள்ளது. சாத்தான் சோதிக்கின்றான்; ஆவியான வரோ பலப்படுத்துகின்றார் (எபே. 3:14-19).* A. W. Tozer *அவர்கள், ''தொடக்க கால சபையிலிருந்து ஆவியானவர் எடுக்கப்பட்டிருந்தால், அவர்கள் செய்தவற்றில் 90% அளவு ஒழிந்து போயிருக்கும், ஆனால் இன்றைய நாட்களில் ஆவியானவர் எடுக்கப்பட்டு விட்டால், 10% அளவு மாத்திரமே ஒழிந்து போகும்'' என்று கூறினார். நமது உயர் - நுட்பப் பொருளற்ற ஆர்வங்களின்றியே, முதல் நூற்றாண்டில் சீஷர்கள் இந்த உலகமுழுவதிலும் சுவிசேஷ ஊழியம் செய்தார்கள். ஜெபத்தையும், வேத வசனங்களையும், ஆவியானவரையும் ஒருக்காலும் பிரிக்காதீர்கள்.*

*ஆவியானவர் எங்கேயிருக்கின்றார்? அவர் எவ்வாறு கண்டறியப்பட முடியும்? அனுபவங்களில் அல்ல. பெந்தெகொஸ்தே நாளன்று நடந்த நிகழ்வுகள் மீண்டும் ஒருக்காலும் திரும்பச் செய்யப்பட்டது இல்லை; அந்நிய பாஷைகளில் பேசுதல் ஓய்ந்து போயிற்று (1 கொரி. 13:8-13). ஆவியானவர் எழுதப்பட்ட வேத வசனங்களுக்குள்ளாகக் கண்டறியப் படுகின்றார். "கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக'' (கொலோ. 3:16அ). ஆவியானவர், "சத்திய ஆவியா" னவராக இருக்கின்றார் (யோவா. 14:17; 15:26; 16:13).*

*மக்கள் அற்புதத்தை எதிர்பார்க்கும்படி கூறப்படுகின்றார்கள். பவுல் தீமோத்தேயுவிடம் [சத்திய வசனத்தை நிதானமாய்] "பகுத்து" (2 தீமோ. 2:15) படிக்கும்படி கூறினார். ஆவிக்குரிய அனைத்து வழிநடத்துதல்களும் வேத வாக்கியங்களின் அடிப்படையிலேயே அமைந்துள்ளன. அப். நடபடிகள் புத்தகத்தில் உள்ள எவரொருவரும் ஒரு கனவினாலோ, ஒரு தூதனுடைய தரிசனத்தினாலோ அல்லது ஆவியானவரின் நேரடியான செயல்பாட்டினாலோ மனமாற்றப்படவில்லை. எல்லா மனமாற்றங்களிலும் மனித முகமை - சுவிசேஷ செய்தியாகிய வசனம் ஆகிய ஈடுபாடுகள் இருந்தன. தேவனுடைய வசனமே இராஜ்யத்தின் விதையாக உள்ளது (லூக். 8:11). வேத வசனங்களில் எவர் ஒருவரும் "ஆவியானவரால் ஞானஸ்நானம் பெறும்படியாகவோ" அல்லது "வரம் பெறும்படியாகவோ" ஒருபோதும் கட்டளையிடப்பட்டதில்லை. நீங்கள் ஒரு ஆவிக்குரிய நபராக இருப்பதைக் காட்டிலும் ஆவிக்குரிய வரங்களைப் பெறுவதில் அதிக ஆர்வம் கொண்டவ ராக இருப்பது ஏன்? மனித குலமானது "பெறுவதில்" அதிக கவனம் செலுத்துகின்றது; ஆவியானவர் "இருப்பதில்" அதிக கவனம் செலுத்து கின்றார். அத்துடன், அற்புதங்கள் சாதாரணமானவைகளாக இருந்தால்/ பொதுவானவைகளாக இருந்தால் அவை அற்புதங்களாக இருக்க மாட்டா! நாம் பரிசுத்தத்திற்கும் பக்குவத்திற்கும் ஆவியானவரை நாட வேண்டும். நாம் என்னவாக ஆகின்றோமோ, அவ்விதமானவர்களாகவே இருக்கப் போகின்றோம்.*

*அன்பு இருக்கும் இடத்தில் ஆவியானவர் காணப்படுகின்றார். இது மிக அரிதாகவே கவனிக்கப்படுகிறது. 1 கொரிந்தியர் 12 மற்றும் 14 ஆகியவை ஆவிக்குரிய வரங்களைப் பற்றிய இரண்டு உபதேச அத்தியாயங்களாக உள்ளன. இவையிரண்டிற்கும் இடையில் உள்ளது என்ன? 1 கொரிந்தியர் 13ம் அத்தியாயமானது அன்பைப் பற்றிய மாபெரும் அத்தியாயமாக உள்ளது! "மேலும் நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால் ..." (ரோமர் 5:5). அன்பு என்பதே ஆவியின் கனியாக உள்ளது! சோதனை வேளை! 1 கொரிந்தியர் 13ஐ வாசியுங்கள், பின்பு "அன்பு" என்பதற்குப் பதிலாக "கிறிஸ்து" என்பதை இட்டுப்பாருங்கள். இது இவ்வசனப்பகுதிக்கு ஊறு விளைவிக்காது. பின்பு அவ்விடங்களில் உங்கள் பெயரை இட்டுப் பாருங்கள். நீங்கள் எவ்வாறு உணருகின்றீர்கள்? உங்கள் அன்றாட வாழ்வானது பிறருடைய வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்துகின்றதா? கிறிஸ்தவர்களுக்குப் பவுல், "எங்கள் இருதயங்களில் எழுதப்பட்டும், சகல மனுஷராலும் அறிந்து வாசிக்கப்பட்டும் இருக்கிற எங்கள் நிருபம் நீங்கள்தானே" (2 கொரி. 3:2) என்று கூறினார்.*

*ஆவியானவர் எங்கே இருக்கின்றார்? ஆவியானவர், "அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்; இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை" (கலா. 5:22, 23) என்ற ஆவியின் கனியில் காணப்படுகின்றார். கனி என்பது ஒருமைச் சொல்லாக உள்ளது; விளைவுகளோ பன்மைச் சொற்களாக உள்ளன. நாம் [முதலில்] இதிலும்*

*பின்பு அதிலும் செயல்படுவதில்லை. ஆவியின் கனி என்பது ஒரு பொதியில் வருகிறது. உற்பத்திப் பொருள் உண்டாக்கப்படுதல் என்பதல்ல ஆனால் கனி வளருதல் என்பதே கருத்தாக உள்ளது. பல கிறிஸ்தவர்கள், மனித ரீதியான வேலைகளின் மூலமாக ஆவிக்குரிய கனி தருதல் என்பதைச் சாதிக்க முயற்சி செய்து அதில் தோல்வியடைவதால் சோர்ந்து போகின்றார்கள்! சுய முன்னேற்றப் பாடத் திட்டங்கள் அடிப்படையில் தோல்வியடைகின்றன. ஆவியானவர் மூலமாக மட்டுமே நாம் பக்குவம் அடைய முடியும். ஆவிக்குரிய தன்மை என்பது அனுபவங்கள், விசேஷித்த வரங்கள், அல்லது அற்புதங்கள் ஆகியவற்றினால் அளக்கப்பட முடியாது. ஆவிக்குரிய தன்மை என்பது ஆவிக்குரிய நற்பண்பு மற்றும் பக்குவம் என்பவற்றினால் மட்டுமே அளக்கப்பட முடியும். ஆவிக்குரிய பிரகாரமாக நமக்கு வேண்டிய எல்லாமே, ஆவியின் கனியிலிருந்து வருகின்றன. இங்கு வெளியாக்குதல் அல்ல உள்ளாக ஏற்றுக்கொள்ளுதல் என்பதே விஷயமாக உள்ளது. ஒரு மக்காச் சோளத் தட்டையானது ஏற்ற காலம் வரும்போது மக்காச் சோளத்தை உண்டாக்குகிறது. மனிதன் மக்காச் சோளத்தை உண்டாக்க முடியாது. கிறிஸ்துவுக்குள், ஆவியானவராலே, தேவன் சீஷர்களை ஏற்படுத்துகின்றார். நாம் யாவருமே தன்னடக்கத்தை ஆர்வத்துடன் விரும்புகின்றோம். நம்மை நாம் தேவனுடைய கட்டுப்பாட்டிற்கு ஒப்புக் கொடுக்காத வரையிலும், நம்மையே நாம் கட்டுப்படுத்த முடியாது. ஆவியானவரின் விளைவு கிறிஸ்துவினுடையது போன்றதாகவே இருக்க வேண்டியுள்ளது. நாம் "ஆவியானவரைப் போல்" இருக்க மாட்டோம்; நாம் "கிறிஸ்துவைப் போலிருப்போம்." ஒரு குழந்தை பிறக்கின்றபோது, அவன் முற்றிலும் மனிதத்துவத்துடனேயே இருக்கின்றான். அவன் ஒருக்காலும் மனிதனைக் காட்டிலும் மேன்மையானவனாயிருக்க முடியாது. ஞானஸ் நானத்தில் நமக்கு ஆவியானவர் அருளப்படுகின்றார். நாம் ஒருக்காலும் அதைவிட அதிகமான ஆவியைப் பெற்றுக் கொள்ள முடியாது. தேவனு டைய பிள்ளை ஒவ்வொருவரும் அவருடைய ''எல்லாவற்றையும்'' கொண்டிருக்கின்றார்கள். "ஆவியானவர் நம்முடைய 'எல்லாவற்றையும்' கொண்டுள்ளாரா?'' என்பதே கேள்வியாக உள்ளது. ஆவியானவர் நம்முடையவராக இருக்கின்றார். ஆவிக்குரிய தன்மையின் இரகசியங்கள் ஒலிநாடாக்களிலோ, கருத்தரங்குகளிலோ, அனுபவங்களிலோ அல்லது தந்திர வேலைகளிலோ இருப்பதில்லை. ஆவிக்குரிய தன்மையின் இரகசிய மாக இருப்பவர் ஆவியானவரே! "ஆவியின் கனி, சகல நற்குணத்திலும் நீதியிலும் உண்மையிலும் விளங்கும்" (எபே. 5:9).*

## ஆவியானவரால் நிரப்பப்படுதல்

*எபேசியர் 5ல் பவுல் மூன்று பலமான கட்டளைகளை வெளியிட்டார்: "... தேவனைப் பின்பற்றுகிறவர்களாகுங்கள்" (வ. 1ஆ); "... அன்பிலே நடந்து கொள்ளுங்கள்'' (வ. 2ஆ); ''... வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்து கொள்ளுங்கள்" (வ. 8). பின்பு அவர், "... ஆவியினால் நிறைந்து" (வ. 18) என்று கூறினார். இந்தக் கட்டளையானது கண்டிப்பான ஆணையின்*

*வடிவில் இருப்பதை முதலில் கவனியுங்கள். பவுல், "நீங்கள் ஆவியினால் நிறைந்தவர்களாயிருங்கள்" என்று அர்த்தப்படுத்தினார். தேர்ந்து கொள்ளுதல், முடிவு மற்றும் செயல்பாடு ஆகியவை நம்முடையவைகளாக உள்ளன. இது வலியுறுத்தமாக உள்ளது.*

*இரண்டாவது, ''நிறைந்து'' என்ற வினைச் சொல்லானது பன்மை வடிவில் உள்ளது: "நாம் யாவரும்" [ஆவியில்] நிறைந்தவர்களாய் இருக்க வேண்டும். "நாம் யாவரும்" ஒருக்காலும் அற்புத வரங்கள் பெற்று இருந்தது இல்லை!*

*மூன்றாவது, இது செயப்பாட்டு வினையில் உள்ளது: "ஆவியானவர் உங்களை நிரப்பட்டும்." முழுமையும் [நிரம்பியுள்ள] பாத்திரம், நிரப்பப்பட முடியாது. நிரப்பப்பட வேண்டுமென்றால், முதலில் இணங்கி, வெறுமையாக்கப்பட வேண்டும். நிரம்பிய ஒரு பாத்திரத்தில், ஏதொன்றையும் கூட்ட முடியாது. நாம் சுயத்திற்கு மரிக்கையில், அல்லது சுயத்தை வெறுமையாக்குகையில், நாம் ஆவியானவரால் நிரப்பப்பட முடியும்.*

*நான்காவது, இந்தக் கட்டளையானது நிகழ்கால வினைச் சொல்லாக உள்ளது. இயேசு நம்மை அனாதைகளாக விட்டுவிடவில்லை (யோவா. 13:18ஐக் காணவும்). பவுல், ''ஆவியால் நிறைக்கப்பட்டவர்களாய் இருங்கள்" என்று கூறினார். நிறைக்கப்பட்டிருத்தல் என்பது தொடர்ந்த, வாழ்நாள் முழுவதுமான ஒரு செயல்முறையாகும். நாம் நிரப்பப்படுகின்றோம், மீண்டும் நிரப்பப்படுகின்றோம். இந்தச் செயல்முறையை யாரோ ஒருவர், காற்றானது கப்பலின் பாய்களை நிரப்புவதைக் கொண்டு விவரித்தார்.*

*பின்வரும் கேள்வியை உங்களுக்கு நீங்களே கேட்டுக் கொள்ளுங்கள்: "எனது கிறிஸ்தவ நடையில் நான் பிரியமாய் இருக்கின்றேனா?"*

### *வாருங்கள், என்னுடன் நடவுங்கள்.*

*பரிசுத்த ஆவியின் பலத்தினாலே உங்களுக்கு நம்பிக்கை பெருகும்படிக்கு, நம்பிக்கையின் தேவன் விசுவாசத்தினால் உண்டாகும் எல்லா வித சந்தோஷத்தினாலும் சமாதானத்தினாலும் உங்களை நிரப்புவாராக (ரோமர் 15:13).*

5

# தேவனுடன் எனது அன்றாட நடை

## சத்தியம்

சத்தியம்! இங்கு சத்தியம் என்பது விஷயமாயிருப்பதில்லை; தேவனே இங்கு விஷயமாக உள்ளார். நித்தியமான, புலன்கடந்த தேவன், பரிபூரண மான சத்தியத்திற்கும் எழுத்தாளராக உள்ளார். தேவன் இல்லையென்றால், சத்தியம் நிலவுவதில்லை. நாம் கருத்துக்கள், உணர்வுகள், மற்றும் தப்பெண்ணங்கள் ஆகியவற்றைக் கொண்டிருக்கலாம்; ஆனால் தேவன் இல்லையேல், தராதர அளவையில்லை. தேவன் இல்லையேல், பண்புகள் நிலைத்திருக்க முடியாது. தேவன் இல்லையென்றால் வாழ்வில் அர்த்தம் இருப்பதில்லை - நோக்கம் இருப்பதில்லை, முன்னுரிமை இருப்பதில்லை, அடைவிடம் இருப்பதில்லை.

நமது கலாச்சாரமானது நினைப்பதற்கு மாறாக இறந்து போயிருக்கும். இன்றைய நாட்களில் மக்களில் சுமார் 70 சதவிகிதத்தினர், "பரிபூரணமான சத்தியம் என்று ஒன்றுமில்லை" என்ற கருத்தை விழுங்கியுள்ளார்கள். "பரிபூரணமான சத்தியம் என்று ஒன்றுமில்லை" என்பதுதான் ஒரே சத்தியம் என்று அவர்கள் நம்புகின்றார்கள். அவர்களைப் பொறுத்தமட்டில், "உங்களால் அறிய முடியாது என்பதே நீங்கள் அறிந்த யாவுமாக உள்ளது" என்றுள்ளது. சத்தியத்தை நம்பாது, அதை நேசிக்காது இருத்தல் என்பது நித்தியத்திற்கும் தற்கொலை செய்துகொள்ளுதல் என்பதாக உள்ளது. கிழக்கை மேற்கு என்று நினைப்பதும், இடதை வலது என்று நினைப்பதும், மேல்பகுதியை கீழ்பகுதி என்று நினைப்பதும் பித்தமான தன்மையாக உள்ளது! எல்லா இலக்கங்களும் சரியானதாக இராவிட்டால் உங்களால் ஒரு ஏழு இலக்க தொலைபேசி எண்ணைக் கூடச் சுழற்ற (டயல் செய்ய) இயலாது! ஆலோசனையாளர்கள், வழக்கறிஞர்கள், மருத்துவர்கள், மற்றும் பிரசங்கியார்கள் ஆகியோர், நோயாளிகளும் தங்கள் வாடிக்கையாளர் களும் உண்மையைக் கூறும்போது மட்டுமே அவர்களுக்கு உதவி செய்ய முடியும். நீதிமன்றத்தில் ஒருவர், "நான் சொல்வதெல்லாம் உண்மை, உண்மையைத் தவிர வேறெதுவும் இல்லை" என்று உறுதி அளிக்கின்றார். நம்பிக்கை இழந்த நிலையில் நாம் மருத்துவர்களிடத்தில், "எனக்கு [என்ன வாயிற்று என்று] உண்மையைச் சொல்லுங்கள்" என்று அறிவுறுத்துகின் றோம். சமுதாயமும் தனிப்பட்ட நேர்மையும், சத்தியத்தின்மீது மட்டுமே

*கட்டியெழுப்பட்டுள்ளன. பரிபூரணமான சத்தியம் என்று ஒன்றில்லை யென்றால், பரிபூரணமான பொய் என்பதும் இருக்க முடியாது! சத்தியத்திற்கு அஞ்சாத மனிதர்கள் பொய்களுக்கும் அஞ்ச மாட்டார்கள். சத்தியத்திற்கான நாட்டமே வாழ்வின் நோக்கமாக உள்ளது - இது சரிவிகிதமான, குறிக்கோள் வாய்ந்த, முழுமையான சத்தியமாக உள்ளது! அறிவியலுக்கு சத்தியத்தின் மீதான ஆர்வம் தேவைப்படுகிறது. மருத்துவ இயலுக்கும் சத்தியத்தின் மீதான ஆர்வம் தேவைப்படுகின்றது. சத்தியத்திற் கான பெரு ஆர்வம் வாழ்க்கைக்கு தேவைப்படுகிறது.*

*இயேசு, "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன் ..." (யோவா. 14:6); "சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலை யாக்கும்" (யோவா. 8:32) என்று கூறினார். தேவன் சத்தியத்தின் தேவனாக இருக்கின்றார்.*

> *அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது (யோவா. 1:14).*
>
> *கிருபையும் சத்தியமும் இயேசுகிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின (யோவா. 1:17ஆ).*
>
> *உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம் (யோவா. 17:17).*
>
> *அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு (எபே. 4:15அ).*
>
> *சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார் (யோவா. 16:13அ).*
>
> *அந்த வீடு ஜீவனுள்ள சபையாய்ச் சத்தியத்துக்குத் தூணும் ஆதாரமுமாயிருக்கிறது (1 தீமோ. 3:15ஆ).*

*சத்தியமானது கிறிஸ்தவ வாழ்வின் அஸ்திபாரமாக உள்ளது. அன்றாட நடை என்பது "சத்திய நடை" யாக உள்ளது. சத்தியத்தைக் குறித்து அக்கறைப்படாத நிலை என்பது தேவனைக் குறித்து அக்கறைப்படாத நிலையாக உள்ளது. சத்தியம் - இயேசு கிறிஸ்து என்ற - ஒரு நபராக உள்ளது. தேவன் சத்தியத்தின் தேவனாக இருக்கின்றார். தேவன் நம்மீது அன்பு கூர்வதால், அவர் எப்போதும் நமக்குச் சத்தியத்தையே கூறுவார். நாம் சத்தியத்தை அறிந்து, விசுவாசித்து, கீழ்ப்படிய வேண்டும் என்று தேவன் விரும்புகின்றார். தேவன் உணர்வுகள், அறிவுக்கு விளங்காத அனுபவங்கள், அல்லது மாயத் தோற்றங்கள் ஆகியவற்றின் தேவனாக இருப்பதில்லை. தேவன் மீதுள்ள விசுவாசம் என்பது, நம்பத் தகுந்த ஆதாரங்கள் மற்றும் பொது அறிவு ஆகியவற்றின் மீது கட்டியெழுப்பப்பட்ட மதிநுட்பமான விசுவாசமாக உள்ளது. உணர்வுகள் என்பவை சத்தியத்திற்குப் பதிலாக*

*இருப்பதில்லை. சத்தியத்தை ஒருவரும் விசுவாசியாத போதிலும், அது சத்தியமாகவே உள்ளது! சத்தியத்தை நீங்கள் கீழே தாழ்த்தி விட்டு, ஒருமைப்பாட்டை மேம்படுத்த முடியாது. நமது கலாச்சாரமானது இப்பொழுது ஒரு "உண்மை - இல்லாத - மண்டலமாக" உள்ளது. நமது கலாச்சாரமானது முற்றிலும் கட்டுப்பாட்டை இழந்த நிலையிலும் உள்ளது!*

*நாம் கவனித்து, கற்று, வாழ வேண்டும். சத்தியத்தைப் போன்றதொரு நுகர்பொருள் வேறொன்றும் இருப்பதில்லை. சமீபத்தில், ஒரு பொதுக் கருத்தாய்வு மன்றத்தில், ஒரு பேச்சாளர் தவறாயிருந்திருக்க முடியுமா என்று கேட்கப்பட்டார். அவர் அதற்கு, "ஆம்" என்றும் பின்பு "இல்லை" என்றும் பதில் அளித்தார். அந்தக் கேள்வியின் குறிக்கோள் என்னவாக இருந்தது? எல்லாருமே தவறாயிருக்கக் கூடும் என்பதால், ஒருவரும் சரியானவரா யிருக்க முடியாது. நான் அறிய இயலாது என்பது மட்டுமே நான் அறியக் கூடிய யாவுமாக இருந்ததென்றால், வாழ்வானது உதவியற்றதாகி விடுகிறது. நாம் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கின்றோம். இருப்பினும் நமது கலாச்சாரமானது, ''நாம் யாவரும் பரலோகம் செல்லுகின்றவர்களா யிருக்கின்றோம்" என்று முடிவு செய்கிறது. அதை அவர்கள் எவ்வாறு அறிய முடியும்? விசுவாசத்தினால் நாம் அறியக்கூடிய விஷயங்கள் உள்ளன. நாம் அறிகின்றோம் என்பதை அறியக் கூடும் என்று லூக்கா எழுதினார் (லூக். 1:1-4). நாம் நித்திய ஜீவனை அறிகின்றோம் என்று யோவான் கூறினார் (1 யோவா. 5:11-13). ஒவ்வொன்றையும் அறியாதிருத்தல் என்பது நாம் சிலவற்றை அறிய இயலாது என்று அர்த்தப்படுத்துவதில்லை! கிறிஸ்தவம் என்பது சிந்தித்தலைக் காட்டிலும் மேலானதாக உள்ளது; இது "சிந்தியாதிருத்தலைக் காட்டிலும்" மிகவும் மேலானதாக உள்ளது. சத்தியம் என்பது மூலகாரணத்திற்குப் பற்றுறுதியுடன் நடந்துகொள்ளுதலாக உள்ளது. ஆம், நான் தவறானவனாயிருக்கக்கூடும் - ஆனால் நான் சரியான வனாகவும் இருக்கக் கூடும். எபேசியர் 4:1-6ல், பவுல் ஏழு "ஒன்றுகளை" பட்டியலிட்டார். இங்கு நாம் நிற்கிறோம்!*

*ஃபர்மேன் கீயெர்லீ அவர்கள், நாம் யாவரும் ஜெபிக்க மற்றும் பதில் பெறக்கூடிய அன்றாட ஜெபம் ஒன்றைக் கொண்டுள்ளார்: "கர்த்தரே, நாங்கள் சத்தியத்தை நேசிக்க, சத்தியத்தை நாட, சத்தியத்தைக் கண்டறிய., சத்தியத்தை விசுவாசிக்க, சத்தியத்திற்குக் கீழ்ப்படிய, சத்தியத்தைப் போதிக்க, சத்தியத்துடன் ஒன்றிணைந்திருக்க எங்களுக்கு உதவும்.'' ஆமென்! அன்பிலே சத்தியத்தைக் கைக்கொண்டு வாழ்தல் என்பது நமது மாபெரும் சிலாக்கியமாக உள்ளது.*

# சபை

## எபேசியர் 5:21-33

*"எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி, எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்" (எபே. 1:22, 23).*

தேவனுடைய சபையை நமது கலாச்சாரம் எவ்வாறு காண்கிறது, மற்றும் அது எவ்வாறு நடத்துகிறது என்பது பற்றி உடைந்துபோன இருதயத்தோடும் கண்ணீர் நிரம்பிய விழிகளோடும் இந்தப் பாடம் எழுதப்பட்டுள்ளது. சபை என்பது "அரசியல் ரீதியாகச் சரியானதாக" இருப்பதில்லை. இது "உள்" ளானதாக இருப்பதில்லை; இது "புறம்பான" தாக இருக்கிறது. இந்த உலகமானது சபையை வெறுத்து ஒதுக்குகிறது; இந்த உலகமானது சபையை ஏளனம் செய்கிறது. சகிப்புத் தன்மையை மேம்படுத்துபவர்கள் பின்வரும் மூன்று குழுக்களைக் குறித்து மிகவும் சகிப்புத் தன்மையற்றவர்களாக இருக்கின்றார்கள்: (1) மிகவும் பருமனான வர்கள், (2) பரிசேயர்கள், மற்றும் (3) சபை. சபை என்பது பயனுறு உலகிற்கு ஏற்பில்லாததாக உள்ளது. ஆயினும், உலகிற்கு ஏற்புடைய தன்மையில் இருக்கும்பொருட்டு, சபையானது உலகில் இருந்து மாறுபட்டதாக இருக்க வேண்டும். விஷயங்கள் நித்தியமானவைகளாக உள்ளன என்று கூறுதலே ஏற்புடையதாக இருத்தல் என்பதாக உள்ளது. சபையானது ஒரு எதிர்க் கலாச்சாரமாக உள்ளது. சபையானது இந்த உலகத்தில் உள்ளது, ஆனால் இந்த உலகத்திற்கு உரியதாக இருப்பதில்லை. உலகப் பிரகாரமான சபை என்பது தேவதூஷணம் செய்வதாக உள்ளது. சபையானது இந்த பூமிக்கு உப்பாகவும், இந்த உலகத்திற்கு வெளிச்சமாகவும் இருக்கிறது. இது ஒரு ஒளியாக இருக்க முடிவதற்கு முன்பு உப்பாக இருக்க வேண்டும். சபை யானது ஏற்கனவே வாய்மொழியாக உபத்திரவப்படுத்தப்பட்டதாக உள்ளது. ஒருவேளை - நாம் நினைப்பதற்கும் முன்பு வெகு விரைவாகவே - இது உடல்ரீதியாகத் துன்புறுத்தப்படலாம். நாம் தயாராக இருக்கின் றோமா? இது "அமைதியான" கிறிஸ்தவத்திற்கான வேளையாக இருப்ப தில்லை.

மதமும் சபையை வெறுக்கிறது. "புதிய ஏற்பாட்டின் சபை இன்றைய நாட்களில் நிலவ முடியாது. அது நிலவ முடியுமென்றால், நாம் அதை விரும்ப மாட்டோம்" என்று பலர் நினைக்கின்றார்கள். அது ஏன் இன்றைய நாட்களில் நிலவ முடியாது? தேவன் இன்னும் தேவனாக இருக்கின்றாரா? கிறிஸ்துவின் சிலுவை இன்னமும் சுவிசேஷமாக உள்ளதா? சுவிசேஷம் இன்னமும் இரட்சிக்க முடியுமா? அப். 2ல் (பெந்தெகொஸ்தே நாளன்று)

தேவன் "சபைப் பணியில்" ஈடுபடத்தொடங்கினார். தேவன் "சபைப் பணியில்" இருந்து வெளியேறியதாகக் கூறும் வேத வசனம் ஒன்றை எனக்குக் காண்பிக்க உங்களால் முடியுமா? நாமகரணக் கூட்டங்களுக்கு வேத வசன ஆதாரங்கள் எதுவும் இருப்பதில்லை. தேவன் ஒருக்காலும் "நாமகரணக் கூட்டங்களின் பணிகளுக்குள்" செயல்படுவதில்லை. தேவன் முதலாவது சபையை ஏற்படுத்தியபோது, அவர் அதை சரியானதாகவே செய்தார். நாமகரணக்கூட்டங்கள் மனிதர்களிடம் இருந்து தோன்றியவை களாக உள்ளன. தேவன் தமது சபையைக் கொண்டு செயல்படுவதில் தோல்வியடைந்திருந்தார் என்றால், நாமகரணக் கூட்டங்களில் மனிதர்கள் எவ்வாறு வெற்றியடைய முடியும்? இது மிகவும் உயர்ந்த வகையிலான தப்பெண்ணமாக உள்ளது! நான் கிறிஸ்துவின் சபை தவிர வேறு எதிலும் அங்கம் வகிக்க விரும்புவதில்லை. நான் எந்த ஒரு நாமகரணக் கூட்டத்திலும் உறுப்பினராக இருக்க விரும்புவதில்லை. இரட்சிக்கப்பட்டவர்கள் இன்னமும் சபையில்தான் சேர்த்துக் கொள்ளப்படுகின்றார்கள் (அப். 2:41, 47). சத்தியத்தைப் போலவே, சரீரமும் (சபையும்) காலத்தையும், இடத்தையும் மற்றும் மக்களையும் கடந்து நிற்கிறது. இரட்சிக்கப்பட்டவர் களே சபையாக உள்ளனர். மக்கள் சபையை விட்டு வெளியேறும்போது, தாங்கள் தேவனை விட்டு வெளியேறுவதில்லை என்று நினைக்கின்றார்கள், ஆனால் அவர்கள் அதையே செய்கின்றார்கள். சபையைப் பற்றிய ஒரு தெளிவான கண்ணோக்கின்றி நீங்கள் இயேசுவைப் புரிந்துகொள்ள இயலாது. நம் எல்லாரையும் ஒரே ஆவியானவரே கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் செய்வித்திருப்பதால், நாம் யாவரும் ஒரே சரீரத்தினுள் இருக்கின்றோம். கிறிஸ்துவின் வாழ்வைச் செயல்படுத்துகின்ற சபையின் உறுப்பினராயிருக்கவே நான் விரும்புகின்றேன்.

1960களில் இருந்து மத உலகமானது, "நான் இயேசுவை நேசிக்கின் றேன், ஆனால் சபையை வெறுக்கின்றேன்" என்று பெருமையுடன் கூறிக் கொண்டுள்ளது. இது எப்படி நடக்க முடியும்? இது வேத வசனத்தின்படி யானது அல்ல - நீங்கள் கிறிஸ்துவை அவருடைய சபையில் இருந்து பிரிக்க இயலாது. இது கருத்துணர்வை ஏற்படுத்துவதில்லை. கணவர் என்ற வகையில் நான், எனது மனைவி புறக்கணிக்கப்பட்ட இடத்திற்குச் செல்ல மாட்டேன்! என்னை நீங்கள் இழிவு படுத்தக் கூடும் - ஆனால் என் மனைவியை அல்ல. என் மனைவியே என் மகிமையாக, என் சந்தோஷமாக இருக்கின்றாள்! தவறான கருத்துடைய தனிநபர்கள், "நான் விசுவாசிக் கின்றேன், ஆனால் நான் சபையைச் சார்ந்திருப்பதில்லை" என்று பெருமை யாக எடுத்துரைக்கின்றார்கள். நீங்கள் விசுவாசித்தும், சாராது இருக்க முடியாது. விசுவாசிகள் சார்ந்திருக்கின்றார்கள்! மக்கள் தாங்கள் விசுவாசி யாதபடியினால் சாராதிருக்கின்றார்கள். தேவன் இந்த உலகத்தாரால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டுமென்றால், முதலாவதாக அவர் சபையில் மகிமைப் படுத்தப்பட வேண்டும்.

திருமணத்தைப் போலவே, சபையும் ஒருக்காலும் ஒழியாது. ஒவ்வொரு நாளிலும் ஒவ்வொரு சமூகத்திலும் இன்னொரு "சபை" - உபதேசமோ, பெயரோ, வரலாறோ, பாரம்பரியமோ இல்லாமலேயே -

*எழும்புகிறது! எந்தத் தனிமனிதன் (அல்லது ஒரு குழுவினர்) தமது சொந்த சபையைத் தொடங்குபவராக இருக்கின்றார்? தேவன் தமது சபையை அன்றி ஏதொன்றையும் செய்யமாட்டார்.*

> தேவன் பூமியில் ஒரு மக்கள் கூட்டத்தைக் கொண்டுள்ளார்.
> அவர்களுக்கு அவர் ஒரே ஒரு புத்தகத்தைக் கொடுத்துள்ளார்.
> அவர்கள் ஒரே குடும்பமாக இருக்கும்படி அவர் கட்டளை யிடுகின்றார்.

## சபை தெய்வீகமானதாக உள்ளது

*"சபை தெய்வீகமானதாக உள்ளது": இந்தக் கூற்றானது "உங்கள் காதுகளுக்குள் மூழ்கியிருக்கட்டும்" (லூக். 9:44). சபை தெய்வீகமானதாக உள்ளது! சபை என்பது புதிய ஏற்பாட்டில் ஒரு பரிசுத்த நிறுவனமாக உள்ளது. தேவன் சபையை நேசிக்கின்றார். இயேசு சபையை நேசிக்கின்றார். நான் சபையை நேசிக்கின்றேன்! சபை என்பது தேவனைப் பற்றிய சத்தியமாக உள்ளது. சபையின் மூலமாக, தேவனுடைய அநந்த ஞான மானது வெளிப்படுத்தப்பட்டுள்ளது (எபே. 3:9-11). சபை என்பது உறுதியான அஸ்திபாரம் கொண்டதாக, இரத்தத்தினால் கிரயம் கொடுத்துக் கொள்ளப்பட்டதாக, பரிசுத்த ஆவியானரால் நிரம்பப் பெற்றதாக, நரகத்தினால் பாதிக்கப்படாததாக, பரலோகத்திற்குக் கட்டுப்பட்டதாக உள்ளது (மத். 16:13-19ஐக் காணவும்). தேவனுடைய மாபெரும் கொடையி[கிறிஸ்துவி]னால் சபை [இந்த உலகத்திற்கு] அளிக்கப்பட்டது (யோவா. 3:16; 2 கொரி. 9:15). உலகத்தின் மாபெரும் விலைக்கிரயம் (இயேசுவின் இரத்தம்; அப். 20:28; எபே. 5:25; 1 பேது. 1:18, 19) சபையை விலைக்கு வாங்கிற்று. இயேசுவே சபையாகிய சரீரத்தின் தலையாக உள்ளார் (கொலோ. 1:18). இயேசு மகிமையுள்ள சபையாக அதைத் தமக்கு முன் நிறுத்திக் கொள்வார் (எபே. 5:27). கணவருக்கும் அவரது மனைவிக்கும் இடையே நிலவுகின்ற அதே உறவுதான் கிறிஸ்துவுக்கும் அவரது சபைக்கு இடையே நிலவுகிறது (எபே. 5:31-33).*

நடபடிகளில் இருந்து வெளிப்படுத்தின விசேஷம் வரையிலும் வேதாகமமானது, சபையின் வாழ்வு மீதே தனது முழுக்கவனத்தையும் செலுத்துகிறது. சபையின்றி தேவன் ஏதொன்றையும் செய்ய மாட்டார். இயேசுவைப் பின்பற்றுதல் என்றால் அவரது சபைக்கு உரியவராயிருந்து, அதன் ஒழுங்குகளுக்கும் உட்படுதல் என்பதாகவே உள்ளது. ஆவியானவர் செய்கின்றவற்றை நாம் [சபை என்ற] சரீரத்தில் மட்டுமே காண இயலும். சபை தெய்வீகமானதாக உள்ளது. "கிறிஸ்து இல்லாத சபையும்" மற்றும் "சபையில்லாத கிறிஸ்துவும்" ஆகிய இரண்டுமே தவறானவைகளாக உள்ளன. சபை என்பது ஒரு நபராக (கிறிஸ்துவாக), ஒரு அறிவிப்பாக (சுவிசேஷமாக), மக்களாக (நாமாக) உள்ளது. சபை தெய்வீகமானது என்பதை அறிதலானது, நாம் சபையின்மீது ஆழமிகுந்த வகையில் அன்புகூரவும் அதையே செய்யும்படி நமது பிள்ளைகளுக்குப் போதிக்கவும் காரணமாக வேண்டும். சபை யாருக்குத் தேவை? எனக்குத் தேவை!

## கிறிஸ்தவம் என்பது இணை [வாழ்]வாக (சபையாக) உள்ளது

*கிறிஸ்தவம் என்பது வெளியிலிருந்து, அல்லது சபையின்றி வாழப்பட முடியாது. கிறிஸ்தவம் என்பதும் "சபைத்துவம்" என்பதும் வெவ்வேறான விஷயங்கள் அல்ல. கிறிஸ்தவம் என்பது தனிப்பட்டதாகவும், வெளிப்படையானதாகவும் உள்ளது. தேவனுடைய குடும்பமானது சபையில்லாதிருந்தால், பின்பு அது எதுவாக இருக்கிறது? ஒரு போர்வீரன் படையிலிருந்து பிரிந்து தனிப்பட்ட நிலையில் போர்வீரனாக இருக்க முடியாது. படையில் உள்ள வீரர்கள் தனித்தனி நபர்களாக அல்ல ஆனால் குழுக்களாகவே செயல்படுகின்றார்கள். ஆவிக்குரிய தன்மை என்பது இணை [வாழ்]வாக உள்ளது; கிறிஸ்தவம் என்பது இணை [வாழ்]வாக உள்ளது. இதை மதஉலகமானது அடிப்படையாக கண்டுகொள்ளாமல் உள்ளது அல்லது புறக்கணிக்கிறது. உங்களை சபைக்குக் கொண்டு வராத எதுவும் தேவனுடையதல்ல. இரட்சிக்கப்பட்டவர்கள் ஒரு சரீரத்திற்குள் அழைக்கப்பட்டார்கள். சபை என்பது ஒரு சரீரமாக, ஒரு குடும்பமாக, ஒரு சமூகமாக உள்ளது. நாம் தேவனுடைய மக்களாக இருக்கின்றோம். எவரொருவரும் கிறிஸ்தவ வாழ்வைத் தனியே வாழும்படி தேவன் ஒருக்காலும் நோக்கம் கொண்டதில்லை. வேத வசனங்கள் முழுவதிலும் தேவன் தமது மக்களை ஒன்றிணைந்த வகையிலேயே அழைத்துள்ளார். அவர் ஆபிரகாமின் குடும்பத்தையும், பின்பு இஸ்ரவேல் நாட்டையும், இப்பொழுது சபையையும் தேர்ந்தெடுத்தார். சுயநலத்திற்கு, சமுதாயம் என்பதே ஒரே பதிலாக உள்ளது. எவரொருவரும் கிறிஸ்துவின் சரீரத்தினுள் இழந்து போகப்படுவதில்லை. இணைவாழ்வின் பகுதியை நீங்கள் சரியாகப் பெறும்போது, தனிநபருக்குரிய பகுதி சரியானதாக உள்ளது. உறுதிப்பாடு மேம்படுத்தப்படுவதற்கு முன்னர் சமுதாயம் நிலவ வேண்டும். சரீரம் மாத்திரமே உறுப்பினர்களை முழுமைப்படுத்த முடியும். தனிப்பட்ட துதி என்பது வலிவார்ந்ததாக உள்ளது, ஆனால் அது விசுவாசம் நிறைந்த மக்களுக்குப் போதுமானதாக இருப்பது இல்லை. மிகவும் சுயசார்புடையவராக ஆவதினால் ஒரு நபர் உண்மையில் ஒருக்காலும் நிறைவடைவது இல்லை.*

*விளையாட்டு நிகழ்ச்சிகளில் கூட்டங்களும் உணர்வெழுச்சிகளும் இருக்கலாம், ஆனால் உண்மையான சமூகம் அங்கு நிலவுவதில்லை, நிலவ முடியாது. அந்தக் கூட்டங்களில் உள்ளவர்கள் ஒருவர் மற்றவரை அறிவதில்லை, ஒருவர் மற்றவரைக் குறித்து அக்கறை கொள்ளுவதில்லை. நாம் ஒரு கூட்டமாக இருக்கிறோம் ... நாம் சபையாக ஆவோமா? சமுதாயம் என்ற வகையில் சபையானது தனது சொந்தத்தில் ஒரு வாழ்வைக் கொண்டுள்ளது. நாம் யார் என்பதை, நாம் யாருக்குரியவர் என்பதை, நாம் ஏன் அவ்வாறு இருக்கிறோம் என்பதை நாம் அறிய வேண்டும். சபையில் [இருக்கிறபோது] மாத்திரமே கிறிஸ்தவர்கள் தேவனை மகிமைப்படுத்துகின்றார்கள். "சபையில் கிறிஸ்து இயேசுவின் மூலமாய்த் தலைமுறை தலைமுறைக்கும் சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென்" (எபே. 3:21).*

*நாம் "சரீரம்" என்ற கருத்தைப் பற்றிக்கொள்ள வேண்டும். தேவன்*

நம்மை அவரது மாளிகையின் கற்கள் என்றும், அவரது திராட்சத் தோட்டத்தின் வேலையாட்கள் என்றும், அவரது படையின் யுத்தவீரர்கள் என்றும் அழைக்கின்றார். ஆயினும், வேதவாக்கியங்களில் கிறிஸ்தவர்களை "சரீரம்" என்று அழைக்கின்ற உருவகமே மிகச் சிறந்ததாக உள்ளது (ரோமர் 12; 1 கொரி. 12; எபே. 4; 1 பேது. 3). சரீரம் என்பது மாபெரும் வியப்பிற் குரிய உயிர்ப்பொருளாக உள்ளது. இந்தப் பூமியில் அதைப் போன்றது வேறெதுவும் இல்லை. அதற்குப் பல்வேறு உறுப்புக்கள் இருந்தபோதிலும், அவை யாவும் சமமானவைகளாகவே இருக்கின்றன. தாழ்ந்த நிலையில் உள்ளவை என்று தவறாக எண்ணப்படும் உறுப்புக்கள் உயர்ந்தவைகளா யிருக்கலாம். உடலின் உறுப்புக்கள் உடலிலிருந்து துண்டிக்கப்பட்டால், அவைகளால் இயங்க முடிவதில்லை. அதுபோலவே, சபையானது ஒரு சரீரமாகச் செயல்படாத வேளையில் ஆழ்ந்த பிரச்சனைகள் எழுகின்றன. தனிநபர்களுக்காக அல்ல, ஆனால் சரீரத்திற்காகத் தனிப்பட்ட ஆவிக்குரிய வரங்கள் அளிக்கப்பட்டன. ஒரு உறுப்பினர் புண்படுகின்றபோது, சபை முழுவதுமே புண்படுகிறது. சபையானது ஒன்றுகூடி செயல்படும்போதுதான் அது செயல்படுவதாக உள்ளது.

எவரொருவரும் ஏதாவதொரு குழுவில் இணைகின்றபோது, அவர் அதன் இலக்குகளை ஏற்றுக் கொண்டு, அதன் சட்டதிட்டங்களுக்குக் கீழ்ப்படிகின்றார். சரீரத்தின் உறுப்பினர் என்ற வகையில் எவர் ஒருவரும், "நான் எனக்கு விருப்பமானதைச் செய்வேன் - அது பிறரைப் புண் படுத்துவதில்லை" என்று கூற முடியாது. சரீரத்தில் ஒரு உறுப்பு துன்புறுகின்ற போது, சரீரம் முழுவதும் துன்புறுகிறது. பவுல் தம் சகோதரருக்கு இடறலா யிருக்கும் என்றால், தாம் மாம்ச உணவைப் புசிப்பதைக் கூட நிறுத்தி விடுவதாக கூறினார் (1 கொரி. 8:13). சரீரத்தின் உரிமைகளும் தேவைகளும், தனிநபர்களின் உரிமைகளையும் தேவைகளையும் மேற்கொண்டு கீழ்ப்படுத்துகின்றன.

## சபையானது குறிப்பிட்ட பிராந்திய சபைக்கு உரியதாக உள்ளது

சபை என்பது சரீரமாக உள்ளது. சபை என்பது பிராந்திய சபைக்கு உரியதாகவும் உள்ளது. பிராந்திய சபை என்ற கருத்தில் பெரும்பான்மை யானோர் மிகச் சிறிய மதிப்பையே உணருகின்றார்கள். பெரும்பாலான இருதயங்களில் பிராந்திய சபை என்பது கடைசியான அற்பமான இடத்தில் உள்ளது. ஆம், "உலகளாவிய சபை" ஒன்றுள்ளது. தேவனுடைய "சபைப் பதிவேடு" - "ஆட்டுக்குட்டியானவரின் ஜீவ புஸ்தகம்" - பரலோகத்தில் உள்ளது. ஆயினும், நமது பூமிக்குரிய தொடர்பானது பிராந்திய சபையை சார்ந்ததாக உள்ளது. நீங்கள் "பிராந்திய சபை" யைப் புறக்கணித்து விட்டு, "உலகளாவிய சபையில்" அங்கம் வகிப்பதாக உரிமைகோர முடியாது. இன்றைய நாட்களில் மக்கள் உலகளாவியது பற்றி ஆர்வமான அல்லது நேர்மறையான உணர்வைக் கொண்டுள்ளார்கள்; அவர்கள் பிராந்திய சபையை சார்ந்த வகையிலோ சிறு பயன்பாட்டையே கொண்டிருக்கின்றார்

*கள். பிராந்திய சபையை சார்ந்தவர்கள் மாத்திரமே உலகளாவியதில் இருக்கிறார்கள். சபையானது பிராந்திய சபையை சார்ந்த வகையில்தான் நிலவுகிறது. பிராந்திய சபைக்குப் பயன்படாத எதுவும் தேவனுடையதாக இருப்பதில்லை! வெளி. 1:4, "ஆசியாவிலுள்ள ஏழு சபைகள்" பற்றிப் பேசுகிறது. எருசலேம் ஒரு பிராந்திய சபையாக இருந்தது. புதிய ஏற்பாட்டில் காணப்படும் சகோதரர்கள், வேறிடங்களுக்குச் சென்றடைந்தபோது, அங்கிருந்த பிராந்திய சபையை முதலாவதாகக் கண்டறிந்தார்கள்.*

*தேவனுடனான நமது அன்றாட நடை என்பது "பிராந்திய சபை நடையாக" உள்ளது. சகோதரர்கள் சபை வருகையைப் பற்றிக் கவலைப் படுகின்றார்கள், ஏனென்றால் பல இடங்களில் இது மிகவும் குறைவாக உள்ளது. விசுவாச நிறைவுடனான அன்றாட நடையைக் கொண்டுள்ள சகோதரர்கள் "சபை வருகை பிரச்சனைகளை" உடையவர்களாயிருப்பது இல்லை. ஞாயிற்றுக்கிழமை வருகிறபோது தேவன் எங்கே இருக்கின்றார்? சபையில் இருக்கின்றார்! தேவனுடன் நடக்கின்றவர்கள் ஞாயிற்றுக்கிழமை யன்று எங்கே இருக்கின்றார்கள்? சபையில் இருக்கின்றார்கள்! பிராந்திய சபையில் உறுப்பினர்த்துவம் என்பது உலகளாவிய சபையில் உறுப்பினர்த் துவத்தைக் காட்டிலும் அதிகமான தேர்ந்து கொள்ளுதலாக இருப்பதில்லை. எந்த ஒரு உறுப்பினரும் தமக்குதாமே வளருதலைக் காட்டிலும் பிராந்திய சபைக்கு வேறு ஒன்றும் அதிகமாகச் செய்துவிட முடியாது. சபையானது தனது உறுப்பினர்களைக் காட்டிலும் அதிகம் மேன்மையானதாக இருக்க இயலாது. ஒரு சபையானது "பெரிதாவதற்கு" அது "வளர" வேண்டும். பலவீனமான உறுப்பினர்களைக் கொண்டு "மாபெரும்" சபையை நீங்கள் பெற முடியாது. கர்த்தருடைய சரீரத்தில் ஒவ்வொருவரும் முக்கியமானவர் களாய் இருக்கின்றார்கள்! நமது அன்றாட நடை என்பது தேவனுடைய கிருபைகளில் நல்ல உக்கிராணக்காரர்களாய் இருப்பதாக உள்ளது; இது பிராந்திய சபையில் மாத்திரமே செய்யப்பட முடியும். சபையின் ஒருமைப் பாட்டைக் காட்டிலும் தமது கிறிஸ்தவ சுயாதீனத்தை அதிகமாக விரும்புகின்ற எந்த உறுப்பினரும், இயேசுவைக் காட்டிலும் தம்மைப் பற்றி அதிகமாய்ச் சிந்திக்கின்றார். சபையானது மற்றவர்களுக்கென்று இருக்கும் போதுதான் சபையாக உள்ளது. எவரொருவரும் தம்மீதும் இயேசுவின் மீதும் ஒரே வேளையில் கவனம் செலுத்த இயலாது. பெரிய மனிதர்கள் வெளிப்படையாகப் பெரியவர்களாய் இருக்கின்றார்கள், ஆயினும் தனிப்பட்ட வகையில் இன்னும் பெரியவர்களாய் இருக்கின்றார்கள். கிறிஸ்தவமானது பிராந்திய சபையிலேயே தொடங்கி முடிவதாக உள்ளது. பிராந்திய சபைக்கு ஆழ்ந்த உறுதிப்பாடு ஒன்றை மேற்கொள்ளுங்கள். கிறிஸ்து தமது சபையின்றி எதையும் செய்யமாட்டார். பிராந்திய சபைக்கு உறுதிப்பாட்டை மேற்கொண்டிராமல் எவரொருவரும் ஆவிக்குரிய பக்குவத்தில் ஒருக்காலும் வளரமாட்டார். எனக்கு நீங்கள் தேவை ... உங்களுக்கு நான் தேவை: அதுதான் சபையாக உள்ளது!*

# சீஷத்துவம்

சீஷர்களைத் தவிர வேறு எதைக் கொண்டும் நீங்கள் கிறிஸ்துவின் சபையைக் கட்டியெழுப்ப முடியாது. இயேசு தமது சீஷர்களின்றி நிறைவற்றவராக இருக்கின்றார். பிரதான கட்டளை, மக்களை சீஷர்களாக்க வேண்டும் என்று நமக்குக் கூறுகிறது (மத். 28:18-20). சபையானது அடிப் படையாக இரு விஷயங்களைச் செய்ய வேண்டியதற்காக இங்கு உள்ளது: (1) ஆத்துமாக்களை இரட்சித்தல், (2) பரிசுத்தவான்களாக்குதல். சபையானது அடிப்படையில் இவ்விரண்டு விஷயங்களையும் தவிர மற்ற எல்லாவற்றையும் செய்கிறது! "முதல் முதல் அந்தியோகியாவிலே சீஷர்களுக் குக் கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கிற்று" (அப். 11:26ஆ). தொடக்க கால சபையானது சீஷர்களை ஏற்படுத்திற்று; நவீன கால சபையானது முடிவு களை மாத்திரம் கேட்கிறது. தொடக்க கால சபையில் மக்கள் "சாதாரண மானவர்களாகவே'' இருந்தார்கள்; நவீன கால சபையில் மக்கள் "நுகர்வோர்களாக" இருக்கின்றார்கள். நாம் மரிக்கும்படி நம்மை இயேசு சிலுவையினிடத்திற்கு அழைத்தார். இன்றைய நாட்களில் மக்கள் நாம் பிரியப்படுகின்றவற்றைச் செய்யும்படிக்கு நம்மை அழைக்கின்றார்கள்.

> "ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத்தானே வெறுத்து, தன் சிலுவையை அநுதினமும் எடுத்துக் கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன். தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்துபோவான்; என்னிமித்தமாகத் தன் ஜீவனை இழந்து போகிறவன் அதை இரட்சித்துக் கொள்ளுவான்" (லூக். 9:23ஆ, 24).

உலகமானது, "சுய - மதிப்பை" போதிக்கிறது. கிறிஸ்து சுயமறுப்பைப் போதிக்கின்றார். கடமை, பற்றுறுதி, உறுதிப்பாடு, அர்ப்பணிப்பு மற்றும் தியாகம் ஆகியவையே சீஷர்களை ஏற்படுத்துகின்றன. உலகமானது, "இதில் எனக்குள்ளது என்ன?" என்று கேட்கிறது. தேவன் நம்மை அவருக்குள் அழைக்கின்றார். உலகத்தின் இரட்சிப்பு சமூகத்தின் மூலமாகப் பரவுகிறது. நாம் ஏதோ ஒரு ஊழியத்தைப் பெற்றிருப்பது இல்லை - நாம் ஊழியமாக உள்ளோம் (1 பேது. 4:10, 11). குழுவிளையாட்டுகளில் நாம் விளையாட்டு வீரர்களுக்கு ஒரே ஒரு விஷயத்தை மாத்திரம் தொடர்ந்து நினைவூட்டு கின்றோம்: "உங்கள் இடத்தை [இடத்தில்] விளையாடுங்கள்." ஒவ்வொரு பிராந்திய சபையிலும் ஒவ்வொரு உறுப்பினரும் தமது பணியை நிறைவேற்ற வேண்டியது அவசியமானதாக உள்ளது. இந்த சத்தியமானது, சுய நிறைவின் மீது கவனம் செலுத்துகின்றவர்களுக்குக் கடினமானதாக உள்ளது. சீஷர்கள் வாழ்வதற்கென்று மரிக்கின்றார்கள் (1 கொரி. 15:31). சபையின் ஒவ்வொரு உறுப்பினரும் ஆசாரியராகவும் ஊழியராகவும் இருக்கின்றார். கூட்டுத் தொகையானது எப்போதும், கூட்டப்படும் பகுதி எண்களைக் காட்டிலும் பெரியதாக உள்ளது. சபையின் உறுப்பினர்கள் சீஷர்களாகாத வரையிலும் சபையானது ஒருக்காலும் ஒன்றையும் செய்யாது. தொடக்க கால சபை உறுதிப்பாட்டைக் கொண்டிருந்தது; நவீன கால சபை குழுக்களைக் கொண்டுள்ளது.

*“எஞ்சியுள்ளவற்றைக்” கொண்டு நீங்கள் ஒரு சபையைக் கட்டியெழுப்ப இயலாது. தேவன் “கடைசியான மற்றும் முக்கியத்துவமற்ற” வராக குறைக்கப்பட முடியாது. “சரீரம்” என்ற கருத்தானது கணக்கு ஒப்புவித்தலை கட்டளையிடுகிறது. “கிறிஸ்துவின் சபை” யானது, “எனது சபையாக” வும் ஆக வேண்டும். சபையானது ஒருக்காலும், “வாரம் ஒருமுறை ஒரு மணி நேரம் ஆராதிக்கும் சமூகம்” என்ற அளவுக்குக் குறைக்கப்படக் கூடாது. வெளியில் உள்ள உலகமானது சபையை கூட்டங்கள் மற்றும் நிகழ்வுகளின் வரிசைத் தொடராகக் கண்ணோக்க விரும்புகிறது. தொடக்க கால சபையார், சபையைத் தங்கள் வாழ்வாகக் கண்ணோக்கினார்கள். ரிச்சர்டு நிய்பர் என்பவர், “கோபமற்ற ஒரு தேவன், மனிதர்களைப் பாவமற்ற நிலையில், சிலுவையற்ற கிறிஸ்துவின் ஊழியங்களின் மூலமாக நியாயத்தீர்ப்பற்ற ஒரு இராஜ்யத்தினுள் கொண்டுவந்தார்” என்று உரிமைகோரினார்.[1] இது இன்றைய நாளின் தவறான கொள்கையாக உள்ளது. வேதாகம ரீதியான சபையில், “நான் சார்ந்துள்ளேன்” என்பதும், “நான் அன்புகூர்ந்து, அன்புகூரப்பட்டவனாயிருக்கின்றேன்” என்பதும் உள்ளது. இன்றைய நாட்களின் சபையானது இன்னொரு சிகிச்சைக் குழுவாக அல்லது அரசியல் பேச்சுவார்த்தையாக மாறி உலகத்தை இரட்சிக்க முடியும் என்று நினைக்கும்படி சோதிக்கப்படுகிறது. சபையானது சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, அதன்படி வாழ்வதற்கென்று அழைக்கப்பட்டுள்ளது. ஒருவேளையில் ஒரு நாள் முழுவதிலும் ... விசுவாச நிறைவுடன் இருங்கள்.*

*நான் ஆசீர்வதிக்கப்பட்டு இருக்கின்றேன். நான் “சபையில் பேணி வளர்க்கப்பட்டு” சபையின் மீது அன்புகூரும்படி போதிக்கப்பட்டு இருக்கின்றேன். சபையானது என் வாழ்வு முழுவதிலும் “நிலையானதாக” இருந்துள்ளது. சபையில்லாமல் மக்கள் என்ன செய்கின்றார்கள்?*

## *வாருங்கள், என்னுடன் நடவுங்கள்.*

*“ஆனாலும், நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய் என்று உன் பேரில் எனக்குக் குறை உண்டு. ஆகையால், நீ இன்ன நிலையிலிருந்து விழுந்தாயென்பதை நினைத்து, மனந்திரும்பி, ஆதியில் செய்த கிரியைகளைச் செய்வாயாக ...” (வெளி. 2:4, 5).*

---

*குறிப்பு*

[1]H. Richard Niebuhr, *The Kingdom of God in America* (New York: Harper & Row, 1959), 193.

*6*

# தேவனுடன் எனது அன்றாட நடை

## இருதயம்

*அன்றாட நடை என்பது அன்றாட கேள்வி ஒன்றைக் கொண்டுள்ளது: "என் இருதயம் தேவனுக்கு முன்பாகச் சரியாக உள்ளதா?" பிரச்சனையின் மையப்பகுதி இருதயமாகவே உள்ளது. நமக்கு முன்பாகவும், நமக்குப் பின்பாகவும் உள்ளவைகள், நமக்குள் உள்ள விஷயங்களுடன் ஒப்பிடப் படுகையில் மிகவும் சிறியவைகளாக உள்ளன. "இருதயம் பற்றிய செயல்" என்பது ஒரு கடினமான செயலாக உள்ளது. "எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக் கொள், அதினிடத்தினின்று ஜீவ ஊற்று புறப்படும்" (நீதி. 4:23). கிறிஸ்தவம் என்பது ஒரு இருதயத்தின் மதமாக உள்ளது. ஆயினும், யூதத்துவம் மற்றும் கிறிஸ்தவம் ஆகிய இரு மதங்களிலும் இருதயம் என்பதே அடிப்படைக் கூறாக உள்ளது (உபா. 6:5; மத். 22:36-38 ஆகியவற்றைக் காணவும்). இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள் (மத். 5:8). மனிதர்கள் தங்கள் இருதயம் நன்றாயிருக்கும் போதுதான் நல்லவர்களாக இருக்கின்றார்கள் (லூக். 6:45). சவுல் அல்ல, தாவீதுதான் தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற மனிதனாக இருந்தார் (1 சாமு. 13:14; அப். 13:22). "கற்பனையின் பொருள் என்னவெனில், சுத்தமான இருதயத்திலும் நல்மனச்சாட்சியிலும் மாயமற்ற விசுவாசத்திலும் பிறக்கும் அன்பே" (1 தீமோ. 1:5). பாவிகளுக்குப் புதிய இருதயம் - மாற்றப்பட்ட இருதயம் (2 கொரி. 5:17; எரே. 31:33; எசே. 11:19; 36:26) தேவைப்படுகிறது.*

*மனிதன் வெளித்தோற்றத்தின்படி நியாயத்தீர்ப்பு செய்கின்றான்; தேவனோ இருதயத்தைப் பார்க்கின்றார் (1 சாமு. 16:6, 7). இருதயம் என்பது நபரை அடையாளப்படுத்துகிறது. இருதயம் என்பது வேத வசனங்களில் ஒருக்காலும் விலங்குகளுக்குக் குறிப்பிடப்படாத உறுப்பாக உள்ளது. நாம் நமது இருதயங்களைக் காத்துக் கொள்ள வேண்டும்: "எல்லாவற்றைப் பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகாகேடுள்ளதுமாயிருக்கிறது; அதை அறியத்தக்கவன் யார்?" (எரே. 17:9); "தேவனே, என்னை ஆராய்ந்து, என் இருதயத்தை அறிந்துகொள்ளும்; என்னைச் சோதித்து, என் சிந்தனைகளை அறிந்துகொள்ளும்" (சங். 139:23). சாத்தான், சுவிசேஷத்தை இருதயங்களில் இருந்து பறித்தெடுத்துக் கொள்ளுகின்றான் (மத். 13:19ல் "விதைப்பவன் உவமை" யைக் காணவும்). தேவ சமாதானம் நம் இருதயங்களில்*

*ஆள்கிறது என்றார் பவுல் (கொலோ. 3:15). தேவனுடைய இருதயத்தை உடைக்கிற விஷயங்களினால் நமது இருதயங்கள் உடைக்கப்பட வேண்டும். "பரிசுத்தமாய்ப் பற்றியெரியும் இருதய" த்திற்கான அன்றாட பகுதியொன்று கிறிஸ்தவர்களுக்கு அவசியமாகிறது (லூக். 24:32ஐக் காணவும்).*

*இன்றைய நாட்களில் "இருதயம்" என்பது "உள்" ளானதாக உள்ளது. "இருதயம்" என்பதே மிகவும் முக்கியமான விஷயம் என்பதை எல்லாரும் ஒப்புக்கொள்ளுகின்றார்கள், ஆயினும் இதன் மீது மிகவும் கொஞ்சமாகவே, ஆழ்ந்தறிவுள்ள ஆராய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இருபதாம் நூற்றாண்டில் இருதயத்தைப் பற்றி எழுதப்பட்ட "மிகச் சிறந்த" புத்தகம் என்று எதுவுமே இல்லை! நாம் இதைப் பற்றிப் பேசுகின்றோம், ஆனால் இதை நாம் தீவிரமாகத் தொடர்வதில்லை. நாம் உணர்வுப்பூர்வமான "அனுபவங்களை" விரும்புகின்றோம், ஆனால் நாம் "இருதயத்தில் குத்துண்டவர்களாகும்" (அப். 2:36-38) அனுபவத்தை அல்லது மனந்திரும்பி இருத்தலை விரும்புவதில்லை. நாம் "இருதயத்தைப் பற்றி" படிப்பதும், அதன்படி வாழ்வதும் மிகவும் அவசரமானதாக உள்ளது. நமக்கு* orthodoxy *பழமை முறைகளில் நம்பிக்கையும் (சரியான உபதேசமும்),* orthoproxy *பழமையான வாழ்வும் (சரியான வாழ்வும்) அவசியமாகின்றன. வேத வசனங்களும் உணர்வறிவும் இல்லாமல், நாம் இருதயத்தை, மாயாவாதம், மூடநம்பிக்கைகள் மற்றும் விக்கிரகாராதனை ஆகியவற்றிற்குக் குறைத்துவிடுகின்றோம்.*

*ஆகையால், நாம் இருதயத்தைப் பற்றிப் படிக்கக் கடவோம்! வேத வசனங்களில் இருதயத்தைப் பற்றிக் குறைந்தது 822 முறைகள் குறிப்பிடப்பட்டுள்ளதாக நான் வாசித்திருக்கின்றேன். இந்த எண்ணிக்கையானது மாபெரும் முக்கியத்துவத்தை நமக்கு அறிவிக்கிறது. இந்த வேத வசனங்கள் இருதயத்தின் மூன்று பிரதான பணிகளை வெளிப்படுத்துகின்றன: (1) சிந்தனை, (2) விருப்பம், (3) உணர்வு. நமது கலாச்சாரம் மற்றும் தெளிவற்ற எண்ணங்கள் ஆகியவற்றிற்கு நேரெதிரான வகையில், உணர்வு என்பது இருதயத்தின் ஆதிக்கம் வாய்ந்த பணியாக இருப்பதில்லை. பயன்பாடுகள் சிலவற்றைக் கவனியுங்கள்: (1) சிந்தை, 204 முறைகள்; (2) விருப்பம், 195 முறைகள்; (3) உணர்வு, 166 முறைகள்.*

*எபிரெய மொழியில் மனம் என்பதற்கு வார்த்தை இல்லை. இருதயம் சிந்திக்கிறது, அறிவைப் பயன்படுத்துகிறது, மற்றும் விசுவாசிக்கிறது. "அவன் இருதயத்தின் நினைவு எப்படியோ, அப்படியே அவன் இருக்கிறான்" (நீதி. 23:7அ). ஞானமுள்ள இருதயத்தைக் கொண்டிருத்தல் என்பது நமது அன்றாட நடையின் இலக்குகளில் ஒன்றாக உள்ளது (சங். 90:12). பிரமாணமானது நமது இருதயங்களில் எழுதப்பட்டு உள்ளது (எரே. 31:33). பண்பைப் புரிந்துகொள்ளுதல் என்பது இருதயத்தின் ஆதிக்கம் வாய்ந்த பணியாக உள்ளது. சாலொமோன் மிகவும் அதிகமான மனைவிகளை நேசித்தார்; அவர்கள் அவரது இருதயத்தைத் திருப்பக் காரணமானார்கள் (1 இரா. 11:1-4). சாலொமோன் தேவனுக்கான தமது இருதயத்தை இழந்தபோது, அவர் தம் இருதயத்தைப் பிற தெய்வங்களிடத்தில் திருப்பினார். இது வெறும் காம இச்சையாக மாத்திரம் இருந்ததில்லை; சாலொமோன்*

*தமது ஒழுக்கரீதியான ஞானத்தை இழந்தார். இந்த பூமியில் இருந்தவர் களிலேயே ஞானமிக்க மனிதர் தமது ஞானத்தை இழந்தார்! இளைஞரா யிருந்த ஒரு அரசர் என்ற வகையில் சாலொமோன் தேவனிடத்தில் ஞானமுள்ள இருதயத்திற்காகக் கேட்டார் (1 இரா. 3:5-10). பின்னாட்களில் சாலொமோன் இந்த ஞானத்தை இழந்து போனார்.*

*உண்மை (சத்தியம்) உள்ளது, பின்பு விசுவாசம் உள்ளது, பின்பு உணர்வுகள் உள்ளன. உணர்வு என்பது ஒருக்காலும் உண்மையையோ அல்லது விசுவாசத்தையோ தீர்மானிக்கக் கூடாது. ஆயினும், புரிந்து கொள்ளுதல் என்பது தர்க்கவியலின் முக்கூற்று உண்மைக்கான முடிவாக இருப்பதில்லை. நீங்கள் அறிவை அடைவதனால் இருதயங்களை மாற்ற இயலாது. நாம் நம் தலைகளை அல்ல ஆனால் நமது இருதயங்களைக் காத்துக் கொள்ள வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விகளுக்குச் சரியான பதில்கள் கொடுத்தல் என்பதைக்காட்டிலும் எண்ணப்போக்குகள் அதிகம் முக்கியத்துவம் வாய்ந்தவைகளாக உள்ளன. நாம் நமது இருதயங் களை நேராக்கும்போதுதான், நமது தலைகள் நேராகின்றன. "என் இருதயம் தேவனுடன் நேராக உள்ளதா?'' என்று உங்களை நீங்களே கேட்டுக் கொள்ளுங்கள்.*

*ஏழையாக உள்ள நான் அவருக்கு என்ன கொடுக்க இயலும்?*
*மேய்ப்பனாக நானிருந்தால், ஆட்டுக் குட்டியொன்றைத் தருவேன்.*
*ஞானியாக நானிருந்தால், நான் என் பங்கை நிறைவேற்றுவேன், -*
*ஆனால் நான் அவருக்கு என்ன கொடுக்க இயலும்? என் இருதயத்தை*
*கொடுக்க இயலும்.*[1]

# செயல்முறை

## பிலிப்பியர் 4:4–13

> *“யார் கர்த்தருடைய பர்வதத்தில் ஏறுவான்? யார் அவருடைய பரிசுத்த ஸ்தலத்தில் நிலைத்திருப்பான்? கைகளில் சுத்தமுள்ளவனும் இருதயத்தில் மாசில்லாதவனுமாயிருந்து, தன் ஆத்துமாவை மாயைக்கு ஒப்புக்கொடாமலும், கபடாய் ஆணையிடாமலும் இருக்கிறவனே” (சங். 24:3, 4).*

நாம் யாவருமே உறுதியாய் நிலைத்திருக்கும் விசுவாசத்தை, எல்லையற்ற நம்பிக்கையை, இறந்து போகாத அன்பை விரும்புகின்றோம். நாம் தேவனுடன், வளமிக்க, சீரான ஜெபத்தினால் நிரம்பிய உறவுக்காகப் பசித்தவர்களாய் இருக்கின்றோம். நம்மில் பெரும்பான்மையானோர், “தீர்ந்துபோய்க்கொண்டு இருக்கின்றோம்.” *அன்றாடம்!* வாழ்வானது அன்றாடம் என்றென்றைக்குமுள்ளது. அன்றாடம் என்பது எளியதாக உள்ளது ... அன்றாடம் என்பது சிரமமானதாக உள்ளது! நம்மைப் பெரும் பாலும் தொந்தரவுபடுத்துவது எது? “கண்ணாடியில் தெரியும் மனிதர்.” *அன்றாடம்!* நாம் நமது ஆவிக்குரிய தன்மையை திடீரென்று ஏற்படும் ஒரு பேரழிவினால் இழந்துபோவதில்லை; நாம் இதை அன்றாடம் சிறிது சிறிதாக இழக்கின்றோம். உடல் நலம் என்பது விலை உயர்ந்த, உயர் நுட்பம் கொண்ட மாத்திரைகளினால் வருவதில்லை; உடல் நலம் என்பது சரியாக உண்ணுதல், சரியாக உறங்குதல், சரியாக உடற்பயிற்சி செய்தல் இவற்றை அன்றாடம் செய்தல் என்பதால் வருகிறது! ஆவிக்குரிய தன்மை என்பது அன்றாட வாழ்வில், பணிகளுக்கு இடையில் மேம்படுத்தப்படுகிறது. ஒழுங்குமுறை என்பது தேவனுடைய இயல்பாகவே உள்ளது. ஒழுங்கு முறை என்பது அன்றாடமானதாக உள்ளது. உணவுப் பழக்கத்தில் கட்டுப்பாடு என்பது தோல்வியில் முடிவதில்லை; உணவுக் கட்டுப்பாட்டை மேற்கொள்வதில் நாம் தவறி விடுகின்றோம். வாழ்க்கைத் துணை, பெற்றோர்கள் அல்லது பணியாளர்கள் என்ற வகையில் நாம் தவறுவதில்லை; நபர்கள் என்ற வகையில் நாம் தவறி விடுகின்றோம். குறுக்கு வழிகள், மேலான கவன ஈர்ப்புச் செயல்கள், மந்திர தந்திர வேலைகள் என்று எதுவும் இல்லை. வளர்ச்சி என்பது அன்றாடமானதாக உள்ளது. பொய்யான ஆவிக்குரிய தன்மை என்பது வளர்ச்சியின் இறையியலைக் கொண்டிருப்பதில்லை. நாம் தப்பித்துக் கொள்ளுவதில் பெரியவர்களாய் இருக்கின்றோம்; நாம் சகித்துக் கொள்ளுவதில் குறைபடுகின்றோம். நீடிய பொறுமை என்பது அன்றாடமானதாக உள்ளது. வாழ்வு என்பது “தேவதைக் கதை” அல்ல; நாம், “அதன் பின்பு எப்பொழுதும் மகிழ்ச்சியுடன் வாழ்ந்தார்கள்” என்ற நிலையைக் கொண்டிருப்பது இல்லை. பின்வரும்

*"முதலாவது" களைக் கவனியுங்கள்:*

> *தேவனுக்கு உங்கள் இருதயத்தில் முதலிடத்தைக் கொடுங்கள்.*
> *தேவனுக்கு ஒவ்வொரு முடிவிலும் முதல் கவனத்தைக் கொடுங்கள்.*
> *தேவனுக்கு நாளின் முதல் மணியை (நேரத்தை)க் கொடுங்கள்.*
> *தேவனுக்கு வாரத்தின் முதல் நாளைக் கொடுங்கள்.*
> *தேவனுக்கு உங்கள் ஊதியத்தின் முதல் பங்கைக் கொடுங்கள்.*

*நாம் அதிகம் சீரான வாழ்வை, அதிகம் கீழ்ப்படிதலுள்ள வாழ்வை, அதிகம் கனிதரும் வாழ்வை, அன்றாடம் வாழும்படி இயேசு நம்மை அழைக்கின்றார்! நாம் பரிசுத்த சிந்தனையை, பரிசுத்த எண்ணப்போக்குகளை, பரிசுத்த பழக்கங்களை மேம்படுத்திக் கொள்ள வேண்டும். இது வேதாகமப் படிப்பு, ஜெபம், உபவாசம், தனித்திருத்தல், எளிமை, நன்றியுணர்வு, கொண்டாடுதல், அறிக்கையிடுதல் ஆகியவற்றைச் செய்வதினால் ... அன்றாடம் வருகிறது. தேவன் இல்லையென்றால் நமது வாழ்வு எந்த அர்த்தத்தையும் ஏற்படுத்துவதில்லை என்பது போல் நாம் வாழ வேண்டும்! நமக்காக எவரொருவரும் நடக்க இயலாது. நமக்காக நாம்தான் நடக்க வேண்டும். தேவனுடனான நமது தனிப்பட்ட உறவுமுறைகளை நாம்தான் மேம்படுத்திக் கொள்ள வேண்டும்.*

## வேதாகமம்

*அன்றாட வேதாகமப் படிப்பு என்பது கட்டளை போன்றதாக உள்ளது. தேவன் தேவனாக இருந்தால் (அவர் அவ்வாறே இருக்கின்றார்), மனிதன் மனிதனாக இருந்தால் (அவனும் அவ்வாறே இருக்கின்றான்), தேவன் பேசும் போது மனிதன் கவனித்துக் கேட்டாக வேண்டும். நமக்கு யூகங்கள் அல்ல ஆனால் வெளிப்படுத்துதல்களே தேவைப்படுகின்றன. நாம் தேவனிடத்தில் பேசுவதைக்காட்டிலும், தேவன் நம்முடன் பேசுதல் என்பது மிகவும் முக்கியமானதாக உள்ளது. வேதாகமம் ஏவுதல் பெற்றதாக (தேவன் சுவாசித்ததாக), திட்டவட்டமானதாக, அதிகாரத்துவமான தேவ வார்த்தையாக உள்ளது. "என்று எழுதியிருக்கிறது"; "கர்த்தர் கூறுகிறார்"; "கர்த்தரிடத்திலிருந்து வார்த்தை ஏதும் உள்ளதா?" தேவன் என்ன நினைக்கின்றார், தேவன் என்ன கூறுகின்றார் என்பதே முக்கியமானதாக உள்ளது. "வேதாகமம் தேவனுடைய வசனமாக உள்ளதா?" என்ற கேள்விக்கு நாம் பதில் அளித்தாக வேண்டும். இது வேதாகமம் தேவனுடைய வசனமாக இல்லையென்றால், இந்தப் பூமியில் வெளிப்படுத்துதல், அதிகாரத்துவம், நித்தியமான தராதரம் ஆகியவை இல்லை என்றாகின்றது. விஷயம் இப்படியிருந்தால், நவீன கால தேவநம்பிக்கையற்றவர்கள் முற்றான உண்மை என்று எதுவும் இல்லை என்பதாகக் கூறுவதில் அவர்கள் சரியானவர்களாகவே இருப்பார்கள். உலகமானது, அர்த்தம், மதிப்பு, அடைவிடம் எதுவுமற்றதாகி விடும். நித்தியமான மதிப்பு அல்லது விளைவு கொண்டது எதுவும் இல்லை என்றாகி விடும். வேதாகமம் தேவனுடைய வார்த்தையாக இருந்தால், அது பயபக்திக்குரிய ஆசீர்வாதத்தையும் பயபக்திக்குரிய பொறுப்பையும்*

முன்னிறுத்துகிறது. நாம் ஒரு வேதாகமத்தை நமது கைகளில் பிடித்திருக்கையில், நமது கரங்களும் இருதயமும் நடுங்க வேண்டும் (ஏசா. 66:1, 2). வேதாகமம் வேதாகமமாக இருந்தால், நாம் தேவனை அவருடைய வசனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். வேதாகமம் தான் நமது அன்றாட நடைக்கான மிகமேன்மை வாய்ந்த கடைசி அதிகாரத்துவமாக உள்ளது. நாம் வசனத்தின் எஜமானர்களாக அல்ல ஆனால் வசனத்தின் ஊழியர்களாக இருக்க வேண்டும். நாம் "வேதாகமத்தை நேசிப்பவர்களாக" இருக்க வேண்டும். வேதாகமம் என்பது - நாம் ஏற்றுக் கொண்டாலும் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் - தேவனுடைய வசனமாக உள்ளது!

நாம் ஏன் அன்றாட வேதாகமப் படிப்பைப் புறக்கணிக்கின்றோம்? ஒருவேளை இதுவே நாம் கிறிஸ்தவ வாழ்வை வாழ முயற்சிப்பதில் நமது மாபெரும் தோல்வியாக இருக்கலாம். வேதாகமம், "மிகச்சிறப்பாக விற்பனையாகின்ற, ஒருக்காலும் வாசிக்கப்படாத புத்தகம்" என்று அழைக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவில் பத்தில் ஒன்பது குடும்பங்களில் வேதாகமம் உள்ளது, இருப்பினும் அமெரிக்கா "வேதாகம ரீதியாகப் படிப்பறிவற்ற" நாடாக உள்ளது. நாம் உணர்வுப்பூர்வமான காரணங்களுக்காக வேதாகமத்தை வைத்துக் கொண்டு, அது நமது வாழ்வில் செயல் தாக்கத்தை ஏற்படுத்துவதைத் தடை செய்து கொண்டு இருக்கின்றோம். வேதாகமம் ஒன்றுதான் சபையானது இந்த உலகிற்கு அளிக்கக்கூடிய காணப்படுகின்ற பொருளாக உள்ளது (2 தீமோ. 3:16). வேதாகம ரீதியான அறியாமையைப் பற்றி ஆமோஸ் "தேசத்தில் உண்டாகும் பஞ்சம்" என்று கூறினார் (ஆமோஸ் 8:11). "அறிவில்லாமையால்" தேவனுடைய மக்கள் சங்காரமானார்கள் (ஓசியா 4:6). ஆவிக்குரிய தன்மை என்பது "உள்ளானதாக" இருக்கையில், ஆழ்ந்தறிவுள்ள வேதாகமப் படிப்பானது "வெளியேறினதாக" உள்ளது. நாம் ஆவிக்குரிய வகையில் பண்படாத உணவால் போஷிக்கப்பட்டுக் கொண்டு இருக்கின்றோம். தேவனுக்கு முன்பாக வசன ரீதியில் இல்லாதவர்களாய் இருப்பதைக் காட்டிலும் மனிதர்களுக்கு முன்பாக "அரசியல் ரீதியாகச் சரியற்றவர்களாய்" இருப்பது பற்றிப் பலர் பயப்படுகின்றார்கள். மிகவும் அடிக்கடி நாம் மேலோட்டமான மதத்தைக் கொண்டவர்களாய் இருக்கின்றோம். நம்பிக்கையைக் காட்டிலும் புதுமையில் ஆர்வமுள்ள இறையியலானது திருப்தியடைவதற்குத் தகுதியற்றதாக உள்ளது. நமது கண்களில் தேவபயம் இல்லை. கிறிஸ்தவர்கள் "ஒரு புத்தகத்தின்" மக்களாக உள்ளனர். நாம் வசனத்தினால் பிறந்தவர்களாய் இருக்கின்றோம்; நாம் வசனத்தினால் வளருகின்றோம். தேவனைப் பற்றிய வேதாகம ரீதியான அறிவு இன்றி ஆவிக்குரிய ஆழம் மேம்படுத்தப்பட முடியாது. அன்றாட நடை என்பது "வசனத்தை மையமாகக் கொண்ட" நடையாக உள்ளது.

கிறிஸ்துவுக்குள் இளம் பிராயத்தில் உள்ளவர்களுக்கு பால் தேவைப்படுகிறது (எபி. 5:12-14; 1 கொரி. 3:1-3; 1 பேது. 2:1-3). ஆத்துமாவிற்குத் தேவனால் நியமிக்கப்பட்ட உணவை மட்டுமே வேதாகமம் தருகிறது. வேதாகமம், நமது அறிவைக் கூட்டுவதற்கல்ல, ஆனால் நமது வாழ்வை மாற்றி மேம்படுத்துவதற்காகவே அருளப்பட்டது. வேதாகமத்தை

வானிலை முன்னறிவிப்பு போன்று பயன்படுத்தாதீர்கள்! நாம் தனிப்பட்ட வளர்ச்சியைப் பாராட்டுகின்றோம், இருப்பினும் உண்மையான வளர்ச்சி என்பது வேதனை மிகுந்ததாக, விலையேறப் பெற்றதாக இருப்பதினால் நாம் அதைச் சாதிக்கத் தவறி விடுகிறோம். எனது அன்றாட நடையில் உள்ள வெறுமைத்தன்மைக்காக நான் வெட்கப்படுகின்றேன். நான் வேதாகமத்தைத் திறக்கும்போது, அதைப்பற்றி நான் எவ்வளவு கொஞ்சமாக அறிந்துள்ளேன் என்ற விஷயம் என்னைப் பயமுறுத்துகிறது! புத்தகம் மட்டுமே நமக்கு ஆவிக்குரிய நலத்தையும் பக்குவத்தையும் தர முடியும். நான் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளேன். தொட்டிலில் இருந்தே வேதாகமம் என் வாழ்வின் புத்தகமாக இருந்துள்ளது.

நாம் வளருகையில், பாலில் இருந்து பலமான ஆகாரத்திற்குக் கடந்து செல்ல வேண்டும். பால் என்பது சிறுபிள்ளைகளுக்கு ஒரு அருமையான உணவாக உள்ளது, ஆனால் இது மனிதர்களை நிலைநிறுத்துவதில்லை. நாம் "பாலைக் குடிப்பவர்கள்" என்ற நிலையில் இருந்து "பலமான ஆகாரத்தை உட்கொள்ளத் தக்கவர்கள்'' என்ற நிலைக்கு வளருகின்றோம். நாம் "எழுத்திலிருந்து" "ஆவிக்குக்" கடந்து செல்கிறோம். நாம் நன்மையையும் தீமையையும் பகுத்து உணரக் கற்றுக் கொள்கின்றோம். ஒரு மனிதர் கொண்டுள்ள வேதாகம அறிவுதான் அவரது வாழ்வு முறை என்றாகின்றது. வேதாகமமானது வாழ்வதற்கும் மரிப்பதற்குமான புத்தகமாக உள்ளது. அன்றாடமும் அதை உண்பதற்கு, ஆத்துமாவைப் போஷிப்பதற்கு நேரம் எடுத்துக் கொள்ளுங்கள்.

வேதாகமத்தை விசாலமாக வாசியுங்கள், அதை ஆழமாகவும் படித்து உணருங்கள். ஒருவர் ஏற்புடையவராக இருப்பதற்கு, நித்தியமான விஷயங்களைப் போதிக்க வேண்டும். வேதாகமத்தைப் போலவே மக்கள் எல்லாப் புத்தகங்களையும் கையாளுவார்கள் என்றால், அவர்கள் ஒருக் காலும் ஒன்றையும் அறிய மாட்டார்கள். வேதாகமத்துடன் *தொடங்குங்கள்* ... வேதாகமத்தில் *நிலைத்திருங்கள்* ... வேதாகமத்துடன் *ஒட்டியிருங்கள்.* ஒவ்வொரு மதத்தின் அதிகாரமுடைமை, அதன் அஸ்திபாரம், அதன் வரலாறு ஆகியவை பற்றிய அடிப்படையான கேள்விகளே அந்த மதங்களைச் சோதனை செய்யக் கூடியவைகளாக உள்ளன.

> ''கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினாலே உன்னை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனாக்கத்தக்க பரிசுத்த வேத எழுத்துக்களை, நீ சிறுவயது முதல் அறிந்தவனென்று ... வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினாலே அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது" (2 தீமோ. 3:15-17).

வேதாகமம் நமக்கு, (1) இரட்சிக்கப்படுதல் எவ்வாறு, (2) வளருதல் எவ்வாறு, (3) பயன்படுகிறவர்களாய் இருத்தல் எவ்வாறு என்று

*போதிக்கிறதாகப் பவுல் கூறினார். வேதாகமம் செயல்முறைக்கு உரியதாக இருக்கிறது. அன்றாடம் இருபத்தி ஐந்து அதிகாரங்களை வாசித்தல் என்பது எனது செயல்முறையாக உள்ளது. இது, நான் ஒரு ஆண்டில் பழைய ஏற்பாட்டை மூன்று முறையும் புதிய ஏற்பாட்டை ஐந்தில் இருந்து ஆறு முறையும் வாசிக்கும்படி என்னை அனுமதிக்கிறது. "சகல வித நற்கிரியை களுமாகிய கனிகளைத் தந்து, தேவனை அறிகிற அறிவில் விருத்தியடைந்து, கர்த்தருக்குப் பிரியமுண்டாக அவருக்குப் பாத்திரராய் நடந்து கொள்ளுங்கள்" (கொலோ. 1:10).*

## ஜெபம்

*ஜெபம் பற்றிய என் முந்திய படிப்பில் எனது தொடக்கக் கூற்றானது, "நான் ஜெபத்தில் நம்பிக்கை கொள்வதில்லை ... நான் தேவனில் நம்பிக்கை கொண்டுள்ளேன்; ஆகையால் நான் ஜெபிக்கின்றேன்" என்று கூறுகிறது. இது, மந்திர வேலை, மூடநம்பிக்கை, மற்றும் திறமையாகக் கையாளுதல்/ ஆவிகளை வழிபடுதல் ஆகியவற்றை நீக்கிப்போடுகிறது. அன்றாட வேதாகம வாசிப்பும் ஜெபமும் கிறிஸ்தவ வளர்ச்சிக்கு அதிகாரக் கட்டளை போன்று உள்ளன. இவைகள் நம்முடைய பிரதான பிரச்சனைகளைத் தீர்க்கின்றன. ஜெபம் சரியானதாக இருக்கும்போது, எல்லாம் சரியானதாக உள்ளன. ஜெபம் உதவியற்ற தன்மையின் வெளிப்பாடாக உள்ளது. ஜெபம் என்பது சர்வ வல்ல தேவனை நோக்கி மனிதனின் உணர்வுமிக்க கதறுதலாக உள்ளது. சபை வளர்ச்சிக்கென்று நமக்குப் "புதிய கருத்துக்கள்" எதுவும் தேவையில்லை; நமக்கு தேவனும் அவரது சித்தமும் மாத்திரமே தேவை. ஜெபமற்ற தன்மை என்பது நமது மாபெரும் பாவமாக உள்ளது. மற்ற ஒவ்வொன்றையும் போலவே, நாம் ஜெபிப்பதினாலேயே ஜெபிக்கக் கற்றுக் கொள்ளுகின்றோம். ஜெபம் என்பது உணர்வாற்றல்மிக்க கவிதையாக இருப்பதில்லை. ஜெபம் என்பது ஒருக்காலும் எவரொருவரையும் வசீகரிப்பதற்காகப் பயன்படுத்தப்படக் கூடாது. உங்களால் இயன்ற அளவு துரிதமாக முழந்தாளில் இருந்து ஜெபியுங்கள்.*

*எனது புத்தகத்தை எழுதுவதில், நான் பயபக்திக்குரிய மூன்று உண்மை களைக் கற்றேன்:*

*நான் தேவனுடன் பேச முடியும்.*
*நான் உங்களைப் பற்றித் தேவனிடம் பேச முடியும்.*
*நான் உங்களுக்காகச் செய்யக் கூடிய மாபெரும் விஷயம் என்பது உங்களுக்காக ஜெபித்தல் என்பதே.*

*தேவன் எனது வாழ்வில் செயல்படுகின்றார்! இப்படிப்பட்ட அறிவானது எனக்கு ஆச்சரியம் மிகுந்ததாக உள்ளது. நாம் ஏன் இன்னும் அதிகமாய் ஜெபிப்பதில்லை?*

*மதரீதியான இரு விஷயங்கள் "உள்ளான" வைகளாய் இருக்கின்றன: (1) தூதர்கள் (2) ஜெபம். இவற்றின் ஈர்ப்புத்தன்மையானது வசீகரமும்,*

ஆர்வத்தூண்டுதலும் மூடநம்பிக்கையும் உடையதாயிருத்தல் என்பது துரதிர்ஷ்டவசமானதாக உள்ளது. சபையானது ஜெபித்தல் என்பதைத் தவிர மற்ற யாவற்றையும் முற்றாகச் செய்யும். ஆம், நாம் மேம்படுத்தப்பட்ட ஒரு ''ஜெப நாளைக்'' கொண்டிருப்போம், ஆனால் புதன்கிழமை இரவு ஆராதனை இனியும் "ஜெபக்கூட்ட இரவாக" இருப்பதில்லை. நமது "பெரிய ஞாயிற்றுக்கிழமைகள்" ஜெபத்தின் மீது ஆஸ்திபாரம் இடப்பட்டிருப்பது இல்லை. சபையில் இயேசு ஒரு கூட்டத்தைக் கூடப் பெற இயலாமல் போகும்போது, அது பரிதாபகரமானதாக உள்ளது! உங்கள் ஜெப வாழ்வில் நீங்கள் வளர்ந்துக் கொண்டு இருக்கின்றீர்களா? உங்கள் ஜெபம் உங்கள் வாழ்வை மாற்றுகிறதா? நீங்கள் எப்போதாவது இரவு முழுவதும் ஜெபித்துள்ளீர்களா? தேவன் இன்றிருப்பதைக் காட்டிலும் நாளைக்கு மாறிவிடப்போவதில்லை. அவர் நம்மீது கொண்டுள்ள அன்பு மாறாததாக நிலைத்துள்ளது. தேவன் ஒவ்வொரு கிறிஸ்தவரின் ஜெபத்தையும் கேட்டு பதில் அளிக்கின்றார். பதில் அளிக்கப்படாத ஜெபம் என்பது இங்கு பிரச்சனையாக இருப்பதில்லை; ஜெபிக்கப்படாத ஜெபம் என்பதே இங்கு பிரச்சனையாக உள்ளது. "நீங்கள் விண்ணப்பம் பண்ணாமலிருக்கிறதி னாலே உங்களுக்குச் சித்திக்கிறதில்லை" (யாக். 4:2ஆ). தேவன் நாம் பெற்றுக் கொள்வதற்கும் எவ்வளவோ அதிகமாகக் கொடுப்பதற்குச் சித்தமாக இருக்கின்றார்.

## தியானம்

நமது உலகம் கும்பல்கள், இரைச்சல் மற்றும் அவசரம் ஆகியவற்றில் ஆர்வம் கொண்டுள்ளது. நாம் "சுறுசுறுப்பாயிருத்தல்" என்பதில் அதிகமாக ஈடுபாடு கொண்டுள்ளோம். ஆழ்ந்தறிவுள்ள ஆவிக்குரிய தன்மை என்பது "ஓடுகிற ஓட்டத்தில்" உண்டாக்கப்பட முடியாது என்பது நிச்சயம். தியானம் என்பது - சபையிலும் கூட - புறக்கணிக்கப்பட்டுள்ளது. இப்போது தியானம் என்பது - வியாபாரத்திலும் கூட - திரும்பவும் வந்துள்ளது. அந்த நிர்வாகி களும் மேம்பாட்டை ஊக்குவித்தலில் தியானத்தை ஒரு புதிய யுக்தியாக ஆக்கும் வகை தவிர்த்து, மற்றபடி அது நம்மைப் புன்முறுவல் பூக்க வைக்க வேண்டும். உடலுக்கு உடற்பயிற்சி எவ்வாறுள்ளதோ அதுபோலவே மனதிற்கு தியானமும் உள்ளது. ஆயினும் இவ்வகையான தியானம் என்பது - ஆத்துமாவின் பண்பாயிராமல் - மனதிற்கும் உடலுக்கும் ஓய்வளித்தலாக உள்ளது. இது கிழக்கு நாடுகளின் மாயாவாதத்தில் இருந்து களவு செய்யப்பட்டுள்ளது.

கிழக்கு நாடுகளின் தியானம் என்பது மனதை வெறுமையாக்கச் செய்யும் முயற்சியாக இருக்க, கிறிஸ்தவ தியானம் என்பது மனதை நிரப்புவதற்காகவே வெறுமையாக்குதலாக உள்ளது. கிழக்கு நாடுகளின் மாயாவாதம் என்பது உலகிலிருந்து விலகுதலை மேம்படுத்துகிறதாயிருக்க, கிறிஸ்தவ விசுவாசமானது உலகில் ஈடுபாட்டை மேம்படுத்துகிறது. தியானம் என்பது வாழ்வில் உறுதியாக வேர் கொண்டிராத வரையிலும், அது பயனற்றதாகவும்/ தகுதியற்றதாகவும் உண்மையற்றதாகவும் உள்ளது. தியானம் என்ற

சொல்லும், ஆழ்ந்த சிந்தனை [அசைபோடுதல்] என்ற சொல்லும் ஒரு பொருட்பல சொற்களாக உள்ளன. கிராமத்தைச் சேர்ந்த ஒருவருக்கு, இது "பசு ஒன்று தனது இரையை அசைபோடுதல்" என்ற வகையில் விளக்கம் தருவதாயிருக்கலாம். ஆராய்ச்சியானது உண்மைகளைச் சேகரிக்கிறது, தியானமானது அவற்றை "அசை போடுகிறது." இதைக் குறித்துப் பொருள் விளங்காத் தன்மை எதுவும் இருப்பதில்லை. தியானம் என்பது வழிமுறையாக உள்ளது, இதுவே முடிவு அல்ல. தியானம் தன்னில் நடுநிலையானதாக உள்ளது. குறிக்கோளிலும் பொருளடக்கத்திலும் பயன் வருகிறது. தாவீது தேவனுடைய பிரமாணத்தின்மீது தியானமாயிருந்தார் (சங். 1:2; 119:97). தியானம் என்பது தேவன் மீதும் அவரது வசனத்தின் மீதும் இருக்க வேண்டும்.

அடிக்கடி வேதாகமப் படிப்பைப் போலவே தியானம் என்பதும் இருப்பதில்லை. இயேசு ஒரு கிழக்கு நாட்டு மாயாவாதியல்ல. அவரது தியானத்தைப் பற்றி எதுவும் கூறப்படுவதில்லை. பேதுரு, யாக்கோபு, யோவான் போன்றவர்கள் இதைப்பற்றிக் குறிப்பாகப் போதித்தது இல்லை. பவுல், "இவைகளையே சிந்தித்துக் கொண்டு, இவைகளில் நிலைத்திரு" (1 தீமோ. 4:15) என்றும், "கடைசியாக சகோதரரே, உண்மையுள்ளவை களெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவை களோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள்" (பிலி. 4:8) என்றும் கூறினார்.

தேவனுடைய பிரசன்னத்தில் ஓய்ந்திருங்கள். அமைதியாயிருங்கள். ஆராயுங்கள், சிந்தியுங்கள். ஆழமாக தோண்டிப் பாருங்கள். முயற்சி செய்கின்றவர்களுக்கு தேவன் தமது சித்தத்தை வெளிப்படுத்துவார் (யோவா. 7:17). நீங்கள் தியானிப்பதினாலேயே தியானிக்கக் கற்றுக் கொள்ளுகின்றீர்கள். கர்த்தருக்கு பயப்படுதல் என்பது ஒரு உணர்வு எழுச்சியான தருணமாயிருப்பதில்லை, ஆனால் அது வாழ்நாள் முழுவதிலும் பரந்து காணப்படக் கூடிய கற்றறிந்த ஒரு நடத்தையாக உள்ளது.

## வாருங்கள், என்னுடன் நடவுங்கள்.

*ஆனபடியினாலே நாங்கள் சோர்ந்துபோகிறதில்லை; எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும், உள்ளான மனுஷனானது நாளுக்குநாள் புதிதாக்கப்படுகிறது. மேலும் காணப்படுகிறவை களையல்ல, காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு, ... ஏனெனில், காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப் படாதவைகளோ நித்தியமானவைகள் (2 கொரி. 4:16-18).*

---

குறிப்பு

[1]Christina G. Rossetti, "My Gift," in *Masterpieces of Religious Verse,* ed. James Dalton Morrison (New York: Harper & Brothers Publishers, 1948), 154.

*7*

# தேவனுடன் எனது அன்றாட நடை

## கீழ்ப்படிதல்

*கீழ்ப்படிதல் என்பது தேவனுக்காக ஒருவர் மேற்கொள்ளுகின்ற மாபெரும் சுயாதீன முடிவாக உள்ளது. அன்றாட நடை என்பது கீழ்ப்படிதலின் நடையாக உள்ளது. இயேசு நம்மை, அதிகம் சீரான, அதிகம் கீழ்ப்படிதலான, அதிகம் கனி நிறைந்த வாழ்வுக்கென்று அழைக்கின்றார். தேவன் உணர்வுக் கிளர்ச்சியை விரும்புவதில்லை; அவர் கீழ்ப்படிதலை விரும்புகின்றார். ஆவிக்குரிய தன்மை என்பது தேவனுக்குக் கீழ்ப்படிதல் என்பதாகவே உள்ளது.*

*நமது பள்ளிகளில் நடக்கும் வன்முறைகளைக் கேள்விப்பட்டு நாம் அதிர்ச்சியடைகின்றோம். அதிகமான காவலர்கள், உலோக ஆய்வுக் கருவிகள், அல்லது துப்பாக்கி பற்றிய சட்டங்கள் என்பவை இதற்கு பதிலாக இருப்பதில்லை. மாறாக, கீழ்ப்படிதல் என்பதே பதிலாக உள்ளது. ஒருவர் [பிறரை] வழிநடத்திச் செல்ல விரும்பினால் அவர் கீழ்ப்படியக் கற்றுக் கொள்ள வேண்டும். ஒருவர் வழிநடத்திச் செல்ல தகுதி பெற்றிருக்க வேண்டுமென்றால், அவர் பின்பற்றக் கற்றுக் கொள்ள வேண்டும். நாம் கீழ்ப்படியக் கற்றுக் கொள்ள வேண்டும். நமது பிள்ளைகள் கீழ்ப்படியும்படி அவர்களுக்கு நாம் போதிக்க வேண்டும் (எபே. 6:1; 1 பேது. 1:14). கீழ்ப்படிதல் இல்லையேல் வன்முறையும் கூக்குரலும் மட்டுமே இருக்க முடியும். சமீபத்தில் ஒரு நவீனவியலாளர், America's Problem Is Corrective Discipline என்ற தமது புதிய புத்தகத்தை விற்பனை செய்வதற்காக, டெக்ஸாசின் டல்லாஸ் நகருக்கு வந்தார். ஒழுங்கு நடவடிக்கை என்பதே பிரச்சனையாக உள்ளது என்று அவர் நம்புகின்றார்! பிள்ளைகள் திருத்தப் படுதல் இன்றி வளர்க்கப்பட வேண்டும் என்று இவர் அறிவிக்கின்றார்! நாம் நமது "உரிமையாளரின் கை நூலுக்கு" (வேதாகமத்திற்கு)த் திரும்ப வேண்டும். "பிள்ளையின் நெஞ்சில் மதியீனம் ஒட்டியிருக்கும்; அதைத் தண்டனையின் பிரம்பு அவனை விட்டு அகற்றும்" (நீதி. 22:15); "பிரம்பைக் கையாடாதவன் தன் மகனைப் பகைக்கிறான்; அவன்மேல் அன்பாயிருக் கிறவனோ அவனை ஏற்கனவே தண்டிக்கிறான்" (நீதி. 13:24). இந்த வேத வசனத்தின் அடிப்படையில் அமைந்த பின்வரும் பழங்கூற்றின் மீது நான் வளர்ந்தேன்: "அடி உதவுவது போல் அண்ணன் தம்பி உதவ மாட்டார்கள்!" ஒழுங்கு நடவடிக்கை எடுத்தல் என்பது அன்பற்றது அல்ல; அது*

அன்பார்ந்ததாக உள்ளது.

இயேசுவைப் பொறுத்தமட்டில் "கேள்விப்படுதல்" மற்றும் "கீழ்ப் படிதல்" ஆகிய இரண்டுமே ஒரே வார்த்தையாகவே இருந்தன. நீங்கள் கீழ்ப்படியாத வரைக்கும், உண்மையில் நீங்கள் கேள்விப்படுகிறதில்லை. "பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப் பார்க்கிலும் செவிகொடுத்தலும் [கவனித்தலும்] உத்தமம்" (1 சாமு. 15:22ஆ). "கீழ்ப்படிதல்" என்பதற்கு உரிய கிரேக்க வார்த்தையானது, "கீழாக இருந்து கேட்டல்" என்று அர்த்தப்படுகிறது. "கீழ்ப்படிதல்" என்பதற்கான ஆங்கில வார்த்தையான "obedience" என்பது, "கவனித்தல்" என்ற அர்த்தம் தருகிற இலத்தீன் மூலவார்த்தையில் இருந்து வருகிறது என்று எனக்குக் கூறப் பட்டுள்ளது. வாழ்வின் மாபெரும் போதனைகளில் சிலவற்றை போதிக்க இயலாது, இருப்பினும் அவைகளை - இரக்கம், பொறுமை மற்றும் மன திருப்தி போன்றவற்றை - கற்றுக் கொள்ள முடியும். எபிரெயர் 5:7-9 வசனப் பகுதியானது, இயேசு பாடுபட்டதில் கீழ்ப்படிதலைக் "கற்றுக் கொண்டார்" என்று கூறுகிறது. சிலுவையானது பலியைக் காட்டிலும் அதிகமானது என்று இவ்வசனப் பகுதி போதிக்கிறது; அது கீழ்ப்படிதலாக இருந்தது (பிலி. 2:8ஐயும் காணவும்).

வேதாகம ரீதியான கீழ்ப்படிதல் என்பது மூன்று கூறுகளை உள்ளடக்குகிறது:

(1) ஒப்புவித்தல். இயேசு தமது பன்னிரெண்டு வயதில், நாசரேத்தூரில் சேர்ந்து தமது பெற்றோர்களுக்குக் கீழ்ப்படிந்திருந்தார் (லூக். 2:51). தேவனிடத்தில் ஒருவர், சரியான எண்ணப்போக்கைக் கொண்டிருக்கும் போது, அவருக்குக் கீழ்ப்படிவதில் பிரச்சனை எதையும் அவர் கொண்டிருப்பதில்லை.

(2) நம்பிக்கை. மாபெரும் பாடல் ஒன்று, "நம்புங்கள், கீழ்ப்படியுங்கள்" என்று கூறுகிறது. தேவன் நம்பப்படத்தக்கவராக இருக்கின்றார். வேதாகம ரீதியான விசுவாசமும் கீழ்ப்படிதலும் ஒரே விஷயமாகவே உள்ளன. அவிசுவாசமும் கீழ்ப்படியாமையும் ஒரே விஷயமாக உள்ளன (எபி. 3:12-4:11). நாம் மனிதருக்குக் கீழ்ப்படிவதைக் காட்டிலும் தேவனுக்குக் கீழ்ப்படிய வேண்டும் (அப். 5:29). செய்யும்படி தேவன் கூறுகின்றவற்றைச் செய்யுங்கள் ... தேவன் அதைச் செய்யும்படி கூறும் நோக்கத்திற்காகவே அதைச் செய்யுங்கள் ... தேவன் அதைச் செய்யும்படி கூறினார் என்பதற் காகவே அதைச் செய்யுங்கள்.

(3) முழுமையான கீழ்ப்படிதல். பகுதியான கீழ்ப்படிதல் என்பது கீழ்ப்படியாமையாக உள்ளது. (அரசராயிருந்த சவுல் அமலேக்கியர்களை அழித்தபோது அவரது பகுதியான கீழ்ப்படிதல் பற்றிய விவரங்களைக் காணவும்; 1 சாமு. 15:7-26.) ஒரு கருத்து என்பது தேவனுடைய கருத்தாக இருக்கும்போது மட்டுமே அது நல்ல கருத்தாக உள்ளது. பிரமாணத்தின் எழுத்துக்குக் கீழ்ப்படியாமல் நீங்கள் பிரமாணத்தின் ஆவியைக் காத்துக் கொள்ள இயலாது. தேர்ந்துகொள்ளப்பட்ட கீழ்ப்படிதல் என்பது கீழ்ப்படியாமையாக உள்ளது.

## ஒழுங்கும் கடமையும்

*ஒழுங்கு என்பது தேவனுடைய இயல்பாகவே உள்ளது. அன்றாட நடை என்பது விரைவோட்டமாக இராமல், மாரத்தான் ஓட்டம் போன்றதாக உள்ளது. நாம் இயேசுவுடன் நேரத்தைச் செலவிடுகின்றோம் என்பது மற்றவர்களுக்கு உறுதியாகத் தெரிகின்றதா? நமது இறையியலானது நமது வாழ்க்கை வரலாறாக வேண்டும். நமது அன்றாட நடை என்பது தொடர்ந்த, தனிப்பட்ட அன்றாட உயர்வாக இருப்பதில்லை! நாம் பணியாற்ற மனமற்ற சில விஷயங்களுக்காக ஜெபிப்பதில் நாம் எவ்வளவு தைரியமானவர்களாக இருக்கின்றோம்! படைப்பாக்கத் திறனும் திறமையும், ஒழுங்கு இல்லையேல் தோல்வி அடைகின்றது. நீடிய பொறுமையின் இடத்தை வேறு எதுவும் எடுத்துக் கொள்ள இயலாது. ஒழுங்கு என்பது ஒருபோதும் சுலபமானதாக இருக்காது. இயேசு தமது வாழ்வை வாழ்வதினால் ஆதிக்கப்படுத்தப்படவில்லை, ஆனால் அவர் தமது வாழ்வைக் கொடுப்பதினால் ஆதிக்கப்படுத்தப்பட்டார்.*

*ஒப்புக்கொடுத்தல், கீழ்ப்படிதல், ஒழுங்கு மற்றும் கடமை என்ற முக்கிய கொள்கைகள் நமது சமூகத்தில் இப்பொழுது கைவிடப்பட்டுள்ளன. லூக்கா 17:7-10ல், கடமையைப் பற்றி இயேசு ஒரு சிறிய உவமையைப் போதித்தார். அவர் நமக்கு அதிர்ச்சியூட்டுவதை ஒருக்காலும் நிறுத்தாதிருந்தார். அவர், எஜமானர் (கர்த்தர்) சிந்தனையற்றவராக இருந்தார் என்று கூறினார். இது ''கடமை'' பற்றிப் போதிக்கிற கடுமையான உவமையாக உள்ளது. இராணுவம், விளையாட்டு, குடும்பம், ஒருவரின் தொழில் - ஆம், வாழ்விலேயே கூட - கடமை என்பதே தொடக்கக் கருத்தாக உள்ளது. ஆவிக்குரிய தன்மை என்பது இன்னும் தூரம் செல்ல வேண்டும், இருப் பினும் அது கடமை என்பதில்தான் தொடங்குகிறது. கடமை என்பதற்கு அதிக கடமையே பலனாக உள்ளது. ஒரு "தொழில் முறையாளர்" என்பவர், தாம் மிக மோசமாக உணருகின்ற வேளையில் தம்மால் இயன்ற அளவு மிகச் சிறப்பாகப் பணி செய்கின்றவராக உள்ளார். கடமை என்பது ஒருக்காலும் முடிவதில்லை.*

> *"நான் உறங்கியபோது வாழ்க்கை அழகானது (ஞுளழிற்மிதீ) என்று கனவு கண்டேன்,*
> *விழித்தெழுந்தபோதோ வாழ்க்கை என்பது கடமையே (ற்மிதீ) என்று கண்டேன்."*

# அன்பு

## 1 கொரிந்தியர் 13

*“கற்பனையின் பொருள் என்னவெனில், சுத்தமான இருதயத்திலும் நல்மனச்சாட்சியிலும் மாயமற்ற விசுவாசத்திலும் பிறக்கும் அன்பே” (1 தீமோ. 1:5).*

*“கற்பனையின் பொருள் என்னவெனில் ... அன்பே” (1 தீமோ. 1:5). அன்பு என்பது வாழ்விலும் கிறிஸ்தவத்திலும் நிறைவான நன்மையாக உள்ளது. “இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது; இவைகளில் அன்பே பெரியது” (1 கொரி. 13:13); “... இன்னும் அதிக மேன்மையான வழியையும் உங்களுக்குக் காண்பிக்கிறேன்” (1 கொரி. 12:31). அன்பு என்பது மிக மேன்மையான வழியாக உள்ளது. அன்பு என்பது கிறிஸ்தவத்துடன் எப்போதும் இணைவு கொண்டுள்ளது. அன்பு என்பதை நீங்கள் ஒருக்காலும், புத்தமதம், இந்துமதம், இஸ்லாம் அல்லது புதிய யுகமதம் என்பவைகளுடன் குழப்பிக்கொள்வதில்லை. தேவன் அன்பாகவே இருக்கிறார் (1 யோவா. 4:8, 16). “வேதாகமத்தின் பொன் வசனம்” (தங்க வாக்கியம்) என்று அடிக்கடி அழைக்கப்படுகின்ற யோவான் 3:16 வசனம், “தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்” என கூறுகின்றது. தேவனே விசுவாசத்தின் குறிக்கோளாக இருக்கின்றார்; தேவனே நம்பிக்கையின் ஆதாரமூலமாக இருக்கின்றார்; ஆனால் தேவன் அன்பாக இருக்கின்றார். யாரோ ஒருவர், “அன்பு என்பது சகல கிருபைகளின் அரசியாக உள்ளது: தேவனே இதன் ஆதாரமூலமாக இருக்கின்றார். இயேசுவே இதன் தர அளவையாக இருக்கின்றார். கல்வாரியே இதன் அளவாக இருக்கிறது. விசுவாசமே இதன் ஊழியமாக இருக்கிறது. கீழ்ப்படிதலே இதன் சோதனையாக இருக்கிறது” என்று கூறியுள்ளார். அன்பு நம்மை உயர்தர அளவைக்கு - தேவனுடைய மேன்மைத்துவத்திற்கு அழைக்கிறது. தேவன் முதலில் நம்மீது அன்புகூர்ந்த படியால் நாம் அன்புகூருகின்றோம் (1 யோவா. 4:10, 11, 19). அன்புகூருதல் என்றால், தேவனை அறிதல் என்றாகிறது. அன்பில்லாதவன் தேவனை அறியான் (1 யோவா. 4:7, 8). நாம் பிறரை நடத்துகின்ற விதமானது, தேவன் நம்மை எவ்வாறு நடத்துவதாக நாம் உணர்ந்தறிகின்றோமோ, அதிலிருந்தே வருவதாக உள்ளது. மனிதர்கள் என்ன செய்ய வேண்டும் என்று அவர்களுக்குக் கூறுவதற்கு முன்னதாக, தேவன் என்ன செய்தார் என்பதை மனிதர்களுக்குக் கூறுங்கள்.*

## அன்பு என்பது செயல்முறையாக உள்ளது

தேவனுடனான நமது அன்றாட நடையானது அன்பின் நடையாக உள்ளது. கல்வாரிக்கு முன்னதாகப் பேதுரு, இயேசுவை மூன்று முறை மறுதலித்தார். இதற்காக அவர் [மனங்கசந்து] அழுதார் (லூக். 22:62). இதை இயேசு எவ்வாறு கையாண்டார்? அவர் எப்படி பேதுருவைத் திரும்பக் கொண்டு வந்தார்? யோவான் 21ஐப் படியுங்கள். இயேசு பேதுருவிடம், "நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா?" என்ற ஒரே கேள்வியை மூன்றுமுறை கேட்டார். இது பேதுருவின் மனதை நொறுக்கிற்று! இயேசு பேதுருவை கண்டனம் செய்யவில்லை, பயமுறுத்தவில்லை, அல்லது தண்டிக்கவில்லை. அவர் பேதுருவிடம் ஞாயிற்றுக்கிழமையன்று சபைக்குச் சென்று பணம் கொடுக்கும்படி கூறவில்லை. இது மிகவும் சுலபமானதாக இருந்திருக்கும்! "நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா?" ஓ! இது வாழ்வின் பிரச்சனையாக உள்ளது: நாம் உண்மையிலேயே இயேசுவை நேசிக்கின்றோமா? அவரது கேள்வியானது பேதுருவை ஒரு கடினமான சூழ்நிலையில் வைத்தது; அது நம்மையும் அதே அளவில் பாதிக்கிறது. நாம் அன்பில் வளர்ந்துகொண்டு இருக்கின்றோமா? இயேசு, "நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன். நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர் களென்று எல்லாரும் அறிந்துகொள்ளுவார்கள்" (யோவா. 13:34, 35) என்று கூறினார். அன்பு என்பது "சீஷத்துவத்தின் அடையாள அட்டையாக" இருக்க வேண்டும் என்று இயேசு அறிவித்தார். அன்பு என்பது புதிதானதாக இருப்பதில்லை. இயேசு அன்புகூர்ந்தது போல அன்புகூருதல் என்பதே புதிதானதாக இருக்கிறது. கார்ல் பார்த் அவர்கள் இறையியலைப் பற்றி எழுதிய யாவற்றையும் ஒரு சில வார்த்தைகளில் தொகுத்துரைக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டார். அவர், "இயேசு என்னை அன்புகூருகின்றார். இதை நான் அறிந்திருக்கின்றேன், ஏனெனில் வேதாகமம் எனக்கு அவ்வாறே கூறியுள்ளது"[1] என்று தொகுத்துரைத்தார். அன்பைப் பற்றிப் பவுல், 1 கொரிந்தியர் 13:4-8ல் விவரித்தார். அவரது வார்த்தைகள் இயேசுவைப் பற்றியும் அதே அளவில் விவரிக்கின்றன. அவைகள் நம்மையும் கூட விவரிக்க வேண்டும்.

இயேசு அன்புகூர்ந்ததைப் போல, திருமணத் துணைவர்களும் [கணவரும் மனைவியும்] அன்புகூரவேண்டும் என்று பவுல் கூறினார் (எபே. 5:25-33). "அன்பில் ஏற்படும் தோல்விகள்" இல்லத்தில் நமது தோல்விகளாக உள்ளன. நாம் சகோதரர்களை அன்புகூர வேண்டும் (ரோமர் 12:9, 10; 1 தெச. 4:9; எபி. 13:1; 1 பேது. 1:22; 2:17; 1 யோவா. 4:7; 3:11; 4:11; 2 யோவா. 5). நாம் நமது அயலார் மீது அன்புகூர வேண்டும் (மத். 22:34-40; ரோமர் 13:8-10). காணக்கூடிய நமது சகோதரர்களை நாம் அன்பு கூராதிருந்து, காணப்படாத நமது தேவனை அன்புகூருவதாக நாம் எவ்வாறு உரிமைகோர முடியும் (1 யோவா. 4:19-21)? தேவனுடனான நமது அன்பு உறவுமுறை என்பது நமது அன்றாட நடையில் மிகவும் இடர்ப்பாடு உள்ள

கொள்கையாக இருக்கிறது. வெறுப்புணர்வு என்பது வெற்றி கொள்ளுகிற போது வசப்படுத்துகிற வல்லமையைக் காட்டிலும் அதிகமான வல்லமையை, அன்பு தோல்வியடையும்போது வசப்படுத்துகிறது.

கிறிஸ்துவின் அன்பு நம்மை நெருக்கி ஏவுகிறது (2 கொரி. 5:14). கிறிஸ்துவின் சிலுவை நம்மை ஊக்குவிக்க முடியாது போனால், வேறு எது செய்ய முடியும்? தேவனுடைய அன்பு பரிசுத்த ஆவியானவரால் வெகு தொலைவிற்கு சிந்தப்பட்டுள்ளது (ரோமர் 5:5-8). கிறிஸ்தவமானது சாராம்சத்தில் அன்பின் மூலமாய் செயல்படுகிற விசுவாசமாக உள்ளது (கலா. 5:6). திராட்சச் செடி மற்றும் அதன் கிளைகள் பற்றிய உவமையில் இயேசு, "என்னில் நிலைத்திருங்கள்"; "என் வார்த்தைகள் உங்களில் நிலைத்திருக்கக் கடவது"; "என் அன்பில் நிலைத்திருங்கள்" என்று கூறினார் (யோவா. 15:1-13). அன்பு நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறது (ரோமர் 13:10). அன்பிற்கான அமில சோதனை என்பது கீழ்ப்படிதல் என்பதாக மட்டுமே உள்ளது. இயேசு, "நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந் தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்" (யோவா. 14:15; வச. 23ஐக் காணவும்) என்று கூறினார். கிறிஸ்தவ வாழ்வு என்பது ஒருக்காலும் சுலபமானதாக இருப்பதில்லை மற்றும் அது எப்போதுமே மகிழ்ச்சியான தாகவும் இருப்பதில்லை, ஆனால் அது அன்பில் வாழப்படுகிறது.

வரலாற்றில் அவரது போதனைகள் கண்டு கொள்ளப்படாதிருந்த எந்த வேளையிலும் இயேசு இவ்வளவு அதிகமாகக் குறிப்பிடப்பட்டு இருந்தது இல்லை. இயேசுவை விசுவாசித்தல் என்பது இயேசு விசுவாசித்தவற்றையும் அவர் போதித்தவற்றையும் விசுவாசித்தல் என்பதாக உள்ளது. கிறிஸ்துவின் அன்பு கிறிஸ்துவின் சிலுவையில் கண்டறியப்படுகிறது. வேதாகம ரீதியான அன்பு என்பது "உரம் வாய்ந்த அன்பாக" உள்ளது. ஒழுங்குபடுத்துதல் என்பது தேவனுடைய இயல்பாக உள்ளது. நமது அன்பார்ந்த தேவன் கொடுக்கின்றார் மற்றும் தியாகம் செய்கின்றார். எஞ்சியுள்ள விஷயம் அன்பு என்பதாகவே உள்ளது. "ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன். தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்துபோவான்; என்னிமித்தமாகத் தன் ஜீவனை இழந்து போகிறவன் அதைக் கண்டடைவான்" (மத். 16:24, 25).

அன்பு ஒருக்காலும் ஒழியாது (1 கொரி. 13:8)! என்ன ஒரு எடுத்துரைப்பு! அன்பு தவறுவது இல்லை; நாம் தான் அன்பில் தவறுகின்றோம். "தேவன் அன்பாகவே இருக்கிறார்; அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான், தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார்" (1 யோவா. 4:16ஆ).

## அன்பு என்றால் என்ன?

உலகம் அன்பின்மீது பித்தம் கொண்டுள்ளது. அன்பு-அன்பு-அன்பு! ஒரு பாடல், "இப்போது உலகிற்குத் தேவையானது அன்பே, இனிய அன்பே" என்று கூறுகிறது. அன்பு என்பதே எல்லாவற்றிற்கும் பதிலாக உள்ளது. இதை

*நீங்கள் இரவும் பகலும் கேட்கின்றீர்கள். அன்பு எங்கே உள்ளது? உலகம் ஒரு யுத்தத்தில் உள்ளது; வன்முறை அதிகரித்து வருகிறது; உலகம் அபாய மானதாக உள்ளது! திருமண முறிவு கட்டுக்கு அடங்காது செல்லுகிறது. கடவுள் நம்பிக்கையில்லாதவர்களின் மத்தியில் உள்ளதை விட சபையில் திருமண முறிவு அதிகமானதாக உள்ளதாக ஒரு வாக்கெடுப்பு கூறிற்று! குழந்தைகளைத் தவறாகப் பயன்படுத்துதல் ... போதைப்பொருட்கள் ... குற்றம் ... துப்பாக்கிச் சூடுகள் ... அன்பு, இது ஒவ்வொரு இடத்திலும் இருந்திருந்தால், இதை அமைதிப்படுத்தியிருக்கும்! ஒழுக்கவீனம், ஆபாச இலக்கியம், மற்றும் ஒழுக்கச் சீரழிவு ஆகியவை ஏராளமாயிருக்கின்றன. மதிப்பிற்குரிய ஏணியில், பிரசங்கியார்கள் அரசியல்வாதிகளைக் காட்டிலும் ஒருபடி மட்டுமே மேலானவர்களாக இருக்கின்றார்கள்! அன்பே இதற் கெல்லாம் பதிலாக உள்ளது, ஆனால் அன்பு என்பது செயல்படுத்தப்படாத தாக உள்ளது.*

*அன்பு என்பது என்ன? "உண்மையான அன்பு என்பது என்ன?" என்று எனக்குக் கூறுங்கள்! எனக்கு ஒரு பதில் தேவைப்படுகிறது என்று நாம் கேட்க வேண்டியுள்ளபோது, பிரச்சனை இன்னும் தெளிவாகிறது. நினைத்துப் பாருங்கள். வார்த்தைகளில் உரையுங்கள். சுருக்கமாய்க் கூறுங்கள். அன்பு என்பது என்ன என்று எனக்குக் கூறுங்கள்! நீங்கள் ஒருக்காலும் அதைப் பற்றிச் சிந்தித்தது இல்லையா? உண்மையான அன்பு என்ன என்பதற்கு நமது கலாச்சாரம் ஒரு குறிப்பையும் பெற்றிருப்பது இல்லை! சபையானது இதைக்காட்டிலும் மேன்மையானதாக உள்ளதா? நாம் வஞ்சிக்கப் பட்டுள்ளோம். அன்பு என்றால் என்ன என்பது பற்றிப் போதிக்கப் படாமலேயே நாம் அன்பைப் பற்றிப் போதிக்கப்பட்டுள்ளோம். அன்பு என்றால் என்ன என்று நீங்கள் அறியாதிருந்தால், நீங்கள் எப்படி அதைக் கொண்டிருந்து, அதை செயல்படுத்தி, அதை வாழமுடியும்? உண்மை அன்பு எதைப் போன்று காணப்படுகிறது? உண்மை அன்பு என்ன செய்கிறது? உண்மை அன்பு எதைச் செய்வதில்லை? இந்தக் கேள்விகள் நேர்மையாக, வேதாகம ரீதியாகக் கையாளப்பட வேண்டும். பொய்யான அன்பு என்பது மோசமான விஷயங்களை மிகவும் மோசமானதாக்க மட்டுமே முடியும்.*

*அன்பில் பெருகுதல் என்பது "தேவனுடைய விஷயமாக" உள்ளது. ஒருவர் அன்பைப் புரிந்துகொள்வதற்கு, அவர் தேவனைப் பற்றிப் புரிந்து கொள்ள வேண்டும். தேவன் அன்பாக இருக்கின்றார் - ஆனால் அன்பே தேவனாக இருப்பதில்லை! அன்பு என்பது நமது விக்கிரகமாக ஆகிவிடக் கூடாது. அன்பு தெய்வமாகின்ற போது, அது ஒரு அசுத்த ஆவியாகிறது. அன்பும்கூட ஒருக்காலும் தேவனுக்கெதிராகப் போட்டியிடக் கூடாது. நமது கலாச்சாரம் தனது இயல்பிலேயே, தனித்த மற்றும் எல்லாவற்றையும் உள்ளடக்கிய அதிகாரத்திற்கான எண்ணத்திற்கே எதிராகத் தாக்குதலை மேற்கொள்ளுகிறது. தேவன் இனியும் "இஸ்ரவேலின் பரிசுத்தர்" என்று இருப்பதில்லை. தேவனைப் பற்றிய முழுமையான சத்தியத்திற்குப் பதிலாக அவரைப்பற்றிய ஒரு பகுதி சத்தியத்தை வைக்கிறபோது, அன்பு என்பது விக்கிரகாராதனையாகிறது. தேவன் அன்பை விவரிக்கின்றார்; அன்பு தேவனை விவரிப்பதில்லை. நமக்கு ஏற்ற வகையில் நாம் அன்பை விவரிக்கிற*

போது, நாம் தேவனை நமக்கு ஏற்ற வகையில் விவரிக்கின்றோம். இரண்டாயிரம் ஆண்டுகள் கடந்துள்ள நிலையில், கிறிஸ்தவர்கள் தேவன் மீதும் அன்பின் மீதும் நிபுணர்களாக இருக்க வேண்டும்.

வேதாகம ரீதியான அன்பு என்பது உணர்வெழுச்சி ரீதியான அன்பாக இருப்பதில்லை. அன்பிற்கான கிரேக்க வார்த்தை *agape* என்பதாகும். இது மனவிருப்பத்திலிருந்து வருகிறது; இது ஒரு விருப்பத்தேர்வாக, ஒரு முடிவாக, ஒரு உறுதிப்பாடாக உள்ளது. வேதாகம ரீதியான அன்பு கட்டளையிடப்பட்டு உள்ளது; உணர்வெழுச்சி ரீதியான அன்பு (யாரேனும் ஒருவரை விரும்புதல் என்பது) கட்டளையிடப்பட முடியாத தாக உள்ளது. பிறர் என்னவாக இருக்கின்றார்கள் என்பதற்காக அல்ல, ஆனால் நாம் என்னவாக இருக்கின்றோம் என்பதற்காகவே நாம் பிறரை அன்புகூருகின்றோம். கிறிஸ்தவர்கள் தங்கள் விரோதிகளையும் அன்புகூர வேண்டும் என்று கட்டளையிடப்பட்டுள்ளார்கள் (மத். 5:44). அன்பை ஒருக்காலும் உணர்வெழுச்சிப்பூர்வமான மதியீனமான செயலாக்காதீர்கள். அன்பை ஒருக்காலும் சகிப்புத் தன்மையுடன் குழப்பிக் கொள்ளாதீர்கள். ஒருக்காலும் வலைகளில் விழுந்து விடாதீர்கள்: "நீ என்மீது அன்புகூர்ந்தால், நீ எனது நடக்கையை அங்கீரிப்பாய்"; "நீ என்மீது அன்புகூர்ந்தால், நீ என் கருத்தை ஒப்புக்கொள்வாய்"; "நீ என்மீது அன்புகூர்ந்தால், நான் எனக்கு விருப்பமான வழியில் நடக்க என்னை அனுமதிப்பாய்." இது அன்பை அனுமதி என்ற அளவிற்குக் குறைத்து விடுகிறது. வேதாகம ரீதியான அன்பு என்பது சபலங்கள், உணர்வுகள், தூண்டுதல்கள் மற்றும் வேட்கைகள் ஆகியவற்றைப் பின்தொடர்வது இல்லை. வேதாகம ரீதியான அன்பு என்பது ஒரு "அனுபவம்" அல்ல. சபை என்பது, சகோதரர்கள், அன்புகூருவது எப்படி என்பதையும் ஒன்றுகூடி வாழுதல் எப்படி என்பதையும் கற்றுக்கொள்ளும் ஆய்வுக் கூடமாக வேண்டும். சபையானது நம்மை சாத்தானிடமிருந்து இரட்சிப்பதற்காக மட்டும் இன்றி, நம்மை நம்மிடத்திலிருந்தே இரட்சிப்பதற்காகவும் இங்குள்ளது. "அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு" இருத்தல் (எபே. 4:15) என்பது நமது மாபெரும் சிலாக்கியமாக உள்ளது.

## அன்பின் முன்னுரிமைகள்

இன்றைய நாட்களின் மக்கள் அன்பை அற்பத்தனமானதாகக் குறைத்துப் போட்டதுமின்றி, அவர்கள் அன்பின் [பின்வரும்] முன்னுரிமைகளைப் பற்றிக் கொள்ளவும் தவறிவிட்டார்கள்:

1. தேவன்
2. குடும்பம்
3. சுயம்
4. பிறர்
5. விரோதிகள்

நியாயப்பிரமாணத்தை மீறுதல் பாவமாக உள்ளது (1 யோவா. 3:4; ரோமர் 4:15ஐக் காணவும்); முன்னுரிமைகள் தவறாக வைக்கப்படுதலும்

*பாவமாக உள்ளது. நமது அன்றாட இடர்ப்பாடுகளில் பெரும்பான்மை யானவை குற்றத்தன்மையிலிருந்து வருபவை அல்ல; நல்ல விஷயங்கள் இடம் மாற்றி வைக்கப்பட்டதிலிருந்தே பெரும்பான்மையானவை[ இடர்ப் பாடு]கள் வருகின்றன. முதலிடத்தில் இருக்க வேண்டியவர் தேவனாவார்: " 'உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்புகூருவாயாக'; இது முதலாம் பிரதான கற்பனை" (மத். 22:37, 38). நம் முழு ஆளுமைத்தன்மையுடனும் நாம் கொண்டுள்ள யாவற்றுடனும் தேவன்மீது அன்புகூர வேண்டும். அன்பு நமது முன்னுரிமைகளைச் சரியாகக் காத்துக் கொள்ளுவதால், அதுவே பதிலாக உள்ளது. "யாதொருவன் என்னிடத்தில் வந்து, தன் தகப்பனையும், தாயையும் மனைவியையும் பிள்ளைகளையும் சகோதரரையும் சகோதரி களையும், தன் ஜீவனையும் வெறுக்காவிட்டால் எனக்குச் சீஷனாயிருக்க மாட்டான்" (லூக். 14:26). இவரது கூற்று அதிர்ச்சியளிக்கிறதா? ஆம்! இது செயல்முறைக்குரியதாக உள்ளதா? ஆம்! இது உணர்வுப்பூர்வமான அன்பாக/வெறுப்பாக இருப்பதில்லை. மாறாக, ஒருவரைத் தேர்ந்து எடுத்தல் என்பது இன்னொரு வரைப் புறக்கணித்தலாகவும் இருக்கிறது.*

*முதலிடத்தில் இருக்க வேண்டியதை மூன்றாம் இடத்திலோ அல்லது 5ம் இடத்தில் இருக்க வேண்டியதை இரண்டாமிடத்திலோ, அல்லது மூன்றாமிடத்தில் இருக்க வேண்டியதை இரண்டாம் இடத்திலோ கூட வைக்காதீர்கள்! சிறிய விஷயங்கள் பெரிய விஷயங்களினால் முடிவு செய்யப்பட வேண்டும். நாம் நமது குடும்பத்தைக் கவனிக்க வேண்டும் (1 தீமோ. 5:8), ஆனால் இது நாம், [நமது] பிள்ளைகளை விக்கிரகங் களாக்கும்படி சோதிக்கிறது. குடும்பத்தின் மீதல்ல, தேவன் மீதே கவனத்தைச் செலுத்துங்கள். இது முன்னுரிமை பற்றிய போராட்டங்களைத் தீர்த்து வைக்கிறது. நமக்கு, குடும்பம், சுயம் மற்றும் பிறர் ஆகியோர் மீது, நமது விரோதிகளிடத்தில் கொண்டிருக்க வேண்டியிராத கட்டுப்பாடுகள் [கடமைகள்] உள்ளன. இது ஞானம் எனப்படுகிறது. அன்பின் முன்னுரிமை கள், பூமியில் மிகவும் செயல்முறைக்குரிய விஷயங்களின் மீது அன்பை ஏற்படுத்துகின்றன. சில வேளைகளில், முதலிடத்தில் உள்ளவைகளை முதலிடத்தில் வைப்பது என்பது சுலபமாகிறது ஆனால் அடுத்த விஷயங் களை அடுத்ததாக வைப்பது அவ்வாறு இருப்பதில்லை. இது நமது அன்றாட நடையில் நமது அன்றாட பிரச்சனையாக உள்ளது.*

## நிபந்தனையற்ற அன்பு என்பதே நிபந்தனையாக உள்ளது

*அன்பு என்பது "உள்ளானதாக" இருக்கிறது; நிபந்தனையற்ற அன்பு என்பது "உள்ளான - உள்ளான - உள்ளானதாக" இருக்கிறது! பேச்சு வெளிப்படுத்துதல்கள் (சிந்தனை வெளிப்படுத்துதல்கள் அல்ல) என்பவை, இது இல்லாமல் நிலவ முடியாது. ஆம், தேவன் அன்பாகவே இருக்கின்றார். தேவனுடைய அன்பு என்பது ஈட்டப்படவோ, தகுதியினால் பெற்றுக் கொள்ளப்படவோ அல்லது வாங்கப்படவோ முடியாது. தேவன் நம்மை*

அதிகமாக அன்புகூர முடியாது; அவர் நம்மைக் குறைவாக[வும்] அன்புகூரவும் முடியாது. தகுதியற்ற வகையில் பெறப்படும் அன்பையும் நிபந்தனையற்ற அன்பையும் குழப்பிக் கொள்ளாதீர்கள். நாம் எவரொருவரையும் அன்புகூருவதைக் காட்டிலும் அதிகமாகத் தேவன் நம்மீது அன்புகூருகின்றார். தேவனுடைய கிருபை இரட்சிப்பைத் தொடங்கி வைத்தது; தேவனுடைய அன்பு தேவ ஆட்டுக்குட்டியை ஈந்தது. இரட்சிப்பு பாவிகளுக்கு அருளப்படுகிறது, அவர்கள் அதை விரும்பினாலும் இல்லையென்றாலும் அருளப்படுகிறது. இது பாவிகள்மீது அன்பு கொண்டுள்ள தாழ்மையான செயல்விளைவாக உள்ளது. நாம் நித்தியத்திற்கும் இழந்து போகப்பட்டவர்களாய், நம்மை நாமே இரட்சித்துக்கொள்ள இயலாதவர்களாய் இருக்கின்றோம்.

நிபந்தனையற்ற அன்பை நிபந்தனையற்ற ஐக்கியத்துடன் குழப்பிக் கொள்ளாதீர்கள். லூக்கா 15ல் வரும் ஊதாரி மகன், தனது இல்லத்தில் நிலைத்திருந்து தான் விரும்பியபடி பாவம் செய்ய முடியாது என்பதை அறிந்திருந்தான். அவன் இல்லத்தில் இருந்த வேளையில், தூரதேசத்தில், மற்றும் இல்லம் திரும்பிய வேளையில் தேவன் அவன்மீது அன்புகூர்ந்திருந்தார். அன்பு அங்கு பிரச்சனையாக இருந்ததில்லை. நிபந்தனைகளின்றி அன்புகூருதல் (மக்கள் எவ்விதமாக வாழ்ந்தார்கள் அல்லது தேவனுக்கு எவ்வகையில் பதில் அளித்தார்கள் என்பதையெல்லாம் பொருட்படுத்தாமல், யாவருமே இரட்சிக்கப்படுகின்றார்கள்) என்பது உலகளாவிய தத்துவமாக உள்ளது. தேவன் ஒளியாக இருக்கின்றார் (1 யோவா. 1:5). ஒளியானது இருளுடன் ஐக்கியம் கொள்ள இயலாது. நீங்கள் சாத்தானுடன் சேர்ந்துகொண்டு கிறிஸ்துவின் உணவு மேஜையில் அமர இயலாது (1 கொரி. 10:21). கிறிஸ்துவும் பேலியாளும் இணைய இயலாது (2 கொரி. 6:14-16). நாம் ஒளியில் நடக்கும்போதுதான் ஐக்கியம் வருகிறது (1 யோவா. 1:7). சிலுவையைத் தவிர வேறிடத்தில் தேவன் நம்மை ஏற்றுக்கொண்டு மன்னிக்க மாட்டார் - அவரால் அவ்வாறு செய்ய இயலாது. இயேசுவின் சிலுவை அவசியமானதாக உள்ளது என்றால், நமது சிலுவையும் அவ்வாறே உள்ளது. தேவனுடைய கிருபை என்பது தகுதியற்றவர்களுக்கு அளிக்கப்படுகிறது, ஆனால் அது நிபந்தனைக்கு உட்பட்டதாக இருக்கிறது.

தேவனுடைய வாக்குத்தத்தங்கள் யாவும் நிபந்தனைக்கு உட்பட்டவைகளாக இருக்கின்றன. கொடை ஒன்றுக்கு (2 கொரி. 9:15) இரு விஷயங்கள் தேவைப்படுகின்றன: (1) கொடுப்பவர் மற்றும் (2) பெறுபவர். இவ்விருவருமே தேவைப்படுகின்றார்கள். வாங்கிக் கொள்ளாத ஒருவருக்கு நீங்கள் எதையும் கொடுக்க முடியாது. கொடையானது தகுதியற்றவருக்குத் தரப்படுகிறது. கொடை என்பது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். நாம் என்னவாக இருக்கிறோம் என்பதற்காக தேவன் நம்மை நேசிக்கவில்லை; நாம் எவ்விதமாக இருந்தபோதிலும் அவர் நம்மீது அன்புகூருகின்றார். எல்லாருக்கும் இரட்சிப்பை, தேவன் விரும்பி அளிக்கின்றார் (2 பேது. 3:9; 1 தீமோ. 2:4). ஆயினும், தேவன் இரட்சிப்பை நம்மீது வலிந்து திணிப்பது இல்லை! ஒரு “ஆம்” என்பது ஒரு “இல்லை” என்பதை அடக்கியுள்ளது. ஒரு “இல்லை” என்பது ஒரு “ஆம்” என்பதை அடக்கியுள்ளது. நாம் அதை ஈட்ட

*இயலாது, ஆனால் நாம் அதைப் புறக்கணிக்க முடியும். கிருபை என்பது எளிமையின் மேற்கொள்ளுதலாக, முற்றான அறிவுக்கு ஒவ்வாத விஷயமாக, தர்க்க ரீதியற்ற மேதைத் தன்மையாக ... மற்றும் நிபந்தனைக்கு உட்பட்ட தாக இருக்கிறது! இயேசுவை உங்களுக்காக வீணாக மரிக்க அனுமதி யாதீர்கள்! தேவனை நாம் அனுமதிக்காத காரணத்தால் அவர் நமக்காகச் செய்ய இயலாத விஷயங்கள் உள்ளன. நாம் தேவனுக்குச் செவி கொடுக்காத வரையில் அவரால் நம்முடன் பேச இயலாது. தேவனுடைய கிருபைக்கு அன்றாடம் பதில் அளியுங்கள்.*

### *வாருங்கள், என்னுடன் நடவுங்கள்.*

*அன்பிலே பயமில்லை; பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்;*
*பயமானது வேதனையுள்ளது, பயப்படுகிறவன் அன்பில் பூரணப்*
*பட்டவன் அல்ல. அவர் முந்தி நம்மிடத்தில் அன்புகூர்ந்தபடியால்*
*நாமும் அவரிடத்தில் அன்புகூருகிறோம் (1 யோவா. 4:18, 19).*

---

குறிப்பு

[1]Michael P. Green, ed, *Illustrations for Biblical Preaching* (Grand Rapids, Mich.: Baker Book House, 1989), 377.

---

### *விசுவாசம் என்பது ...*

*... இருளிலே தாவுதல் அல்ல*

*அல்லது*

*இது ஒரு மாயாவாத அனுபவமும்*

*அல்ல*

*இது விவரிக்கப்பட இயலாத ஒருவருடன்*

*எதிர்கொள்ளுதலும் அல்ல*

*ஆனால், தம்மையே - கிறிஸ்து என்ற - ஒரு நபரில்,*

*வேதாகமம் என்ற வரலாற்றுப்*

*பதிவேட்டில்,*

*விளக்கப்படுத்தியுள்ள ஒருவர் மீது வைக்கிற*

*நம்பிக்கையாக உள்ளது.[1]*

---

*குறிப்பு*

[1]Pamela Reeve, *Faith Is* ... (Sisters, Oreg.: Multnomah Books, 1994), n.p.

8

# தேவனுடன் எனது அன்றாட நடை

## தேவனுடைய சித்தம்

*தேவனுடைய சித்தத்தின் மத்தியில் இருத்தல் என்பதுதான், இந்த பூமியில் ஒரே ஒரு பாதுகாப்பான இடமாக உள்ளது! "முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்" (மத். 6:33அ). இராஜ்யம் இதில் முதலாவதாக வருகிறது! இயேசுவே கூட, "ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது" (மத். 26:39ஆ); "தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ, வருகிறேன் ..." (எபி. 10:7; வ. 9ஐக் காணவும்); "உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக" (மத். 6:10ஆ) என்று கூறினார். ஆவிக்குரிய தன்மை என்பது, நமது மதரீதியான கலாச்சாரத்தின்மீது ஆதிக்கம் செலுத்துகிறது, இருப்பினும் தேவனுடைய சித்தத்தைப் பற்றிச் சிறிதளவே கூறப்பட்டுள்ளது. நமது அன்றாட எண்ணப்போக்குகளும் நடவடிக்கைகளும் எவ்வளவு வல்லமை நிறைந்தவை என்பதை ஒரு சிலரே உய்த்து உணருகின்றார்கள். ஒரு கிறிஸ்தவர் ஒருபோதும் "கடமையிலிருந்து ஓய்ந்திருத்தல்" என்பதைக் கொண்டிருப்பதில்லை. தேவனுடனான வாழ்வு என்பது ஒருபோதும் சுலபமானதாகவோ, ஒருபோதும் அமைவு பெற்றதாகவோ, ஒருபோதும் முடிந்துபோனதாகவோ இருப்பதில்லை. நாம் தொடர்ந்து வளர வேண்டும் - மலையேற்றத்தில் செல்ல வேண்டும்.*

*தேவனுடைய சித்தத்தின்மீது எவ்விதமான ஆர்வத்தையும் மேம்படுத்திக் கொள்ளாமல், தேவபக்தியாயிருக்கப் பலர் முயற்சி செய்வது ஏன்? இது பின்வரும் தவறான கருத்துக்களினால் நடக்கிறது:*

*(1) தேவனுடைய சித்தம் நல்லதாயிருப்பதில்லை என்று மக்களில் சிலர் நினைக்கின்றார்கள். அவர்கள் தங்களை சந்தோஷமடையச் செய்கிற எல்லாவற்றையும் தாங்கள் செய்ய வேண்டும் என்று நினைக்கின்றார்கள் - மற்றும் அவர்கள், தேவனுடைய சித்தத்தைச் செய்தலென்பது பரிதாபகரமாய் இருத்தலாகுமென்று நம்புகின்றார்கள். தேவன் நம் வாழ்வில் இருந்து கேளிக்கையை எடுத்துப் போட்டு விட்டார் என்று சாத்தான் நமக்குக் கூறுகின்றான். விசுவாசமுடைமையை உரிமைகோருகிற பல கிறிஸ்தவர்கள் சந்தோஷமில்லாமல் இருக்கிறார்கள்! அதை யார் விரும்புவார்? தேவனுடைய சித்தத்தைக் கண்டறியவதற்கு ஒருவர் முதலில் தேவனைக் கண்டறிய*

*வேண்டும். தேவன் நல்லவராக இருக்கின்றார். தேவன் நம்பப்படக் கூடியவராக இருக்கின்றார். தேவன் நம்மிடத்தில் மிகச் சிறந்தவற்றை விரும்புகின்றார். தேவனுடைய நன்மைகளை வாழ்வில் காண இயலாத ஒரு கிறிஸ்தவர் குருடனாக இருக்கின்றார். அவரே நமக்கு நேரிடக் கூடிய மிகச் சிறந்த விஷயமாக இருக்கின்றார். தேவன் தேவனாக இருக்கட்டும்!*

> *தேவனுடைய சித்தத்தை அறிதல் என்பது மாபெரும் அறிவாக உள்ளது.*
> *தேவனுடைய சித்தத்தை கண்டறிதல் என்பது மாபெரும் கண்டுபிடிப்பாக உள்ளது.*
> *தேவனுடைய சித்தத்தை செய்தல் என்பது மாபெரும் ஞானமாக உள்ளது.*

*(2) "தேவன் எனது முழு வாழ்வைப் பற்றிய முன்திட்டம் ஒன்றைக் கொண்டிருக்கின்றார்" என்பது இரண்டாவது தவறான கருத்தாக உள்ளது. இது வசன ரீதியானதாகவோ அல்லது அறிவுக்கேற்றதாகவோ இருப்ப தில்லை. தேவன் "வழிகாட்டும் பணியில்" இருக்கின்றாரே தவிர, அவர் "வரைபடப் பணியில்" இருப்பதில்லை. ஆபிரகாம், தாம் எங்கு செல்கின் றோம் என்று அறியாமலேயே புறப்பட்டுச் சென்றார். இயேசு ஒரே ஒரு கட்டளை மட்டுமே கொடுத்துள்ளார்: "என்னைப் பின்செல்." இதுவே நம் அன்றாட விசுவாச அருஞ்செயலாக உள்ளது. "எனது வாழ்க்கைக்குத் தேவனுடைய சித்தம் என்ன?" என்பது கேள்வியாக இருப்பதில்லை "தேவனுடைய சித்தம் என்ன?" என்பதே கேள்வியாக உள்ளது. தேவன் ஒரு குறிப்பிட்ட வழியில் நம்மை வழிநடத்துவதில் ஆர்வமாயிருப்பதில்லை - அவர், "உன் வாழ்வை எனக்குத் தா" என்றே அறிவிக்கின்றார். நாம் வழிநடத்தப்பட விரும்புவதற்கும் மேலாக தேவன் நம்மை வழிநடத்த விரும்புகின்றார். நமக்குக் கிடைத்துள்ள அழைப்பு, வசனத்தை மீண்டும் எழுதுவதற்கானது அல்ல, ஆனால் நமது பணிப்பொறுப்பைக் கண்டறிந்து, அதை நிறைவேற்றுவதற்கானதாகவே உள்ளது. நாம் நமது சித்தத்தை நிறைவேற்றும்படி தேவனை நிர்ப்பந்திக்க முயற்சி செய்யக் கூடாது, ஆனால் தேவன் எங்கு செயல்படுகின்றார் என்பதை அறிந்து அவரது செயல்பாட்டில் ஒரு அங்கமாக வேண்டும்.*

*(3) தேவனுடைய வழிநடத்துதல் பற்றி மக்கள் குழப்பம் அடைந் துள்ளார்கள். "தேவன் எனக்குக் கூறினார்" என்று தனிநபர்கள் கூறுவதை நான் கேட்டிருக்கின்றேன். இவர்கள் தீர்க்கதரிசிகளா? இவர்கள் ஏவுதல் பெற்றவர்களா? இவர்கள் வேத வசனத்துடன் ஒன்றைக் கூட்ட முடியுமா? மக்கள், பிரசங்கிக்கவும், ஊழியக்காரர்களாய் இருக்கவும், சபைப் பேரரசுகளைக் கட்டவும் தாங்கள் அழைக்கப்பட்டு இருப்பதாகச் சரியற்ற வகையில் நினைக்கும்போது பேரழிவு நேரிடுகிறது. நம்மில் பெரும்பான்மை யானவர்கள், தேவனுக்கு "ஆலோசனை அளிக்கும் திறன்" கொண்டவர் களாக ஊழியம் செய்யவே விரும்புகின்றோம். வாழ்வு என்பது நாம் விரும்புவதைத் தேர்ந்தெடுத்துப் பெற்றுக்கொள்ளும் ஒரு சிற்றுண்டி விடுதி போன்றது இல்லை. வாழ்வின் எல்லா அம்சங்களும் தேவனுடைய*

*அதிகாரத்தின் கீழாகவே உள்ளன. நாம் தேவனுடைய பக்கத்தில் அல்ல, ஆனால் அவருடைய பாதங்களின் கீழ் அமர்ந்து இருக்கின்றோம். வேதாகமத்தில் தேவனுடைய சித்தம் எவ்வளவு அதிகமாய்க் காணப் படுகிறது என்பதை அறிந்தால் நீங்கள் திகைப்படையக்கூடும். வேதாகமம் என்பது பண்பு மற்றும் பரிசுத்தம் ஆகியவற்றைப் பற்றியதாக உள்ளது; இது நாம் யாராயிருக்கின்றோம் என்பதைப் பற்றியதாக உள்ளது. தேவனுடைய ஞானம் என்பது புத்திக் கூர்மை, அறிவுத்திறன் அல்லது திறமை பற்றிய விஷயமாக இருப்பதில்லை; இது பண்பைப் பற்றிய விஷயமாக உள்ளது. "பரத்திலிருந்து வருகிற ஞானமோ முதலாவது சுத்தமுள்ளதாயும், பின்பு சமாதானமும் சாந்தமும் இணக்கமுள்ளதாயும், இரக்கத்தாலும் நற்கனிகளாலும் நிறைந்ததாயும், பட்சபாதமில்லாததாயும், மாயமற்றதாயு மிருக்கிறது'' (யாக். 3:17). பாலுண்பதில் இருந்து பலமான ஆகாரம் உண்ணும் அளவுக்கு வளர்ந்துள்ள கிறிஸ்தவர்கள், நன்மை தீமை ஆகிய இரண்டையுமே பகுத்தறியக் கூடிய அளவுக்குத் தங்கள் புலன்களைப் பயிற்றுவித்துக் கொண்டவர்களாக இருக்கின்றார்கள் (எபி. 5:11-14). முதலில் வேத வசனங்களிடத்திற்குச் செல்லுங்கள்! ''நான் உமக்கு விரோதமாய்ப் பாவஞ் செய்யாதபடிக்கு, உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன்" (சங். 119:11).*

*நாம் எவ்விடத்தில் வாழ வேண்டும், என்ன தொழிலைப் பின்பற்ற வேண்டும் என்று வேதாகமம் நமக்குக் கூறுவதில்லை. தேவன் அருளிரக்கத் தின் மூலமாகவும் கூட வழிநடத்துகின்றார். சில விஷயங்கள் தேவனுடைய சித்தமாயிராமல் போகலாம், ஆனால் அவர் அதற்குள்ளும் தமது சித்தத்தைக் கொண்டு இருக்கின்றார். அந்த சித்தத்தை நாம் அறிய வேண்டும் என்று அவர் விரும்புகின்றார். அவருடைய சித்தத்திற்கு நாம் கீழ்ப்படிய அவர் நமக்கு எப்போதும் பலம் தருகின்றார். "அவருடைய சித்தத்தின்படி செய்ய மனதுள்ளவனெவனோ அவன் இந்த உபதேசம் ... என்று அறிந்து கொள்ளுவான்" (யோவா. 7:17அ). நம்மில் எத்தனைபேர் தேவனுடைய சித்தத்தைப் பற்றி அறிவதற்கு அன்றாடம் ஒரு ஐந்து நிமிடங்களாவது ஒதுக்குகின்றவர்களாய் இருக்கின்றோம்? ஆழமாய்த் தோண்டுங்கள் ... ஜெபியுங்கள் ... கவனித்துக் கேளுங்கள் ... உற்று நோக்குங்கள். முயற்சி செய்கின்றவர்களுக்குத் தேவன் தம்மையே வெளிப்படுத்துகின்றார். இன்று தேவன் விரும்புகின்றவற்றை நீங்கள் செய்யாமல் இருந்தால், நாளை நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்று அவர் விரும்புகின்றார் என்பதை அவர் உங்களுக்கு காண்பிக்க வேண்டும் என்று எதிர்பார்க்காதீர்கள்!*

# மேல்துண்டு [ஊழியத்துவம்]

## யோவான் 13:1-17, 34, 35

*“உங்களுக்குள்ளே அப்படியிருக்கக் கூடாது; உங்களில் பெரியவன் சிறியவனைப்போலவும், தலைவன் பணிவிடைக்காரனைப் போலவும் இருக்கக்கடவன். பந்தியிருக்கிறவனோ, பணிவிடை செய்கிறவனோ, எவன் பெரியவன்? பந்தியிருக்கிறவன் அல்லவா? அப்படியிருந்தும், நான் உங்கள் நடுவிலே பணிவிடைக்காரனைப்போல் இருக்கிறேன்” (லூக். 22:26, 27).*

தேவன் ஊழியக்காரர்களை மாத்திரமே பயன்படுத்துகின்றார்! மற்றவர்கள் விண்ணப்பிக்கத் தேவையில்லை. ஊழியக்காரர் ஒருவரின் இருதயமானது மனிதர் பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் தேவனுக்கு மிகவும் நெருக்கமாக உள்ளது. இயேசு *ஊழியக்காரராக* இருக்கின்றார்! நான் ஊழியரின் ஊழியக்காரர்களுக்கு *ஊழியக்காரனாக* இருக்கின்றேன்! வேதாகமத்தின் மாபெரும் வார்த்தைகளில் மிகவும் அதிகமானவை சிதிலப்படுத்தப்பட்டுள்ளன. ‘‘சிலுவை’’ என்ற வார்த்தையை ஆழ்ந்து சிந்தியுங்கள். ஒரு காலத்தில் அழகற்று, வேதனைமிகுந்து, தாழ்மைப் படுத்தப்பட்டு, பண்பற்றதென்று கருதப்பட்டிருந்த அது, இப்போது கலைநயம்மிகுந்து, தங்கத்தினால் செய்யப்பட்டு, தீங்கற்றதாக உள்ளது. இன்றைய நாட்களில் மக்கள் சிலுவையில்லாத கிறிஸ்துவை விரும்புகின்றார்கள். இயேசுவைப் பின்பற்றுதல் என்பது சிலுவையினிடம் செல்லுதலாக உள்ளது. அவர் தமது சிலுவையைச் சுமந்தார்; நாம் நமது சிலுவையை சுமக்கின்றோம். நாம் மரிக்க வேண்டும் என்று இயேசு வேண்டுகோள் விடுக்கின்றார். சிலுவையின் இடறலை நாம் மறந்து விடக் கூடாது (கலா. 5:11). “அன்பு” என்ற வார்த்தையை ஆழ்ந்து சிந்தியுங்கள். இந்த மாபெரும் வார்த்தையானது, உணர்வுப்பூர்வமான மதியீனமாகுமளவுக்கு மிகவும் குறைக்கப்பட்டு இருக்கிறது. இதைத் திருத்துவதற்கு இதனுடன் நீங்கள் ‘‘உரம் வாய்ந்த’’ என்பதைச் சேர்க்க வேண்டும். ‘‘ஊழியர்’’ என்ற வார்த்தையை ஆழ்ந்து சிந்தியுங்கள். அடிமை ஊழியர், உரிமையோ அதிகாரமோ அல்லது அரசியலோ இல்லாதவராக இருக்கின்றார். அவர் முற்றிலும் இன்னொருவரால் உடமையாக்கப்பட்டு இருக்கின்றார். இந்தக் கருத்தை நாம் நேசத்திற்குரியதாக்கி இதை அர்த்தமற்றதாக்கியுள்ளோம். இவ்வுலகத்திற்கு இயேசு, “மேல்துண்டின் கட்டளையைக்” கொடுத்தார். மேல்துண்டு என்பதே தேவன் சபைகளைக் கட்டுவதற்குப் பயன்படுத்துகின்ற ஒரே கருவியாக உள்ளது. முன் எப்போதுமோ அல்லது வரலாற்றிலோ இது ஒருபோதும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலே செல்லும் வழி கீழாகச் செல்லுதலாக உள்ளது; கடைசியானவர்கள் முதலானவர்களாக

இருக்கின்றார்கள்; நீங்கள் வாழ்வதற்கு இறக்கின்றீர்கள்; நீங்கள் பெறுவதற்குக் கொடுக்கின்றீர்கள் (மத். 20:16; மாற். 9:35). கிறிஸ்துவுக்குள் ஒவ்வொன்றும் "கீழானது மேலானதாக" உள்ளது.

தேவன் ஊழியர்களையே பயன்படுத்துகின்றார் - அவர் ''சபைப் பணியாளர்களைப் பயன்படுத்துவதில்லை.'' ''சபைப் பணியாளர்கள்'' என்பது வேதாகம ரீதியான சொற்றொடர் அல்ல. நாம் யாவரும் ஊழியர்கள் என்று அங்கீகரிக்கப்பட விரும்புகின்றோம், ஆனால் நம்மில் எவரும் ஊழியர்களாக நடத்தப்படுவதை விரும்புவதில்லை. ஊழியர்களாவதற்கு மக்கள் எவரும் வரிசையில் நிற்பதில்லை. தேவன் பயன்படுத்துவதற்கு நீங்கள் ஒருபோதும் சிறியவர்களாயிருக்க முடியாது, ஆனால் நீங்கள் மிகவும் பெரியவர்களாகி விடக் கூடும்! பன்னிருவருக்கு இயேசு கொடுத்த குறிக்கோளின் கடைசிப்பாடம் "மேல் துண்டின் பாடமாகவே" இருந்தது. அவர், தாம் செய்திருந்ததை அவர்களும் செய்ய வேண்டும் என்று அவர்களுக்குப் புத்திமதி கூறினார். பன்னிருவரும் தங்களை மேம்படுத்த முயற்சி செய்த ஒவ்வொரு வேளையிலும், இயேசு அவர்களைக் கடிந்து கொண்டார் (மாற். 10:35-45). கிறிஸ்தவர்களாக இருக்கின்றவர்கள் ஊழியக்காரர்களாகவே இருக்கின்றார்கள்; ஊழியம் என்பதே கிறிஸ்தவர்கள் செய்கின்றதாக உள்ளது. நாம் "வெற்றிகரமான சபை" என்றாவதற்கு மாறாக, "ஊழிய சபை" என்றே ஆக வேண்டும். நன்றியுணர்வு என்பது தாழ்மையின் தாயாக உள்ளது. தாழ்மை நம்மைக் கீழ்ப்படிகின்றவர்களாக்குகிறது. நாம் இப்போது தேவனுடன் நமது அன்றாட நடையின் சாராம்சத்திற்கு வந்திருக்கின்றோம்: <u>ஊழியத்துவம்!</u> நாம் "மேல்துண்டை எடுத்துக் கொள்வோமா?"

## மேட்டிமையான மனங்களும் அழுக்கான பாதங்களும்

யோவான் 13, திகைக்கச் செய்யும் ஒரு அத்தியாயமாக உள்ளது. மனிதனால் வேதாகமத்தை எழுத முடியவில்லை. அவனால் முடிந்திருந்தால் அவன் அதை எழுதியிருக்க மாட்டான். யோவான் 13ன் காட்சி அமைவு கடைசி இரவு உணவின் வேளையில் ''மேல்வீடு'' என்பதாக உள்ளது. கர்த்தருடைய பந்தி ஏற்படுத்தப்படுதலைக் குறித்து மத்தேயு, மாற்கு மற்றும் லூக்கா ஆகிய சுவிசேஷங்கள் வெளிப்படுத்துகின்றன. இது யோவான் 13ல் இல்லை; யோவான் "மேல்துண்டைப்" பற்றி எடுத்துரைக்கின்றார். மத்தேயு, மாற்கு மற்றும் லூக்காவில் மேல்துண்டு இல்லை. இந்த நிகழ்ச்சியின் மனிதத்துவப் பக்கத்தைப் பற்றியும், அத்துடன் தேவனுடைய பிரசன்னத்தின் அரிய கண்ணோட்டம் ஒன்றையும் நம்முடன் பகிர்ந்து கொள்ளும் சிலாக்கியத்தை யோவான் பெற்றார்.

சிலுவையின் நிழலின் கீழாகவே, சீஷர்கள் "யார் பெரியவர்?" என்று விவாதித்துக் கொண்டிருந்தார்கள். யார் ''மிமஉ'' என்பவ (மிகவும் மதிப்புக்கு உரிய அப்போஸ்தல) ராக இருந்தார்? இஸ்ரவேலர்கள் (யூதர்கள்) தனிப்பட்ட வகையில் மாபெரும் விஷயங்களை நாடலாகாது என்று

*எரேமியா போதித்திருந்தார் (எரே. 45:5). இது கற்றுக்கொள்ளக் கடினமான பாடமாக உள்ளது. யோவான் 13:1, "... இயேசு ... முடிவு பரியந்தம் அவர்களிடத்தில் அன்பு வைத்தார்" என்று கூறுகிறது. அவரது நிறைவான அன்பு கசப்பான முடிவு வரையிலும் நீடித்து இருந்தது. சிலுவையின் அருகில் இயேசுவுக்கு அவரது அப்போஸ்தலர்கள் தேவைப்பட்ட வேளையில், அவர்கள் மேட்டிமையினால் நிறைந்திருந்தார்கள் - அவர்கள் விவாதித்துக் கொண்டிருந்தார்கள். இருப்பினும் அவர், அவர்கள்மீது அன்புகூர்ந்தார். அவர், அவர்களைத் திட்டவில்லை, அவர்களை நோக்கி விரலைச் சுட்டிக்காண்பிக்கவில்லை அல்லது "முற்றிலும் ஒரு புதிய குழு வேண்டும்" என்று தேவனிடத்தில் ஜெபிக்கவில்லை. அவர், "பெந்தெகொஸ்தே நாள் நெருங்குகிறது, பிதாவே 'இந்தக் குழுவைக்' கொண்டு நாம் சபையை எவ்வாறு தொடங்க இயலும்?" என்று கேட்கவில்லை. மேல்கண்டவற்றில் எதையும் இயேசு செய்யவில்லை. அவர்களின் பாதங்களைக் கழுவுவதற்கு அவர் ஒரு பாத்திரத்தில் தண்ணீரை நிரப்பி, ஒரு மேல்துண்டை எடுத்துத் தமது இடுப்பில் கட்டிக் கொண்டார். நான் இந்த விவரத்தை வாசிக்கையில், "இயேசுவே நீர் இதைச் செய்ய வேண்டாம். அவர்கள் உமது பாதங்களைக் கழுவும்படி செய்யும்!'' என்று நினைக்கின்றேன். மனிதத்துவம் தோல்வியுற்றது.*

*ஆயினும் தேவன் தோல்வியடையவில்லை. யோவான் அத்தியாயம் 13ல், அந்த இரவைப் பின்னோக்கி பார்த்தார். யோவானில் அடிப்படையான மாற்றத்தை ஏற்படுத்தியது எது? அவர் இயேசுவில் சர்வ வல்ல தேவனைக் - கீழ் இருந்து முழந்தாளிட்டு சீஷர்களின் பாதங்களைக் கழுவுபவராகக் - கண்டார்! பாதம் கழுவுவதில் உபசரிப்பு செய்யப்பட வேண்டும் என்று சமுதாய ஒழுங்கு முறைக் கட்டுப்பாடு வேண்டிற்று. பதவிக்காகச் சண்டையிடும் மேட்டிமையுள்ள மனிதர்கள் இதைச் செய்ய முடியாதிருந்தது, எனவே இயேசு இதைச் செய்தார்! தேவன் ஊழியர்களையே விரும்புகின்றார்; மனிதர்கள் "பிரபலங்களாக" இருக்க வேண்டும் என்று விரும்புகின்றார்கள். தேவனிடத்தில் ''பிரபலங்களுக்கு'' இடமில்லை. நீங்கள் ஊழியம் செய்வதை நிறுத்தும்போது முறையிடத் தொடங்கி விடுகின்றீர்கள்! விமர்சகர்கள்/குறைகூறுகிறவர்கள் ஊழியம் செய்வதில்லை!*

*ஊழியர்கள் பாதங்களைக் கழுவுகின்றார்கள், முற்றுப்புள்ளி! அவர்கள் யாருடைய பாதங்களைக் கழுவலாம் என்று தேர்ந்து பொறுக்கியெடுத்துக் கழுவுவது இல்லை. இயேசு யூதாஸின் பாதங்களைக் கழுவினார் (அல்லது கழுவியிருப்பார்). பாதம் கழுவுவதில் பக்திக்குரியது ஒன்றுமில்லை. யூதப் பையன்கள் அடிமைகளாக இருக்க முடியும் என்று எழுதப்பட்ட யூதச்சட்ட நூலான Mishnah கூறிற்று; ஆயினும் அவர்களிடத்தில் [மற்றவர்களின்] பாதங்களைக் கழுவும்படி கேட்டுக் கொள்ள இயலாது. இயேசு ஊழியக்காரர்களுடன் மட்டுமின்றி, மிகவும் தாழ்ந்த நிலையிலான ஊழியக்காரர்களுடனும் தம்மை அடையாளப்படுத்திக் கொண்டார். ஊழியர்கள் நிரூபிப்பதற்கு எதையும் கொண்டிருப்பதில்லை; அவர்களிடத்தில் இழப்பதற்கு எதுவும் இருப்பதில்லை. இயேசு மேல்துண்டை எடுத்துத் தம்*

*இடுப்பில் கட்டிக் கொண்டார். "நான் உங்கள் ஊழியனாக இருக்க வேண்டும், ஏனென்றால் நான் அவருடையவன்" என்பதே அவரது செய்தியாக இருந்தது. சிலுவையில் அறையப்பட்ட இரட்சகர், சிலுவையில் அறையப்பட்ட ஊழியர்களை மட்டுமே பயன்படுத்த முடியும்.*

> *இரத்தம் சிந்த முடியாத சபை ஆசீர்வதிக்க முடியாது.*
> *ஊழியம் செய்ய முடியாத சபை இரட்சிக்க முடியாது.*
> *துன்புற முடியாத சபை மீட்க முடியாது.*
> *மரிக்க முடியாத சபை வாழ முடியாது.*

## *"பேதுருவின் கொள்கை"*[1]

*சீஷர்களின் மனிதத்துவம், மேட்டிமையில் வெளிப்படுத்தப்பட்டது! தேவனுடைய தெய்வீகத்துவம் தாழ்மையில் வெளிப்படுத்தப்பட்டது! இது பேதுருவில் மிகச் சிறப்பாகக் காணப்படுகிறது. அவர், ஒருவேளை வேதாகமத்திலேயே மிகவும் முட்டாள்தனமான கேள்வியைக் கேட்டார்: "ஆண்டவரே, நீர் என் கால்களைக் கழுவலாமா?" (யோவா. 13:6ஆ). இயேசு தண்ணீர்ப் பாத்திரம், மேல்துண்டு ஆகியவற்றுடன் பாதங்களைக் கழுவிக் கொண்டிருந்தார், பேதுருவின் பாதங்களைக் கழுவ வேண்டிய முறை வந்தது. பேதுரு அந்தக் கேள்வியை ஏன் கேட்டார்?*

*(1) பேதுரு, பொய்யான ஆவிக்குரிய தன்மை பற்றிய பிரச்சனையொன்றைக் கொண்டிருந்தார். அவர் பிறரின் செலவில் தம்மை நல்லவராகக் காண்பிக்க விருப்பம் கொண்டிருந்தார். இது, மேட்டிமை தாழ்மை போல் காண்பிக்க முயற்சி செய்தலாக இருந்தது. இது பேதுருவின் இருதயத்தை வெளிப்படுத்தியது. அவர் தமது பாதங்கள் கழுவப்படுவது அவசியம் என்று நினைக்கவில்லை! இயேசு அழுக்கான பாதங்களை மட்டுமே கழுவிக் கொண்டிருந்தார். பேதுரு ஒரு தலைவராயிருந்தார்; அவர் தவறுகளை ஒப்புக்கொள்ள விரும்பவில்லை. அவர் தமது உருவம் பளபளக்க வேண்டும் என்று விரும்பினார். மதரீதியாக "காட்சிப்படுத்துதல்" என்பது எப்போதுமே பேரழிவு தருவதாக உள்ளது. நேர்ப் பொருளில், பேதுரு "தம்மையே ஒரு மதியீனராக்கிக்" கொண்டார். மேட்டிமையானது இதையே மக்களுக்கு எப்போதும் செய்கிறது. பேதுருவின் பாதங்கள் அழுக்காயிருந்தன; மற்றவர்கள் ஒவ்வொருவருடையதைப் போலவே அவைகளுக்கும் கழுவுதல் தேவையாயிருந்தது. "நான் தர்மத்தில் பிழைக்கவில்லை" என்ற மேட்டிமையான எண்ணப்போக்கை நாம் கொண்டிருக்கலாம். [ஆனால்], ஆம், நீங்கள் அவ்விதமாகவே பிழைத்துக் கொண்டிருக்கின்றீர்கள்! நாம் யாவருமே அவ்விதமாகவே பிழைத்துக் கொண்டிருக்கிறோம். நாம் யாவரும் நமது பாதங்கள் கழுவப்பட வேண்டியது அவசியம் என்ற நிலையில்தான் இருக்கிறோம். பேதுருவின் இருதயத்திலிருந்த, "நான் என் பாதங்களைக் கழுவிக் கொள்ள முடியும்" என்ற எண்ணப்போக்கு பற்றிய உட்கண்ணோட்டம் ஒன்றும் வருகிறது. "கிரியைகளினால் இரட்சிப்பு" (சுயநீதி) என்பதற்கான விருப்பம் நம்மைக் கொள்ளையிடுகிறது. நாம், "எனக்கு எவரொருவரும் தேவையில்லை!" என்று நினைக்கின்றோம்! ஆம்,*

உங்களுக்கு பிறர் அவசியம் தேவை! ஒவ்வொருவருக்கும் இயேசு தேவை. நாம் ஒருவர் பிறருக்குத் தேவை. கிறிஸ்தவம் என்பது இன்னுமொரு ‘‘எவ்வாறு செய்வது’’ என்று கூறும் மதம் அல்ல. கிறிஸ்தவம் என்பது “உங்களுக்கு நீங்களே செய்துகொள்ளும் பணி” என்பது அல்ல. பவுல், “... நான் பலவீனமாயிருக்கும்போதே பலமுள்ளவனாயிருக்கிறேன்” (2 கொரி. 12:10) என்று கற்றறிந்தார். இயேசுவுக்கான நமது தேவையில் நாம் எப்பொழுதுமே வளர்ந்து முடிவதில்லை. நாம் அப்பத்திற்காக/உணவிற்காக இரந்து திரியும் பிச்சைக்காரர்களைப் போல் இருக்கின்றோம். தவறுகள் அறியப்படுகிறபோது சபையை விட்டு வெளியேறி விட வேண்டும் என்று சகோதரர்கள் நினைப்பது இன்னும் என்னைத் திகைக்கச் செய்கிறது. நாம் யாவரும் பாவம் செய்து தேவமகிமையற்றவர்களாகிறோம் (ரோமர் 3:10, 23).

(2) பேதுரு இயேசுவை “காப்பாற்ற” முயற்சி செய்துகொண்டிருந்தார். ‘‘புகழ்த்தன்மை’’ என்பது புதிதானதாக இருப்பதில்லை! இரபீக்கள் [குருக்கள்] என்பவர்கள், குறிப்பிட்ட சில இடங்களுக்குச் செல்லாதிருந்தார்கள், குறிப்பிட்ட சில செயல்களைச் செய்யாதிருந்தார்கள், குறிப்பிட்ட சில மக்களுடன் காணப்படமாட்டார்கள். இயேசு ஒருக்காலும் “இரபீக்களின் பள்ளியில்” கற்றதில்லை. அவர் தமது வீட்டார், தமது சீஷர்கள், தமது நாட்டார் ஆகியோரை பதட்டமான இறுக்கத்தில் வைத்திருந்தார். பேதுருவின் கண்களில், இந்த மேல்துண்டின் நிகழ்ச்சியானது வெளியாக்கப் பட்டால், இயேசுவின் புகழ் சேதமடையும் என்பதாகக் காணப்பட்டது. தேவனைக் காட்டிலும் அதிகம் மதவாதியாக இருக்க முயற்சி செய்யாதீர்கள்! மக்கள் தங்கள் பொய்யான ஆவிக்குரிய தன்மையினால், தேவன் கேட்டுக் கொள்வதைக் காட்டிலும் அதிகமான கண்டிப்புடன் இருப்பது போன்ற தோற்றத்தினால் என்னை அச்சுறுத்துகின்றார்கள். இயேசு பாவிகளுக்கு நேர்த்தியானவராக இருந்தார்; அவர் சிறு பிள்ளைகளை ஆசீர்வதித்தார், அவர் சாதாரண மனிதர்களினால் கேள்வியுறப் பெற்றார். நாம் பாவிகளைக் கிறிஸ்துவுக்குள் மனம் மாற்றும்போது, அவர்களுக்குப் பின்வரும் எச்சரிக்கையைக் கொடுக்க வேண்டும்: “இயேசுவைப் பற்றி நீங்கள் விரும்பாத விஷயங்களை [யும்] நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கும்.” நான் இயேசுவைப் போல் மாற வேண்டும்; அவர் நம்மைப் போல் மாறுவதில்லை. “ஊழியராக” இருப்பதற்கு மாறாக, “சபைப் பணியாளராக” இருத்தல் என்பதற்குப் பேதுரு ஒரு உதாரணமாக/விவரிப்பாக இருந்தார். அவர் கட்டுப்பாட்டிற்குள் இருந்தார், கட்டுப்பாட்டிற்குள் நிலைத்திருக்க அவர் விரும்பினார். பலமானவர்களே தாழ்மையானவர்களாக இருக்க முடியும்; பாதுகாப்பானவர்களே ஊழியம் செய்ய முடியும். புகழ்ச்சியல்ல, ஆனால் பண்பு என்பதே இங்கு விஷயமாக உள்ளது.

(3) பேதுருவின் மேட்டிமை வெளிக்காட்டப்பட்டது. என் மேட்டிமை வெற்றிக்கொள்ளப்பட்டது என்று நான் நினைக்கின்ற வேளையிலேயே, அது தனது பலத்த தலையைக் காண்பிக்கிறது. நன்கு பழக்கமான வேத வசனங்கள் இன்னும் நெருக்கமாக வாசிக்கப்பட வேண்டியது அவசியம். சீஷர்கள் இயேசுவின் பாதங்களைக் கழுவிக் கொண்டிருந்தார்கள் என்ப

தல்ல, ஆனால் இயேசு சீஷர்களின் பாதங்களைக் கழுவிக் கொண்டிருந்தார் என்பதுதான் இங்கு விஷயமாக இருந்தது! அவருடைய பாதங்களைக் கழுவ அவர்கள் முன் வந்திருப்பார்கள். அது ஒரு பிரச்சனையாக இருந்திருக்காது. உண்மையில் அதற்கு [இயேசுவின் பாதங்களைக் கழுவுவதற்கு] அவர்கள் தங்களுக்குள் சண்டையிட்டு இருந்திருப்பார்கள். மேட்டிமை என்பது அவ்வளவு வஞ்சனையுள்ளதாகும். பல ஆண்டுகளாக, நாம் உதவிக்காரர்கள் ஒவ்வொருவருக்கும் "ஊழியரின் மேல்துண்டு" ஒன்றைக் கொடுத்தோம். நாம் அவர்களிடம், பிறரை ''மேல்துண்டின் ஊழியர்கள்'' ஆக்கும்படி கேட்டுக் கொண்டோம். அவர்கள் அதைச் செய்தார்கள். அவ்வப்போது, நாம் ''மேல்துண்டின் ஞாயிற்றுக்கிழமையை'' கொண்டிருந்தோம். மேல்துண்டுகள் விசேஷித்த ஊழியர்களுக்கு வழங்கப்பட்டன. உண்மையா யிருத்தல் என்பதற்கு அது மிகவும் நல்லதாக இருந்தது. மக்கள் மேல்துண்டு களைப் பெறுவதற்கு, அரசியலைப் பயன்படுத்தினார்கள், துண்டுகளுக்கு சண்டையிட்டார்கள், தங்கள் துண்டுகளைக் காட்சிப்படுத்தினார்கள்! மேட்டிமையானது துண்டுகளின் பின்னால் இருந்த கருத்தை ஒழித்துப் போட்டது!

(4) பேதுரு தம்மையே தாழ்த்தினார் மற்றும் மனந்திரும்பினார், "ஆண்டவரே, என் கால்களை மாத்திரமல்ல, என் கைகளையும், என் தலையையும் கூடக் கழுவ வேண்டும்" (யோவா. 13:9). நமக்குப் பேதுருவின் உதாரணம் தேவைப்படுகிறது. அவர் பாவம் செய்தார், ஆம், ஆனால் அவர் மனந்திரும்பவும் செய்தார். இன்னொருவரின் பாதங்களைக் கழுவுதல் என்பது உங்கள் சுயாதீனத்தை அறிவிக்கலாம். உங்கள் பாதங்கள் கழுவப் படுதலை அனுமதித்தல் உங்கள் சார்ந்திருந்தலை அறிவிக்கின்றது. ஊழியம் செய்தல் என்பதை விட ஊழியம் செய்யப்படுதல் என்பது நமக்குக் கடின மானதாக இருக்கக் கூடும். பெற்றோர்களே, உங்கள் பிள்ளைகள் உங்களுக் குக் கொடுக்கட்டும்! பலம் வாய்ந்த உறுப்பினர்களே, சகோதரர்கள் உங்களுக்குக் கொடுக்கட்டும்.

இதைத்தான் நான் "போதுமற்ற தன்மையின் வரம்" என்று அழைக்கின் றேன். நம்மில் எவரும் பிரசங்கிக்கவோ அல்லது ஊழியம் செய்யவோ கூட உரிமையை ஈட்டியிருப்பது இல்லை. பெந்தெகொஸ்தே நாளன்று, மாபெரும் பிரசங்கத்தைப் பிரசங்கித்தது யார்? பேதுரு! அவர் அந்த உரிமையை ஈட்டியிருந்தாரா? இல்லை! அவர் பிரசங்கித்தல் பற்றிய தேர்வில் உயர்ந்த மதிப்பெண்களைப் பெற்றிருந்தாரா? இல்லை! பேதுரு கடைசி இரவு பந்தி வேளையில் தமது பாதங்களைக் கழுவ இயேசுவை அனுமதித்து இருந்தபடியால், பெந்தெகொஸ்தே நாளன்று பிரசங்கிப்பதற்குத் தேவனிடத்தில் கிருபை பெற்றார்! பிரசங்கிப்பதற்கு நான் யார்? நான் யாருமல்ல! நான் அப்படி இருக்க முடியாது! ஆயினும், நான் என்னையே தாழ்த்துகின்ற வரையிலும், என் பாதங்களைக் கழுவுவதற்கு இயேசுவை அனுமதிக்கின்ற வரையிலும், நான் யாருக்கு வேண்டுமானாலும், எங்கு வேண்டுமானாலும், எப்பொழுது வேண்டுமானாலும் பிரசங்கிக்க முடியும். இங்கு, முரண்பாடுபோல் தோன்றும் மெய்யுரையொன்று உள்ளது: இயேசு பாதங்களைக் கழுவுகின்றபோது, அவர் நமது இருதயங்களைச் சுத்திகரிக்

*கின்றார்! இயேசு மட்டுமே நம்மை நேர்மையுள்ளவர்களாகக் காத்துக் கொள்ள முடியும். நாம் "மேல்துண்டின் ஊழியத்தின் ஒழுங்கு முறைக்கு" சார்ந்தவர்களாக இருக்க வேண்டும்.*

*பேதுருவும் பிற சீஷர்களும், "போதுமற்றதன்மையின் வரம்" என்பதைக் கற்று, பெற்றுக் கொள்ள வேண்டியிருந்தது. சிறு பிள்ளைகள் மோசமான சித்திரங்களை வரைய முடியாது. அவர்கள் கோடுகளுக்குள் வண்ணந் தீட்டாமல் இருக்கலாம், ஆனால் அவர்கள் பிள்ளைகளாகவே இருக்கின் றார்கள். நாம் அவர்களைக் கட்டியணைத்துக் கொள்ளுகின்றோம், அவர்களுக்கு நன்றி செலுத்துகின்றோம், அவர்களுடைய வண்ணத்தாள் களைப் பத்திரமாகப் பாதுகாக்கின்றோம். இதே விஷயம் நம்மையும் தேவனையும் பொறுத்தமட்டில் உண்மையாக உள்ளது. நாம் பூரணமான வர்களாக இருக்க முடியாது; நாம் ஒவ்வொரு விஷயத்தையும் சரியாகச் செய்து விட முடியாது; நாம் தோல்வியைத் தவிர்க்க முடியாது. இவ்வாறு தான் பிள்ளைகள் கற்று வளருகின்றார்கள். இயேசு நமது பாதங்களைக் கழுவுகின்றபோது, நாம் தோல்வி அடையவும் கூட அனுமதிக்கப் படுகின்றோம்! பலர், தாங்கள் சரியாக ஊழியம் செய்ய முடியாது என்பதால், ஊழியம் செய்ய மறுத்து விடுகின்றார்கள். நீங்கள் வெற்றிகர மானவர்களாக இருக்க வேண்டுமென்று அவசியமில்லை; நீங்கள் விசுவாச மிக்கவர்களாக இருக்க வேண்டும். உங்களால் முடிந்தவற்றை, நீங்கள் இருக்கும் இடத்தில், உங்களிடத்தில் உள்ளவற்றைக்கொண்டு செய்யுங்கள். மற்றவர்கள் என்ன செய்தார்கள் என்பதைப் பொருட்படுத்தாமல், பேதுரு தமக்கு மட்டுமே பொறுப்பாளியாக இருந்தார். இரட்சிப்பு என்பது நாம் தேவனுக்குச் செய்யும் ஊழியத்தைச் சார்ந்ததாக இருப்பதில்லை, ஆனால் தேவன் நமக்கு ஊழியம் செய்ய அனுமதிப்பதைச் சார்ந்ததாக இருக்கிறது. யுத்தம் கர்த்தருடையது. வல்லமை செய்தியில் உள்ளது. தேவனுடைய உண்மையான ஊழியர்களாக இருப்பதற்கு, நாம் தேவனால் ஊழியம் செய்யப்படுபவர்களாக இருக்க வேண்டும். தேவன் நம்மை எவ்வாறு நடத்துகின்றார் என்று நாம் உய்த்து உணருகின்ற வழிமுறையே, நாம் மற்றவர்களை நடத்துகின்ற வழிமுறையாக உள்ளது.*

## "என்னைப் போலிருங்கள்"

*இயேசு தாம் செய்தது போலவே தமது சீஷர்களும் செய்ய வேண்டும் என்று கூறினார் (யோவா. 13:13-17). இயேசு, "என்னைப் பின்பற்றுங்கள்" (மத். 4:19; 9:9; 1 பேது. 2:21) என்ற ஒரே ஒரு கட்டளையை மட்டுமே கொடுத்துள்ளார். கிறிஸ்தவம் என்பது கிறிஸ்துவே. பவுல், "நான் கிறிஸ்து வைப் பின்பற்றுகிறது போல, நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர் களாயிருங்கள்'' (1 கொரி. 11:1) என்று கூறினார். அவர் தம்மைப் பின்பற்றும்படி பிலிப்பியர்களுக்கு வெளிப்படையாகக் கூறினார் (பிலி. 3:17). பின்பு அவர் தம் வாழ்வையும் ஆத்துமாவையும் அவர்களுக்கு வெளிக் காண்பித்தார்: "நீங்கள் என்னிடத்தில் கற்றும் அடைந்தும் கேட்டும் கண்டும் இருக்கிறவைகளெவைகளோ, அவைகளையே செய்யுங்கள்; அப்பொழுது*

*சமாதானத்தின் தேவன் உங்களோடிருப்பார்'' (பிலி. 4:9). கடந்த பல ஆண்டுகளாக நான், ''என்னைப் பின்பற்றுங்கள்'' என்று கூறுபவனாக சகோதரர்களின் முன்பாக நின்றிருக்கின்றேன். நான் ஐம்பது ஆண்டுகளாகப் பிரசங்கித்திருக்கின்றேன் - இது கூறப்படுவதற்கு முன்பு நான் எவ்வளவு நீண்ட காலம் பிரசங்கிக்கத் தொடர்ந்திருக்க வேண்டும்? மூப்பர்கள் தங்கள் ஆடுகளின் முன்பாக நின்றுகொண்டு, "எங்களை பின்பற்றுங்கள்" என்று கூவ வேண்டியுள்ளது. பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளிடத்தில், "எங்களைப் பின்பற்றுங்கள்'' என்று கூற வேண்டியுள்ளது. நீங்கள் பதில்செயல் செய்வதற்கு முன்பே, அவர்கள் செய்து விடுவார்கள்! ஆடுகள் பின்தொடரு கின்றன. சரியான வழியில் நடத்துதல் என்பதே நம் பொறுப்பாக உள்ளது. நாம் இயேசுவுடன் நேரத்தைச் செலவிட்டுள்ளோம் என்பது நமது இணையாளர்களுக்குத் தெளிவாகத் தெரிகிறதா? சீஷர்களைச் சுற்றியிருந் தவர்கள், ''... அவர்கள் இயேசுவுடனே கூட இருந்தவர்களென்றும் அறிந்துகொண்டார்கள்'' (அப். 4:13). ஊழியர்களிலிருந்து உங்கள் பிரசங்கியார்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள். ஊழியர்களிலிருந்து உங்கள் மூப்பர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள். நாம் கிறிஸ்துவின் ஊழியக்காரர்களாக இருக்கும்போது, நமது பிள்ளைகள் - சகோதரர்கள் - நமக்கு "இல்லை" என்று சொல்ல இயலாது.*

## *வாருங்கள், என்னுடன் நடவுங்கள்.*

*கர்த்தருடைய ஊழியக்காரன் சண்டை பண்ணுகிறவனாயிராமல், எல்லாரிடத்திலும் சாந்தமுள்ளவனும், போதக சமர்த்தனும், தீமையைச் சகிக்கிறவனுமாயிருக்க வேண்டும். எதிர் பேசுகிறவர்கள் சத்தியத்தை அறியும்படி தேவன் அவர்களுக்கு மனந்திரும்புதலை அருளத்தக்கதாகவும், ... சாந்தமாய் அவர்களுக்கு உபதேசிக்க வேண்டும் (2 தீமோ. 2:24-**26**).*

---

குறிப்பு

[1]*சீஷர்களின் மனிதத்துவத்தைப் பேதுரு விவரித்தார், அந்தக் கருத்தை இந்தப் பிரதான உட்தலைப்பு பற்றிப் பிடிக்கிறது. ஆயினும், இந்தச் சொற்றொடரானது, லாரன்ஸ் என்பவரின் பெயரில் உள்ள பேதுருவைப் பற்றியும் பின்வரும் கொள்கை யிலிருந்து வருகிறது: ஒரு நிறுவனத்திற்குள் பணியாற்றும் பணியாளர் ஒருவர், தனது தகுதியற்ற தன்மை என்ற மட்டத்தை நோக்கி முன்னேறி, அதிலேயே நிலைத் திருப்பார்.*

*9*

# தேவனுடன் எனது அன்றாட நடை

## "பூரண சற்குணராயிருங்கள்" (1)

- ... பரிசுத்தமான தேவனுக்கு முன்பாக நிற்பதற்கு பாவியான எந்த மனிதரும் உரிமையோ அல்லது காரணமோ கொண்டிருப்பதில்லை.
- ... பரிசுத்தமான தேவனுக்கு முன்பாக நிற்பதற்கு பரிபூரணப்படாத எந்த மனிதரும் அனுமதிக்கப்படுவது இல்லை.
- ... நான் பரிபூரணமற்றவனாக இருக்கின்றேன்; ஆகையால் நான் விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்படுகின்றேன்.
- ... நான் என்னைக் கொண்டே என்னை இரட்சித்துக் கொள்ளக் கூடாதவனாக உள்ளேன்; ஆகையால் நான் விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்படுகின்றேன்.
- ... நான் ஒரு நிமிடம் கூடப் பரிபூரணமானவனாக இருக்க இயலாது; என்னால் அன்றாடம் விசுவாசமிக்க நிலையில் இருக்க இயலும்.
- ... சிலுவையில் தேவன் எல்லாவற்றையும் இடர்ப்படுத்தினார்/சாதித்தார்; விசுவாசத்தினால் நாம் எல்லாவற்றையும் இடர்ப்படுத்துகின்றோம்/சாதிக்கின்றோம்.

"பரிபூரணமாக" இருத்தல் என்பது நம்மால் இயலாத ஒரு விஷயமாக உள்ளது. இருந்தபோதிலும், தேவன், "ஆகையால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறதுபோல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக் கடவீர்கள்" (மத். 5:48) என்று கட்டளையிட்டுள்ளார். "பூரண சற்குணராயிருங்கள்!" மலைப்பிரசங்கம்தான் பிரசங்கிக்கப்பட்டவற்றிலேயே மாபெரும் பிரசங்கமாக உள்ளது (இயேசு, மத். 5-7) மலைப் பிரசங்கத்தில் முன் வைக்கப்பட்ட வாழ்வின் வழி என்பதுதான் வாழ்வதற்கான ஒரே ஒரு நடைமுறை வழியாக உள்ளது. நாம் எவ்வாறு இருக்க வேண்டும் என்று பாக்கியங்களில் இயேசு கூறினார்; பின்பு நாம் எவ்வாறு செயல்பட வேண்டும் என்று அவர் கூறினார். இன்றைய நாட்களில் மக்களுக்கு, வாழ்க்கைக்கான தத்துவம் ஒன்று அத்தியாவசியமாகத் தேவைப்படுகிறது. தேவனுடனான நமது அன்றாட நடையானது நமது வாழ்வின் இலக்கை தொடர்ந்து மறுவடிவமைக்கிறது. ஒரு நபர் சுவிசேஷத்தைக் கேள்விப்பட்டு, அதற்குக் கீழ்ப்படிகின்றார். அவர் இரட்சிக்கப்படுகின்றார், கிறிஸ்தவராகின்றார், தேவனுடைய சபையில் சேர்க்கப்படுகின்றார். அந்தப் புதுப்பிறப்பிலிருந்து, பின்வரும் கேள்விகள் அவரை

உடமையாக்குகின்றன: "கிறிஸ்தவராக இருத்தல் என்பதன் அர்த்தம் என்ன? நான் யாராயிருக்க வேண்டும்? நான் என்ன செய்ய வேண்டும்? நான் எவ்வாறு வாழ்வேன்?" தேவனுடைய [பின்வரும்] தரஅளவைக் குறைப் பதற்காக இயேசு வரவில்லை: "பூரண சற்குணராயிருங்கள்." மலைப்பிரசங் கத்தில் உள்ள மிகவும் இன்றியமையாத கூற்றாக விளங்குவது "பூரண சற்குணராயிருங்கள்" என்பதேயாகும். முன்னால் உள்ள பாக்கியங்களும், பின்னால் உள்ள செயல் வகைகளும், இந்தச் சிந்தனையை விரிவாக்கு கின்றன. நாம் பூரணமற்றவர்களாக இருக்கின்றோம். நமக்குள்ளாக நாம் யுத்தத்தில் ஜெயிக்க முடியாதவர்களாக இருக்கின்றோம். நாம் சிந்தித்துப் பார்க்கவும் துணிய முடியாத - தேவனுக்கு முன்பாகப் பூரண சற்குணரா யிருத்தல் என்ற - விஷயத்தை நாம் செய்யக் கூடும்படிக்குத் தேவன் செயல்படுகின்றார்! "நான் தேவனைப் போல் இருக்க முடியும்!" ஆச்சரிய மான கிருபை!

பரிசேயன் தான் பிறரை விட மேன்மையானவன் என்று நினைத்தான் (லூக். 18). கிறிஸ்தவர்கள் "தேவனைப் போலிருக்கும்" சிலாக்கியமுள்ளவர் களாக இருக்கின்றார்கள். என்ன ஒரு இலக்கு! எபேசியர்கள் தேவனைப் பின்பற்ற வேண்டும் என்று அவர்களுக்குப் பவுல் கூறினார் (எபே. 5:1). நான் தேவனுடைய சாயலில் படைக்கப்பட்டவனாக இருக்கின்றேன் (ஆதி. 1). தேவனைப் போலிருத்தல் என்பதே என் இலக்காக உள்ளது! "பூரண சற்குணர்" என்ற வார்த்தையை அர்த்தமற்றதாய் ஆக்கிவிடாதீர்கள். ஆம், இது "வயதுவந்த, பக்குவமான, சார்பு நிலை பூரணத்தன்மையைச் சாதிக்கின்ற" என்று அர்த்தப்பட முடியும். ஆயினும், பேச்சாளர் ஒருவர் தமது வார்த்தையை விளக்கப்படுத்தும் சிலாக்கியமுள்ளவராக இருக்கின் றார், இயேசு "தேவனைப் போல் பூரண சற்குணராயிருங்கள்" என்று கூறினார். தேவன் தேவனாகவே இருக்கின்றார்! அவர் - வெறுமனே "வயது வந்த" அல்லது "பக்குவம் அடைந்த" வராக மட்டும் இன்றி - பூரண சற்குணராக இருக்கின்றார். அவர் "பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்" என்றிருக் கின்றார். பரிசுத்தமான தேவன், பூரணப்படாத எவரொருவருடனும் அல்லது ஏதொன்றுடனும் ஒன்றும் செய்வதற்கு இல்லை. தேவனுடன் நடக்கின்றவர்கள் பூரணப்பட்டவர்களாக இருக்க வேண்டும்! தேவனு டனான உங்களுடைய உறவைத் தவிர வேறு எதைப் பற்றியும் நீங்கள் ஜாக்கிரதையாயிருக்கத் தேவையில்லை.

## பூரணப்படுதல் என்பது நமது இலக்காக உள்ளது!

நமது இலக்கு என்ன என்பதே நம்மில் பலருக்குத் தெரிவதில்லை. பூரணப்படுதல் என்பதே நமது இலக்காக உள்ளது. பூரணப்படுதல் என்பது விருப்பத் தேர்வாகவோ அல்லது குறைந்தபட்ச அளவானதாகவோ இருப்பதில்லை. பரலோகம் செல்லுதல் என்பது நமது இலக்கு அல்ல; பரலோகத்தை நமக்குள் கொண்டுவருதல் என்பதே நமது இலக்காக உள்ளது. பூரணப்படுதல் என்பதுதான் எப்போதுமே தேவனுடைய

*இலக்காக இருந்துள்ளது. ஆதாம் [இதில்] தவறினார் (ஆதி. 3). நியாயப் பிரமாணம் [மக்களைப்] பூரணப்படுத்தத் தவறிற்று (எபி. 7:19; 10:1). பூரணப்பட்ட மனிதரான கிறிஸ்து, பூரணமான பலியைச் செலுத்தினார் (எபி. 5:9; 10:12, 14). "விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவரு மாயிருக்கிற இயேசுவை நோக்குதல்" என்பதே தீர்வு என்று எபிரெயருக்கு எழுதிய நிருபம் (12:1) கூறுகிறது. செல்வந்தனும் இளைஞனுமாயிருந்த ஒரு அதிகாரியிடத்தில் இயேசு, "பூரண சற்குணனாயிருத்தல்" எவ்வாறு என்று கூறினார் (மத். 19:21). "பூரண சற்குணராயிருத்தல்" என்ற கருத்து, பல்வேறு வடிவங்களில் புதிய ஏற்பாட்டில் முப்பது முறைகளுக்கு மேல் காணப் படுகிறது. அவற்றில் சுமார் பன்னிரு முறைகள் மட்டுமே நாம் பரலோகத் தைப் பற்றி அக்கறைகொள்ளும்படி ஊக்குவிக்கப்படுகின்றோம். "பகுதி கிறிஸ்தவம்" என்று ஒன்றுமில்லை. பூரண சற்குணராயிருத்தல் என்பதே பவுலின் விருப்பமாக இருந்தது (பிலி. 3:12-15). அவர் அடைந்திருந்ததில்லை. கிறிஸ்து இயேசுவுக்குள் பூரணத் தன்மையுள்ளவராக ஒவ்வொரு மனிதரையும் முன்னிறுத்துதல் என்பதே பவுலின் விருப்பமாக இருந்தது (கொலோ. 1:27, 28). வேத வசனங்கள் தேவனுடைய மனிதரைத் தேறினவராக்குகிறது (2 தீமோ. 3:15-17). நாம் சகல வித நற்கிரியைகளிலும் சீர் பொருந்தினவர்களாகும்படி தேவன் விரும்புகின்றார் (எபி. 13:21). அன்பு என்பது "பூரண சற்குணத்தின் கட்டாக" உள்ளது (கொலோ. 3:14). தேவனு டைய வசனத்தைக் கைக்கொள்ளுகிறவர்களிடத்தில் தேவ அன்பு மெய்யாகப் பூரணப்பட்டிருக்கும் (1 யோவா. 2:5). சகோதரர்கள் தேறினவர்களாகவும் பூரண நிச்சயமுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும் என்று பவுல் ஜெபித்தார் (கொலோ. 4:12). கீழ்ப்படிதலுள்ள செய்கைகள் விசுவாசத்தைப் பூரணப்படுத்துகிறது (யாக். 2:22). பூரணப்பட்டவர்களாக வும் நிறைவானவர்களாகவும், ஒன்றும் தேவையற்றவர்களாகவும் இருத்தல் என்பதே கிறிஸ்தவ வாழ்வின் இலக்காக உள்ளது. தேவன் மாத்திரமே நம்மை பூரணப்படுத்துகிறார். தேவன் மாத்திரமே உடைந்துபோன, உதவியற்ற, பலவீனமான மனிதர்களிடம் செயல்படுகின்றார் என்பது முரண்பாடுபோல் தோன்றுகிற மெய்யுரையாக உள்ளது. "என் கிருபை உனக்குப் போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்" (2 கொரி. 12:9அ). எனக்குள் உள்ள தேவன் பூரணராயிருக்கின்றார். எனக்குள் உள்ள கிறிஸ்து பூரணராய் இருக்கின்றார். எனக்குள் உள்ள பரிசுத்த ஆவியானவர் பூரணராயிருக்கின்றார்.*

# மனச்சாட்சி

## 1 கொரிந்தியர் 8:7-13; 10:25-30

> *"இதனால் நான் தேவனுக்கும் மனுஷருக்கும் முன்பாக எப்பொழுதும் குற்றமற்ற மனச்சாட்சியை உடையவனாயிருக்கப் பிரயாசப்படுகிறேன்" (அப். 24:16).*

ஏர்ல் ஸ்டேன்லி கார்டனர் அவர்களிடத்தில் மன்னிப்பை வேண்டிக் கொண்டு,[1] நான், மனித மனச்சாட்சி என்பது "கடைசிப் புகலிடத்தின் நீதிமன்றமாக/முற்றமாக" உள்ளது என்று நினைக்கின்றேன். தேவன் இன்னும் தேவனாகவே இருக்கின்றார் என்பதை மனிதனுக்கு நினைவூட்டுவதற்காகவே தேவன் மனிதனுக்குள் மனச்சாட்சியை வைத்தார். மனச்சாட்சி என்பது, ஒழுக்கம் நிறைந்த மனிதனின் முடிசூடிய மகிமையாக உள்ளது. விலங்குகளுக்கு உள்ளுணர்வு உண்டு, ஆனால் அவைகளுக்கு மனச்சாட்சி இல்லை. ஒரு நாய் என்பது நாயாகவே உள்ளது. அது ஒரு பூனையாக இருக்கத் தேர்வு செய்துகொள்ள முடியாது. விலங்குகள் ஒழுக்கமுள்ளவைகளும் அல்ல, அவைகள் ஒழுக்கமற்றவைகளும் அல்ல - அவைகள் ஒழுக்கம் என்ற கருத்துக்கு அப்பாற்பட்டவைகளாக உள்ளன. மனிதன் ஒழுக்கமுள்ளவனாக இருக்கின்றான். அவன் ஒரு சித்தத்தை, ஒரு தேர்ந்துகொள்ளுதலைக் கொண்டிருக்கின்றான். மனிதன் ஒரு "பரிசுத்த வானாகவோ" அல்லது ஒரு "பிசாசாகவோ" இருக்க முடியும். ஆயினும் தேவன் மனிதனைக் கைவிட்டுவிடவில்லை; அவர் நன்மையை ஊக்கப் படுத்துவதற்கும், பாவத்தின் குற்ற உணர்வை ஒரு நபருக்குள் உணர்த்து வதற்கும் உள்கட்டமைப்பு வாய்ந்த எச்சரிக்கை அமைப்பு ஒன்றை உண்டாக்கினார். குற்ற உணர்வு என்பது ஒரு நண்பனுமல்ல, அது ஒரு விரோதியும் அல்ல. புகழ்பெற்ற உளவியலின் நம்பிக்கைகளுக்கு நேர்மாறான வகையில், குற்ற உணர்வு என்பது இரட்சிப்பில் முதல் படியாக இருக்க வேண்டும். கிறிஸ்துவின் இரத்தம் மட்டுமே நமது பாவத்தையும் குற்றத்தையும் கழுவ முடியும்.

தேவனைப் போல, வேதாகமத்தைப் போல, பரிசுத்தமான வாழ்வைப் போல, மனச்சாட்சியும் கூட, ஒரு வீட்டு நினைவாக, வெறும் நகைச்சுவையாகியுள்ளது:

> "மனச்சாட்சி என்பது, பார்வையிடுதல் முடிவடையாத மாமியாரைப் போன்றுள்ளது."

> "மனச்சாட்சி என்பது உங்கள் சகோதரி ஒரு செயலைச் செய்யும் முன்பே, அதைப்பற்றி உங்கள் தாயிடம் அதைப் பற்றி நீங்கள் கூறச் செய்கிறது."

*"மனச்சாட்சி என்பது சிலவேளைகளில் குளிர்ந்த பாதங்களுக்குச் செல்ல வேண்டிய பாராட்டைப் பெற்றுக் கொள்ளுகிறது."*

*மனச்சாட்சியை மறந்துவிடக் கூடாது அல்லது ஒரு நகைச்சுவையாகக் குறைக்கப்பட்டு விடக் கூடாது. சமீப காலங்களில் பள்ளிகளில் நடக்கும் துன்பகரமான துப்பாக்கிச் சூடுகளில், எந்த இரண்டு வார்த்தைகள் கவனத்தைக் கவரக் கூடிய அளவுக்குத் தவறவிடப்படுகின்றன? "பாவம்" மற்றும் "மனச்சாட்சி" என்பவைகளே! நாம் விரக்தியுடன் கைகளைப் பிசைகின்றோம்! "நன்மை செய் என்பவர்கள்" எல்லா வகையான தீர்வுகளையும் கொண்டுள்ளார்கள், ஆயினும் அவற்றில் பெரும்பான்மையானவை, புத்திக் கூர்மையை அவமானப்படுத்துகின்றன. பள்ளிகளில் துப்பாக்கி பற்றிய அதிக சட்டங்களும் உலோகக் கண்டு பிடிப்புக் கருவிகளும் அதிகமாகும். இவைகள் காயத்திற்குக் கட்டும் துணிகளாக உள்ளனவே தவிர, குணமாக்குதல்களாக இருப்பதில்லை! நோய்க்குறிகள் சிகிச்சையளிக்கப்படுகின்றன; வாக்குகள் வாங்கப்படுகின்றன; வன்முறை தொடருகிறது. "சரியானது மற்றும் தவறானது" (பாவத்தை ஒப்புக் கொள்ளுதல்) மற்றும் மனச்சாட்சியை மேம்படுத்துதல் ஆகியவை பற்றிய விழிப்புணர்வை நாம் வேண்டிக் கேட்கின்ற வரையில் இவ்விதமான வன்முறைகள் மிகவும் மோசமானவைகளாகிக் கொண்டுதான் இருக்கும். இந்தக் கொள்கைகள் இல்லங்களில் போதிக்கப்படுவதில்லை, மற்றும் இவைகள் பள்ளியின் விதிகளுக்கு எதிரானவைகளாக உள்ளன! எனக்குப் பல விஷயங்கள் தெரியாது, ஆனால் எனக்கு இரு விஷயங்கள் தெரியும்: (1) பள்ளியில் துப்பாக்கி கொண்டு "சுடுகின்றவர்கள்," சரியான மற்றும் தவறான விஷயங்கள் பற்றிப் போதிக்கப்பட்டிருந்தது இல்லை, (2) இவர்கள் கிறிஸ்தவ மனச்சாட்சிகளை மேம்படுத்தியிருந்தது இல்லை. பெற்றோர்களும், பள்ளிகளும் மற்றும் நகரங்களும் ஒவ்வொரு குழந்தைக்குள்ளாகவும் நல்மனச்சாட்சி ஒன்றை ஆயத்தப்படுத்த வேண்டும் - இது எவ்வளவு விரைவாக நடக்கிறதோ, அவ்வளவு நல்லது - என்பது தெளிவாக உள்ளது!*

*நாம் "நமது ஆத்துமாக்களை உளவியல் கடைக்கு விற்றுவிட்டோம்." நாம் இறையியலினால் அல்ல, உளவியலினால் வழிநடத்தப்படுகின்றோம். உளவியலானது பாவத்தின் உண்மை நிலையைக் கண்டனம் செய்கிறது; உளவியலில் மனச்சாட்சிக்கு இடமில்லை. உளவியல், வாழ்வின் இடர்ப்பாடான நிலைகள் யாவற்றிலும் தோல்வியடைகிறது. மனச்சாட்சி என்பது கல்விக்கும் தத்துவத்திற்கும் பொருள் காண முடியாத ஒரு புதிராக உள்ளது. ஒழுக்கங்களை இப்போது "மதிப்பீடுகள்" இடமாற்றுகின்றன. கலாச்சார மதிப்பீடுகளும் தோல்வியடைகின்றன. நீங்கள் ஒரு நல்மனச்சாட்சியுடன், மனச்சாட்சியை மறுக்க முடியாது! அது அங்குதான் உள்ளது! அது மறுக்கப்பட முடியாது! மனச்சாட்சி என்பது மனிதனுக்குத் தேவனுடைய பதில் ஆளுநராக உள்ளது. இது அவரிடமிருந்தே [தேவனிடமிருந்தே] தனது கட்டளைகளை எடுத்துக் கொள்ளுகிறது என்பது அதிகாரம் வாய்ந்ததாக உள்ளது. மனச்சாட்சி என்பது, தேவன் இருக்கின்றார் என்பதற்கு வலிமை வாய்ந்த ஒரு நிரூபணமாக உள்ளது! மனச்சாட்சி என்பது நமது மாபெரும்*

நண்பராகும் அல்லது நமது மிகமோசமான விரோதியாகும். மனச்சாட்சி மரிக்கிறபோது, நம்பிக்கை மறைகிறது. உடலில் இருந்து உணர்வுகள் ஊற்றெடுப்பதுபோல, ஆத்துமாவில் இருந்து மனச்சாட்சி வெளியேறுகிறது. மனச்சாட்சியின் ஆளுகை என்பது, மாம்சத்தின் இச்சைகளின்மீது ஆத்துமாவின் ஆளுகையாக உள்ளது. தேவனுடனான நமது அன்றாட நடை என்பது ஒரு "மனச்சாட்சி நடையாக" உள்ளது.

ஒரு முதிய இந்தியர் இதை மிகச்சிறந்த வகையில் விளக்கப்படுத்தினார். அவர், தன்னைக் கட்டுப்படுத்துவதற்காகத் தனக்குள் இரு நாய்கள் சண்டையிட்டுக் கொண்டிருப்பதாகக் கூறினார். அருகில் நின்ற ஒருவர், "வெற்றி பெறுகிறது யார்?" என்று கேட்டார். அதற்கு, அந்த முதியவர், " 'சென்று அவனைப் பிடித்துக் கொள்' என்று நான் கூறுகின்றதுதான்!" என்று பதில் அளித்தார்.

## மனச்சாட்சி என்பது எதுவாக இருப்பதில்லை

*(1)* மனச்சாட்சி என்பது சட்டமோ, எழுதப்படாத சட்டமோ அல்லது தரஅளவையோ அல்ல. இங்கே நமது மாபெரும் தவறான கருத்து கிடக்கிறது. மனச்சாட்சியானது நமக்கு எது சரி எது தவறு என்று கூறுவதில்லை. மனச்சாட்சி என்பது நமது வழிகாட்டியல்ல; அது ஒரு தார்க்கோலாக (ஊக்கமூட்டுவதாக) உள்ளது! மனச்சாட்சியானது நல்லவற்றை ஏவுகிறது, மற்றும் நாம் பாவம் செய்யும்போது கடித்துக் கிழிக்கின்றது. தாவீது, "என் பாவம் எப்பொழுதும் எனக்கு முன்பாக நிற்கிறது" (சங். 51:3ஆ) என்று கூறினார். மனச்சாட்சி என்பது, நமக்குள்ளாக உள்ள "வேண்டியது" என்பதாக உள்ளது. நாம் சரியானவற்றைச் செய்ய வேண்டும் என்று மனச்சாட்சி கூறுகின்றது, ஆனால் எது சரியானது என்பதை அது நமக்குக் கூறுவதில்லை. எழுதப்படாத விதி - சட்டம், தர அளவை - தேவனுடைய வசனமாக (வேதாகமமாக) உள்ளது. அங்கீகரிக்கின்ற மனச்சாட்சியைப் போன்று சிலிர்ப்பூட்டுவது எதுவும் இல்லை; குற்றமுள்ள மனச்சாட்சியை விட அதிகமாக ஆக்கினைத் தீர்ப்பிடுவது எதுவும் இல்லை. மனச்சாட்சி என்பது நமது "ஒழுக்க ரீதியான காவலர்" என்பதாக உள்ளது. முடிவாக, "அது தவறானதாக இருந்தது! அதைப் பற்றி ஏதாவது செய்!" என்று மனச்சாட்சி கத்துகிறது. மனச்சாட்சி என்பது சட்டமாக இருப்பதில்லை, அல்லது அது சட்டத்தை உருவாக்குவதும் இல்லை. ஆயினும் மனச்சாட்சி சட்டத்தை முன் யூகித்து சட்டத்தைப் பற்றிய ஒரு புரிந்துகொள்ளுதலைக் கொண்டுள்ளது. ஒரு சட்டம் கட்டுப்படுத்துகிறது என்பதை மனிதன் புரிந்துகொள்ளுகிறபோது, மனச்சாட்சி அதன்படி பதில்செயல் செய்கிறது. மனச்சாட்சி ஒரு உண்மை என்பதாக உள்ளது.

மனச்சாட்சி என்பது ஒரு இரட்டைப் பணிப்பொறுப்பைக் கொண்டுள்ளது - சட்டத்தை இயக்குதல் மற்றும் நீதிபரிபாலனம் செய்தல். மனச்சாட்சி, தனது சட்டத்தை இயக்கும் பணிப்பொறுப்பில், ஒரு செயலின் சரியான மற்றும் தவறான தன்மையின்மீது முடிவு செய்கின்றது. இது

சட்டம், அறிவு, புரிந்துகொள்ளுதல் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்துள்ளது. மனச்சாட்சி, தனது நீதிபரிபாலனப் பணிப்பொறுப்பில், மன்னிக்கின்றது அல்லது குற்றப்படுத்துகின்றது. இது நமது உணர்வுகளை ஈடுபடுத்துவதாக உள்ளது. தாவீது விபசாரமும் கொலையும் செய்திருந்த தினால், அவரது இருதயம் (மனச்சாட்சி) அவரை அடித்து நொறுக்கிற்று (1 சாமு. 24:5; 2 சாமு. 11:14, 15; 12:9; 24:10). தேவனிடத்தில் தாவீது கதறியது, ஒரு சுத்த இருதயத்திற்கானதாகவும், ஒரு புதிய மற்றும் சரியான ஆவிக்கானதாகவும் இருந்தது (சங். 51:10). மனச்சாட்சிக்கு எதிராகச் செயல்படுதல் என்பது எப்போதுமே தவறானதாக உள்ளது (ரோமர் 14:23).

(2) மனச்சாட்சியானது எப்போதுமே ஒரு பாதுகாப்பான வழிகாட்டியாக இருப்பதில்லை. பவுல் சபைக்கு எதிராக ஒரு முழு நாசம் செய்து பழிவாங்கியிருந்தார்; அவர் கிறிஸ்துவைத் துன்பப்படுத்தி, ஸ்தேவானைக் கல்லெறிதலில் பங்கேற்றிருந்தார். இவை யாவையும் ஒரு நல்மனச்சாட்சியுடனேயே செய்யப்பட்டிருந்தன (அப். 23:1). உங்கள் மனச்சாட்சியை நீங்கள் மாற்றுவது இல்லை; பவுல் தமது மனச்சாட்சியை ஒருக்காலும் மாற்றியது இல்லை. நீங்கள் உங்கள் தகவலை, உங்கள் அறிவை, உங்கள் உறுதிப்பாட்டை மாற்றுகின்றீர்கள். பவுல் மேலும் சிறப்பாகக் கற்றுக் கொண்டபோது, அவரது மனச்சாட்சி அவரை மாற்றியது. மனச்சாட்சி, சத்தியத்தைத் தவறாக்கவோ அல்லது தவறை சத்தியமாக்கவோ முடியாது. வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், மனச்சாட்சி என்பது ஒரு மிக உயர்வான செயல்விளைவுள்ள வழிகாட்டியாக இருக்க முடியும். ஆழ்ந்தறிவுள்ள விசுவாசத்தில் சில தாய்மார்கள் தங்கள் குழந்தைகளை - எல்லா நல்மனச்சாட்சியுடனும் - முதலைகளுக்குத் தூக்கியெறிந்து விடுகின்றார்கள். மனச்சாட்சியானது இரட்சிப்பது இல்லை - அதனால் [மனச்சாட்சியால்] இரட்சிக்க முடியாது. ஒரு சுத்த மனச்சாட்சி என்பது சரியாக இருத்தலுக்கு உத்தரவாதமாக இருப்பது இல்லை. ஒருவர், தமது மனச்சாட்சிக்கு எதிராகச் செல்லுதல் என்பது எப்போதுமே தவறானதாக இருக்கையில், மனச்சாட்சியைப் பின்பற்றுதல் என்பது எப்போதுமே சரியானதாக[வும்] இருப்பது இல்லை. மனச்சாட்சியானது நமது தகவலின், நமது உறுதிப்பாட்டின் இரக்கத்தில்தான் உள்ளது. நாம் வேத வசனங்கள் மற்றும் கருத்துணர்வு ஆகியவற்றைக் கொண்டு மனச்சாட்சிக்குச் சரியான தகவல் அளிக்க வேண்டும். தாவீது பாவம் செய்யாதபடிக்கு தமது இருதயத்தில் தேவனுடைய வசனத்தைக் காத்துக் கொண்டார் (சங். 119:11). நீங்கள் தேவனுடைய கட்டளைகளின் மீது சாய்வதினால் அவைகளை உடைத்து விட முடியாது.

நான் ஒரு விமான ஓட்டியாக இருக்கின்றேன். ஆகாய விமானங்களின் பயணத்தில் ஒரு திசைக்காட்டுகிற கருவி பயன்படுத்தப்படும், ஆனால் ஒரு திசைகாட்டும் கருவியானது குதிக்கவோ, முன்னதாக ஓடவோ, அல்லது பின்னாக விழுந்து விடவோ முடியும். நீங்கள் ஒரு விமானத்தில் ஒரு DG (directional gyro) திசை காட்டும் நிலை வட்டக் கருவியுடன் பறக்கின்றீர்கள். நீங்கள் அந்த DG யை திசைகாட்டும் கருவியினால் பறக்கும் மட்டத்திற்கு அமைக்கின்றீர்கள். ஒவ்வொரு பதினைந்து நிமிடங்களுக்கு ஒருமுறை,

நீங்கள் அந்த DG யை திசைகாட்டும் கருவியுடன் இசைவுபடும் வகையில் மீண்டும் அமைக்கின்றீர்கள். இதே போன்ற வழிமுறையில்தான், நாம் நமது மனச்சாட்சியின்படி வாழ்கின்றோம்; இருப்பினும், அன்றாடம் நமது மனச்சாட்சியானது தேவனுடைய வசனத்திற்கு இசைவுபடும் வகையில் மீண்டும் அமைக்கப்பட வேண்டும். மனச்சாட்சி நம்மை வேண்டிக் கேட்கின்றது, ஆனால் அது நம்மைக் கட்டாயப்படுத்துவது இல்லை. நாம், கடியாரத்திற்குத் தக்கபடி நமது வாழ்வை அட்டவணைப்படுத்தலாம், ஆனால் கடிகாரம் என்பது அப்போதும் சூரியனைக் கொண்டு தீர்மானிக்கப் படுகிறது. மனச்சாட்சி என்பது நமது சித்தத்திற்கு பதில் அளிப்பது இல்லை.

(3) மனச்சாட்சி என்பது "மனிதனுக்குள் தேவனுடைய குரலாக" இருப்பது இல்லை. வேதாகமம்தான் [தேவனுடைய] குரலாக உள்ளது மனச்சாட்சி என்பது "மனிதனுக்குள் உள்ள மனிதனின் குரலாக" உள்ளது. நாம் அதற்குக் கட்டளையிடுவது இல்லை; அதுவே நமக்குக் கட்டளை யிடுகின்றது. ஷேக்ஸ்பியர் என்பவர், "மனச்சாட்சி என்பது நம் எல்லாரை யும் கோழைகளாக்குகின்றது" என்று கூறினார். நாம் அதற்கு மேற்பட்ட வர்களாக இருந்தபோதிலும், அதற்குக் கீழ்ப்பட்டவர்களாகவே இருக்கின் றோம். சட்டம் என்னவாக இருக்கவேண்டும் என்று கூறுவதற்கு நீதிமன்றம் முன் அனுமானம் செய்வது இல்லை. இது சட்டம் இயற்றும் துறையின் பணிப்பொறுப்பாக உள்ளது. சட்டம் கூறுகிறது என்ன என்பதை தீர்மானிக் கவும் அதன்படி செயல்படவுமே நீதிமன்றம் நாடுகிறது. மனிதனின் தர்க்கம்தான் சட்டத்தை தீர்மானிக்கிறது; மனிதனின் மனச்சாட்சி அதை [சட்டத்தை] நிறைவேற்ற நாடுகிறது. சட்டம் இல்லையேல் நீதிமன்றம் சக்தியற்றதாகி விடும்; நீதிமன்றம் இல்லையேல் சட்டமும் அதே அளவுக்குச் சக்தியற்றதாகி விடும்.

மனச்சாட்சியுடன் இணைக்கப்பட்டிராத மதிநுட்பத்தின் எந்தத் தோற்றமும் வீணாக்கப்படுகிறது. சரியானது மற்றும் தவறானது ஆகிய வற்றிற்கு இடையில் உள்ள வேறுபாடு சாத்தானுக்குக் கூடத் தெரியும். சாத்தான் ஊமையாக இருந்தான் என்று ஒருவரும் ஒருபோதும் குற்றம் சாட்டியது இல்லை! மனச்சாட்சி என்பது, "ஒருவர் தமது சொந்த செயல் பாட்டின் பண்பை முடிவு செய்கின்ற துறையாக, வல்லமையாக அல்லது உள்ளான கொள்கையாக" இருக்கிறது. மனச்சாட்சி என்பது, ஒரு மனிதன் தனக்குத்தானே, ஒரு ஒழுக்க நெறியுரைக்கும் நபரைப் போல் பேசுதலாக உள்ளது. ஆகவே, ஒரு மனிதனின் மனச்சாட்சி, அவரது சொந்த உறுதிப் பாட்டின் மீது தவிர, இன்னொருவரின் உறுதிப்பாட்டின் மீது பதில் செயல் செய்ய இயலாது. இந்தக் கொள்கையினால், புறஜாதியார் "தங்களுக்குத் தாங்களே நியாயப்பிரமாணமாயிருக்கிறார்கள்'' (ரோமர் 2:14ஆ). ஒருவனும் தொடராதிருந்தும் துன்மார்க்கர் ஓடிப் போகிறார்கள் (நீதி. 28:1). கிறிஸ்தவர்கள் ஒவ்வொரு எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்த வேண்டும் (2 கொரி. 10:5). மனச்சாட்சி, தேவனிடத்தில் மனிதனின் எண்ணப்போக்கைப் பிரதிபலித்து, மனிதன், தேவனுடைய எண்ணப்போக்கை அறியச் செய்கிறது. மனச்சாட்சி அதன் நியாயத்தீர்ப்பில் வகைப்படுத்தப்படுகிறது. இது காரணம் எதுவும் தராமலேயே நியாயத்

தீர்ப்பை வெளியாக்குகிறது. மனச்சாட்சி தனது தீர்ப்புகளில் முற்றானதாக உள்ளது. பேரம் பேசுதலோ, சமரசம் செய்தலோ இருக்க முடியாது. மனச்சாட்சி தனது நியாயத்தீர்ப்பில் தனித்துவம் வாய்ந்ததாக உள்ளது. மனச்சாட்சிக்கு இலஞ்சம் கொடுக்க முடியாது. உங்கள் மனச்சாட்சியை ஒருக்காலும் மீறி விடாது இருங்கள். கிறிஸ்தவர் என்ற வகையில் நீங்கள் ஒருபோதும் கடமையிலிருந்து ஓய்ந்திருப்பது இல்லை என்பதை எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

## மனச்சாட்சியும் வேத வசனங்களும்

"மனச்சாட்சி" என்பதற்குரிய சரியான வார்த்தையைப் பழைய ஏற்பாடு பயன்படுத்துவது இல்லை. ஆயினும் இது "இருதயம்" என்று அழைக்கப் படும் பகுதியாக உள்ளது. தாவீது, இஸ்ரவேல் மற்றும் புறதெய்வ வணக்கத் தார் கூட மனச்சாட்சியின் நிமித்தமாகவே தேவனுக்கு முன்பாக மனந் திரும்பினார்கள். இன்றைய நாட்களில் மக்கள் மனச்சாட்சியைப் பற்றி அறியாமல் இருக்கின்றார்கள் அல்லது அதை மறுக்கின்றார்கள். உங்கள் புதிய ஏற்பாட்டைப் படியுங்கள். அதில் மனச்சாட்சியைப் பற்றியுள்ள மறைமுகக் குறிப்புகளினால் (முப்பத்தியோரு முறை) நீங்கள் திகைப் படைவீர்கள். ஆயினும் இதற்கான மிகச் சரியான வார்த்தை ஒரே ஒரு முறைதான் காணப்படுகிறது (யோவா. 8:9). இந்த உண்மையும் கூட, கவனத்தைக் கவருவதாக உள்ளது. இந்தக் குறிப்பட்ட சந்தர்ப்பப் பொருளானது, "விபசாரத்தில் பிடிக்கப்பட்ட பெண்ணைப்" பற்றியதாக உள்ளது. மனச்சாட்சியினிமித்தமாக, [அவளைக்] குற்றம் சாட்டியவர்கள் இயேசுவின் பார்வையின் கீழ் அமைதியாக [அவ்விடம் விட்டு] நடந்து சென்றார்கள். மலைப்பிரசங்கத்தை அதிலும் குறிப்பாக பாக்கியங்களை வாசித்துப் பாருங்கள். இயேசுவும் பாக்கியங்களும் ஒன்றே. பாக்கியங்கள் என்பவை ஆவிக்குரியனவாக, மனச்சாட்சியாக மற்றும் இயேசுவாகவே உள்ளன.

''மனச்சாட்சி'' என்ற வார்த்தையானது வேதாகமத்தில் மூன்று எழுத்தாளர்களால் மட்டும் பயன்படுத்தப்பட்டது: யோவான், பேதுரு மற்றும் பவுல். பவுல் இந்த வார்த்தையை இருபது முறைகள் பயன் படுத்தினார் (அவற்றில் எட்டு முறைகள், மாம்ச உணவை உண்ணுதலைக் குறித்துப் பயன்படுத்தப்பட்டன). 1 பேதுரு 3:15-21ல் பேதுருவின் வார்த்தைகள் நம்மைப் பற்றி இழுக்கின்றன. சுவிசேஷ ஊழியம் என்பது மனச்சாட்சியில் இருந்து வெளிவருகிறது. இது சுவிசேஷ ஊழியத்தைப் பாதுகாக்கும். ஞானஸ்நானம் என்பது மனச்சாட்சியின் செயலாக உள்ளது, இது மனிதனின் தகுதி வாய்ந்த கிரியையாக இருப்பதில்லை. மனிதன் தன்னு டைய இரட்சிப்பினால் பாதுகாப்பாய் இருக்க வேண்டுமென்று தேவன் விரும்புகின்றார். கனவுகள், உணர்வுகள் மற்றும் "நான் இப்படி நினைக்கின் றேன்'' என்பவை கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுவது இல்லை. மனச் சாட்சி ஞானஸ்நானத்தை மதிப்பிடுகிறது.

வேதாகமத்தின் மாபெரும் எடுத்துரைப்பு ஒருவேளை எபிரெயர் 4:12ல்

*காணப்படுகிறதாக இருக்கலாம்: ''தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது.'' வேறு எதுவும் செய்ய இயலாத செயல் என்ற வகையில் வேதாகமமானது ஆத்துமாவை ஆழ்ந்து சோதிக்கின்றது. தேவனுடைய வசனமானது தேவனை நம்மிடத்திற்கும், நம்மை தேவனிடத்திற்கும், மற்றும் நம்மை நம்மிடத்திற்கும் கொண்டு வருகிறது.*

*வேதாகமம் பின்வருபவற்றை வெளிப்படுத்துகிறது:*

- ... *பலவீனமான மனச்சாட்சி (1 கொரி. 8:7)*
- ... *அசுத்தமான மனச்சாட்சி (தீத்து 1:15)*
- ... *சுத்த மனச்சாட்சி (1 தீமோ. 3:9)*
- ... *நல்மனச்சாட்சி (எபி. 13:18)*
- ... *[இரும்புச் சூட்டுக் கோலினால்] சூடுண்ட மனச்சாட்சி (1 தீமோ. 4:1-3)*
- ... *சாட்சியிடுகிற மனச்சாட்சி (ரோமர் 2:15)*
- ... *நமது மனச்சாட்சியின் ஒரு சாட்சி (2 கொரி. 1:12)*

*மனச்சாட்சியானது தேவனுடைய வசனத்தினால் தராதரப்படுத்தப்பட வேண்டும் என்பதே தெளிவான முடிவாக உள்ளது. இது பழமைவாதம் (ஆரோக்கியமான உபதேசம்) மற்றும்* orthoproxy *(பரிசுத்தமான வாழ்வு) ஆகியவற்றை உள்ளடக்குகிறது.*

## உறுதிப்பாட்டில் மனச்சாட்சி

*சத்தியத்தை மறுத்தல் அல்லது மதிப்பைக்குலைத்தல் என்பது உறுதிப் பாட்டை அழிப்பதாக உள்ளது. சத்தியம் ஒரு பொருட்டல்ல என்றால் உறுதிப்பாடுகளைக் கொண்டிருக்க வேண்டியது ஏன்? அக்கறை கொள்ள வேண்டியது ஏன்? ''சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்'' என்று இயேசு யோவான் 8:32ல் கூறினார். இந்த "சத்தியத்தில்" உள்ள "சத்தியத்திற்கு" எந்த மனிதனும் தனது சரியான மன நிலையில் அறைகூவல் விடுக்கமாட்டார். தேவன், மக்கள் மற்றும் வாழ்வு ஆகியவற்றைப் பற்றி வேதாகமம் நமக்கு ஆழமான உறுதிப்பாடுகளை தருகிறது. நீங்கள் உங்கள் உறுதிப்பாடுகளுடனே வாழ்ந்து மரிக்கின்றீர்கள். மனச்சாட்சி உறுதிப்பாடுகளைக் கொண்டுள்ளதால், அது எடுத்துரைப்புக் களை ஏற்படுத்துகிறது. உறுதிப்பாடு பண்பைத் தீர்மானிக்கிறது. உறுதிப் பாடு செயல்பாட்டை வேண்டுகிறது, செய்கைகளைக் கட்டளையிடுகிறது. யாக்கோபு 2:17, "விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால் தன்னிலேதானே செத்ததாயிருக்கும்'' என்று கூறுகிறது (வ. 20, 26ஐயும் காணவும்). கிறிஸ்தவர்கள் - "வசதியான மண்டலங்களில்" அல்ல ஆனால் - உறுதிப்பாடு களினால் வாழ்கின்றார்கள். இன்றைய நாட்களில் மதம் என்பதில் செய்யப்*

படுகின்றவைகளில் பெரும்பாலானவைகள் "வசதியான மண்டலங் களினால்" தீர்மானிக்கப்படுகின்றன. மனச்சாட்சிக்குத் தகவல் அளிக்கப்பட வேண்டும், பயிற்றுவிக்கப்பட வேண்டும். உடல் மற்றும் ஆத்துமாவின் பிற துறைகளைப் போலவே, மனச்சாட்சியும் பயிற்சியின் மூலமாக மேம் படுத்தப்பட வேண்டும்.

*வாருங்கள், என்னுடன் நடவுங்கள்.*

*கற்பனையின் பொருள் என்னவெனில்,*
*சுத்தமான இருதயத்திலும் நல்மனச்சாட்சியிலும் மாயமற்ற*
*விசுவாசத்திலும் பிறக்கும் அன்பே (1 தீமோ. 1:5).*

---

குறிப்பு

[1]Perry Mason mystery stories என்ற புத்தகத்தின் எழுத்தாளரான ஏர்ல் ஸ்டேன்லி கார்ட்னர் என்பவர், குற்றம் செய்ததாகத் தவறாகக் குற்றம் சாட்டப்பட்டவர் களுக்கு உதவுவதற்காக The Court of Last Resort என்ற நிறுவனத்தை நிறுவினார்.

---

## விசுவாசம், நம்பிக்கை, அன்பு

தேவனுடனான உங்கள் அன்றாட நடையை நீங்கள் எவ்வாறு அளக்க முடியும்? இது ஒரு இடர்ப்பாடுள்ள விஷயமாக உள்ளது. சரியில்லாத அளவுகோல் ஒன்று மிகச் சரியான அளவுகளை விளைவிக்க முடியாது. விதியானது தவறானதாயிருந்தால், விளைவும் தவறானதாகவே இருக்கும். சபைகளுக்கும் பிரசங்கியார்களுக்கும் எழுதிய பவுல், கிறிஸ்தவ ஆவிக்குரிய தன்மையை விசுவாசம், நம்பிக்கை, அன்பு என்பதாகத் தொகுத்துரைத்தார்: "இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக் கிறது; இவைகளில் அன்பே பெரியது" (1 கொரி. 13:13; 2 தெச. 1:3, 4; 1 தெச. 1:3; கலா. 5:6; கொலோ. 1:3-5; எபே. 3:17 ஆகியவற்றைக் காணவும்). செயற்கையான அல்லது ஆழமற்ற அளவைகளைப் பயன்படுத்தாதீர்கள். அறியப்படாத எதிர்காலத்தை நாம் அறிந்துள்ள தேவனிடத்தில் ஒப்புவிக்க ஒருக்காலும் அஞ்சாதீர்கள். கிறிஸ்துவுக்குள் பக்குவமடைதல் என்பதே நமது நோக்கமாக இருக்க வேண்டும்!

## 10

# தேவனுடன் எனது அன்றாட நடை

## ''பூரண சற்குணராயிருங்கள்'' (2)

*தேவன் நம்மைப் பரலோகத்திற்குக் கொண்டு செல்ல முயற்சி செய்வதில்லை; அவர் பரலோகத்தை நமக்குள் கொண்டு வருவதற்கே முயற்சி செய்கின்றார். தேவன் நம்மை நரகத்தை விட்டு வெளியில் இருக்கும்படி காத்துக் கொள்ள முயற்சி செய்வதில்லை; அவர் நரகத்தை நம்மை விட்டு வெளியில் இருக்கும்படி செய்ய முயற்சி செய்கின்றார். ''அந்தப்படியே, நீதிமான் ஒருவனாகிலும் இல்லை'' (ரோமர் 3:10); "எல்லாரும் பாவஞ் செய்து, தேவமகிமையற்றவர்களாகி" (ரோமர் 3:23). நான் பூரண சற்குணனாக இருக்க முடியாது, இருப்பினும் நான் பூரண சற்குணனாக இருக்கும்படி தேவன் வேண்டிக் கேட்கின்றார்! மாம்சத்தில் எவரும் பூரணப்படுத்தப் படுவதில்லை (கலா. 3:3). நாம் வாழ்வைச் சந்திக்க இயலாது, ஆனால் வாழ்வைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று மலைப் பிரசங்கத்தில் இயேசு கூறினார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக! பவுல் வாழ்வைச் சாதிக்க முயற்சி செய்ததில் விரக்தியடைந்தார் (ரோமர் 7). அவர் வாழ்வைப் பெற்றுக் கொண்டதில் மகிழ்சியாயிருந்தார் (ரோமர் 8). தேவனு டன் நடக்கின்ற மனிதர் ஒருவரை நீங்கள் தோற்கடிக்க முடியாது!*

### பாக்கியங்கள்

*நன்கு அறியப்பட்ட தேவைகள் அதிக நெருக்கமாக வாசிக்கப்பட வேண்டும். நாம் பூரண சற்குணராய் இருக்க வேண்டும் (மத். 5:48) என்று இயேசு கூறுவதற்கு முன்னர், "ஆகையால் ..." என்று அவர் கூறினார். அதற்கு முன்பு அவர் போதித்திருந்தவற்றின் - பாக்கியங்கள், "பாக்கிய வான்களாக" இருப்பதற்கான வழிமுறைகளின் - காரணமாக, நாம் பூரண சற்குணராய் இருக்க வேண்டும். சில மொழிபெயர்ப்புகள், இயேசு பயன் படுத்திய இந்த வார்த்தையை ''மகிழ்வானவர்கள்'' என்று மொழிபெயர்த்து மலிவாக்கியிருக்கின்றன. இன்றைய நாட்களில் மக்கள் உணர்வெழுச்சி, பொழுதுபோக்கு, "கேளிக்கையும் விளையாட்டுக்களும்" என்பவற்றைக் குறித்து ஏக்கமான விருப்பம் கொண்டுள்ளார்கள். இயேசு பயன்படுத்திய வார்த்தையானது, "தெய்வீக ஆசீர்வாதத் தன்மையை" அர்த்தப்படுத்துகிறது. இயேசுவே, "வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறார்" (யோவா. 14:6).*

*பாக்கியங்களில் இயேசு தம்மையே அறிமுகப்படுத்தினார். அவைகள் அவராகவே உள்ளன: இயேசுவே பாக்கியங்களாக உள்ளார்; பாக்கியங்களே இயேசுவாக உள்ளன. இந்தப் பண்புகள் தேவனுடைய இயல்பில் வேரூன்றப்பட்டு இருக்கின்றன, இவைகள் வரிசை முறையில் அமைந் துள்ளன: ஆவியில் எளிமை, துயரப்படுதல், சாந்த குணம், தேவனு[டைய நீதி]க்காகப் பசி [தாகம்] இரக்கம், இருதயத்தில் சுத்தம். இவைகள் பூரண சற்குணராயிருப்பதற்கான அடிப்படைக் குணங்களாக உள்ளன.*

*"ஆவியில் எளிமை" யாக இருத்தல் என்றால், சுயத்தை மறுத்தலாக, சுயத்திற்கு மரித்தலாக உள்ளது. நாம் பூரண சற்குணராக இருக்க முடிவதற்கு முன்னர், நாம் சுயத்தைத் துறக்க வேண்டும். தேவன் செய்ய முடியாத விஷயங்கள் இருக்கின்றன. நிரம்பியுள்ளதை அவரால் நிரப்ப முடியாது. வெறுமையாக உள்ளதையே தேவன் நிரப்ப முடியும். இயேசு, "தன் ஜீவனைக்காக்கிறவன் அதை இழந்துபோவான்" (மத். 10:39) என்று கூறினார். நாம் கொண்டுள்ள ஒரே ஒரு உடமையை - நம்மையே - தேவனு க்குக் கொடுக்க வேண்டும் என்றுதான் அவர் வேண்டுகின்றார். சுயம் என்பது நாம் கொடுக்கின்ற கடைசி விஷயமாகவே உள்ளது. நாம் பல விஷயங்களை விட்டுக் கொடுக்கின்றோம் (இதில் ஒரு முயற்சியை தபசு காலம் அல்லது லெந்து நாட்கள் எனப்படுகிறது), ஆனால் நாம் நம்மையே கொடுப்பதில்லை. தோல்வியுற்ற சுவிசேஷ ஊழியர்கள் கசப்புடன் திரும்புவது ஏன்? அவர்கள் தங்கள் பொருட்களைக் கொடுக்கின்றார்கள், ஆனால் தங்களையே தருவது இல்லை. மையத்தில் நாம் விடுதலையாகாத வரைக்கும் நாம் விடுதலையானவர்களாய் இருக்க முடியாது. உடைந்து போன ஒரு மனிதரை உங்களால் உடைக்க முடியாது; இறந்து போன ஒரு மனிதனை உங்களால் கொல்ல முடியாது. பவுல் அன்றாடம் இறந்தார் (1 கொரி. 15:31). இறந்து போன மனிதர் எதை விரும்புகின்றார்? ஒன்றையுமில்லை! விசுவாசமுள்ள கிறிஸ்தவன் ஒன்றையும் கொண்டிருக்க முடியாது, இருப்பினும் அவர் எல்லாவற்றையும் உடையவராக இருக்கின்றார் என்பது முரண்பாடுபோல் தோன்றும் மெய்யுரையாக உள்ளது (2 கொரி. 6:10)!*

## கிறிஸ்துவே நமது விசுவாசமாக இருக்கின்றார்

*நாம் பூரணமாகாதவர்களாக இருக்கின்றோம்; நமது விசுவாசம் பூரணமானவரு(இயேசு)க்குள் இருக்கிறது. நமது விசுவாசம் பூரணமானது அல்ல; பூரணமடைதல் என்பது நமது விசுவாசத்தின் குறிக்கோளாக உள்ளது. பவுல் தமக்குத்தாமே சுயநீதியை உடையவராக இருக்க விரும்பவில்லை, ஆனால் அவர் விசுவாசத்தினால் வரும் நீதியை (கிறிஸ்துவின் நீதியை; பிலி. 3:7-10) உடையவராயிருக்க விரும்பினார். தேவன் நமது பாவங்களை இயேசுவின்மீது சுமத்தினார்; தேவன் அவரது நீதியை நம்மீது ஏற்றி வைத்தார். இதுவே சுவிசேஷமாக உள்ளது. ஆச்சரிய மான கிருபை! தேவன் பாவத்தின் மீதான தமது கோபத்தைக் கிறிஸ்துவக்*

குள் ஊற்றினார் (2 கொரி. 5:17-21). சிலுவையில் இயேசு தம்முடைய தல்லாத பாவங்களைச் சுமந்தார்.

> இயேசு தமது ஜீவனை நமக்குத் தரும்படியாகவும் ...
> அவர் தமது வாழ்வை நம் மூலமாக வாழும்படியாகவும் ...
> இயேசு தமது வாழ்வை நமக்காக ஈந்தார்!

தேவன் கல்வாரியில் இயேசுவுக்குள் செய்தவற்றிற்கு நமது பதில் செயலாக உள்ளது விசுவாசமே ஆகும். மனிதன் பாவத்தில் இழந்து போகப் பட்டு, தன்னைத்தானே இரட்சித்துக்கொள்ளக் கூடாதவனாக இருந்தான். மனிதனால் செய்ய முடியாததைத் தேவன் மனிதனுக்குள் செய்தார். விசுவாசம் நம்மை அவருடையவர்களாக்குகிறது! "அவர் என்னுடையவராக இருக்கின்றார், நான் அவருடையவனாக இருக்கின்றேன்!" கிறிஸ்துவினால், கிறிஸ்துவின் மூலம், கிறிஸ்துவுக்காக, கிறிஸ்துவின் நாமத்தில் உள்ள எதுவும் பூரணப்பட்டதாக உள்ளது. இது நம்மால் அல்ல, ஆனால் அவரால் ஆனது. ஒரு வாழ்வை இயேசு எடுத்து, அதைத் தமது இரத்தத்தினால் கழுவி, அதைத் தேவனுக்கு ஒப்புக்கொடுக்கின்றபோது, அது பூரணமானதாக உள்ளது (எபி.10:14). விசுவாச வாழ்வு நமக்கு நித்திய ஜீவனை கொடுப்பதில்லை - அதுவே நித்திய ஜீவனாக உள்ளது. நம்மில் ஒவ்வொருவரும் "என்னை [சுயத்தை]" முதலில் கையாள/செப்பனிட வேண்டும். நான் பூரணப்பட தடையாயிருக்கிற எதுவும் வெறுக்கப்பட்டு, [அதிலிருந்து] மனந்திரும்பி, அறிக்கையிடப்பட்டு, நீக்கப்பட வேண்டும். இயேசு, "என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக் கூடாது'' (யோவா. 15:5ஆ); ''என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன்" (யோவா. 15:4அ; வ. 5ஐக் காணவும்) என்று கூறினார். கிறிஸ்து என்னில் உருவாக்கப்பட்டு இருக்கின்றாரா? விசுவாசம் நமக்குத் தகவல் அறிவிப்பதுமல்லாமல், நம்மை மறுரூபமாக்குகிறது.

"பூரண சற்குணராயிருங்கள்."[1]

# ஆராதனை

## மத்தேயு 15:1-14

*“உண்மையாய்த் தொழுதுகொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளும் காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; தம்மைத் தொழுது கொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார். தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ள வேண்டும் என்றார்” (யோவா. 4:23, 24).*

ஆராதனை! மனிதன் ஆராதிக்க வேண்டும். ஆராதனை பற்றி அறிந்திருந்தாலும் அல்லது அறியாமல் இருந்தாலும், எல்லாரும் ஆராதிக்கின்றார்கள். ஆராதிக்காமல் இருக்கும் சமூகம் என்று ஒன்று ஒருபோதும் இருந்தது இல்லை. மனிதன் ஆராதிக்க வேண்டும் என்பதற்காகவே தேவன் அவனைப் படைத்தார். தேவன் காலத்திற்காக அல்ல, ஆனால் நித்தியத்திற்காகவே மனிதனைப் படைத்தார். விக்கிரக ஆராதனை என்பது தவறான கடவுளை ஆராதித்தலாக உள்ளது. விக்கிரக ஆராதனை என்பது சரியான தேவனை தவறான வழிமுறையில் ஆராதிப்பதாகக் கூடும். ஒவ்வொருவரும் பின்வருவன போன்ற ஏதாவது ஒன்றை ஆராதிக்கின்றார்கள்: விளையாட்டு, வெற்றி, பெருமை, குடும்பம், கேளிக்கை, வியாபாரம், பொழுதுபோக்குகள், பாலுறவு, பணம், கல்வி, அல்லது மிகமேன்மையான ஆர்வம் கொண்டுள்ள மற்ற சில விஷயங்கள். ஆராதனை என்பது அல்ல ஆனால் மனிதன் எதை ஆராதிக்கின்றான் என்பதே வாழ்வின் உண்மையான விஷயமாக உள்ளது. உண்ண வேண்டும் என்று நீங்கள் மக்களுக்குப் போதிக்க வேண்டியதில்லை - எதை உண்ண வேண்டும் என்று மட்டுமே போதிக்க வேண்டும்.

நமது அன்றாட நடை ஒரு “ஆராதனை நடையாக” உள்ளது: “பரிசுத்த அலங்காரத்துடனே கர்த்தரைத் தொழுதுகொள்ளுங்கள்” (1 நாளா. 16:29; சங். 29:2; 96:9). ஒரு கிறிஸ்தவர் என்பவர் தமது தலை முதல் பாதம் வரையிலும் ஒரு “அல்லேலூயா” வாக இருக்க வேண்டும் (1 கொரி. 10:31). ஆராதனை என்பது அன்றாட நடையில் ஒரு விருப்பத் தேர்வாக இருப்பதில்லை. நாம், ‘‘இன்று எனக்கு அது விருப்பமில்லை என்பதாக உணருகின்றேன்!” என்று கூறிவிட முடியாது. நாம் விருப்பமாக உணர்ந்தாலும் இல்லாவிட்டாலும், தேவன் நமது ஆராதனைக்குப் பாத்திரராக இருக்கின்றார். நீங்கள் ஒரு தவறான எண்ணப்போக்கைக் கொண்டிருக்கையிலும் கூட ஒரு விஷயத்தைச் செய்வதே சரியான எண்ணப்போக்காக உள்ளது. நாம் தேவனை ஆராதிக்கின்றோம்; நாம் ஆராதனையை

ஆராதிப்பதில்லை. நாம் தேவனை ஆராதிக்கின்றோம்; நாம் துதியை ஆராதிப்பதில்லை. மோசமான விஷயங்கள் நடக்கும் போதும்கூட, தேவன் அரியணையில் அமர்ந்திருக்கின்றார். தேவனுக்கு உரியவற்றைக் கொடுத்தலே ஆராதனை என்பதாக உள்ளது. ஆராதனையில் நாம், தேவன் நமக்கு எவ்வளவு முக்கியம் வாய்ந்தவர் என்பதை அறிவிக்கின்றோம்! தேவன் தேவனாகவே இருக்கட்டும்!

ஆராதனை என்பது சபையில் முன்னுரிமை பெற்ற கூறாக உள்ளது. சபை என்பது ஆராதிக்கும் சமூகமாக உள்ளது. சபை என்பது வேறு எதைச் செய்தாலும் [செய்யாவிட்டாலும்] அது ஆராதிக்கிறது. சபையுடன் பின்வரும் மூன்று மாபெரும் வார்த்தைகள் தொடர்புபடுத்தப்பட்டுள்ளன: (1) வசனம், (2) ஆராதனை மற்றும் (3) ஊழியம். இது அவைகளின் தகுதியான வரிசை முறையாக உள்ளது. வசனம் நமக்கு ஆராதனையைப் போதிக்கிறது. ஆராதனை ஊழியத்தை உண்டாக்குகிறது. தேவனை மையப் படுத்திய ஆராதனை நம்மை சுய-முன் ஈடுபாட்டில் இருந்து விடுதலை யாக்குகிறது. மோசேயிடம் தேவன், "உன் கால்களில் இருக்கிற பாதரட்சை யைக் கழற்றிப்போடு; நீ நிற்கிற இடம் பரிசுத்த பூமி" என்றார் (யாத். 3:5). தேவனை அறியுங்கள், தேவனை விசுவாசியுங்கள், தேவனில் நம்பிக்கை வையுங்கள், தேவனை அன்புகூருங்கள், தேவனுக்குக் கீழ்ப்படியுங்கள்!

## ஆராதனையின் கவனக்குவிப்பு

தேவன்-தேவன்-தேவன்! ஆராதனையின் கவனக்குவிப்பாக இருப்பவர் தேவனே ஆவார் (நாமல்ல). "தேவன் தேவனாக இருக்கின்றார், நான் அவ்வாறு இருப்பதில்லை" யோவான் ஒரு தூதனை (இருமுறை) ஆராதிக்க முயற்சி செய்தபோது, அந்தத் தூதன் "தேவனைத் தொழுதுகொள்" என்று கூறி அவரைக் கடிந்துகொண்டார் (வெளி. 22:9ஆ). ஞாயிற்றுக்கிழமையில் சபை கூடிவந்திருக்கையில், அறிவிப்பாளர், "நாம் தேவனை ஆராதிப்பதற் காக இங்கு கூடிவந்திருக்கின்றோம்" என்று கூற வேண்டும். ஆராதனை என்பது தேவனுடைய பிரசன்னத்திற்கு நமது பதில்செயலாக உள்ளது. தேவன் பார்வையாளராக இருக்கின்றார்; பார்வையாளர் தேவனாக இருப்பதில்லை. தேவனுடைய பிரசன்னத்திற்குள் வருதல் என்பது அடிப்படை முன்தகுதியாக உள்ளது. ஆகையால், ஆராதனை என்பது தேவனை எதிர்கொள்ளுதலாக உள்ளது. ஏசாயா 6ல், ஏசாயா வழக்கப்படி ஆராதிக்கச் சென்றார் - ஆனால் இம்முறை அவர் தேவனைக் கண்டதினால் மாறுபட்ட சூழ்நிலை ஏற்பட்டது! தேவனைக் கண்டு அவர் ஆராதித்தார். நீங்கள் காணும் போது நீங்கள் ஆராதிக்கின்றீர்கள்! நீங்கள் தேவனைக் காண்பதற்காக அவரை ஆராதிப்பதில்லை. நாம் தேவனை அறிய வேண்டும், அவரை உணருதல் என்பது இருப்பதில்லை. நாம் தேவனை அறிய முடியும் ஆனால் எந்த மனிதனும் எந்த வேளையிலும் தேவனை உணர்ந்தது இல்லை. ஆராதனை என்பது தேவனைக் காண்பதற்காகவே தவிர, தேவனைப் பற்றிய சொந்த அனுபவம் ஒன்றைப் பெறுவதற்காக அல்ல. பேசுவதால் அல்ல, தேவனைக் கவனித்துக் கேட்பதினாலேயே ஆராதனை தொடங்குகிறது.

தேவனைக் காணுதல் என்றால், அமைதியில் சிந்தையிழந்து நன்றியுணர் வினால் மூழ்கடிக்கப்படுதல் என்பதாக உள்ளது. ஆராதனை என்பது இந்த பூமியில் நடைபெறக் கூடிய மிகவும் அவசரம் வாய்ந்த, கணச்சிறப்புமிக்க, மகிமையுள்ள செயலாக உள்ளது. நாம் தேவனை சரியாகப் பெறும் பொழுது, நாம் சரியாக ஆராதிக்கின்றோம். இது யாவும் தேவனுடனேயே தொடங்குகிறது.

ஆகையால், ஆராதனை என்பது சுயத்தைக் கைவிடுவதால் மட்டுமே வருகிறது. நாம் தாழ்மைக்காக ஜெபிக்கின்றோம்; உண்மை நிலையில், தாழ்மையே நாம் ஜெபிக்கக் காரணமாகிறது. ஆராதனையானது, சுயத்திற் குச் சாவுமணியாக உள்ளது. நீங்கள் "உங்கள் தாழ்மையைக் குறித்துப் பெருமை பாராட்ட" முடியாது. நீங்கள் உங்களையே பிரியப்படுத்த முயற்சி செய்கையில் தேவனை ஆராதிக்க முடியாது. "இதில்-எனக்கு-என்ன-உள்ளது?" என்பது ஆராதனையாக இருப்பதில்லை. ஆராதனை என்பது "நான் விரும்புகின்றேன்" அல்லது "நான் விரும்பவில்லை" என்று குறைத்து விடப்பட முடியாததாக உள்ளது. சுயநலமான உறுப்பினர்கள் மட்டுமே, "இதிலிருந்து நான் ஏதொன்றையும் பெறவில்லை" என்று கூறி வெளியேறு கின்றார்கள். ஆசீர்வதிக்கப்படாமல் எந்த மனிதனும் ஒருபொழுதும் தேவனைக் கண்டிருப்பது இல்லை! ஆராதனையில் நீங்கள் கொடுக்கின்றீர் கள், பெறுவதில்லை! ஆராதனை என்பது, "ஒரு சிறிது இறையியல் தெளிக்கப்பட்ட இரண்டு குவியல் கலங்கிய கருத்துக்கள்" என்பதாக இருப்பதில்லை. ஆராதனையில், நாற்காலிகளை ஒழுங்குபடுத்தி விளக்கு களை மங்கலாக எரியவிடுதல் என்பது அடங்கி இருப்பதில்லை. ஆராதனையை இசைக் கூத்து மேடையாக்காதீர்கள்! ஆராதனை என்பது சிறுவர்களிடத்தில் திருப்பி விடக் கூடாத அளவுக்கு மிகவும் பரிசுத்தமான தாக உள்ளது. தேவனை மகிமைப்படுத்துதல் என்பதற்குத் தவிர வேறு எதற்கும் ஆராதனையைப் பயன்படுத்துதல் என்பது அதை அவமதிப்பதாக/ தவறாகப் பயன்படுத்துவதாக உள்ளது. பழையதைப் பிடித்துத் தொங்கிக் கொண்டிருத்தல் அல்லது புதியதைப் பரிசோதித்துப்பார்த்தல் என்பது இன்றைய நாட்களில் நமது மிக அத்தியாவசியமான தேவையாக இருப்பதில்லை; நமது ஆராதனையிலும், நமது வாழ்விலும் தேவனுக்கு முன்னுரிமை கொண்டவர்களாக இருத்தல் என்பதே நமது தேவையாக உள்ளது. பரிசுத்த விஷயங்களின் முக்கியத்துவத்தைக் குறைக்கின்றவர்கள் யாரும் ஆவிக்குரிய முறையில் வளர மாட்டார்கள்.

## ஆராதனையின் வடிவமைப்பு

ஆராதனை என்பது இன்றைய நாட்களில் இடர்ப்பாடு மிகுந்ததாக உள்ளது, இது மூன்று மாபெரும் உண்மைகள் புரிந்துகொள்ளப்பட்டு, நடைமுறைப் படுத்தப்படும் வரையிலும் அவ்வாறே இருக்கும். இந்த உண்மைகள் யாவை? ஆராதனை என்பது பின்வரும் விஷயங்களை உள்ளடக்கி இருக்கிறது: (1) ஒரு பரிசுத்த வேளை, (2) ஒரு பரிசுத்த இடம், மற்றும் (3) ஒரு பரிசுத்த மார்க்கம். இவற்றை மறுக்கவோ மாசுபடுத்தவோ

முடியாது. வெளிப்படுத்தின விசேஷம் புத்தகம் "கர்த்தருடைய நாள்" பற்றித் தொடர்ந்து பேசுகிறது. ஞாயிற்றுக்கிழமை என்பது தனித்துவம் வாய்ந்ததாக உள்ளது. கர்த்தருடைய நாளில் சபை கூடிவருகிறது. கர்த்தருடைய பந்தி என்பது சபை கூடுகைக்கு உரியது. அது இங்கும், அங்கும் தனிநபர்களாலோ அல்லது தனிமையிலோ ஆசரிக்கப்பட முடியாததாக உள்ளது. புதிய ஏற்பாட்டில் "கர்த்தருடைய நாள்" மற்றும் "கர்த்தருடைய பந்தி" என்பவை இணைக்கப்பட்டுள்ளன - அவை விவாக ரத்து செய்யப்படக் கூடாது! சபை கூடி வரும்போது (நீங்கள் "ஆராதனைக்குச் செல்லுகின்றீர்கள்"), குறிப்பிட்ட விஷயங்கள் செய்யப் பட வேண்டும். ஆம், நாம் யாவருமே ஆசாரியர்களாக இருக்கின்றோம், ஆனால் நாம் எல்லா வேளைகளிலுமே ஆசாரியர்களாகப் பணியாற்று வதில்லை. ஆராதனை தொடங்குகிறது, பின்பு நின்று விடுகிறது. நாம் யாவரும் ஆராதனையில் ஈடுபட்டிருக்கையில் குறிப்பிட்ட சில விஷயங்கள் நடைபெறுகின்றன.

நாம் ஆவியோடும் உண்மையோடும் ஆராதிக்கின்றோம் (யோவா. 4:23, 24). இது எண்ணப்போக்கு, செயல் ஆகிய இரண்டையுமே உள்ளடக்கு கிறது. ஒன்றைக் கொண்டிருந்து இன்னொன்றைக் கொண்டிராதிருப்பது என்பது நமது ஆராதனையைத் தகுதியிழக்கச் செய்கிறது. ஏதாவது ஒன்றை மட்டும் கொண்டிருத்தல் என்பது சட்டம் பேசுதலாகவோ அல்லது அற்பத்தனமானதாகவோ உள்ளது. ஆராதனை என்பது உள்ளான மற்றும் வெளியான என்ற இரு விஷயங்களையும் உள்ளடக்குகிறது. விளக்கவுரைப் படி, ஆராதனை என்பது நமது இருதயத்தைச் செயல்விளக்கப்படுத்தும் ஒரு நடவடிக்கையாக உள்ளது. ஆராதனை என்பது *நாம்* செய்கின்ற ஒரு விஷயமாக உள்ளது! ஞாயிற்றுக்கிழமையில் சகோதர சகோதரிகள் சில விஷயங்களைச் *செய்வதற்காகக்* கூடிவருகின்றார்கள். அவர்கள் [சும்மா] உட்கார்ந்து இருப்பதற்காக மட்டும் வரக்கூடாது. "சபையில்" தூங்குதல் என்பது ஆராதித்தல் ஆகாது. தேவன் எப்போதுமே ஆராதனையைச் செயற்படுத்தும்படி ஆணையிட்டுள்ளார். தேவன் எப்போதுமே ஆராதனை யில் நடைபெற வேண்டிய குறிப்பிட்ட சில "விஷயங்களை" குறிப்பிட்டுள் ளார். ஆராதனையில் *வடிவமைப்பு* என்பது அத்தியாவசியமானதாக உள்ளது.

ஆராதனையின் வடிவமைப்பின் மீதுதான், வரலாற்றில் முதல் கொலை நடைபெற்றது. (ஆதி. 4:3-8ல் காயீன், ஆபேல் ஆகியோரின் விவரத்தை வாசிக்கவும்). ஆராதனையின் வடிவமைப்பை மீறியதாலேயே நாதாப், அபியூ ஆகியோர் உயிருடன் எரிக்கப்பட்டார்கள் (லேவி. 10:1, 2). உடன்படிக்கைப் பெட்டியைத் தொட்டதினால் ஊசா [கர்த்தரால்] அடிக்கப்பட்டுச் செத்தார், ஏனெனில் அந்த நிகழ்ச்சி முழுவதுமே, தேவன் அறிவுறுத்தியிருந்த வடிவமைப்பை மீறிய செயலாக இருந்தது (2 சாமு. 6:3, 6, 7). *சரியான* தேவனை ஆராதித்தல் மட்டும் போதாது. *சரியான* தேவனை *சரியான* வகையில் ஆராதிக்க வேண்டும்! இல்லையென்றால், "[அவர்கள்] வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள்" (மத். 15:9அ) என்று தேவன் கூறுகின்றார். பணிமுறைமையை ஒருக்காலும் வடிவமைப்பின் மீது

*வைக்காதீர்கள்! வடிவமைப்பின்றி நீங்கள் பணிசெய்ய முடியாது. சரியான வடிவமைப்பு சரியான பணிமுறைமையை அனுமதிக்கிறது. ஒவ்வொன்றும் அனுமதிக்கப்படக் கூடியதாக உள்ளதா? ஆராதனை என்பது ஒரு வித்தை விளையாட்டாக உள்ளதா? புறதெய்வ வணக்கத்தார் தங்கள் ஆராதனையில் விலைமாதர்களைக் கொண்டிருந்தார்கள். புதுமை என்பது வேத வசனங்களில் ஒருபோதும் ஒரு ஒழுக்கநெறியாக இருந்தது இல்லை. ஆராதனையின் அடிப்படை நோக்கத்தின்மீது நாம் ஒரு துணை விளைவை இடும்பொழுது, ஆராதனை களங்கப்படுத்தப்படுகிறது.*

*ஆராதனையின் "செயல்கள்" ஏளனம் செய்யப்பட்டுள்ளன, ஆனால் நீங்கள் ஆராதனையின் செயல்கள் என்று எவற்றை அழைக்கின்றீர்கள்? "[உணர்வுகள்] வெளியேறும் வழி," "வெளிப்படுத்துதல்கள்," "[செய்தி பரப்பும்] வாய்க்கால்கள்," "ஊடகங்கள்"? "செயல்கள்" (இவற்றை நீங்கள் என்னவென்று வேண்டுமானாலும் அழைத்துக் கொள்ளுங்கள்) இல்லாமல் நீங்கள் ஆராதனை செய்ய முடியாது. புதிய ஏற்பாட்டில், கிறிஸ்தவர்கள் பாடினார்கள், வசனத்தைப் படித்தார்கள், ஜெபித்தார்கள், ஐக்கியம் கொண்டிருந்தார்கள், கொடுத்தார்கள், மற்றும் கர்த்தருடைய பந்தியை ஆசரித்தார்கள். இவைகளே ஆராதனையின் "அம்சங்களாக" இருந்தன. வேத வசனங்களின்றி நாம் வசனரீதியானவர்களாக இருக்கின்றோம் என்று எவ்வாறு உரிமைகோர முடியும்? நாம் ஆராதனையை வலியுறுத்த வேண்டியிருக்கையில், "சபை வருகை" யைக் குறித்துத் தவறாக வலியுறுத்திக் கொண்டுள்ளோம்.*

*ஆராதனை என்பது ஒரு உற்பத்தியாக, இசை நிகழ்ச்சியாக, அல்லது ஒரு சாதனை நிகழ்ச்சியாக இருப்பதில்லை. ஆராதனை என்பது ஒரு பொழுதுபோக்கு நிகழ்ச்சியாக இருப்பதில்லை. "நமது ஆராதனை தேவனைப் பிரியப்படுத்துகிறதா?" என்ற கேள்வியே அளவுமாணியாக உள்ளது. அது அவ்வாறு செய்கிறதா, அதற்குப் பதிலாக அது நம்மைப் பிரியப்படுத்துகிறதா? ஏசாயா 1ல், தேவன் இஸ்ரவேல் மக்களின் பலிகளைத் தாம் வெறுத்ததாகக் கூறினார்! அவர்கள் ஆராதனையைப் பிறழ்வுபடுத்தி இருந்தார்கள். ஏசாயா 2ல், இஸ்ரவேல் மக்கள் தேவனை விட்டு, விக்கிரகங்களின் பக்கமாய்த் திரும்பியிருந்தார்கள். அவர்கள் இன்னமும் பக்தியுள்ளவர்களாகவே இருந்தார்கள், இருப்பினும் ஆக்கினைக்குத் தீர்க்கப்பட்டார்கள். ஆராதனை என்பது பங்கேற்றலை வேண்டுகிறது. உற்றுநோக்குதலானது கவனிப்பவர்களை ஏற்படுத்துகிறது. சபையில் நுகர்வாளர்கள் என்பவர்கள் எடுப்பவர்களாயிருக்கின்றார்கள், அவர்கள் கொடுப்பவர்களாய் இருப்பதில்லை. தொலைக்காட்சி நம் இல்லங்களில் மதங்களைப் பெருக்கெடுத்து ஓடச் செய்கிறது. சுவிசேஷப் பிரசங்கியார்கள், அப்படிப்பட்ட "காட்சி வேளையுடன்" போட்டியிட முடியாது. நமது தொலைக் கட்டுப்பாட்டுக் கருவியைக் கொண்டு, நாம் ஒவ்வொரு அலைவரிசையாக மாற்றி எதுவெல்லாம் நமக்கு ஏற்புடையதென்று காண முடியும். நாம் சலிப்படையும் போது, இன்னொரு அலைவரிசைக்கு மாற்ற முடியும். தொலைக்காட்சி சபையானது, பாரம்பரியம், உபதேசம், வழிபாட்டு முறை, ஆவிக்குரிய புலன்கடந்த உணர்வு நிலை ஆகிய எதையும் கொண்டிருப்ப*

*தில்லை. இதை முறையாக/தவறாமல் கவனிக்கின்ற மக்கள், உண்மையான சபை இப்படிப்பட்டதாகவே உள்ளது என்று நினைக்கின்றார்கள். தொலைக்காட்சியானது திறன், கொண்டாட்டம், உணர்வெழுச்சி ஆகியவற்றைக் கொண்டுள்ளது! [ஆனால்] அதில் இறையியல், பயபக்தி, சிந்தனை, மாற்றம், அல்லது தூய்மையான ஆராதனை என்பவற்றிற்கு இடம் இருப்பது இல்லை. ஆராதனை அனுபவங்களை ஆராதிக்க முயற்சி செய்யாதீர்கள்! ஆராதனை அனுபவங்களை உண்டாக்க முயற்சி செய்யாதீர்கள். தேவனை நாடுங்கள்; பரிசுத்தமான கர்த்தருக்கு முன்பாக பயபக்தியுடனும் பெரும் மரியாதையுடனும் விழுந்து வணங்குங்கள்!*

*ஆராதனை, (1) ஒரு பரிசுத்த வேளை, (2) ஒரு பரிசுத்த இடம், மற்றும் (3) ஒரு பரிசுத்த மார்க்கம் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. தேவனை ஆராதியுங்கள்.*

## ஆராதனையின் நிகழ்முறை

*ஆராதனைக்கு ஒரு சரியான வழிமுறையும் பல தவறான வழிமுறைகளும் உள்ளன. சரியான வேளையும், இடமும் மற்றும் வடிவமைப்பும் (மார்க்கமும்), ஏற்புடைய நிகழ்முறையை அனுமதிக்கின்றன. சபை செய்கின்ற எல்லாவற்றிலும் ஆராதனையே மையப்பொருளாக உள்ளது. ஆராதனையில் சபை என்பது சபையாக உள்ளது. ஆராதிக்காத உறுப்பினர்கள் பணிவாய்ப்பற்று இருக்கின்றார்கள். தேவன் தம்மீது பெருவிருப்பம் கொள்ளப்படுவதற்காகப் பெருவிருப்பம் கொண்டுள்ளார். சாத்தான்கூட நமது ஆராதனையை விரும்புகின்றான். அவன் "இப்பிரபஞ்சத்தின் தேவனாக" இருக்கின்றான் (2 கொரி. 4:4). அவன் தன்னை ஆராதிக்கும்படி கிறிஸ்துவைச் சோதித்தான் (மத். 4). சபை தேவனை ஆராதிக்காத வரையிலும் அது என்ன செய்கிறது என்பதைப் பற்றி சாத்தான் கவலைப் படுவதில்லை. இதனால்தான் சாத்தான் நமது ஆராதனையைக் களங்கப் படுத்துவதற்கு அவ்வளவு கடினமாகப் பாடுபடுகின்றான். உலகிற்கான ஒரே நம்பிக்கை சபை என்பதாகவே உள்ளது. சபைக்கான ஒரே நம்பிக்கை ஆராதனை என்பதாகவே உள்ளது. ஆதிசபையார் ஆராதிக்கும் சபையாராக இருந்த காரணத்தினால், அவர்கள் ஆத்துமாக்களை இரட்சிப்புக்கு உட்படுத்தினார்கள். ஞாயிற்றுக்கிழமையில் ஆராதிக்கும் வேளையானது வாரத்தின் சுயநலம் மிகுந்த வேளையாக இருக்கக் கூடாது. தற்கால ஆராதனையில், ஆழமான நாத்திகவாதம் ஒளிந்துள்ளது. சுயத்திற்கு ஊழியம் செய்யும் ஆராதனை, ஆராதனையாக இருப்பதில்லை. ஆராதனையில் (அனுபவங்களில்) எனக்கு என்ன நடக்கிறது என்று மதிப்பிடுதல் என்னை மனிதனாக்காமல், "தேவனாக்குகிறது." சுயதிருப்தியை ஆராதனையுடன் சமப்படுத்தும்போது, ஏதோ சில விஷயங்கள் தவறாகின்றன. ஆராதனை என்பது, உயர்வான துதிக்கும், பரிசுத்த வாழ்வுக்கும் நமது தேவனை மையப்படுத்திய வேண்டுகோள்களாக உள்ளது. ஆராதனையைப் பொறுத்தமட்டில், தேவன் அதிலிருந்து என்ன பெறுவார் என்றோ அல்லது அவர்கள் அதிலிருந்து என்ன பெறுவார்கள் என்றோ கூறாதீர்கள்;*

தேவனைத் துதிப்பது சரியானது என்பதாலேயே அவரைத் துதிக்கும்படி அவர்களுக்குக் கூறுங்கள்.

யோவான் 4:23ஐ மீண்டும் வாசியுங்கள். "தொழுதுகொள்ளுகிறவர்கள்" என்பதே திறவுகோல் வார்த்தையாக உள்ளது. நாம் ஆராதனையக் கட்டமைத்து, திட்டமிட்டு, உண்டாக்க முயற்சி செய்கின்றோம். தேவன் "தொழுது கொள்ளுகிறவர் களை" ஏற்படுத்துகின்றார். உண்மையான ஆராதனையாளர்கள் மட்டுமே ஆராதிக்கின்றார்கள். ஆராதனைக்கான திறவுகோலானது ஆராதிப்பவருக் குள் இருக்கிறது. சபையானது உறுப்பினர்களிடத்தில் அதிகமானவற்றைக் கேட்பதினால் தோல்வி அடைவது இல்லை; அது மிகவும் கொஞ்சமாகக் கேட்பதினாலேயே தோல்வி அடைகிறது. ஆராதனை என்பது ஒரு விபத்தாக இருப்பது இல்லை. நாம் ''ஆராதனையின்'' மீது செயல் படுகின்றோம். தேவன் ''ஆராதிப்பவர்கள்'' மீது செயல்படுகின்றார். மக்கள் ஆராதனையில் ஏதொன்றையும் முதலீடு செய்யாது இருக்கும்போது, அவர்கள் அதிலிருந்து எதையும் பெற்றுக்கொள்ளாமல் இருக்கின்றார்கள்.

இது தயாரிப்பை வேண்டிக் கேட்கிறது. ஞாயிற்றுக்கிழமை சபை கூடுதல் என்பது வாரத்தின் மிக முக்கியமான நிகழ்ச்சியாக இருக்க வேண்டும். அதைப் பற்றி உறுப்பினர்கள் அன்றாடம் சிந்தித்து, ஆழ்ந்து ஆராய்ந்து பார்த்து, அதைக்குறித்து ஜெபிக்க வேண்டும். உறுப்பினர்கள் ஆராதிக்கத் தயாராக வரவேண்டும். ஆராதனைக்குத் தயாரிப்பதில், உங்கள் சனிக்கிழமை இரவுகளைக் கவனமாகக் காத்துக் கொள்ளுங்கள்! பாவிகளை உண்மையான ஆராதனையாளர்கள் ஆக்குதல் என்பதே அவர்களை இரட்சிப்பதற்கான தேவனுடைய திட்டமாக உள்ளது. ஆராதனையில் நாம், தேவனுடைய பிரசன்னத்திற்கு உரியவர்கள் அல்ல என்று அறிகின் றோம், ஆயினும் நாம் அங்கிருக்கின்றோம்! நாம் அதற்குத் தகுதியானவர்கள் அல்ல - அது தேவனுடைய கிருபையினாலேயே ஆயிற்று. ஆராதனையை முக்கியமானதாகக் கருதுங்கள். யாரோ ஒருவர், "நாம் நமது பணியை ஆராதிக்கின்றோம், நாம் நமது விளையாட்டில் பணியாற்றுகின்றோம், நாம் நமது ஆராதனையில் விளையாடுகின்றோம்" என்று கவனித்துள்ளார். நாம் இரட்சிக்கப்பட்டவர்களாய் இருக்கவேண்டும் என்பதற்காக மட்டும் அல்ல, ஆனால் ஊழியம் செய்யவும் இரட்சிக்கப்பட்டு இருக்கின்றோம். ஆவிக்குரிய மக்கள் ஆவிக்குரிய ஆராதனையை ஏறெடுக்கின்றார்கள். ஆராதனை, நேரம், முயற்சி மற்றும் தியாகம் ஆகியவற்றை வேண்டிக் கேட்கிறது. ஆராதனை என்பது பணியாக உள்ளது. ஆராதனை என்பது பங்கேற்பாக உள்ளது. ஆராதனை என்பது, நம்மைக் காட்டிலும் பெரிதான ஒன்றிற்காக, நாம் நம்மையே கைவிடுவதற்கான ஒரு வழியைக் கண்டறிதலாகவே உள்ளது. தனக்காகவே வாழ்கிற சபையானது மரிக்கின்ற சபையாக உள்ளது.

ஆராதனை என்பது தேவனுடைய வசனத்தின் சத்தியங்களைக் கற்றுக் கொள்வதினால் விளைகிறது! வேதாகம ரீதியான அறியாமை என்பது ஆழ்ந்தறிவுள்ள ஆராதனையை விளைவிக்க இயலாது. வேதாகம ரீதியான பிரசங்கித்தலில் இருந்து மட்டுமே ஆழமிக்க ஆராதனை என்பது வர

*முடியும். நான் எவ்வாறு வாழ்கின்றேன் என்பது நான் தேவனைப் பற்றி விசுவாசிப்பது என்ன என்பதற்குச் சாட்சியாக உள்ளது. நாம் எவற்றை விசுவாசிக்கின்றோமோ, அவைகளே நாம் என்ன செய்கின்றோம் என்பவற்றை தீர்மானிக்கின்றன. உண்மையான ஆராதனை என்பது நம்மை எதார்த்தமான உலகத்திற்குத் தயார் செய்கிறது. மிகச் சிறந்த தனிப்பட்ட வாழ்வுகளை உண்டாக்குகிறதே மிகச் சிறந்த வெளியரங்கமான ஆராதனை யாக உள்ளது. ஆராதிக்கும் கூடுகையை ஒருவர் எவ்வாறு மதிப்பிடுகின்றார்? ஒரு மேன்மையான கிறிஸ்தவரை விட்டுச் செல்வதினாலேயே! தேவனு டனான அன்புறவு என்பது, தேவனுடனான நமது அன்றாட நடையில் மிகவும் வலிவார்ந்த விஷயமாக உள்ளது. ஆராதனையில் நாம், காணப் படாதவற்றைக் காணவும், அறியப்படாதவற்றை அறியவும், புரிந்து கொள்ளப்படாதவற்றைப் புரிந்து கொள்ளவும், நித்தியத்தை அனுபவிக்க வும் நாடுகின்றோம்.*

*நாம் யாரை ஆராதிக்கின்றோமோ, அவரைப் போன்றே ஆகின்றோம். விக்கிரகங்களை ஆராதித்தல் என்பது நம்மை சுயநலமும் ஒழுக்கமின்மையும் கொண்டவர்களாகவே ஆக்கும். ஆராதனையின் பண்பிலிருந்துதான் வாழ்வின் நடக்கை வருகிறது. ஒருவர், மாற்றம் ஒன்றையும் அனுபவிக்காமல் ஏதொன்றையும் ஆராதிக்க இயலாது. ஆராதனை என்பது கீழ்ப்படிதலுக்குள் வேரூன்றியுள்ளது. ஆராதனை என்பது நமது வாழ்வின் வழிமுறையாக உள்ளது. ஆராதனை இல்லையேல், நாம் பின்னோக்கிச் சென்று, தாமதப் படுபவர்கள் ஆகின்றோம். ஆராதனை என்பது கிறிஸ்துவின் கர்த்தத்து வத்திற்கு ஒருவர் - தமது முழு வாழ்வு மற்றும் இருப்பு ஆகியவற்றுடன் - பதில்செயல் செய்வதாக உள்ளது. நமது ஞாயிற்றுக்கிழமை என்பது நமது வார நாட்களைத் தீர்மானிக்க வேண்டும்.*

*ஆராதனையே பரலோகத்தின் மையச் செயல்பாடாக உள்ளது என்று, வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தைப் பற்றிய ஒரு ஆய்விலிருந்து, நாம் முடிவு செய்கின்றோம். நமது ஆராதனையில் நாம், வரவிருக்கும் பரலோகத்தின் சுவையைப் பெறுகின்றோம்.*

## *வாருங்கள், என்னுடன் நடவுங்கள்.*

*நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறதுபோலக் கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத் தானே மகிமையின்மேல் மகிமை யடைந்து மறுரூபப்படுகிறோம் (2 கொரி. 3:18).*

---

*குறிப்பு*

[1]*இதன் எழுத்தாளர், இந்தப் பகுதியில் உதவிய டேவிட் ரெக்டின் அவர்களுக்கு ஆழமான நன்றியைத் தெரிவித்திருக்கின்றார்.*

# 11

# தேவனுடன் எனது அன்றாட நடை

## பிற சிந்தனைகள் (1)

### *பாவம்*

*தேவனுடன் அன்றாட நடை என்பது தேவனுடன் பணிபுரிதல், தேவனைப் பற்றிப் பிடித்துக் கொள்ளுதல், தேவனைப் பற்றிய கருத்தறிவு கொண்டு, தேவனுக்குக் கீழ்ப்படிந்து, தேவனை மகிமைப்படுத்துதலாக உள்ளது. நாம் இதைச் செய்யாதபடி தடை செய்வது எது? பாவம் என்பதே அந்தக் குற்றவாளியாக உள்ளது. மற்ற எல்லாத் தவறுகளும் பாவத்தின் நோய்க்குறியாகவே உள்ளன. பாவம் என்பது தேவனுக்கு எதிரானதாக, அவரது அன்புக்கு எதிரானதாக, அவரது பிரமாணத்திற்கு எதிரானதாக உள்ளது. தேவன் பாவத்தை வெறுக்கின்றார். பாவத்தைப் பற்றிய ஆழ்ந் தறிவுள்ள விழிப்புணர்வு என்பது உண்மையான ஆவிக்குரிய தன்மையின் அடிப்படை அடையாளமாக உள்ளது. பாவிகளை இரட்சிக்கவே இயேசு இந்த உலகிற்கு வந்தார். நமது பாவங்கள் நம்மைத் தேவனிடத்திலிருந்து பிரிக்கின்றன. பாவத்தில் இருக்கின்ற மக்கள் மரித்தவர்களாக இருக்கின்றார் கள் (எபே. 2:1). மரித்த மனிதர்களுக்குச் சிகிச்சை தேவையில்லை; அவர்களுக்கு உயிர்தான் தேவை. கிறிஸ்தவம் என்பது சுவிசேஷமாக (ஒரு தத்துவத்தைக் காட்டிலும் மேலானதாக) உள்ளது. கிறிஸ்தவம் மட்டுமே நமது உண்மையான பிரச்சனையை - பாவம் என்பதை - குறித்துச் செயல்படுகிறது! பாவம் என்பது 100 சதவிகிதம் மீள முடியாத நரகமாக உள்ளது. இயேசு 100 சதவிகிதம் இரட்சகராக இருக்கின்றார். இதை, London Times என்ற பத்திரிக்கையின் ஒவ்வொரு தலையங்கத்தையும், “இந்த உலகத்தில் உள்ள தவறு என்ன?” என்ற கேள்வியுடன் முடித்த எழுத்தாளருக் குப் பதில் அளித்ததில் G. K. செஸ்டர்ட்டன் என்பவர் மிகச் சிறப்பான வகையில் கூறினார்:*

> *அன்பான ஆசிரியர் அவர்களுக்கு,*
> *இந்த உலகத்தில் உள்ள தவறு என்ன? அது நானே.*
>
> *தங்கள் உண்மையுள்ள,*
> G. K. *செஸ்டர்ட்டன்*[1]

*பாவத்திற்குச் சிகிச்சை என்பது தோல்வியடைகிறது. உளவியலானது,*

ஆத்துமா, பாவம் அல்லது இரட்சிப்பு என்பவை பற்றிப் பேச முடியாது. பாவம் என்பது இன்றைய நாட்களில் "வெளியானதாக" உள்ளது. வேதாகம ரீதியான பிரசங்கத்தைப் போல் இன்று மக்களை மனம் குத்தப்படச் செய்வது எதுவும் இல்லை. பாவத்தைக் கண்டனம் செய்தல் ஒன்றே இன்று பாவமாக உள்ளது. "ஆனால் நான் ஒரு நல்ல நபராக, ஒரு நேர்த்தியான மனிதனாக இருக்கின்றேனே" என்பதைக் கேள்விப்படுகின்றோம். இல்லை! நீங்கள் பாவியாக இருக்கின்றீர்கள்; நீங்கள் மனந்திரும்ப வேண்டும்.

சபை அறிவிப்புப் பலகையில் சுற்றறிக்கையாக விடப்பட்ட பின்வரும் வரைக்குறிப்புக்களுக்காக நாம், டேவிட் ஃபெட்ஸ் அவர்களுக்குக் கடன் பட்டிருக்கின்றோம்:

பாவத்தைப் பற்றிய மூன்று சத்தியங்கள்

(1) பாவம் ஒரு கடனாக உள்ளது (மத். 6:12-15).
(2) பாவம் நம்மை தொலைவில் உள்ளவர்கள் ஆக்குகிறது (ஏசா. 59:1, 2; ரோமர் 3:10, 23).
(3) பாவம் நம்மை மரித்தவர்கள் என்று அறிவிக்கிறது (எபே. 2:1).

இரட்சிப்பைப் பற்றிய மூன்று சத்தியங்கள்

(1) இயேசு நம்மை மீட்டார் (எபே. 2:13-15).
(2) இயேசு நம்மை ஒப்புரவாக்கினார் (எபே. 2:16; 2 கொரி. 5:17-21).
(3) இயேசு நம்மை மீண்டும் பிறப்பிக்கின்றார் (யோவா. 3:3, 5, 7; 2 கொரி. 5:17; 1 பேது. 1:18-25).

நம்மைக்காட்டிலும் அதிகமாக தேவன் பாவத்தினால் வெறுப்பூட்டப் படுகின்றார். தேவன்தான் நாம் பாவத்தை அளக்கப் பயன்படுத்தும் தராதரமாக இருக்கின்றார், ஆனால் சமூகம் அல்லது சுயம் என்பவையல்ல. எந்த ஒரு பாவத்திலும் மோசமான காரியம் என்னவென்றால், அது தேவனுக்கு எதிராக இருக்கிறது என்பதே. ஒவ்வொரு பாவமும் இச்சையின் விளைவானதாகவே உள்ளது (யாக். 1:12-15), அதாவது ஒருவரது இருதயத்ினுள் செல்லுகிற விஷயமாக உள்ளது. என்றாலும், தேவன் பணி செய்ய வேண்டியது எல்லாமே பாவிகளுடன்தான் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். நம்மில் பெரும்பான்மையானோர் "மிகவும் அதிகமாக" பாவம் செய்யாமல் இருத்தல் என்பதில் நிறைவடைகின்றோம். யோவான் பாவம் செய்வதை விரும்பவே விரும்பாதிருந்தார் (1 யோவா. 2:1, 2). நான் எவ்வளவு நீண்ட காலம் வாழ்கின்றேனோ, அவ்வளவுக்கு எனக்குள் உண்மையான பரலோகம் வருகிறது. அந்த அற்புதமான இடத்தில் பாவம் என்பதே இருக்காது!

## நன்றியுடைமையும் மனரம்மியமும்

நன்றியுடைமை என்பது தாழ்மையின் தாயாக உள்ளது. நாள் முழுவதும் உங்கள் வழிக்காக ஜெபியுங்கள். நாள் முழுவதும் உங்கள் வழிக்காகத் துதியுங்கள். உங்களுக்குக் கிடைத்துள்ள ஆசீர்வாதங்களை எண்ணிப்

*பாருங்கள். நாம் தேவனிடத்திலிருந்து அன்றாடம் "மிகவும் ஏராளமான" ஆசீர்வாதங்களைப் பெறுகின்றோம்: சுவாசிக்க, வாழ, மகிழ்வுடன் அனு பவிக்க. தேவனுக்கு நன்றி செலுத்துதல் என்பதே தேவனை அறிதலாக உள்ளது. தேவனுக்கு நன்றிசெலுத்துதல் என்பதே தேவனை ஆராதித்தலாக உள்ளது. நன்றியுடனிருத்தல் என்பது உலகத்தின் எழுதப்படாத சட்டமாயிருக்கிறது. அன்றாடம் தேவனுக்கு நன்றி செலுத்துங்கள். எந்த ஒரு விஷயத்தையும் வரிசையாக இருபத்தி ஒரு நாட்கள் செய்துவிட்டால், அது உங்கள் பழக்கமாக, உங்கள் இயல்பாக ஆகிவிடுகிறது. நன்றியுடனிருத்தல் என்பதை உங்கள் பழக்கமாக்குங்கள், உங்கள் இயல்பாக்குங்கள். என்ன நடந்தாலும், நன்றி நிறைந்தவர்களாய் இருங்கள் (1 தெச. 5:18). தேவன் நம்மிடத்தில் இருந்து எதை விரும்புகின்றார்? நாம் "உமக்கு நன்றி!" என்று கூறுவதைக் கேட்கவே அவர் விரும்புகின்றார். பிச்சைக்காரர்கள் இதை விட அதிகமாக வேறு என்ன கூறிவிட முடியும்?*

*அன்றாட நடையானது தேவனுடைய பிரசன்னத்தில் முழுமையாகவும் மகிழ்ச்சி நிறைந்த வகையிலும் வாழுதலாக உள்ளது. நம்மில் பலர் மன ரம்மியமாயிருக்கத் தவறுகின்றோம், ஆனால் பவுல் இதில் தவறவில்லை. அவர் நல்ல மற்றும் மோசமான வேளைகளில் மனரம்மியமாய் இருக்கக் கற்றுக் கொண்டார் (பிலி. 4:11-13). என் அனுபவத்தில், நான் வளமையைக் காட்டிலும் வறுமையை நன்கு கையாள முடியும். ஒரு சில மனிதர்களே வெற்றியை, பணத்தை மற்றும் அதிகாரத்தைக் கையாளக் கூடும். ஏழை நண்பர் ஒருவர் திடீரென்று பணக்காரர் ஆகிவிட்டார். அவர் தமது வாழ்வு முறையை மாற்றிக் கொண்டது மட்டுமின்றி, தமது நிலைப்பாடுகளையும் அழித்துப்போட்டார். நான் அவரிடத்தில் கண்ணீருடன், "நீங்கள் ஏழையா யிருந்தபோது உங்களை நான் மிகவும் நேசித்தேன்" என்று கூறினேன். உறுதிப்பாடு என்பது நாம் கொண்டுள்ளவை என்ன என்பதில் இராமல், நாம் யாராயிருக்கின்றோம் (யாருடையவர்களாய் இருக்கின்றோம்) என்பதிலேயே உள்ளது.*

# தாழ்மை + கீழ்ப்படிதல் = கீழ்ப்படிதலுள்ள ஊழியர்கள் (பாகம் 2)

## யாக்கோபு 4:6-10

> *"தெய்வ பயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள். மனைவிகளே, கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறதுபோல உங்கள் சொந்தப் புருஷருக்குங் கீழ்ப்படியுங்கள்" (எபே. 5:21, 22).*

*கீழ்ப்படிதல்!* இது அவ்வளவு ஒரு எளிய சிறிய வார்த்தையாக உள்ளது. அது கூறப்படுகிற போது, பதில்செயல் என்னவாக உள்ளது? புறக்கணித்தல், எதிர்த்து நிற்குதல், இறுக்கப்பட்ட கை முஷ்டியொன்று உங்கள் முகத்திற்கு நேராகக் காண்பிக்கப்படுகிறது! இந்த வார்த்தையைக் கூறுதல் உடனடியான யுத்தம் என்பதாக உள்ளது! இந்த வார்த்தைக்கு கருத்துணர்வு ஏதாவது உள்ளதா? ஆம்! இந்த வார்த்தை வேதாகம ரீதியானதா? ஆம்!

ஒன்றுமறியாத இந்தச் சிறு வார்த்தையானது, வேறு எந்த வார்த்தையை விடவும் அதிகமாக நமது சமூகத்தின் சுயநலத் தன்மையை நாடகப்படுத்து கிறது. இது தங்களை மதரீதியானவர்கள் என்று உரிமைகோருபவர்கள் மற்றும் மதத்தைப் புறக்கணிப்பவர்கள் ஆகிய இரு சாராரின் விஷயத்திலும் உண்மையானதாக உள்ளது. "தாழ்மை + கீழ்ப்படிதல் = கீழ்ப்படிதலுள்ள ஊழியர்" என்ற நமது இரண்டாவது பாடத்தைத் திரும்பவும் நினைத்துப் பாருங்கள். தாழ்மை என்பது நமது இருதயங்களில் மிகவும் வெதுவெதுப் பான இடத்தைக் கொண்டுள்ளது. கீழ்ப்படிதல் என்பது நமது இரத்தத்தைக் குளிர்ச்சியாக ஓடச் செய்கிறது. கீழ்ப்படிதல் என்பது "அரசியல் ரீதியாகச் சரியானது அல்ல." நாம் தாழ்மையை விரும்புகின்றோம்; நாம் கீழ்ப்படிதலை விரும்புவதில்லை. ஆயினும், தாழ்மையைப் பற்றி எழுதப்பட்டு சிறப்பாக விற்பனையாகும் புத்தகம் எதுவும் இருப்பதில்லை. கீழ்ப்படிதல் பற்றிய புத்தகம் ஒன்றை நான் ஒருக்காலும் கண்டதில்லை. இந்தப் பாடமானது நமது பாடத் தொடரில் மூன்றாவது பாடமாக இருந்திருக்க வேண்டும், ஆனால் "கீழ்ப்படிதல்" என்ற வார்த்தையை எதிர்கொள்ளும்போது பெரும்பான்மையானோர் வாசிப்பதை அல்லது கவனிப்பதை நிறுத்தியிருப் பார்கள்! நீங்கள் குறைந்தபட்சம் இதைப் பற்றிச் சிந்திப்பதற்காவது இந்தப் பதினோரு பாடங்களில் பக்குவமடைந்திருப்பீர்கள் என்று நான் நம்புகின்

றேன். தாழ்மை என்பது முடிவு அல்ல, ஆனால் அது ஒரு வழிமுறையாகவே உள்ளது. நீங்கள் கீழ்ப்படிவதற்காக உங்களைத் தாழ்மைப்படுத்துகின்றீர் கள். தாழ்மையும் கீழ்ப்படிதலும் ஊழியர்களை உருவாக்குகின்றன! சாமுவேல் வில்பர்ஃபோர்ஸ் அவர்கள், "கிறிஸ்தவம் என்பது பின்வரும் நான்கு வார்த்தைகளில் சுருக்கப்பட முடியும்: ஒப்புக்கொள்ளுதல், ஒப்புக் கொடுத்தல், உறுதிப்பாடு மற்றும் ஒப்படைத்தல்" என்று கூறினார்.[2] உறுதிப்பாட்டின் மதிப்பை எல்லாரும் பற்றிப்பிடித்துக் கொள்ளுகின்றார் கள், ஆனால் ஒருவர் உறுதிப்பாடு கொள்வதற்கு [தம்மை] ஒப்புவிக்க வேண்டும்! கீழ்ப்படிதலை நீங்கள் புறக்கணிக்கும்போது, நீங்கள் உறுதிப்பாட்டை அழித்து விடுகின்றீர்கள். கீழ்ப்படிதலின் பிரச்சனையே நமது "மக்களின் பிரச்சனையாக" உள்ளது. கீழ்ப்படிதல் என்பது வாழ்வின் இடர்ப்பாடுமிகுந்த பாடமாக உள்ளது. ஆராதனை என்பதே கீழ்ப்படிதல் தானே!

## கீழ்ப்படிதலும் திரித்துவமும்

மனிதன் தேவசாயலாகப் படைக்கப்பட்டான் (ஆதி. 1:26, 27). நாம் தேவனைப் போல, இயேசுவைப் போல இருக்க வேண்டும். தேவன் "தேவத் துவ" அல்லது திரித்துவ வகையில் இருப்பதாக வேதாகமம் வெளிப்படுத்து கிறது. பிதா தேவனாயிருக்கின்றார்; குமாரன் தேவனாயிருக்கின்றார்; ஆவியானவர் தேவனாயிருக்கின்றார். அவர்கள் சமமான வகையில் தேவனா யிருக்கின்றார்கள். மேன்மை அல்லது தாழ்வு என்பதற்கு கீழ்ப்படிதலில் எந்த இடமும் இருப்பதில்லை, இருப்பினும் திரித்துவம் என்பது தனிச்சிறந்த பணிப்பொறுப்புகளையும் தகுதியிடத்தையும் வெளிப்படுத்துகிறது. கீழ்ப்படிதல் என்பதே திரித்துவத்தின் திறவுகோலாக உள்ளது. திரித்துவத் தின் ஒருமைப்பாட்டைப் போன்றதொரு ஒருமைப்பாட்டை நாமும் கொண்டிருக்க வேண்டும் என்று இயேசு ஜெபித்தார் (யோவா. 17:20-24). நாம் கீழ்ப்படிதலைப் புறக்கணிப்பதால் ஒருமைப்பாட்டில் தவறிவிடுகின் றோம். கீழ்ப்படிதலற்ற ஒருமைப்பாடு என்பது ஒரு ஏளனக் காட்சியாக உள்ளது. கீழ்ப்படிதல் என்பது திரித்துவத்தின் [அடிப்படை] இயல்பாகவே உள்ளது. கீழ்ப்படிதல் என்பது வேதாகமக் கொள்கையின் அஸ்திபாரமாக உள்ளது.

குமாரன் ஒப்புக்கொடுத்தார். "தேவன் கிறிஸ்துவுக்குத் தலையாயிருக் கின்றார்." குமாரன் பிதாவுக்கு கீழ்ப்பட்டிருக்கின்றார்! சமமானவர்களின் மத்தியில் கீழ்ப்படிதல் நிலவுகிறது. பிதாவின் சித்தத்தை செய்வதற்கே குமாரன் வந்தார். குமாரன் இரத்த வியர்வையுடன் [கெத்செமெனே] தோட்டத்தில் "உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது" (மத். 26:39ஆ) என்று ஜெபித்தார். இயேசு மகிமைப்படுவதற்கு முன்பு அவர் தம்மை ஒப்புவிக்க வேண்டியிருந்தது (பிலி. 2:5-11). சிலுவை என்பது உள்ளவற்றி லேயே மாபெரும் செயல்விளக்கமாக இருக்கிறது. இயேசு ஒரு சிலுவையைக் கொண்டிருந்தார்; எனக்கு ஒரு சிலுவை இருக்கிறது. அவர் தமது சிலுவையைச் சுமக்க வேண்டியிருந்தது; நான் எனது சிலுவையைச் சுமக்க வேண்டும். பவுல் பின்வரும் முற்றான, நித்திய எடுத்துரைப்பைக்

*கூறினார்: "ஒவ்வொரு புருஷனுக்கும் கிறிஸ்து தலையாயிருக்கிறாரென்றும், ஸ்திரீக்குப் புருஷன் தலையாயிருக்கிறானென்றும், கிறிஸ்துவுக்குத் தேவன் தலையாயிருக்கிறாரென்றும் நீங்கள் அறிய வேண்டுமென்று விரும்பு கிறேன்" (1 கொரி. 11:3). இதை நாம் ஒப்புக்கொண்டாக வேண்டும்.*

*ஆவியானவர் [தம்மை] ஒப்புக்கொடுத்தார். திரித்துவத்தில் "திரைகளுக் குப் பின்னால்" உள்ளவர் என்ற வகையில், இவரது பணிப்பொறுப்பு "வெளிப்படையற்றதாக" உள்ளது. இயேசு நமக்கு ஆவியானவரை "அனுப் பினார்" (யோவா. 14:16, 26; 16:7-15). அப்போஸ்தலர்களுக்கு இயேசுவால் கொடுக்கப்பட்ட அனைத்து வாக்குத்தத்தங்களும் ஆவியானவருக்குள் நிறைவேற்றப்பட்டன. குமாரனை மகிமைப்படுத்துதல் என்பதே ஆவியான வரின் பணிப்பொறுப்பாக உள்ளது. அவர் தம்மீது கவனம் குவித்தால் அவர் தவறுகின்றார் [என்றாகிறது]. இன்றைய நாட்களில் ஆவியானவர் மீது ஏற்படுத்தப்படுகின்ற எல்லா வித அமளிகளினாலும் அவர் சங்கடப்படுத்தப் படுகின்றார். ஆவியானவர் மீது கவனம் குவியச் செய்கிற மற்றும் குமாரனை விட்டு வழிவிலக்குகிற எந்த ஒரு உபதேசமும் தேவதூஷணமாக உள்ளது.*

*பிதாவானவர் ஒப்புக்கொடுத்தார். அவர் வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரத்தையும் குமாரனுக்குக் கொடுத்தார் (மத். 28:18). பிதாவானவர், சபையில் எல்லாருக்கும் மேலான தலையாக இயேசுவை ஏற்படுத்தினார் (எபே. 1:19-23). குமாரன் தேவனுடைய வலதுபாரிசத்திலிருந்து ஆட்சி செய்கின்றார் (எபி. 1:3; 1 பேது. 3:22; அப். 2:34-36; எபி. 12:2; கொலோ. 3:1). பூமிக்குரிய சொற்றொடரில், பிதாவானவர் "குமாரனிடத் தில் தமது பணியைத் திருப்பினார்." மரணம் வெற்றிகொள்ளப்படும்போது, இயேசு இராஜ்யத்தைப் பிதாவினிடத்தில் திரும்ப ஒப்புவிப்பார் (1 கொரி. 15:24-26). "இராஜ்யம்" என்ற வார்த்தை கீழ்ப்படிதலை வேண்டுகிறது. கீழ்ப்படிதலில் திரித்துவம் நிலவுகிறது (உயிர் வாழ்கிறது).*

## கீழ்ப்படிதலும் வாழ்வும்

*கீழ்ப்படிதல் என்பது வாழ்வின் திறவுகோலாக உள்ளது, முற்றுப்புள்ளி!*

*(1) நாம் யாவருமே ஏதோ சிலவற்றுக்கு நம்மை ஒப்புக்கொடுக் கின்றோம். நாம் அதை அறியாமல் இருக்கலாம்; நாம் அதை ஒத்துக் கொள்ள மறுக்கலாம். மனிதர்களை அவர்களின் கால்களில் நிற்கச் செய்வதற்கு அவர்களின் முழங்கால்களை ஊன்றச் செய்ய வேண்டும். "ஆகையால் தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்" என்று யாக்கோபு கூறினார் (யாக். 4:7). மனிதன் தன் எஜமானரைத் தேர்ந்துகொள்ள மட்டுமே சுயாதீனமுள்ள வனாக இருக்கின்றான். நாம் தேவனை அல்லது சாத்தானை, கிறிஸ்துவை அல்லது சுயத்தை தேர்ந்துகொள்ள முடியும். நமது தேர்ந்துகொள்ளுத லானது - ஆசீர்வாதங்கள் அல்லது சாபங்கள் என்ற - விளைவுகளைக் கொண்டுள்ளது. புகழ்பெற்ற ஒரு நபர், அதிகமான போதைப் பொருளைப் பயன்படுத்திய காரணத்தினால் இறக்கும்போது நாம் அதிர்ச்சியடை கின்றோம். அவர் தம்மைப் போதைப் பொருட்களுக்கு ஒப்புக் கொடுத்திருந்த காரணத்தால் இது நேரிடுகிறது. நாம் நம்மை, பணம், பாலுறவு, பெருமை, அரசியல் ரீதியாகச் சரியான தன்மை, பணி, பொழுது*

போக்குகள், மதியீனம் ஆகியவற்றிற்கோ அல்லது நீதிக்கோ ஒப்புக்கொடுக்க முடியும். ஒப்புக்கொடுத்தல் என்பது ஒரு அச்சுறுத்தலாக இருக்க வேண்டும் என்று அவசியம் இல்லை; அது நமது மாபெரும் ஆசீர்வாதமாக இருக்க முடியும். ஒப்புக்கொடுத்தல் என்பது [நம்மை] விடுவிக்கவோ அல்லது அடிமைப்படுத்தவோ முடியும். ஒப்புக்கொடுத்தல் என்பது ஞானமாகவோ அல்லது மதியீனமாகவோ இருக்க முடியும்.

*(2)* நீங்கள் ஏதாவது சிலவற்றுக்கு [உங்களை] ஒப்புக்கொடுக்கும்போது, மற்றவற்றை நீங்கள் புறக்கணிக்கின்றீர்கள். நீங்கள் தனித்திருப்பதென்று தேர்ந்துகொண்டால் உங்களால் திருமணம் செய்து கொள்ள முடியாது. நீங்கள் திருமணம் செய்து கொள்ளும்போது, உங்கள் தனித்திருக்கும் தன்மையை விட்டுக்கொடுக்கின்றீர்கள். ஒப்புக்கொடுத்தலுக்கான ஒரு காரணத்தை இளம் மக்களுக்குக் கொடுக்காது இருக்கும் காரணத்தினால் வன்முறை நிகழ்கிறது. எவரொருவரும் தன்னை யாராவது ஒருவருக்கு அல்லது ஏதாவது ஒன்றிற்கு ஒப்புக்கொடுக்காத வரையில் நிறைவடைவ தில்லை. இது "அரசியல் ரீதியாக சரியானதாக" இராமற் போகலாம், ஆனால் இது வேதாகம ரீதியாக சரியானதாகவே உள்ளது. கீழ்ப்படிதல் என்பதைத் தவிர வேறு எந்த பதில்செயலும் இயேசுவுக்கு ஏற்புடையதாக இருப்ப தில்லை. நேர்ப்பொருளில் காணுகையில் எந்த மனிதரும் சுதந்திர மானவராக இருப்பதில்லை.

*(3)* சமுதாயம் ஒப்புக்கொடுத்தலை வேண்டுகிறது. நீங்கள் ஏன் சாலையின் இடது புறமாகவே வாகனத்தை ஓட்டிச் செல்லுகின்றீர்கள்? அல்லது போக்குவரத்து கட்டளை விளக்குகளில் சிகப்பு நிற விளக்கு எரியும்போது ஏன் நிறுத்துகின்றீர்கள்? சமுதாயம் உரிமைகளைக் கொண்டுள்ளது. சமுதாயத்தின் உரிமைகள் தனிநபரின் உரிமைகளை மிஞ்சி நிற்கின்றன. இது நமது வன்முறையை விளக்கப்படுத்துகிறது. சமுதாய மானது பெரும் சேதத்தை அடையும் வகையில் நாம் தனிநபர்களின் உரிமை களை அதிகமாக மேம்படுத்தியுள்ளோம். விளையாட்டில் குழுக்கள் இருக்கின்றன. விளையாட்டு வீரர்கள் தங்கள் குழுவிற்கு, பயிற்சியாளருக்கு, விளையாட்டுகளுக்குத் தங்களை ஒப்புவிக்க வேண்டும். பன்முகத்திறமை வாய்ந்த விளையாட்டு வீரர்கள் குழுவாக இணைந்து விளையாட முடியாத காரணத்தால் தோல்வி அடைவது - சில வேளைகளில் மிகவும் தீர்க்கமாகத் தோல்வியடைவது - என்பது நமது இருதயங்களை உடைந்து போகச் செய்கிறது. குழுவாக விளையாடுபவர்களே மாபெரும் விளையாட்டு வீரர்களாக இருக்கின்றார்கள்.

இதனால்தான் "இயங்கள்" என்பவை தவறானவைகளாகவும் தீங்கு நிறைந்தவைகளாகவும் இருக்கின்றன. இராணுவ வெறியியம் என்பது தவறானதாக உள்ளது. இனவியம் என்பது தவறானதாக உள்ளது. பெண்ணியம் என்பது தவறானதாக உள்ளது. தீவிரவாதப் பெண்ணிய மானது, தேவனை, மனிதனை, மதத்தை, பெண்களை, திருமணத்தை மற்றும் குழந்தைகளை வெறுக்கிறது. அவர்களுடைய கோபம் பயமுறுத்து வதாக உள்ளது. பொய்யான அவர்களின் சுயாதீனமானது அவர்களை அடிமைப்படுத்தியுள்ளது. தாய்மை என்பது தேவன் பெண்களுக்குக்

கொடுத்துள்ள மாபெரும் ஆசீர்வாதமாக உள்ளது, ஆயினும் பெண்கள் அதற்குத் தங்களை ஒப்புவிக்க வேண்டியுள்ளது. பெண்ணியவாதம் பேசும் பெண்கள் தாங்கள் ஒரு பெண்ணாக இருப்பதில் உள்ள மகிழ்வுகளை இழந்துள்ளார்கள். எனது மதிப்புமிக்க தாய் ஒரு பெண்ணியவாதியாக இல்லாதிருந்தபடியால் நான் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டு இருக்கின்றேன்.

(4) [ஆணும் பெண்ணும்] சமத்துவமானவர்கள் என்று கூறும் கொள்கை பணிக்கு உதவாது! இது, நாம் யாவரும் சமஅளவுக்குப் பொறுப்பு வாய்ந்தவர்கள் என்ற கருத்தாக உள்ளது. வீட்டு நிர்வாகத்தில் பிள்ளைகள் தங்கள் பெற்றோர்களுக்குச் சமமானவர்களாய் இருக்கக் கூடாது. "ஒரே சமையலறைக்கு இரு சமையல்காரர்கள் பொறுப்பாளர்களாய் இருக்க முடியாது" என்பது பிள்ளைகளுக்குப் போதிக்கப்பட வேண்டும். ஒரு குதிரையில் இரு மனிதர்கள் பயணிக்கும்போதும் கூட ஒருவர் இன்னொருவருக்கு முன்பாகத்தான் அமருகின்றார். [குதிரையை ஓட்டும்] கடிவாளத்திற்கு ஒருவரே பொறுப்பாளராக இருக்கின்றார்! ஆதியிலிருந்தே தேவன் யாரேனும் ஒருவர் பொறுப்பாளராக இருக்க வேண்டும் என்பதை நியமித்து இருக்கின்றார். பொறுப்பு என்பது வாழ்வின் அடிப்படைச் சட்டமாக உள்ளது. விமானப் பறத்தல்களில் பொறுப்பாளியாக உள்ள தலைமை "கட்டளையிடும் விமானி" ஒருவர் இருக்கின்றார். அவரே [விமானப் பறப்பு] யாவற்றையும் கட்டுப்படுத்துகின்றார். விமான உரிமையாளரும் பயணச் சீட்டைப் பெற்றிருப்பவரும் விமானத்தை அவரிடமே ஒப்புவிக்கின்றார்கள். அமெரிக்க அதிபர், விமானப்படையின் முதல் தரமான விமானத்தில் பயணிக்கின்றார். அவர் விமானத்தில் ஏறும்போது, பறத்தல் பற்றிய எந்த ஒரு விஷயத்திற்கும், தம்மை அந்த விமான ஓட்டியிடம் ஒப்புவிக்கின்றார். தலைவர்கள் நியமிக்க வேண்டும், ஆனால் அவர்கள் நியமிக்கும்போது, ஒப்புவிக்க [வும்] வேண்டும்! ஒப்புவித்தல் என்பது தலைமைத்துவத்தின் முக்கிய கூறாக உள்ளது. "நியமிக்காத ஒருவர் தாம் ஆதிக்கம் செலுத்தக் கூடியவற்றில் வரையரைக்கு உட்பட்டவராயிருப்பார்." ஒப்புவித்தல் என்பது மனப்பூர்வமானதாக உள்ளது; அது கட்டாயப்படுத்தப் படுவதில்லை. ஒப்புவித்தல் என்பது பலவீனர்களுக்கானதாக இராமல் பலமுள்ளவர்களுக்கானதாக உள்ளது. ஒப்புவித்தல் என்பது பொறுப்பைத் தவிர்ப்பதாக இருப்பதில்லை.

(5) எபேசியர் 5:21, 22ல், "ஒப்புவித்தல்/கீழ்ப்படிதல்" என்பதற்கான வார்த்தையானது ஒரு இராணுவ வார்த்தையாக உள்ளது. "இராணுவப் பயிற்சி முகாமில்" படைப் பயிற்சிகள் கீழ்ப்படிதலைக் கற்பிக்கின்றன. அதிகாரமுடைமை என்பது தீர்மானமானதாக உள்ளது. அதிகாரமுடைமைக்கு மரியாதை என்பது தீர்மானமானதாக உள்ளது. நாம் தேவனுக்கு, சபைக்கு, அரசிற்கு, சட்டத்திற்கு, சமூகத்திற்கு, பெற்றோருக்கு, ஆசிரியர்களுக்கு, வயதானவர்களுக்கு-ஆம் எல்லாருக்கும் கீழ்ப்படிகின்றோம்! நாம் யாவரும் படிநிலையின் கீழ் இருக்கின்றோம். சமூகம் இதைக் கற்றுக் கொள்ளும் என்றால், நமது பள்ளிகளும் கூடப் பாதுகாப்பாக இருக்க முடியும். கீழ்ப்படிதல் இல்லாதபோது, படை என்பது இருக்க முடியாது.

# கீழ்ப்படிதலும் திருமணமும்

*மனிதன் [ஆண்] என்பவன் ஆவிக்குரிய தலைமைத்துவத்தில் இல்லத்தை (மற்றும் சமூகத்தை) வழிநடத்த வேண்டும் என்பதைத் தேவன் நியமித்தார். தேவனுடைய கல்வி முறைமை ஒரே வார்த்தையில் தொகுத்துரைக்கப்பட முடியும்: அது, "ஆண்" [மனிதன்] என்பதாகவே உள்ளது. "பிதாக்களே, நீங்களும் உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல் ..." (எபே. 6:4அ). தந்தை தமது குடும்பம் பற்றி தேவனிடத்தில் கணக்கு ஒப்புவிக்க வேண்டிய வராக இருக்கின்றார். திருமணத்தில், நாம் "உரிமையாளரின் கைப்புத்த கத்தை" (வேதாகமத்தை) திருப்பிப் பார்ப்போம். வாழ்வு, இல்லம் ஆகிய வற்றின் படைப்பைப் பற்றி ஆதியாகமம் 1-3ல் வாசித்துப் பாருங்கள். தேவன் முதலில் மனிதனை [ஆணை] ப் படைத்தார். அது ஏன் என்று நாம் அறிவதில்லை, ஆனால் தேவன் அதையே செய்தார். தேவன் ஆணிலிருந்து பெண்ணைப் படைத்தார். தேவன் ஆணையும் பெண்ணையும், தேவனுட னான உறவில் வாழும்படி படைத்தார். பெண் என்பவள் ஆணுக்காகப் படைக்கப்பட்டாள், பெண் என்பவள் ஆணிலிருந்து படைக்கப்பட்டாள், பெண் என்பவள் ஆணிடத்திற்குக் கொண்டு வரப்பட்டாள், பெண் என்பவள் ஆணினால் பெயரிடப்பட்டாள், பெண் என்பவள் ஆணை மெய்சிலிர்க்கச் செய்தாள்! என்பவற்றை ஆதியாகமம் வெளிப்படுத்துகிறது. ஆணும் பெண்ணும் இந்த பூமியில் மிகவும் மாறுபட்ட படைப்புயிர்களாக இருக்கின்றார்கள். தேவன் மட்டுமே இவ்விருவரையும் எடுத்து ஒன்றாக்க முடியும் (ஆதி. 2:24; மத். 19:5)! திருமணமானது கீழ்ப்படிதல் இல்லாமல் வெற்றி பெற முடியாது (எபே. 5:22-33). இயேசு [தமது] சபைக்காக மரித்ததின் மூலம் தம்மை அதற்கு ஒப்புவித்தார்; பின்பு சபை தலையாகிய கிறிஸ்துவுக்குத் தன்னை ஒப்புவிக்கிறது. கணவர்கள் குடும்ப வாழ்வின் வேண்டுதல்கள் யாவற்றிற்கும் தங்களை முழுமையாக ஒப்புவிக்கின்றார் கள்; மனைவியர்கள் இந்த ஒப்புவித்தலுக்குத் தங்களை அகமகிழ்வுடன் ஒப்புவிக்கின்றார்கள். திருமணம் என்பது பரஸ்பரம் ஒப்புவித்தலாக உள்ளது. ஆண்களும் பெண்களும் ஒருவர் பிறருக்காகவே படைக்கப்பட்டு இருக்கின்றார்கள். அவர்கள் பிரிந்த நிலையில் இருப்பதைக் காட்டிலும் சேர்ந்த நிலையில் மிகச் சிறப்பாகச் செயல்படுகின்றார்கள். ஆண்களுடன் ஆண்கள் என்பதும், பெண்களுடன் பெண்கள் என்பதும் தாறுமாறானதாக உள்ளது.*

*எனது தந்தை என்னிடத்தில், "உன்னை விட மேலான பெண்ணை திருமணம் செய்துகொள்" என்று கூறினார். நான் அவ்வாறே செய்தேன். எனது மனைவியான ஹெலன் என்னைவிடச் சிறந்தவளாக இருக்கின்றாள். என்னிடம் அவள் கற்றுக் கொண்டதைக் காட்டிலும் அதிகமானவற்றை, நான் அவளிடம் கற்றுக்கொண்டேன். எனது வாழ்வு, எனக்குரிய எல்லா வற்றையும் அவளுக்குத் தருவதற்காக நான் என் தனிமையை விட்டுக் கொடுத்தேன். ஒரு நிலைமேடையில் தனது மனைவியை வைக்க இயலாத ஒரு மனிதரைக் குறித்து நான் பரிதாபப்படுகின்றேன்! நாம் பெண்களிடத் திலிருந்து அதிகமானவற்றை எதிர்பார்க்கின்றோம். மாபெரும் வாழ்க்கைத்*

துணைவர்களும் துணைவியர்களும் ஒருவருக்கொருவர் அகமகிழ்வுடன் ஒப்புக்கொடுக்கின்றார்கள். ஹெலன் எனது பெயரை ஏற்றுக் கொண்டு எங்களுக்குக் குழந்தைகளைப் பெற்றுத் தந்தாள். இன்னும், நானே பொறுப் பாளனாக இருக்கின்றேன். நான் அவளுக்காக, என் குடும்பத்திற்காக இறக்கவும் தயாராக இருக்கின்றேன். நானே ஆவிக்குரிய வகையில் வழி நடத்துகிறேன், நானே வீட்டின் தலைவனாக இருக்கின்றேன். கிறிஸ்து சபையில் அன்புகூர்ந்தது போல நான் அவளையும் குடும்பத்தையும் அன்புகூர வேண்டும். பிறருக்கு ஒப்புக்கொடுத்தல் மற்றும் ஊழியம் செய்தல் என்பவற்றைக் கற்காத வரையிலும் எவரொருவரும் சுயாதீனமானவராக இருப்பதில்லை.

## கீழ்ப்படிதலும் அகமகிழ்வும்

இயேசுவுக்குள் இருந்த எதுவும் மகா பெரியதென்று இந்த உலகத் தினால் கருதப்படவில்லை. “அவர் தமக்கு முன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு, ... சிலுவையைச் சகித்து’’ (எபி. 12:2அ). சந்தோஷமும் சிலுவையும்? சந்தோஷமும் ஒப்புக்கொடுத்தலும். ஊழியக்காரர்கள் எவ்வாறு இவ்வளவு சந்தோஷமாயிருக்க முடியும்? தேவையில் உள்ளவர் களுக்கு ஊழியம் செய்கின்றவர்கள் அல்லது பல ஆண்டுகளாக வியாதியி னால் துன்புற்றுக் கிடக்கின்ற தங்கள் வாழ்க்கைத் துணையைப் பராமரிக் கின்றவர்கள் எப்படி சந்தோஷமாய் இருக்க முடியும்? ஒப்புக்கொடுத்தல்! ஒரு உறவுமுறைக்கு நீங்கள் உங்களை முழுமையாக ஒப்புக்கொடுக்காத தினால் அதை அழித்துப் போடுகின்றீர்கள். ஒப்புக்கொடுக்கின்றவர்களே சந்தோஷத்தில் வாழ்கின்றார்கள். “மனைவிக்குக் கட்டுப்பட்டு மகிழ்வா யிருக்கும் கணவர்’’ என்று ஒருவரையோ அல்லது ‘‘சந்தோஷமாய் மனைவியைக் கட்டுப்படுத்துபவர்’’ என்ற ஒருவரையோ நீங்கள் ஒரு போதும் கண்டிருப்பதில்லை. ஒப்புக்கொடுங்கள், வாழுங்கள்!

*வாருங்கள், என்னுடன் நடவுங்கள்.*

தெய்வபயத்துடனே ஒருவருக்கொருவர்
கீழ்ப்படிந்திருங்கள் (எபே. 5:21).

குறிப்புகள்

[1]Michael P. Green, ed., *Illustrations for Biblical Preaching* (Grand Rapids, Mich.: Baker Book House, 1989), 341. [2]Quoted in Frank S. Mead, ed. and comp., *The Encyclopedia of Religious Quotations* (Old Tappan, N.J.: Spire Books, Fleming H. Revell Co., 1965), 106.

## 12

# தேவனுடன் எனது அன்றாட நடை

## பிற சிந்தனைகள் (2)

### அருளிரக்கம்

*குறைந்தபட்சம், பின்வரும் "வேத வசன ரீதியான" இரு வார்த்தைகள் வேத வசனங்களில் காணப்படுவதில்லை: ''திரித்துவம்'' மற்றும் "அருளிரக்கம்." தேவன் "தேவத்துவமாக" இருக்கின்றார். வேத வசனங்களில் ஒருமுறை கூட எழுதப்படாதிருப்பினும், ''அருளிரக்கம்'' என்பது [வேதாகமத்தின்] ஒவ்வொரு பக்கத்திலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது (பிலி. 2:13, 27; 2 கொரி. 3:5; 1 தெச. 3:11; 1 கொரி. 10:11-13). யாக்கோபு, "கர்த்தர் இந்த ஸ்தலத்தில் இருக்கிறார்; இதை நான் அறியாதிருந்தேன்" (ஆதி. 28:16) என்று கூறினார். யோசேப்பு, "நீங்கள் எனக்குத் தீமை செய்ய நினைத்தீர்கள்; தேவனோ ... அதை நன்மையாக முடியப் பண்ணினார்" (ஆதி. 50:20அ) என்று வெளிப்படுத்தினார். எஸ்தரிடம் மொர்தெகாய், "நீ இப்படிப்பட்ட காலத்துக்கு உதவியாயிருக்கும்படி உனக்கு இராஜ மேன்மை கிடைத்திருக்கலாமே, யாருக்குத் தெரியும்?" (எஸ். 4:14ஆ) என்று கேட்கச் சொன்னார். ஒரு சிட்டுக்குருவி [யும் கூட] எப்பொழுது விழும் என்பது தேவனுக்குத் தெரியும் (மத். 10:29-31); நமது தலையில் உள்ள முடிகள் யாவும் எண்ணப்பட்டிருக்கின்றன என்று இயேசு சொன்னார். "ஜாதிகள் ஏற்றச் சாலில் தொங்கும் துளிபோலவும் ... எண்ணப்படுகிறார்கள்" (ஏசா. 40:15அ). அருளிரக்கத்தைப் பற்றிய ஒரு படிப்பானது சிந்தையை இழுத்து நீட்டி, இருதயத்தை குளிர்விக்கிறது.*

*தேவன் நல்லவராக இருக்கின்றார். தேவன் அருளுகின்றார். சாத்தான் உயிருடன் இருந்து வேலை செய்து கொண்டிருக்கின்றான், ஆனால் தேவன் "மீன்பிடிக்கச் சென்று" விடவில்லை. அவரும்கூட நம் வாழ்வில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றார். கிறிஸ்தவம் என்பது தேயியம் [deism] (தேவன் நமது வாழ்வில் செயல்பட முடியாது என்ற தத்துவம்) அல்ல. மிக மிக அதிகமான கிறிஸ்தவர்கள், தேவன் உண்மையிலேயே இறந்து விட்டார் என்பதுபோல வாழ்ந்துகொண்டு இருக்கின்றார்கள், இருப்பினும் ஞாயிற்றுக்கிழமை வருகிறபோது, எப்போதும் நாம் தேவனுடைய உதவிக்காக ஜெபிக்கின்றோம்.*

*பெரும்பாலான மக்கள், அருளிரக்கம் என்பதை, ஒரு ஜெபத்திற்குத்*

தாங்கள் விரும்பிய வகையில் அளிக்கப்பட்ட பதில் என்பதாகவே நினைக்கின்றார்கள். யோசேப்பு தமது சகோதரர்களால் விற்கப்பட்டு, தாம் குற்றமற்றிருந்த வேளையிலும் எகிப்து நாட்டில் சிறையில் அடைக்கப்பட்ட வேளையில் அருளிரக்கத்தைப்பற்றி ஒருவேளை நினையாமல் இருந்திருக்க லாம். தேவன் அன்புகூருகிறவர்களை அவர் சிட்சிக்கிறார் (எபி. 12:5-11). பிரச்சனைகளிலிருந்து அகற்றப்பட்ட, மிக நிரந்தரமான ஆவிக்குரிய உயர்நிலை பற்றி எச்சரிக்கையாய் இருங்கள். நீங்கள் அருளிரக்கத்தைத் தொலைவிலிருந்து மட்டுமே கண்ணோக்க முடியும். ஆசீர்வாதங்கள் வருகிறபோது, எல்லா மதிப்பையும், துதியையும் மற்றும் நன்றிகளையும் தேவனுக்கே அளியுங்கள்.

"தேவன் தமது அற்புதங்களை நிகழ்த்துவதற்கு அறிவுக்கு எட்டாத ஒரு வழியில் இயங்குகின்றார்."[1] வேத வசனங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள 667 வேண்டுகோள்களில், 654க்குத் திட்டவட்டமான பதில்கள் கிடைத் துள்ளன. ஜெபமும் அருளிரக்கமும் பிரிக்கப்பட முடியாதவைகளாக உள்ளன. அருளிரக்கம் யாவும் உடனடியாகக் காணப்பட இயலாது. எதிர் காலம் (நிகழ்காலமும் கூட) சாத்தியக்கூற்றுடன் கர்ப்பமாயிருக்கிறது. ஒரு குறிப்பிட்ட விஷயம் நடக்கிற வேளை வரையிலும், ஏறக்குறைய எது வேண்டும் என்றாலும் நடக்கக் கூடும்! சிலர், "எது நடக்க வேண்டுமோ அதுவே நடக்கும், அல்லது அது வேறு விதமாயிருக்கும்" என்று கூறுகின்றார் கள். அது வேறு விதமாயிருக்காது என்பதை நீங்கள் எவ்வாறு அறிகின்றீர் கள்? இந்த நாட்களில் கூர்மதி வாய்ந்த பின்வரும் கூற்று கூறப்படுகிறது: "காலை வணக்கம். நான் தான் தேவன். இன்றைய நாளில் உன் பிரச்சனைகள் எல்லாவற்றையும் நான் கையாளுவேன் ... உம் உதவி எனக்குத் தேவை யில்லை. இந்த நாள் உமக்கு நன்றாயிருக்கட்டும்." இதை அபாயமாக்கு வதற்குப் போதுமான சத்தியம் இதில் உள்ளது. தேவன் செயல்படுகின்றார். அவர் (மற்றும் நானும்) எனது பிரச்சனைகள் எல்லாவற்றையும் கையாள முடியும். நாம் தேவனுடன் பணியாற்றுபவர்களாக இருக்க வேண்டும்! நாம் நமது சொந்த பாரங்களைச் சுமக்க வேண்டும் (கலா. 6:5). தேவனின்றி நம்மால் முடிவதில்லை; நாமின்றி தேவன் [ஒன்றும்] செய்ய மாட்டார். நாம் விடுமுறையில் இருப்பது இல்லை. சிக்கலான குப்பை போன்ற உலகத்தில், நாம் தேவனுடன் பணியாற்றிக் கொண்டு இருக்கின்றோம். அருளிரக்கம் என்பது பொறுப்பிலிருந்து தப்பித்துக் கொள்ளுதலாக இருப்பதில்லை. இது "தேவன் மீது எல்லாவற்றையும் சுமத்துதலாக[வும்]" இருப்பதில்லை. நாம் தேவனில் மிகவும் திருப்தியடைகின்றபோது, அவர் நம்மில் மிகவும் மகிமைப்படுகின்றார். தம்மையே தேவனுக்குத் தருகின்ற ஒருவர் தமக்காகத் தேவனையே பெற்றுக் கொள்ளுகின்றார்.

## உபவாசம்

இயேசு, "உபவாசம்" மற்றும் "விருந்துக் கொண்டாட்டம்" ஆகிய இரண்டையுமே போதித்தார். அவர், "நீங்கள் உபவாசிக்கும்போது ..." (மத். 6:16அ) என்று கூறினார். வேதாகமத்தின் மாபெரும் வீரர்களில் பலர்

*உபவாசித்தார்கள். சில விஷயங்கள் ஜெபத்தினாலும் உபவாசத்தினாலுமே யன்றி, வேறுவழியில் நிறைவேற்றப்பட முடியாது என்று இயேசு கூறினார் (மத். 17:21). தொடக்க கால சபையார் உபவாசித்தார்கள் (அப். 13:1-3; 14:23). உபவாசம் என்பது தேவனை மையப்படுத்தியதாக உள்ளது. தேவனைப் பற்றிய நமது புலன் உணர்வுகள் குறைவடைகின்றபோது, உபவாசமும் குறைவடைகின்றது. உபவாசம் என்பது "உள்ளானதாக" இருப்பதில்லை. உபவாசித்தல் என்பது கடினமானதாக உள்ளது; சரியான காரணங்களுக்காக உபவாசித்தல் என்பது இன்னும் கடினமானதாக இருக்கிறது. யூதேயா மக்களின் உபவாசத்திற்காகத் தேவன் அவர்களைக் கண்டனம் செய்தார் (ஏசா. 58). மாய்மாலத்தை இயேசு கண்டனம் செய்தார் (மத். 6). உபவாசம் என்பது நமது ஜெபத்திற்கு ஒரு பதிலை ஈட்டுவது இல்லை.*

*இன்றைய நாட்களில் விடுதலையிலாளர்கள் உபவாசத்தின் "உள்ளாக" இருக்கின்றார்கள் - ஆனால் அது கண்டிப்பான வகையைச் (நாற்பது நாட்கள்) சேர்ந்ததாக இருப்பதில்லை. ஆவிக்குரிய தன்மை என்பது பக்தியைக் காட்சிப்படுத்துதலாக இருக்கக் கூடாது; அது ஒரு புதுமைத் துவம், பொருளற்ற ஆர்வம் என்ற அளவுக்குக் குறைக்கப்படக் கூடாது. வேத வசனத்தில் காணப்படக் கூடிய உபவாசமானது அந்தரங்கமான தாயிருந்தது. அது ஒரு விசேஷித்த காரணத்திற்காக ஒரு விசேஷித்த வேளையில் செய்யப்பட்டதாயிருந்தது. அது ஜெபம் மற்றும் வேத வசன தியானம் போல், பொதுவானதாகவோ அல்லது அன்றாடமானதாகவோ இருந்ததில்லை. உபவாசம் என்பது சுயகட்டுப்பாட்டிற்குத் தேவனின் பயிற்சிக் களமாக உள்ளது. நாம் நல்லவைகள் சிலவற்றை மேன்மையான வைகள் சிலவற்றிற்காக விட்டுக் கொடுக்கின்றோம் (1 கொரி. 7:1-5). உபவாசம் என்பது கீழ்ப்படிதலின் ஆழ்சிந்தனை மிகுந்த செயலாக உள்ளது. இது நடைமுறையில் சுயத்தை மறுத்தலாக உள்ளது.*

*விருந்துண்பதற்கு ஒரு காலமுண்டு, உபவாசிப்பதற்கு ஒரு காலமுண்டு. இரண்டையுமே செய்யுங்கள்! நீங்கள் ஒருமுறை மட்டுமே முதியவராகப் போகின்றீர்கள் - அதை பலமாக முடியுங்கள்!*

# பரலோகம்

## கொலோசெயர் 3:1-4

*“மேலும் காணப்படுகிறவைகளையல்ல, காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு, ... காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப்படாதவைகளோ நித்தியமானவைகள். பூமிக்குரிய கூடாரமாகிய நம்முடைய வீடு அழிந்துபோனாலும், தேவனால் கட்டப்பட்ட கைவேலையல்லாத நித்திய வீடு பரலோகத்திலே நமக்கு உண்டென்று அறிந்திருக்கிறோம்” (2 கொரி. 4:17, 18; 5:1).*

பரலோகம்! தேவன், சார்லஸ் ஹோட்ஜ் (நீங்களும் கூட) பரலோகத்தில் இருக்க வேண்டும் என்று விரும்புகின்றார் என்பது என்னைப் பொறுத்த மட்டில் வியப்புமிக்க, நம்புதற்கு அரிய சத்தியமாக உள்ளது! “ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டும் என்று” தான் தேவன் விரும்புகின்றார் (2 பேது. 3:9): “எல்லா மனுஷரும் இரட்சிக்கப் படவும் சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் வேண்டும்” என்பதே அவருடைய சித்தமாயிருக்கிறது (1 தீமோ. 2:4). ஏன்? நாம் பரலோகத்திற்கு உரியவர்கள் அல்ல; நாம் அதைப் பெறத் தகுதியானவர்கள் அல்ல. தேவனைக் கண்ணோக்கி எந்த மனிதரும் உயிருடன் இருக்க முடியாது. இருந்தபோதிலும், கிறிஸ்துவுக்குள் - கிறிஸ்துவினிமித்தம் - நாம் தேவனுடைய பிரசன்னத்தில் இருப்போம்! தாவீதைப்போல, நானும் இந்த அறிவு நமக்கு மிகவும் ஆச்சரியமாக இருப்பதாகக் காணுகின்றேன் (சங். 139:6). நாம் தேவனாக இருக்க மாட்டோம், ஆனால் நாம் தேவனால் வரவேற்கப் படுவோம். இதை, வரையரைக்கு உட்பட்ட நமது சிந்தைகளினால் புரிந்துகொள்ள முடியாது; இதை, நமது வார்த்தைத் திறன்களினால் எடுத்துரைக்க முடியாது. இது மெய்சிலிர்க்கச் செய்கிறது ... தாழ்மைப் படுத்துகிறது. ஆச்சரியமான கிருபை! தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

### நாம் பரலோகம் செல்ல விரும்ப வேண்டும்

தேவனுடனான நமது அன்றாட நடையானது பரலோகத்தில் மட்டுமே முடிவடையக் கூடும்! பிந்திய வாழ்வு என்பது ஒரு பிற்பட்ட சிந்தனையாக இருக்க முடியாது. எவரொருவரும் தற்செயலாக ஒருநாள் பரலோகத்தில் விழித்து எழும்ப முடியாது. யாரோ ஒருவர், “ஒவ்வொருவரும் பரலோகம் செல்ல விரும்புகின்றார்கள், ஆனால் எவரொருவரும் இறக்க விரும்புவது இல்லை” என்று நகைச்சுவையாகக் கூறினார். ஆகையால், நமது கூற்று பின்வருமாறு திருத்தப்பட வேண்டும்: “நீங்கள் பூமியில் உள்ள வேறு

*எதைக்காட்டிலும், பரலோகம் செல்வதை அதிகமாய் விரும்ப வேண்டும்.” அதுவே அறைகூவலாக உள்ளது! தொடக்க கால சபையானது பரலோகம் பற்றிய எண்ணங்களில் மிகவும் ஆழ்ந்துபோய் இருந்திருந்தது என்றாலும், இன்றைய நாட்களில் பரலோகம் பற்றிய உபதேசமானது, மிகவும் புறக்கணிக்கப்பட்ட உபதேசங்களில் ஒன்றாக உள்ளது.*

*இந்தக் கருத்தானது - பரலோகம் மற்றும் நமது அன்றாட நடை என்பவற்றுடன் கூட - இடர்ப்பாடு மிகுந்ததாக உள்ளது. நம்மைப் பரலோகத்திற்குக் கொண்டு செல்லுதல் என்பது பிரச்சனையாக இருப்பது இல்லை, ஆனால் பரலோகத்தை நமக்குள் கொண்டுவருதல் என்பதே பிரச்சனையாக உள்ளது!*

*மதம் என்பது “உள்ளானதாக” இருக்கிறது; ஆவிக்குரிய தன்மை என்பது இன்றைய நாட்களில் நாகரீக பாணியில் மீண்டும் வந்துள்ளது. ஆயினும், பரலோகத் தைப் பற்றிய பேச்சு எதுவும் இல்லை. நாம், விளையாட்டைப் பற்றி, தட்பவெப்ப நிலையைப் பற்றி, ஸ்டாக் மார்க்கெட் பற்றி பேசுகின்றோம் - ஆனால் பரலோகத்தைப் பற்றி பேசுவதில்லை. தூதர்கள் “உள்ளானவர் களாக” இருக்கின்றார்கள்; ஆனால் அவர்களின் இல்லமாகிய “பரலோகம்” வெளியானதாக உள்ளது. எபிரெய மொழியில் “தூதன்” என்ற வார்த்தை, “செய்தியாளர்” என்பதை அர்த்தப்படுத்துகிறது. தூதர்களை அனுப்பிய தேவன்மீது ஆழ்ந்த ஆர்வம் இல்லாமல், தூதர்களிடத்தில் நாம் வசீகரிக்கப் படுவது எவ்வாறு?*

*மதத்தின் மீது நாம் கொண்டுள்ள வறியதொரு வசீகரமானது, வேத வசனங்கள் மற்றும் சத்தியம் ஆகியவற்றின் அடிப்படையில் இல்லாமல், அறியாமை மற்றும் மூடநம்பிக்கை ஆகியவற்றின் மீதே அமையப் பெற்றுள்ளது. மக்கள் தங்கள் தோள்களின்மேல் “காவல் தூதர்களையும்” தங்கள் மணிக்கட்டுகளில் “ஜெபக் கடகங்களையும்” அணிந்து கொள்கின்றார்கள், இருப்பினும் அவர்களின் வாழ்வு மாற்றம் இல்லாததாகவே உள்ளது. மக்கள் ஆழ்ந்தறிவுள்ள விசுவாசத்திற்கு மாறாக மாயாவாதத்தையே விரும்புகின்றார்கள். மிகவும் விசுவாசமுள்ள கிறிஸ்தவர்கள் [கூட] பரலோகத்தைப் பற்றிய குறிப்பிடுதல் இல்லாமலேயே ஒன்றுகூடி ஐக்கியத்தை மகிழ்வுடன் அனுபவிக்கின்றார்கள். நாம் இதை எதிர் கொள்வோம்: நாம் “வீட்டு நினைவால் வியாதியுற்றவர்களாக” இருப்ப தில்லை. நாம் இந்த பூமியின் மீது அதிகமானவற்றை முதலீடு செய்திருக்கின்றோம். நாம் அதிகமானவைகளுடன் வாழ வேண்டியதிருக்கிறது மற்றும் வாழ்வதற்காக போதுமானவைகள் இல்லை. நமக்கு வேண்டியவைகள் ஒவ்வொன்றும் இங்கு இருந்தால், விட்டுப் போவதென்பது கடினமாயிருக்கிறது.*

*பரலோகத்தைப் பற்றிய பாடல்கள் கொஞ்சமும் உணர்ச்சிமிக்கவைகளுமாய் உள்ளன. வறுமையும் ஒதுக்கப்பட்டவர்களுமாய் இருப்பவர்கள் மாத்திரமே பரலோகத்தைப் பற்றிப் பாடல்கள் எழுதிப் பாடுகிறார்கள். வெற்றியடைந்துள்ள மக்கள் இங்கே பூமியிலேயே “அதைச் செய்திருப்பதாக” அவர்கள் நினைக்கின்றார்கள். நான் மிகவும் இளைஞனாயிருந்த வேளையில், என்னைப் பலமாய்த் தாக்கிய பின்வரும் கூற்று ஒன்றை*

*வாசித்தேன்: "அன்றாடம் முப்பது நிமிடங்கள் பரலோகத்தைப் பற்றிச் சிந்தியுங்கள்." நான் இளைஞனாயிருந்தபோது, இதை உணர்ந்தறிய முடிய வில்லை; எனக்கு வயதாகி விட்ட இப்போது, இது எனக்கு அதிகம் அதிகமாக அர்த்தமுள்ளதாக இருக்கிறது. "உங்கள் கூடார முளைக்குச்சி களை மிகவும் ஆழமாக ஊன்றாதீர்கள்!" தொடக்க கால சபையார் ஒன்று கூடி, "மாரநாதா!" ("ஆண்டவராகிய இயேசுவே, வாரும்!") என்று சத்த மிட்டு ஜெபித்தார்கள். புதிய ஏற்பாடானது, "ஆமென், கர்த்தராகிய இயேசுவே வாரும்!" (வெளி. 22:20ஆ) என்று முடிகிறது. எதிர்காலத்திற்கான நம்பிக்கை இல்லாத இடத்தில் நிகழ் காலத்திற்கான வல்லமை இருப்ப தில்லை. நம்மைப் பரலோகத்திற்குக் கொண்டு செல்லுதல் அல்ல, ஆனால் நமக்குள் பரலோகத்தைக் கொண்டுவருதல் என்பதே பிரச்சனையாக உள்ளது.*

## நான் நரகத்திற்குச் செல்ல விரும்பாத காரணத்தினால் பரலோகத்திற்குச் செல்ல விரும்புகின்றேன்

*மக்கள், "நரகம்" என்ற நான்கெழுத்து வார்த்தையைக் கேள்விப்படும் போது பெருமூச்சு விடுகின்றார்கள். இது ஒரு புறம்பான வார்த்தையாக, நமது கலாச்சாரத்தில் "வேண்டாம்-வேண்டாம்" என்று கூறும் வார்த்தை யாக உள்ளது. ஆம், இது இன்னமும் சபிக்கப்பட்ட வார்த்தையாகவே உள்ளது, ஆனால் உண்மையான நரகத்தைப் பற்றிய கருத்தானது நமது நவீன சமுதாயத்திற்கு, மிகவும் பழமையான கருத்தாக இருக்கிறது. [தேவ] கோபம், நியாயத்தீர்ப்பு மற்றும் பொறுப்பு ஆகியவை "வெளியானவை களாக"/"கடந்து போனவைகளாக" உள்ளன. "தீர்க்கமாகப் பிரசங்கித்தல்" என்பது "கடந்து போனதாக" உள்ளது. ஆயினும், பரலோகமும் நரகமும் ஒன்றாகவே நிற்கின்றன அல்லது வீழ்கின்றன; ஒன்று இன்னொன்றை வேண்டுகிறது. மக்கள் என்ன கூறிக்கொண்டு இருப்பினும், வேதாகமத்தில் இன்னும் "நரகம்" என்று உள்ளது. நரகத்தைப் பற்றிய பிரசங்கங்கள் பெரும்பாலும் அனுமதிக்கப்படுவதில்லை, பரலோகத்தைப் பற்றி ஒரு சில பிரசங்கங்களே உள்ளன. இருந்தபோதிலும், பரலோகத்தைப் பற்றி 550 வசனங்களில் 582 குறிப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கிறிஸ்தவர்கள் மத்தியிலும் கூட, பரலோகத்தைப்பற்றி ஏன் இறங்குமுகமான ஆர்வம் உள்ளது? இது இந்த பூமியில் வாழ்வு அவ்வளவு நல்லதாக இருக்கிறது என்பதாலா?*

*"நரகம்" என்பது இன்னமும் வேதவசனங்களில் உள்ளது. இயேசு விசுவாசித்து போதித்தவற்றை மறுத்துரைத்துக் கொண்டே நீங்கள் அவர்மீது விசுவாசம் வைக்க முடியுமா? இயேசு நரகம் உள்ளது என்று விசுவாசித்தார்; நரகம் பற்றி, வேதாகமத்தின் வேறெந்த எழுத்தாளர்களின் ஒட்டுமொத்த மான போதனையைக் காட்டிலும், அவர் [இயேசு] அதைப் பற்றி அதிகமாகப் போதித்தார். KJVயில் "நரகம்" என்பதற்குப் பல்வேறு பயன்*

*பாடுகள் உள்ளன, இவை "மரணம்," "பாதாளம்," "வேதனைமிக்க இடம்" என்று அர்த்தப்படுகின்றன. ஆயினும், "நரக அக்கினி" என்று குறிப்பிட்ட வார்த்தையானது புதிய ஏற்பாட்டில் பன்னிரெண்டு முறைகள் வருகிறது. அந்தப் பன்னிரெண்டு முறைகளில், இயேசு பதினொரு முறைகள் இதைப் பயன்படுத்தினார்! (மத். 5:22; 10:28; 18:9; 23:33 ஆகியவற்றை வாசிக்கவும்.) நரகம் என்பது ஒரு இடர்ப்பாடான விஷயமாக உள்ளது: நீங்கள் நரகத்திற்குச் செல்ல முடியும். நான் நரகத்திற்குச் செல்ல முடியும்.*

*நவீன கலாச்சாரமானது, உலகளாவிய இயம் என்ற கொள்கையினால் (எல்லாரும் மீட்கப்படுவார்கள் என்ற கருத்தினால்) விழுங்கப்பட்டுக் கிடக்கிறது. உலகளாவிய இயம் என்பது, "தேவன் உங்களை நரகத்திற்கு அனுப்ப [முடியாத அளவுக்கு] மிகவும் நல்லவராக இருக்கின்றார். நீங்கள் நரகத்திற்கு செல்ல [கூடாத அளவுக்கு] மிகவும் நல்லவராக இருக்கின்றீர்கள்" என்று அறிவிக்கிறது. இந்தக் கூற்றானது தவறானதாயிருப்பது மட்டுமின்றி, தேவதூஷணமாகவும் உள்ளது. "போதுமான அளவு நல்லது" என்று ஒன்று ஒருபோதும் இருப்பதில்லை. நான் என் வாழ்வின் 99.999999999 ... சதவிகிதத்தைக் கல்லறைக்கு அப்புறத்தில்தான் செலவிடுவேன், நான் எங்கு செல்லப் போகின்றேன் என்பதை இறப்பதற்கு முன்பு, புரிந்துகொள்ள விரும்புகின்றேன்! பரலோகத்திற்காக நீங்கள் இந்த பூமியில் என்ன செய்கின்றீர்கள்? நான் நரகத்திற்குச் செல்ல விரும்பாத காரணத்தினால், பரலோகத்திற்குச் செல்ல விரும்புகின்றேன்!*

## *பரலோகம் இன்றி பூமியானது அர்த்தமற்றதாய் இருக்கிறது*

*ஸ்தேவான் தமது கிறிஸ்தவ பக்குவத்தினால் நமக்கு உணர்வெழுச்சி யூட்டுகின்றார். முதல் கிறிஸ்தவ வேத சாட்சியாக மரித்தவர், கிறிஸ்துவைப் போலவே தமது விரோதிகளை மன்னித்து விட்டார் (அப். 7:60). என்ன ஒரு விசுவாசம்! என்ன ஒரு தைரியம்! அவரால் அதை எப்படிச் செய்ய முடிந்தது? "அவன் பரிசுத்த ஆவியினாலே நிறைந்தவனாய், வானத்தை அண்ணாந்து பார்த்து, தேவனுடைய மகிமையையும், தேவனுடைய வலது பாரிசத்தில் இயேசுவானவர் நிற்கிறதையும் கண்டு" (அப். 7:55). நமது இருதயங்களில் பரலோகம் இருக்கும்போது மட்டுமே, பூமிக்குரிய நமது கண்ணோக்குகள் சரியானவைகளாக இருக்க முடியும். நம்மால் பத்து வினாடிகள் மட்டும் பரலோகத்தைக் காண முடியுமென்றால், பூமியானது பின்னும் ஒரு பிரச்சனையாக இராது (2 கொரி. 4:16-18).*

*தனிநபர் ஒருவரைப் பற்றி, "அவர் பூமிக்குரிய வகையில் மதிப்பற்றவரா யிருக்கும் அளவுக்கு, பரலோகம் பற்றிய சிந்தனையுள்ளவராய் இருந்தார்" என்று கூறப்பட்டதை நான் கேள்விப்பட்டு இருக்கின்றேன். பரலோக சிந்தனையை பிள்ளைத்தனமான குறிக்கோள் அல்லது அற்பத்தனத்துடன் குழப்பிக் கொள்ளாதீர்கள். நீங்கள் மிக அதிகமான பரலோக சிந்தை உள்ளவர்களாய் இருக்க முடியாது! பரலோக சிந்தை என்பது இந்த பூமியில் மிகவும் நடைமுறைக்கு உரியதாகவே உள்ளது. உலகப்பிரகாரமான*

*கிறிஸ்தவர்களின் மத்தியில், "அவர் பரலோகத்திற்குத் தகுதியற்ற வகையில் மிகவும் உலக சிந்தை கொண்டுள்ளார்" என்று அடிக்கடி கூறப்படக் கூடும். இயேசு பரலோக சிந்தையுடன் இருந்தார். ஸ்தேவான், இந்த பூமியைக் கையாளுவதற்குப் பரலோகத்தைக் கண்ணோக்கினார். பவுல் தமது செல்வங்கள் யாவற்றையும் குப்பையாக எண்ணினார் (பிலி. 3:7, 8).*

## பரலோகம் ஒரு இடம் என்பதை விட பரலோகம் ஒரு ஆதிக்கமாக உள்ளது

*பரலோகம் மட்டுமே அனுபவங்கள் எதிர்பார்ப்புகளை மிஞ்சியிருக்கக் கூடிய ஒரே இடமாக உள்ளது. நமது நிகழ்ச்சிகள் மற்றும் விடுமுறைகள் ஆகியவற்றில் பெரும்பான்மையானவை எதிர் உச்சக்காட்சியாக (எதிர் பார்த்தவை நடவாத காட்சியாக) உள்ளன. எல்லா எதிர்பார்ப்புகளுக்கும் பின்பு, பெரும்பாலானவற்றில் நாம் ஏமாற்றத்துடனேயே திரும்பி வருகின்றோம். பரலோகம் ஏமாற்றாது! நாம் பரலோகத்தைக் குறைவாக மதிப்பிட்டு விடக் கூடாது. இது பரலோக விடுமுறை ஸ்தலம் என்பதைக் காட்டிலும் அதிகமானதாக உள்ளது. ஆராதித்தல் என்பதே பரலோகத்தில் பிரதானமான ஊழியமாக இருக்கும். பரலோகத்தின் மகிமைகளைப் பூமியில் உள்ள எதுவும் போதுமான அளவில் பிரதிநிதித்துவப்படுத்த முடியாது. சிலர், பரலோகத்தின் தேவனை (God) க் காட்டிலும் பரலோகத் தின் பொன்னை (gold) அதிகமாக விரும்புகின்றார்கள்! பொன்னாலான வீதியின் நடைமுறைப் பயன்பாடு என்னவாக இருக்கும்? பூமியில் மனிதனு க்கு விலை உயர்ந்ததாக உள்ளது, பரலோகத்திற்கு வீதிகளை அமைக்கும் ஒரு கலைவைப் பொருளாக இருக்கும் என்று மட்டுமே கூறுகின் றார். முத்துக்களால் ஆன வாயில்கள் மற்றும் சுவர்களில் வைடூரியங்கள் பதிக்கப்பட்டிருத்தல் என்பவை பற்றிய விஷயம் என்ன? நமது மாபெரும் விலை உயர்ந்த கற்கள் பரலோகத்தின் வாயில்களையும் சுவர்களையும் அலங்கரிக்க மட்டுமே பயன்படும். பரலோகத்தின் மகிமையை மனிதனால் கற்பனை செய்து[ம்] காண இயலாது. அது அழகுமிகுந்ததாக, சமாதானம் நிறைந்ததாக, ஆச்சரியம் நிறைந்ததாக இருக்கும்! நாம் எதை எதிர்பார்த்து நோக்கிக் கொண்டு இருக்கின்றோம் என்பதை அறிய வேண்டும்; அதற்காகவே நாம் எதிர்பார்த்து நோக்கியிருக்க வேண்டும். இந்த பூமி நமது இல்லமாக இருப்பதில்லை. நாம் இந்த பூமியில் திருப்பயணிகளாக, அந்நியர்களாக, பரதேசிகளாக இருக்கின்றோம் என்பதை நாம் அன்றாடம் நினைவுகூர வேண்டும்.*

*பரலோகம் என்பது ஒரு இடம் என்பதை விட அதிகமாக ஒரு பிரசன்னம் என்பதாக உள்ளது. தேவனுடைய பிரசன்னம் என்பதே பரலோகத்தின் மகிமையாக உள்ளது. பூமியிலிருக்கும் மனிதன் தேவனைக் கண்டு, உயிருடன் இருக்க முடியாது. பரலோகத்தில் நாம் தேவனைக் கண்டு தேவனுடன் இருந்து, பின்னும் உயிருடன் இருக்கலாம்! சர்வ வல்ல, எல்லையற்ற, மாற்ற முடியாத, நித்திய, இராஜரீக, பரிசுத்த தேவனுடைய நேரடியான பிரசன்னத்திலிருந்து பரலோகத்தின் மாபெரும் மகிழ்ச்சி*

*வருகிறது! நாம் அவருடைய மக்களாக இருப்போம்; அவர் நமது தேவனாக இருப்பார் (வெளி. 21:1-3).*

*பரலோகம் ஒரு இடம் என்பதை விட பரலோகம் ஒரு ஆதிக்கமாக உள்ளது. என்னுடைய கர்த்தராகிய இயேசு அங்கேயிருப்பார். தேவனும் ஆட்டுக்குட்டியானவருமே ஆலயமாக இருப்பதால் அங்கே ஆலயம் என்பது இராது (வெளி. 21:22). ஆட்டுக்குட்டியானவர் வெளிச்சமாகவும் இருக்கின்றார் (21:23). யாரோ ஒருவர், "மனிதனால் செய்யப்பட்ட ஒரே ஒரு விஷயமாக பரலோகத்தில் இருப்பது இயேசுவின் மீதிருக்கும் தழும்புகள் மட்டுமே" என்று கவனித்து இருக்கின்றார். திரு அவதாரத்தில் தேவன், இயேசுவில் மனித குலத்துடன் இணைந்தார் (யோவா. 1:14; எபி. 2:16-18; 4:14-16). இயேசு இதற்கு முன்பு பூமிக்கு வந்தது போல் மீண்டும் பரலோகத்திற்குத் திரும்பிச் செல்லவில்லை. அவர் உயிர்த்தெழுந்தார், முன்பு போல் மாறவில்லை. நாம் தேவனாக இருப்பதில்லை. இயேசு இங்கு விட்டுச் சென்றது போன்றே மீண்டும் திரும்பி வந்தால், மனித குலத்திற்கு நம்பிக்கை எதுவும் இருப்பதில்லை. திருஅவதாரத்தில் இயேசு மனித குலத்துடன் நித்தியத்திற்கும் இணைந்தார். அவரது உயிர்த்தெழுதலினால் நமது உயிர்த்தெழுதல் உத்தரவாதப்படுத்தப்பட்டது (யோவா. 11:25, 26; ரோமர் 6:5; அப். 2:32; 1 பேது. 1:3; 1 கொரி. 15:1-3, 14, 17, 19, 20-23; ரோமர் 8:23).*

*மனிதன் தேவனுக்காக, பரலோகத்திற்காகப் படைக்கப்பட்டான். பரலோகம் என்பதே இல்லமாக உள்ளது! நாம் இவ்விடத்திற்கு உரியவர்களாய் இல்லையென்றாலும், இந்த பூமி மட்டுமே கிறிஸ்தவம் வாழ்கிற ஒரே ஒரு இடமாக உள்ளது. பரலோகமானது பூமியில்தான் ஆதாயப் படுத்தப்படுகிறது அல்லது இழந்து போகப்படுகிறது. நாம் இப்பொழுது வாழ்வைக் கொண்டிராவிட்டால், பின்பும் நமக்கு வாழ்வு இருக்க முடியாது. தேவன் நமக்காகத் தயாரித்துள்ளவற்றிற்காக இப்போது நம்மைத் தயாரிக்கின்றார். என் வாழ்வின் நிலையில் நான் பரலோகத்தைத் தவற விடுமளவிற்கு, அதின் மீது அதிகமாக முதலீடு செய்திருக்கின்றேன். எனது குழந்தைப் பருவத்தில் இருந்தே, நான் வேதாகம வீரர்களைச் சந்திக்க விரும்பியிருக்கின்றேன். இன்னும் அவ்வாறே விரும்புகின்றேன். ஆண்டுகளினூடே, இந்த பூமியில் மாபெரும் பரிசுத்தவான்கள் என்னை ஆசீர்வதித்து இருக்கின்றார்கள். நாளாக நாளாக, மரணத்தினால் எனது முதலீடு வளர்கிறது. நான் இல்லம் செல்ல விரும்புகின்றேன்! அது என்ன ஒரு மறுபிணைப்பாக இருக்கும்!*

*பரலோகத்தில் நாம் ஒருவர் பிறரை அறிவோமா? ஆம்! நாம் ஒருவர் பிறரை எவ்வாறு அறியாது இருக்க முடியும்? நாம் வெறும் எண்ணிக்கையாக மட்டும் இருக்க மாட்டோம்! ஒருவர் பிறரை அறியாவிட்டால், பரலோக மானது எப்படிப்பட்ட ஒரு (zoo) விலங்குக்காட்சி சாலையாக இருக்கும்! "நீங்கள் யார்?" "எனக்குத் தெரியாது." உங்களால் பிறரை அறிய முடிய வில்லை என்றால், நீங்கள் உங்களையே அறிய முடியாது! ஆதிமுதலாகவே தேவனோ அல்லது மனிதனோ, ஒவ்வொன்றிற்கும் பெயரிட்டார்கள். தேவன் பிதாவாக*

*இருக்கின்றார்; இயேசு குமாரனாக இருக்கின்றார். தூதர்கள் பெயர்களைக் கொண்டு இருக்கின்றார்கள். இயேசு மோசேயினா லும் எலியாவினாலும் புரிந்து கொள்ளப்பட்டார் (மத். 17:3-5). நாம் நம்மை விட்டு ஒருக்காலும் விலக இயலாது. நான் எப்போதுமே ஹோட்ஜ் என்ற நபராகவே இருப்பேன். நாம் பரலோகம் செல்லும் வரையிலும் நம்மையும் பிறரையும் உண்மையில் அறிய மாட்டோம் என்பதே சத்தியமாக உள்ளது!*

## பரலோகம் நானே

*பரலோகம் என்பது நாம் செல்லுகின்ற இடமாக மட்டுமின்றி, அது ஒரு வகையில் நாம் என்னவாக இருப்போம் என்பதே. நான் களைப்பு அடைந்துள்ளேன். அறுபத்தி எட்டு ஆண்டுகளாக நான் பணி செய்ய வேண்டியதாயிற்று. நான் தினமும் பாவம் செய்து தேவமகிமை அற்றுப் போனேன். "ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது" (மத். 26:41அ). களைப்பாக இருப்பதில் நான் களைப்படைந்திருக்கின்றேன். நான் இயேசுவைப் போல் இருப்பதற்குக் கடினமான முயற்சி செய்தேன், ஆயினு ம் நான் பரிதாபகரமாக தோல்வியுற்றேன். அதை பரலோகம் மாற்றும், ஏனென்றால் பரலோகம் என்னை மாற்றும்! அல்லேலூயா! "... அவர் வெளிப்படும்போது நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப் போமென்று அறிந்திருக்கிறோம்" (1 யோவா. 3:2). தேவன் ஒருவருக்கே மகிமை உண்டாவதாக!*

*நாம் பரலோகம் சென்றடையும் முன்பு பரலோகம் நம்மை வந்தடைகிறது.*
*விசுவாசி பரலோகத்தில் இருக்கும் முன்பு, பரலோகம் விசுவாசிக்குள் இருக்கிறது.*
*நான் இயேசுவாக இருக்கமாட்டேன், ஆனால் நான் அவரைப் போலிருப்பேன்.*

*வாருங்கள், என்னுடன் நடவுங்கள்.*

*பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக,*
*மேகங்கள்மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில்*
*எடுத்துக்கொள்ளப் பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும்*
*கர்த்தருடனேகூட இருப்போம் (1 தெச. 4:17).*

---

*குறிப்பு*

[1]William Cowper, "God Moves in a Mysterious Way," *Songs of Faith and Praise,* comp. and ed. Alton H. Howard (West Monroe, La.: Howard Publishing Co., 1994).

*இன்றைக்கான சத்தியம் உலக ஊழியப் பள்ளியானது, கிறிஸ்தவர்களின் உதாரத்துவத்தின் மூலமாக வேதாகமப் பாடங்களை இலவசமாக வழங்க முடிகிறது. இன்று வரையிலான முகவரிப் பட்டியலை நாங்கள் வைத்துக் கொள்வதற்காக, கீழே கொடுக்கப்பட்டிருக்கும் விபரங்களை நீங்கள் கொடுக்குமாறு உங்களைக் கேட்டுக் கொள்ளுகிறோம்.*

*வருடத்திற்கு ஒருமுறையாவது தயவுசெய்து எங்களுக்கு எழுதி, உங்களுடைய விபரம் இன்னும் சரியாயிருக்கிறது என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ளவும், நீங்கள் படிப்பதற்கு இந்த வேத பாடங்களை உதவியாகக் காண்கிறீர்களா என்பதையும் தெரியப்படுத்துங்கள். கர்த்தருக்கான உங்கள் ஊழியத்தில் தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.*

*ஒன்றைக் குறிப்பிடவும்:* ❐ *ஆண்* ❐ *பெண்*

*பெயர்:* ______________________________

*முழு முகவரி: (முகவரியை பெரிய ஆங்கில எழுத்தில் எழுதவும்.)*

______________________________

______________________________

______________________________

______________________________

*புதிய முகவரி பழைய முகவரி (முகவரியில் மாற்றம் இருக்குமானால்) தெரியப்படுத்தவும்:*

______________________________

______________________________

______________________________

______________________________

Email *விலாசம்:* ______________________________

*எந்த சபையில் நீங்கள் கலந்துகொள்கிறீர்கள்?* ______________________________

*அது எங்கிருக்கிறது?* ______________________________

*பிரசங்கிப்பவரின் பெயர்:* ______________________________

*நீங்கள் கலந்துகொள்ளும் உள்ளூர் சபையில் உங்கள் பொறுப்பு என்ன? (சம்பந்தப்பட்ட எல்லாவற்றையும் குறிப்பிடவும்.)*

❐ *பிரசங்கிப்பவர்* ❐ *அங்கத்தினர்*

❐ *வேதபாட வகுப்பு ஆசிரியர்* ❐ *அங்கத்தினரல்லாதவர்*

*இன்றைக்கான சத்தியம் உலக ஊழியப் பள்ளியின் வெளியீடு களை தற்போது நீங்கள் தவறாமல் பெற்றுக் கொண்டு வருகிறீர்களா? (ஒன்றைக் குறிப்பிடவும்):*

❐ *இல்லை.*

❐ *ஆம், நேரடியாக எனக்கு அனுப்பப்படுகின்றன.*

❐ *ஆம், விநியோகிக்கப்பவரின் பெயர்* ____________________.

*(அடுத்த பக்கம் பார்க்கவும்)*

*எந்த மொழியில் வெளியீடுகளைப் பெற நீங்கள் விரும்புகிறீர்கள்? (ஒன்றை மாத்திரம் குறிப்பிடவும்.)*

❐ *ஆங்கிலம்* ❐ *தமிழ்* ❐ *ஹிந்தி* ❐ *தெலுங்கு*

*நீங்கள் பெற்றுக் கொள்ளும் வெளியீடுகளை எவ்விதம் உபயோகிக்கிறீர்கள்/உபயோகிப்பீர்கள்?*

____________________________________________________________

____________________________________________________________

*இப்பாடங்களை தொடர்ச்சியாக பெற்றுக்கொள்ள விரும்புவோர் யாராவது உங்களுக்குத் தெரியுமானால், தயவு செய்து அவர்களுக்காக இன்னுமொரு படிவத்தைப் பூர்த்தி செய்து, கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புங்கள்.*

Truth for Today
P.O. Box: 5311
Shivajinagar, Bangalore - 560 001